225

T. N. L. C. Debates

Offical Report

1986

DIGITIZED

Vol: 220 No: 1, 2

D
V2l1,32'N86
N86.220.1-2
143537

1021/86

# தமிழ்நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜனவரி 24, 1986-தொகுதி 220 எண் 1.
Friday, 24th January 1986-Volume 220 No. 1.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.75]

## பொருளடக்கம்.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| | தமிழக அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. | i—vi |
| | தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. | vii |
| | தொகுதி உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல். | ix—xii |
| 1. | வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—23 |
| 2. | அறிவிப்புகள்— | |
| | (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு | 24 |
| | (2) ஆளுநரிடமிருந்து செய்தி .. .. | 89 |
| | (3) பேரவையிலிருந்து செய்தி .. .. | 89 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | பவானி ஆற்றிலிருந்து காவிரியாற்றுக்கு திறந்து விடப்படும் தண்ணீரில் சாராய ஆலைகளின் கழிவு நீர் திறந்து விடப்படுவதால் குடிநீரில் நச்சுத் தன்மை பரவி, மக்கள் பாதிப்புக்குள்ளாக்கப்படுவது குறித்து.. .. .. .. | 24—27 |
| 4. | ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி. | 27—75<br>81—88<br>121—149 |
| 5. | 1985–86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை மதிப்பீட்டிற்கான விவர அறிக்கையை அளித்தல் .. .. | 76—79 |
| 6. | 1979–80 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகளை அளித்தல் .. | 79—81 |
| 7. | மேலவை விதி 82-ன் கீழ் அறிக்கை— | |
| | உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்து... ... | 88—89 |

பக்கங்கள்.

8. அரசின் சட்ட முன் வடிவு—

1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப் படுத்துதலும், உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 16/1986) .. 90—120

9. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. 149

143537

D

V211,32'N84

N86.220.1-2

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU.

### THIRU SUNDAR LAL KHURANA.

*Members of the Council of Ministers.*

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister, in charge of Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption, Planning, Archaeology, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN, Minister for Finance, in charge of Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps, Ex-Servicemen and General Administration.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister for Electricity, in charge of Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASWAMY, Minister for Labour, in charge of Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN, Minister for Information and Religious Endowments, in charge of Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona, Grant of Liquor Permits, Public and District Revenue Officers.

6. The Hon. Thiru K. RAJARAM, Minister for Industries, in charge of Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM, Minister for Municipal Administration, in charge of Municipal Administration, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM, Minister for Education, in charge of Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU, Minister for Agriculture, in charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering, Agro Service Co-operative Societies Water Supply and Drainage Boards.

10. The Hon. Thiru C. PONNAIYAN, Minister for Law, in charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits, Deputy Collectors and Molasses.

11. The Hon. Dr. H. V. HANDE, Minister for Health, in charge of Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSWAMY, Minister for Transport, in charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Acts, Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU, Minister for Food, in charge of Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN, Minister for Handlooms and Textiles, in charge of Handlooms, Textiles and Prohibition.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN, Minister for Nutritious Meals, in charge of Nutritious Meals.

16. The Hon. Thiru T. VEERASAMY, Minister for Commercial Taxes, in charge of Commercial Taxes.

17. The Hon. Thiru N. NALLUSAMY, Minister for Housing, in charge of Housing and Slum Clearance Boards, Town Planning and Accommodation Control.

18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN, Minister for Rural Industries, in charge of Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The Hon. Thiru T. RAMASAMY, Minister for Rehabilitation and Employment, in charge of Rehabilitation, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

20. The Hon. Thiru A. ARUNACHALAM, Minister for Adi Dravidar Welfare, in charge of Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDHAN, Minister for Backward Classes, in charge of Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumathi GOMATHI SRINIVASAN, Minister for Social Welfare, in charge of Social Welfare including Women and Children Welfare, Beggar Home, Orphanages and Correctional Administration.

23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY, Minister for Khadi in charge of Khadi. Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF, Minister for Public Works, in charge of Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN, Minister for Co-operation, in charge of Co-operation.

225

### தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் இதர அனைத்திந்தியப் பணிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், தொல்பொருள் இயல், ஆயத்துறை மற்றும் கடவுச்சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நிதி, பொது நிர்வாகம், வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

மின்சாரம் மற்றும் இரும்பு, எஃகு கட்டுப்பாடு, செய்திக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நலஅமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்—

தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத்துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி- அறநிலைய அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பொது, மாவட்ட வருவாய் அலுவலர்கள், செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா மற்றும் மது அருந்த அனுமதிச் சீட்டு வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க, இராசாராம் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

நகராட்சி நிர்வாகம், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண்—பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்ட அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றிய சட்டம், குழுமங்கள் பதிவு, கடன் கொடுத்தல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்ளிட்ட கடன் நிவாரணம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள் மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு.

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு தடுப்புத்துறை.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

போக்குவரத்து, அரசுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—

உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கைத்தறி, நெசவாலைகள் மற்றும் மதுவிலக்கு

15. மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் (சத்துணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார் :—

சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிக வரித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி (வீட்டு வசதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியங்கள், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பி. ஜீ. ஜெகதீசன் (ஊரகத் தொழில் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கிராம, குடிசை மற்றும் சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

மறு வாழ்வு, வேலை வாய்ப்பும் பயிற்சியும், வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் நலன்.

20. மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்) கீழக்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், இரவலர் இல்லம், அனாதை இல்லம் மற்றும் சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்,

24, மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—

பொதுப்பணித் துறை, சிறுபாசனம் உள்ளிட்ட நீர்ப் பாசனம் மற்றும் வஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைக்குப் பொறுப்பு வகிப்பார்:—

கூட்டுறவு.



## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

மாண்புமிகு மேலவைத் தலைவர்

டாக்டர் ம. பொ. சிவஞானம்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்

திரு. ஜி. சுவாமிநாதன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1 திரு. சி. இராமலிங்கம்

2 திருமதி வி. ஜெயலட்சுமி

3 திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்

4 திரு. அ. மயில்சாமி

மேலவைச் செயலாளர்

திரு. பெ. பள்ளிகொண்டப்பெருமாள், பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்

திரு த. ப. டில்லிதுரை, பி.எஸ்ஸி,பில்.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

சார்புச் செயலாளர்கள்

திரு. ரெ, சு, இராமச்சந்திரன், பி.ஏ, பி,எல்.

திரு. இரா. சந்திரசேகரன், பி.ஏ.

தலைமை நிருபர்

திரு. ச. சுவாமிநாதன், எம்.ஏ.

மேலவைத் தலைவரின் தனிச்செயலாளர்

திரு. பி. கே. சந்திரசேகரன்

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 1 | அங்கமுத்து, திரு பா. | நியமனம். |
| 2 | அருணாசலம், திரு க. | நியமனம். |
| 3 | ஆனந்தன், திரு. வி.வி.வி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 4 | இராகவானந்தம், திரு. எஸ். | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 5 | இராதா, திரு எஸ். ஆர். | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 6 | இராமலிங்கம், திரு. சி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 7 | இராஜேந்திரன், திரு. மானா மதுரை, ஆர். | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 8 | கண்ணப்பன், திரு. காடுவெட்டி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 9 | கணேசன், திரு. ஆர். என்கிற மிசா ஆர். கணேசன் | சென்னை மாவட்டப் பட்டதாரிகள். |
| 10 | கருணாநிதி, டாக்டர் மு. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 11 | கலைமணி, திரு. க. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 12 | கோலப்பா, திரு. சி. ஆர். | நியமனம். |
| 13 | சங்கரலிங்கம், திரு. மு. செ. | திருநெல்வேலி - கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 14 | சனார்த்தனம், டாக்டர் இரா, | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 15 | சாதிக் பாட்சா, திரு எஸ். ஜே. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 16 | சிவஞானம், டாக்டர் ம. பொ. (மாண்புமிகு மேலவைத் தலைவர்) | நியமனம். |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 17 சிவராமன், திரு. அ. ப. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 18 சீத்தாபதி, திரு. ஆர். டி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 19 சுப்பிரமணியம், திரு. எம். பி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 20 சுப்பு, திரு. க. | மாநிலச் மட்ட மன்றப் பேரவை. |
| 21 சுவாமிநாதன், திரு. ஜி. (மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்) | தமிழநாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 22 தாரா செரியன், திருமதி | நியமனம். |
| 23 தாஸ், திரு. ஏ. ஜே. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 24 பழனிவேல் ராஜன், திரு. பி. டி. ஆர். | தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள். |
| 25 பாலாஜி, திரு. நெல்லை. | நியமனம். |
| 26 மதுசூதனன், திரு. இ. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 27 மயில்சாமி, திரு. ஆ. | சேலம்—தர்மபுரி—கோயம்புத்தூர் நீலகிரி ஆசிரியர்கள். |
| 28 மாசிலாமணி, திரு. மு. | நியமனம். |
| 29 மாணிக்கம், திரு. ப. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 30 மீனாட்சிசுந்தரம், திரு. க. | தஞ்சாவூர் - திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை ஆசிரியர்கள். |
| 31 முத்துலிங்கம், கவிஞர் | நியமனம். |
| 32 முனுசாமி, திரு. பி. | நியமனம். |
| 33 யூசுப், திரு. யா. சை. மு. (பொதுப் பணித் துறை அமைச்சர்) | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |



| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 34 லெட்சுமி காந்தன், திரு. சி. ரா. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர்கள். |
| 35 லீலாவதி, செல்வி ஆ. | சென்னை - செங்கற்பட்டு ஆசிரியர்கள். |
| 36 வள்ளிமுத்து, திரு. ஈ.வெ.ஆ | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 37 வீரப்பன், திரு. இராம (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்) | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 38 ஜெயச்சந்திரன், திரு. எல். | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 39 ஜெயலட்சுமி, திருமதி. வி. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 40 ஜேப்பியார், திரு. | மாநிலச் சட்ட மன்றப் பேரவை. |
| 41 ஹண்டே, டாக்டர் எச். வி. [மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்] | சென்னை மாவட்டப் பட்டதாரிகள். |
| 42 வெற்றிடம் | மதுரை - இராமநாதபுரம் ஆசிரியர்கள். |
| 43 வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 44 வெற்றிடம் | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 45 வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 வெற்றிடம் | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 48 வெற்றிடம் | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 வெற்றிடம் | செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 வெற்றிடம் | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் இலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 51 வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத்தொகுதி. |
| 52 வெற்றிடம் | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 54 வெற்றிடம் | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 55 வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 56 வெற்றிடம் | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெற்றிடம் | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெற்றிடம் | தென்னாற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 62 வெற்றிடம் | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட தமிழ் நாடு சட்ட மன்ற மேலவையின் அறுபத்தொன்பதாவது கூட்டத் தொடர்)

வெள்ளிக்கிழமை, 1986 ஜனவரி 24.

தை 11, குரோதன—திருவள்ளுவராண்டு 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின்னழுத்த மாற்றிகள்.

*31. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் நிறுவனங்களிடம், தமிழ் நாடு மின்சார வாரியத்திற்குரிய மின்னழுத்த மாற்றிகள், பழுது பார்க்க தரப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) போதுமான பணியாட்கள் இல்லாததால் பழுதான மின்மாற்றிகளைப் பழுது பார்க்கும் பணியைத் தமிழ்நாடு மின்சார வாரியமே செய்ய இயலாத நிலையில் மின்மாற்றிகள் தயாரிக்கும் நிறுவனங்களிடம் மட்டுமே ஒப்படைக்கப்படுகிறது.

திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, 1984-85 ஆம் ஆண்டில் மின்சார வாரியத்தின் சிறப்புப் பிரிவில் பழுது பார்த்த மின்னழுத்த மாற்றிகளின் எண்ணிக்கை எத்தனை ? 1984-85 ஆம் ஆண்டில் தனியாரிடம் தரப்பட்டிருக்கிற மின்னழுத்த மாற்றிகளின் எண்ணிக்கை எத்தனை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1984—85 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனங்களிடம் தமிழ் நாடு மின்சார வாரியத்திற்குரிய மின்னழுத்த மாற்றிகள் பழுது பார்த்த வகையில் கொடுக்கப்பட்டது 175 இலட்சம் ரூபாய். மின் அழுத்த மாற்றிகள் எண்ணிக்கை 2,679. மின்சார வாரியத்தின் சிறப்புப் பிரிவில் பழுது பார்க்கப்பட்ட மின்னழுத்த மாற்றிகள் எண்ணிக்கை 1,794.

திரு. அ. ப. சிவராமன் : தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் சிறப்புப் பிரிவிலே பழுது பார்க்கப்பட்ட மின்னழுத்த மாற்றிகளின் எண்ணிக்கையைவிட தனியாரிடம் பழுது பார்ப்பதற்காகக் கொடுக்கப்பட்ட மின்னழுத்த மாற்றிகளின் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது. இதைப் பழுது பார்ப்பதிலே பல்வேறு முறைகேடுகள் இருப்பதாகச் சொல்லப்படு கிறது. இதைக் கருத்திலே கொண்டு, வாரியமே அந்தப் பணியை ஏற்றுச் செய்ய வேண்டும். அப்படி வாரியமே அந்தப் பணியை ஏற்றுச் செய்ய ஏதேனும் இடர்ப்பாடுகள் இருக்கின்றவா ? அப்படியிருந்தால், அதைத் தவிர்த்து, இந்தப் பணியை வாரியமே செய்ய தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இடர்ப்பாடுகள் போதிய பணியாட்களும், பழுது பார்க்கக்கூடிய மற்ற சாதனங்களும் மின்வாரியத்திற்கு இல்லை என்பதுதான். தனியாரிடத்தில் கொடுப்பதால் முறைகேடுகள் இருக்கின்றன என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது குறித்து மின் வாரியத்திற்கு அரசு கடிதம் அனுப்பும்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, மின் வாரியத்திலே போதிய, தேவையான ஆட்கள் இல்லை என்று சொல்லப்படுமானால், அதை ஏன் முன்கூட்டியே கணக்கிட்டு, வேண்டிய ஆட்களை நியமிக்கவில்லை ? அதற்குத் தனியாகப் பயிற்சி பெற்றவர்கள் தேவைப்பட்டால், திட்டமிட்டு ஏன் அவர்களை நியமிக்கவில்லை ? இந்தப் பணியை தனியாரிடம் கொடுப்ப தற்குப் பதிலாக, இப்போதாகிலும் மின் வாரியமே இந்தப் பணியைச் செய்ய அரசிடம் ஏதேனும் திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின்னழுத்த மாற்றிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் வளர்ந்து வருவதுதான் இதற்குக் காரணம். இதை மின் வாரிமே மேற்கொள்வதா அல்லது மின்னழுத்த மாற்றிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இதன் பராமரிப்பை மேற்



கொள்வதா என்று பார்த்து, எது சிக்கனம் என்று பார்த்து, செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கும்போது புதிதாகப் பணியாளர்களை நியமித்து, அதற்கான சாதனங்களை எல்லாம் ஏற்படுத்தி, ஓர் அமைப்பை உருவாக்கி நாம் செய்கிறபோது அதனால் செலவு அதிகமாகுமென்றால், அது வரவேற்கத்தக்கது அல்ல.

### தமிழ் நாட்டிற்கு கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் மின்சாரம்.

* 32. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் பிரிவு உற்பத்தி செய்யும் மின்சாரம் முழுவதும், தமிழ்நாட்டுக்கே ஒதுக்கப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இரண்டாவது பிரிவு மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டுக்கே ஒதுக்க வேண்டுமென்று, மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) கல்பாக்கம் அணுமின் நிலைய இரு பிரிவுகளில் உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும் தமிழகத்திற்கே வழங்கிட வேண்டுமென்று இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டது. ஆனால் மத்திய அரசு, கல்பாக்கம் அணு மின் நிலையம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தென் மாநிலங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென சுட்டிக்காட்டி மேற்கூறிய அணு மின்நிலைய முதல் பிரிவின் முழு மின்சாரத்தையும் இரண்டாவது பிரிவின் 50 சதவிகிதம் மின்சாரத்தையும் தமிழகத்திற்குத் கொடுக்க முடிவு செய்துள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, தென் மாநிலங்களிலுள்ள வேறு மாநிலங்களிலே அணு மின் நிலையம் இருக்கின்றதா ? அங்கே தயாரிக்கப்படுகிற மின்சாரத்தைத் தமிழகத்திற்கு வழங்குவதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, வேறு அணு மின் நிலையங்கள் இல்லை. அனல் மின் நிலையம் இராமகுண்டத்தில் நிறுவப்பட்டு வருகிறது. அதிலிருந்து தமிழகத்திற்குப் பங்கு உண்டு.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தினுடைய முதல் பிரிவில் உற்பத்தியாகும் முழு மின்சாரமும், இரண்டாம் பிரிவிலே உற்பத்தியாவதில் 50 சதவிகிதமும் தமிழகத்திற்குத் தருவதாக மத்திய அரசு சொல்லியிருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இரண்டாவது பிரிவிலே உற்பத்தியாகும் முழு மின்சாரத்தையும் நாமே பெறுவதற்காக மத்திய அரசை வற்புறுத்துவதற்கு ஏதேனும் துரித நடவடிக்கை அரசிடம் இருக்கிறதா?

(முற்பகல் 10-05)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இத்திட்டம் துவங்கப்பட்டது 1960-ல். அது முன்னமேயே முடித்திருந்தால், இந்தப் பிரச்சினை எழுந்திருக்காது. அதிலே காலதாமதம் ஏற்பட்டு, இது அண்மையில்தான் மின் உற்பத்தியைத் துவக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்திய அரசு நிறுவுகிற மின் உற்பத்தி நிலையங்களை, அந்த வட்டாரத்தில் உள்ள நான்கைந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது என்ற கொள்கையை மேற்கொண்டிருக்கிறார்கள். 1977-க்குப் பிறகு இந்த நிலைமை ஏற்பட்டது. ஆகவே மற்ற மாநிலங்கள் கேட்கின்றன. இரண்டுக்கும் பொதுவாக சமமாகப் பாவித்து, மத்திய அரசு "முதல் அணு மின் நிலையத்தில் உற்பத்தி ஆவதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள், இரண்டாவது மின் நிலையத்தில் உற்பத்தியாவதை பாதி நீங்கள் எடுத்துக்கொண்டு மீதியை மற்ற மாநிலங்களுக்கு கொடுக்கலாம்" என்று சமாதானமாகச் சொன்னார்கள். ஆகவே இனி நாம் அதிக மின்சாரம் வேண்டுமென்று வற்புறுத்துவதில் பயனில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, அந்த இரண்டாவது பிரிவிலே உற்பத்தி ஆகிற மின்சார அளவு எவ்வளவு? அதிலே நமக்குக் கிடைக்கிற மொத்த அளவு எவ்வளவு? மெகாவாட் கணக்கில் கேட்கிறேன். எந்த அளவுக்கு நம்முடைய தேவையை அது பூர்த்தி செய்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மொத்த உற்பத்தித்திறன் 470 மெகாவாட். அதிலே தமிழகத்திற்கு 350 மெகாவாட்டும், ஆந்திரத்திற்கு 40 மெகாவாட்டுக்கும், கர்நாடகத்திற்கு 30 மெகாவாட்டும், கேரளாவுக்கு 25 மெகாவாட்டும், பாண்டிச்சேரிக்கு 5 மெகாவாட்டும், மீதி (அன் அலகேடட்) மின்சாரத்தை அதாவது 20 மெகாவாட் மின்சாரத்தை



மத்திய அரசும் எடுத்துக்கொள்கின்றன. இதுதான் இப்போதுள்ள நிலைமை. உற்பத்தியாகிற மின்சாரம் பூராவையும் நாம்தான் இப்போது பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

### தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை.

* 33 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலனுக்காக, அம்மாவட்டத்தில் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழக மருத்துவமனை (E.S.I. Hospital) ஒன்றை நிறுவ, தமிழக அரசு திட்டமிட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** இல்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம் என்று குறிப்பிலே இருந்தாலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தான் இத்தகைய மருந்துவமனைகள் வருகின்றன. சென்னையில் இருப்பதைவிட செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகமான தொழிற் சாலைகள் இருக்கின்றன. அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு சென்னையில் உள்ள ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனைகளில் உபயோகம் இப்போது இல்லையென்றாலும், வருங்காலத்திலாவது ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை அந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1,07,954 தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கிறார்கள். இன்றையதினம் ஐயனாவரம், கே.கே. நகர் ஆகிய இரண்டு இடங்களில் இந்த மருத்துவ மனைகள் இருக்கின்றன. அவைகளில் 850 படுக்கைகள் இருக்கின்றன. இந்த 850 படுக்கைகள் வாயிலாக செங்கல்பட்டு மாவட்டத் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு போதுமான வசதி அளிக்கப்பட்டு வருகிறது. எதிர்காலத்தில் உறுப்பினர்கள் அதிகமாகிறபோது, அரசு அதை கவனத்தில் கொண்டு இந்த வசதியைப் பெருக்க முடிவு செய்திருக்கிறது.

திரு. எல். ஜெயச்சந்திரன்: பொதுவாக ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை தொழிலாளர்கள் தங்களுடைய லீவு லெட்டர்களை வாங்குவதற்குத்தான் பயன் படுத்துகிறார்கள் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அதற்கு மூலகாரணம் அங்கே போதிய வசதியின்மைதான், அதை உபயோகப்படுத்த முடியாமல் போவதற்குக் காரணம் என்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: அப்படிப்பட்ட எந்தவொரு கருத்தும் அரசின் பார்வைக்குக் கொண்டுவரப்படவில்லை.

கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம்.

* 34 வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டம் முழுவதும், கால்நடை முனைப்பு மேம் பாட்டுத் திட்டத்தினை விரிவாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) தற்சமயம் ஏதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. அ. ப. சிவராமன்: தென்னாற்காடு மாவட்டம் என்று இல்லாமல், மாநிலம் முழுவதும் பல கிளை நிலையங்கள் இருக்கின்றன. பயிற்சி பெற்ற ஆய்வாளர்கள் இல்லாமல் எத்தனையோ கிளை நிலையங்கள் மூடப்பட் டிருக்கின்றன. ஆறு மாதத்திற்கு மேல் அப்படிப்பட்ட கிளை நிலையங்கள் பயிற்சி பெற்ற ஆய்வாளர்கள் இல்லாத நிலையில் இயங்கினால் மூடப்படும் என்று அரசு விதியே இருக்கிறது. ஆகவே பயிற்சி பெற்ற ஆய்வாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, அதன்மூலம் பயிற்சி பெற்ற கிளை நிலையங் களை உருவாக்கக்கூடிய முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: உறுப்பினர் அவர்களின் கருத்துக் களில் குறிப்பிட்ட குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை சீரமைக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, 6 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருக்கிற கிளை நிலையங்களை, அரசு விதிப்படி நிரந்தரமாக மூடி விடலாம் என்று ஆணை இருக்கிறது. ஆகவே அதைத் தவிர்த்து இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: முன்வரும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, கால்நடை முனைப்பு மேம்பாட்டுத் திட்டம் தற்போது தமிழ்நாட்டில் எந்த எந்த மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது என்றும் இந்தத் திட்டம் தென் னாற்காடு மாவட்டத்தில் விரிவாக்காததற்கான காரணம் என்னவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக எல்லா மாவட்டங்களிலும் சேர்ந்து 11 இடங் களில் இருக்கின்றன. அதில் தென்னாற்காடு மாவட்டத்தில் ஒன்று பண்ருட்டி யிலும் ஒன்று சிதம்பரத்திலும் இருக்கிறது. 1981 ஆம் ஆண்டு பண்ருட்டி யிலும், 1984 ஆம் ஆண்டு சிதம்பரத்திலும் தொடங்கப்பட்டது. இவ்வாறு தென்னாற்காடு மாவட்டத்தில் இரண்டு திட்டங்களும், தமிழ்நாடு முழுவதும் 11 திட்டங்களும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறநிலையத் துறைக்கு தனி வாரியம்.

* 35 வினா—திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா-அற நிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

அறநிலையத் துறையை, தனி வாரியமாக அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: அறநிலையத் துறையை தனி வாரிய மாக அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஏராளமான கோவில்கள் இருக்கின்றன. அவற்றின் சொத்துக்கள் கோடிக் கணக்கான அளவில் இருக்கின்றன. அவற்றைப் பராமரிக்க தற்போது உதவி ஆணையர்கள் இருந்தாலும், தற்சமயம் பல துறைகளுக்கு தனி வாரியங்கள் இருப்பதுபோல, இதற்கும் ஒரு வாரியம் அமைத்தால் சொத்துக்களைப் பாது

[1986 சனவரி 24

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவரவர்களே, இந்தியாவிலேயே அது தலைசிறந்த சரணாலயமா என்பது தெரியவில்லை. ஆனால் இந்தியாவிலேயே இருக்கின்ற மிகச் சிறந்த சரணாலயங்களில் இதுவும் ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சமீபத்திலே வந்த நம்முடைய உச்ச நீதிமன்ற நீதிபதி, மற்றும் ஜஸ்டிஸ் திரு. சர்க்காரியா அவர்கள் அந்த இடத்தைப் பார்த்துவிட்டு மிகுந்த அளவிலே பாராட்டியிருக்கிறார்கள். ஆனால் அதைப் பாதுகாப்பதற்கு மிகப் பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியிருக்கிறது. இது எந்த வருமானமும் இல்லாமல் இயற்கையைப் பாதுகாக்கின்ற, இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கின்ற, இயற்கையான உயிர்களைப் பாதுகாக்கின்ற முயற்சி. அதை மத்திய அரசு தன்னுடைய லட்சியமாக வைத்துக் கொண்டிருக்கிறது. மாநில அரசும் அதை ஏற்று நடைமுறைப் படுத்தி வருகிறது. ஆகவே இப்படி ஒரு மிகச் சிறந்த இடத்தைப் பாதுகாப்பதற்கு பறவைகள் சரணாலயங்கள் போன்றவைகளில் இயற்கையாக வாழும் உயிர்களை, இயற்கைச் சூழ்நிலைகளைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் மாநில அரசு தன்னுடைய நிதி வசதிக்குட்பட்ட வகையில் இந்தச் சரணாலயத்தினுடைய புனரமைப்பு வேலைகளைச் சீர்திருத்தி இன்னும் பல்லாயிரக் கணக்கான பறவைகள் அங்கு வந்து தங்கிச் செல்வதற்கு வாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றுவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. அ. ப. சிவராமன்:** தலைவரவர்களே, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும், உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் இந்த வேடந்தாங்கலுக்கு சீசனில் போனால், அவர்கள் அங்கு செல்வதற்கு பேருந்துகள் வாய்ப்பு, அங்கு தங்குவதற்குத் தேவையான இடங்கள் மற்றும் நல்ல உணவு விடுதி போன்ற அத்தியாவசியமான வசதிகள் கிடைக்க அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவரவர்களே, தங்குகின்ற இடங்கள் இப்போதும் இருக்கின்றன. ஆனால் சீசன் சமயங்கள் என்று சொல்லப்படுகின்ற அந்த மிக முக்கியமான காலங்களில் இன்னும் அதிக வசதிகளைச் செய்து தருவதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. போக்குவரத்தைப் பொறுத்தவரை, பயணிகள் சென்று வருகின்ற கணக்கை எடுத்து, அதன் தொகையைக் கருதி, மேலும் தேவையானால் அதிகப் பேருந்துகளை விடுவதற்கு பேருந்துக் கழகத்திடம் அரசு கேட்டுக்கொள்ளும்.



1986 சனவரி 24]

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்தில் கோடை விடுமுறை காலத்தில் டூரிஸ்டுகள் வரும்போது அங்கு தங்குவதற்கும், அங்கு உணவு அருந்துவதற்கும் தங்கும் விடுதியோ அல்லது உணவு விடுதியோ இல்லை. அடிப்படை வசதிகளான கழிப்பிடங்கள்கூட அங்கு இல்லை. அதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவரவர்களே, உணவோடு கூடிய வனத் துறை ஓய்வு இல்லம் ஒன்றும், பக்கத்திலே கருங்குழியில் பொதுப் பணித் துறை ஓய்வு இல்லம் ஒன்றும் இருப்பதாக குறிப்பு இருக்கிறது. அந்த உணவு வசதியோடு கூடிய ஓய்வு இல்லத்தில், தங்குகின்ற பயணிகள் போய் கேட்டால், அவர்கள் உணவு தயாரித்துக் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிற டூரிஸ்டுகள் எப்போது போனாலும் அங்கு தயாராக இருக்கின்ற உணவு விடுதியை எதிர்பார்க்கிறார்கள். அதற்கான வழி வகைகள் எப்படி என்பதை ஆராய்ந்து தேவையான வசதிகளைச் செய்வதற்கு, முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, ஆற்றுவசதியுள்ள நீர் நிலைகளில், ஏரிகளில் பறவைகள் வந்து தங்குகின்றன. வேடந்தாங்கல் தவிர வேறு ஒரு சில பகுதிகளில் பறவைகள் வந்து தங்குவதாகச் சொல்கிறார்கள். சுற்றுலாத் துறையின் மூலமாக அந்தப் பறவைகள் எந்தெந்த இடங்களில் வந்து தங்குகின்றன என்பதை ஆராய்ந்து அவற்றை சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரை, புகழ்பெற்ற பறவைகள் சரணாலயமாக வேதாரண்யம் பக்கத்திலே கோடியக்கரை இருக்கிறது. அதைப் போலவே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் ஓர் இடம் இருக்கிறது. அதையெல்லாம் பறவைகள் சரணாலயம் என்று அறிவித்து, பறவைகள் அங்கே பாதுகாப்பாகத் தங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதைத் தவிர ஆங்காங்கே சிறு சிறு பறவைகளின் சரணாலயங்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிய முழு விவரமும் என்னிடம் இப்போது இல்லை. அவ்வாறு இருக்கும் இடங்கள் அனைத்தையும் பாதுகாப்புக்குரிய இடங்களாக அறிவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. நெல்லை பாலாஜி :** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி தாலுக்காவில் பறவைகள் பாதுகாப்புப் பகுதி என்று மாவட்டத் தண்டல் நாயகம் அவர்களாலே அறிவிக்கப்பட்டு, அங்கே வண்ணக் கொக்குகள் வந்து தங்குகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட வண்ணக் கொக்குகளை யாரும் சுடக்கூடாது என்றும் சட்டம் இருக்கிறது. ஆனால் அதனை மீறி பலர் வ்ண்ணக் கொக்குகளைச் சுட்டுப் புசிக்கிறார்கள். எனவே வண்ணக் கொக்குகளைப் பாதுகாக்கும் வகையில் அந்த நாங்கு நேரிப் பகுதியை; பாதுகாப்புக்குரிய பகுதியாக அறிவித்து, பறவைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** அப்படிப்பட்ட வண்ணக் கொக்கு களைப் பாதுகாக்க மாவட்ட ஆட்சித் தலைவரே முயற்சி எடுத்துக் கொண்டு அறிவித்திருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே குறிப் பிட்டிருக்கிறார்கள். அதையும் மீறி, மனிதர்கள் என்கிற பெயரில் வாழ்கிற சில ஜந்துக்கள் அவைகளைச் சுட்டு, தின்றுகொண்டிருக்கிறார்கள் என்றும் தெரிவிக்கிறார். அவர் சுட்டதைப் பார்த்தாரா, தின்றதைப் பார்த்தாரா அல்லது அதில் பங்குபெற்றாரா என்பது எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அனுபவத்தில் சொல்லுகிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட முயற்சியில் யாராவது ஈடுபட்டாலும், அவர் களைத் திருத்துகிற முயற்சியில் உறுப்பினர்களைப் போன்றவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்படிச் சுடுபவர்களைக் கடுமையான தண்டனைக்கு ஆளாக்க சட்டம் இருக்கிறது, விதி இருக்கிறது, எனவே அந்த வகையில் அரசு இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

### அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்.

*37. வினா—திரு. அ. ப. சிவராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) அரசு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில், தர நிர்ணயம் செய்யும் பிரிவு செயல்படுகிறதா ?

(இ) இல்லையெனில், இனியாவது தர நிர்ணயம் செய்யும் பிரிவு அமைக்கப்படுமா ?





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) அதிக வரத்துக்கள் உள்ள 102 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தரம்பிரிப்பு மையங்கள் செயல் படுகின்றன.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை

**திரு. அ. ப. சிவராமன் :** தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே மிகவும் சிறந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் தென்னாற்காடு மாவட்டம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் என்பதை அனைவரும் அறிவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அந்த ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு விவசாயிகள் விளைபொருள் களைக் கொண்டு வரும்போது, வியாபாரிகள் மனம் போன போக்கில் விலை (பிட்) போடுகிறார்கள். இதன் காரணமாக விவசாயிகள் பெருத்த நட்டத் திற்கும் துன்பத்திற்கும் ஆளாகிறார்கள். எனவே இதைக் கருத்தில் கொண்டு அரசு இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அரசு பரிசீலிக்கும்.

**திரு. அ. ப. சிவராமன் :** அமைச்சர் அவர்களுக்கு மேலும் ஒரு செய்தி யைக் குறிப்பிடுவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான லாட் பருத்தி வந்து சேருகிறது. எனவே அதன் ஈரப் பதம், நூல் இழை நீளம், அறவைத் திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் 8 மணி முதல் 10 மணிக்குள் விலை போட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக மேலெழுந்த வாரியாக விலை போடுகிறார்கள். இதன் காரண மாக விவசாயிகள் பெருத்த நட்டத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே விரை வில் நடவடிக்கை மேற்கொண்டு தரம் பிரிக்க வசதி செய்து விவசாயிகளுக்கு நட்டம் இல்லாமல் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார் களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** பல்வேறு இடங்களிலும் பருத் திக்குத் தரம் பிரிப்பு மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக தரம் பிரிப்பு மையங்களில் குவிண்டால் ஒன்றுக்கு 10 காசு கட்டணம் வசூலிக்கப் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல் அந்தப் பகுதியிலும் அத்தகைய தரம் நிர்ணயம் செய்யும் மையம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## Ground Water.

*38. *Q.*—THIRU A. MAYILSAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether the Government are aware that there has been a considerable fall in the ground water level, in a few taluks of Salem, Periyar, Coimbatore and Dharmapuri Districts; and

(*b*) if so, the steps taken by the Government, to provide drinking water supply in those taluks?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) & (இ) சேலம், பெரியார், கோவை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 13 வட்டங்களை குடிநீர் பற்றாக் குறையானவை எனப் பாகுபடுத்தி ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**திரு. அ. மயில்சாமி :** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் நிலத்தடி நீர் குறைந்திருப்பது தான் என்று சொல்லப்படுகின்றது. எனவே எந்தக் காரணங்களால் நிலத்தடி நீர் குறைந்திருக்கிறது என்பதைப்பற்றி அரசு ஏதாவது பரிசீலனை செய்ததா? அந்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** நிலத்தடி நீர் குறைந்திருக்கிறது என்று உறுப்பினர் குறிப்பிட்டார்கள். நிலத்தடி நீர் பல்வேறு காரணங் களால் குறைகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள். பல்வேறு பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகளைப் போடுவ தாலும், கிணறுகளை மிகவும் ஆழமாக வெட்டிக் கொண்டே போவதாலும், அத்தகைய நிலைமை ஏற்படுகிறது. இதன் காரணமாக கோவை, சேலம், பெரியார், திருச்சி. மதுரை, முகவை, தருமபுரி போன்ற மாவட்டங்களில் 25 வட்டங்களில் 89 ஊராட்சி ஒன்றியங்களில் நிலத்தடி நீர்ப் பற்றாக்குறைப் பகுதியாகப் பாகுபடுத்தப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்குவதற்காக குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த 100 லட்சம் ரூபாயும் ஆழ்குழாய் கிணறுகளை அமைக்க ரூ. 135 லட்சமும் அரசால் தரப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி :** வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நிலத்தடி நீரைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு துறை சென்ற ஆண்டு அமைக்கப்பட்டது. அந்தத் துறை இதுவரை ஏதாவது ஆராய்ச்சியை மேற்கொண்டு நிலத்தடி



நீர் குறைவதற்கான காரணங்களையோ அல்லது நிலத்தடி நீரை அதிகப் படுத்துவதற்கான வழிகளையோ அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தனியாகக் கேள்வி போட்டு அத்தகைய விவரங்களைப் பெறலாம்.

## காசநோய் தொடர்பான மேற்படிப்பு.

* 39. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்தில், காசநோய் தொடர்பாக, மேற்படிப்பு வகுப்புகளை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, காச நோய் என்று தனியாக இல்லை. காச நோய் மற்றும் மார்பு சம்பந்தப் பட்ட நோய்க்கு மொத்தம் 14 மேற்படிப்பு இடங்கள் உள்ளன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நம்முடைய நாட்டிலே காச நோய்க்கு உட்படு கிறவர்களின் தோராயமான எண்ணிக்கை ஆண்டுக்கு எவ்வளவு என்ற விவரம் தம்முடைய அரசிடத்திலே இருக்கிறதா? காச நோயைப் போக்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போதுமான வசதிகள் இருக்கின்றனவா? அப்படி இல்லையென்றால் இதற்காக தனி வகுப்புகளைத் தொடங்குவதற் குரிய செயற்குறிப்பை வருங்காலத்திலாவது அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** காச நோய் என்றால் பல்மனரி டியூபர்குளோசிஸ் என்ற நோயைத்தான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடு கிறார் என்று நினைக்கிறேன். அந்த வகையிலே பல்மனரி டியூபர்குளோசிஸ் மற்றும் டீ. பி. ஆகியவற்றில் தமிழகத்திலே உட்படுபவர்களின் எண்ணிக்கை 1.4 சதவீதமாக இருக்கிறது. அதாவது ஆயிரத்தில் 14 பேருக்கு இந்நோய் இருக்கிறது. அகில இந்தியாவில் ஆயிரத்திற்கு பதினாறாக இருக்கிறது. அந்த அளவிற்கு ஏதாவது ஒரு வகையிலே காச நோயால் பாதிக்கப்படக் கூடிய அளவிற்கு இருக்கிறது என்ற புள்ளிவிவரத்தை சாம்பிள் சர்வே என்ற அடிப்படையில் தோராயமாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு

உறுப்பினர் மூலக் கேள்வியில் கல்லூரிகளில் இந்நோய்க்காக எத்தனை இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்று கேட்ட கேள்விக்குத்தான் நான் முதலில் விடையளித்தேன்.

டிப்ளமா இன் டியூபர்குளோசிஸ் அண்டு செஸ்ட் டிசீசஸ் என்பதற்காக 12 இடங்கள் சென்னை மருத்துவக் கல்லூரியிலும், இரண்டு இடங்கள் மதுரை மருத்துவக் கல்லூரியிலும் இருக்கின்றன. ஆக மொத்தம் 14 இடங்கள். அது மட்டுமல்லாமல் எம்.டி. (செஸ்ட் டிசீசஸ்) என்பதற்கு 3 இடங்கள் இருக்கின்றன. டீ.பி. என்று நாம் பெயர் வைப்பதில்லை. ஆனால் இதற்காகத் தேவைப்படும் அளவிற்கு டாக்டர்கள் இருக்கிறார்கள், வசதிகள் இருக்கின்றன. இப்போது மருத்துவமனையிலே தங்கி வைத்தியம் செய்துகொள்ள வேண்டிய தேவையில்லை. நடமாடும் சிகிச்சை (ஆம்பிலேட்டரி ட்ரீட்மென்ட்) முறையில் மருத்துவமனையில் தங்காமல் ஓ.பி.யில் மருந்து எடுத்துக் கொண்டு 'கீமோ தாராப்பி'யின் அடிப்படையில் நவீன முறை சிகிச்சை அளிப்பதை கடைப்பிடித்து வருகிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அகில இந்திய அளவிலே ஆயிரத்திற்கு 16 என்று இருந்தாலும் தமிழகத்திலே ஆயிரத்திற்கு 14 பேர்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வது மகிழ்ச்சிக்குரியதுதான். . . இதற்காக வகுப்பு நடத்த 12 இடங்கள் சென்னையிலேயும். 2 இடங்கள் மதுரையிலேயும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மற்ற டாக்டர்கள் இருப்பதாகவும் சொன்னார்கள். இருந்தாலும் ஆயிரத்திற்கு 14 என்பது சாதாரண எண்ணிக்கையல்ல, மிகப் பெரிய எண்ணிக்கை. ஆகவே வேறு பல மருத்துவக் கல்லூரிகளிலும் இந்த வகுப்பை நடத்துவதற்கான இடங்களைத் தந்தால், அந்தந்தப் பகுதிகளில் அவர்கள் பணியாற்ற வாய்ப்பு தந்தால், காச நோயை ஒழிக்க வாய்ப்பு ஏற்படுத்தும். இதை அரசு சிந்திக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் கொடுத்திருக்கக்கூடிய புள்ளிவிவரம் மருத்துவக் கல்லூரிகளில் எத்தனை இடங்கள் இருக்கின்றன என்பது. ஆண்டுதோறும் 14 பேர் என்று பல ஆண்டுகளாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் இரண்டு இடங்களைக் கூடுதலாக்கியதால் 14 இடங்களாக இருக்கின்றன. மேலும் உயர்த்த வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து என்று நான் நினைக்கிறேன்.



## Coimbatore Medical College.

* 40. *Q.*—Thiru C. R. LAKSHMIKANDHAN & Thiru R. D. SEETHAPATHY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Coimbatore Medical College is being threatened with derecognition by the Medical Council of India, for lack of clinical facilities and equipments there; and

(b) if so, the steps taken to avert such derecognition?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் போதிய மருத்துவ வசதிகளும், சாதனங்களும் இல்லாத காரணத்தால், அந்த மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரம் இந்திய மருத்துவக் குழுவால் ரத்து செய்யப்படுமோ என்ற அச்சமும், கவலையும் அந்தப் பகுதியிலே தோன்றியது. அந்தச் செய்தியின் அடிப்படையில்தான் இந்தக் கேள்வி கேட்கப்பட்டது. தமிழகத்தில் இது போன்று வேறு ஏதேனும் கல்லூரிகள் இந்திய மருத்துவக் குழுவின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கின்றனவா? தமிழ் நாட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் இரண்டு துவக்கப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்று சென்னையிலேயும் மற்றொன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் துவக்கப்பட்டுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு தமிழக அரசின் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பல கேள்விகளை ஒன்றாகச் சேர்த்துக் கேட்டிருக்கிறார்கள். முதல் கேள்விக்கு 'இல்லை' என்ற பதில்தான் சொல்ல வேண்டும். ஏதாவது வேறு கல்லூரிகள் அனுமதிக்கப்படாமல் இருக்கின்றனவா, அங்கீகாரம் இல்லாமல் இருக்கின்றனவா என்றால், அதற்கு விடை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அடுத்த கேள்வியாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப்பற்றிக் கேட்டார்கள். மூன்று பல்கலைக் கழகங்களுக்கு சில நிபந்தனைகளின் அடிப்படையிலே அனுமதி அளித்திருக்கிறோம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக சுய நிதி மருத்துவக் கல்லூரிக்கு இந்திய மருத்துவக் கழகம் அதனுடைய அங்கீகாரத்தை அளித்துவிட்டதா? அதனுடைய தற்போதைய நிலைமை என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, இந்தியன் மெடிகல் கவுன்சில் ஆஃப் இந்தியா, எம்.சி.ஐ. என்கின்ற அந்த அமைப்புக்கு அங்கீகாரம் கொடுப்பது என்பது இப்போதைய நிலையில் இல்லை. பிறகு தான் அந்தப் பிரச்சினை எழும்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவரவர்களே, கோயம்புத்தூரில் இருக்கிற மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவரவர்களே, அங்கீகாரம் என்பதைப் பொறுத்த வரையில், அவர்கள் அதற்காக 'அப்ளை' செய்கின்றார்கள். அதற்குப் பிறகு அவர்கள் 'விசிட்' செய்து கொடுப்பார்கள். இந்த அடிப்படையிலேதான் இந்த மூலக் கேள்வி கேட்கப்படுகின்றது. 'மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இந்தியா' நிறுவனத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் வந்து அதைப் பார்த்து பிறகு சரியாக இருக்கின்றது என்று சொல்லி, அவர்கள் அதற்கு ஒத்துக்கொள்வார்கள். ஆரம்பிப்பதற்காக பிரைமா பேசியாக ஒரு அனுமதி கொடுப்பது என்ற அளவில் எம்.சி.ஐ. எல்லோருக்கும் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது, இந்திய மருத்துவக் கழகம் பார்த்த பிறகுதான் என்று நான் அறிகிறேன். நம்முடைய மாநிலக் கழகத்தில் அதைப் பார்த்திருந்தால், இதுபோன்ற அங்கீகாரம் ரத்து செய்யப்படும் எண்ணம் வந்திருக்காது. அதற்கு அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எப்படி எழுந்தது என்பதைச் சுருக்கமாகச் சொன்னால், இதிலே எந்தவிதமான குழப்பமும் இருக்காது. முதலிலே கோயம்புத்தூர் பாரதியார் யுனிவர்சிடி சென்னைப் பல்கலைக் கழகத்தின் 'பார்ட்' ஆக இருந்தது. 'பார்ட் ஆஃப் தி மெட்ராஸ் யூனிவர்சிடி' யாக இருந்தது. அதற்குப் பிறகு தான் பாரதியார் யூனிவர்சிடி தொடங்கப்பட்டது. மெட்ராஸ் யூனிவர்சிடியி-



லிருந்து பிரிந்து பாரதியார் யூனிவர்சிட்டியாக மாற்றப்பட்டது. 'டிரான்ஸ்ஃபர் ஆஃப் யூனிவர்சிடி' என்ற அளவில் பாரதியார் யூனிவர்சிட்டி என்று ஆகியது. 1984 ஆம் ஆண்டு அப்பிலியேட் ஆக இருந்தது. அதற்குப் பிறகு பாரதியார் யூனிவர்சிட்டியைப் பற்றி நம்மிடம் எடுத்துப் பேசும்போது, ஒரு குழு போட்டு சரியாக என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று சொன்னோம். இன்டர்னல் ஆடிட் மாதிரி, அவ்வப்போது மருத்துவக் கல்லூரிக்கு என்னென்ன பிரச்சினைகள் எப்படியெல்லாம் இருக்கின்றன, என்ன செய்ய வேண்டும் என்று பார்க்கிறோம். அதிலே சில யோசனைகளைச் சொல்கின்றார்கள். அந்த யோசனைகளை நாம் நடைமுறைப்படுத்திக்கொண்டிருக்கிறோம். மெடிக்கல் கவுன்சில் ஆஃப் இந்தியாவைப் பொறுத்த வரையிலே படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தக் கேட்டுக் கொண்டார்கள். 500 படுக்கைகள் இருக்கின்றன. இன்னும் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். இப்படி 1982 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டது. நாம் உடனடியாக 961 படுக்கைகளாக உயர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், நர்ஸ்கள், செவிலியர்களுக்கு அவர்கள் தங்கியிருப்பதற்காக, படிப்பதற்காக ஒரு ஹாஸ்டல் வேண்டும் என்று சொன்னார்கள். மாணவர்களுக்கும், செவிலியர்களுக்கும், அங்கே பணியாற்றுபவர்களுக்கும் இன்னும் கொஞ்சம் விஸ்தரிக்கப்பட்ட வகையிலே ஒரு சென்டராக இருந்தால், நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார்கள். 1982-லே கேட்டு, பார்ட் 2 ஸ்கீமில் பைனான்ஸ் துறை மூலம் பெற்று ரூ. 45 லட்சம் பணம் ஒதுக்கி கட்டிடம் முடிக்கப்பட்டு அத்தனை பேர்களும் அங்கே இருக்கின்றார்கள். இப்படி அந்தந்த நேரங்களில் சொல்லப்படுகின்ற யோசனைகளை நாம் நடைமுறைப்படுத்துகிறோம். அதுதான் வாடிக்கையாக இருக்கின்றது. அகில இந்திய அளவிலே அதைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே அந்தப் பிரச்சினை எழவில்லை. பாரதியார் யூனிவர்சிடி, ஒரு 'இன்டர்னல் ஆடிட்' மாதிரியாக இன்னும் சில வேலைகளைச் செய்ய வேண்டும் என்று சொன்னது இன்னும் கொஞ்சம் பெரிதுபடுத்தி பத்திரிகையிலே வந்திருக்கின்றது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்பதன் நோக்கமே கோயம்புத்தூரில் இருக்கின்ற அந்த மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதுதான் எங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்வது, பல வசதிகள் தேவைப்பட்டன என்று கேட்டார்கள் என்று சொல்கின்றார்கள்.

அகில இந்திய மெடிகல் கவுன்சில் அதை அங்கீகாரம் செய்துவிட்டதா என்பதைப் பற்றியும், எந்தக் காரணத்திற்காக அந்தக் காரியம் நடந்திருக்கின்றது என்பதைப் பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-35)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, ரத்து செய்யக்கூடிய பிரச்சினையே எழவில்லை. They never cancelled at all. ரத்து செய்யவில்லை. அந்தப் பிரச்சினையே எழவில்லை. There is no question of cancelling the affiliation at all. அந்த வகையிலேதான் சொன்னேன். அவர்கள் சில யோசனைகளைத்தான் சொன்னார்கள். 1982-ல் சொன்னார்கள். அதை உடனடியாகச் செய்துவிட்டோம். உறுப்பினரவர்களுடைய கேள்விக்கு தெளிவாகப் பதில் சொல்ல வேண்டுமென்றால், ரத்து செய்யப்படவில்லை.
There isabsolutely no question of their cancelling the affiliation at all. அது எழவில்லை.

**திரு. அ. மயில்சாமி :** தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரிக்கு இன்னும் சில வசதிகள் தேவை என்ற அடிப்படையிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்று அறிகிறேன். பொதுவாக மருத்துவக் கல்லூரியும், மருத்துவ மனையும் அருகருகே இருப்பதுதான் சிறந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் கோவையிலே கல்லூரி ஓரிடத்திலும், மருத்துவ மனை ஓரிடத்திலும் இருக்கிறது. இரண்டையும் அருகருகே வைக்க முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே, கோவையில் மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அது 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அங்கே மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்ட மருத்துவ மனையாக மாற்றப்பட்டது. அதற்குப் பிறகு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்ற நேரத்தில், கோவையில் சென்ட்ரல் பாயின்டில் இடமில்லை. எனவே பக்கத்தில் இருக்கும் பீளமேட்டில், அதாவது ஏரோடிரோமுக்குப் போகும் வழியிலே 1966-லே கல்லூரியை ஆரம்பித்தார்கள். அதில் எந்தமாதிரியான பிரச்சினையும் வரவில்லை. பல்வேறு இடங்களிலே மருத்துவ மனை ஒரு நகரத்திலே இருக்கும். மருத்துவக் கல்லூரி 30, 40 மைல் தாண்டி ஒரு நகரத்தில் இருக்கும். அதை ஒரு பிரச்சினையாக மெடிகல் கவுன்சில் எழுப்பவில்லை.



## உடுக்குறியிடாத வினாக்கள்.

### கட்டட வசதி இல்லாத பள்ளிகள்.

1. **வினா—திரு. சி. நா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—6—1985 அன்றுள்ளபடி, தமிழ்நாட்டில் வகுப்புகள் நடத்த போதிய கற்கட்டட வசதி இல்லாத, அரசு உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இவற்றுக்குக் கட்டடங்கள் கட்ட, உலக வங்கியுடனோ அல்லது மத்திய அரசுடனோ, தமிழ்நாடு அரசு தொடர்பு கொண்டுள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) 1,300

(இ) மற்றும் (உ) : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற்று அதன்மூலம் இம்மாநிலத்திலுள்ள அரசினர் உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டும் கருத்துரு ஒன்று ஆராயப்பட்டது. ஆனால் ஒவ்வொரு மாநிலத்தின் நிதியிலிருந்தே இத்தகு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்னும் அடிப்படையில் இதற்கு மைய அரசு ஒப்புதலளிக்காததால் இம்முயற்சி கைவிடப்பட்டது. உலக வங்கி உதவியுடன் அரசினர் உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டடம் கட்டுவது குறித்து எந்தக் கருத்துருவும் பரிசீலனையில் இல்லை.

### தமிழ்க் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை.

2. **வினா—திரு. அ. ப. சிவராமன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழகத்திலுள்ள தமிழ்க் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை, 1981-82, 1982-83, 1983-84 ஆண்டுகளில் முறையே எவ்வளவு ?

[1986 சனவரி 24

விடை—

தமிழகத்திலுள்ள தமிழ்க் கல்லூரிகளில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை விவரம்:

| வருடம் | | மாணவர்களின் எண்ணிக்கை. ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1981–82 | .. | 298 | 462 |
| 1982–83 | .. | 278 | 519 |
| 1983–84 | .. | 226 | 156 |

பொதுமக்கள்-மருத்துவர் விகிதம்.

3. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகத்தில் சராசரி எத்தனை பேருக்கு ஒரு மருத்துவர் உள்ளார்?

விடை—

1,330 பேருக்கு ஒரு மருத்துவர் உள்ளார்.

புதிய வழித்தடங்கள்.

4. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தினால் 1983-84 ஆம் ஆண்டில், புதிய வழித்தடங்களில் எத்தனை பேருந்துகள் விடப்பட்டன?

(இ) இதில் நீண்டதூரம் பேருந்து மற்றும் நகரப் பேருந்து தடங்களில் விடப்பட்டவை எத்தனை?

விடை—

(அ) 1983-84 ஆம் ஆண்டில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் 11 பேருந்துகளை புதிய வழித்தடங்களில் இயக்கியுள்ளது.



1986 சனவரி 24]

(இ) இவற்றில் 3 பேருந்துகள் புறநகர் வழித்தடங்களிலும், எட்டு பேருந்துகள் நகர வழித்தடங்களிலும் இயக்கப்பட்டுள்ளன.

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்.

5. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1—1—1980 முதல் 31—12—1984 வரை தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில், ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டு மனைப்பட்டா எத்தனை?

விடை—

தென்னாற்காடு மாவட்டம், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் 1—1—1980 முதல் 31—12—1984 வரை, ஆதிதிராவிடர்களுக்கு 562 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை பயணியர் விடுதிகள்.

6. வினா—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1—8—1985 நாளன்றுள்ளபடி, தமிழகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள பயணியர் மாளிகைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவற்றில் தொலைபேசி இணைப்பு உள்ளவை எத்தனை?

விடை—

| | |
|---|---|
| (அ) 1—8—1985 நாளன்றுள்ளபடி, தமிழகத்தில் பொதுப் பணித்துறையின் கீழ் உள்ள பயணியர் விடுதிகளின் எண்ணிக்கை. | 241 |
| (இ) இவற்றில் தொலைபேசி தொடர்பு நேரிடையாக உள்ளவை | 57 |
| வெளிப்புற தொடர்பின் மூலம் உள்ளவை | 30 |

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது:—

ஜனவரி 24 (வெள்ளி)

1. ஆளுநர் உரையின் மீதான விவாதம்.
   12-30 மணி: துணை விவர அறிக்கை மற்றும் கூடுதல் செலவு குறித்த விவர அறிக்கையினை அளித்தல்.
2. மாலை 4 மணி: அரசின் சட்ட முன் வடிவினை ஆய்வு செய்தல்.

ஜனவரி 25 (சனி)

விடுமுறை.

ஜனவரி 26 (ஞாயிறு)

விடுமுறை.

ஜனவரி 27 (திங்கள்)

காலை 10 மணி: கேள்வி நேரம் இல்லை. ஆளுநர் உரையின்மீதான விவாதமும், பதிலுரையும்.
மாலை 4 மணி: துணை விவர அறிக்கை மற்றும் கூடுதல் செலவு குறித்த விவர அறிக்கைமீது விவாதம்.

ஜனவரி 28 (செவ்வாய்)

அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

ஜனவரி 29 (புதன்)

அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

ஜனவரி 30 (வியாழன்)

அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல்.

மேலவை வழக்கம்போல் காலை 10 மணிக்குக் கூடும்.



## 3. கவன ஈர்ப்பு.

### பவானி ஆற்றிலிருந்து காவிரியாற்றுக்கு திறந்துவிடப்படும் தண்ணீரில் சாராய ஆலைகளின் கழிவு நீர் திறந்துவிடப்படுவதால் குடிநீரில் நச்சுத் தன்மை பரவி, மக்கள் பாதிப்புக்குள்ளாக்கப்படுவது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்:

"பவானி ஆற்றிலிருந்து காவிரியாற்றுக்கு திறந்து விடப்படும் தண்ணீரில் பவானி ஆற்றங்கரையில் உள்ள சாராய ஆலைகளின் கழிவு நீர் திறந்துவிடப்படுவதால், பவானி, ஈரோடு, திருச்சி, குளித்தலை, முசிறி ஆகிய நகரங்களில் வழங்கப்படும் குடிநீரில் நச்சுத் தன்மை பரவி மக்களைப் பாதிப்புக்குள்ளாக்கியும் பயிர்கள் வளர்ச்சி குன்றி பாதிக்கப்பட்டிருக்கும் நிலைகளைக் குறித்தும்"

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, ஓர் விவர அறிக்கை @அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே காவிரி ஆற்றில் தண்ணீர் இல்லாததால், பவானி ஆற்றினுடைய தண்ணீர், பெரியார் மாவட்டத்திற்குப் பயன்பட வேண்டிய தண்ணீர் திறந்து விடப்படுகிறது என்றும், அந்த ஆற்றின் கரையில் உள்ள 2 சாராய ஆலைகளின் கழிவு நீர் இதில் கலப்பதால், தண்ணீரில் நச்சுத் தன்மை ஏற்பட்டு, குளித்தலைப் பகுதி, பவானிப்பகுதி, ஈரோடு பகுதி, திருச்சிப் பகுதி, முசிறிப் பகுதிகளில் எல்லாம் விஷம் கலந்த குடிநீர் வந்து, காமாலை, டைபாய்ட் போன்ற நோய்கள் வருவதோடு, தண்ணீரிலுள்ள மீன் இனங்கள் அழிந்துவிடுகின்றன. விவசாயத்திற்கும் இதனால் பாதிப்பு ஏற்படுகிறது. இதையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வரும்போது, சாராய உற்பத்தியிலே செய்ய வேண்டிய பணிகளைப் பற்றி மட்டும் விரிவாக அறிக்கையிலே தரப்பட்டிருக்கிறது. கழிவு நீரில் நச்சுத் தன்மையை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்பு பற்றி, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருப்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இதனால் பாதிப்பு ஏற்படவில்லை; நச்சுத் தன்மை கலக்கவில்லை, ஆற்றிலே அந்தத் தண்ணீர் செல்லவில்லை என்று சொல்லவில்லை. அப்படியே சென்றிருந்தாலும் அது தடுக்கப்பட்டிருக்கிறதா என்ற விபரம் இந்தக்

@) 150—152 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.)

(முற்பகல் 10-40)

குறிப்பில் இல்லை. கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குரிய விடை இந்த விவர அறிக்கையில் இல்லை. ஆகவே அங்கே அப்படிப்பட்ட பாதிப்பு இல்லையா, தண்ணீரில் அந்தக் கழிவு நீர் கலக்கவில்லையா, அப்படியே கலந்திருந்து ஒரு வேளை நச்சுத்தன்மை ஏற்பட்டிருந்தால், அதன்காரணமாக நோய்கள் உற்பத்தியாகியிருந்தால், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இப்படிப்பட்ட கழிவு நீர் கலக்காமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் விடையளிப்பாரா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பெரியார் மாவட்ட கலெக்டர் அந்தத் தண்ணீரை சாம்பிள் எடுத்துக்கொண்டு 26—12—1985 அன்று சோதனைக்கு அனுப்பினார். அவர், அந்தத் தண்ணீரில் குறைபாடு இல்லை என்று கூறினார். 'The water was potable and non-toxic என்று சொன்னார். அதற்குப் பிறகு நம்முடைய இலாக்காவே மீண்டும் ஒருமுறை அதைப் பரிசீலனை செய்வதற்காக, 2—1—1986 அன்று தண்ணீரை எடுத்துப் பரிசீலனை செய்தார்கள். அதிலே ஒருநாள் 26—12—1985 ஆம் தேதி தண்ணீர் கொஞ்சம் புரவுன் கலராக இருந்ததாகத் தெரிந்தது. அந்த நிலைமையில் மீண்டும் 27 ஆம் தேதி பார்க்கும்போது நச்சுத்தன்மை இல்லை என்று கண்டுபிடித்தார்கள். எப்படி இருந்தாலும், கழிவுத் தண்ணீரை ஆற்றில் விடும் விஷயத்தில் Lagoons போன்ற சுத்திகரிக்கும் முறைகளை வைத்திருக்கிறோம். அந்தக் கழிவை சுத்தப்படுத்தும் இயந்திரங்களின் மூலம் அதைச் சுத்தப்படுத்தி அதில் உள்ள நச்சுத்தன்மையை அகற்றித்தான், ஆறுகளில் விடவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அறிக்கையில் கூட கூடுதலான விவரங்கள் இருக்கின்றன. எந்த விதமான சுத்திகரிப்பும் இல்லாமல் விடக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இந்த விவர அறிக்கையில் கூட திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர் ஆல்கஹால் நிறுவனம் லிமிடெட் என்று ஆரம்பிக்கும் பாராவில், பல்வேறு ஆலைகளிலிருந்து வெளிவரும்



கழிவு நீரை சுத்திகரிப்புக்காக ஒரு பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலைக்கு ஒப்பந்தம் தரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது செயல்படத் துவங்கியதா, இல்லையா ? அப்படி இல்லாமல் அந்த நீர் எங்கே போகிறது ? சாதாரணமாக ஆலைக் கழிவு நீரினை மக்கள் வசிக்காத பகுதிகளில் கொண்டு போய் விடவேண்டுமென்று அரசாணையே இருப்பதாக நான் அறிகிறேன். அந்த அரசாணையை அமல்படுத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இப்படி சந்தேகப்பட காரணம் இருக்கிறது. கழிவுநீர் ஆற்றில் கலக்காமல் கண்காணித்து வருகிறோம் என்று இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது மேம்பாடு அடையவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சிறிய அளவில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்று தெரிகிறது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, Messrs. S. T. N. France and Snoklen S. P. I. Italy) என்ற இத்தாலி நாட்டுக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அவர்கள் மத்திய அரசின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். அந்தத் தண்ணீரை சுத்திகரிக்கப்பட்டபின்தான் ஆற்றில் விடவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். Only after treating the effluent they are permitted to allow it to get into the river) இல்லையென்றால், அதற்கு அனுமதி கொடுப்பதில்லை என்று சொல்லியிருக்கிறோம். இப்போது தண்ணீரை அங்கே அனுப்பி, அந்தத் தொழிற்சாலையில்தான் சுத்திகரிக்கிறார்கள். ஒப்பந்தம் செய்துகொண்ட கம்பெனியுடன் இன்னும் செயல்பட ஆரம்பிக்கவில்லை. உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அதுதான் பதிலாக இருக்கும். ஒப்பந்தம் செய்துகொண்ட கம்பெனியின் உதவியால் சுத்திகரிப்பு செய்ததற்குப் பிறகுதான் தண்ணீரை விடவேண்டும், இப்போது விடக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். மீறி அப்படி விட்டால் தயவு தாட்சண்யம் இல்லாமல் இரண்டு கம்பெனிகள் மீதும் நடவடிக்கை, அதிலும் குறிப்பாக தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

(முற்பகல் 10-45)

## 4. ஆளுநர் உரை மீதான விவாதம்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடக்கிற இந்த விவாதத்தில் நானும் பங்குபெற்று சில கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்ததற்காக நான் முதன் முதலில் தங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்கள் ஆண்டுக்கு ஆண்டு பேசுகிறார் என்றும், பேசுகிற கருத்துக்களில் பல கருத்துக்கள் மாறுபடுகின்றன என்று சொன்னாலும், ஓர் அரசினுடைய நிலைகளை, அரசினுடைய கொள்கைகளை அவர் எடுத்துச்சொல்கின்ற வழியில் வரவிருக்கின்ற ஆண்டுகளில் இன்னின்ன நடைபெற வேண்டும் என்பதையும், கடந்த ஆண்டுகளில் நாம் என்னென்ன சந்தித்தோம் என்பதையும் கூறி, அவற்றிற்குச் சில விளக்கங்கள் தருகின்ற நேரத்தில் இன்றைக்கு பல்வேறு உண்மைகளை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க அது ஒரு வாய்ப்பாக அமைகிறது. இந்தவகையில் இந்த ஆண்டு ஆளுநர் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை மிகத் தெளிவாக எடுத்து, சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இங்கே திரும்பத் திரும்பப் பேசிக்கொண்டிருக்கிற பல்வேறு நண்பர்கள் ஆளுநர் ஏதோ வாடிக்கையாகப் பேசுவது போல, கம்பராமாயணம் எப்படி ஆரம்பிக்கின்ற முதல் பாட்டிலிருந்து கடைசி பாட்டுவரையில் மாறாது இருக்கிறதோ அதைப்போல, ஆளுநரும் அதே பாட்டைப் பாடிக்கொண்டிருக்கிறார் என்கிற முறையிலே பேசுவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் ஆளுநர் அவர்கள் இந்த அரசினுடைய கொள்கைகளைத் தெளிவுபடுத்துகின்றவகையில், இப்படியெல்லாம் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டுமென்று சொல்வது, அவர்களுக்குப் புரியவில்லை என்றுதான் கருதுகிறேன்.

ஆண்டுக்காண்டு மழை வருகிறது ; புயல் வருகிறது என்று சொன்னால், அதை ஒவ்வொரு ஆண்டும் நாட்டு மக்களுக்குத் தெரிவித்தாக வேண்டுமே தவிர தெரிவிக்காமல் இருக்க முடியாது. அவ்வாறு தெரிவிக்கின்ற நேரத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலே இதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பல்வேறு விவாதங்களை இங்கே கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த மன்றத்திலே மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களிலும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக மதுராந்தகம் ஏரி உடைந்தது. அதைப் பெரிய அரசியல் பிரச்சினையாக ஆக்கி, மதுராந்தகம் ஏரியை அரசு காக்கத் தவறிவிட்டது என்று பேசுகிற அளவுக்கு பல்வேறு புதிய சிந்தனைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.



தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த எனக்குத் தெரியும். எங்களுக்கெல்லாம் மழைக்காலங்களில் மேட்டூர் அணையில் 120 அடி தண்ணீர் - நிரம்பிவிட்டது என்றால், ஆற்றுப்பகுதியில் இருக்கிற சாதாரண விவசாயிகள் மட்டுமல்ல, பொதுமக்களும்கூட, மிகுந்த கவலையோடு இருப்போம். எந்த நேரத்தில் கரை உடைந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருப்போம். ‘ஆபத்து’ என்று அறிவிக்கப்படுமானால், ஆற்றின் கரைப்பகுதிகளில் உள்ளவர்கள் ஆங்காங்கே குழுக்கள் அமைத்து, இரவு முழுவதும் கரைகளைக் காக்க, பணியாற்றிக்கொண்டிருப்பார்கள். மதுராந்தகம் ஏரி உடைந்தது. அரசு அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகம் ஏரி குறித்து சொல்வார்கள். அந்த ஏரி இருக்கும் இடத்தில் ஒரு கோவில்கூட இருக்கிறது. அந்த ஏரி, இராமர் காத்த ஏரி என்று சொல்வார்கள். அந்த ஏரியே உடைந்தது என்று சொன்னால், இராமரே காக்க தவறிவிட்டார் என்று சொன்னால், வேறு யார் அதைக் காக்க முடியும் என்று நினைக்க வேண்டும். இராமன் காத்த அதை, ஆறுமுகம் உடைத்துவிட்டார். எனவே அந்த ஏரி உடைந்துவிட்டது என்று சொன்னால், ஆறுமுகத்தைத்தான் போய் கேட்கவேண்டுமே தவிர அரசாங்கத்தைக் கேட்கக்கூடாது, இராமரைக் கேட்கக்கூடாது என்று. . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இராமனுக்கு ஆறுமுகம் மாப்பிள்ளை. (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : நன்றி.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : இராமர் காத்ததை ஆறுமுகம் உடைத்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அது எந்த ஆறுமுகம் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு விளக்கம் சொன்னீர்கள். நான் அதற்கு நன்றி சொல்வதற்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு இந்தச் சந்தேகம் வந்திருக்கக்கூடாது. தலைவர் அவர்களே சரியாக விளக்கம் அளித்துவிட்டார்கள். நான் சொல்கிற ஆறுமுகம் அந்த ஆறுமுகம்தான். உறுப்பினர் அவர்கள் வேறு ஆறுமுகத்தை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் சொல்வது புராணத்திலே வருகிற ஆறுமுகத்தைத்தான்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆறுமுகம் உடைத்து விட்டார் என்று சாதாரணமாகச் சொல்லிச் சென்றுவிட்டால் சந்தேகம் வரும். அதனால்தான் கேட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா சொன்னபோதே அவர் யாரைச் சொல்கிறார் என்று நான் புரிந்து கொண்டேன், உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

(முற்பகல் 10-50)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, நான் சொல்வது, சாதாரணமாக ஒரு உதாரணத்திற்காக, இராமனுக்கும், ஆறுமுகத்திற்கும் ஒரு வைஷ்ணவத் தகராறு வரும் என்ற வகையிலே சொன்னேனே தவிர, உறுப்பினரவர்கள் நினைக்கிற மாதிரி, அங்குள்ள எம்.எல்.ஏ. திரு. ஆறுமுகம் உடைத்தார் என்று நான் சொல்ல மாட்டேன். அப்படிப்பட்ட நிலையும் இல்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, ஆறுமுகம் என்று சொல்லி, வேறு விளக்கம் சொல்வதாகச் சொன்னார்கள். இப்போது மறைமுகமாக வேறு ஒருவரைக் குறிப்பிட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது அவ்வளவு நியாயமல்ல.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரி உடைக்கப்படவில்லை என்பதையும், அது இயற்கையாக உடைபட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, அது இயற்கையாக உடைந்தது என்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒத்துக் கொண்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இயற்கையை எதிர்த்துப் போராட வேண்டிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், நாம் அந்த அறிவை வளர்த்துக் கொள்வதிலே கவனம் செலுத்த வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு, அதிகாரிகள் ஏன் அதைப் பார்க்கவில்லை, அவர்கள் எங்கு போனார்கள் என்று கேட்டுக் கொண்டிருப்





பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைக்கு எவ்வளவோ சோதனைகள் ஏற்படுகின்றன. வெள்ளம் வருகிறது. பல்வேறு சோதனைகளைச் சந்திக்கிறோம். இத்தனை சோதனைகளையும் நான் பெருமையாகச் சொல்வேன். இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் உணவு நிலைமை எந்தவிதமான பாதிப்பும் இல்லாமல்—இங்கே இருக்கிற ஒரு சாதாரண ஏழை கூட உணவினாலே பாதிக்கிறேன், எனக்கு ஒரு இன்னல் ஏற்பட்டது, கஷ்டம் ஏற்பட்டது என்று சொல்லாத அளவுக்கு—இருக்கிறது. இந்த அரசு இவ்வளவு பாதிப்புகளையும் தாங்கிக்கொண்டு மக்களைக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையாகச் சொல்கிறேன். அப்படிச் சொல்லும்போது, சில பேருக்குச் சந்தேகம் வரும். இங்கே கூட ஓர் உறுப்பினர் சொன்னார். இங்கே மக்கள் எலிக் கறி சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள் என்று சொல்லி மக்களுடைய மனதை களங்கப்படுத்துவதற்கு செய்த முயற்சிதான் அது. அப்படிச் சாப்பிடுகின்ற நிலைமைகள் வருமா என்று சொன்னால் வராது. யாராவது அந்தச் செய்தியை வெளி மாநிலத்திலே பார்த்து இப்படியும் இருக்குமா என்று நினைக்கத் தோன்றுமே தவிர, நிச்சயமாக இவ்வளவு பாதிப்புகளுக்கிடையிலே "தமிழ்நாட்டில் அரிசி கிடைக்க வில்லை, மக்கள் அரிசி வாங்குவதற்கு அலைகிறார்கள் ; ஒருவேளை சோறு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்" என்கிற நிலை இல்லை என்பதை மட்டும் எதிர்க் கட்சியினருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, ஆளுநர் உரையிலே நான் தான் பேசும்போது எலிக் கறிபற்றிப் பேசினேன். அந்த எலிக் கறி அங்கு விற்றதற்கு, அதைச் சாப்பிட்டதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. படங்கள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னேன். மீண்டும் அதையே எடுத்து, நான் ஏதோ ஒட்டுமொத்தமாக தமிழகம் பூராவும் அதே நிலைமைதான் என்று சொன்னதுபோல உறுப்பினரவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட தவறான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, நான் இதற்கும் உறுப்பினரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் சாப்பிடுவது தமிழ் நாடு முழுவதும் இல்லை. எங்கோ ஓரிடத்திலே இருக்கலாம். அங்கே சாப்பிடுகிறார்கள் என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சில நேரங்களில் செய்திகளில் கூட தவறு வந்துவிடும். ஆனால் அவர்கள் இன்றைக்கு விளக்கம் சொன்னதற்கு உள்ளபடியே நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 ஜனவரி 24

உணவு நிலைமையைப் பொறுத்தவரையில், இவ்வளவு பிரச்சினைகளுக்கிடையில் இந்த அரசு உணவு நிலைமையைக் காக்கிற அளவுக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், அதை எதிர்க் கட்சிக்காரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசியல் வேறுபாடுகள் நமக்கு இருக்கலாம். அதற்கு என்ன அடிப்படைக் காரணமென்று அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த அரசு மக்கள் மீது எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு, இவ்வளவு சோதனைகளுக்குப் பின்னாலேயும் மக்களைக் காத்து, அவர்களுக்கு எந்தவிதமான இன்னல்களும் வரக்கூடாத அளவுக்குச் செய்திருக்கிறது என்று சொன்னால் அதுதான் அரசின் நிலை. ஆனால் அரசினுடைய கொள்கைகளிலே மாறினால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு, பழையதைச் சொன்னால்தான் நினைவுக்கு வரும். அதற்காகச் சொல்கிறேன். ஒரு நேரம் எனக்குத் தெரியும். தி.மு.க. ஆட்சி நடக்கும்போது, திடீரென்று ஒருநாள் காலையிலே தஞ்சாவூரிலே இருக்கிற அரிசி, நெல் அத்தனையையும் யார் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு போகலாமென்று அரசு உத்தரவு போட்டது. அதன் விளைவு என்ன தெரியுமா ? தஞ்சாவூரிலுள்ள நெல், அரிசி அத்தனையையும் பல்வேறு இடங்களுக்குக் கடத்திச் சென்றுவிட்டார்கள். அதற்குப் பிறகு என்ன நிலைமைகள் தெரியுமா ? அந்த உத்தரவு வருவதற்கு முன்னால் அரிசியின் விலை ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் 40 காசு, ஒரு ரூபாய் 50 காசு, ஒரு ரூபாய் 60 காசு என்று விற்றது. அது வந்த பிறகு ஒரே நாளில் அரிசி விலை லிட்டருக்கு ரூ. 5, ரூ. 6 என்று ஏறியது. இதனுடைய விளைவு என்ன தெரியுமா ? தஞ்சாவூர் மாவட்ட மக்கள் அன்றைக்கு 6 ரூபாய், 7 ரூபாய்க்கு அரிசி வாங்க முடியாமல், மக்கள் 'க்யூ' வில் நின்று அல்லல் பட்டதை பல பேர் மறந்திருக்கமாட்டார்கள். இது அன்றைக்கு அரசு செய்த தவறின் விளைவால் வந்த நிலை. ஆனால் இன்றைக்கு இந்த அரசை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த நிலை இன்றைக்கு வரவில்லை. அப்படி வரும் நிலைக்கு விடுவதில்லை. அதுதான் இந்த அரசினுடைய உண்மையான நிலை. அதனாலேதான் இன்றைக்கு இவ்வளவு சோதனைகளுக்கிடையிலேயும், எவ்வளவு பெரிய வேதனைகள் வந்தாலும், அதைத் தாங்கி, மக்கள் தேவையைத் தெரிந்துகொண்டு முறையாக ஒழுங்காக இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையாகச் சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.



1986 ஜனவரி 24] [திரு. எஸ். ஆர். இராதா]

(முற்பகல் 10-55)

அப்படி ஆளுநர் உரையிலே கூட பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி எந்தத் திட்டம் போடுகிற நேரத்திலும் அரசு மக்களுடைய நலனை மட்டுமே கவனத்தில் வைத்துக் கொண்டு தீட்டுகிறது, செயல்படுகிறது என்பதுதான் உண்மை. அதன் காரணமாகத்தான் திட்டங்கள் தோல்வி அடைகின்றன என்று எந்த எதிர்க் கட்சியும் எடுத்துச் சொல்ல முடியாத நிலை இன்றைக்கு இருக்கிறது.

ஒரு திட்டம் தவறாகப் போடப்பட்டால் அதனால் எவ்வளவு பெரிய மோசடிகள் நடக்கும் என்பது பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களுக்கும் தெரியும். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். சென்னையில் உள்ள கூவத்தை மணக்க வைக்கப் போகிறோம் என்று பல கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டினார்கள். அந்தத் திட்டத்தின் நோக்கம் என்னவென்றால், கூவம் ஆற்றில் இருக்கிற அழுக்கை நீக்க வேண்டும், கூவத்தின் கரைகளைப் பலப்படுத்தி, அதனை அழகான கூவமாக்கி அதிலே மாலை நேரங்களில் உல்லாசமாகப் படகுகளில் போகலாம் என்று திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்தைக் கேட்கிறபோது மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. கூவம் மணக்கப்போகிறது, அதன் நாற்றம் போகப் போகிறது, நினைத்த இடங்களுக்கு எல்லாம் படகில் போகலாம் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். என்ன ஆயிற்று ? சில பேரை கோடீஸ்வரர்களாக ஆக்க அந்தத் திட்டம் வரையப்பட்டதே தவிர, அதனாலே கூவத்தின் நாற்றம் இன்றும் போகவில்லை. அப்போது அவர்கள் அடித்த கொள்ளையின் நாற்றத்தால் அது இன்னும் அதிகமானதே தவிர குறையவில்லை. இதைச் சொல்லுகிறபோது, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. மாணிக்கம் அவர்கள் கூட சிரிக்கிறார்கள். இதையே இன்னும் எத்தனை வருஷத்திற்குச் சொல்லிக் கொண்டிருக்கப் போகிறார்கள், இதையே சொல்லிக் கொண்டே காலத்தை ஓட்டிவிடப் போகிறார்களா என்றுகூட நினைக்கலாம். நான் எதற்காக இதை அடிக்கடி குறிப்பிடுகிறேன் என்றால், 1976 ஆம் ஆண்டில் 10 வயது பையனாக இருந்தவனுக்கு அப்போது இதெல்லாம் தெரியாது. அவன் இன்றைக்கு 20 வயது இளைஞனாக வளர்ந்திருக்கிறான். அவனுக்கு அப்போது வீராணம் திட்டத்தில் நடைபெற்ற ஊழல் பற்றியோ கூவம் ஆற்றில் அடித்த கொள்ளை பற்றியோ அன்றைக்குச் சொன்னாலும் தெரியாது, புரியாது. இன்றைக்கு 20 வயதான அந்த இளைஞனுக்குச் சொன்னால் தான் புரியும். வீராணம் குழாய்களைப் பார்த்து இது எதற்காக என்று கேட்பானே தவிர, அதிலே நடந்திருக்கிற ஊழல் அவனுக்குத் தெரியாது. எதற்காக அந்தக் குழாய்

[திரு. எஸ். ஆர். இராதா] [1986 ஜனவரி 24

அப்படி இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. கேட்டால் இன்றைக்கும் சொல்லுகிறார்கள். அந்தக் குழாய்களைப் பயன்படுத்தி இன்றைக்கும் தண்ணீரைக் கொண்டு வரலாம் என்று சொல்லுகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் செய்த தவறை மறைக்கும் முயற்சிகளை இன்றைக்கும் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சி வெற்றி பெறுமா என்றால், நிச்சயமாக வெற்றி பெறாது. காரணம் தவறிலேயே ஆரம்பித்து தவறிலேயே முடிந்த திட்டங்கள் அவை. ஊழலிலேயே ஆரம்பித்து ஊழலிலேயே முடிவடைந்த காரணத்தால், அந்த முயற்சிகள் வெற்றி பெறாது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இப்போதும் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார். அந்தக் குழாய்களைப் பயன்படுத்தினால், சென்னைக்குத் தண்ணீர் வரும் என்று சொல்லுகிறார். அந்தக் குழாய்களிலே தண்ணீர் விட்டால், அது இங்கே வராது, வேறு எங்காவதுதான் போகும். சென்னைக்குத் தண்ணீர் வராது, அது பயன்படாது என்று அரசு அதிகாரிகள், தேவையான ஆதாரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பணத்தைச் செலவழித்தால், அது அவ்வளவும் வீணாகப் போய்விடும் என்று சொல்லுகிற அளவுக்கு அந்தத் திட்டம் இருந்தது என்பதை மறந்துவிடக் கூடாது. இவ்வாறு தவறான அடிப்படையில் போடப்பட்ட திட்டத்தின் கதையாக அந்தக் குழாய்கள் இன்றைக்கும் இருக்கின்றன. தவறான திட்டங்கள் போட்டால் அது நிச்சயமாகப் பொது மக்களைப் பாதிக்கும்.

இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில், பொதுமக்களைப் பாதிக்காத வகையிலே திட்டங்கள் தீட்டப்படுகின்றன. எந்த வகையிலாவது மக்களைப் பாதிக்கும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிய வந்தால், அது சாதாரண ஒரு குடிமகன் சொன்னாலும் சரி, உடனே அதற்கு நடவடிக்கை எடுக்கிற அளவுக்கு வேறு எந்த முதலமைச்சரும் நடந்து கொள்ளாத வகையில் திட்டங்களைத் தீட்டுகிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதை நான் சொல்லுகிறபோது பலர் சந்தேகப்படலாம். அப்படியானால் "இங்கே பல்வேறு காரியங்கள் நடைபெறுகின்றன, அதற்கெல்லாம் அவர் பொறுப்பில்லையா?" என்று கேட்கலாம். "ஆசிரியர் பிரச்சினை நடந்ததே. மீனவர் பிரச்சினை வந்ததே. இவைகளெல்லாம் இந்த ஆட்சியில்தானே நடைபெற்றன. அதன் காரணமாக எவ்வளவு பெரிய துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது? எத்தனை பேர் செத்தார்கள் என்று அவருக்குத் தெரியாதா?" என்றெல்லாம்கூட கேட்கலாம். அவர்களுக்கு நான் ஒன்றைச்



1986 ஜனவரி 24] [திரு. எஸ். ஆர். இராதா]

சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மீனவர் பிரச்சினை ஏற்பட்டு பலர் செத்தார்கள் என்றால், அதற்காக மீனவர் குடும்பத்தில் இருப்பவர்கள் வருத்தப்பட்டதை விட அதிகமாக இந்தத் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வருத்தப் பட்டார்கள். அவர்களுடைய வேதனையைக் காட்டிலும் புரட்சித் தலைவர் அதிக வேதனைப்பட்டார்.

(முற்பகல் 11-00)

அந்தக் குடும்பத்திலேயிருக்கிற சொந்தக்காரர்கள் கஷ்டப்பட்டதைவிட அதிகமாகத் துடித்தவர் புரட்சித் தலைவர்தான். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெரிய கொடுமை ஏற்பட்டது. அங்கேயுள்ள விவசாயத் தொழிலாளிகளிடம் தகராறு ஏற்பட்டு பல்வேறு குடும்பங்கள் அழிந்தன. அந்த நேரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள். இப்படிப்பட்ட நிலைமை நேர்ந்துவிட்டதே, அதற்கு விசாரணை வேண்டும் என்று எதிர்க் கட்சியில் இருந்தவர்கள் கேட்டபோது, இப்படிப்பட்ட நிலை வரக்கூடாது என்று கருதி, 'விசாரணை அல்ல, தனி கமிஷனே போடுகிறேன்' என்று மற்றவர்கள், எதிர்பார்த்ததைவிட அதிகமான அளவிற்கு உத்தரவிட்டார். அதேபோல எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும், இந்த அரசு எப்படிப்பட்ட நிலையில் நடவடிக்கை எடுக்கிறது என்பதைப்பற்றி இந்த அரசு மீது குற்றம் சொல்கிறவர்கள் கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஆசிரியர் போராட்டம் நடைபெற்றது. "ஆசிரியர் போராட்டம் மிக பலம் பொருந்திய போராட்டம். நாங்கள் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து போராடினோம்" என்று சொன்னார்கள். சேர்ந்ததால்தான் போராட்டம் வந்தது. சேரவில்லையென்றால் போராட்டம் வந்திருக்காது. அவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்துவிட்டார்கள் என்பதாலே, அரசிலே உள்ள நாங்கள் அவர்களைப் பிரிக்க வேண்டுமென்ற முயற்சி எடுத்தோமா என்றால், நிச்சயமாக இந்த அரசாங்கம் அத்தகைய முயற்சியை எடுக்கவில்லை. நல்ல காரியத்திற்காக ஒன்றாகச் சேர்ந்திருக்கிறார்களே என்று மகிழ்ச்சியடைந்தோம். நல்ல காரியம் செய்வார்கள் என்று பார்த்தோம். கடைசியில் "சேர்ந்தோம் என்பதாலே போராடினோம்" என்று போராடினார்கள். அந்தப் போராட்டம் பல்வேறு கோணங்களில் போய் கடைசியில் அரசு எடுத்த நிலையை அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாக இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே பல்வேறு கருத்துகள், வேறுபாடுகள்

இருக்கின்றன. ஒரு சிலர் சிறையிலே கொடுமை என்கிறார்கள். ஒரு சிலர் சிறையிலே எங்களை நன்கு கவனித்தார்கள் என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் எடுத்த நடவடிக்கை ஆசிரியர்கள் மத்தியிலே பெருமையாக இருப்பதாக பல்வேறு ஆசிரியர்கள் சொல்வதைப் பார்த்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் செய்ய வேண்டியவைகளைச் சரியாகத்தான் செய்தது என்று சொல்லுகிறார்கள். ஆனால் இன்றைக்கு அரசாங்கம் இவ்வளவு பெரிய போராட்டம் நடத்தியவர்கள் வேலை செய்யாவிட்டாலும், அவர்களுக்கும் சம்பளத்தை வழங்கி வேலை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் சனிக்கிழமைகளில் வேலை செய்யப் போகிறோம் என்று சொல்கிறார்கள். சனிக்கிழமைகளில் அவர்கள் வேலை செய்கிறார்கள் என்றால், அதனால் நேரடியாகக் கஷ்டப்படுகிறவர்கள் குழந்தைகளைப் பெற்ற தந்தைதான். "சனிக்கிழமைகளில் பள்ளி இல்லையென்று நினைத்திருந்தோம், இப்போது ஆசிரியர்கள் சனிக்கிழமைகளில் வருகிறேன், என்று சொல்லுவதால் குழந்தைகளை சனிக்கிழமை, அனுப்ப வேண்டும் என்ற பொறுப்பை நாங்கள் தானே ஏற்க வேண்டியிருக்கிறது" என்று பெற்றோர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதையெல்லாம் ஆசிரியப் பெருமக்கள் யோசிக்க வேண்டும்.

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், ஆசிரியர்கள் சேர்ந்ததன் காரணமாகப் போராடினார்கள் என்று சொன்னார்கள். ஆசிரியர்களுக்குப் பிரச்சினைகள் இருந்ததால்தான், அவர்கள் ஒன்றாகச் சேர்ந்தார்கள் என்பது வேறு. இந்தப் பிரச்சினையில் ஆரம்பத்திலேயே தலையிட்டிருந்தால், இந்த அளவிற்கு வளர்ந்திருக்காது என்ற எங்களுடைய கருத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன். நான் பல இடங்களில் சென்று நேரில் பார்த்ததில் மாணவர்கள் விருப்பத்தோடு வந்து கல்வி பயில்கிறார்கள் என்று தெரிகிறது. ஏதோ சில இடங்களில் அக்கறை இல்லாத மாணவர்கள் வராமல் இருக்கலாம். ஆசிரியர்கள் தங்களுடைய கடமைகளை ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் விளக்கம் சொன்னதற்காக நன்றி சொல்லுகிறேன். ஒன்று சேர்கிற நேரத்தில் வலு வருகிறது தெரிந்து இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்கிறது. முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் யாராவது ஒன்று சேர்கிறார்கள் என்றால், அவர்கள் சேரக்கூடாது என்று அக்கறை எடுத்து பிரித்தாள்கிற சூழ்ச்சி நடைபெற்றது.





**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால் தற்போதுள்ள அரசு கூட பிரித்தாளும் சூழ்ச்சியை இன்றைக்கும் செய்து கொண்டிருக்கிறது, பல இயக்கங்களை உடைத்திருக்கிறது என்ற ஆதாரத்தைத் தர தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** ஆதாரங்கள் தருகிறேன் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார். இப்போதுள்ள அரசாங்கம் அப்படியல்ல என்று சொல்கிறேன். இன்றைக்குள்ள அரசாங்கமானாலும் சரி, மாண்புமிகு முதலமைச்சரானாலும் சரி, கல்வியமைச்சரானாலும் சரி, இந்த இணைப்பை உடைக்க வேண்டுமென்று பிரித்தாள்கிற முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் கருதினால், அது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருக்கும், ஒட்டுமொத்தமாக ஆசிரியர்களுடைய கருத்தா அது என்றால், இல்லை. திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களுக்கு எப்படியாவது இந்த அரசை எதிர்த்துப் போராட வேண்டுமென்று ஆசை இருக்கிறது. அதற்காக யார் வந்தாலும் அவர்களை வைத்துக்கொண்டு போராடி இந்த அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும் என்பது அவருடைய ஆசைகூட இல்லை, அவருடைய கட்சியின் தலைவர் கலைஞரின் ஆசை. அந்த ஆசையில் அவர் செய்திருக்கிறார். வேறு வழியில்லை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11-05)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மீனாட்சிசுந்தரத்திற்கு அந்த ஆசை இல்லை என்று அவரே சொல்லி விட்டார்கள். அப்படி ஆசைப்படக்கூடிய அளவுக்கு நான் இல்லை. எங்கள் தலைவர்கூட வீழ்த்த வேண்டும் என்று எண்ணுவது கிடையாது. பிரச்சினைகளை எடுத்துச்சொன்னாலே அதை ஏதோ வீழ்த்துவதற்காக, அவர்களை எதிர்ப்பதற்காக, ஆட்சியை அழிப்பதற்காகச் செய்வதாகக் கருதுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றை நினைவுறுத்த விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். "கோரிக்கைகளின் நியாயத்தன்மை என்ன என்பதைப் பார்ப்பேனே தவிர, அது யாரிடத்திலே இருந்து வருகின்றது என்று பார்க்கமாட்டேன்" என்று சொன்னார்கள். அந்த வாசகம் உறுப்பினர் அவர்களுக்கு நினைவு இருக்கின்றதா? அதை இந்த அரசு பின்பற்றுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்னும் பேசவேண்டியவர்கள் இருக்கின்றார்கள். நேரம் வீணாகிறது.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, எனக்கு அண்ணாவை நினைவுபடுத்துவதற்கு உள்ளபடியே வருத்தப் படுகிறேன். எனக்கு அண்ணாவைப்பற்றி நினைவுபடுத்தக்கூடாது. ஏனென்றால் நான் மறந்தால்தானே அவரைப்பற்றி நினைவுபடுத்த வேண்டும். நான் மனதிலே என்றைக்கும் மறக்காமலே வைத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் அண்ணாவை மறந்துவிட்டு, கலைஞரைப் பார்த்துக்கொண்டிருப் பதாலேதான், அண்ணா என்றைக்காவது நினைவுக்கு வருகின்றார்கள். எனக்கு அதல்ல. அண்ணாவை மறக்காமலேயே வைத்துக்கொண்டிருப் பதனாலேதான் புரட்சித் தலைவர் அவர்கள் இயக்கத்தை ஆரம்பிக்கும்போது கூட, எங்காவது அண்ணாவினுடைய நினைவு போய்விடுமோ என்ற பயத்திலேதான் புதிதாக யாராவது வருபவர்களுக்கு அண்ணாவைத் தெரியாமல் போய்விடுமோ என்றுதான் பெயரிலேயே அண்ணா இருக்க வேண்டும் என்று அவர் பெயரை வற்புறுத்தி வைத்தார்கள். அதனாலே நாங்கள் அண்ணாவை மறக்கமாட்டோம். அப்படி மறக்கின்ற நிலைமை வராது. நாங்கள் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம் என்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அவருடைய அந்தக் கருத்து நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தல்ல. அவர்கள் போராடுகிறார்கள். ஒன்றாக 'இருக்கின்றார்கள் என்று சொன்னால், நான் தனிப்பட்ட முறையிலே சொல்கின்றேன், "யாராவது ஆசிரியர்கள் போராட்டத்திற்கு விரோதமாக எங்கள் இயக்கத்தில் இருக்கின்றவர்கள், ஈடுபடுகின்றார்கள் என்றால், அவர்களை நாங்கள் அந்த நிலைக்குப் போகக்கூடாது" என்று சொல்லி யிருப்போமே தவிர, 'நீ போய் ஆசிரியர்கள் கூட்டை உடைப்பதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும்' என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டோம் என்று சொன்னால், அதை இன்றைக்கும் நிரூபிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் பழைய காலத்தை நினைத்துப் பார்க்கவேண்டும். ஒரு காலத்திலே அரசாங் கத்தை எதிர்த்துப் போராடிய நேரத்தில், போராட்டக்காரர்கள் மீது கட்சிக் காரர்களை முடுக்கிவிட்டு, ஆசிரியர்களை அடித்து, உதைத்து கொண்டுபோய் பள்ளிக்கூடத்திலே விட்டது எங்களுக்குத் தெரியும். பல பேர்களுக்குத் தெரியாது. இன்று இருப்பவர்களுக்குத் தெரியாது. ஆசிரியர்கள் போராடு கின்ற நேரத்திலே ஆசிரியர்களை கட்சிக்காரர்களை வைத்து, கொண்டுபோய்





விட்டு வேலை செய்ய வைத்திருக்கின்ற கட்சிக்காரர்கள் இன்றைக்கும் இருக் கின்றார்கள். அவர்களை அடித்து அழைத்துக்கொண்டு போயிருக்கின் றார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தப் பிரச்சினையைப்பற்றியே பேசி நேரம் எடுத்தால் எப்படி? மணி ஆகிவிட்டது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டும் அல்லவா.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என்ன பண்ணுவது? விவாதத்திற்கு வந்திருக்கிறோம். அவர்கள் அவருடைய கருத்தைச் சொல்கின்றார்கள். உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்கின்றீர்கள். நீங்கள் பேசும்போது, இதிலே தலையிடவே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒன்றா இரண்டா தலையீடுகள். முழுக்க முழுக்க எழுந்துகொண்டே இருந்தால் இங்கே தலைவர் உட்கார்ந்துகொண்டிருக்கவேண்டியதில்லை. இதுவாவது கடைசி தடவையாக இருக்கட்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இப்போது நடைபெற்ற போராட்டத்திலே அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அந்தப் பகுதியிலே ஆசிரியர் களை அச்சுறுத்தியது, அடித்தது, பதில் ஊர்வலம் நடத்தியது என்ற வரலாறுகள் உள்ளன. இதையெல்லாம் எடுத்துச்சொல்லக்கூடிய வாய்ப் பினைத் தர வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் அதையே சொல்லிக்கொள்கிறேன். பேசுவதைப் பேசிவிடுங்கள். குறுக்கீடு எதுவும் வேண்டாம்.

**திரு. ஜேப்பியார் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் வேலைக்கே போகவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு பிரச்சினைக்கு வருகின்றார்கள். ஆசிரியர்கள் பள்ளிக்கூடம் போகவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படியெல்லாம் எல்லா ஆசிரியர்களைப்பற்றியும் தவறாகக் கருதவேண்டாம். சட்டமன்ற உறுப்பினர்களும் தவறாக நடப்பதுண்டு. அமைச்சர்களும் தவறாக நடப்பதுண்டு. எந்த இனத்திலேயும் உண்டு. ஆகவே அதை ஒரு எக்சாம்பிளாக எடுத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாக ஒரு சமுதாயத்தைக் குறிப்பிட்டுச் சொல்வது நல்லதல்ல என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதிலும் திரு. ஜேப்பியார் ஏதாவது சொல்ல விரும்புகின்றார்களா ? வேடிக்கை பண்ணுகிறார்கள். உட்கார வேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** என்னுடைய கருத்தைச் சொன்னதற்குக் காரணம் என்னவென்றால், என்னுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் ஒரு போராட்டம் நடத்துகின்றபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதை உடைக்க வேண்டும் என்று எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நான் சொன்னதை அவர்கள் பெருந்தன்மையாக எடுத்துக்கொண்டிருக்க வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் முடிவிற்கு வரவேண்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மேலவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையின்மீது தான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்படிச் சொல்லவில்லை. உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து உரையின் மீது பேசலாம்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் சொல்கின்ற கருத்தைக்கூட ஏற்றுக் கொள்கின்ற மனப்பக்குவம் இல்லையே என்பதற்காக நான் வேதனைப் படுகிறேன். நான் சொல்வது எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்த வகையிலும் இடையூறு செய்யவில்லை. எந்த வகையிலேயாவது தாக்க வேண்டும் என்ற உணர்வுகள் ஏற்பட்ட நேரங்களிலே, சில பேர்கள் எங்களைக் கேட்ட நேரத்திலேகூட, நாங்கள் தடுத்து 'அதை அரசாங்கம் பார்த்துக்கொள்ளும், யாரும் தலையிடவேண்டாம்' என்று சொல்லி யிருப்போமே தவிர, யாரையும் 'இப்படிச் செய்யுங்கள், அப்படிச் செய்யுங்கள்' என்று சொல்லவில்லை என்று சொன்னதைப் பெருமையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அதுதான் உண்மையான நிலை.

(முற்பகல் 11-10)

இதற்கு முன்னாலே நடைபெற்றது என்பதையெல்லாம் சொல்ல வேண்டாம். 1976-லே, 1975-லே நடைபெற்றது. அது இந்தக் காலத்தில் இருக்கிறவர் களுக்குத் தெரியாது. தலைமைச் செயலகத்தில் வேலை நிறுத்தம் செய் தார்கள். ஸ்ரீலங்கா பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்கு அனுமதித்தார்கள். இப்போது உண்ணாவிரதத்திற்கு அனுமதிக்க



வில்லை என்கிறார்கள். திருமண வீட்டில் நாயனம் வாசிக்கப்படுகிறது. மரண வீட்டில் தப்படிக்கிறார்கள். எப்போதும் தப்படிப்போம் என்றால் அதை நிச்சயமாக அனுமதிக்க முடியாது. பொதுப் பிரச்சினை என்று எடுத்துக்கொண்டு செய்வதை, எந்த நேரத்திலும் செய்வோம் என்ற நிலை இருக்கக்கூடாது. அதிலேகூட அரசாங்கம் எப்படி நடந்து கொண்டது ? அரசாங்கத்தின் நிலையைப் பாருங்கள். யாரையாவது ஒழிக்க வேண்டும் என்றோ, அரசை எதிர்ப்பவர்கள் யாரும் இருக்கக்கூடாது என்றோ ஒரு நிலையை அரசு எடுக்கவில்லை. இதற்கு முன்னாலே நடந்தது பலருக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு மு. செ. சங்கரலிங்கம் அவர்கள் வாதாடினார்கள். அவருக்குத் தெரியாது. இதே தலைமைச் செயலகத்தில் முன்பு ஊழியர்கள் போராடிய காலத்தில், அதைப் போட்டோ எடுத்து, அதில் முகம் தெரிந்தவர்களை எல்லாம் வேலை நீக்கம் செய்து, பழி வாங்கிய வரலாறு இந்தக் கோட்டையில் இருக்கிறது. அந்த நிலை இப்போது இல்லை. மாண்புமிகு தலைவரவர்கள்கூட மணி அடித்து, இப்படித்தான் பேச வேண்டுமென்று, கட்டுப்படுத்தும் நிலையை, மரபாகக் காத்துக் கொண்டிருக்கிறோம். அதுதான் மரபு . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நன்றி நினைவூட்டியதற்காக.

**திரு. எஸ். ஆர். இராதா :** ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டு மென்றுதான் இந்த முயற்சியிலே ஈடுபடுகிறோமே தவிர, வேறொன்றுமில்லை. யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் செய்யலாமென்று விட வில்லை. குடும்ப நலத்திட்டத்தின்கீழ் 10,000 ரூபாய் தந்ததை 20,000 ரூபாயாகத் தருகிறோம் என்றால், அதற்கு ஒரு வார்த்தை பாராட்டு தெரிவிக்கும் அளவுக்கு மனவளம் வருகிறதா என்றால் வரவில்லை . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, நன்றி தெரிவிக்க வேண்டியதை, பாராட்டு தெரிவிக்க வேண்டியதை அவ்வப்போது செய்து விட்டுத்தான், மேற்கொண்டு கோரிக்கைகளை வைக்கும் வழக்கம் எங்களுக்கு உண்டு.

**திரு. எஸ். ஆர். இராதா :** உங்களுக்கு அந்த மன வளம் வரும். சில நேரங்களில் மாறும். அது பெரிய பிரச்சினையல்ல. எந்தப் பிரச் சினையை அணுகும்போதும், சின்ன தவறுகள் நடக்கலாம். நான் ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். பெயரைச் சொல்லாமலேயே சொல் கிறேன். சென்னை மாநகரத்திலே 40, 45 ஆண்டுக்காலமாக நடந்து வந்த பத்திரிக்கை ஒன்று இருக்கிறது. திடீரென்று ஒரு நாள் ஓர் அறிவிப்பு

வருகிறது. ‘பத்திரிகையை மூடப் போகிறோம்; ஏனென்றால் ஒருவரையும் நம்ப முடியவில்லை; அவ்வளவு பேரையும் வீட்டுக்கு அனுப்பப் போகிறோம்’ என்று சொல்லிவிட்டு, 2 நாட்கள் கழித்துச் சொல்கிறார்கள், மறுபடியும் ஆரம்பிக்கப் போகிறோம் என்று. தொழிலாளர்கள்மேல் அக்கறை கொண்ட நாங்கள், அந்தத் தொழிலாளர்களின் நிலை என்ன என்று கேட்டால் அரசியல் என்பார்கள். இது என் சொந்தப் பிரச்சினை என்றுதான் சொல்லத் தோன்றும். இதைக் குற்றச்சாட்டாக்கி, நடந்தது தவறு என்று சொன்னால், என்ன சொல்லுவார்கள்? அரசியல் ரீதியாகப் பிரச்சினையைப் பேச வேண்டுமென்று சொல்லவில்லை. எத்தனையோ ஆண்டுகளாக நடக்கும் பத்திரிகை அது. திடீரென்று மூடுகிறோமென்று சொல்லும் நிலைமை வரலாமா? உண்மை நிலைமை என்ன? அதற்கு என்ன காரணம்? நாம் ஒன்றாக இருக்கிறோம், சொந்தம் சேர்ந்திருக்கிறோம், நமக்கிருக்கும் பந்த பாசம் போகக் கூடாது என்று யாரும் பேச மாட்டார்கள். அதை எங்கள் தரப்பில் யாராவது செய்திருந்தால் என்னவாகும்? எவ்வளவு எதிர்ப்பு வந்திருக்கும்? என்னென்ன பேசியிருப்பார்கள்? இதைச் செய்கிறார்கள் என்றால், அது ஒரு சாதாரண நிறுவனம். அந்த நிறுவனத்தின் வசதிக்காகச் செய்யப்பட்டது என்றால், நிறுவனத்திற்கு அந்தக் கட்டுப்பாடு தேவை. அவர்களே ஒழுங்காக வைக்க வேண்டுமென்று சொல்லும்போது, இவ்வளவு பெரிய கோட்டையை, அரசாங்கத்தை நடத்தும் ஆட்சி 35 பேர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறதென்று சொல்லி வேதனைப்படுகிறார்கள் என்றால், முரசொலிப் பத்திரிக்கையை மூடிவிட்டு ஏன் தொழிலாளிகளை வெளியேற்றுகிறார்கள்? கேட்க முடியாதா? அதுவல்ல பிரச்சினை. சில கட்டுப்பாடுகள் வேண்டுமென்று அவர்கள் செய்திருப்பார்கள். அதைத் தடுக்க முடியாது.

(முற்பகல் 11-15)

ஆனால் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், யாரையும் பழி தீர்க்க வேண்டுமென்ற உணர்வோடு நிச்சயமாக இல்லையென்றுதான் சொல்ல முடியும். யாரையும் பழி தீர்க்கவேண்டுமென்ற உணர்வு, புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களைப் பொறுத்தவரையில், இல்லை. நிச்சயமாக இல்லை. அதை எந்த நேரத்திலும் சொல்வேன், எங்கும் சொல்வேன். அந்த நிலையில் தான் அரசாங்கம் நடக்கிறது. மீனவர் பிரச்சினை வருகிற நேரத்தில், அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. யார் வருத்தப்பட்டார்கள் என்றால், நாங்கள்தான் அதற்கு வருத்தப்பட்டோம். நாங்கள்தான் வேதனைப்பட்டோம். சில பேர் எத்தனை பேர் செத்தார்கள் என்ற எண்ணிக்கையைத்தான் பார்த்தார்கள். ஆனால் அதற்காகக் கவலைப்



பட்டது நாங்கள்தான். அது ஒரு சமுதாயப் பிரச்சினை. சமுதாயத்திற்காகக் கவலைப்பட்டது நாங்கள்தான். அத்தனை சமுதாயக் கவலை என்றைக்கு தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்கு வருகிறதோ அன்றைக்குத் தான் இந்த நாட்டில் அரசியல் வளரும். யார் செத்தாலும் பரவாயில்லை, பிணத்தைக் காட்டு என்றுதான் அரசியல் நடத்துகிறார்கள். பிணத்தை வைத்தா இன்னும் அரசியல் நடத்த முடியும் என்று பார்க்கிறீர்கள்? இன்றைக்கு எவ்வளவு வேகமாக நிலைமை மாறிக்கொண்டிருக்கிறது? பிணமா அரசியலைக் காப்பாற்றும்? அப்படியே வைத்துக்கொண்டாலும், மீனவர்கள் அத்தனை பேரும் அவர்களுடைய ஆதரவாளர்களா? அப்படிக் கொண்டுவர முடியுமா? அப்படி அவர்களை மாற்றிவிட முடியும் என்றா கருதுகிறார்கள்? புரட்சித் தலைவர் அவர்கள் மீனவ மக்களுக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள் ஒரு காலத்தில். படத்தில் மீனவராக் வந்தார்கள். ஏதோ லாபத்திற்காக, காசு வரும் என்பதல்ல உண்மை. அன்றைக்கு அவருடைய கவலை என்னவென்றால், அந்த மீனவர்களுடைய கஷ்டத்தை உலக மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும், அவர்களுடைய வறுமை நிலையை உலகத்திற்கு உணர்த்த வேண்டும். அவர்களை உயர்த்தப் பாடுபட வேண்டுமென்று எண்ணி, வாங்குகிற பணத்திற்குப் பயன் உள்ளதாக நமது கருத்துக்கள் இருக்க வேண்டுமென்று போராடினார். அவருடைய ஆட்சியில் மீனவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தால், அது எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்குமா என்றால், நிச்சயமாக இல்லை. ஏதோ ஒரு எதிர்பாராத சம்பவம் என்று அதைச் சொல்லிவிட முடியாது. அரசியல் வாதிகளுக்குத் தெரியும், எத்தனை பேர் பாண்டிச்சேரிக்குப் போனார்கள். எத்தனை அரசியல் கட்சியின் செயலாளர்கள் அங்கே போய் யாருடன் பேசினார்கள் என்ற கணக்கெல்லாம் எங்களிடம் இருந்தது. அத்தனையையும் மீறித்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்ற வேதனை, நாங்களே எதிர்பாராத நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. அப்படி நினைக்கிற அரசாங்கமாக இருந்தால் நிச்சயமாகச் சொல்வேன், தமிழகத்தில் வரலாறு படைக்கிற அளவிற்கு, காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள், தமிழ்நாட்டிலே யாருக்கும் இல்லாத அளவுக்கு மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலமைச்சரான பெருமை. புரட்சித் தலைவர் அவர்களுக்கு மட்டும் தான் உண்டு என்று சொல்கிற நிலைமை வந்திருக்காது. காரணம் அவர்களுடைய அணுகுமுறை, நடைமுறைதான். நாங்கள் கொள்கையில் உறுதியாக நிற்கிறோம். கொள்கையை மாற்றிக்கொள்ளவில்லை. சட்டைகளை மாற்றிக்கொண்டிருந்தால்

எங்களுடையும் மாறிக்கொண்டுதான் இருக்கும். எங்களுடைய கொள்கையில் உறுதியாக இருக்கிறோம். நாளைக்கு நாங்கள் தமிழகம் முழுவதும் வீர வணக்க நாள் கொண்டாடுகிறோம். மொழிப்போரில் செத்தவர்களை நினைவுபடுத்தி, அந்தத் தியாகிகளின் நினைவாக வீரவணக்க நாள் கொண் :டாடுகிறோம். நான் நினைத்துப் பார்க்கிறேன். அன்றைக்கு ராஜேந்திரன் செத்தான். ஒரு காவலரின் மகன். தலைமைக் கழகத்திலிருந்து நாங்கள் வீர வணக்கநாள் கொண்டாடுகிறோம். அவன் செத்த நேரத்தில் அப்போது இருந்த அரசாங்கம் அதைப்பற்றி அலட்சியமாகப் பேசியது. நான் குற்றச்சாட்டாகச் சொல்வதாகக் கருத வேண்டாம். அதிலிருந்த நிலைமை என்னவென்றால், அலட்சியமாகப் பேசியதுதான். மதுரையில் மாணவர்கள் தாக்கப்பட்டார்கள். அதற்கு அரசாங்கம் என்ன சொன்னது தெரியுமா? போலீசார் கையில் பிரம்பு இருப்பது, அடிப்பதற்குத்தான் என்றார்கள். அடிப்பதுதான் வழக்கம் என்று பேசினார்கள். அதனுடைய விளைவு என்ன? சுதந்திரம் பெற்றதிலிருந்து எந்த மாநிலத்திலும் ராணுவம் வந்து மாணவர்கள் கலகத்தை அடக்கியதில்லை என்று நிலைமை ஏற்பட்டது. அந்த நிலைமை தமிழ் நாட்டுக்கு வந்தது. அதற்கு முன் கிடையாது. மொழிப்போரினால்தான் வந்தது. அதனுடைய உணர்வு என்னவென்றால், திராவிடப் பாரம்பரியம் இந்த இயக்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து தமிழ்மொழிக்காக எடுத்துக் கொண்ட முயற்சி இருக்கிறதே, தந்தை பெரியார் காலம் முதல், தியாகராயர் காலம் முதல் இருந்துதான் வந்தது. அந்தக் காலத்திற்கு முன்னும் அந்த உணர்வு இருந்தது. இல்லையென்று சொல்லவில்லை.

(முற்பகல் 11.20)

மூதறிஞர் இராஜாஜி அவர்களே எத்தனையோ நாட்களுக்குப் பின்னாலே "அண்ணா சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் இந்தி வரக் கூடாது" என்று சொன்னார். இராஜாஜி சொல்கிறார் என்று சொன்னால், சாதாரணமாக இராஜாஜியை யாரும் ஏமாற்றி பேரம் பேசி விலைக்கு வாங்குகிற நிலைமை இல்லை. பல்வேறு நிலைமைகளைத் தெரிந்து கொண்ட பிறகுதான் மூதறிஞர் இராஜாஜி சொன்னார். அந்த அளவுக்கு இந்த இயக்கம் வெற்றி பெற்றிருக்கிறது. காரணம் இந்த இயக்கம் எடுத்துக்கொண் டிருக்கிற கொள்கைகள். மொழிக் கொள்கையானாலும் சரி, சமுதாயக் கொள்கையானாலும் சரி, பொருளாதாரக் கொள்கையானாலும் சரி, அந்தக் கொள்கையிலே மாற்றங்கள் வரக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.





இன்றைக்கு ஒரு புதிய சிந்தனை வந்திருக்கிறது. இந்தி வந்தால் என்ன என்கிற ஆசைகூட வருகிறது. ஆனால் தந்தை பெரியார் அவர்களும், தியாகராயர் அவர்களும், அந்தக் காலத்திலே இந்தியை எதிர்த்து இயக்கங்கள் நடத்தியபோது, நிச்சயமாக யாரும் இந்தியைப் படிக்கக்கூடாது, பேசக் கூடாது என்று கட்டாயப்படுத்தவில்லை. அவர்கள் வலியுறுத்தியது, என்னவென்றால், இந்தியாவில் குடிமகனாக இருக்கிற என் மொழி, என் தாய்மொழி, தமிழ் மொழியாகும். என் தமிழுக்கு இருக்கிற தகுதிதான் இன்னொரு மொழிக்கும் இருக்கவேண்டுமென்றார்கள். இந்தி பேசுகிறவன் முதல் குடிமகன், இந்தி பேசாதவன் இரண்டாம்தர குடிமகன் என்கிற நிலை வரக்கூடாது என்றுதான் போராடினார்கள். அதன் வெற்றியாகத்தான் இன்றைக்கு நாம் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.

ஒருவர் என்னிடம் சொன்னார்: "தமிழ்நாட்டில் இருக்கிற மாணவர்கள் உருப்படாமல் போய்விட்டார்கள்" என்று சொன்னார். தமிழ்நாட்டு மாணவர்கள் இந்தி படிக்காததால் வடநாட்டில் வேலை கிடைக்காமல் உருப் படாமல் போய்விட்டார்கள் என்று சொன்னார். என்னமோ வடநாட்டில். வேலைக்கு ஆள் எடுக்க காத்துக்கொண்டிருப்பதைப்போல கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிறவனெல்லாம் இங்கே வந்து பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறான். அங்கேயெல்லாம் வேலைக்கு ஆள் தேவை என்ற நிலை உண்மையாக இருக்குமானால், தமிழ் நாட்டிலே ஓர் ஐயர் கூட இருக்கமாட்டார், எல்லோரும் வேலைக்கு அங்கே சென்றிருப்பார்கள். அத்தனை பேரும் போயிருப்பார்கள். அந்தக் காலத்தில் நாம் ஆங்கிலம் படிப்பதை தடுத்திருந்தார்களானால், இன்றைக்கு அமெரிக்காவில் ஒரு தமிழன்கூட இருக்கமாட்டான். வெளிநாடுகளில் இருப்பவர்கள் யார்? யார் அதிகமாக இருக்கிறார்கள்? தமிழர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். அங்கேயெல்லாம் தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கிறார்கள். எங்கே போனாலும் ஒரு பிள்ளையார் கோவிலை அல்லது பாலாஜி கோயிலைக் கட்டி விடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் நாம் ஆங்கிலம் படித்ததனால்தான். "இது வெள்ளைக்காரன் மொழி. இதை ஏற்றுக்கொள்ளாதே" என்று சொல்லி யிருப்பார்களானால், ஒரு தமிழன்கூட அமெரிக்காவுக்குப் போயிருக்க முடியாது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எப்போது முடிப்பார் என்று தெரிந்துகொள்ளலாமா? இன்னும் ஆறு பேர் பேச வேண்டும். இன்றைக்கு விவாதத்தை முடிக்க வேண்டுமென்று அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்திருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : இந்தப் பிரச்சினையோடு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நாம் ஒருவருக்கொருவர் நேரத்தைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே என் நோக்கம்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த மொழிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னைப்போன்றவர்கள் இந்த இயக்கத்திலே ஈடுபட்டதற்கு நம் இயக்கத்தின் மொழிக் கொள்கைதான் காரணம். சாதாரண நிலையிலே இருந்த நான் மொழிக் கொள்கையாலே கவரப்பட்டுத்தான் இவ்வியக்கத்திலே இணைந்தேன். அன்றைக்கு தமிழ் படிக்க வேண்டும் என்கிற உணர்வை இயக்கம்தான் எனக்கு ஊட்டியது. அவைக்கு நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் நேரடியாக தமிழ் பேசுகிற குடும்பத்திலே இருந்து வந்தவனல்ல. சௌராஷ்டிரா மொழி பேசுகிற குடும்பத்தைச் சார்ந்தவன். அப்படி சௌராஷ்டிரா மொழி பேசுகிறவனுக்குத் தமிழ் உணர்வை உண்டாக்கி, இன்றைக்கு இயக்கத்திலே ஈடுபடுகிற அளவுக்கு வளர்ந்திருக்கிறேன் என்று சொன்னால், மொழிக் கொள்கையிலே எனக்கு எந்த அளவுக்குப் பிடிப்பு இருந்திருக்கும்?

நாம் இன்றைக்கு என்ன சொல்கிறோம்? இந்தியை என்மீது திணிக்கக் கூடாது. இந்தியாவில் இந்தி பேசுகிறவனுக்கு என்ன தகுதி இருக்கிறதோ அதே தகுதிதான் தமிழ் பேசுகிறவனுக்கும் இருக்க வேண்டும். இங்கே இருக்கிற

(முற்பகல் 11-25)

தமிழை டில்லியிலே இருக்கிறவன் படிப்பானானால், இங்கே இருக்கிறவன் வேறு மொழி படிப்பதிலே குறுக்கே நிற்கமாட்டோம். அது அரசியல் ரீதியாக ஏற்பட்ட நிலை. ஏதோ திடீரென்று மொழிப் பிரச்சினை வெடித்து காங்கிரசிலே இருக்கிற பெரியவர்களுக்கு ரொம்ப மனக் குறை. அந்தக் கட்சியை உருப்படாத கட்சி என்று கூறினார்கள். பள்ளிக்கூடங்கள் எல்லாம் மூடப்பட்டு, பையன்கள் எல்லாம் கெட்டு, வீணாகப் போய் உருப்படாமல் போய்விட்டார்கள் என்று சொல்கின்ற கவலை அன்றைக்கு பல பேருக்கு இருந்தது எனக்குத் தெரியும். ஒரு பெரியவர் டில்லிக்கு வந்து என்னிடத்திலே சொன்னார். ஒரு கமிட்டிக்குப் போயிருந்தபோது, உட்கார்ந்திருந்தவர் ஒன்றும் பேச முடியவில்லை என்று சொன்னார். ஒருவர் அவர் பாட்டுக்கு என்னவோ பேசுகிறார்; ஒன்றும் புரியமாட்டேன்கிறது; ஏன் டில்லிக்கு வந்தோமென்று சொன்னார்; அதற்கு நான் சொன்னேன். அவரை சென்னையிலே





உள்ள மின்ட்டுக்கு வந்து என்ன பேசுகிறார்கள் என்று பாருங்கள் என்று சொன்னேன். அதே நேரத்தில் என்னோடு வந்திருக்கிற கமிட்டி உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் "எல்லாம் இந்தியிலே பேசி வியாபாரம் செய்கிறார்கள். நீர் என்னய்யா தமிழிலே பேசி வியாபாரம் செய்கிறாய்?" என்று கேட்டார். அவருக்கு இந்தி தெரியும்; எனக்குத் தமிழ் தெரியும். எனக்குத் தெரிந்த மொழியில் பேசினால் வியாபாரம் பண்ணுகிறேன் என்றான். ஏனென்றால் அவனுக்குக் கட்டாயம் வந்து பேசினான். அதுமாதிரி இங்கே இருக்கிற வட்டிக்கடையில் கடன் வாங்குகிறவன் இந்தி தெரிகிறதோ, இல்லையோ எவ்வளவு எண்ணிக்கை என்று சொல்வதற்கு, அதையாவது பக்கத்தில் இருக்கிறவனிடம் கேட்டு சொல்லி கடன் வாங்குகிறான். அதனால் அதுவல்ல பிரச்சினை, அதனால் ஒரு பெரிய லாபம் வருமென்று சொன்னால், நான் சொல்வேன், நிச்சயமாக லாபம் வராது. இன்றைக்கு இந்தியைத் திணிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்களுடைய சிந்தனையில் கொஞ்சமாவது மாறியிருக்கிறதா என்றால், மாறவில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்தி பரந்து கிடக்கிறது, யார் இல்லையென்று சொன்னார்கள். இந்தி பரந்துதான் கிடக்கிறது. காஷ்மீரிலிருந்து, கன்னியாகுமரி வரையிலே பரந்து கிடக்கிறது. அதனால் இங்கே இருக்கிறவன் இந்தி பேசுகிறவன் அதிகமாக இருக்கிறான், அதனாலே நீயும் இந்தி பேச வேண்டுமென்று சொன்னால், பெரும்பாலோர் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், எல்லாவற்றிலும் இதே காரியத்தைப் பின்பற்ற முடியுமா? இந்த நாடு இந்தி நாடு என்று சொல்கிற தைரியம் எவனுக்காவது வருமா? கேட்டால் சொல்ல முடியவில்லை. இந்தியாவிலே இந்துக்கள்தான் அதிகம் என்று சொல்லியிருந்தால், திரு. சாதிக் பாட்சா அவர்கள் விட்டுவிடுவார்களா? வேடிக்கை பார்த்துக் கொண்டா இருப்பார்கள். . .

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எந்தப் பெயரை வைத்துக்கொண்டாலும், நாட்டிற்கு பல நேரங்களில் பெயர் உண்டு. அதைக் காப்பாற்ற வேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்புகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்திப் பிரச்சினையல்ல இந்த ஆளுநர் உரை.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, திரு. சாதிக் பாட்சா அப்படிச் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்த நிலை அன்றைக்கு வருவதற்குக் காரணம், சுதந்திரம் பெற்ற நேரத்திலே இது இந்தி

நாடு என்று அறிவிக்க முடியாத நிலை. காரணம் என்னவென்றால், இந்தியா விலே எல்லா மொழி பேசுகின்றவர்களும், எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இது பொதுவாக இருக்க வேண்டுமென்பதனாலேதான், இது மதச் சார்பற்ற நாடு என்று சொன்னார்கள். இந்தியாவுக்குப் பக்கத்திலே உள்ள நேப்பாளம் ஒரு சின்ன நாடு. அந்த நாடு இன்றைக்கு இந்து நாடு என்று சொல்லி, எங்கு பார்த்தாலும் பிள்ளையார் கோயில் வைத்துக்கொண்டு வணங்குகிறார்கள். உலகத்திலே இருக்கிற ஒரே ஒரு இந்து நாடு அதுதான். அதுபோல் முஸ்லீம் நாடு என்று சொன்னால், எத்தனையோ இருக்கின்றன. அன்றைக்குச் சொல்ல முடியாததற்குக் காரணம், மெஜாரிட்டி ஒரு அடிப்படை யல்ல. மெஜாரிட்டி தான் அடிப்படை என்று எல்லாவற்றிற்கும் எடுப்போ மானால், மெஜாரிட்டிதான் இருக்குமே தவிர, மைனாரிட்டி நிற்க முடியாது. அதனாலே இந்தியை எதிர்க்கவில்லை. இந்தியை எதிர்க்கின்ற அந்த இயக்கம் தமிழ் மொழிக்கு எல்லா வகையிலும் முதன்மை இடம் வேண்டுமென்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கம்தானே தவிர, இது ஏதோ தனிப்பட்ட இந்தி மீது இருக்கிற கோபத்திலே அல்லது வெறுப்பிலே நிச்சயமாக ஆரம்பிக்கப் பட்டதல்ல என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மொழிக்கொள்கையிலே கவர்னர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மத்திய சர்க்காரினுடைய மொழிக் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோமென்று சொல்கிறார்கள். மத்திய அரசு அதற்கு, இந்தி படிக்காத பேசாத மாநிலங்களில் இருக்கிறவர்கள், இந்தி படித்து வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பிலே 25 சதவீதம் தனியாக ரிசர்வேஷன் தருமென்று சொல்லி யிருந்தால், நாங்களே நெருக்கடிக்கு ஆளாகியிருப்போம். அந்தச் சலுகை தருகிறார்களா என்றால், இல்லை. இந்தி படித்தால் மொத்தமாகப் பணம் தருகிறேன் என்று சொல்கிறார்களே தவிர, அதாவது குடும்பக் கட்டுப்பாட்டிற்குத் தருவதுபோல வைத்திருக்கிறார்களே தவிர, ரிசர்வேஷன் செய்யவில்லை. இந்தி பேசாத தமிழ் நாட்டுக்காரன் வட நாட்டிலே வேலைக்கு வரவேண்டுமென்று சொன்னால், அவர்களுக்காக 25 சதவீத வேலை ரிசர்வேஷன் செய்யப்படுகிறது என்று சொன்னால், யார் தடுத்தாலும் வேலைக்குப் போக வேண்டுமென்ற நிலையில் இருக்கிறவன், தனியாக இந்தி படித்து வேலைக்குப் போய்விடுவான். இன்றைக்கு என்ன இந்தி படிக்காமலேயா இருக்கிறான்? தனியார் பள்ளிகள் அத்தனையிலும் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஒரு மணி நேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.





**திரு. எஸ். ஆர். இராதா:** தாங்கள் மொழிப் பிரச்சினையில், தங்களுடைய உடல் நலத்தையும் பார்க்காமல் இருப்பீர்கள் என்று பேசிப் பார்க்கிறேன். ஆனால் முடித்து விடுவதற்கு நிச்சயமாகத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உடல் நிலை காரணம் அல்ல. வயது 80, நான் சொல்வதற்குக் காரணம், என்ன செய்வது?

**திரு. எஸ். ஆர். இராதா:** உள்ளபடியே அது உங்களுக்குப் பெருமைக் குரிய நிலைதான். உங்களுடைய வயது. . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இங்கே நான் உட்கார்ந்திருக்கிறேன் என்றால், எனக்கு இதுவும் கிடையாது; அதுவும் கிடையாது. எனக்கு நான் தான்.

**திரு. எஸ். ஆர். இராதா:** நீங்கள் எங்களுக்காகத்தான் இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** புரிகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவரவர்களே, தமிழுக்காகத்தான் உங்களை நம்பிக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 11-30)

**திரு. எஸ். ஆர். இராதா:** அந்த உணர்வோடு இந்த நாட்டை நடத்திச் செய்வதற்குத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்கு வழி காட்டினார்கள். அந்த வழியில்தான் புரட்சித் தலைவர் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக் கொள்வதோடு, இன்னொன்றையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எத்தனையோ திட்டங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அத்தனையையும் இன்றைக்கு ஏற்று அமுல்படுத்தக் கூடிய நிலையில் அரசு இல்லை என்றாலும்கூட, திட்டங்களைப் பற்றி அவர் சொல்லும்போது, அவருடைய சிந்தனையையும் அறிவாற்றலையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த வகையிலே தான் கடந்த காலத்திலே தமிழ்நாட்டின் தலைநகரம் திருச்சியிலே இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். உடனே சென்னையை விட்டே காலி செய்யப் போகிறார்கள் என்றும், இது போனால் என்ன செய்வது என்றும் எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் கோஷம் போட்டார்கள். ஒன்றை நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மராட்டியத்தில் இருப்பவர்கள் இப்போது

பம்பாய் மட்டும் தலைநகராக இருந்தால் போதாது, நாகபுரியிலும் ஒரு தலைநகரம் இருக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் சொன்ன காரணத்தாலேயே, அந்தத் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்று எதிர்க்கக் கூடாது. சென்னை முதல் தலைநகரமாகவும் திருச்சி இரண்டாவது தலைநகரமாகவும் இருக்கட்டும் என்றாவது அவர்கள் சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லவில்லை. அப்படி ஒப்புக் கொண்டிருந்தால், இன்றைக்கு தமிழகத்தின் மத்தியில் இருக்கிற திருச்சி வளர்ந்திருக்கும், வளம் பெற்றிருக்கும். நான் தஞ்சையைச் சொல்லாததற்குக் காரணம் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாதே என்றுதான்.

எங்களைப் பொறுத்த வரை, தலைநகர் என்பது தமிழகத்தின் மத்தியில் இருக்க வேண்டும். எனவே தமிழகத்தின் மத்தியப் பகுதியில் இருக்கிற திருச்சி இரண்டாவது தலைநகராக வர வேண்டும் , என்று கோருகிறோம். அப்படி ஏற்பட்டால், அது தமிழகத்திற்கே வளம் சேர்க்கும் நிலையை உருவாக்கும். இன்றைய தினம் சாண்டிகார் தலைநகர்ப் பிரச்சினை பெரும் பூதாகாரமாக வளர்ந்திருந்தாலும் கூட, தமிழகத்தைப் பொறுத்த வரையில், இங்கே உள்ள திருச்சி—தமிழகத்தின் மத்தியில் இருக்கிற திருச்சி வளருமானால்—நான் சென்னையைக் காலி செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை—அது எல்லோருக்கும் நல்லது. ஆனால் சிலர் சென்னையைத் தவிர வேறு இடம் கிடையாது என்று நினைக்கிறார்கள். சென்னைதான் நமக்குப் பாதுகாப்பு. நமக்கு வெளியே எங்கேயும் ஆதரவு இருக்காது, ஆகவே சென்னையை விட முடியாது என்று நினைக்கிறார்கள். நாங்கள் அப்படி நினைக்கவில்லை. எங்களுக்கு ஆதரவு இருக்கிறதா இல்லையா என்று பார்க்காமல், நாட்டின் மொத்த வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு, இப்படிப்பட்ட காரியங்களைச் சொல்லுகிறோம் என்பதைச் சொல்லி, இன்னும் ஆளுநர் உரையில் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், கடைசியாக மொழிப் பிரச்சினையைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாளைய தினம் மொழிப் போரில் ஈடுபட்ட தியாகிகளுக்கு வீர வணக்கம் தெரிவிக்கும் நாள் என்பதால் இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இங்கே பேசியதை இன்றைய பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டிருக்கின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கையைப்பற்றி நேற்றைய



தினம் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் பேரவையிலும் இங்கே அவையின் முன்னவர் அவர்களும் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், எந்த நிலையிலும், எந்த வகையிலும் மொழிக் கொள்கையிலே மாற்றம் என்பது நிச்சயமாகக் கிடையாது என்று உறுதியாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன், அப்படி ஒரு நிலை வருமானால், நான் சொல்லுவேன், "அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஜனநாயகத்தின் மொத்த உருவம். ஜனநாயகத்தின் மொத்த உருவமாக விளங்குகிற ஒரு இயக்கம். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலை வருமானால், அந்த இயக்கத்திலே அது முதலில் விவாதிக்கப்படுகிற நிலைதான் வருமே தவிர பொது இடத்தில் விவாதித்து, மண்டபத்தில் பேசி அல்லது மைதானத்தில் பேசி முடிவு எடுக்கிற நிலை வரவே வராது. அதற்கு என்று சில கொள்கைகள் உண்டு." இன்றைக்கு நான் கடந்த கால சம்பவம் ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் வேலூர் சிறையிலிருந்து திடீரென்று வெளியே வந்து, "திராவிட நாடு கொள்கையை ஒத்தி வைக்கிறேன்" என்று சொன்னார்கள். ரொம்பவும் தந்திரமாக ஒத்தி வைக்கிறேன் என்று சொன்னார்கள். எங்களைப் போன்றவர்கள் வேகமாக எதிர்ப்போம் என்றே "ஒத்தி வைக்கிறேன்" என்று சொன்னார்கள். நான் கூட நினைத்தேன். சண்டை வரை இந்தக் கொள்கையை ஒத்தி வைத்து விட்டு, சண்டை முடிந்த பிறகு, மீண்டும் திராவிட நாட்டைக் கேட்போம் என்று நினைத்தேன். ஆனால் அதற்குப் பின்னால் அதைப்பற்றி பொதுக் குழுவில் பேசும்போது, விளக்கமாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது, ஆகவே இப்படிப்பட்ட முடிவை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட வழியிலே வந்தது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கழகத்திலிருந்து சொல்லுகிறேன். மொழிக் கொள்கையைப் பொறுத்த வரை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உறுதியாக இருக்கும் என்று சொல்லி, ஆளுநர் உரையை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பேசும் போது தலையிட வேண்டாம் என்று, முடித்துக் கொள்ளும் வரை இருந்தேன். அவர் பேசும்போது "தலைவர் மணி அடிக்கிறார்; நாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்" என்று உவமை சொன்னார். அதன் பொருள் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. "தலைவர் உடல் நிலையையும் பாராமல்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1986 ஜனவரி 24

இருக்கிறார்" என்றும் குறிப்பிட்டார். மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நான் துணைத் தலைவரையோ அல்லது மற்ற ஒருவரையோ இங்கே உட்கார வைத்துவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் முன்னாள் அமைச்சர் ஒருவர் பேசுகிறார், ஆகவே இருக்க வேண்டும் என்று அமர்ந்திருந்தேன். என் உடல் நிலையைக் கருதி துணைத் தலைவரையோ வேறு யாரையோ உட்கார வைத்துவிட்டு என் உடலைக் காத்துக் கொள்ள முடியும். எனவே இத்தகைய சுற்றுக் குறிப்புகள் தேவையற்றவை என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் இந்தக் கருத்தில் எடுத்துக்கொள்வீர்கள் என்று நான் நினைக்கவே இல்லை. நான் தங்களைப்பற்றிப் பெருமையாகப் பேசினேன். நான் பேசுகிறேன் என்பதற்காக உட்கார்ந்து இருக்கிறாரே, தன் உடல் நலனையும் பொருட்படுத்தாமல் எனக்காக உட்கார்ந்து இருக்கிறாரே, எனக்கு ஒரு பெருமை தர வேண்டும் என்று உட்கார்ந்து இருக்கிறாரே என்ற அந்த எண்ணத்தில்தான் குறிப்பிட்டேன். அதற்காகத் தாங்கள் வருந்துவதாக இருந்தால், தங்களை விட நான் அதிகமாக வருந்துகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-35)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா பேசும்போது, நேற்றைய தினம் நான் பேசியதற்கு மறுப்புச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் சொன்னார். அரசின் மொழிக் கொள்கையைக் கண்டித்து நான் சொன்னது மாதிரி பேசியிருக்கிறார். அவர் ரொம்பவும் சிரமப்பட்டதைக் கண்டேன். அரசின் மொழிக் கொள்கைக்கு எதிராக நான் பேசவில்லை. படிக்க விரும்புவர்களுக்கு வசதி இருக்க வேண்டும் என்று சொன்னேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட அப்படிப்பட்ட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன, "மத்திய பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் வசதிகள் இருக்கின்றன" என்று சொன்னார். படிக்க வசதிகள் இருக்கின்றன சில இடங்களில் என்றும் கேட்டால் செய்து கொடுப்போம் என்றும் சொன்னார். வசதிகள் வேண்டும் என்று கேட்கும்போது, நாம் தயார் என்ற நிலையில் இருக்க வேண்டும் என்று என்னுடைய கருத்தைச் சொன்னேன். மொழிக் கொள்கையை எதிர்த்துப் பேசியதைப் போல மாண்புமிகு உறுப்பினர் பேசினார்.



1986 ஜனவரி 24].

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு கேட்டதால், ஒரு விளக்கம் சொல்கிறேன். திரு. சுப்பு பேசியது பற்றி பத்திரிகைகளில் செய்தி வந்துவிட்டது. திரு சுப்பு அவர்கள் இப்போது சொன்ன விளக்கம் உள்ளபடியே பாராட்ட வேண்டியதுதான்.

திரு. க. சுப்பு: பத்திரிகைகளில் சரியாகத்தான் வந்திருக்கிறது, எந்த மாதிரி பத்திரிகைகளில் சரியாக வரவில்லை? நான் சொன்னது ரொம்ப கரெக்டாக வந்திருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் விவாதத்தில் பேசுவதற்கான வாய்ப்பு அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வாய்ப்பு இன்றைய தினம் முதலிலே அளிக்கப்படும் என்று நான் கருதியிருந்தேன். எனக்கு முன்பு திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் பேசி முடித்த பிறகு எனக்குப் பேசக்கூடிய வாய்ப்பை அளித்திருக்கிறீர்கள். அது மகிழ்ச்சியளிக்கிறது என்றாலும், திரு. இராதா அவர்கள் உணர்ச்சிபூர்வமாகப் பேசிய பிறகு என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்ற சங்கடமான நிலையில் நான் உங்கள் முன் நிற்கிறேன். இன்னுமொரு சங்கடம்—துணைத் தலைவர் பேசி முடிக்கும் வரையில் தாங்கள் அமர்ந்திருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. என்னை முதலிலே பேச அழைப்பதற்குக் காரணம் நான் துணைத் தலைவர் என்பது மட்டுமல்ல; நான் பேசி முடித்தால்தான் தாங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ள இயலும், துணைத் தலைவர் பேச வேண்டும் என்றால் தலைவர் அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் என்பதுதான். ஒரு அரை மணி நேரமாவது தாங்கள் இருக்கையில் இருக்க வேண்டுமென்ற ஒரு சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. அரை மணி நேரத்தைவிட குறைத்துப் பேசுகிறேன். தாங்கள் எழுந்து சென்றுவிட்டால், நான் பேச இயலாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே நான் பேச வேண்டுமென்று கருதினால், தாங்கள் அமர்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால், முதலிலே பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று எப்போதும் கேட்டுக்கொள்வது வழக்கம். அந்த அடிப்படையிலே முதலிலே இல்லாவிட்டாலும், திரு இராதா அவர்கள் உணர்ச்சி பூர்வமாக இங்கே பேசிய பிறகு அழைத்திருக்கிறீர்கள். திரு இராதா அவர்கள் ஒரு சொற்பொழிவையே நிகழ்த்தினார்கள். ஆளும் கட்சிக்காரர்கள், எதிர்க் கட்சிக்காரர்கள் ஆகிய எல்லோருடைய கவனத்தையும் சேர்த்து இழுக்கும் அளவில் சிறந்த சொற்பொழிவை கடந்த நாற்பது, நாற்பத்தைந்து நிமிடங்களாக நிகழ்த்தினார்கள். முக்கியமான கருத்தையெல்லாம் சொன்னார்கள். நான் ஓரிரு கருத்தை மட்டும் சொல்லி, என்னுடைய பேச்சைச் சுருக்கமாக முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

மும்மொழிக் கொள்கையைப்பற்றி நேற்றைய தினமும் இன்றைய தினமும் பேசப்பட்டது. இது குறித்து ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இரு மொழிக் கொள்கை, மும்மொழிக் கொள்கை பற்றிச் சொல்லி இந்தியைக் கற்றுக்கொள்ளலாமா, கற்றுக்கொள்ளக் கூடாதா என்றெல்லாம் சொன்னார் கள். மும்மொழிக் கொள்கை என்று வடநாட்டுக்காரர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் அதைக் கடைப்பிடிப்பதில்லை என்பது வாஸ்தவம். அவர்கள் கடைப்பிடிப்பது ஒரு மொழிக் கொள்கை.

ஐதராபாத் நகரில் நம்முடைய பேரவை மற்றும் மேலவைத் தலைவர்களின் கூட்டம் நடந்தபோது, தலைவர் அவர்களே தாங்களும் வந்திருந்தீர்கள். அது எண்பதாம் ஆண்டு என்று நினைக்கிறேன். அந்தக் கூட்டத்திலே வட நாட்டுப் பேரவை, மற்றும் மேலவைத் தலைவர்கள் பேசினார்கள். நல்ல முறையில் ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள்கூட இந்தியில்தான் பேசினார்கள். அப்போதிருந்த முன்னாள் பேரவைத் தலைவர் மாண்புமிகு திரு. முனு ஆதி அவர்கள் அப்போது வந்திருந்தார்கள். அப்போது இந்தப் பிரச்சினை எழுந்தது. அங்கே 'இந்தியில் பேசக்கூடாது, ஆங்கிலத்திலே பேச வேண்டும்' என்று சொன்னபோது, 'இந்தியில்தான் பேசுவேன், இந்திதான் இந்த நாட்டின் தேசிய மொழி' என்று சொன்னார்கள். 'ஆங்கிலம் தெரியாவிட்டால், இந்தியில் பேசுவதைபற்றி ஆட்சேபணை இல்லை' என்று சொன்னாலும், ஆங்கிலம் தெரிந்தவர்கள் இந்தியில்தான் பேசினார்கள். இதுதான் நிலைமை.

கல்கத்தா நகர் மற்றும் டில்லி சென்றபோதும், இதே பிரச்சினைதான் அங்கேயும் வந்தது. லக்னோ சென்றபோது, அங்கே நடந்த மேலவைத் தலைவர்கள், பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் என்னுடைய பக்கத்திலே அமர்ந்திருந்த மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பேரவைத் தலைவர், மிகச் சிறப்பாக ஆங்கிலத்திலே பேசக்கூடியவர், முதலில் ஒருமுறை ஆங்கிலத்திலே சிறப்பாகப் பேசியவர் மறுமுறை பேசும்போது இந்தியில் பேசிக்கொண்டிருந் தார். அவரிடத்திலே, 'நீங்கள் இந்தியில் பேசுவதைவிட ஆங்கிலத்திலே பேசினால் என்ன' என்று கேட்டேன். இந்தி தாய்மொழி, தாய்மொழியில் தான் பேசுவேன். ஆங்கிலத்திலே பேச வேண்டும் என்று கட்டாயப்படுத்தக் கூடாது' என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11-40)

இப்போது என்ன பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், மும் மொழிக் கொள்கை, இரு மொழிக் கொள்கை என்று இல்லை. வட இந்தியாவில் ஒருமொழிக் கொள்கைதான் இருக்கிறது. வெளி மாநிலங்களுக்குச் செ





ன்றபோது, லக்னோ போன்ற பகுதிகளுக்குச் செல்கிறபோது, பார்க்கிறோம். வாரணாசிக்குக்கூட போனோம். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தாங்களும் வருவீர்கள் என்று பார்த்தோம், காசிக்குப் போகக்கூட ஏற்பாடு செய்தோம். கடைசியில் வர முடியவில்லை. பாதையிலே எல்லாம் பார்த் தோம். காரிலே போகின்றபோது அங்கேயெல்லாம் ஆங்கிலமே கிடையாது. அங்கேயிருப்பவர்கள் எல்லாம் இந்தியில்தான் பேசுவது என்று இருக்கின் றார்கள். நாமும் இந்தியிலேதான் பேசவேண்டும் என்ற நிலை இருக்கிறது. யாரிடம் போய் பேசினாலும் இந்தியிலேதான் பேசுகின்றார்கள். மத்திய அரசின் ரெயில்வே ஸ்டேஷனில் உள்ள அதிகாரிகளிடம் போய்ப் பேசினாலும், ஆங்கிலத்தில் விவரம் கேட்டாலும், இந்தியிலேதான் பேசுகிறார்கள். ஆங்கிலம் கற்று உணர்ந்தவர்கள்கூட இந்தியிலேதான் பேசுவோம், ஆங்கிலத்தில் பேச மாட்டோம் என்ற நிலைமையில்தான் இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, அங்கே பள்ளிகளிலே, கல்லூரிகளிலே எல்லாம்கூட ஆங்கிலம் சரியாகப் போதிப்பதில்லை. பல வட மாநிலங்களில் அப்படி சரியாக ஆங்கிலம் போதித்துவிட்டால், அந்த மாநிலங்களில் உள்ள மக்கள் ஒழுங்காகப் பேசி விடுவார்கள் என்று கருதி அப்படிச் செய்கின்றார்கள். அப்படி ஒழுங்காகக் கற்றுக் கொடுத்தால் ஆங்கிலம்தான் வளர்ந்துகொண்டிருக்க முடியும் என்று கருதுகின்றார்கள். அதனாலேதான் ஆங்கிலம் "லிங்க் லேங்குவேஜ்' ஆக இருக்க முடியும். ஆகவே ஆங்கிலத்தைச் சரியாகச் சொல்லிக்கொடுக்காவிட் டால், பல்வேறு மாநிலங்களிலே இருப்பவர்களுக்கு ஆங்கிலமே தெரியாது. அங்கே இருப்பவர்கள் இந்தியிலேதான் பேசுவார்கள், "தென் மாநிலத்தில் இருப்பவர்கள் ஆங்கிலத்திலே பேசினால், எந்த விதமான தொடர்பும் இல்லாது போகும். அந்த அளவில் தானாகவே இந்தி பேசக் கற்றுக்கொண்டார்கள்" என்று கருதுகின்றார்கள். தானாகவே இந்தியைக் கற்றுக் கொள்ள வைப்பதற்கு ஆங்கிலத்திலே அவர்கள் பேசுவதில்லை என்ற முடிவை எடுத்திருக்கின்றார்கள். இன்றைய தினம் கூட இங்கேயிருந்து டெல்லிக்குச் செல்பவர்கள் ரெயில்வே ஸ்டேஷனிலே, தபால் தந்தி நிலையத்திலே யாரிடமாவது ஆங்கிலத்திலே கேட்டால், ஆங்கிலம் தெரிந்திருந்தாலும்கூட, ஆங்கிலத்திலே பேச மறுக்கின்றார்கள். அந்தமாதிரி நிலைமைதான் இன்றைக்கு நடக்கிறது. இக்கட்டையும் சங்கடத்தையும் உருவாக்குகின்றார்கள். இந்த சங்கடத்தை யார் தீர்ப்பது? மும்மொழிக் கொள்கையை அறிவித்திருக்கக்கூடிய மத்திய அரசாங்கம், அந்த நிலைமை களை எல்லா மாநிலங்களுக்கும் எடுத்துச்சொல்லி, மாநிலங்களிலே இருப்ப வர்கள் அந்த மும்மொழிக் கொள்கைப்படி இந்தி, ஆங்கிலம், அந்தப் பிரதேச மொழி ஆகிய மூன்று மொழிகளையும் ஒழுங்காகப் படிப்பதற்கான வாய்ப்புக்

களை அந்தந்த மாநிலங்களிலே உருவாக்கவேண்டும். அப்படிச் செய்தால் தான் இங்கேயிருந்து ஆங்கிலம் தெரிந்துகொண்டு போனாலும்கூட, அவர்கள் பேசுவார்கள். அது தொடர்பு மொழியாக இருக்க வேண்டும். அவர்கள் அதைத் தொடர்பு மொழியாக உபயோகிக்கக்கூடாது என்ற அளவில் இக்கட்டை உருவாக்குகின்றார்கள். இந்த நிலை மத்திய அரசுக்கோ அல்லது அந்த மாதிரியாக இருக்கக்கூடிய இந்தி பேசுகின்ற மாநிலங்களுக்கோ அல்லது சார்பாக இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சிக்கோகூட நல்லதல்ல. அந்தமாதிரி நிலைமைகள் அங்கே ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலேதான் இங்கே இந்த மாதிரி பிரச்சினை ஏற்படுகிறது என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம் மாநில அரசிடம் வருவதைவிட அந்த மாநிலங்களிலே வருவது மிகவும் முக்கியமான ஒன்று என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று இந்த ஆளுநர் உரையில் இந்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையைப் பற்றி மிக விவரமாகச் சொல்லியிருக்கின்றார்கள். இந்திய நாட்டினுடைய பொருளாதாரக் கொள்கை, மாநில அரசினுடைய பொருளாதாரக் கொள்கை ஆகிய இரண்டின் பொருளாதாரக் கொள்கையை எடுத்துப் பார்க்கின்றபோது, இரண்டு பொருளாதாரக் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று பின்னிக் கொண்டிருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சிமிக்க பொருளாதாரமாக, ஒரு வேகமாக நடை போடுகின்ற பொருளாதாரமாக இருந்தால்தான், மாநில்த்தினுடைய பொருளாதாரம் நல்ல முறையிலே இயங்க முடியும். இந்தியப் பொருளாதாரம் மெதுவான பொருளாதாரமாக அல்லது வேகமாக ஊக்குவிக்கிற பொருளாதாரமாக இல்லாது அல்லது இன்பிளேசனரி எக்கானமி என்று சொல்லக்கூடிய அளவுக்கு விலைவாசிகளை ஏற்றக்கூடிய ஒரு பொருளாதாரமாக, யார் ஒருவர் வேலை செய்தாலும் இழப்புக்காளாக்குகின்ற பொருளாதாரமாக கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள்தான் நல்ல வசதியுடன் இருக்க முடியும் என்ற அளவிலே, அல்லது பொதுத் துறையில் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, என்ன வேண்டுமானாலும் செய்யலாம், லாபம் இல்லாவிட்டாலும் செய்யலாம், நஷ்டம் வந்தாலும் செய்யலாம் என்றும் நாம் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இந்தியப் பொருளாதாரம் இருந்தால், எந்த மாநிலத்தினுடைய பொருளாதாரமும் சரிவர இயங்க முடியாது. மத்திய அரசினுடைய பொருளாதாரத்தைப் பொறுத்துத்தான் மாநில அரசின் பொருளாதார வளர்ச்சி அமைய முடியும்.



இட்டத்தட்ட 1968-வது ஆண்டிலிருந்து நான் இந்த அவையிலே உறுப்பினராக இருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் நிதிநிலை அறிக்கைகள் 1968-லேயிருந்து வைக்கப்பட்டிருக்கின்றன. 1968-லேயிருந்து வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கைகள், அப்போது இருந்த தி.மு.க. ஆட்சி என்றாலும், இப்போது இருக்கின்ற அ.தி.முக. ஆட்சி என்றாலும், அந்த நிதிநிலை அறிக்கைகளை எடுத்துப் பார்க்கின்றபோது, அந்தக் கருத்து மத்தியப் பொருளாதாரத்தையும் மாநிலப் பொருளாதாரத்தையும் பின்னிப் பிணைந்துதான் இருக்கின்றது. மத்திய அரசின் பொருளாதாரத்தைப் பொறுத்துத்தான் மாநில அரசின் பொருளாதாரம் அமையும் என்ற கருத்தையே காங்கிரஸ் மாநிலங்களில் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கைகளும், அந்தப் பொருள்படத்தான், எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. இந்தியப் பொருளாதர்ரத்தைப் பார்த்தாலும்கூட தெரியும். தலைவர் அவர்களே, உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியது கிரிக்கெட் என்பது உங்களோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும். ஒரு கிரிக்கெட் கேப்டன் ஓரிடத்தில் விளையாடுகிற

(முற்பகல் 11-45)

போது அந்தக் கேப்டனுக்குப் பணிந்து, அத்தனை பேரும் விளையாட வேண்டுமே தவிர, கேப்டன் சொல்லுவதைப்போல இல்லாமல், வேறுவிதமாக விளையாட முடியாது. அதைப்போல இந்தியப் பொருளாதாரத்தின் கேப்டனாக மத்திய அரசு இருக்கிறது. மாநிலங்கள் விளையாடுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆகவே மத்தியப் பொருளாதாரத்தில் இப்போது ஏற்பட்டுள்ள மாறுதல்கள் சிறந்தவையாகும். திரு. ராஜீவ் காந்தி அவர்கள் வந்த பிறகு, சிறந்த மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். 20, 25 ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரத்தில் பலன்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை மறுக்கத் தயாராக இல்லை. ஆனால் விரும்பிய அளவுக்கு நாம் வளர்ச்சி அடையவில்லை. திரு. நேரு அவர்கள் காலத்திலே, 5 ஆண்டுத் திட்டங்கள் போட்டபோது, இந்தியப் பொருளாதாரம் விரைவிலே 'இன்டஸ்டிரியல் எக்கானமி' ஆகிவிடுமென்றும், அப்படி மாறிவிடுமென்றும் சொல்லப்பட்டது. பப்ளிக் செக்டார் என்று சொல்லக்கூடிய பொது நிறுவனங்களைக் கொண்டு வந்தால், மிகச் சிறப்பாக நாட்டின் பொருளாதாரம் மாறிவிடுமென்று கணக்கிட்டு, அதிகப் பணத்தைக் கடன் வாங்கி பொதுத் துறையை வளர்த்தோம். என்ன வாயிற்று? பொதுத் துறையை விரிவுபடுத்தி, அதில் வரும் உபரி லாபத்தால் இந்தியப் பொருளாதாரம் பெருகுமென்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக பொதுத் துறை இழப்பு மூலமாக இந்தியப் பொருளாதாரம் மேலும் கஷ்டமான நிலைமைக்கு ஆளாகியிருக்கிறது. பொதுத்துறை சிறந்த எம்ப்ளாயராக,

தனிப்பட்டவர்கள் நடத்துவதைவிட நல்ல முறையில் இயங்குமென்று எதிர்பார்த்தோம். பொதுத் துறையில் பணியாற்றும் ஊழியர்கள் சிறந்த முறையில் பணியாற்றுவார்கள் என்று நம்பினார்கள். ஆனால் இன்றுள்ள நிலைமை even we are not able to consider the Public Sector as a model அந்த நிலைமைதான் இருக்கிறது. தனிப்பட்டவர்கள் மீது அதிக வரி விதிப்புகள் விதிக்கப்பட்டன. திரு. காட்கில் அவர்கள் வரி விதிப்புகளை அதிகப்படுத்த வேண்டும், நேரடியாக வரி விதிக்க வேண்டுமென்று சொல்லி, சிலருக்கு இன்கம் டாக்ஸ் 94 சதவிகிதம் விதிக்கப்பட்டது. பிறகு, செல்வ வரி, வெல்த் டாக்ஸ் எல்லாம் போட்டுப் பார்த்தால், 125-லிருந்து 150 சதவிகிதம்வரை கட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டு, எதிர்பார்த்ததற்கு மாறாக கறுப்புப் பணம் வளரக்கூடிய அளவுக்கு இந்தப் பொருளாதாரம் மாறியது. எங்கே பார்த்தாலும் சங்கடம். ஏழைகளின் நிலைமை மேலும் சங்கடத்திற்குள்ளாகிறது. இப்போது திரு. ராஜீவ் காந்தி அவர்கள் நம்முடைய பொருளாதாரத்தில் சிறந்த மாறுதல்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மாறுதல்களை ஆளுநர் அவர்கள் உரையில் வரவேற்றிருக்கிறார்கள். மத்திய அரசின் பொருளாதார மாறுதல்கள் காரணமாக நம்முடைய மாநிலமும் இன்னும் நல்ல முறையிலே தன்னுடைய திட்டங்களை உருவாக்குமென்று சொல்லியுள்ளதை நான் வரவேற்கிறேன். மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையையும் நான் வரவேற்கிறேன். மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை காரணமாக, நம்முடைய மாநில அரசும் சிறப்பான முறையிலே, விரிவான முறையிலே நடக்க வாய்ப்புகள் ஏற்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் ஓர் ஆலோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசைப் பொறுத்தவரையில், வரி விதிப்புக் கொள்கை 5 ஆண்டுகளுக்கு மாறாது. ஒரே வரி விதிப்புக் கொள்கை 5 ஆண்டுகளுக்கு இருக்க வேண்டும்; இன்கம் டாக்ஸ், செல்வ வரி எல்லாம் 5 ஆண்டுகளுக்கு மாறாது என்ற வகையிலே சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சரவர்களும் அவைக்கு வந்திருக்கிறார்கள். அதைப்போல மாநில அரசு வரி விதிப்புக் கொள்கையை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சதவிகிதமாக மாற்றாமல், 5 ஆண்டுகளுக்கு ஒரு நிலையான வரி விதிப்புக் கொள்கையை வகுக்குமென்றால், மாநிலத்தின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும். அந்த அடிப்படையிலே பார்த்து, அதற்குத் தக்கவாறு நாமும் நம்முடைய தொழிற் கொள்கையை அமைக்க முடியும். தொழிற் கொள்கையை நாம் அறிவிக்கும்போது, 5 ஆண்டுகளுக்கு மாநில அரசினுடைய



தொழிற் கொள்கை இன்ன மாதிரி இருக்கும்; எந்தெந்தத் தொழில்களுக்கு என்னென்ன ஊக்கம் தருவோம் என்பதையும் 5 ஆண்டுகளில் என்னென்ன வசதிகளைச் செய்வோம் என்றும் சொல்லி, 5 ஆண்டுகளுக்கான திட்டங்களைப் போட்டு, வரி விதிப்புக் கொள்கையை மத்திய அரசு எப்படிச் செய்திருக்கிறதோ அப்படி மாநில அரசும் செய்தால், அதன் பலன் நல்ல பலனாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி நீர்ப் பிரச்சினைபற்றி இங்கே பேசினார்கள். அதிலே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சையிலிருந்து வருகிறவன் என்ற முறையிலே சொல்கிறேன். காவிரி நீர் இல்லாத காரணத்தால் தஞ்சை மாவட்டத்தில் சம்பா தாளடிப் பயிருக்கு தண்ணீர் கிடைக்காமல் சிரமமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அங்கேயிருக்கும் விவசாயிகள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நான் மாநில அரசு மட்டும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்று நம்பவில்லை. இந்தப் பிரச்சினை, 4 மாநிலங்களுக்கிடையே உள்ள பிரச்சினையாகும். மாநிலங்களுக்கும், மத்தியத்திற்கும் இடையேயுள்ள பிரச்சினையாகவும் இருக்கிறது. நான் சென்ற முறையே சொன்னேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இதைத் தீர்க்கக்கூடிய முடிவு மத்திய அரசின் கையில் இருக்கிறது. இதில் முடிவெடுக்கும் அதிகாரம் மாநிலங்களுக்குக் கிடையாது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இன்றையதினம் இருக்கிறதா, இல்லையா ? அது முடிந்துவிட்டதென்ற முடிவுக்கு நான் வரவில்லை. அந்த ஒப்பந்தம் உயிரோடு இருக்கிறதென்று நாம் சொல்லுகிறோம். அந்த ஒப்பந்தம் முடிவான

(முற்பகல் 11-50)

ஒப்பந்தம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இருக்கிற ஒப்பந்தம் என்று நாம் சொல்கிறோம். ஆகவே இந்த ஒப்பந்தத்தின் நிலைமை என்ன என்று மத்திய அரசு தெளிவாக அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான், நெடுங்காலத்திற்கு தண்ணீர் வருமா, வராதா என்ற முடிவுக்கு நாம் வர முடியும். இந்தக் கட்டாயம் மத்திய அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசுக்கு ஒன்றைச் சொல்கிறேன். இதே போன்ற நிலைமை நீடித்தால், 12 ஆண்டுகளாக நீடித்துக்கொள்ளும் நிலைமை இருந்தால், தஞ்சை மாவட்டத்தில் என்னவிதமான விவசாயம் செய்ய வேண்டுமென்ற நிலை இல்லாமல் போய்விடும். அல்லது மாநில அரசு இறுதியான ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டும். இப்போது தஞ்சையில் சம்பா, குறுவை, தாளடி போன்ற பயிர்கள் காவிரி தண்ணீரை நம்பித்தான் பயிரிடுகிறார்கள். ஆனால் இப்படி 12 ஆண்டு

காலமாக, வருடா வருடம் தண்ணீர் குறைவாக வருவதும், ஒவ்வொரு முறையும் கர்நாடகத்தை நாம் கேட்பதும் அவர்கள் கொஞ்சம் தருவதுமாக இருக்கிற நிலை எப்போது முடியும் என்று தெரியவில்லை. எப்படியும் மூன்றாண்டுக்கு ஒருமுறை இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டுவிடுகிறது. அல்லது நமது மாநில அரசே தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பாங்கை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: ஒப்பந்தம் காலாவதியாகவில்லை யென்பதுதான் இந்த அரசின் நிலைமை. அப்படி காலாவதியாகவும் முடியாது. அப்படி நிலைமை இருக்கும்போது, தண்ணீர் வரத்து கொஞ்சம் குறைவாக இருக்கும் என்பதைவிட, காலாவதியாகிவிட்டது என்ற நிலைமை கிடையாது. அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அரசு தீவிரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த உறுதிமொழிக்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1968 ஆம் ஆண்டே இந்தப் பிரச்சினை வந்தது. அதற்குப் பிறகு வந்த ஒவ்வொரு அமைச்சரும் இந்த ஒப்பந்தம் முடியவில்லையென்றுதான் சொன்னார்கள். ஆனால் கர்நாடகத்தைப் பொறுத்த வரையில், இந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது என்று சொல்கிறார்கள். முடிந்ததா இல்லையா என்பதை யார் சொல்வது? அவர்கள் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். இதற்கு மத்திய அரசு முடிவு செய்ய வேண்டும். நாம் ஒன்றைச் சொல்வது, அவர்கள் ஒன்றைச் சொல்வது என்றால், இது பாதிப்பது தஞ்சை மாவட்டத்தைத்தான். தஞ்சை விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இதை விரைவில் நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. மாணிக்கம்: தலைவர் அவர்களே, சட்டரீதியாக முடிந்ததா, இல்லையா என்று தெரியவில்லை. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் காவிரியில் தண்ணீர் வரவில்லை. இதனால் விவசாயம் அழிந்துவிடும். எனவே யதார்த்தம் என்ன என்பதைப் பற்றி முடிவெடுக்க வேண்டும். அதையும் விரைந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: என்னைப் பொறுத்தவரையில், அதை உறுதியாக நம்புகிறேன். திரு. மாணிக்கம் அவர்கள் சொல்வதைப்போல, யதார்த்த நிலைமை, கடந்த சில ஆண்டுகளாக தேவையான சமயத்தில், தேவையான பருவத்தில், தேவையான அளவில் நமக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இந்தப் பிரச்சினை ஏற்பட்டு,



விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. உபரியாக இருக்கும் தண்ணீரை விடுகிறார்கள். அப்படி இல்லாதபோது, தண்ணீர் விடுவிக்க மறுக்கிறார்கள். போட்டிருக்கிற ஒப்பந்தத்தில் கூட அங்கே தேவையான அளவு தண்ணீர் இல்லாவிட்டாலும்கூட, நமக்குக் கொடுத்துத்தான் பாக்கியை அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று ஷரத்தில் இருக்கிறது. இப்போது தங்களுக்குப் போக பாக்கியிருந்தாலும் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இந்தப் பிரச்சினை 12 ஆண்டு காலமாக இருக்கிறது. யதார்த்த நிலைமையினைப் பார்த்தால், தஞ்சை மாவட்டத்திற்கு தேவையான அளவில் தண்ணீர் கிடைக்கவில்லை என்பதுதான். சம்பா, குறுவை, தாளடி சாகுபடி செய்வதை அங்கே மாற்றி, வேறுமாதிரியாகக் கரும்பு பயிரிட்டால், லாபகரமாக இருக்கும் என்று விவசாயிகள் கருதுகிறார்கள். சர்க்கரை ஆலைகள் இன்னும் 7, 8 அங்கே போடக்கூடிய அளவுக்கு கரும்பு விவசாயம் பெருக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால் விவசாயிகளுக்கும் பெரிதும் பலன் கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-55)

குழந்தைகள் நலத் திட்டத்தை ஆளுநர் அவர்கள் சிறந்த முறையில் சொல்லியிருக்கிறார்கள். நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் குழந்தைகளுக்காக அரசாங்கத்தாலே கொடுக்கப்பட்ட சீருடைகள் எல்லாம், கடைகளில் விற்பனை செய்யப்பட்டதாகவெல்லாம் சொன்னார்கள். குறை பாடு எங்கோ ஓரிடத்தில் இருக்கலாம். என்னுடைய கருத்து, மக்களுடைய கருத்து என்னவென்றால், ஒரு சிறந்த திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதுதான். இன்னும் பல நூறு ஆண்டு காலத்திற்கு அனைவரும் நினைக்கக்கூடிய திட்டமாக அந்தத் திட்டம் இருக்கிறது.

பொதுவாக அரசியல்வாதிகளைப்பற்றிச் சொல்வார்கள். ஓர் அரசியல் வாதி இன்றைக்கு என்ன நடக்கிறது என்பதுபற்றி எண்ணுகிறவன். அதற்காக செயல்படுகிறவன். ஆனால் ஒரு 'ஸ்டேட்ஸ்மேன்' என்பவன் வருங்காலத் தலைமுறையைப்பற்றி எண்ணுகிறவன், செயல்படுகிறவன் என்று சொல் வார்கள். அதைப்போல நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு 'ஸ்டேட்ஸ்மேன்'-ஆக இருக்கிறார். அவரைவிடச் சிறந்த ஒரு அரசியல் மூதறிஞர் இந்த நாட்டில் இல்லை என்று சொல்கிற அளவுக்கு இந்த நாட்டின் எதிர்கால குழந்தைகள் நலனுக்காக, நல்வாழ்வுத் திட்டங்களை, சத்துணவுத்

திட்டம், சீருடைத் திட்டம் போன்றவைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு நாட்டின் குழந்தைகள் நலமாக இருந்தால்தான், அந்நாட்டின் எதிர்காலம் சுபிட்சமாக வர முடியும்.

ஜப்பான் நாட்டில் உள்ள மாணவர்களின் (Inteligent Quitient) 120 புள்ளிகள் இருக்கிறதென்று சொல்வார்கள். ஆனால் இந்தியாவில் 65 புள்ளிகள்தான் என்று சொல்கிறார்கள். ஒரு நாட்டின் வளர்ச்சி, பொதுவாக இந்த (I.Q.) உயர்வைப் பொறுத்துத்தான் இருக்கிறது. நாட்டின் அறிவு உயர வேண்டும் என்று சொன்னால், குழந்தைகள் மன வளர்ச்சி ஆரம்ப பருவத்திலேயே நன்கு இருக்க வேண்டும். குழந்தைகளின் மன வளர்ச்சி நல்ல முறையில் இருந்தால் தான், அவற்றின் அறிவு வளர்ச்சியும் சிறந்த முறையில் இருக்கும். அதற்கு இச் சத்துணவுத் திட்டமும், சீருடைத் திட்டமும் நன்கு உதவும். அந்த வகையில் இத்திட்டங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டவேண்டுமேயொழிய ஏதோ ஓரிடத்திலே நடைபெறுகிற குறைபாட்டைப் பெரிதுபடுத்தி, இத்திட்டத்தையே குறை கூறக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே நம் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்றாலும், குடும்ப நலத் திட்டம் என்றாலும் அது சிறந்த முறையிலே நம் மாநிலத்திலே செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று மத்திய அரசு நம் மாநில அரசைப் பாராட்டியிருக்கிறது. நம் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் பாராட்டைப் பெற்றிருக்கிறார்கள்.

குடும்ப நலத்திட்டம் நல்ல முறையிலே நடக்க வேண்டுமென்பதற்காக நாம் அதற்கு ஊக்கம் கொடுக்கிறோம். அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களுக்குப் பணம் கொடுக்கிறோம். அதைப்போல அதிக குழந்தைகள் இருப்பவர்களுக்கு டிஸ்இன்சென்டிவ் (Disincentive) செய்யலாம். ஊக்கத்திற்குப் பதிலாக ஏதாவது செய்யலாம். இதுபற்றியும் அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதிக குழந்தைகள் பெற்றிருப்பவர்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த 'டிஸ்இன்சென்டிவ்'-ஐப் பொறுத்தவரையில், மூன்றாண்டுகளுக்கு முன்பு அகில இந்திய அளவில் அனைத்து மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவுக்கு என்னைத் தான் தலைவராகப் போட்டிருந்தார்கள். அப்போது 'டிஸ்இன்சென்டிவ்' கொடுப்பதுபற்றி விவாதம் வந்த நேரத்தில், தமிழகம், மகாராட்டிரம், குஜராத் மாநில அமைச்சர்கள் தயாராக இருந்தார்கள். ஆனால், உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநில அமைச்சர்கள் தயாராக இல்லை. எனவே அந்த வகையில் அது கைவிடப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களுக்கு ஒருவேளை ஏற்கெனவே அதிகக் குழந்தைகள் இருக்குமோ என்னவோ தெரியவில்லை. (சிரிப்பு) எனக்கு ஒரு குழந்தைதான். என்னைப் போன்றவர்களுக்கு அந்த அபாயம் இல்லை. அவருக்கு அபாயம் வரக்கூடும். (சிரிப்பு) வெளிநாடுகளில் குடும்பநலத் திட்டத்தை அமல்படுத்தாத அரசியல்வாதிகளுக்கும் ஆபத்து இருக்கிறது. அங்கே, இரண்டு குழந்தைகளுக்கு மேலிருந்தால், தேர்தலில் நிற்க முடியாது. எனவே அரசியல்வாதிக்கும் அங்கே ஆபத்து இருப்பதுபோல், நாமும் "டிஸ்இன்சென்டிவ்" செய்யலாம். அதுபோல் அரசாங்க உத்தியோகத்திற்கு வரவேண்டுமென்று சொன்னால், குடும்பநலத் திட்டத்தைக் கடைப்பிடித்தவர்களுக்குச் சலுகை தரலாம். தனிப்பட்டவர்களாக இருந்தால், அவர்கள் அரசாங்கத்தில் பயன் பெற வருகிற சமயத்தில், அவர்கள் குடும்பநலத் திட்டத்தைக் கடைப்பிடித்தவராக இருந்தால், சலுகை தரலாம். இதுபோன்ற வழிகளையும் அரசு ஆராயலாம். ஒருவேளை மத்திய அரசு இதை ஏற்காவிட்டால், மாநில அரசுத் தரப்பில் இதுபோல் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, மாநில மட்டத்திலே செய்யலாம். ஆனால் அதை அகில இந்திய ரீதியாக ஒத்துக் கொள்ளவில்லை என்றால், மாநில மட்டத்திலே மட்டும் செய்வதால், தமிழகத்திற்கு வேறு வகையிலே தொல்லைகள் ஏற்படக் கூடுமென்பதற்காக, தமிழகத்திற்கு மட்டுமல்ல, எந்த மாநிலத்திற்கும் கூடுதலாகச் சில நன்மைகள் கிடைக்காமல் போய்விடும் என்பதன் காரணமாக It should be an All-India policy, and on all-India basis குடும்பநலக் கட்டுப்பாடு என்பது All India Project ஆகவேதான் அகில இந்தியாவிலே

இருக்கக்கூடிய அத்தனை பேரும் ஒத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு நாம் இன்னும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். நாம் மாத்திரம் செய்துவிட்டால், "சரி அவர்கள் செய்து விட்டார்கள், நாம் சும்மா இருக்கலாம்" என்று சொல்வார்கள். ஆகையால் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ராஜஸ்தான், பீஹார், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கூட இதனைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மற்றொன்று, நோய்த் தடுப்பு ஊசி குழந்தைகளுக்குப் போடுகிறார்கள். அது தமிழ் நாட்டில் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றிருக்கிறது. பல இடங்களிலே நம்முடைய நண்பர்களும், பெரியவர்களும் சொல்கிறார்கள். அந்த முறையிலே நம்முடைய பாராட்டுக்களை நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைப்பற்றி ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், இப்போது 'சப்சிடி' என்று கொடுக்கிறார்கள். மூன்று விதமான தொழில்களுக்கு 10 சதவீதம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே எலக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட்ரீஸுக்கும், மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ், பார்மசூடிகல்ஸ்களுக்கு 10 சதவீதம் கொடுத்தார்கள். ஆனால் இன்று பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களாக இருப்பதற்கும் 10 சதவீதம் கொடுக்கிறார்கள். சென்ற முறை இங்கே பேசும் போது, திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். பின்தங்கிய மாவட்டமாக இருந்து, அங்கே ஊக்குவிக்கப்படுகிற தொழிலாக இருந்து, அது நடத்தப்படுமானால், அதற்கு இன்னொரு 10 சதவீதம் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னபோது, நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனித்து, ஆவன செய்வதாக உறுதி கூறினார்கள். வரக்கூடிய நிதி நிலை அறிக்கையிலே அநுமாதிரி அடிஷனல் இன்ஸென்டிவ்வாக வருமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

இன்னொன்று. விற்பனை வரிக் கடன் என்று தொழில்களுக்குக் கொடுக்கிறார்கள். பெரும் தொழில்களுக்கு, மத்தியதரத் தொழில்களுக்கு ஆறு ஆண்டுகளுக்கு அதைக் கொடுக்கிறார்கள். சிறு தொழில்கள் நல்ல முறையிலே ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால்



அவைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்குத்தான் கொடுக்கிறார்கள். பெரிய தொழில்களுக்கு, நடுத்தரத் தொழில்களுக்குக் கொடுக்கக்கூடிய ஐ.எஃப்.எஸ்.டி. லோன் என்பதை சிறு தொழில்களுக்கும் ஆறு ஆண்டுகளுக்குக் கொடுக்க வேண்டும். அவற்றுக்குக் குறைக்கக் கூடாதென்ற கருத்தை நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முடிவாக, இந்த மதுவிலக்கைப்பற்றி நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவையிலும் சொல்லியிருக்கிறார்கள். அது அடுத்த ஆண்டு 1 ஆம் தேதியிலிருந்து அமல்படுத்தப்படுமென்ற கருத்தைச் சொன்னார்கள். மதுவிலக்கு பற்றிப் பேசும்போது, தமிழ் நாட்டிலே அதனாலே பெரிய பிரச்சினை வந்துவிட்டது என்று கருதி பல இடங்களிலே பேசப்பட்டது. ஆனால் நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பல மாநிலங்களுக்குச் சென்று பார்க்கக்கூடிய வாய்ப்புகள் கிடைத்திருக்கின்றன. எல்லா மாநிலங்களிலும் இந்த நிலைமைதான் இருக்கிறது. நான் குஜராத், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களுக்குச் சென்றிருக்கிறேன். எல்லா மாநிலங்களிலும் தமிழ் நாட்டின் நிலைமைதான் இருக்கிறதே தவிர, ஏதோ தமிழ் நாட்டிலே மட்டும் புதிதாக ஒன்று வந்து விட்டமாதிரி ஒரு பிரச்சினையை அவர்கள் எழுப்பிப் பேசுவது சரியல்ல என்ற கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க. ஆட்சி இருந்தபோது மதுவிலக்கு இருந்தது. நான் இங்கே 1972-லே உறுப்பினராக இருந்தபோது, அப்போதிருந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பல காரணங்களைக் காட்டி 1972-லே மதுவிலக்கை ரத்து செய்தார்கள். அதையே மறுபடியும் 1974-லே கொண்டுவரும்போது வேறுபல காரணங்களைச் சொன்னார்கள். ஒவ்வொரு ஆட்சியையும் பார்க்கும்போது, நடைமுறையிலே சரிக்கட்ட முடியவில்லை. அப்போது பேரவையிலும், மேலவையிலும் இருந்த உறுப்பினர்கள் திரு. ராஜாராம் நாயுடு மற்றும் திரு. கிருஷ்ணசாமி நாயுடு ஆகியோர் தி.மு.க. ஆட்சி இருந்தபோது பேசியதையெல்லாம் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். நாட்டில் கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று அவர்கள் பேசிப் பேசி, அவர்கள் பேச்சைக் கேட்க வேண்டுமென்ற முறையிலே மதுவிலக்கை தி.மு.க. ஆட்சி ரத்து செய்தது. அதற்குப் பின்னாலே எங்கு பார்த்தாலும் எல்லோரும் குடிக்கிறார்களே என்று திருப்பிப் பேச ஆரம்பித்தபோது, சரி மறுபடியும் மதுவிலக்கைக் கொண்டு வருகிறேன் என்று சொன்னார்கள். இதே நிலைமைதான் வெவ்வேறு இடங்களிலே இருக்கிறது. டில்லியிலே கூட ஒரு பார்ஷியல் புரோஹிபிஷன் என்று இந்திரா காந்தி அம்மையார் கொண்டு வந்தார்கள். மறுபடியும்

இப்போது டில்லியில் பார்க்கும்போது, அங்கே பல இடங்களில் முன்னைவிட அதிகமான அளவில் மதுக் கடைகள் வந்திருக்கின்றன. ஆகவே இது ஏதோ தமிழ் நாட்டுக்கு மட்டும் நடந்துவிட்ட விபத்து மாதிரிப் பேசுவது சரியல்ல. ஒவ்வொரு ஆட்சிக் காலத்திலும் இந்தப் பிரச்சினை வரும்; அதைப்பற்றிப் பேசவும், அதைப்பற்றி ஒரு முடிவு எடுப்பதுமாக இருக்கிறது. அப்படியானால், நிதி அமைச்சர் அவர்கள் அதை அடுத்த ஆண்டு 1 ஆம் தேதி முடித்துவிட்டு மறுபடியும் இரண்டாம் தேதி, அடுத்த சனவரி 1 ஆம் தேதி ஆரம்பிப்பார் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இருக்கிற நிலைமையைப் பார்க்கும் போது, 230 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதுபற்றி முடிவு எடுத்துவிட்டார்கள். அந்த முடிவுக்கு மாறுபாடாகப் பேச

(பிற்பகல் 12-05)

விரும்பவில்லை. எனவே இது தமிழ் நாட்டிற்கு மட்டும் ஏற்படுகிற விபத்து அல்ல. தமிழ் நாட்டை விட்டு வெளி மாநிலங்களுக்குச் சென்று பார்த்தவர்களுக்கு எல்லா மாநிலங்களிலும் இந்த நிலைதான் இருக்கிறது என்பது தெரியும். அடுத்து இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊழல், ஊழல், லஞ்சம், லஞ்சம் என்று பேசுகிறார்கள். அவர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு ஊழலும் லஞ்சமும் இல்லாத மாநிலம் இந்தியாவிலேயே எங்கே இருக்கிறது? 1947 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இந்தமாதிரிதான் ஊரில் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் லஞ்சம் வாங்கினார்களா என்கிறார்கள். ஏதோ காங்கிரஸ் ஆட்சியின் போதுதான் சிறந்த ஆட்சி நடந்ததைப் போலவும் இப்போது ஆட்சிகள் மாற மாற அந்த நிலைமை மாறிக்கொண்டே இருக்கிறது அல்லது அதிகமான பேர் லஞ்சம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது போலவும் பேசுகிறார்கள். திரேதாயுகத்தில் நடந்ததைக் கலியுகத்தில் பேசக் கூடாது. 1947-ல் இருந்த நிலைமை வேறு, 1986 ஆம் ஆண்டில் இருக்கிற நிலைமை வேறு, தமிழ் நாட்டில் மட்டுமல்ல. காங்கிரஸ் ஆட்சி நடக்கிற உத்திரப் பிரதேசத்திலும் சரி, வேறு பல மாநிலங்களிலும் சரி, நிலைமைகள் வெகுவாக மாறிக் கொண்டிருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சி நடக்கிற மராட்டிய மாநிலத்தில் பார்த்தால், அங்கே நடக்கிற ஊழல்கள் என்பவை மிகவும் பயங்கரமாக இருக்கின்றன. அவைகள் சாதாரணமாக வெளியே வருவதில்லை. பத்திரிகைகள் மூலமாக பயங்கரமாக வெடிக்கின்றன. இதற்காகவே கமிஷன் போடுகிறார்கள். முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, ஊழல் என்று சொல்லித்தான் சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது. மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பேசும்போது, தி.மு.க. ஆட்சியை ஊழல் மலிந்த





ஆட்சி என்று சொல்லி அதற்காகத்தான் அதை ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்குகிறோம் என்று சொன்னார்கள். ஊழல் என்பது 1986 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டை விட வேறு எந்த மாநிலத்திலாவது குறைந்திருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அல்லது தமிழகத்தில்தான் அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன் . . . .

**திரு. ப. மாணிக்கம்:** ஊழல் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பது சரியாகக்கூட இருக்கலாம். ஆனால் ஊழலை எதிர்த்து ஒழிப்பதற்காக இயக்கம் நடத்தி ஆட்சிக்கு வந்தவர்களின் ஆட்சிக் காலத்தில் அது நடக்கக் கூடாது என்பதுதான் எங்கள் குறையே.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மேற்கு வங்கத்திற்குப் போனால், நான் கல்கத்தாவில் இருப்பவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அங்கே போயிருப்பார்கள் என்று நினைக்கிறேன். கேரளத்தில் என்ன நடக்கிறது என்று அவருக்கும் தெரியும். கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியில் என்ன நடந்தது என்பதும் அவருக்குத் தெரியும்.

* **திரு. ப. மாணிக்கம்:** கேரளத்தில் திரு. அச்சுதமேனன் அவர்கள் தலைமையமைச்சராக இருந்தபோது அவர்மீது ஊழல் குற்றம் ஏதும் வரவில்லை. ஆனால் பகிரங்கமாக பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. அதாவது கிளாஸ் 4 ஸ்டாப் ஒருவர் திரு. அச்சுதமேனனுக்கு ஒரு வகையில் உறவினர், அந்தப் பதவிக்கு எடுக்கப்பட்டார் என்பது அவருடைய கவனத்திற்கு பத்திரிகை மூலம் கொண்டு வரப்பட்ட உடனேயே அந்தப் பணியாளர் எப்படி அந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று கேட்டறிந்தார். அவரை நியமித்தவர் ஒரு அதிகாரி. அந்த நியமனம் சர்வீஸ் கமிஷனுக்கு உட்பட்ட நியமனம் அல்ல என்று தெரிந்தும், தனிப்பட்ட அதிகாரி ஒருவரால் நியமிக்கப்பட்ட அந்த உத்தரவை ரத்து செய்து, அதோடு நிற்காமல் இனிமேல் கிளாஸ் 'டி' 'ஸ்டாப்' பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக முறையாக ரெக்ரூட் செய்யப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். மேற்கு வங்கத்தில் நடக்கவில்லையா என்று கேட்கலாம். ஊழல் இல்லை என்று சொல்லவில்லை. ஊழலைக் கட்டுப்படுத்தும் முயற்சியை அங்கே இருக்கிற அரசுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். இங்கே ஊழலை எதிர்ப்பதாக இயக்கம் நடத்தி ஊழல் ஆட்சியை வீழ்த்திவிட வேண்டுமென்று முனைப்பு காட்டி வீழ்த்தியான பிறகு அதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டவர்களின் ஆட்சிக் காலத்தில் ஊழல் அதிகரித்து விட்டதே என்பதுதான் எங்களின் குற்றச்சாட்டு.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஒருமுறை ரெயில் கவிழ்ந்தது என்பதற்காக அன்றைக்கு காங்கிரஸ் ஆட்சியில் அமைச்சராக இருந்த திரு. அழகேசன் அவர்கள் அரியலூர் விபத்தையொட்டி இராஜிநாமா செய்தார்கள். இன்றைக்கு காலம் மாறியிருக்கிறது. 20 ஆண்டுக் காலத்தில் பல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. முன்னாலே இருந்த நிலைமை இப்போது இல்லை. 20 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த மக்களின் நிலைமை இப்போது மாறிவிட்டிருக்கிறது. 25 ஆண்டுக் காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** "அன்றைக்கு அரியலூர் ரெயில் விபத்தை ஒட்டி திரு. அழகேசன் இராஜிநாமா செய்தார். இன்றைக்கு ஏன் மற்ற அமைச்சர்கள் இராஜிநாமா செய்யவில்லை?" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. ஊழலை ஒழிக்க வேண்டும் என்று சொல்லி, அதற்காக ஒரு அரசை டிஸ்மிஸ் செய்வதற்குக் காரணமாக இருந்ததே இப்போது ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற இவர்கள்தான் என்பது உண்மை. எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், அன்றைக்கு தோழர் கல்யாணசுந்தரம் அவர்களும் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்தான் அன்றைக்குப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையாரிடம் முன்பிருந்த ஆட்சிமீது ஊழல் குற்றச்சாட்டுக்களையெல்லாம் பட்டியல் போட்டுக் கொடுத்தார்கள். அத்தகைய ஊழல் மலிந்த அரசு விலக வேண்டும் என்று சொன்னவர்கள் ஆட்சிக் காலத்தில் ஊழல் அதிகரிக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. எனவே தயவுசெய்து அன்றைக்கு இருந்ததை விட ஊழலின் டைமென்ஷன் அதிகரித்திருக்கிறது என்ற வகையில் பேசுவது நன்றாக இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொள்கை என்பது எந்தக் காலத்திலும் மாறக் கூடாது. மாறாக கொள்கையை வைத்திருப்பவர்கள்தான் நாங்கள் என்று சற்று முன்னர் பேசிய ஆளும் கட்சி உறுப்பினர் திரு. இராதா அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எனவே ஊழல் என்பது எந்தக் காலத்திலும் ஊழல்தான். அதிலும் குறிப்பாக ஊழலை ஒழிப்போம் என்று சொன்ன அரசு அந்தக் கொள்கையிலிருந்து வழுவக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

(பிற்பகல் 12-10)

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஊழலை விட்டுவிடுவது நல்லது.



**மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன்:** திரு. அழகேசன் சொன்னார் என்றால், அப்போதிருந்த 'பப்ளிக் மொராலிட்டி' வேறு, இன்றையதினம் உள்ள 'பப்ளிக் மொராலிட்டி' வேறு. அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக அம்மையார் அவர்கள் இருந்திருப்பார். திருமதி இந்திரா காந்தி அம்மையாரிடத்திலே, 'காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது' என்று சொன்னபோது, 'ஊழல் இந்தியாவில்தான் இருக்கிறதா, உலகத்திலே வேறு எங்கேயும் இல்லையா?' என்று கேட்டார்கள். அப்போதிருந்த மக்கள் தொகை வேறு, இப்போதுள்ள மக்கள் தொகை வேறு. இரண்டாயிரம் வருஷத்தில் இந்திய நாட்டின் ஜனத்தொகை இப்போது இருப்பதைவிட இரண்டு மடங்காகும். அப்போதிருந்த கறுப்புப் பணம் எவ்வளவு, இப்போதுள்ள கறுப்புப் பணம் எவ்வளவு என்பது உறுப்பினருக்குத் தெரியும். பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் வந்த பிறகு, உயர் அதிகாரிகளிடத்திலேயிருந்த கறுப்புப் பணம் எவ்வளவு வெளியே வந்திருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். எவ்வளவோ மாறுதல்கள் ஆண்டுக்காண்டு வருகின்றன. மராட்டிய மாநில முதலமைச்சர் பேரில் இருந்த இந்திரா டிரஸ்ட் கேசைவிட அதிகமாக யாரும் செய்ய முடியாது. ஊழல் அதிகம் என்றால், ஒவ்வொரு மாநிலத்தோடு எப்படி ஒப்பிட்டுப் பார்ப்பது, எந்த அளவுகோலை வைத்துப் பார்ப்பது? வேறு மாநிலத்தில் எவ்வளவு இருக்கிறது, இந்த மாநிலத்தில் எவ்வளவு இருக்கிறது, மத்திய சர்க்காரில் எவ்வளவு இருக்கிறது, மாநிலத்தில் எவ்வளவு இருக்கிறது என்று கண்டுபிடித்து ஒழிக்க முடியாது. ஆகவே கறுப்புப் பணமும், ஊழலும் இந்த நாட்டிலே இருக்கிறது. இதை முடிக்க வேண்டுமென்றால், இதை அப்சலூட்டாக முடிப்பதிலே கஷ்டம் இருக்கிறது. தமிழ் நாட்டை மட்டும் கற்பனையாக வைத்துக்கொண்டு ஊழலை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. எல்லா மாநிலங்களையும் கம்பாரட்டிவாகப் பார்க்க வேண்டும். தமிழ் மாநிலத்தை மாத்திரம் பிரித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் அதைக் காரணமாகக் காட்டி வெளிநடப்புச் செய்வது சரியானது அல்ல. திரு. மாணிக்கம் போன்றவர்களும் இதற்காக வெளிநடப்புச் செய்வது சரியானதல்ல என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச என்னை அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்ட சில திட்டங்களின் மேலும், இந்த ஆண்டு நடக்கவிருக்கும் திட்டங்களின் மேலும் என்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முதலில் இந்த அரசு சென்ற ஆண்டு நிறைவேற்றிய மக்கள்

நலவாழ்வு, அரசின் பல்வேறு துறைகளிலே செய்துள்ள நல்ல பல திட்டங்களையும் வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

அரசுப் பணியாளர்கள் குடும்பநல நிதியை ரூபாய் பத்தாயிரத்திலிருந்து இருபதாயிரமாக உயர்த்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் திட்டத்திலே நோய் தடுப்பு ஊசித் திட்டத்தைப்பற்றி எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். இதிலே 95 சதவீதத்தை நல்ல வகையில் நிறைவேற்றியிருக்கிறோம் என்று ரிப்போர்ட்டாகியிருக்கிறது. இதைக் கண்கூடாக நானே பார்த்திருக்கிறேன். சமீபத்தில் மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அவர்கள் என்னுடைய மாவட்டத்திலே சுற்றுப்பயணம் வந்த போது, எதிர்பாராதவிதமாக ஒவ்வொரு கூட்டத்திலும் சிறு குழந்தைகளை வைத்துக்கொண்டிருந்த தாய்மார்களை அழைத்து, முத்தடுப்பு ஊசி போட்டீர்களா என்று கேட்டபோது, ஊசி போட்டுவிட்டோம் என்று அவர்கள் பதில் சொன்னபோது, உள்ளபடியே எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. தாய்க்குலத்திற்கு தங்கள் குழந்தைகளை ஆரோக்கியமான குடிமகனாக ஆக்க வேண்டுமென்ற விழிப்புணர்ச்சி வந்திருக்கிறது என்பதை நேரில் பார்க்கும்போது, நானும் அமைச்சரோடு சேர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். "மூன்று மாவட்டங்களில் முழுவதுமாக நிறைவேற்றியிருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் பரவலாக பின்தங்கிய பகுதிகளில் உள்ளவர்கள் முத்தடுப்பு ஊசி போடும் திட்டத்தின்கீழ் அவர்களாகவே அணுகி ஊசி போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த நிலைமை இல்லாமல் எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் கணக்கெடுத்து எங்கெங்கு சிறு குழந்தைகள் உள்ளனவோ அங்கெல்லாம் இவர்களாகவே சென்று முத்தடுப்பு ஊசி போடும் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஆதி திராவிடர்கள் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 126.16 கோடி செலவு செய்ய ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் ஒன்றை மிகவும் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். ஆதி திராவிடர்களுக்குள்ளேயே அருந்ததியர் என்ற ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அருந்ததி பிரிவினருக்குச் சரியான வகையில் இந்த மேம்பாட்டுத் திட்டங்கள் போய்ச் சேரவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.





(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 12-15)

அதையும் மனதில் கொண்டு அந்தத் திட்டங்களின் பயனை நல்ல முறையில் மக்கள் பெறச் செய்ய, இந்த ஆட்சியினுடைய நன்மைகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிச் சிறுவர்களுக்கு இலவசப் புத்தகங்கள், சீருடைகள் கொடுப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கின்றது. குறிப்பாக 58.10 லட்சம் சிறுவர்களுக்கு சீருடைகள் கொடுக்கும் திட்டத்தை இங்கே அமல் நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அன்றைக்கு அவை முன்னவர் அவர்கள்கூட சொன்னார்கள். மக்களுடைய நல்ல திட்டங்களை நிறைவேற்றும்போது, எங்காவது தொடர்ந்து குறைகள் இருக்கத்தான் செய்யும். அவைகளை எல்லாம் பெரிதுபடுத்தாமல், ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், மேலவை உறுப்பினர்களாக இருப்பவர்கள், பேரவை உறுப்பினர்களாக இருப்பவர்கள், பொதுநலப் பணியில் சேவகர்களாக இருப்பவர்கள், யாராக இருந்தாலும், அங்கங்கே சென்று குறைகளை உடனிருந்து களைய ஆவன செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.

நானே சில கிராமங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஒவ்வொரு பள்ளியிலேயும் சென்று பார்த்திருக்கிறேன். மேலும் குறிப்பாக இலவச சீருடைகள் என்பது பரவலாக அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு பள்ளிக்கூடத்திற்கு நான் தற்செயலாகச் சென்றிருந்தபோது, அங்கே இருந்து இலவசப் பாடப் புத்தகங்களையும் சீருடைகளையும் கொடுத்துவிட்டுச் செல்லவேண்டும் என்று அந்த ஆசிரியர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அங்கே மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் 17 மாணவர்களுக்குத்தான் இலவசப் பாடப் புத்தகங்கள் கொடுத்தார்கள். நான் அந்த ஆசிரியரைக் கேட்டபோது, "ஒன்றிய அலுவலகத்திலிருந்து அந்த அளவுக்குத்தான் கொடுத்தார்கள். கூடிய சீக்கிரம் அனைவருக்கும் கொடுத்துவிடுவோம் என்று அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள்" என்று சொன்னார்கள். இதனால் அங்கு பொதுமக்கள் ஒரு தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள். அரசு ஆசிரியர்கள் கையிலே கொடுத்தும்கூட அவர்கள் அந்தப் பள்ளிக்கூடத்திலேயுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுக்கவில்லை என்றுதான் கருதுகின்றார்கள். அவர் மீது தப்பான அபிப்பிராயம் உருவாகிக்கொண்டிருக்கின்றது. ஆகவே குறிப்பாக அனைத்து மாவட்டங்களிலும் அனைத்து ஒன்றியங்களிலும் ஒன்றாகக் கொடுக்க இயலவில்லை என்றாலும், ஒன்றியத்துக்கு ஒவ்வொரு

பள்ளிக்காவது முழுமையாகக் கொடுக்கின்ற அளவுக்கு எல்லாச் சிறுவர்களுக்கும் சீருடைகளை, இலவசப் பாடப் புத்தகங்களைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கல்விக்காக இன்று ரூ. 1½ கோடி ஒதுக்கியிருக்கின்றார்கள். கல்விக்காகப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கும் ஆய்வுக்கூடங்களை அமைக்கவும் ரூ. 1½ கோடி ஒதுக்கியிருப்பதாக இங்கே திட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயுள்ள பள்ளிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்தால், நிச்சயமாக இந்த ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருக்கும் என்பதை நம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் கொஞ்சம் கூடுதலாக நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக பின்தங்கிய மாவட்டங்களிலே பல பள்ளிக்கூடங்கள் மேல் கூரை இல்லாமலே, ஆய்வுக்கூடங்கள் இல்லாமலே இருந்துகொண்டிருக்கின்றன. இன்றைய இந்தியாவானது விஞ்ஞானப் படிப்பிலே நல்ல முறையிலே முன்னேறினால்தான், மற்ற உலக நாடுகளோடு போட்டியிட முடியும் என்ற அளவில், விழிப்புணர்ச்சியோடு இருக்கின்ற காலத்திலே, தேவையான அளவுக்கு ஆய்வுக்கூடங்களையும் பள்ளிக்கூடங்களையும் கட்ட வேண்டும். அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் குடும்ப நலத் திட்டத்தைப்பற்றிச் சொல்லும்போது, அதை நம்முடைய தமிழகம் நல்ல முறையிலே அமல்படுத்துகின்றது. அதற்காக ரூபாய் 2.5 கோடி மான்யத் தொகையாக நாம் பெற்றிருக்கிறோம். குடும்பநலத் திட்டம் நல்ல முறையில் செயல்படுத்தப்படுவதைப்பற்றி நான் இந்த அரசை உள்ப்பூர்வமாகப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் குடும்பநலத் திட்டத்தை அமல்படுத்துகின்ற அரசுப் பணியாளர்கள் 'கோயர்சிவ்' ஆக துன்புறுத்தப்படுகின்றார்கள். சத்துணவு மையத்தில் வேலை செய்யும் சகோதரியாக இருந்தாலும் சரி, முக்கிய சேவிகாவாக வேலை செய்தாலும் சரி, வில்லேஜ் ஆபீசர்களாக இருந்தாலும் சரி, அது யாராக இருந்தாலும் சரி, குறைந்தது 4 கேஸ்களாவது கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் அங்கே நிர்ப்பந்தப்படுத்தப்படுகின்றார்கள். அப்படி அவர்கள் கொண்டுவரவில்லை என்று சொன்னால், அவர்களுடைய சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்று சொல்கின்றார்கள் அல்லது அவர்கள் வேலையின்மீது குறை சொல்லி எழுதி விடுவோம் என்று சொல்லி பயமுறுத்துகின்றார்கள். சத்துணவு மையத்தில்



வேலை செய்யும் பணியாளர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். அங்கே வேலை செய்கின்ற சகோதரிகள் நான்கு கேஸ்களாவது கொண்டு வரவேண்டும் என்று சொல்லும்போது, அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றார்கள் என்பதை மனதில் கொண்டு, அரசுத் தரப்பிலே ஆள் பிடிக்க வேண்டும் என்பதற்காக அவர்களை வற்புறுத்தி இவ்வளவு மோசமான முறையில் அமுல் செய்யவேண்டும் என்று நினைக்கவேண்டிய தில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

(பிற்பகல் 12-20)

குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொள்பவர்களுக்கு மேலும் என்ன வகையிலே 'இன்சென்டிவ்' கொடுக்கலாமென்று ஆராய்ந்து, அந்த வகையிலே பொது மக்களைத் தூண்ட வேண்டுமே தவிர, அரசு ஊழியர்களானாலும், ஆசிரியர்களாக இருந்தாலும் அவர்களுக்கு நிர்ப்பந்தமான முறையில் ஆள் பிடிக்கும் வேலையைக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கையில், 1984-85 ஆம் ஆண்டு இறுதிவரை 3675 கோடி ரூபாய் செலவிட்டுள்ளோம். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு ரூ. 5,750 கோடியாக உயர்ந்துள்ளது. இத் திட்டத்தின் முதல் ஆண்டில் 960 கோடி ரூபாய் செலவிட ஒப்புதல் அளித்திருக்கையில், நாம் செலவிடக்கூடிய தொகை ஏறத்தாழ ரூ. 1050 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கிறோம் என்று ஆளுநர் அவர்கள் உரையில் கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே திட்டமிட்டது 960 கோடி ரூபாயாக இருந்தாலும், கூடுதலாக திட்டச் செலவுகளைக் கொடுத்திருக்கிறார்கள். மின்சாரத்திற்கு 2000 கோடி ரூபாய் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும். நாட்டிலுள்ள தொழில் உற்பத்திக்கு இன்றியமையாத மூலப்பொருள் மின்சாரம். அதை எல்லோரும் அறிந்திருக்கிறோம். அதை மனதிலே கொண்டுதான், திரு. ராஜீவ் காந்தி அவர்கள்கூட கல்பாக்கம் அணு மின் நிலைய உற்பத்தியை நாட்டுக்கு அளித்த போது, தமிழ் நாட்டின் தேவைக்கேற்ப மின்சாரம் வழங்கப்படுமென்றும், தமிழ் நாட்டின் தேவை முதலிலே கவனிக்கப்படுமென்றும் உறுதி அளித்தார்கள். கல்பாக்கத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் மட்டுமல்ல. நெய்வேலியிலிருந்தும் தமிழ் நாட்டுக்கு மின்சாரம் கொடுக்க ஆவன செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் ஒன்றை வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசிடமிருந்து எங்களுக்கு வரவேண்டிய கடன் பாக்கி 112 கோடி ரூபாய் வரவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மின்சாரம் கொடுத்த வகையிலே பாக்கி 112 கோடி ரூபாய் வந்து சேரவில்லை; அதனால்

சிரமைப்புப் பணியில் எங்களால் முழுமையாக ஈடுபட முடியவில்லை என்று ஓர் அதிகாரி சொன்னதாக எனக்கு ஞாபகம். அவ்வளவு தொகை இல்லை என்று இங்கே சொன்னார்கள். தமிழக அரசு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி எவ்வளவு என்பதையும், அவர்கள் சொல்லுவது 112 கோடி ரூபாய் இல்லை என்றால், இரண்டு கணக்குகளும் எவ்வாறு எங்கே ஒத்துப் போகின்றன என்பதையும், எவ்வாறு இந்தக் கடனைத் தீர்க்கப் போகிறோம் என்பதையும் மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது எடுத்துச் சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, பாசனத்திற்காக பம்ப்-செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டபோது, 5 ஹார்ஸ் பவர் மோட்டார் போட்டால்தான் லைன் இழுக்க பொருளாதார ரீதியில் பீசிபிளாக இருக்கும். எக்கனாமிக்காக இருக்கும் என்றும், குறிப்பிட்ட காலம்வரை 3 ஹார்ஸ் பவர் மோட்டாரை இயக்கினாலும், 5 ஹார்ஸ் பவர் மோட்டாருக்குள்ள பணத்தைக் கட்ட வேண்டுமென்று சொல்லி, அக்ரிமென்ட் போட்டார்கள். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மாற்றிக்கொள்ளலாமென்று சொன்னார்கள். அக்ரிமென்ட் போட்டு 10 வருடங்கள் ஆகியும், இன்னும் 5 ஹார்ஸ் பவர் மோட்டார் என்ற முறையிலே ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் வீதம் வசூலித்து வருகிறார்கள். கிராமத்திலுள்ள விவசாயிகள் எவ்வளவோ சொல்லியும்கூட, இதற்கு இன்ஜினியர்களாலும், மின் வாரியத்தைச் சேர்ந்த கணக்கர்யர்களானாலும், அதிகாரிகளானாலும் நல்ல முறையிலே தீர்வு காண முடியவில்லை. குறிப்பாக நானே பாதிக்கப்பட்டிருக்கிறேன். அக்ரிமென்ட் போட்டு 10 வருடங்கள் ஆகியும், இன்னமும் 275 ரூபாயே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ சொல்லியும், எழுதிக் கொடுத்தும் ஒரு வருடமாகிறது. என்னுடைய விஷயத்திலேயே நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அடுத்து ஏழை விவசாயியின் பிரச்சினையில் எவ்வாறு நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இத்தகைய குறைகளை எல்லாம் உடனடியாகக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் பற்றி இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்திலே மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் எங்களுடைய பகுதிக்கு வந்தபோதுகூட, வறட்சியால் நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறோம், இன்னும் 15 நாட்கள் போனால் குடிநீருக்கே பஞ்சம் வந்துவிடுமென்று எடுத்துச் சொன்னோம். தமிழகத்தில் ஒரு பக்கம் வெள்ளம், அதிக மழை, புயல் என்று கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும், என்னுடைய மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் வறட்சியால் பாதிக்கப்படுவதுபோல, இந்த ஆண்டும் கடுமையான



வறட்சி வந்திருக்கிறது. வறட்சி வந்திருக்கிறது என்று சொல்லுகிறோமே தவிர, இன்னும் அரசுத் தரப்பில் அதை வறட்சிப் பகுதி என்று அறிவிப்பு வெளியிடவில்லை. அப்படி அறிவித்தால், விரைவிலே நிவாரணப் பணிகளை ஆரம்பிக்கலாம்.

(பிற்பகல் 12-25)

குறிப்பாகக் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சாத்தூர், சிவகாசி, விருதுநகர் பகுதிகளில் இப்போதே ஒரு குடம் குடிநீர் ஒரு ரூபாய் என்று வந்துவிட்டது. அந்தப் பகுதியில் நிலத்தடி நீரும் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, வைகை அணையின் ஒரு கிளையை எங்கள் பகுதிக்குத் திருப்பிவிட்டு, குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்காக நாம் கேரளாவைக் கேட்க வேண்டியதில்லை, மேற்கு நோக்கி ஓடும் ஆற்றைத் திருப்ப வேண்டும் என்று கேட்கவேண்டாம். நமது மாநில எல்லையிலேயே ஓடும் வைகை நதியின் ஒரு பகுதியாக இருக்கும் மூல வைகை என்ற இடத்தில் ஒரு அணை கட்டி, இராமநாதபுரம் மாவட்டத்தின் கடைசி வரையில் கிழக்கே செல்லும் வைகைத் தண்ணீரின் ஒரு பகுதியை எங்கள் பகுதிக்குத் திருப்பிவிட்டால், விவசாயத்திற்கு அந்த நீர் பயன்படாவிட்டாலும், குறைந்தபட்சம் குடிப்பதற்காகவாவது பயன்படும். அரசாங்கம் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். நாங்களும் ஆண்டாண்டு காலமாக எங்கள் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினைபற்றி சொல்லிக்கொண்டே இருக்கிறோம், ஒருவரும் இதைக் கேட்கவில்லை. வைகை ஆற்றுப் படுகை மேம்பாட்டுத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதில் இதையும் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்தால், அந்தப் பகுதி மக்கள் மிகவும் நன்றி செலுத்துவார்கள்.

மேலும் நலிந்த பிரிவினர்களுக்காக ஆண்டொன்றுக்கு 10 லட்சம் வீடுகள் வீதம் மூன்றாண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டப்படும் என்று இந்த உரையிலே சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒரு வீட்டுக்கு ரூ. 1500 வீதம் என்று பார்த்தாலும், என்ன செலவாகும் என்று பெருக்கிப் பாருங்கள். எவ்வளவு பணம் தேவை? அந்தப் பணத்திற்கு எங்கே இருக்கிறது ஆதாரம்? அதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று இந்த உரையில் சொல்லியிருந்தால் நம்பலாம், கவர்னர் உரையில் கவர்ச்சிகரமான திட்டமாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது, அதை நடைமுறையில் செயல்படுத்த முடியுமா என்ற ஐயப்பாட்டுக்கு இடம் இருக்கக்கூடாது. ஏறத்தாழ இப்போது இருக்கிற திட்டங்களைச் செயல்படுத்தவே 1050 கோடி ரூபாய் செலவாகும் என்ற பட்சத்தில், தொழில் வளர்ச்சிக்கும், மற்ற பல

திட்டங்களுக்கும், இதுபோன்ற வீடு கட்டும் திட்டங்களுக்கும் பணம் எங்கே இருக்கிறது என்று தெரிவிக்க வேண்டும்? நாம் கடன் வாங்கப் போகிறோமா, இல்லை புதிய வரிகள் விதிக்கப்போகிறோமா என்று தெரிவிக்க வேண்டும்.

நமது பிரதம மந்திரி அவர்கள் தொழில் துறையைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில், பலவகையிலும் நிதியைத் திரட்ட வாய்ப்பு இருக்கிறது. கடன் வாங்கலாம், பல ஆதாரங்களிலிருந்து நிதி திரட்டலாம் என்று உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு தொழிலும் சுய சார்பு நிலைமையை மேற்கொண்டு தங்கள் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொண்டால், தங்களது தேவையைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ளலாம் என்று பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், கவர்ச்சிகரமான திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால்

Report of the Comptroller and Auditor General of India for the year 1983-84 (COMMERCIAL) -ல் தமிழ்நாட்டில் எவ்வளவு இருக்கிறது என்று சொல்லி Closing|transferring of sick units: யிருக்கிறார்கள். அதிலே

1. Die Castings, Guindy.
2. Structural Works, Ambattur.
3. Structural and Galvanizing Works, Mettur Dam.
4. Tannery, Vinnamangalam.
5. Wool Processing Centre, Vinnamangalam.
6. Machine Shop, Ambattur.
7. Foundry, Katpadi.
8. Engineering and Lock Works, Dindigul.
9. Forgings, Guindy.
10. Farm Implements Unit, Tiruchirappalli.
11. Enamelled Wires, Guindy.
12. Foundry and Heavy Machine Shop, Erode.
13. Sheet Pressing Works, Guindy.





Government's decision in this regard was awaited.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது எதற்காக? இவையெல்லாம் சரியாக பராமரிக்கப்படவில்லை. தனியாரிடம் விட்டுவிடுவது நல்லது. அவர்கள் பரிந்துரை செய்திருக்கின்றார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த அளவிலே பொதுத் துறை நிறுவனங்கள் எல்லாம் நடந்துகொண்டு வருகின்றன. 'டான்சி'-ஐப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை.

(பிற்பகல் 12-30)

### 5. 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை மதிப்பீட்டிற்கான விவர அறிக்கையை அளித்தல்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையை அளிப்பார். பிறகு 1979-80 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள். பிறகு ஆளுநர் உரைமீது விவாதம் தொடரும். மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1985-86 ஆம் ஆண்டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 76.13 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இப்போது வைக்கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு, வருவாய்க் கணக்கின் கீழ் ரூ. 60.21 கோடி நிதி ஒதுக்கத்திற்கும், மூலதன, கடன் கணக்கின் கீழ் ரூ. 15.92 கோடி நிதி ஒதுக்கத்திற்கும் வகை செய்கிறது.

2. 1985-86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்துக்கும் போதிய நிதி ஒதுக்கம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திற்கும் நிதி ஒதுக்கம் செய்ய போதிய எச்சரிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டதால், ஒரு சில வளர்ச்சித் திட்டங்களே

இத்துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகின்றன. எனினும் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஒருசில முக்கியமான செலவினங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

3. தமிழ்நாடு அரசு, தனது பணியாளர்களின் ஊதிய வீதங்களைத் திருத்தியமைப்பது பற்றி ஆராய, தமிழ்நாடு நான்காவது ஊதியக் குழுவை நியமித்தது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு பணியாளர்களின் ஊதிய வீதங்களையும் ஏனைய படிகளையும் திருத்தியமைத்து அரசு ஆணைகள் பிறப்பித்தது. இவ்வகையில் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 90 கோடியாகும். இந்த ஆணைகளின் காரணமாக அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்த ஊதிய நிலுவைகளைக் கொடுப்பதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 34 கோடி முன்பணம் அனுமதிக்கப்பட்டது. 'பல்வகை' என்ற மானிய கோரிக்கையின் கீழ் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கம் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளதால், அடையாள நிதி ஒதுக்கம் இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு பிரிப்பதற்காக, பல்வேறு துறைகளில் கூடுதல் பதவிகளை ஏற்படுத்தவும் அலுவலகக் கட்டிடங்கள் முதலியனவற்றைக் கட்டவும் அனுமதியளித்து பல்வேறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வகையிலான செலவு ரூ. 1.16 கோடி இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கூட்டுறவுத் தலைமைச் சங்கங்கள், மற்றும் இணைப்புச் சங்கங்கள் ஆகியவை தங்களுடைய பங்கு மூலதனத்தை வலுப்படுத்திக்கொள்ள அவற்றின் தொடக்க உதவித் தொகைக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 3.63 கோடி முன்பணத்தை அரசு அனுமதித்துள்ளது. இத் தொகை இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. அரசால் எடுத்துக்கொள்ளப்பட்ட மதுரை சர்க்கரை ஆலை உற்பத்தி செய்துவரும் சர்க்கரையின் மதிப்பு, இருப்பு மதிப்பு, நிலையான இருப்புகளின் மதிப்பு ஆகியவை தொடர்பாக, மதுரை சர்க்கரை ஆலைக்கு தமிழ்நாடு சர்க்கரை உற்பத்திக் கழகம் தொகை கொடுப்பதற்கு ஏதுவாக அரசு, தமிழ்நாடு சர்க்கரை உற்பத்திக் கழகத்தில் ரூ. 1.68 கோடி பங்கு மூலதன முதலீடு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.



7. அரசு மானியம் பெறும் கல்லூரிகளில், ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் அரசு வழங்கியுள்ளது. முதற்கண் இச் செலவுக்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 54.30 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. அரசு, புதிதாக 85 உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. மேலும், 1985-86 ஆம் ஆண்டிலிருந்து 38 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியுள்ளது. இவ்வகையிலான செலவு ரூ. 89.97 இலட்சம் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. பொது விநியோக முறையின் கீழ் பங்கீட்டு அட்டைகளின் பேரில் உயரளவு 20 கிலோ அரிசி வாங்குகிறவர்களுக்கு இலவசமாக ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை 15—9—1984-லிருந்து செயற்படுத்த, அரிசி விலையில் 90 சதவீதமாக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 70 இலட்சம் முன்பணம் வழங்கியுள்ளது.

10. சட்டம்-ஒழுங்கை மேலும் சிறந்த முறையில் நிலைநிறுத்த சென்னை, ஆவடியில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாற்றில் மற்றொன்றுமாக இரண்டு காவல் அணிகளைக் கூடுதலாக தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான செலவு மதிப்பீடு ரூ. 2,87,80,000. இது தொடர்பாக முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 1,27,95,000 முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 12-35)

11. 1985 நவம்பர் திங்களில் சென்னை மாநகர், செங்கற்பட்டு, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. அப்பகுதி மக்களுக்குச் சொல்லொணாத் துயரமும் கடும் சேதமும் ஏற்பட்டன. அம்மக்களின் துயர் தணிக்கவும் சேதங்களைச் செப்பனிட்டு செம்மையுறச் சீர்திருத்தியமைக்கவும், பல்வேறு நிவாரண, மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ. 66.81 கோடி செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. சாலைகள், மழை நீர் வழிந்தோடும் குழாய்கள் ஆகியவற்றைச் செப்பனிட சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட ரூ. 15.16 கோடியும் பாசன வாயில்களைப் பழுதுபார்க்க அனுமதிக்கப்பட்ட ரூ. 8.00 கோடியும், அரசுச் சாலைகளைச் சீரமைத்திட அனுமதிக்கப்பட்ட ரூ. 8.98 கோடியும், துயர் தணிப்பு வகையில் அனுமதிக்கப்பட்ட கருணைக் கொடை ரூ. 17.42

கோடியும் இத்தொகையில் அடங்கும். துணை மதிப்பீட்டில் இவ்வகையில் மொத்தம் ரூ. 47.28 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை அந்தந்த மானிய கோரிக்கைகளின்கீழ் ஏற்படும் மீதங்களை மறு நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் செலவிடப்படும்.

12. 1985 நவம்பரில் இதுவரை காணாத அளவுக்கு பெய்த மழையால் பாதிக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோர் உட்பட பி, சி, டி நிலை அரசுப் பணியாளர்களுக்கு வெள்ளத் துயர் தணிப்பு முன்பணமாக அரசு அனுமதித்துள்ளது. இத்தொகையும் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. அரசுப் பணியாளர்களில் பல்வேறு பிரிவினருக்கு, அவர்களின் ஊதிய வீதங்களைப் பொறுத்து மொத்தத் தொகை ஒன்றை அரசு அண்மையில் வழங்கியுள்ளது. இதனால் மொத்தம் ரூ. 22 கோடி செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடையாள நிதி ஒதுக்கம் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் அனைத்துக்கும் முழுநிதி ஒதுக்கம் 1985-86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது என்பதை நான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன். எனினும், சில செலவினங்கள் முற்றிலும் எதிர்பாரா வகையில் ஏற்பட்டன. இவற்றுக்கான அனுமதி பின்னரே வழங்கப்பட்டது. இவை இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களை அரசு செவ்வையான முறையில் செயற்படுத்திட, இத்துணை மதிப்பீடுகளுக்கும், தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டி அமர்கிறேன்.

வணக்கம்.

## 6. 1979-80 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகளை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1979-80 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளில் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்களுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.



2. 1984-85 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழு, 1979-80 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்து, சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட அதிகச் செலவாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவு ஆனதற்கான காரணங்களை ஆய்வு செய்த பிறகு ஒவ்வொரு மானியத்தின்கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாக ஆகியுள்ள செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவையில் வைத்து ஒப்புதல் பெறுமாறு பொதுக் கணக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, 1979-80 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகள் இப்பொழுது அவையில் வைக்கப்படுகின்றன. 'வீட்டு வசதி', 'சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து', 'ஓய்வூதியங்கள்—ஏனைய ஓய்வுக் கால நன்மைகள்', 'மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்' ஆகிய தலைப்புகளின்கீழ் 1979-80 ஆம் ஆண்டில் மொத்தத்தில் ஆன மிகைச் செலவு ரூ. 11.69 கோடியாகும்.

3. நிதியாண்டு முடிவடையும் நாளன்று "குடிசைப் பகுதி மேம்பாட்டு விரைவுத் திட்டங்களைச்" செயல்படுத்துவதற்காகக் குடிசை மாற்று வாரியத்திற்கு ரூ. 1.00 கோடி தொகை அனுமதிக்கப்பட்டதாலும், '38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பு, கருவிகள்—தளவாடங்கள்' என்ற மானியத்தின் கீழான சில செலவுகள் மறு வகைப்பாடு செய்யப்பட்டதாலும், 'வீட்டு வசதி' என்பதன்கீழ் தவிர்க்க முடியாத நிலையில் மிகைச் செலவு ஏற்பட்டது.

4. பங்கு மூலதன முதலீட்டுத் தலைப்பின்கீழ் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 3,83 இலட்சம் வழங்க தவறாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டதால், இந்த மானியத்தின்கீழ் தொகை மிகையாக இருந்த காரணத்தால் "சாலைப்போக்கு வரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. ஓய்வூதியம் பெறுபவர்கள் காலதாமதமாகத் தொகைகளைக் கோரியதாலும், மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின்கீழ் பிற மாநிலங்களிலிருந்து அதிக அளவில் கோரிக்கைகள் வந்ததாலும் "ஓய்வூதியங்கள்—ஏனைய ஓய்வு கால நன்மைகள்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. அரசுப் பணியாளர்களுக்கு வெள்ளநிவாரண முன்பணம் வழங்கியதாலும், வீடு கட்டுவதற்கான முன்பணம் வழங்கும் திட்டத்தின் கீழான அதிகாரங்களைப் பரவலாக்கியதாலும் ஏற்படக்கூடிய செலவுகளை

முன்னதாகவே மதிப்பிட முடியாததாலும் "மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவு பெருமளவு ஏற்பட்டது. மேலும், கழிவு நீரகற்றுத் திட்டங்களுக்காக 1979 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சென்னைப் பெருநகர் குடிநீர்—கழிவு நீரகற்று வாரியத்திற்கு வழங்கப்பட்ட ரூ. 15 இலட்சம் முறையான கணக்குத் தலைப்பின்கீழ் கணக்கெழுதப்படவில்லை. இவற்றால், இந்த மானியத்தின்கீழ் மொத்தத்தில் மிகைச் செலவு ஏற்பட்டது.

7. 1979-80 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான இம் மானியக் கோரிக்கைகளுக்கு இம்மன்றம் இசைவளிக்க வேண்டுகிறேன்.

(பிற்பகல் 12-40)

4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் ஆகிய பலவற்றை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. நாட்டினுடைய தொழில் துறையை வளப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் மூலமாக, நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கவும் நாம் பல முயற்சிகளை மேற்கொள்ளுகிறோம். அப்படிப்பட்ட நேரத்தில் தமிழகத்தில் பொதுத்துறையில் உள்ள நிறுவனங்கள் அனைத்துமே நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தால், நாம் எப்படி வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், மற்ற பணிகளுக்காகவும் நிதியைச் சேகரிக்கப் போகிறோம் என்பதை அவையின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அளிக்கப்பட்ட இந்த அறிக்கையின் 14 வது பக்கத்தில் அரசுத் துறையில் 21 கம்பெனிகளின் "அக்கியூமுலேடட் லாஸ்" எவ்வளவு என்ற புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் நாம் இனிமேலாவது தொழில் துறையில் மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும் என்று நினைவுபடுத்துவதற்காகத்தான். பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளை நாம் முடிந்த அளவுக்கு முடுக்கிவிட்டு, நாட்டுக்கு லாபகரமாகத் தொழில்களை இயக்கச் செய்ய வேண்டும். இதற்காக சொல்லப் போனால் அவர்களுக்கு ஒரு 'வார்னிங்', ஒரு எச்சரிக்கைகூட விட வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், 'புராகிரசி' என்கிற அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வருகிற அரசுக்குத் தக்கபடியெல்லாம் புள்ளிவிவரம் தரக்கூடியவர்கள். வருகிற அரசுகளுக்குத் தகுந்தாற்போல் தங்களை மாற்றிக் கொண்டு செயல்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தான் இந்த அறிக்கையின்படி பார்க்கும்போது, எந்த அளவுக்குத் தொழில் துறையில் மோசமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். இன்றைக்கு படித்து வேலை இல்லாத வாலிபர்களுக்கு சுய தொழிலில் வேலைவாய்ப்புத் தொடங்க 25,000 ரூபாய் கடன் வசதி செய்து தருகிறோம். . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உறுப்பினர்கள் பேசுவதற்கு இன்று இறுதியான நாள். 1 மணிக்கு அவையை முடிப்பதாக இருக்கிறது. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எனவே உறுப்பினர் அவர்கள் குறைவாகப் பேசினால், மற்றவர்களுக்குப் பேச வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் காங்கிரஸ் தரப்பிலிருந்து இப்போதுதான் நான் பேச ஆரம்பித்திருக்கிறேன். என்னைப் பேசும்போதே குறைவாகப் பேச வேண்டும், பலர் பேச இருக்கிறார்கள் என்று சொன்னால் எப்படி? மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கொண்ட நேரத்தைக் கணக்குப் பார்த்தால், நான் மிகக் குறைவான நேரம்தான் பேசியிருக்கிறேன். இருந்தாலும் அவையின் தலைவருடைய கட்டளைக்கு இணங்க விரைவில் முடித்துக் கொள்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கட்டளை அல்ல. வேண்டுகோளாகத்தான் குறிப்பிட்டேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** அடுத்து, கூட்டுறவுத் துறையில் உள்ள தொழில்கள் எல்லாம் லாபகரமாகவும் வெற்றிகரமாகவும் செயல்பட்டு வருகின்றன என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் உள்ள தொழில்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைப்பற்றி பல்வேறு ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றன. நான் எங்கள் பகுதியில் கூட்டுறவு இயக்கத்தில் நடைபெறும் ஒரு தொழிலைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்:

பெடரேஷன் ஆப் மேச் இன்டஸ்ட்ரீஸ் சர்வீஸ் என்ற அமைப்பின் கீழ் கோவாப்பரேட்டிவ்ஸ் என்ற ஒரு அமைப்பை ஆரம்பித்து அதன் கீழ் 30, 40 சர்வீஸ் கோவாப்பரேட்டிவ் சொசைடிக்கள் தீப்பெட்டித் தொழிலில் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே ஒரு 7 அல்லது 8 சொசைடிகளைத் தவிர மற்றவைகள் எல்லாம் டார்மென்ட்டாக, செயல்படாமல் இருக்கின்றன, என்பதை மிகுந்த வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு ரூ. 2000 செலவில் ஒரு செகரட்டரி, அவருக்குக் கீழே ஒரு அசிஸ்டென்ட் செக்ரட்டரி, அதற்குக் கீழே போர்டு ஆப் டைரெக்டர்ஸ் என்று போட்டும் அந்தப் பெடரேஷன் சரியாக வேலை செய்யாமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில், 1983 ஆம் ஆண்டி லேயே கூட்டுறவு இயக்கத்திற்கான சட்டத்தைத் திருத்தியிருக்கிறோம். அதன் அடிப்படையில் விரைவில் கூட்டுறவு இயக்கங்களுக்கும் அமைப்பு களுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். 1983 ஆம் ஆண்டில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டும், அதன் கீழ் தேர்தல் நடத்துவதற்கான விதிமுறைகள் இன்றுவரை வகுக்கப்படவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். அப்படி விதிமுறைகளை வகுக்க நமது அதிகாரிகளுக்கு 2 வருஷம் தேவைப்படுகிறதா என்று நான் அறிய விரும்பு கிறேன். கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு விதிமுறைகளை வகுப்பதிலே அவ்வளவு கஷ்டம் இருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன். இவ்வாறு எதற்கெடுத்தாலும் காலம் தாழ்த்திக் கொண்டே தேர்தல்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருப்பது நல்லதல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் என்பது மக்கள் மக்களுக் காக இயக்கும் அமைப்புகளைக் கொண்ட இயக்கம். மக்களுடைய மேற் பார்வையில் அவர்களாகவே தங்களுடைய நல்வாழ்வுக்கான முறையில் தங்களின் பணிகளுக்காக நடத்திக் கொள்ளும் அமைப்புகள். மக்கள் எவ்வாறு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கற்றுத் தருகிற இயக்கம். காந்தியடிகள் கண்ட இயக்கம் அது. மக்களை முழுமையாக ஈடுபடுத்தி சுய நம்பிக்கையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் கூட்டுறவு இயக்கங்கள் ஏற்பட்டன. அந்தக் கூட்டுறவு இயக்கத்தில் மூன்று பிரைமரி சொசைட்டிக்கு ஒரு ஜூனியர் இன்ஸ்பெக்டர் என்ற வீதத்தில் தொள்ளாயிரம் இன்ஸ்பெக்டர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். அரசு அதிகாரிகளே இவற்றை எடுத்துக் கொள்வதென்றால், கூட்டுறவு இயக்கமே வேண்டாம் என்பதுதான் இந்தத்



தரப்பிலேயிருந்து நான் விடுக்கும் வேண்டுகோள். கூட்டுறவு இயக்கம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு அந்தக் கூட்டுறவு சொசைட்டிகளில் காலா காலமாக அரசுத் தரப்பிலேயிருந்து அதிகாரிகளே நியமிப்பது என்பது நல்லதல்ல, வரவேற்கத் தக்கதல்ல என்பதை வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, விரைவில் கூட்டுறவு இயக்கங்களின் தேர்தலை நடத்துங்கள்.

(பிற்பகல் 12-45)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அடுத்து, ஏர் பொல்யூஷன், வாட்டர் பொல்யூஷன் ஆகியவற்றைத் தடுத்தா லொழிய, மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வு இல்லை என்பதை பல தடவை சொல்லியிருக்கிறோம். ஆலங்குளம் சிமெண்ட் ஆலைப் பகுதியில் இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் எலக்ட்ரோஸ்டெட் பிரசிபிடேட்டர் பொருத்தினால்தான், அந்த ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தூசி பறந்து சென்று, பயிர்கள் பாழ்படுவதைத் தடுக்க முடியும், நிலத்தை நன்றாக வைத்துக் கொள்ள முடியும். இவற்றைக் கட்டுப்படுத்த தூசி தடுப்பான் கருவி பொருத்த வேண்டும் என்று கேட்டபோது, அதற்கு ஆவன செய்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். சிமெண்ட் கார்ப்பரேஷன் தலைவரை இதுபற்றிக் கேட்டபோது, அதற்கென்று தனியாக ஒரு ஜென ரேட்டர் வைக்க வேண்டும் என்றும், அதற்கு 15 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும், இதைப் பொருத்தினால்தான் தூசி தடுப்பான் கருவி சரியாக வேலை செய்யும் என்றும், மின்சாரத்தை நம்பிக் கொண்டிருந்தால் இந்தக் கருவி சரியாக வேலை செய்யாது என்றும் சொன்னார். மேலும் அதற்காக 15 இலட்சம் ரூபாயில் ஜெனரேட்டர் இறக்குமதி செய்ய ஆர்டர்ஸ் கொடுத்து விட்டோம் என்று 6 மாதங்களுக்கு முன்பு சொன்னார்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரமாக முடிக்க வேண்டும்.

திரு. ஏ. ஜே. தாஸ்: மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் உறுப்பினர் பேசும்போது தடை செய்வது நல்லதல்ல. ஏற்கெனவே சிலர் முக்கால் மணி நேரம் பேசியபோது தடை செய்யவில்லை. இப்போது தடை செய்வது உசிதமல்ல.

திருமதி வி. ஜெயலட்சுமி: ஏற்கெனவே வீண் வாதங்களில் அதிக நேரம் ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து நாட்களாக இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வேண்டும் என்று எண்ணுகிறவர்கள் முன்பே கேட்டு பேசியிருந்தால், நேரப் பிரச்சினை வந்திருக்காது. இன்றைக்கு இறுதியாக முடித்தாக வேண்டும். மேலும் இன்று மாலை நான்கு மணிக்கு மீண்டும் அவை கூடியாக வேண்டும். ஆகவேதான் நேரத்தைப் பற்றிய கவனம் இந்த அவையில் இப்போது வருகிறது. மற்றவர்கள் பேசுகின்றபோது எப்படியோ வாதங்கள் நீண்டுவிடுகிறது. அதற்கு வீணான வாதங்கள் என்று பெயர் தந்துவிடக் கூடாது. ஆகவே காங்கிரஸ் கட்சியின் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்பது எண்ணமல்ல. முன்பே பேச வேண்டும் என்று விரும்பியிருந்தால், இன்னுமொருவர் கூட பேசியிருக்கலாம்.

**திருமதி வி. ஜெயலட்சுமி:** கடந்த 3 நாட்களாக நான் என்னுடைய பெயரைக் கொடுத்து வருகிறேன். நேற்றும் என் பெயர் இருந்தும், ஆளும் கட்சி உறுப்பினர் திரு. சுப்பு பேசுவதாக இருந்தது என்று சொல்லி அவரை நேற்று பேச விட்டார்கள். சரியென்று நான் இருந்தேன். இன்றைக்குக் கேட்டபோதும், தலைவர் அவர்கள், துணைத் தலைவர் பேசும்போது தான் ஆசனத்தில் இருக்க வேண்டும் என்பதால், துணைத் தலைவர் முதலில் பேச வேண்டும் என்றும் பிறகு நான் பேசலாம் என்றும் சொன்னார்கள். ஆகவே நான் தொடர்ந்து பெயர் கொடுத்து வந்திருக்கிறேன். மேலும் எங்கள் கட்சியின் கொறடா என்ற முறையில் நான் இருக்கிறேன். கொறடாவாகையால் நான் சரியான முறையில் என்னுடைய பெயரைக் கொடுத்தும், இன்றைக்குத்தான் பேச வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். அதன் இடையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பத்து நிமிடங்கள் எடுத்துக் கொண்டார்கள். ஆகவே தயவு செய்து என்னுடைய நேரத்தை கட்-ஷார்ட் பண்ண வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும் பொறுப்பான உறுப்பினர் என்பதால் சீக்கிரமே முடித்துவிடுகிறேன்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினையைப்பற்றி பேரவையில் நேற்றும் இன்றும் நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து டி.எம்.சி. தண்ணீர் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். சனவரி 25 ஆம் தேதி கர்நாடகா மேலவையில் அதன் உறுப்பினர் திரு. சாமன்னா அவர்கள் கர்நாடகா நீர்ப்பாசன அமைச்சர் திரு. தவே கௌடா அவர்களை, "15 டி.எம்.சி. கொடுப்பதாக ஒத்துக்கொண்டீர்களா?" என்று கேட்ட கேள்விக்கு, 'தமிழகத்திற்குத் தண்ணீர் கொடுப்பதாக ஒப்பந்தம் கிடையாது'





என்று அவையிலே மறுத்திருக்கிறார். இங்கே மின்சாரத்திற்குப் பதிலாக பண்ட மாற்று முறையில் தண்ணீர் வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். பேரவையிலேயும் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் தெளிவுபடுத்த வேண்டுமென்று சொல்கிறேன். ஆரம்பக் கட்டத்திலே இந்த ஆண்டிலே ஏற்பட்ட மழை குறைவின் காரணமாக, பருவநிலை காரணமாக தஞ்சை மாவட்டத்திலே குறுவை, சம்பா பயிர்கள் விதைக்கப்பட்ட 11 இலட்சம் ஏக்கர் பாதிக்கப் படும் என்று கருதி 30 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்று முதலில் கேட்டு, இரண்டு, மூன்று மாதம் ஐந்து டி.எம்.சி. என்று கொடுத்தார்கள். பிறகு ஐந்து டி.எம்.சி. தண்ணீர் கொடுத்த பிறகு அவர்களை பெங்களூரில் சந்தித்துக் கேட்டபோது, பரிசீலிக்கிறோம் என்றார்கள். கடைசியிலே

(பிற்பகல் 12-50)

நாம் வற்புறுத்திய பிறகு 5 டி.எம்.சி. தந்தார்கள். மேலும் ஒரு 10 டி.எம்.சி. வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தோம். அவர்கள் தருகிறோம் என்று ஒத்துக்கொண்டார்கள் என்று நாங்களும் சொல்லவில்லை, அவர்களும் சொல்லவில்லை. பரிசீலிக்கிறோம் என்று தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கே அவர்கள் சொன்னார்கள். 21 மாவட்டங் களில் 17 மாவட்டங்களில் கடுமையான வறட்சி இருக்கின்றது என்றும் தங்களுக்கே போதாது என்றும், இருப்பதைப் பகிர்ந்து தரலாம் என்றும் சொன்னார்கள். "கபினி ஆற்றிலிருந்து 5 டி.எம்.சி. தண்ணீரை திறந்து விடுகின்ற நிலை ஏற்படுமானால், எங்களுக்கு இன்று உற்பத்தியாகின்ற மின்சாரம் அதனால் தடைப்படுகிறது என்று சொன்னபோது, அதைத் திறந்துவிடுவதன் மூலம் 4, 5 மாதம் வைத்திருந்தால்தான், மெல்ல மெல்ல, கொஞ்சம் கொஞ்சமாக விட்டால்தான் போதுமான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். ஒரே தடவையாக திறந்துவிட்டால், எங்களுக்கு மின்சாரம் இழப்பு ஏற்படும்" என்று சொன்னார்கள். "மின்சார இழப்பு எவ்வளவு ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு ஈடுகட்டிவிடுகிறோம். தண்ணீர் விடுங்கள் என்று பார்ட்டர் முறையில் அல்லது தண்ணீருக்குப் பதிலாக மின்சாரம் ஈடுகட்டுகிறோம்" என்றும் சொல்ல வில்லை. தண்ணீர் தர வேண்டும் என்று சொன்னோம். தண்ணீரைத் தந்தார்கள். அதற்கு நாம் நன்றியை இந்த உரையிலே தெரிவித்திருக்கிறோம். மேற்கொண்டு 10

டி.எம்.சி. கேட்டோம். ஒரு வாரகாலமாக ஓரளவிற்கு மழை பெய்திருப்பதன் காரணமாக, குறைந்தது 5 டி.எம்.சி. வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அங்கே அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லி யிருக்கின்றார்கள். அவர்கள் அப்படிச் சொன்னாலும்கூட, நாமும் வற்புறுத்தி கொடுக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கேட்போம். அவர்கள் பரிசீலிக்கிறோம் என்று சொன்னதன் அடிப்படையிலே, மீண்டும் செய்வார்களா என்பதைப் பார்க்கலாமே தவிர வேறல்ல. வேறு எந்த நிலைமைக்கும் நாம் வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் இப்போது இதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. ஜெயலட்சுமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். காவிரிப் பிரச்சினைபற்றிச் சொல்லும்போது, அந்தப் பிரச்சினை ஒரு கட்சிப் பிரச்சினையோ, அரசினுடைய பிரச்சினையோ அல்ல, அது தமிழக மக்களுடைய பிரச்சினையாகும். தமிழகத்தினுடைய மாவட்டமான தஞ்சை மாவட்டம், வறட்சி மாவட்டமாக இருக்கின்றது. தஞ்சை மாவட்டம் நெல் களஞ்சியம் என்று சொல்லப்படுகின்ற மாவட்டம். அதுவும் மழை பொய்த்து விட்டால் என்னவாகும் என்ற அளவில்தான் முழு விவரம் வேண்டும் என்று கேட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்த அரசிலே எதற்கெடுத்தாலும் போராட்டங்கள் மூலமாகவும் தர்ணாக்கள் மூலமாகவும் தான் நடக்குமோ என்ற தப்பான அபிப்பிராயம் இருந்து கொண்டிருக்கின்றது. அந்த நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. குறிப்பாக ஆசிரியர் போராட்டத்தை நாடு தழுவிய ஆசிரியர்கள் போராட்டமாக அவர்கள் நடத்திக்கொண்டு வந்தார்கள். ஆசிரியர்கள் "நாங்கள் அறப்போராட்டமாக நடத்திக்கொண்டு வந்தோம்" என்று பெருமையாகச் சொன்னார்கள். அவர்கள் அறப்போராட்டமாகத்தான் நடத்த வேண்டும். ஏனென்றால் நாட்டையே வழி நடத்திச்செல்கின்ற பிரஜைகளை உருவாக்கும் அவர்கள் போராட்டத்தை வன்முறையில் நடத்தக்கூடாது. அது நன்றாக இருக்காது. அவர்கள் அறப்போராட்டமாக நடத்தியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, ஆசிரியர்கள் பிரச்சினையைக் கொஞ்சம் காலாகாலத்தில் கவனித்திருந்தால், இவ்வாறு 35 நாட்கள், 40 நாட்கள் பள்ளிச் சிறுவர்கள் பள்ளிக்கூடங்களுக்குப் போகாமல் வீதிகளிலே சுற்றித் திரியவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. காலம் தாழ்ந்து அவர்களுக்கு நன்மை கொடுக்கின்ற வகையிலே செய்திருக்கிறார்கள். ஒன்-மேன் கமிஷனில் என்ன கோரிக்கைகள் வைத்திருக்கின்றார்கள், அதன் மீது



அரசினுடைய சிபாரிசுகள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் ஒன்றும் தெரியவில்லை. அதைப்பற்றிச் சிந்தித்துப்பார்த்தால், மீண்டும் அந்த ஸ்ட்ரைக் தொடர்ந்துவிடுமோ என்ற கருத்து இருக்கின்றது. நான் அரசைக் குற்றம் சொல்வதாகக் கொள்ளக்கூடாது. அரசுத் தரப்பிலே இதற்கு முன் அமைத்த கமிஷன் ரிப்போர்ட்டுகள், அது ஒன்-மேன் கமிஷனாக இருந்தாலும் சரி, பே கமிஷன் ரிபபோர்ட்டாக இருந்தாலும் சரி, அதுபற்றித் தெரிவிக்கப்படவில்லை. அம்பாசங்கர் கமிஷன் ரிப்போர்ட் என்பதுபற்றி தெரியவில்லை.

அடுத்து, விவசாய விளைபொருள்கள் பிரச்சினைகளைப்பற்றி ஆராய வேண்டும் என்று ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராகக் கொண்ட, மூனு ஆதி அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிஷன் பரிந்துரை என்னவாயிற்று என்று தெரியவில்லை. விவசாயிகளுக்கு ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டபோது, அதற்கும் இந்த அரசு மௌனம் சாதித்துக் கொண்டு வருகின்றது. விவசாயிகளைப்பற்றிப் பேசும்போது, எல்லோரும் நாராயணசாமி கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணக்கூடாது. நானும் விவசாயக் குடும்பத்தில் பிறந்து வந்தவள்தான். இன்றைக்கு விவசாயம் நலிந்த திசையில் போய்க்கொண்டிருக்கின்றது. விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறை கடன் கொடுப்பதோ அல்லது நிலத்தடி நீர் ரேட் சப்சிடியில் வைப்பதோ இப்படி எந்தெந்த வகையிலே சலுகைகள் தரமுடியுமோ அதையெல்லாம் கொடுக்க வேண்டும். எவ்வாறெல்லாம் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்க முடியுமோ அவைகளைச் செய்து விவசாயிகளுக்கு நண்பனாகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-55)

அடுத்து, எனக்கு உயர்நீதி மன்றத்திற்குப் போக வேண்டிய தேவை ஏற்பட்டது. அங்கே சென்றிருந்தபோது, அங்கேயுள்ள வழக்கறிஞர்கள் ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் 10 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நேற்று பத்திரிகையில் படித்ததாக ஞாபகம். சட்ட அமைச்சரவர்கள், சீஃப் ஜஸ்டிஸ் அவர்களைச் சந்தித்துப் பேசியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களுடைய கோரிக்கைகளை உரிய நேரத்தில்ஆராய்ந்து, நல்ல முடிவை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஸ்டிரைக், தர்ணா என்ற முடிவுக்குச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தமிழகத்தில் அமைதியை நிலைநாட்ட, தமிழகத்தில் நல்ல திட்டங்களை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு 'கன்ஸ்டிரக்டிவ் அப்போசிஷன்' என்ற முறையில் நாங்கள் உறுதுணையாக இருப்போம். ஒருசில

(திருமதி வி. ஜெயலட்சுமி) [1986 ஜனவரி 24

குறைகளை நாங்கள் சொன்னால், அவைகளைத் தவறாகக் கருத வேண்டாம். உங்கள் நண்பனாக இங்கே இருக்கிறோம். எங்கள் கட்சியின் சார்பில் ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்லவும், ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு ஆதரவும் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோமென்று சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடிக்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** மேலவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

**(பிற்பகல் 12-50)**

மீண்டும் பிற்பகல் 4-00 மணியளவில் மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

7. மேலவை விதி 82-ன் கீழ் அறிக்கை.

உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்த அறிக்கை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் நலன் கருதி, உள்ளாட்சித் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யும் இறுதிநாள் முன்பு அறிவிக்கப்பட்டிருந்த 27—1—1986-லிருந்து 30—1—1986 ஆக நீட்டிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நாளில் மாற்றம் இல்லை. அதற்குண்டான கால அட்டவணையை இப்போது இந்த அவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

தேர்தல் பற்றிய அறிக்கை முன்னமேயே 17—1—1986 அன்று வெளியிடப்பட்டுள்ளது. வேட்பு மனுக்கள் கடந்த இரண்டு நாட்களாக வாங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 23, 24 ஆகிய தேதிகளில் வாங்கப்பட்டுள்ளன. 25, 26 ஆகிய தேதிகள் விடுமுறை நாட்களாக இருப்பதால் தாக்கல் செய்ய முடியாது. எஞ்சியிருப்பது ஒருநாள்தான். கால அவகாசம் இப்போது 28, 29, 30 ஆகிய நாட்கள் வரை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்காக நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

வேட்பு மனுக்களை ஆய்வு செய்வது 31—1—1986.

வேட்பு மனுக்களை திரும்பப் பெறுதல் 3—2—1986.

இறுதிப்பட்டியல் வெளியிடுதல் 3—2—1986 மாலை 5 மணி.

வாக்குப்பதிவு நாள் 23—2—1986.

வாக்கு எண்ணிக்கை (நகராட்சிகளுக்கு) 24—2—1986.

வாக்கு எண்ணிக்கை (ஊராட்சிகளுக்கு) 25—2—1986.





**2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.**

**(2) ஆளுநரிடமிருந்து செய்தி.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

**(3) பேரவையிலிருந்து செய்தி.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1986) பிரதியினை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

**8. அரசின் சட்ட முன்வடிவு.**

**1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1986).**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

---

@ 153-174 ஆம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு எண் 16/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. மு. செ. சங்கரலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, சென்னைக் குதிரைப் பந்தயச் சங்க நிறுவனத்தை அரசு நிறுவனமாகவும், அரசுக்குக் கட்டுப்பட்ட நிறுவனமாகவும் மாற்றுவதற்கான சட்டத்தை நான் உண்மையிலேயே மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். நாட்டுடமையாக்குவதில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தாலும், முதல்படியாக அதிக வருமானம் உள்ள ஒரு நிறுவனத்தை அரசுடமையாக்குவது நியாயம்தான் என்றாலும், அதற்கான முறையான வழிவகைகள் இந்தச் சட்டத்தில் இல்லாவிட்டாலும், தனியாரிடமிருந்து அரசுக்கு வருவது நியாயம் என்ற அடிப்படையில், அதை நான் வரவேற்கிறேன் என்றாலும், அந்தச் சட்டத்தினுடைய 12வது பகுதி, இரண்டாவது நிலையில் தொழில் தகராறு சட்டத்தின்கீழ் அதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் முழுவதையும் அரசு ஊழியர்களாகவோ அல்லது நிறுவனத்தின் ஊழியர்களாகவோ கருதப்பட்டால்தான், இந்தப் பணி முழுமை பெற்றதாக இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இல்லாமல் அவர்கள் தொழில் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் ஆகமாட்டார்கள். ஆகவே அவர்களைப் பணியிலிருந்து நீக்குவதற்குக் கால அவகாசம் அளிக்கலாம் என்றும் நீதிமன்றத்திற்கோ, தீர்ப்பாயத்திற்கோ அல்லது பிற அதிகார அமைப்பிற்கோ செல்ல முடியாது என்ற நிபந்தனை நியாயமாக இருக்க முடியாது. அவ்வாறு குதிரைப் பந்தய நிறுவனத்தில் இருக்கும் ஊழலை நீக்குவதற்காகத்தான் அரசாங்கமே இந்த நிறுவனத்தை மேற்கொள்ள இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்படுகிறது. அவர்களையும் அரசு ஊழியர்களாக மாற்றுவதற்குச் சட்டம் கொண்டு வருகிற நோத்தில், அதை நியாயமான ஒன்றாகக் கருத முடியும். அரசு ஊழியர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைக் குறித்து முறைப்படி மேல்முறையீடு செய்ய என்ன வாய்ப்பு இருக்கிறதோ அதே வாய்ப்புக்கள் அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் நியாயமாக இருக்கும். எந்த இடத்தில் ஊழல்



என்று சொல்கிறோமோ, பணத்தில் மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும், அதுவும் ஊழல்தான். அந்த விதத்தில் அரசு மேற்கொள்ளும்போது, அந்த ஊழல்கள் இடம் பெறாமல் இருக்க வேண்டும். அதற்கு அரசுதான் பொறுப்பு. வேலை நீக்கம் செய்யலாம், எப்போது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம் என்பதை நீக்குவதாக இருந்தால், இந்தச் சட்ட முன்வடிவை முழுமையானதாக எடுத்துக்கொள்ள வாய்ப்பிருக்கும் என்று கூறி அமருகிறேன்.

(பிற்பகல் 4-05)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பேறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த சமயத்தில் தங்களுடைய கொள்கைகளாக மூன்று முக்கியமான கொள்கைகளை அறிவித்தார்கள். தனியார் துறை போக்குவரத்தைத் தேசிய மயமாக்குதல், சினிமாத் தியேட்டர்களை அரசுடமையாக்குதல், குதிரைப் பந்தயத்தை ஒழித்தல் ஆகிய மூன்று முக்கியமான கொள்கைகளை பேறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது நாம் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்குப் பதிலாக, அந்நிறுவனத்தை அரசே மேற்கொள்வதற்கு முடிவெடுத்து, அதற்கென ஒரு சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான நோக்கத்திலேகூட குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, குழுவில் உட்பூசல் மலிந்திருப்பதனாலும், சங்க அலுவல்கள் முறையாக நடத்தப்படவில்லை என்கிற காரணத்தினாலும், குறிப்பாக குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டச் செல்கின்றவர்கள் நலனுக்கேற்ப அது முறையாக நடத்தப்படவில்லை என்கிற காரணத்தினாலும், இந்தப் பிரச்சினைகள் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற காரணத்தினாலும்தான், இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்ற நோக்கக் காரணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டச் செல்கின்றவர்கள் நலன்களைப் பாதுகாப்பதற்காகத்தான் இந்தச் சட்ட முன்வடிவு என்று சொல்வது சரிதானா? இவ்வாறு குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுவதே தவறு, அதை ஒழிக்க வேண்டுமென்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிற நேரத்

தில் இப்படி குதிரைப் பந்தயத்தில் ஈடுபடுகிறவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக இச் சட்ட முன்வடிவைக் கொண்டுவருவோமானால், அது சரியாக இருக்குமா? இப்போது நாட்டில் இது போன்ற சூதாட்டங்கள் இன்னும் பல்வேறு துறைகளில் இருக்கின்றன. பல்வேறு வகையான சூதாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளிலும் இதுபோன்ற முறை கேடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே அதில் ஈடுபடுபவர்களின் நலனைப் பாதுகாப்பதற்காகவும் நாம் இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகளைக் கொண்டு வருவோமானால், அது நம்முடைய சில தார்மீக நெறிகளுக்கு முரணாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். அந்த வகையிலேயே இந்தச் சட்ட முன்வடிவு அமைந்திருக்கிறது என்பது எங்கள் கருத்து.

இன்றைக்குச் சமுதாய ஒழுக்க நெறிகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அரசும் பாடுபடுகிறது. சமுதாயத் தலைவர்களும் பாடுபடுகிறார்கள். அவ்வாறு இச்சமுதாய ஒழுக்க நெறிகளை நிலை நிறுத்த வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், அதற்கு எதிரான வகையிலுள்ள நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வதும் சரியல்ல. ஏற்கெனவே சிகரெட் குடித்தல் உடல் நலத்திற்குக் கேடு பயக்கும் என்று விளம்பரப்படுத்திக் கொண்டே சிகரெட் விற்பனை விளம்பரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபோல் குடி குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல்நலத்தைக் கெடுக்கும் என்று விளம்பரம் செய்துகொண்டே அதையும் நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். ஆக இப்போது நாம் குதிரைப் பந்தயத்திலே ஈடுபட்டிருக்கிறவர்களின் நலனைப் பாதுகாப்பதற்கென்று இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இத்தகைய செயல்களுக்கு அரசாங்கம் ஊக்கமாக இருக்கிறது என்கிற நிலைமை இருக்குமேயானால், மாணவர் சமுதாயம் மிகவும் மோசமான நிலைக்குப் போய்விடும். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது, இன்றைய சமுதாயத்தின் மனப்பான்மையை மிக அழகாகச் சொன்னார்கள். வருங்கால சமுதாயத்தைப் பாதுகாக்க வேண்டுமென்கிற நோக்கம் உண்மையில் நமக்கு இருக்குமானால், குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் தான் நாம் ஈடுபட வேண்டுமே யொழிய, நாமே அதை நடத்துவதென்பது சரியான முடிவாக இருக்காது என்பதை தெளிவாகவும் அழுத்தந்திருத்தமாகவும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் வரவேற்கவில்லை.





ஏனென்றால் நான் குறிப்பிட்டதைப்போல, வளர்ந்து விட்ட நாம் ஒரு வழியாகப் போய்விட்டோம். வருங்காலத்தைப் படைக்க இருக்கிற மாணவர்கள் சரியான பாதையிலே, சரியான ஒழுக்க நெறியிலே வளர்க்கப்பட வேண்டுமென்றால், இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகள் வரக்கூடாது என்று வலியுறுத்த விரும்புகிறேன். மாறாக குதிரைப் பந்தயத்தை ஒழிக்க

முன்பு ஒரு தடவை ஒழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, பாதிக்கப்பட்டவர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அது என்ன ஆயிற்று என்பது தெரியாது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

(பிற்பகல் 4-10)

அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே எடுக்கப்பட்ட பாலிசியின் நிலை, அது கோர்ட்டிலே இருக்கிறதா அல்லது வாபஸ் பெறப்பட்டு விட்டதா என்பதைப்பற்றி சட்ட அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது எப்படி இருந்தாலும், இதை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக அந்த நோக்கத்திற்கேற்ப, குதிரைப் பந்தயத்திலுள்ள தவறுகளையும், ஊழல்களையும் சரி செய்வதற்கு ஒரு 'ரெகுலேஷன்' செய்திருக்கலாம். அதுகூடத் தவறுதான். அதைச் சரியாக்குவதற்காக ஒரு 'ரெகுலேஷன் ஆக்ட்' என்று கொண்டு வந்திருந்தால், அதற்காக ஒரு நியாயம் கூட கற்பித்துப் பேச முடியும். இதை அரசே ஏற்று நடத்துவது என்பது பல பேர்களுடைய கடுமையான விமர்சனத்திற்கு ஆளாக்கப்பட்டு விடும். இதற்கென்று அங்கிருக்கிற ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவார்கள். இதற்கென்று தனியாக அரசு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள். குதிரைப் பந்தய சூதாட்டத்தை நடத்துவதற்கு கண்காணிப்பதற்கு தனி அதிகாரிகள், தனி அரசு ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட ஒரு சூதாட்டத்தை ஏற்படுத்துவது என்பது ஒரு தவறான முன்னுதாரணமாகு மென்று எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். நான் ஒட்டுமொத்தமாக இந்த அரசைக் கேட்டுக்கொள்வது இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக இதை ஒழுங்குபடுத்தும் சட்டமாக, ரெகுலேஷன் ஆக்ட் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வந்தால் ஓரளவுக்கு நியாயம் கற்பிக்கலாம். இன்னும் சொல்லப்போனால் இப்போது இருக்கின்ற சட்ட முன்வடிவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி பரிசீலிக்க வேண்டும். இது சர்ச்சைக்குரிய பிரச்சினையாக

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 ஜனவரி 24

இருக்கிற காரணத்தால், செலக்ட் கமிட்டிக்கு அனுப்புவது நல்லது என்ற கருத்தைச் சொல்லி, அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, அமருகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை வரவேற்கின்ற வகையில், சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில், அதை முறைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தச் சட்ட முன்வடிவை இன்றைக்கு அறிமுகப்படுத்துவதன் மூலமாக, பாதிக்கப்பட்டிருக்கிற ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வுக்கு ஒரு பாதுகாப்பு தருவதற்காக இன்றைக்கு இந்த நிலையை அரசு எடுத்திருக்கிறது. இன்றைக்கு பொதுவாக குதிரைப் பந்தயம் சில பேருடைய சொந்தச் சொத்தாக வைத்துக் கொள்ளப்பட்டு, அவர்கள் நினைத்தால், எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இருந்துகொண்டு, மிகப் பெரிய தவறுகள், எண்ணிப் பார்க்க முடியாத தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு நாள் பந்தயம் என்று சொல்லும்போது, பல கோடி ரூபாய்களை அங்கே சில பேர்களுடைய கைகளுக்கு சில கவர்கள் மூலமாகக்கூட மாற்றி விடுகிறார்கள். எப்படியோ, அரசாங்கத்தினுடைய வருவாய்க் கணக்கிலே காட்டுவதற்கு இந்தக் குதிரைப் பந்தயத்தை சாக்காக வைத்துக்கொண்டு, அதையே பல்வேறு வகையிலே, இன்றைக்கு நாட்டிலே இருக்கிற பல பண முதலைகள் வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள், அண்ணாவினுடைய கொள்கையை இந்த அரசு பின்பற்ற வேண்டுமென்று சொன்னார்கள். அண்ணாவின் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்ற உணர்வோடுதான், நீண்ட நாட்களாக இதைக் கவனித்து, அதன் அடிப்படையிலே தான் முதலிலே இதை அரசினுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து பின்னர் இதை ஒழுங்குபடுத்த முடியும் என்பதனால் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவேண்டுமென்ற நிலையை எடுத்திருக்கிறோம். உங்களிலே பல பேருக்கு நினைவு இருக்கும். ஒருநாள் குதிரைப் பந்தயத்தை திடீரென்று ஒழிக்கப்போவதாகச் சொல்லி, "ஒரு பக்கத்திலே இரண்டு குதிரைகளை நிறுத்தி, கடைசியிலே குதிரைப் பந்தயத்தில் ஓடுகிற குதிரை அங்கே ஓடுகிறது, அண்ணா சாலையிலே இருக்கிற குதிரை நின்று கொண்டிருக்கிறது. கடைசியில் அந்தக் குதிரை ஓடும், இந்தக் குதிரை நிற்கும், அது வேறு இது



1986 ஜனவரி 24] [திரு. எஸ். ஆர். இராதா]

வேறு" என்று சொல்லும் நிலை வந்துவிட்டது. அந்த நிலைமைகளை எல்லாம் கவனித்து, யோசித்ததற்குப் பின்னாலே குதிரைப் பந்தயத்தை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால்தான், அதை ஒரு வழிக்குக் கொண்டு வரமுடியும்; அண்ணாவின் கொள்கையை நிறைவேற்ற முடியும் என்பதற்காகத்தான் இன்றைக்கு அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதிலே எந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. நான் அவர்களுக்குச் சொல்வதாக இருந்தால், ஒன்றைச் சொல்வேன். அதற்கு முன்னாலே நான் ஒன்றைச் சொல்வதற்காக திரு. கணேசன் அவர்கள் வருந்தக்கூடாது என்று சொல்லிவிட்டுச் சொல்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தவறு என்ற வகையிலே பொருட்காட்சி நடந்து கொண்டிருந்தது. அதைப் பல பேர் மறந்திருக்கமாட்டார்கள்.

(பிற்பகல் 4-15)

திடீரென்று பார்த்தால், ஊருக்கு ஊர் பொருட்காட்சிகள் என்று நடத்தி "தம்போலா" சூதாட்டம், ரெக்கார்டு டேன்ஸ் எல்லாம் நடக்கும். யார் நடத்துகிறார்கள் என்று பார்த்தால், அரசியல் பின்னணியில் சில பெரிய மனிதர்கள் நடத்தி வந்தார்கள். அப்படி நடத்தியவர்கள் சில மாதங்களில் லட்சாதிபதிகளாகவும் அதற்குப் பின்னாலே கோடீஸ்வரர்களாகவும் மாறி விட்டார்கள். அதை ஒழிக்க வேண்டும் என்ற முயற்சி புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் மேற்கொள்ளப்பட்டது. எனவே எந்தப் பொருட்காட்சி நடத்துவதாக இருந்தாலும், அதற்கு அரசின் அனுமதி தேவை என்று போட்டு பொதுவாக அனைத்துப் பொருட்காட்சிகளுமே சுற்றுலா வாரியத்தின் மூலமாக நடத்த வேண்டும் என்று ஆணையிடப்பட்டு, இன்றைக்கு அரசாங்கத்திற்கே பல லட்சக் கணக்கான ரூபாய் வருவாய் வருவதோடு மட்டுமல்லாமல், பல ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது. எந்தத் தவறும் நடப்பதாக யாரும் சொல்ல முடியாத நிலை இருந்து வருகிறது. அதைப் போல இன்றைக்குக் குதிரைப் பந்தயம் நடத்துவதையும் முதலில் கட்டுப்படுத்துகிற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரே நாளில்கூட நாம் இங்கே குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிடலாம். இங்கே உள்ள உயர்நீதிமன்றம் என்ன செய்யும், உச்ச நீதிமன்றம் என்ன செய்யப் போகிறது என்பதைப்பற்றிக் கலலைப்படாமல்

செய்து விடலாம். ஆனால் அடுத்த நடவடிக்கைக்கு அவர்கள் இப்போதே தயாராக இருக்கிறார்கள். இங்கே குதிரைப் பந்தயத்தை நிறுத்தினால், பக்கத்திலே உள்ள பாண்டிச்சேரியில் நடத்தலாமா அல்லது சித்தூருக்குப் போகலாமா அல்லது பெங்களூருக்குப் போகலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சென்று நடத்தத் தயாராக இருக்கிறார்கள். இங்கே இருக்கிற குதிரைகள் அங்கே போகும், இங்கே இருக்கிற பணமும் அங்கே போகும். நாம் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. அதற்குப் போகிறவர்கள் யார் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை. அந்த நிலையில் அவர்கள் போகிறார்கள். சூதாடுகிறவர்கள் யார் என்றே தெரியவில்லை. அவர்களைக் கண்டுபிடிக்கவே கஷ்டமாக இருக்கும்போது, முதலில் இவர்களைக் கட்டுப் படுத்துவதுதான் சரியாக இருக்கும். அப்போதுதான் ஆடுகிறவர்கள் யார் என்று தெரியும். அந்த வகையில்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. சமூக நலத்திற்காக எத்தனையோ காரியங்களைச் செய்யலாம். நாம் இதைத் தமிழ் நாட்டில் செய்து விடலாம். தமிழ்நாட்டில் நாம் செய்துவிட்டாலும், பரவிக் கிடக்கிற இந்தியாவில் இந்தத் தவறுகள் எல்லாம் தொடர்ந்து நடக்கிறபோது, நாம் அத்தனையையும் போய் நிறுத்த முடியாது. இங்கே நாம் பரிசுச் சீட்டு களைப் போடும்போது, வெளி மாநிலங்களிலிருந்து இன்னும் அதிகமாக வருகிறது. சிவகாசியில் இருக்கிற எவன் எவனோ எல்லாம் அச்சடித்து வெளியே விடுகிறான். அதை வாங்கினால் பரிசு வருமா வராதா என்று யாருக்கும் தெரியாது. விழும் விழும் என்று அவன்தான் விழுந்து கொண்டிருக்கிறான். ஒரு ரூபாய்க்கு பரிசுச் சீட்டு வாங்கினால் ரூ. 10 லட்சம் கிடைக்கும் என்று வாங்குகிறார்கள். சிவகாசிக்காரன் அடித்ததையெல்லாம் வாங்கி நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கட்டுப்படுத்த யார் சட்டம் செய்வது என்று தெரியவில்லை. எனவே இந்த வகையில் குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரையில், தவறுகளைக் களைய வேண்டும், கட்டுப் படுத்த வேண்டும், ஒழிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். சாதாரணமாக வீட்டில் உட்கார்ந்து கொண்டு 5 பேர் சீட்டாடினால், போலீஸ்காரன் வந்து பிடித்துக் கொண்டு போய்விடுவான். கேட்டால் அது சூதாட்டம். ஆனால் பெரிய டவுன் ஹாலில் அதையே ஆடினால், அவர்களெல்லாம் பெரிய மனிதர்கள். பெரிய மனிதர்கள் என்ற காரணத்திற்காக அவர்கள் சீட்டாடலாம். சாதாரண ஏழை எளியவர்கள் என்பவர்கள் மாத்தடியிலோ அல்லது வீட்டிலோ



உட்கார்ந்து ஆடினால், போலீஸ் பிடித்துக் கொண்டு போய்விடும். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை ஒழித்துக்கட்ட வேண்டும், களைய வேண்டும் என்ற அடிப்படையில் இந்தச் சட்ட முன்வடிவு பயன்படும் என்ற வகையில் இதை வரவேற்று அமைகிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறிய விளக்கம் கோர விரும்புகிறேன். தமிழக அமைச்சரவையில் சில துறைகள் சில அமைச்சர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக எங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. அநேகமாக அவையின் முன்னவர் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். தற்போது சட்டமன்ற மேலவை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் அப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட்டிருந்தால் அதைத் தெரிவித்தால் தேவைக்கும் ஒரு மரியாதை இருக்கும், எங்களுக்கும் செய்தி கிடைத்ததாக இருக்கும். எனவே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் அறிவிப்பை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அது மாதிரி செய்தி ஒன்றும் எனக்கு இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தங்கள் மூலமாக அவர்களுடைய கவனத்தைத் தான் ஈர்க்க விரும்புகிறேன்.

Mr. DEPUTY CHAIRMAN: It does not form part of the Proceedings of the House.

திரு. மிசா. ஆர் கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குதிரைப் பந்தயத்தைக் கையகப்படுத்தும் சட்ட முன்வடிவின்மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதைப்போல், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் சிறந்த முறையில் நடைபோடுவதாகச் சொல்லுகிற அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டில்தான் ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டிருக்

[திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்] [1986 ஜனவரி 24

கிறோம் என்று உறுதியாகச் சொல்லிக் கொண்டிருக்கிற ஒரு அரசு, குதிரைப் பந்தயத்தைப் பொறுத்த வரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைக் கடைப்பிடிக்காது வேறு வழியில் செல்வது ஏன் என்று

(பிற்பகல் 4-20)

கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்தல் பிரகடனத்திலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள். 'குதிரைப் பந்தயத்தை ஒழிப்பேன்' என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் பிரகடனத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டு, தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்கள். இன்றைக்கு அண்ணா அவர்களுடைய வழியில் நடந்து கொண்டிருக்கிறோம், அவருடைய வழியைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த அரசு இதே குதிரைப் பந்தயத்தை எடுத்து நடத்துகிறோம் என்று சொல்லுகிறபோது உள்ளபடியே வேடிக்கையாக இருக்கிறது. அதுவும் குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்களின் நலன் கருதி அதை எடுப்பதாகச் சொல்கிறார்கள். இப்படித்தான் சாராயம் குடிப்பவர்களின் நலன் கருதி சாராயக் கடையை நடத்துவதாகச் சொன்னார்கள். இன்றைக்கு குதிரைப் பந்தயத்திற்குச் செல்லுகிறவர்களின் நலன் கருதி அரசாங்கம் நடத்தவிருப்பதாகச் சொல்கிறார்கள். குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்கள் பல்வேறு வழிகளில் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே ஏமாற்றப்படுபவர்களுடைய நலன் கருதி, இந்த அரசாங்கமே அதை ஏற்றுக் கொள்வது என்பது எந்த வகையிலும் பொருத்தமுடையதாக இருக்காது. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் உண்மையாக நடைபெறும் ஆட்சி என்றால், நிச்சயமாக குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுதான் இந்த அரசின் கடமையாக இருக்கும்.

அடுத்து, வருமானம் பெறுவதற்காக இதை ஏற்று நடத்துவதாகச் சொல்கிறார்கள். அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய மிகப் பெரிய வருமானம் பலர் கையில் சேர்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட குதிரைப் பந்தயத்தில் வரும் வருமானம் அரசாங்கத்திற்குத் தேவையில்லை. அரசாங்கத்திற்கு வருமானம் என்றால், எத்தனையோ வழிகளில் வரும். மகாராஷ்



1986 ஜனவரி 24] [திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்]

டிரா மாநிலத்தில் சிவப்பு விளக்கு என்று பகுதி வைத்து அதிலிருந்து வருமானம் பெறுகிறார்கள். வருமானம் வருகிறது என்பதற்காக சிவப்பு விளக்குப் பகுதியை இங்கே ஆரம்பிக்க முடியுமா? இதில் எல்லாம் எத்தனையோ குடும்பங்கள் நாசம் அடைகின்றன.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு தகவல் அறிய விரும்புகிறேன். மகாராஷ்டிர மாநிலத்தில் சிவப்பு விளக்குப் பகுதியின் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்றால், எப்படி வருகிறது என்பதை விளக்கினால் கேட்போருக்கு உதவியாக இருக்கும். அதனால் அரசாங்கத்திற்கு எப்படி வருமானம் வருகிறது என்று சொல்ல வேண்டும்.

திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்களுக்கு எப்படி வருமானம் வருகிறது என்று தெரியவில்லை என்றால், அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அதற்குரிய லைசென்ஸ் மூலம் வருமானம் வருகிறது. ஆகவே குதிரைப் பந்தயத்தை ஏற்று நடத்துவது என்பது அண்ணாவின் கொள்கையாக நிச்சயமாக இருக்க முடியாது என்ற அடிப்படையிலே நான் சொல்கிறேன். அதே லைசென்ஸ் முறையை வைத்துக்கொண்டு மிகப் பெரிய சிவப்பு விளக்குப் பகுதியை இங்கே கொண்டுவர முடியுமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். சமுதாயத்தில் நடைமுறையில் பத்திரிக்கையில் — குதிரைப் பந்தயத்திற்குப் போகிறவர்களின் நன்மைக்காக அரசாங்கம் இதை ஏற்று நடத்துகிறது, அதற்காக சட்ட முன்வடிவு கொண்டு வந்திருக்கிறார்கள்—என்ற செய்தியைப் படிக்கும் போது, உள்ளபடியே இந்த நாட்டு மக்கள் எள்ளி நகையாடுவார்கள். அண்ணாவின் கொள்கைக்கும் உகந்ததல்ல என்ற அந்த அடிப்படையிலே இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். எந்த அமைச்சரும் சட்ட முன்வடிவுகளை அரசாங்கத்தின் [illegible]ாக இங்கே கொண்டு வரலாம். இந்தப் பிரச்சினை,

D
V21,32'N86
N86·22
143537

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இலாக்காக்கள் அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது என்றும், சில அமைச்சர்களுக்குப் புதிய பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றும் செய்தி கிடைத்தது. மேலவை நடைபெறும் நேரத்தில் அதை அவையில் தெரிவித்தால், மேலவைக்கு மரியாதையாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தலைவருக்கும் அதுபற்றி செய்தி கிடையாது.

திரு. க. சுப்பு: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசும்போது, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துக்கு விரோதமாக குதிரைப் பந்தய சங்கத்தை கையகப்படுத்துவது சரியா என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. கணேசன் கேட்டார். 1967 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்போம் என்று சொல்லி, அண்ணா தேர்தலில் நின்று வெற்றி பெற்று ஆட்சியில் இருந்தார். ஆனால் அவர் ஒழிக்கவில்லை. அண்ணா சொன்னார். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பலவற்றைச் சொல்கிறோம். நடைமுறையில் சிலவற்றைத் திருத்திக்கொள்கிறோம். 'அடைந்தால் திராவிட நாடு, இல்லா

(பிற்பகல் 4.25)

விட்டால் சுடுகாடு' என்று சொன்னோம். திராவிட நாட்டையும் வற்புறுத்தவில்லை. சில நேரங்களிலே சில சந்தர்ப்பங்களிலே விட்டுவிடுவது, கொஞ்சம் முடிவை மாற்றிக் கொள்வது என்ற நடைமுறையில் இருக்கிறோம். உயிர் மூச்சாக திராவிட நாடு பிரச்சினை இருந்தது. ஆனால் நாம் உயிரோடுதான் இருந்துகொண்டிருக்கின்றோம். அது ஒன்றும் தவறில்லை.

திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தேர்தல் மேனிபெஸ்டோவிலே குதிரைப் பந்தய ஒழிப்புபற்றிச் சொன்னார்கள். அவர் ஆட்சியில் இருந்தது குறுகிய காலம் தான். ஆனால் அவருக்குப் பின்னாலே



வந்த ஆட்சி, அவருடைய அடிச்சுவட்டிலே அதை ஒழித்தது. அன்றைக்கு அதற்குத் தடை வாங்கி நடத்தினார்கள். அன்று நடந்தது. அண்ணா அவர்கள் சொன்னது போல் குதிரைப் பந்தயத்தை அன்றைய ஆட்சி ஒழித்தது.

திரு. க. சுப்பு: 1975 மார்ச் 31-லே அமல்படுத்த சொல்லி விட்டோம். ஆனால் அதற்குப் பிறகும் பந்தயம் இருந்தது. அண்ணா அவர்கள் காலத்திலே 1967-லே எலெக்ஷன் மேனிபெஸ்டோவிலே இருந்தது உண்மைதான். என்ன காரணம்? சிட்டி போலீஸ் ஆக்ட், 1888-ல், 1930 கேம்பிளிங் ஆக்டில் இரண்டிலுமே குதிரைப் பந்தயம் சூதாட்டம் என்று குறிப்பிடப்படவில்லை. 1949 ஆம் ஆண்டுச் சட்டத்திலே குறிக்கப்பட்டிருந்தது. அப்படிப்பட்ட சட்டம் அமலுக்கு வரவில்லை. எதற்கு இதைச் சொல்கிறேன்? முதலமைச்சராக மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இருந்திருக்கின்றார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இருந்திருக்கின்றார்கள். திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்திருக்கின்றார்கள், அப்போதெல்லாம் அவர்கள் அந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவில்லை. இதையேதான் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் சொன்னார்கள். இதைச் சொல்லித்தான் 1949 ஆம் ஆண்டுச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருகிறோம் என்றும் குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிறோம் என்றும் மார்ச் 31 முதல் குதிரைப் பந்தயம் இருக்காது என்றும் சொன்னார்கள். ஆனால் இருந்தது. நாம் இப்போது சொல்கிறோம். தேர்தல் நிச்சயமாக வரும் என்று சொல்கிறோம். ஆனால் வரவில்லை என்று குற்றம் சொல்கிறார்கள். எதற்கு? கோர்ட் சொன்னதனாலே நம் தேர்தல் வரவில்லை. அது மாதிரிதான் 31 மார்ச்சுக்குப் பிறகு குதிரைப் பந்தயம் இருக்காது என்று கலைஞர் சொல்லிய பிறகும் இருந்தது. அவர் இருக்காது என்று சொல்வதற்கு முன்னால் 30, 40 நாட்கள்தான் இருந்தது. அவர் இருக்காது என்று சொன்ன பிறகு 200, 240 நாட்கள் இருந்தது. என்ன காரணம்? இன்டர் வென்யூ பெட்டிங் எல்லாம் வைத்துவிட்டார்கள். அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் 'ஸ்டே' வாங்கிவிட்டார்கள். ஹைக்கோர்ட்டிலே சரிதான் என்று சொல்லிவிட்டார்கள். 'ஸ்டே' வாங்கிய பிறகு, 'இன்டர்வென்யூ பெட்டிங்' ஆரம்பித்துவிட்டது. அங்கே குதிரை ஓடும், இங்கே பந்தயம் கட்டிக்கொண்டிருப்பார்கள். வருடத்திலே 200, 240 நாட்களாக ஆகிவிட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதிலே தவறு இல்லை. அதைச் சூதாட்டமாகக் கருதக்கூடாது என்று சொன்னார்கள். உண்மையிலேயே

இப்போது எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதை நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் முன்னாலேயே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இதை சூதாட்டமாக இல்லாமல் உண்மையாகவே ஸ்போர்ட்சாகக் கொண்டு வருவோம் என்றார்கள். இதை முன்னாலேயே சொன்னார்கள். இதை அவசரப்பட்டுக் கொண்டு வரவில்லை. வேறு சில பேர் சொல்வார்கள். இதை வேண்டாத ஆளுக்காகக் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்று சொல்லலாம். இதை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று 1976-க்குப் பிறகு பல தடவைகள் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதை ஒரு 'சோர்ஸ் ஆப் ரெவின்யூ' என்று கருதினார்கள். மாநிலத்திற்கு வருமானம் வரக்கூடிய் துறை. இன்னொன்று இதிலே முறைகேடுகள் நடக்கின்றன. அதற்குப் பதிலாக வரக்கூடிய வருமானத்தை நம் மாநிலத்திற்குக் கொண்டு வர வேண்டும். இதன் மூலம் தனிப்பட்டவர்கள் சொத்துக்களை சேர்த்துக் கொள்வது என்பது இருக்கக்கூடாது. ஆகவே அதை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கன்சிஸ்டன்டாகச் சொல்லி வந்தார்கள். அது எடுக்கப்படும் என்று பல முறை உறுதிமொழி கொடுத்திருக்கின்றார்கள். எல்லா ஆதாரமும் இருக்கின்றது. உறுதிமொழி கொடுத்திருக்கின்றார்கள். இவ்வளவு நாட்களாகச் செய்யவில்லை. இன்றைக்கு அதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நானும் மெட்ராஸ் ரேஸ் கிளப்பிலே பிரசிடென்ட்டாக இருந்தவன். அங்கே என்னென்ன நடந்தது என்பது எனக்கே தெரியும். இந்த ரேஸ் கோர்ஸைப் பொறுத்தவரை, அதை ஒழித்துவிடவேண்டும் என்று சொல்கிறார்கள். என்ன காரணம்? சூதாட்டம் என்ற அடிப்படையிலே ஒழிக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள். லாட்டரி சீட்டு மாதிரி, அது சூதாட்டமாக இல்லாமல் இருந்த அந்தக் காலத்திலே குதிரைப் பந்தயம் யார் நடத்தியது? மகாராஜாக்கள், நாட்டை ஆண்டவர்கள் ஒரு கவுரவத்திற்காகச் செய்தார்கள். மகாராஜா குதிரை ஜெயித்தது என்று சொன்னால், அவர்களுக்கு ஒரு மரியாதை, ஒரு சந்தோஷம். வேறு ஒன்றும் கிடையாது. இப்போது ஊழல் வந்துவிட்டது. அப்போது 'ஸ்போர்ட்ஸ்' மாதிரி நடத்தினார்கள். இடையிலே வந்தவர்கள் லாப நோக்கத்திலே நடத்தினார்கள். சிலபேர்கள் பணம் எப்படியாவது சம்பாதிக்க வேண்டும் என்று கருதினார்கள். சாராயக் கடை அல்லது எந்தக் கடையாவது வைத்து லாபம் சம்பாதிக்க வேண்டும் என்று கருதுபவர்கள் வந்ததனாலே, நிலைமை மோசமாகிவிட்டது. பல இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் வந்தார்கள். பலபேர்



வந்தார்கள். அதிலே தில்லுமுல்லுகள் நடந்தன. கோளாறுகள் அதனாலே இருந்தன. அப்படி தில்லுமுல்லுகள் இருந்ததாலேதான், அதை எடுக்கிறோமே தவிர வேறல்ல. அது உண்மையான 'ஸ்போர்ட்ஸ்' ஆக இருக்க வேண்டும். குதிரை இனம் இருக்கவேண்டும். இல்லையென்றால், கழுதையைப் பார்த்து குதிரைகள் இப்படித்தான் இருந்தன என்று சொல்ல வேண்டிய நிலைமைகள் ஏற்படும். அதனாலேயே குதிரைப் பந்தயம் இருக்க வேண்டும். ஹைதராபாத் என்று சொல்கிறார்கள். மகாராஷ்ட்டிரத்திலே பம்பாய் என்று சொல்கிறார்கள். கர்நாடாகாவிலே சொல்கின்றார்கள். ஆந்திராவிலே சொல்கின்றார்கள். அங்கேயுள்ள முதல்வர்கள், ஸ்டேட்ஸ் பைனான்ஸ் மினிஸ்ட்டர்ஸ் சொல்கின்றார்கள். "இதை நாங்கள் ஒழிக்க மாட்டோம்" என்றுதான் சொல்கின்றார்கள். பல நேரங்களிலே எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் கேட்கும்போது, அதை ஒழிக்க மாட்டோம் என்றுதான் சொல்கின்றார்கள்.

(பிற்பகல் 4-30)

பல நேரங்களில் எதிர்க் கட்சிகள் அங்கே கேட்கும்போது, "நாங்கள் ஒழிக்க மாட்டோம், ஒழித்தால் வேறு மாநிலங்களுக்கு நம்ப ஆட்கள் போவார்கள்" என்று சொல்லி, அங்கேயெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. எல்லா இடங்களிலும் நடந்துகொண்டிருக்கிறது. இதை சூதாட்டம் என்று குறிப்பிடவில்லை. இதை கேம்ப்ளிங்காக வைத்துக்கொள்ளக் கூடாது. சூதாட்டம் என்று இல்லாமல் இதை முறைப்படுத்த வேண்டும். தனியாரிடம் கொடுத்தால் முடியுமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் உணர்வை வரவேற்கிறேன். அங்கே ஒழுக்கக்கேடு இருக்கக்கூடாது. சிவப்பு விளக்குப் பகுதிக்கு லைசன்ஸ் கொடுக்கலாமென்றார்கள். அது இல்லாமலேயே நடந்துகொண்டிருக்கிறது. பம்பாயில் இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லி, 'அங்கே போ, மற்ற இடங்களுக்கு வராதே" என்று சொல்லிவிட்டார்கள். அங்கே காங்கிரஸ் மாநாடு நடந்தது. இவர்களுக்கு உதவியாக இருந்தது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, காங்கிரஸ் மாநாடு நடந்ததையும், சிவப்பு விளக்குப் பகுதியையும் சம்பந்தப்படுத்திச் சொல்வதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

[1986 ஜனவரி 24

திரு. க. சுப்பு : வேண்டுமென்று சொல்லவில்லை, டெல்லியிலுள்ள காங்கிரஸ் தலைவர் அறிக்கை விட்டார். பம்பாய்க்குப் போய் என்னென்னவோ பண்ணம் கட்டினோம். ரெட் லைட் ஏரியாவும், சாராயமும்தான் மிச்சம் என்று சொல்லியிருப்பதை 'டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிகையில் பார்த்தேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : அடிக்கடி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பம்பாய்க்குப் போவதன் இரகசியம் இதுதானா?

திரு. க. சுப்பு : நான் முனிவர் என்றா சொல்கிறேன். பெரிய காங்கிரஸ் இயக்கத் தலைவர்களே அதில் ஈடுபடும்போது, நான் எம்மாத்திரம்? கிண்டலுக்காகச் சொல்லியிருக்கலாம். டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையில் படித்தேன். நான், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களை மதிக்கிறேன். நான் தப்பு பண்ணுகிறேன். கிண்டலுக்காகச் சொல்லியிருக்கலாம். எங்களுக்குப் பம்பாயில் கிடைத்தது அந்த ஊர் உள் நாட்டுச் சரக்கும், ரெட் லைட் ஏரியாவும்தான் என்று ஆதங்கத்தைத் தெரிவித்திருக்கிறார். மற்றதெல்லாம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுக்கு கோல்டன் பீச்சில் என்ன நடக்கிறது என்பது தெரியும். கோல்டன் பீச்சுக்கு நீதிபதிகள் போகலாம், நாம் போகலாம், பெரிய மனிதர்கள் போகலாம். அது ஒரு கவர். அவர்கள் கூப்பிடலாம். இதெல்லாம், வருகிறவர்கள் தப்பு பண்ணுவதற்கு 'கவரேஜ்' ஆகிறது. கோல்டன் பீச்சில் எவ்வளவோ தப்பு நடக்கிறது. சாதாரண ஆள் பிராத்தலை செய்தால் உள்ளே போடுகிறார்கள். இங்கே என்ன நடக்கிறது என்றால், பெரிய இடத்து விவகாரங்கள். வெளியே சொன்னால் வெட்கம். சொல்லாமல் இருந்தால் நல்லது. பம்பாயை மோசமென்று சொல்கிறார்கள். பம்பாய் நாணயமான ஊர், ஒரு இடத்தை இதற்காக ஒதுக்கிவிட்டார்கள். இங்கே எந்த இடத்திலும் ரெட் லைட் எரிகிறது. எனவே ஒழுக்கம் என்பது தேவை. நல்ல நெறிமுறைகளை ஏற்கும் மனப் பக்குவம் தேவை. நேற்று நான் என்னுடைய கருத்துக்களைச் சொன்னேன். பல பேருக்கு வருத்தம்தான். *
அவர் வரவில்லை என்று சொன்னார். அதோடு விட்டுவிட்டேன். அதற்கெல்லாம் அச்சப்படக்கூடாது. உண்மையைச் சொல்கிறேன். . .

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1986 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, * என்று சொன்ன கருத்தை தயவு செய்து அவைக் குறிப்பிலிருந்து நீக்கினால் சரியாக இருக்குமென்று கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைக் குறிப்பிலிருந்து அந்தக் குறிப்புகள் நீக்கப்படுகின்றன. பத்திரிகைகள் அதைப் பிரசுரிக்க வேண்டாம்.

திரு. க. சுப்பு : எதற்கும் பயந்து நான் இங்கே வரவில்லை. . . .

திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : மாண்புமிகு உறுப்பினரவர்கள், அச்சுறுத்தப்பட்டிருப்பதாகத் தகவல் சொல்கிறார். இந்த அவையிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல்கள் எங்கேயிருந்து வருகின்றன? அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : *

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே, இது சபைக் குறிப்பில் இருப்பது நல்லதல்ல. சபையில் இருக்கும் ஒருவரைப் பற்றி ஒருவர் பேசக்கூடாது என்று தாங்களே தீர்ப்பு அளித்திருக்கிறீர்கள். * எனவே நமக்குள்ளே பெரிய சண்டை நடப்பதாக திரு. மிசா கணேசன் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

(பிற்பகல் 4-35)

திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அதற்காகச் சொல்லவில்லை. ஓர் உறுப்பினர் தனக்கு இப்படிப்பட்ட ஆபத்து அல்லது எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது என்று சொல்லி, மிரட்டியவர் பெயரையும் சொல்லியிருக்கிறார். ஆகவே உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை.

திரு. க. சுப்பு : திரு. கணேசன் சொல்வது 'கரெக்ட்'.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையில் இல்லாத * சொன்ன வார்த்தை நீக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் பொதுவாகப் பேச வேண்டும், தனிப்பட்டவர்களைப்பற்றிப் பேசவேண்டாம்.

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**திரு. க. சுப்பு:** அவர் பொறுப்பில் இருந்தவர். இப்போது பொறுப்பில் இல்லை. "நீங்கள் 10 ஸ்கூல் திறந்தால் போதுமே?" என்று கேட்டார். "இருக்கிற ஸ்கூலில் சொல்லிக்கொடுத்தால் போதும்" என்று சொன்னேன். அதனால் நான் யாருக்கும் பயப்படுகிறவன் இல்லை. என்னை யாரும் அச்சுறுத்த முடியாது. என்னைப்பற்றிப் பேசியவர்களுக்கு நானே டெலிபோனில் எச்சரிக்கை பண்ணிவிட்டேன். எந்தக் காலத்திலும் நான் அச்சப்பட்டவன் கிடையாது. அதுபோல, சொல்கிறேன், பயந்துகொண்டு யாருக்காகவும் சொல்லவும் இல்லை.

'ரெட் லைட் ஏரியா' என்று சொல்வது ஒரு கேவலமான ஏரியாதான். ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்த சமுதாய அமைப்பில் அதைத் தவிர்க்க முடியவில்லை. இது சோஷலிச அமைப்பு இல்லை. அதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்று வேண்டுமானால் சொல்லலாம். குதிரைப் பந்தயம் என்பது ஒரு 'ஸ்போர்ட்ஸ்' தான். ஆனால் காலப்போக்கில் தனி நபர்கள் சிலர் லாபம் சம்பாதிப்பதற்காக அதை மாற்றிவிட்டார்கள். அதிலே தான் கோளாறு இருக்கிறது. புக்மேக்கர்பிடம் 100 ரூபாய் என்று சொன்னால், அது ஆயிரம் ரூபாய் வேல்யூவாம். அப்படி ஒரு 'அண்டர்ஸ்டாண்டிங்' இருக்கிறது. அதனால்தான் 'டாக்ஸ் எவேஷன்' வருகிறது. அதையெல்லாம் மாற்ற வேண்டும். நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தி.மு.க. உறுப்பினர் திரு. ஏ. எம். ராஜா போன்றவர்கள் சட்டமன்றத்தில் இதை நாட்டுடைமையாக்க வேண்டுமென்று பேசினார்கள். அதெல்லாம் முடியவில்லை. நாமெல்லாம் அந்தக் காலத்திலேயே அதைச் செய்ய முடியவில்லை என்று விட்டுவிட்டோம். அதனால்தான் அதை ஒழித்தேயாக வேண்டுமென்று சொன்னோம். ஒழித்தால் பல பேருக்கு வேலை வாய்ப்பு போய்விடும். அதனால்தான் நான்கூட இப்போது ஊழியர்களின் நலன் கருதி ஒரு திருத்தம் கொடுத்தேன். இரண்டாயிரம் பேர் அங்கே வேலை செய்கிறார்கள். அதிலே பர்மனென்ட் ஆக இருப்பவர்கள் 150 பேர்தான், மற்றவர்கள் கேஷுவலாக இருப்பவர்கள், 'சீசனல் ஒர்க்கர்ஸ்'. இப்போதாவது ரேஸ் 200 நாட்களுக்கு நடக்கிறது. அப்படியும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இதை நாம் எடுத்துக் கொண்டால், அந்த ஊழியர்கள் அரசாங்க ஊழியர்களாக ஆவார்கள். ஆனால் பர்மனென்ட்டாக இருப்பவர்கள்தான் மாறுவார்கள். அப்படி இல்லாமல், யார் யார் வேலை பார்க்கிறார்களோ





அவர்கள் அத்தனை பேரையும் அவர்கள் என்ன பெயரில் இருந்தாலும் அரசு ஊழியர்களாக்க வேண்டும். நான் கூட அந்தச் சங்கத்தில் இதுபற்றி கோரிக்கை எழுப்பினேன். என்ன சொன்னார்கள் என்றால், சங்கத்தில் இருப்பவர்கள் எல்லோரையும் மேனேஜராக்கி விட்டார்கள். மேனேஜர் என்றால் தொழிற்சங்கத்திற்கு வரக் கூடாது. வர முடியாது. அவர்கள் சம்பளத்தை உயர்த்திவிட்டார்கள். சங்கத்தில் வரக்கூடாது என்றார்கள். மெம்பர்களிடம் ராஜினாமா செய்யுங்கள் என்று எழுதிக் கேட்டார்கள். அப்படி சங்கத்தைக் கூட அனுமதிக்காத நிர்வாகம் நடக்கிறது. அதை எப்படி நிர்வாகம் செய்வது என்பது ஒரு பெரிய பிரச்சினை. நாங்கள் ரொம்ப சிரமப்பட்டோம். நிர்வாகம் ஒத்துக்கொள்ளவில்லை. தொழிலாளர்கள், கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்குச் சம்பளம் கிடையாது. செகரட்டரி என்று ஒருவர் இருப்பார், அவருக்கு மாதம் 25 ஆயிரம் ரூபாய் சம்பளம். என்னடா 'குவாலிபிகேஷன்' என்று பார்த்தால், பி.ஏ. அதுவும் இந்தியில். இங்கே மந்திரி யாருக்கும் 25 ஆயிரம் ரூபாய் வருமா? ஃப்ரி எலெக்ட்ரிசிடி, ஃப்ரி ஹவுசிங், ஃப்ரி பர்னிச்சர், ப்ரிப்கேஸ், கார், பெட்ரோல், மெயின்டெனன்ஸ் எல்லாம் ஏ.சி. இதெல்லாம் யாருக்குக் கொடுக்க முடியும்? இதையெல்லாம் பெறுபவர்களுக்கு என்ன தகுதி? அவர்கள் வைத்ததுதான் தகுதி. அந்த மேனேஜ்மென்டில் இருப்பவர்கள் தான் அங்கே மகாராஜா, அவர் நினைத்தால் 'குவாலிபிகேஷன்' எல்லாம் ஒன்றும் வேண்டாம். அதே மாதிரி சில பேருக்கு என்ன வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று அப்படிப்பட்ட மோசமான அளவுக்கு 15 ஆயிரம், 25 ஆயிரம், 30 ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் அங்கே நடப்பது ரொம்ப அநியாயத்திலும் அநியாயம். இதையெல்லாம் உண்மையில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது யார் தலையில் விழுகிறது என்றால், 20 ரூபாய், 10 ரூபாய் கொடுத்து டிக்கெட் வாங்குகிறானே, அவனிடம் போய்ச் சேருகிறது. அவன்தான் ஒழுங்காக 'டாக்ஸ்' கொடுக்கிறான். அதிகப் பணம் சம்பாதிக்கிற புக் மேக்கர்களிடம் 'அண்டர்ஸ்டாண்டிங்' ஏராளமாக இருக்கிறது. நான் அதற்குள் போகவில்லை. தொழிற்சங்க அமைப்பில் இருப்பதால், பேச்சுவார்த்தைக்குப் போயிருக்கிறேன். வேறு எதற்கும் போகவில்லை. ஆனால் அதில் ஈடுபட்டிருப்பவர்கள். . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இவ்வளவு விஷயம் தெரிந்து வைத்திருக்கிறார்களே,

[திரு. க. சுப்பு] [1986 சனவரி 24

திரு. க. சுப்பு: தொழிலாளர்களுக்காகப் பேசியிருக்கிறேன். ஒரு பெரிய ஃபைலே வைத்திருக்கிறேன். அவர்கள் மீது குற்றச்சாட்டு இருக்கலாம். கலைஞர் கூட முன்பு சொன்னார், யார் மேலேயோ கோபம் ஏற்பட்டு அதைத் தீர்த்துக் கொள்வதற்குச் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லலாம். கன்சிஸ்டெண்ட்டாக அதை நேஷனலைஸ் பண்ணலாம் என்று முதலமைச்சர் சொல்லியிருக்கிறார். அதோடு முறைப்படுத்த வேண்டும். டாக்ஸ் எவேஷன் இருக்கிறது: பிளாக் மணி ஜெனரேஷனே இருக்கிறது. அது பூராவும் எல்லா மாநிலங்களிலும் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை ஏன் ஒழிக்கக் கூடாது? ஏன் ஒழிக்க முடியவில்லை? அண்ணா சொன்னார், அதனால் அவர் நியாயம் இல்லாதவரா? ஏன் ஒழிக்க முடியவில்லை? முடியவில்லை, அவ்வளவுதான். சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். தமிழக சர்க்கார் சார்பில் இது நியாயமானதாக நடக்கவில்லை. அதனால் நடக்கக்கூடாது என்று சொன்னார்கள். பெட்டிஷன் போட்டோம். ஆனால் உச்ச நீதிமன்றத்தில் இரண்டு நீதிபதிகள் உட்கார்ந்துகொண்டு நடத்தலாம் என்று சொல்லிவிட்டார்கள். ரேஸ் எல்லா மாநிலங்களிலும் நடக்கிறது. இது நூறு ஆண்டுக்கு மேலாக நடக்கிறது.

(பிற்பகல் 4-40)

தமிழ் நாட்டில் முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக குதிரைப் பந்தயம் நடைபெற்று வருகிறது. நாம் மிகவும் மூத்த குடிமக்கள் இல்லையா? கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றியவர்கள் இல்லையா? ஆதலால் தான் கடந்த 300 ஆண்டுகளாக நடந்து வருகிறது. மற்ற மாநிலங்களில் நடக்கும்போது, ஏன் இங்கே நடக்கக்கூடாது? தமிழகம் தனியா என்று சொல்லியே உச்ச நீதிமன்ற நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

குதிரைப் பந்தயம் ஆண்டில் சுமார் 200 நாட்கள் நடக்கிறது; 250 நாட்கள் நடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களுக்குச் சொல்கிறேன். அரசாங்கம் அதை ஒழிக்க வேண்டுமென்று நினைத்தாலும் ஒழிக்க முடியவில்லை. இதை ஒழிக்கத் தேவை இல்லை என்கிறார்கள். இதை 'ஸ்போர்ட்ஸ்' என்றுதான் சொல்கிறார்கள். நாம்தான் அதை சூதாட்டமாக ஆக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். குதிரைப் பந்தயம் நடக்கிற அன்றைக்குப் பார்த்தீர்களானால் . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: என்னைப் பார்க்கச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)



986 ஜனவரி 24]

திரு. க. சுப்பு: அவ்வளவு கூட்டம். தலைவர் அவர்களே, உங்களைப் பார்க்கச் சொல்லவில்லை. (சிரிப்பு). எல்லோரும் ஜாக்பாட் அடிக்காதா என்று போகிறார்கள். பலருக்கு அடிக்காது. அடிக்கடி செல்கிறார்கள், நிறைய தடவை கட்டுகிறார்கள். இவ்வாறு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அதைக் கொஞ்சம் முறைப்படுத்தத்தான் இந்தச் சட்டமுன்வடிவு. சர்க்கார் நடத்தினால் முறைப்படுத்த முடியும். ஆண்டு முழுவதும் நடக்காது. மேற்படி கிளப்புக்கு சர்க்கார் நிலம் எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது? அதுவும் நூறு வருஷத்திற்கு குத்தகைக்குக் கொடுத்திருக்கிறார்கள். திரு. பக்தவத்சலம் கருணையோடு கொடுத்துவிட்டார். சிதம்பரம் செட்டியார் போன்ற தேச பக்தருக்காகக் கொடுத்திருக்கிறார். 57 ஏக்கர் ஊட்டியில் கொடுத்துவிட்டார். ஊட்டியில் குடியிருக்க இடமில்லாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் ரேஸ் கோர்ஸ் இடத்திற்கு கொஞ்சநஞ்சம் இடமல்ல. நிறைய சர்க்கார் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அடிக்கிற கொள்ளைக்கு அளவே கிடையாது.

கர்நாடகாவில் திரு ஹெக்டே முதலமைச்சரான பிறகு அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டார். ஊழல் செய்தவர்களை வெளியேற்றிவிட்டார்கள். அதைப்போலவே இங்கேயும் முறைப்படுத்த வேண்டும் என்பதற்காக, புக் மேக்கர்ஸ் செய்கிற ஏய்ப்புகளைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசே எடுத்துக்கொள்ள இச்சட்டமுன்வடிவு கொண்டு வரப்படுகிறது. அவ்வாறு செய்துவிட்டால், நாம் உரிமங்கள் வழங்கி அவற்றையெல்லாம் முறைப்படுத்த முடியும். சர்க்கார் நடத்தும்போது, நிச்சயம் முறைப்படுத்த முடியும்.

இப்போது 14 கமிட்டி மெம்பர்கள் இருக்கிறார்கள் என்றால், அதில் நான்கு பேர் அரசு நியமனதாரர்கள். உள்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், போலீஸ் கமிஷனர் முதலியவர்கள் இருப்பார்கள். ஆனால் இவர்களுக்குப் பல வேலைகள். எனவே இவர்கள் அங்கு போவதற்கு வாய்ப்பில்லை. எனவே அவர்கள் தங்கள் இஷ்டம் போல் செய்துகொண்டு விடுகிறார்கள். ஏழை எளியவர்கள் பணம் கிடைக்கும் என்ற ஆசையில்தான் பணம் கட்டுகிறார்கள். லாட்டரி டிக்கட் வாங்குவதைப்போல, லாட்டரி டிக்கட் விழுந்துவிடும் என்றுதான் வாங்குகிறார்கள். ஆனால் விழமாட்டேன் என்கிறது. குதிரைப் பந்தயத்திலும் இதுபோல்தான். அங்கே நிறைய

மோசடி நடக்கிறது. வரி ஏய்ப்புகள் நடக்கின்றன. இப்போது அவர்கள் இரண்டு கோடியே சொச்சம்தான் வரி கட்டுகிறார்கள். அரசு எடுத்துக் கொண்டு முறைப்படுத்தினால், இன்னும் அதிகமாக வருமானம் வரும். இப்போதிருக்கும் நிலைமை மிகவும் வருந்தத்தக்க நிலைமையாகும். இதை அரசு எடுத்துக்கொண்டபின் இந்நிலைமைகளை மாற்ற முடியுமா? மாற்ற முடியும்.

இவ்வாறு குதிரைப் பந்தயத்தில் நடக்கும் மோசடிகளை யார் சரிசெய்யப் போகிறார்களோ என்று நினைத்தேன். நான் எதிர்பார்க்கவில்லை. இன்றைக்கு அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்திருக்கிறது. நான் இச்சட்ட முன்வடிவை வலியுறுத்திப் பேசவேண்டும் என்பதற்காக இதை நான் சொல்லவில்லை.

அடுத்து, இதன் ஊழியர்கள் என்று வருகிறபோது திரு. ஆர். இராம கிருஷ்ணன் அவர்கள் ஒரு தடவை சொன்னார்கள். இதில் இரண்டாயிரம் பேர் வேலை பார்ப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் நீண்ட காலமாகப் பணியாற்றுகிறார்கள். இன்னும் அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்கள் 'சீசனல் எம்ப்ளாயிஸ்' என்கிற முறையில் அங்கே இருக்கிறார்கள். இதுபோல் பல பேர் இருக்கிறார்கள். நம் சட்ட முன்வடிவிலும் "எம்ப்ளாயிஸ் ஆப் தி கிளப்" என்று போட்டிருக்கிறோம். சட்டப்படி பார்த்தால், அங்கே 147 பேர்தான் வருவார்கள். மற்றவர்களும் ஊழியர்கள்தான். அவர்கள் "சீசனல் எம்ப்ளாயிஸ்"-ஆக இருக்கலாம். இப்படிப்பட்டவர்களை வீட்டுக்குப் போகச் சொல்லிவிடாமல் இவர்களுக்கும் வேலை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மானேஜிங் கமிட்டிக்கு வேண்டியவர்களானால் வேலையில் இருப்பார்கள். மானேஜிங் கமிட்டிக்குப் பிடிக்காதவர்கள் என்றால் அனுப்பிவிடுவார்கள். இன்னும் சில பேர் இங்கே சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பார்கள். மானேஜிங் கமிட்டியினரின் கடைகளில் வேலை செய்துகொண்டிருப்பார்கள். இந்நிலைமை எல்லாம் இனி மாறும். அந்த நியாயமான வேலை கொடுக்கலாம். வேலைப் பாதுகாப்பு கொடுக்கலாம். புக் மேக்கர்ஸ் வேலை பார்ப்பவர்களுக்கு எந்தப் பாதுகாப்புமில்லை. அவர்கள் ஏஜெண்ட்டுகள்தான். அவர்களுக்குப் பாது



காப்பு இல்லை. இந்தப் பாதுகாப்பை நாம் கொடுக்க வேண்டும். "காம்பன் சேஷன் கொடுக்க முடியாது" என்று நாம் ஒரு "கிளாஸ்" கொண்டு வந்திருக்கிறோம். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம்

(பிற்பகல் 4-45)

அவர்களும் சொன்னார். இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்டிலோ அல்லது வேறு எந்த ஆக்டிலோ அதெல்லாம் கிடையாது; காம்பென்சேஷன் கிடையாது. எது சொல்லப்பட்டிருந்தாலும், தொழிலாளர்களுடைய இன்டரஸ்ட்டை 'புரடக்ட்' பண்ண வேண்டும். நம்முடைய நோக்கம் அவர்களை 'புரடக்ட்' பண்ணக் கூடாது என்பதல்ல; அவர்களைப் 'புரடக்ட்' பண்ணத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே இந்தத் திட்டம் தைரியமாக எடுக்கப்பட்டிருக்கிறது. கலைஞர் கூட முதலமைச்சராக இருந்தபோது சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதாக இருந்து, ஒழித்து சர்க்காரே எடுப்பதாக இருந்தால், சாராயக் கடையையும் சர்க்காரே நடத்தலாமே என்று சொன்னார்கள். அவர்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காக இப்போது சாராயக் கடையை நடத்துகிறோம். மற்றவர்கள் நினைக்கிற மாதிரி இது கேவலமல்ல. சாராயத்தை யார் குடிக்கிறார்கள்? கடவுளா குடிக்கிறார்? நாம் தான் குடிக்கிறோம். நம்மை மதிப்பதற்கு நாமே காத்துக்கொள்ளாவிட்டால், நன்மை யார் மதிப்பார்கள்? அதெல்லாம் ஒன்றுமில்லை. குடிக்கிறார்கள். It is a fact முடிந்து போய் விட்டது. சர்க்கார் எடுத்துக்கொண்டது. வருமானம் வருகிறது. கள்ளச் சாராயத்திற்கு வழி வகுக்காமல், அண்டை மாநிலத்திற்குப் போகாமல் அந்த சோர்ஸைக் கொண்டு வரமுடியுமா என்று பார்க்க வேண்டும். நமக்குள் இதில் என்ன வெட்கப்பட வேண்டியிருக்கிறது? இதில் ஒன்றுமில்லை. அதுமாதிரி குதிரைப் பந்தயத்தில் பெட்டிங்கில் 'ஃபிராடு' இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஜனங்களை ஏமாற்றாமல், சர்க்கார் எடுத்துக் கொள்வதன் மூலமாகத்தான் இதைச் செய்ய முடியும். அதனால் சுப்ரீம் கோர்ட் அது இது என்று அலைய வேண்டியதில்லை. சில தனிப் பட்டவர்களைப் பழி வாங்குவதற்காக இதைச் செய்கிறார்கள் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியென்றால் எங்களுடைய எம்.பி. திரு. இராமகிருஷ்ணன் தான் அங்கே இருக்கிறார். எங்களுடைய எம்.பி.-ஐப் பழி வாங்க முடியுமா? இன்டரஸ்டுக்கு விரோதமாகப் போக

முடியுமா? இன்னும் பல பேர் இருக்கிறார்கள்; வேண்டியவர்கள் தான். வேண்டியவர்கள் என்பதற்காகப் பார்க்கவில்லை. வேண்டாதவர்கள் என்பதற்காகப் பார்க்கிறோம். எனவே இது முறைப்படுத்தப்பட வேண்டும். இதை ஒரு சூதாட்டமாக நினைக்காமல், உண்மையிலே இதை ஒரு விளையாட்டாக நடத்த வேண்டும். அந்தக் காலத்திலே மன்னர்கள் அதை நடத்தினார்கள். அந்த ஸ்டேடஸ்ஸில் இருப்பவர்கள் இன்று நடத்தலாம். இதன் வருமானத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே பணம் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கிறோம். இதிலே நிச்சயமாக பணம் வரும் நிலைமைகள் இருக்கின்றன. அதைப் பெறும் வாயிலாக இது கொண்டு வரப் பட்டிருக்கின்ற காரணத்தால், இது தைரியமாகக் கொண்டுவரப்பட்டது. யாரும் இதைக் கொண்டுவர முடியவில்லை. முன்னால் தி.மு.க. ஆட்சியில் கூட அதை 'அபாலிஷ்' பண்ண வேண்டுமென்று சொன்னார்களே தவிர, 'நேஷனலைஸ்' பண்ணவில்லை. 'அபாலிஷ்' பண்ணுவது என்றால், முடியாத காரியம் என்று தெரியும்; தெரிந்தும் ஏன் செய்கிறார்கள்? 'அபாலிஷ்' என்று சொல்வோம்; வேண்டாமென்று சிலர் சொல்வார்கள்; சரியாகப் போய் விடும். 'அபாலிஷ்' என்று சொன்னால் கோர்ட்டிலே ஸ்டே வாங்குவார்கள். குதிரையை எங்கே விடுவது? குதிரையை கழுதையாகவா ஆக்க முடியும்? ஆக்க முடியாது. அதனாலே என்ன செய்வது? எம்பிளாயிஸ் 2 ஆயிரம் பேர்கள் என்ன செய்வது? அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்புக் கொடுக்க முடியுமா? கொடுக்க முடியாது. இன்றைக்கு அதெல்லாம் இல்லை. அந்த எம்பிளாயிஸைப் பாதுகாத்து, வருமானத்தை அரசாங்கத்திற்குக் கொண்டு வரும் முறையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே உள்நோக்கம் ஒன்றும் கிடையாது. ஒரே நோக்கம், வெளி நோக்கம் தான். இந்த நோக்கத்திலே மாண்புமிகு உறுப்பினர் சந்தேகப்பட்டதால் சொல்கிறேன். அதனால் இதை சூதாட்டமாக நினைக்கவேண்டாம். இங்கே இல்லாவிட்டால் ஹைதராபாத்தில் ஆடுவான்; இல்லாவிட்டால் பெங்களூருக்குப் போவான். அது சூதாட்டம் இல்லையா? ஆந்திராவில் சொல்கிறார்கள், "நீங்கள் ரொம்பப் பேசினால் தமிழ் நாட்டிலே ரேஸ் கோர்ஸை ஒழித்தால் சித்தூரில் வைத்துவிடுவோம்" என்று சொல்கிறார்கள். இங்கேதான் சாராயக் கடை கூடாது என்று சொன்ன உடனே போய் விட்டானே, பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி, பெங்களூருக்கு, அதற்கு



இருந்த மரியாதை யாருக்குத் தெரியும்? கடவுளுக்கு இல்லாத மரியாதை அதற்கு இருந்தது. அந்த அளவுக்கு அதை 'ஓர்ஷிப்' செய்தார்கள். அது மாதிரி. . . . .

திரு. சி. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, இப்படிப் பிற மாநிலங் களைக் காட்டிக் காட்டி நாம் சில நடவடிக்கைகளில் ஈடுபடுவோமானால், அது முரண்பாடாக இருக்கும், சமுதாய ஒழுக்க நெறிகளுக்கு எதிர்காலத்தில் சமுதாயம் பாழ்பட்டுவிடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்ன சொல்கிறார்கள்?

திரு. க. சுப்பு: ஒழுக்க நெறியில் நாம் கராறாக இருக்க வேண்டும். விளையாட்டை சூதாடுவது மாதிரி வைக்கக் கூடாது; விளையாட்டு மாதிரி வைக்க வேண்டும். நீங்கள் போகும்போது சூதாட்டம் என்று நினைத்துப் போகாதீர்கள். விளையாட வேண்டுமென்ற நோக்கத்தில் போக வேண்டும். இதெல்லாம் ஒரு விளையாட்டு; அதோடு முடிந்துவிட்டது. குதிரை ஓடுவதை இன்னொரு ஊரிலே வேடிக்கை பார்க்க வேண்டுமா? அதெல்லாம் வேண்டிய தில்லை. எல்லோருமா போய்ப் பார்த்து கெட்டுப் போகிறார்கள்? ஏதாவது மோசமாகச் சாராயம் குடிப்பவன் கெட்டுப் போவதற்கு வழி இருக்கிறது. ஆனால் பந்தயத்திற்குப் போகிறவன் கெட்டுப் போவதற்கு வழியில்லை. வீட்டைத் தவிர வேறு எங்கும் வரவேற்பதற்கு வேறு யாரும் இருக்க மாட்டார்கள். காசு இல்லாதவனை யார் வரவேற்பார்கள்? மனைவியைத் தவிர வேறு யாரும் அந்த மனசோடு வரவேற்கமாட்டார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதனால் உறுப்பினர் அவர்கள் இதை வரவேற்கிறார்கள்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, சூதாட்டம் என்ற அடிப்படையிலே அல்ல. அது ஒரு ஸ்போர்ட்ஸ் மாதிரி. குதிரைப் பந்தயத்தைப் பார்க்க வேண்டுமென்று ஒரு 'இன்டரஸ்ட்' இருக்கிறது. பல பேர் வேடிக்கை பார்க்கத்தான் அங்கு போனதாகப் பத்திரிகையில் படித்தேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட "வேடிக்கை பார்க்கத்தான் அங்கே போனேன்; அங்கே இருக்கிற நிலைமைகளைப் பார்த்தேன்" என்று

(திரு. க. சுப்பு) [1986 ஜனவரி 24

பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தார்கள். அந்த அடிப்படையிலே அதை மாற்ற வேண்டும். நாம் தான் சூது இல்லாமல் ஆக்க வேண்டும். சூது இல்லாமல் இருந்தால் சூதாட்டம் இருக்காது. அந்தமாதிரி அடிப்படையில், அரசாங்கத்திற்கு வருமானம் வரும் அடிப்படையில் கொண்டு வரவேண்டும். இதை நாம் வேண்டாமென்று சொன்னால், அது தனியார் கையில் இருந்து விடும். அது ரொம்ப 'டேன்ஜரஸ்'. அதை 'அபாலிஷ்' பண்ணினால் அது வேறு மாநிலத்திற்குப் போய்விடும். அது அதைவிட 'டேன்ஜரஸ்'. இந்தப் பயத்தையே மனதில் கொண்டு நாட்டுடமையாக்குகிறார்கள். அந்தத் திட்டம் வரும்போது உங்களையும் ஒரு கமிட்டியில் மெம்பராகப் போடுவதற்கு ஏற்பாடு பண்ணலாமென்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** * அவர்கள் பேச்சுக்கிடையே குறிப்பிட்டதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றியிருக்கிறேன். பத்திரிகைகள் அதைப் போட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-50)

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்காக அரசியல் சட்டத்தின் வழிகாட்டுப் பிரிவின் 39வது உறுப்பினை தனது உதவிக்கு அழைத்திருக்கிறது அரசு. அதாவது செல்வமும், செல்வத்தை உற்பத்தி செய்கிற வழிவகைகளும் ஒரு சிலரிடத்தில் சென்று குவியாமல் தடுப்பதற்கு இந்தச் சட்டம் வழிவகை செய்ய உதவியாக இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். அதற்காக வரவேற்கிறேன். ஆனால் கடந்த 200 ஆண்டுகாலமாக இந்தக் குதிரைப் பந்தயம் இங்கே நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. அதன் காரணமாக எந்த இடத்திலே எவ்வளவு பணம் யாரிடம் போய் குவிந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்கினால், எங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அரசாங்கத்தின் கொள்கை என்று வருகிறபோது, இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். தற்போது பரிசுச் சீட்டின் மூலமாக தனி நபர் 25 லட்சம் 30 லட்சம் அல்லது 1 கோடி என்று ஒரு பரிசுச் சீட்டிற்குப் பரிசுத் தொகையாகப் பெறுவது எப்படி அரசின் கொள்கைக்கு ஒத்து வருகிறது

* மாண்புமிகு தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1986 ஜனவரி 24] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

என்றும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதாவது ஒரு வேலையும் செய்யாமல் ஒரு ரூபாய் அல்லது 5 ரூபாய் அல்லது 10 ரூபாய் அல்லது 100 ரூபாய் என்று ஒரு பரிசுச் சீட்டை வாங்கி, அதன் மூலமாக 25 லட்சம் அல்லது 30 லட்சம் அல்லது 1 கோடி ரூபாயை எந்த விதமான உடலுழைப்பும் இல்லாமல் சம்பாதிப்பது இந்த அரசு இங்கே சுட்டிக்காட்டுகிற அரசியலமைப்புச் சட்டத்தின் 39 ஆவது பிரிவுக்கு உகந்ததுதானா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

அதைப் போலவே சாராய உற்பத்தியை அரசாங்கமே ஏற்றுக் கொண்ட பிறகு, பாட்லிங் யூனிட் மூலமும் பிளெண்டிங் யூனிட் மூலமும் பல லட்சக் கணக்கான அல்லது பல கோடிக் கணக்கான ரூபாய் ஒரு சிலர் சுட்டக்கூடிய வகையில் தற்போதைய விநியோக முறைக் கொள்கை அமைந்திருக்கிறது என்று ஊர் பூராவும் பேசப்படுகிறதே அந்தக் கொள்கை இந்தக் கொள்கைக்கு எப்படி ஒத்து வருகிறது என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். 200 வருஷங்களாக இங்கே குதிரைப் பந்தயம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், கடந்த காலத்திலே ஜமீன்தார்களும் அரசர்களும் தங்களுடைய வேடிக்கைக்காக, இந்தக் குதிரைப் பந்தயத்தை நடத்தியிருக்கலாம். சமீப காலத்தில் எந்த அளவுக்குக் குதிரைப் பந்தயம் நடக்கிறது என்று பார்த்தால், ஒரு வருஷத்தில் ஏறக்குறைய 200 நாட்களுக்கு குதிரைப் பந்தயம் நடக்கிறது. அதனால் சாதாரண ஏழை எளிய மக்கள், 'லோயர் மிடில் கிளாஸ்' வகுப்பைச் சார்ந்தவர்கள், சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் நஷ்டமடைகிறார்கள். பெரிய வசதி படைத்தவர்கள் அந்தச் சூதாட்டத்தில் ஈடுபடுவதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் தினமும் கூலி பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள், ரிக்ஷா ஓட்டுகிறவர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகிறவர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எல்லாம் தங்களின் வருமானத்தில் ஒரு கணிசமான பகுதியைச் செலவழிக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். எனவே அப்படிப்பட்ட சூதாட்டத்தை ஒழிப்பதற்குப் பதிலாக இப்படி அரசாங்கமே நடத்துவதற்கு என் காரண காரியங்களைச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 ஜனவரி 24

திராவிட முன்னேற்றக் கழகம் 1974 ஆம் ஆண்டிலே குதிரைப் பந்தயத்தை ஒழித்து ஒரு சட்டம் கொண்டு வந்தது. அது உச்ச நீதி மன்றத்திலும் சரி, உயர் நீதி மன்றத்திலும் சரி, தள்ளுபடி செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் கொண்டு வந்த நோக்கத்தை நான் இன்றும் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். நீதிமன்றங்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்பதாலே அதனுடைய உண்மையான நோக்கத்திற்கு நான் மாசு கற்பிக்க விரும்பவில்லை. அந்த அடிப்படையில் குதிரைப் பந்தயத்தையே ஒழிப்பதற்கு ஏன் அரசு முன்வரவில்லை என்றுதான் அறிய விரும்புகிறேன். இதனாலே நாட்டுக்கும் மக்களுக்கும் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். இந்தச் சூதாட்டத்தில் லட்சக் கணக்கான மக்கள், இங்கே சென்னையில் இருப்பவர்கள் மட்டுமல்ல, வெளியே இருப்பவர்களும் இந்தச் சூதாட்டத்திற்குப் போவதன் மூலமாக பல லட்சக் கணக்கான ரூபாய்களை இழந்து வருகிறார்கள். லட்சக் கணக்கானவர்கள் பணத்தை இழந்து நூற்றுக் கணக்கானவர்கள் மட்டும் லாபம் பெறுகிற வகையில் வழிவகை செய்யப்படுவதை ஏன் அரசு தவிர்க்க முன்வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன். எனக்கு அதைப்பற்றிய விவரம் தெரியாது, காரணம் பரிச்சியம் இல்லை. ஆனால் தமிழ் நாடு முழுவதும் உள்ள எல்லா கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ளவர்கள் இங்கே வராமலேயே பந்தயம் கட்டிக் கொள்வதற்கான வாய்ப்பு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் கோடிக் கணக்கான ரூபாய் அங்கே செலவழிக்கப்படுகிறது. மக்களுடைய பணம் அங்கே வீணாக்கப்படுகிறது என்பதெல்லாம் தெரிந்திருந்தும், ஏன் அதை ஒழிக்க முன்வராமல் இப்படிப்பட்ட சட்டமுன்வடிவைக் கொண்டு வர அரசு விரும்புகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். எனவே அரசாங்கம் இதை எடுத்துக் கொள்வதை விட ஓரே அடியாகச் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எதற்கெடுத்தாலும் மற்ற மாநிலங்களில் நடக்கிறது, ஆகவே நமது மாநிலத்தில் மட்டும் அதை எப்படித் தவிர்ப்பது என்று சொல்லுகிற வாதம் எப்படி நியாயமாகும் என்று கேட்க விரும்புகிறேன். அது ஒரு நியாயமான வாதமாக இருக்க முடியாது. மற்ற மாநிலங்களுக்கு நாம் முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்று பல்வேறு விஷயங்களில் செயல்பட்டுக்



1986 ஜனவரி 24] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

கொண்டிருக்கும்போது, இந்த விஷயத்தில் மட்டும் ஏன் இப்படிப் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். எல்லா மாநிலங்களிலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுவதில்லை. பம்பாய், பெங்களூர், கல்கத்தா, ஹைதராபாத் போன்ற இடங்களில் மட்டும்தான் நடக்கின்றது. உத்திரப் பிரதேசத்திலும், பீகாரிலும், மத்தியப் பிரதேசத்திலும் குதிரைப் பந்தயங்கள் இல்லை. ஆகவே குதிரைப் பந்தயம் இங்கே ஒரு மாநிலத்தில் இருக்க வேண்டிய கட்டாயம் ஏதுமில்லை என்று சொல்லி, அதையும் அரசாங்கம் நடத்துவது என்பது சரியானதல்ல என்று குறிப்பிட்டு இந்தச் சட்டத்தை நான் ஆதரிப்பதற்கில்லை என்று கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரை, குதிரைப் பந்தயச் சங்கம் குதிரைப் பந்தயத்தை நடத்துகிற வகையில் பல முறைகேடுகள், விதி முறைகளுக்கு மாறாக அவற்றை மீறுதல் போன்ற செயல்களில் ஈடுபட்ட காரணத்தால், அங்கே பணியாற்றுகிற பணியாளர்கள் ஆகியோரின் நலன் கருதியும் இதில் பங்கேற்கிற பொதுமக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் அரசே இதை எடுத்து நடத்த வேண்டும் என்றும், அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வகைகளிலும் இந்த அமைப்போடு தொடர்பு கொண்டவர்கள் அரசுக்கு அறிக்கை தந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-55)

உயர்திரு வி. ஜே. சரவணபவானந்தம், உயர்திரு ஆர். எம். சேஷாதிரி, உயர்திரு. சிவராமன், உயர்திரு. ஜி. உமாபதி மற்றும் குதிரைப் பந்தயத்திற்குச் செல்கிற அல்லது தொடர்புடைய மக்களுடைய சங்கத் தலைவர் உயர்திரு கிருஷ்ணன் ஆகியவர்கள் எல்லாம் பல்வேறு கட்டங்களில் கொடுத்த குற்றச்சாட்டுக்களை ஆய்ந்து அதற்குப் பிறகு சிட்டி போலீஸ் கமிஷனர் அவர்களையும் இது குறித்து ஆயச் சொல்லி, அவரும் ஆய்ந்து ஒரு அறிக்கை தந்ததன் பிறகுதான், இதிலே பொது மக்கள் பெரிதும் ஏமாற்றப்படுகிறார்கள் என்ற உண்மை விவரம் தெரிந்த பிறகுதான், இதை அரசே மேற்கொண்டால் தான், ஒழுங்காக முறைப்படுத்த முடியும் என்ற முறையில் அரசு இதை நாட்டுடமையாக்க முடிவு செய்தது.

[திரு. சி. பொன்னையன்]. [1986 ஜனவரி 24

குதிரைப் பந்தயத்தை ஒழிக்கும் சட்டம் ஏற்கெனவே கொண்டு வரப் பட்டது, அதை ஏன் ஈடேற்றக் கூடாது என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம்.பி.எஸ். அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதனுடைய உள் விவரங்களை, உள்ளே நடக்கிற யதார்த்த உண்மைகளைத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். 1888 ஆம் ஆண்டில் இருந்த சிட்டி போலீஸ் சட்டத்தின்படி—

gaming includes wagering and betting other than horse race என்று இருந்தது. அதற்குப் பிறகுதான் அது மாற்றப்பட்டு 1949 ஆம் ஆண்டின் ஏழாவது சட்டத்திலே அது நீக்கப்பட்டது. நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது 1974 ஆம் ஆண்டிலே. மீண்டும் ஆக்ட் 44/74 சட்டம் கொண்டு வரப்பட்டது. 1975-லே நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். பிறகு உச்ச நீதி மன்றத்திலே தடையாணை வாங்கப்பட்டது. உயர்நீதி மன்றத்திலே பல முறை மாநில அரசு முயற்சிகளை மேற்கொண்டபோது தடையாணை மீண்டும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இப்போது உச்ச நீதி மன்றத்திலே நிலுவையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இந்த ரேஸ் கிளப்பினுடைய மேனேஜ் மென்டை ஒரு 'ரெகுலேஷன் ஆக்ட்' போட்டு மேற்கொண்டிருக்கலாம் என்று தெரிவித்தார். ரேஸ் கிளப் கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கமாக இருப்பதால், இது குறித்து சட்டம் இயற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்குத்தான் இருக்கிறது. ஆனால் நாட்டுடைமையாக்கக் கூடிய நடவடிக்கை எடுக்க இந்த அரசுக்கு அதிகாரம் இருக்கிற காரணத்தால், அப்படி நாட்டுடைமையாக்கப்படுகிறபோது அங்கேயுள்ள தொழிலாளர்கள் உட்பட பலர் நலன் பேணிக்காக்கப்படுகிறது என்பதால் அரசின் சொத்து காக்கப்படும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அரசு அதை மேற்கொண்டது. உச்ச நீதிமன்றத்திலே உள்ள வழக்கு நிலுவையில் இருக்கிறது என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் பேசும்போது, பிரிவு 12(2)-ல் ஒரு மாத நோட்டீஸ் என்று இருப்பது தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைந்துவிடக்கூடாது என்ற கருத்தை வெளியிட்டார்கள். தொழிலாளர் களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், பாதுகாப்பு வேண்டும் என்பது பிரிவு 12(1)-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் அதைப் பார்க்க வேண்டுமென வேண்டுகிறேன்.



1986 ஜனவரி 24] [திரு. சி. பொன்னையன்]

பிரிவு 12(2)-ஐப் பொறுத்த வரைக்கும், சர்வீஸ் டிரான்ஸ்பர் என்று வருகிறபோதுதான், சில பாதிப்புகள் ஏற்படலாம், அதற்காக பாதுகாப்பு வேண்டும் என்ற முறை இருக்கிறது. 12(1)-ல் ஒரு மாத நோட்டீஸ் என்பதைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தகுதி அடிப்படையில் மட்டுமல்லாமல், சலுகை யின் அடிப்படையில் மாதம் 25 ஆயிரம் ரூபாய் அளவிற்கு அவர்கள் சலுகை பெறக்கூடிய பதவிகளைப் பெற்று வருகிறவர்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு அரசுப் பொறுப்புக்கு வந்த பிறகு அந்த நிலையைத் தொடர விடுவது உகந்தது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்ல மாட்டார் என்று

(பிற்பகல் 5-00)

கருதுகிறேன். ஏழையெளிய தொழிலாளர்களை எந்தவிதத்திலும் பாதிக் காதவாறு பண்ணுகிறோம். அங்கே சுயநல அடிப்படையில் அல்லது பினாமி களாக இருந்து கொண்டு நடக்கின்ற அந்தச் சங்கத்திற்கு வருகின்ற வருவா யைக் குறைக்க எத்தகைய நடவடிக்கையாவது இருக்குமாயின், அதைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுக்க அந்த ஷரத்துத் தேவையாக இருக்கின்றது.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த விதி நிரந்தரமாக இருக்குமானால், வருங்காலத்தில் அனைத்துத் தொழிலாளர்களுடைய நலமும் பாதுகாக்கப்படுகின்ற நிலை வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தொழிலாளர்களுடைய நலனுக்குப் புறம்பாகச் செயல்படுகின்ற எந்த ஒரு ஆட்சியும் தமிழகத்திற்கு வராது என்ற நம்பிக்கை இருக்கிறது. இதைப்போன்ற அமைப்புகளைப் பயன் படுத்தி வசதி படைத்தவர்கள் தவறு செய்கின்றபோது, அது அரசினுடைய கவனத்திற்கு வருகின்றபோது, நடவடிக்கை எடுக்க அதற்கான அதிகாரம் அரசுக்குத் தேவை. அத்தகைய அதிகாரத்தை விட்டுவிட்டோமானால், என்னென்ன தவறுகள் தற்போது சங்கத்திலே நடக்கின்றனவோ, அந்தத் தவறுகள் இச்சங்கம் நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகும் வருவதற்கு வாய்ப்பு

ஏற்பட்டுவிடும். அதைக் களைவதற்கு சட்ட ரீதியான வழிவகை இராது என்ற காரணத்தினால்தான், அதைத் தவிர்க்க முடியாத அளவில் அந்த ஷரத்தைக் கொண்டுவருகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதனைத் தெளிவாக்குகின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் ஒழுக்கமுறைபற்றிச் சொன்னார்கள். அரசே இதை நடத்துவது என்பது, ஒழுக்க நெறிகளுக்குக் குந்தகமாக ஆகிவிடாதா என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசுகின்ற போதே 'எக்ஸ்ட்ரீம் சர்காஸ்ட்டிசம்' என்ற முறையிலே பேசினார்கள். இருந்தபோதிலும்கூட சில நேரங்களிலே அவர் பேசிய பேச்சிலே ஆழமான கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். நாம் அதை உதாசீனப்படுத்தக் கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன். அரசினுடைய நோக்கத்தைப் பொறுத்தவரைக்கும், ஒருமுறை ஏற்றுக்கொள்ளப்பட்டபோது, அது செல்லு படியாகின்ற வகையிலே அதிலே ஒழுங்கு முறை இருக்க வேண்டும். அந்த அடிப்படையிலே தான் இந்தச் சட்ட முன்வடிவு இருக்கிறது. இந்தச் சட்ட முன்வடிவு நடைமுறைக்கு வந்த பிறகு, அதை அரசு மூலமாக ஒழுங்குபடுத்து வதற்கு நல்ல வாய்ப்பிருக்கும் என்ற முறையில் அது மேற்கொள்ளப்பட்டிருக் கின்றது.

மாண்புமிகு பெரியவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற போது, ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். ஆர்ட்டிகிள் 31 பி, சி இவற்றைப் பயன்படுத்தி நாட்டுடைமையாக்க வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டிருக் கின்றது என்று கேட்டார்கள். அதன் மூலமாகத்தான் நாட்டுடைமையாக்க வேண்டும். வேறு வழியில்லை. காரணம் நாட்டுடைமையாக்கப்பட்ட சட்டங்கள் எல்லாம் செல்லுபடியாக வேண்டுமென்றால், அது ஆர்ட்டிகிள் 31பி,சி, ரெட் வித் 31பி மூலமாக நாட்டுடைமையாக்கப்படுகின்றபோதுதான் அந்தச் சட்டமே செல்லுபடியாகும். இல்லையென்றால் முடியாது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், உங்களுக்குத் தெரியும், அரசியல் சட்டத் திருத்தங்கள் 42, 44வது திருத்தங்கள் வந்தபிறகு, நாட்டுடைமையாக்கக்கூடிய சட்டங்களைச் செல்லுபடியாக்க என்னென்ன முறைகளைச் சட்ட ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற முறையிலே அது தவிர்க்க முடியாத ஒன்று,



அது தேவையான ஒன்று என்பதனைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவை, சட்ட மன்ற மேலவையும் ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமை கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 12.

திரு. க. சுப்பு : நான் கொடுத்திருந்த கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

"In sub-clause (1) of clause 12, after the expression "Every employee" the following expressions "whether permanent, temporary or casual" shall be added".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வழிமொழிவது யார்?

திரு. மு. செ. சங்கரலிங்கம் : நான் வழிமொழிகிறேன்.

[1986 ஜனவரி 24

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, வேறு ஒன்றும் இல்லை. 'எம்ப்ளாயீஸ்' என்று வருகிறதாலே 'சீசனல் எம்ப்ளாயீஸ்' சேர்த்துக் கொள்ளப்படும் என்று அரசு உறுதிமொழி கொடுத்தால் போதும். அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுத்ததாகத்தான் நான் கருதுகிறேன். 'சீசனல் எம்ப்ளாயீஸ்' 'டெம்பரவரி', 'கேசுவல்' என்றெல்லாம் வைத்திருக்கின்றார்கள். அவர்களுடைய நலன்களையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர்கள் சொன்னால் போதும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னபோது ஒன்றைச் சொன்னார்கள். பிற கம்பெனிகளில் பணியாற்றிக் கொண்டு, அல்லது அந்தச் சங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற பெரும் தனவான்களின் கம்பெனிகளில் பணியாற்றிக் கொண்டு, இங்கே சம்பளத்தை வாங்குகின்றவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் ரூ. 25 ஆயிரம்கூட மாதச் சம்பளம் வாங்குகின்றார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

Seasonal employees who are working for years together.

அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தினையும் கூறினார்கள். அதைப்பற்றியும் அரசு ஆராயும். காரணம், குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரை, இது ஒரு 'சீசனல் பிசினஸ்' தான். அந்தந்த சீசனுக்கு அவர்கள், அந்தப் பணியில் 12 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்தால், அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். ஏற்கெனவே, அந்தச் சட்டங்களிலே அவர்களுக்கு உரிமை வந்து விடுகின்றது. அதை அரசு ஆயும்.

(பிற்பகல் 5-05)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தன்னுடைய திருத்தத்தை திரும்பப் பெறுகிறாரா அல்லது வலியுறுத்துகிறாரா?



1986 ஜனவரி 24]

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் உறுதிமொழிக்குப் பிறகு, என்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறேன்.

திருத்தம் அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 12, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 13 முதல் 32 அட்டவணை 1, 2 ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1986) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 4. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தலைவரவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு கொடுத்ததற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் உரையில் சொல்லப்பட்டுள்ள திட்டங்களையும், தமிழக அரசினுடைய பல்வேறு நல்லபல திட்டங்களையும் நான் முதலில் வரவேற்கிறேன். அதுவும் குறிப்பாக 10 லட்சம் வீடுகள் கட்டும் திட்டம். ஏழை மக்களுக்கு, குறிப்பாக பழங்குடி மக்களுக்கும், நரிக் குறவர்களுக்கும், ஐந்து லட்சம் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள ஏழை எளியவர்களுக்கும் பலன் தரும் இந்தத் திட்டம் ஒரு நல்ல திட்டம். முன்பு ஏழைக் குழந்தைகளுக்கு சத்துணவு, சீருடை போன்ற நல்ல திட்டங்களை வழங்கியதுபோல, இதுவும் நல்ல திட்டமாகும். அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களில் இப்படி இருக்கிறதா என்றால், நிச்சயமாக இல்லை. அந்த அளவுக்கு சிறப்பான திட்டங்களை நல்ல முறையில் கொண்டு வந்த மாண்புமிகு முதல்வரவர்களுக்கு முதலில் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திட்டங்களைப்பற்றிக் கூறும்போது, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,675 கோடி ரூபாய் அளவுக்கு நாம் செலவு செய்திருக்கிறோம். ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 5,750 கோடி ரூபாய் செலவிட எண்ணி இருக்கிறோம். பல்வேறு திட்டங்களுக்கு, பல்வேறு நல்லபல பணிகளுக்கு இந்தத் தொகை செலவழிக்கப்பட இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, ஒன்றை முக்கியமாகக் கூற விரும்புகிறேன். இந்தத் திட்டங்களைப் போடுவதற்காக நம்முடைய தமிழகத்தில் திட்டக் குழு என்று ஒன்று இருக்கிறது. ஆனால் அது இப்போது செயல்படுகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக அது சந்தேகத்தில் இருக்கிறது. இதுபோன்ற திட்டங்களை எல்லாம் அந்தந்தத் துறையில்தான் போடுகிறார்களே தவிர, பிளானிங் கமிஷன் மூலம் வருவதாகத் தெரியவில்லை. எதற்காகக் கூறுகிறேன் என்றால், முன்பு அதாவது முதல்வரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, 19 உறுப்பினர்கள் அதில் இருந்தார்கள். திட்டக் குழுவில் பல்வேறு பிரிவைச் சேர்ந்தவர்கள்—பொருளாதார நிபுணர்கள், தொழில் அதிபர்கள், வல்லுனர்கள் உறுப்பினர்களாக இருந்து, நல்லபல பணியாற்றி இருக்கிறார்கள். இப்போது தலைவர், உதவித் தலைவர், செயலாளர் மட்டும்தான் இருக்கிறார்கள். அவர்கள் மேலும் நல்ல பணிகளை ஆற்றுவதற்கு மேலும் பல அதிகாரிகளைக் கொடுத்து, நல்ல பல திட்டங்களை தமிழக அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்



கொள்கிறேன். இப்போது அந்தந்தத் துறைகளிலே இருந்துதான் திட்டங்களைத் தீட்டுகிறார்கள். அந்த நிலை மாற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் உற்பத்தியைப்பற்றி முதலிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏழாம் திட்டத்தில் 30 சதவிகிதம் இதற்காக அதிக நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க செய்தியாகும். மின் உற்பத்திக்காக எவ்வளவுதான் செலவு செய்தாலும், கோடையில் மின் வெட்டு வருடாவருடம் வந்து

(பிற்பகல் 5-10)

கொண்டிருக்கிறது. அதில் நாம் முன்பே எந்த அளவுக்கு பாதகம் ஏற்படுகிறது என்று உணர வேண்டும். ஒவ்வொரு வருடமும் இயற்கைக் கோளாறு ஏற்படுவது, அதை நாம் சமாளிப்பது என்று இருக்கிறோம். முன்கூட்டியே இதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எண்ணூரில் உள்ள மின்சக்தி நிலையம் போன்று, அதிக மின்சக்தி நிலையங்கள் அமைக்கப்படும் என்றும், கடலூரில் அனல் மின்சக்தி நிலையம் வரவிருக்கிறது என்றும் மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. மின் உற்பத்தி செய்வதைவிட மின் சக்தியைக் குறைவாகப் பயன்படுத்த, சூரிய ஒளியிலிருந்து மின்சக்தி பெற முயற்சி பெற வேண்டும். அதற்கான கருவிகள் ஏழாயிரம் ரூபாய் வரை விற்கிறது. சாதாரண மக்கள் வாங்க இயலாது. அதன் விலை குறைக்கப்பட வேண்டும். வரிகள் குறைக்கப்பட்டால், அனைவரும் வாங்குவார்கள். இதனால் மின்சக்தி மிச்சப்படும். மின் உற்பத்தியும் பெருகும்.

அண்மையில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நல்ல பணியாற்றினார்கள். குறிப்பாக, சிறப்பாகப் பணியாற்றிய தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நான் பாராட்டுத் தெரிவித்துக்கொள்கிறேன். இரவு பகலாகப் பணியாற்றினார்கள். நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்பதால், அவர்கள் ஆற்றிய பணி எனக்குத் தெரிந்தது.

**திரு. எஸ். ஆர். இராதா :** எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நன்றாகச் செயலாற்றினார்கள். இதனால் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரோ, வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரோ நன்றாகப் பணியாற்றவில்லை என்று பொருளா ? உறுப்பினர் பார்த்தது அவர்களை மட்டும்தான்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** அதனால்தான் முன்கூட்டியே எச்சரிக்கையோடு சொன்னேன். நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன். எப்போது கலெக்டரைக் கேட்டாலும் அவர் செஞ்சி போயிருக்கிறார், அங்கே போனார், இங்கே போனார் என்று சொல்வார்கள். இதுபோன்ற கேள்வி வரும் என்று தான் எச்சரிக்கையோடு பேசுகிறேன். மற்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் பணியாற்றவில்லையென்று கூறவில்லை. அந்தப் பணிகளுக்காக பல லட்ச ரூபாய் சாலைப் போக்குவரத்திற்கும், விவசாயப் பெருமக்களுக்கும் செலவிட்டார்கள். அதற்காக பாராட்டுகிறேன். முக்கியமாக கிளியாறு பாலம் சீர்கெட்டுப் போனபோது, அதைப் பழுதுபார்க்க பல நாட்கள் தேவைப் பட்டது. மாற்றுப்பாதையான வேலூர் போய்த்தான் மற்ற இடங்களுக்குச் செல்ல முடியும் என்ற நிலையெல்லாம் ஏற்பட்டது. காலதாமதம் ஏற்பட்டது. ஆனால் அந்தப் பாலத்தைச் சீர் செய்ய நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தினர் தயாராக இருந்ததாகவும் நமது அரசு அவர்களை அழைக்கவில்லையென்றும் சொன்னார்கள். அவர்கள் விரைவில் சரிசெய்திருப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். ஏன் அவர்களை அழைக்கவில்லை என்று தெரியவில்லை. அவர்களை அழைத்திருந்தால், நான்கைந்து நாட்களில் முடித்திருப்பார்கள். என்னிடத்திலும் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் அழைக்காமல் நாங்கள் போகக்கூடாது என்றார்கள். ஆகவே எதிர்காலத்தில் இயற்கையால் ஏற்படும் விளைவுகளைச் சமாளிக்க பல்வேறு துறைகளோடும் சேர்ந்து, இதுபோன்ற பணிகளைச் செய்து காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிவாரணம் அளிக்கப்பட்டது. அந்த நிவாரணத் தொகைகளை மேலும் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-15)

அடுத்து, நம் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் குடும்பநலத் திட்டப் பணிகளுக்காக ஆரம்ப சுகாதார நிலையம். மற்றும் வட்ட மருத்துவமனைகளிலும் அறுவை சிகிச்சை அரங்குகள் கட்ட இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது மிகவும் வரவேற்கவேண்டிய அம்சமாகும். அதிலும் குறிப்பாக ஒவ்வொரு சமயத்திலும் இதுபோன்ற அறுவை சிகிச்சைகளுக்கு மாவட்டத் தலைநகரை நோக்கித்தான் வரவேண்டியிருக்கிறது. ஆனால் இனி மாவட்டத் தலைநகருக்கு வராமல் அந்த அந்த வட்டத் தலைநகர்களிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் அறுவை சிகிச்சை செய்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்.



அடுத்ததாக, மாவட்ட மருத்துவமனைகளில் வசதிகள் தற்சமயம் மிகவும் கம்மியாக இருக்கின்றன. குறிப்பாக கடலூர் மருத்துவமனையை எடுத்துக் கொண்டால், கடலூரில் ஒரு நாளைக்குப் பத்து விபத்துக்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏன் தஞ்சையை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்கக்கூடாது. கடலூர் தலைநகரில் நாள்தோறும் பத்து விபத்துக்கள் ஏற்படுகின்றன. விபத்துக்குள்ளானவர்கள் தலையில் அடிபட்டு மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டால், அவர்களைச் சென்னைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் அல்லது வேலூருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறுகிறார்கள். அவ்வாறு அழைத்துச் செல்லும்போதே, அவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது. நான் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அனைத்து வசதிகளையும் மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக தலையில் காயமடைந்தவர்களுக்கு உடனடி சிகிச்சைகளை மாவட்ட மருத்துவமனைகளிலேயே செய்துகொடுக்க வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவருக்குப் பொருள் நஷ்டம் ஏற்பட்டால் கூட ஈடு செய்யலாம். ஆனால் உயிரிழந்து விட்டால், அதை ஈடுசெய்ய முடியாது. எனவே ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் தலையில் அடிபட்டால் உடனே கவனிப்பதற்கு விசேஷ வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது மாவட்டப் பொது மருத்துவமனைகளில் உள்ள 'ஆம்புலன்ஸ்' வண்டிகள் மிகவும் பழுதடைந்த நிலைகளில் இருக்கின்றன. அவற்றில் நோயாளிகளை அழைத்துவரும்போது, நடு வழியிலேயே அவைகள் அடிக்கடி நின்று விடுகின்றன. ஓர் ஊர்தி இத்தனை ஆண்டுகளுக்கு இருக்க வேண்டுமென்று விதிமுறைகள் ஏதேனும் இருக்கலாம். ஆனாலும் மருத்துவத் துறையில் உள்ள இந்த ஊர்திகளைப் பொறுத்தவரையில், இவற்றிற்கு விதிவிலக்கு அளித்து, புதிய ஊர்திகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குழந்தைகள் நோய்த் தடுப்பு ஊசிகள்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தற்சமயம் மூன்று மாவட்டங்களில் நல்லமுறையில் அது செயல் பட்டு வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோய்த் தடுப்பு ஊசிகள் போடுவதற்கு, ரோட்டரி சங்கங்கள் போன்ற 'வாலன்டரி ஆர்கனைசேஷன்ஸ்' உதவிகளை நாட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்விக்காக அதிக நிதி ஒதுக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். கல்விக்காக எவ்வளவு நிதி ஒதுக்கினாலும், அது நாட்டின் முன்னேற்றத்தை வளர்க்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கல்விக்காக 1985-86 ஆம் ஆண்டு 85 உயர்நிலைப் பள்ளிகளும், 49 மேல்நிலைப் பள்ளிகளும் கொடுத்திருக்கிறார்கள். கட்டிட வசதி 1½ கோடி ரூபாய்க்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நமக்குக் குறைந்தது 100 கோடி ரூபாயாவது தேவைப்படும். ஆனாலும் இந்த 1½ கோடி ரூபாயின்மூலம் பல்வேறு கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நிதி ஒதுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளிகளில் 'வொகேஷன் ஸ்கீம்'-இல் ஆசிரியர் பயிற்சி கோர்ஸ் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இதே மேலவையிலே நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்து, தமிழகத்தில் பல்வேறு நிறுவனங்கள் வியாபார நோக்கத்துடன் ஆசிரியர் பயிற்சி கோர்ஸ்கள் நடத்துகின்றன என்று சொன்னபோது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இம் மன்றத்திலே அவைமீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிமொழியைக் கொடுத்தார்கள். அந்த உறுதிமொழிக்கிணங்க இந்த ஆண்டிலேயே ஆசிரியர் பயிற்சி கோர்ஸ்களை ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலேயும் ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இப்போது பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மட்டும்தான் அனுமதியைக் கொடுத்திருக்கிறார்கள். வரும் ஆண்டிலாவது ஆண்கள் பள்ளிக்கூடங்களுக்கும் அவ்வாறு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நடந்து முடிந்த ஆசிரியர் போராட்டத்தைப்பற்றி ஒரு சில கருத்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் போராட்டம் ஓர் அறப் போராட்டம் என்று அனைத்து உறுப்பினர்களும் கூறினார்கள். அதையே நானும் வலியுறுத்த விரும்புகிறேன். அவர்கள் சம்பள விகிதங்களைத்தான் மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஆசிரியப் பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்துப்பேசி ஒரு சுமுகமான முடிவு ஏற்படுத்தியதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போராட்டம் அரசியலாக்க ஆரம்பிக்கப்படவில்லை

(பிற்பகல் 5-20)

என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து ஆசிரியர்களும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுதான் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதலிலேயே அதிகாரிகள்





இந்தச் சிக்கலை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருப்பார்களே யானால், இவ்வளவு பெரிய போராட்டம் வந்திருக்காது என்று கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். அவர்கள் எவ்வளவோ முறை இந்தச் சிக்கல்களைப் பார்க்கிறேன், பார்க்கிறேன் என்று சொல்லி, முடியாத பிறகுதான் இவ்வளவு பெரிய போராட்டம் வந்தது. குறிப்பாக சில நிதி சம்பந்தப்பட்ட கோரிக்கை களைப் பார்க்கும்போது, அவையெல்லாம் அதிகாரிகள் மட்டத்தில் முடித்துக் கொடுத்திருக்க வேண்டிய கோரிக்கைகள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த வருடம் ஏப்ரல் 11 ஆம் தேதி கூறினார்கள். அதாவது 10 (ஏ) (1) ஆசிரியர்களைப்பற்றிக் கூறும்போது, ஆசிரியர்கள், அலுவலர்கள் ஒரு வருடத்திற்கு மேலாக பணியில் இருந்தால், அவர்களை இந்த அரசு பணியில் நிரந்தரம் செய்யுமென்று உறுதிமொழி கொடுத்தார்கள். அந்த உறுதிமொழிக்கேற்ப அது செயல்படுத்தப்படவில்லை. இந்தக் கோரிக்கைகளை அதிகாரிகள் அந்தந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் கொடுத்திருந்தால், இவ்வளவு பெரிய போராட்டம் வந்திருக்காது. அமைச்சர் அவர்கள் சுமுகமான முறையை ஏற்படுத்த முன்வந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஒரு நபர் கமிஷனை நியமித்திருக்கிறது. அப்படி அமைத்திருந்தாலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே அனைத்து ஆசிரியர்களும் மன நிறைவு பெறும் வகையில் ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு கைதான ஆசிரியர்களையும், அவர்கள் மேல் போடப்பட்ட வழக்குகளையும் சென்னையில் மட்டும் அரசு திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறது. மற்ற இடங்களில் அனைத்து மாவட்டங்களிலும் வழக்குகளை வாபஸ் பெறவில்லை. அந்த வழக்குகளையும் அரசு வாபஸ் பெற வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொறியியல் கல்லூரி ஒன்று சென்னைக்கு வர இருப்பதாக அறிகிறேன். சென்னையில் பல பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் பொறியியல் கல்லூரி இல்லை. பார்ட் 2 ஸ்கீமில் வடாற்காடு மாவட்டத்திற்கு ஒரு பொறியியல் கல்லூரி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொங்கல் பரிசை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறிவித்தார்கள். அதற்காக அவர் களுக்கு ஆசிரியர்களின் சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்தப் பொங்கல் பரிசு பகுதி நேர ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட

வில்லை. சத்துணவுத் துறையில் வேலை செய்யும் அமைப்பாளர்களுக்கும் அளிக்கவில்லை. அவர்களுக்கும் அதை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆளுநர் உரையில் படித்து வேலை இல்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு ஒன்றும் கூறப்படவில்லை. அவர்களுக்காக ஒரு திட்டம் கூறவேண்டும். வேலை வாய்ப்பு இல்லாத நிலைமை பயங்கரமான அளவுக்கு வளர்ந்து வருகிறது. அதுபற்றி ஒன்றுமே கூறவில்லை. பேரவை, மேலவையினுடைய எஸ்டிமேட்ஸ் கமிட்டி 1981 வரை 30 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பணி இடங்கள் தேவை என்று குறிப்பிட்டிருக்கிறது. இப்போது மேலும் ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது. நிச்சயமாக ஆசிரியர்களின் எண்ணிக்கை அதைவிட இன்னும் ஐந்து ஆயிரம், ஆறு ஆயிரம் மேற்கொண்டு வேண்டியிருக்கும். குறைந்தது 35 ஆயிரம் ஆசிரியர்கள் தேவை என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப் பார்க்கும்போது, வேலை இல்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு அந்த ஆசிரியர் வேலைகளைக் கொடுத்தால் அவர்களுக்கும் ஒரு வேலைவாய்ப்பு கொடுத்த மாதிரி இருக்கும். நேற்று மாண்புமிகு உறுப்பினர் செல்வி லீலாவதி அவர்கள் குறிப்பிட்டது போல, ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் இன்று ஒரு ஆசிரியர் 135 மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலைதான் இருக்கிறது. பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தால், ஓரளவுக்கு இந்த நிலைமை குறையலாம். வேலை வாய்ப்புபற்றிக் கூறும்போது, அனைவருக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பது என்பது கடினம். அவர்கள் சிறு தொழில் செய்ய பல்வேறு வழி வகைகளைச் செய்து கொடுத்தால், நிச்சயமாக நல்லமுறையில் அவர்கள் முன்னேற முடியும். படித்து வேலை இல்லாதவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் அரசு, மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக நமது மறைந்த பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் இட்ட சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் கடன்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதால், அந்த அவர்கள் பெற முடியவில்லை. அதிலும் குறிப்பாக கடனைப் பெற்றுவிட்டாலும்கூட, அவர்களுக்குத் தேவையான 'ஒர்க்கிங் கேப்பிட்டல்' அளிப்பதில்லை. அதையும் அளிக்க வேண்டும். அப்போதுதான் தொழிலில் நாம் முன்னேற முடியும். சிறு தொழில்களுக்கு உதவி அளிப்பதன் மூலமாக அனைவருக்குமே நாம் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வசதி ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





(பிற்பகல் 5-25)

அடுத்து, மாண்புமிகு வேலைவாய்ப்பு மற்றும் மறுவாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒரு கருத்தை அவருக்குச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் பட்டதாரிகளைப் பொறுத்த வரையில், பலரும் வேலை வாய்ப்புத் தேடித் தரும் நிறுவனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு, அதற்குப் பின்னர் 10, 12 ஆண்டுகள் காத்துக் கிடக்கிற சூழ்நிலை இருக்கிறது. உள்ளபடியே வேலை வாய்ப்புக்கு நேர்முக அழைப்பு வர வேண்டிய நேரத்தில், அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படுவதில்லை. அதற்குக் காரணம் அந்தப் 10, 12 ஆண்டுகளில் அவர்கள் குறிப்பிட்ட வயதைத் தாண்டிவிடுகிறார்கள். அதனால் அரசாங்க வேலைக்குப் போக அருகதை இல்லாமல் போய்விடுகிறார்கள். இவ்வளவு வருஷங்களாகக் காத்திருந்துவிட்டு, பின்னால் அவர்கள் எந்த ஒரு அரசு வேலைக்கும் செல்ல முடியாத நிலையை அடைந்து விடுகிறார்கள். இந்த வகையில் அவர்கள் தகுதி இழந்து விடுகிற காரணத்தால், தனியார் நிறுவனங்களிலும் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே பட்டதாரிகளைப் பொறுத்த வரை, அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் வயது வரம்பை—அதாவது அரசு அலுவலகங்களில் வேலைக்குச் சேருவதற்கான வயது வரம்பை அகற்ற வேண்டும் அல்லது தளர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே அவர்களைப் பொறுத்த வரையில் இன்னொரு வேண்டுகோளையும் விடுக்க விரும்புகிறேன். அரசு இன்றைய தினம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை உதவித் தொகை அளித்து வருகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு தமிழக அரசின் பொங்கல் பரிசுத் தொகையையும் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் தொழில் துறையில் ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தாலும், பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் மிகவும் பின் தங்கிய நிலையில்தான் இருக்கிறோம். மத்திய அரசு தமிழகத்தில் பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அவர்களை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் நமது மாநிலத்தில் அதிகமான வேலை வாய்ப்பு மட்டுமல்ல, அதையொட்டி பல்வேறு சிறு தொழில்களும் ஆரம்பிக்க வசதியாக இருக்கும். எனவே இந்த வகையில் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகரமான கடலூரில் சிப்காட் ஆதரவில் பெரிய தொழில்பேட்டை உருவாகியிருக்கிறது. சிப்காட்டின் மூல மாகப் பல ரசாயனத் தொழிற்சாலைகள் ஏற்கெனவே அங்கே உருவாகியிருக் கின்றன, இப்போதும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அந்த சிப்காட் காம்ப்ளெக்சில் ஏற்கெனவே ஒரு ஏக்கர் நிலம் ரூ. 45,000 என்று இருந்தது. இப்போது 45,000-லிருந்து ஒரு ஏக்கர் நிலத்தின் விலையை 1 லட்ச ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். தனியார்கள் வேண்டுமானால் இப்படி விலையை அதிகரித்து மார்கெட் பிளக்சுவேஷன் என்று சொல்லி லாபம் சம்பாதிக்க முற்படலாம். தொழில் தொடங்குவதற்காக ஏற்படுத்தப்படும் இந்த இடத் தில் ஒரு ஏக்கர் 45,000 ரூபாயாக இருந்ததை திடீரென்று ரூ. 1 லட்சம் என்று உயர்த்துவது சரியில்லை. நிச்சயமாக விலை ஏற்றம் இருக்கத்தான் செய்யும். ஆனால் அதற்காக 100 சதவீதம் விலையை ஏற்றுவது எந்த வகையிலும் ஒப்புக்கொள்ள முடியாதது. எனவே அதை 20 அல்லது 25 சதவீதமாக விலை ஏற்றினாலும் பரவாயில்லை. இவ்வாறு 100 சதவிகிதம் விலையை உயர்த்துவது தொழில் தொடங்க வருகிறவர்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்கு வதாக இருக்கிறது. சிறு தொழில் தொடங்குகிறவர்கள் ஒரு ஏக்கர் நிலத்தை 1 லட்சம் ரூபாய் கொடுத்து வாங்க முடியாது. எனவே அவர்களுக்கு அங்கே நிலத்தின் விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, தென்னாற்காடு மாவட்டம் புதுவை மாநிலத்திற்குப் பக்கத்திலே இருப்பதால், சிறு தொழில் தொடங்க நினைப்பவர்கள் பெரும்பாலும் பாண்டிச்சேரி சென்று விடுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் அங்கே அந்த அரசு பல்வேறு சலுகைகள் கொடுப்பதால், அந்தச் சலுகைகள் சிறு தொழில் அதிபர்களைக் கவருகிறது. அதோடு கடலூருக்கு அது மிகவும் அருகாமையிலேயே இருக்கிறது. இதன் காரணமாக தென்னாற்காடு மாவட்டத்தில் தொழில் தொடங்குகிறவர்கள் கஷ்டப்படுகிறார்கள். தொழில் தொடங்கினாலும், அதன் காரணமாக நஷ்டப்படுகிறார்கள். எனவே தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களையுமே பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்க வேண்டும். இப்போது சில வட்டங்களை மட்டுமே அரசு பின்தங்கிய வட்டங்களாக அறிவித்திருக்கிறது. அதற்குப் பதில் தென்னாற்காடு மாவட்டம் முழுவதையுமே பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் விளையாட்டைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வியில் விளையாட்டும் ஒரு முக்கியமான



அம்சம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது, குதிரைப் பந்தயத்தைக் கூட 'ஸ்போர்ட்ஸ்' என்று தெரிவித்தார்கள். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். நான் விளையாட்டில் அதிகமான ஆர்வம் உள்ளவன். அதனால் அதைக் குறித்தும் ஒரு கருத்து சொல்ல விரும்பு கிறேன். அண்மையில் கோவை நகரத்தில் நடந்து முடிந்த தேசிய மகளிர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் அனைத்துப் பிரிவுகளிலும் வெற்றி பெற்று "ஓவர் ஆல் சேம்பியன்" பட்டத்தைப் பெற்றிருக்கிறது.

(பிற்பகல் 5-30)

அதற்காக முதலில் நான் தமிழக அணிகளுக்கு என்னுடைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது விளை யாட்டு வளர்ச்சிக் குழுவிற்குத் தலைமை தாங்கும் திரு. சிவந்தி ஆதித்தன் அவர்கள் விளையாட்டுத் துறைக்கு பல்வேறு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் நல்ல முறையில் வழங்கி வருகிறார்கள். அவர் கோவையில் ஒரு வாரம் தங்கி, இரவு பகல் பாராமல், தன் உடல் உழைப்பைச் செலுத்தி பல்வேறு வேலைகளைச் செய்து கொண்டிருந்தார். அந்த அளவிற்கு அவர் உழைத்த தால்தான், பெரிய வெற்றி கிடைத்தது. நாம் விளையாட்டு வளர்ச்சிக் கழகம் வைத்தால் மட்டும் போதாது. அந்தக் கழகத்திற்கு மேலும் நிதி ஒதுக்கீடு கொடுக்க வேண்டும், பல உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பல்வேறு பெரிய நிறுவனங்கள் விளையாட்டை ஊக்கு வித்துக்கொண்டு வருகின்றன. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் கடந்த ஒரு வருஷத்திற்குள் 350 விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் நியமித்திருக்கிறார்கள். பல்வேறு விளையாட்டுக் குழுக்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். விளை யாட்டிற்காக பல கோடி ரூபாய் செலவு செய்து நல்ல முறையில் செய்திருக் கிறார்கள். தமிழகம் அண்மையில் சிறப்பாக பல வெற்றிகளை கோவையில் பெற்றதற்குக் காரணம் நெய்வேலி விளையாட்டு வீரர்கள்தான் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் பெரிய நிறுவனங்களுக்கு தமிழக அரசு பல சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் விளையாட்டு அரங்கம் இல்லை. கடந்த முறை நம் நாட்டுக்கும் ஜப்பானுக்கும் இடையே கைப்பந்து போட்டி நடக்கவிருந்தபோது, அன்று மாலை அந்தப் போட்டி நடக்குமா என்ற

சந்தேகத்தை இந்த மன்றத்திலே தெரிவித்தேன். அதே மாதிரி அன்று மாலை அந்தப் போட்டி நடக்கவில்லை. அதற்கு விளையாட்டு அரங்கம் சென்னையில் இல்லை என்பதுதான் காரணம். ஆகவே விளையாட்டு அரங்கை ஏற்படுத்த மத்திய அரசிடமிருந்து ஐலண்ட் கிரவுண்டை நமது அரசு கேட்டுப் பெற்றால், அங்கே மல்ட்டி-ஸ்டேடியத்தைக் கட்டலாம். அங்கே அனைத்து விளையாட்டுக்களையும் விளையாட வசதியாக இருக்கும். அப் போது பல்வேறு விளையாட்டு வீரர்களை இந்த மாநிலத்தின் சார்பாக உருவாக்க முடியும். நாம் விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தை உருவாக் கினால் மட்டும் போதாது. ஆகவே தமிழக அரசு முழு முயற்சி எடுத்து மத்திய அரசாங்கத்திடமிருந்து ஐலண்ட் கிரவுண்டை வாங்கிக் கொடுக்க வேண்டும். அங்கே பெரிய விளையாட்டு அரங்கம் வர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளிலும் விளையாட்டை வளர்க்க முடியும். பள்ளிகளில் ஆர்.ஐ.பி.ஈ.—க்கள் (ரீஜனல் இன்ஸ்பெக்டர் ஆஃப் பிசிக்கல் எஜுகேஷன்) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆர்.ஐ.பி.ஈ. இருக்கிறார், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் கிறித்துவர்களுக்காக பல சலுகைகளை அளித்தார்கள். அதற்காக பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மாநிலத்தில் ஒரு சமூகத்தில் நான்கைந்து பின்தங்கிய பிரிவினர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய வகுப்பினர் அனைவருக் கும் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. எக்கனாமிக் ஸ்டேடசைக் கணக்கிட்டு அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்து, எக்கனாமிக் ஸ்டேடஸின்படி அனைத்துப் பிரிவினர்களும் பின்தங்கிய வகுப்பினர் என்று அறிவித்தார்கள். அதன் பிறகு பல்வேறு போராட்டங் கள் வந்ததால், அதை மாற்றி மீண்டும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும், சமூகத் திற்கும் பின்தங்கிய வகுப்பினரை அறிவித்தார்கள். ஒவ்வொரு சமூகத்தி லும் நான்கைந்து பிரிவினர்கள் இருந்தால், அவர்கள் அனைவருக்கும் சலுகை கொடுக்காமல் இருக்கிறார்கள். அவர்களுடைய பொருளாதார நிலை பற்றி ஆர்.டி.ஓ., தாசில்தார் ஆகியவர்கள் கொடுக்கும் சான்றிதழ்களை வைத்துக்கொண்டு, அவர்களுக்கும் சலுகைகளைக் கொடுத்தால், நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



காவல் துறையைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றும் குறிப்பிடப்பட வில்லை. தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு மிகவும் சீர்கேடு அடைந்திருக் கிறது. காவல் துறையினர் அதிகமான எண்ணிக்கையில் இல்லாததால், பல்வேறு அசம்பாவிதங்கள் நடக்கின்றன. ஆகவே காவலர்களை நியமிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். 6 மாதங்களுக்கு முன்பு சப்-இன்ஸ் பெக்டர்களுக்காகத் தேர்வு நடந்தது. அந்தத் தேர்வின் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை. அவர்களை விரைவிலே தேர்வு செய்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், தலைநகருக்கும் நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 5-35)

பொதுவாகக் காவல்துறையைப் பற்றிக் கூறும்போது, ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு செக்ஷன் இருக்கின்றது. ப்ரோகிபிஷன் செக்ஷன் இருக்கின்றது. லா அண்டு ஆர்டர் செக்ஷன் இருக்கின்றது. கிரைம் செக்ஷன் இருக்கிறது. அதுபோன்று கொலைகள் பற்றி சட்டம் ஒழுங்கைப் பார்ப்பவர்கள்தான் பார்க்கிறார்கள். நேரமின்மை காரணமாக அவர்கள் சரியாக அந்தப் பணியைப் பார்க்க முடியவில்லை. அதனால் கோர்ட்டிலே சில வழக்குகள் தேங்கியிருக்கின்றன. தனியாக ஒரு பிரிவை மாவட்டந் தோறும் வைக்க வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற கொலைகளைப் பற்றி கவனிக்க முடியும். அதற்கு வழிவகுக்க வேண்டும். நிச்சயமாக அதனால் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊர்க்காவல் படை காவல் துறையைச் சேர்ந்த ஒரு பிரிவுதான். அதற்குப் பல்வேறு சலுகைகளை தமிழக அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், இது பல்வேறு மாவட்டங்களில் பிரிந்து இருக்கின்றது. வழக்கு மன்றங்கள் முன்சீப் கோர்ட்டு, மாஜிஸ்ட்ரேட் கோர்ட் பல இடங்களில் இருக்கின்றன. கடலூரைப் பொறுத்தவரையில், வழக்கு மன்றங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடத்தில் இருக்கின்றது. அனைத்து வழக்கு மன்றங்களையும் குறிப்பிட்ட இடத்தில் நடத்துவதற்கு வசதி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** இன்னும் சில உறுப்பினர்கள் பேசவேண்டியதாக இருக்கின்றது. பலர் ஊருக்குப் போவதாக இருக்கின் றார்கள். 6 மணிக்கு முடித்துக்கொள்ள வேண்டும். சீக்கிரம் முடிக்க வில்லை என்று சொன்னால், அவர்கள் ரயிலைக் கோட்டை விட்டுவிடுவார்கள்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: அடுத்தபடியாக, போக்குவரத்தைப் பற்றிக் கூறும்போது, மோட்டார் வெகிக்கிள்ஸ் டேக்சேஷன்பற்றிச் சொல்கின்றேன். இதிலே நியமித்த சில விகிதங்களை முன்பு மாற்றினார்கள். புதிய டேக்ஸ் கட்ட வேண்டும் என்று கூறினார்கள். அனைவரும் ஒப்புக்கொண்டாலும், பல முறை 'ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து அதிலே கட்ட வேண்டும் என்று கூறினார்கள். அந்த முறையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக, முன்பு ஒவ்வொரு வாகனத்திற்கும் சிறப்பு எண்கள் வாங்க 100 ரூபாய் என்று இருந்தது. இப்போது அதை ரூ. 500 என்று ஆக்கிவிட்டார்கள். முன்பு ரூ. 100 என்று இருந்ததைப் போலவே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, முக்கியமாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் பல வளர்ச்சித் திட்டங்களை அமுலாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த வளர்ச்சித் திட்டங்களிலே சத்துணவுத் திட்டம், சீருடை வழங்குதல், வீடு கட்டுதல் போன்ற திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. வருவாய் நமக்கு வருகின்றது. எந்த அளவுக்கு வருவாயைப் பெருக்கியிருக்கிறோம் என்பதை அந்தந்தத் துறைகள்தான் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அந்த வருவாயைப் பற்றிக் கூறுவதற்கு நான் வரும்போது, ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். முன்பு முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் இருந்தபோது, பொருளாதார நிபுணர் டாக்டர் பி. நடராசன் என்பவர் அட்வைசராக தமிழக அரசில் இருந்தார்கள். அதேபோன்று தமிழக அரசு ஒரு பொருளாதார நிபுணரை நியமித்து, அவர் மூலமாக எந்த அளவுக்கு வருவாயைப் பெருக்க வேண்டும் என்று வழி வகுத்துக் கொடுக்க வேண்டும். இப்போது அந்தந்தத் துறைகள்தான் செய்துகொண்டிருக்கின்றன. பொருளாதார ஆலோசகரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்புக் கொடுத்ததற்கு மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. காடுவெட்டி கண்ணப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தில் கலந்துகொள்கின்ற வாய்ப்பினை தந்தமைக்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் திட்டப்பணிகளை ஆக்க பூர்வமாகவும், செம்மையாகவும் அரசு செயலாக்கி வருகிறது என்பதனை பல இடங்களிலே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். அதிலே குறிப்பாக நாடு வளம் பெறும் வகையில், வளர்ந்து வருகின்ற வறுமையைக் குறைக்கின்ற வகையில் 20 அம்சத் திட்டத்தை இன்றையதினம் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடியாக சிறப்பாகச் செயலாக்கி வருகின்றது என்பதை ஆளுநர் அவர்கள் பெரு





மிதத்தோடு குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுபோலவே எதிர்காலத்தில் நெருக்கடியை உருவாக்குகின்ற மக்கள் பெருக்கத்தைக் குறைப்பதிலே தமிழகம் இந்தியாவிலேயே முதன்மையாக நின்று, தேசிய விருதாக ஏறத்தாழ 2½ கோடி ரூபாயை மத்திய அரசிலேயிருந்து பெற இருக்கிறது என்பதை நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே சிறப்பாக எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள்.

(பிற்பகல் 5-40)

மத்திய அரசு 2½ கோடி ரூபாய் தேசிய விருதாகத் தருகிற அந்த நேரத்தில் அரசியல் ரீதியாகவும் அந்த மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகிற மாநிலங்களுக்கு உதவியாக இருக்குமானால், அது ஏற்புடையதாக இருக்குமென்று கருதுகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 41 பாராளுமன்ற இடங்கள் இதற்கு முன்னாலே இருந்ததாக அறிகிறேன். ஆனால் படிப்படியாக அது குறைந்து, 39 என்ற இடத்திற்கு வந்து நிற்கிறது என்று சொன்னால், மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலே அந்தப் பிரதிநிதித்துவத்தை ஒதுக்குகிற காரணம்தான். அதனால் நமக்கு 2 இடங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இன்றைய தினம் இந்த அவையின் மூலமாக மைய அரசுக்குச் சொல்வது நம்முடைய கடமையாகும். ஒவ்வொரு மாநிலத்திலும் மக்கள் தொகையை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்துகிறார்களோ அந்த அளவுக்கு பிரதிநிதித்துவம் அதிகப்படுத்தப்படும் என்ற நிலையை மத்திய அரசு எடுக்குமானால், வளர்ந்து வரும் மக்கள் பெருக்கத்தைக் குறைப்பதற்கு ஏதுவான ஒன்றாக அது இருக்குமென்பதை உணர்ந்து கொண்டிருக்கிறோம். பண உதவியாக 2½ கோடி ரூபாய் தரும் அதே நேரத்தில், ஊக்க போனசாக 300 ரூபாயை நாம் ஆசிரியர்களுக்குக் கொடுத்ததுபோலவே, ஊக்க போனசாக ஒரு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை நமக்குக் கொடுக்க மத்திய அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒரு புறத்தில் இயற்கையின் சீற்றத்தால் பயிர்களும், பிற செல்வங்களும் நஷ்டப்படுத்தப்பட்டு இருக்கின்றன. அதனால் தமிழகத்திலே திட்டப் பணிகளை முறையாகச் செயல்படுத்த முடியாத நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மழை இல்லாத காரணத்தாலே கோவை, பெரியார் மாவட்டங்களிலும், அதற்குப் பக்கத்திலே இருக்கிற சேலம், மதுரை போன்ற மாவட்டங்களிலும் இன்றைய தினம் நிலத்தடி நீர் குறைந்துகொண்டு போய், அங்கே குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சூழ்நிலை பரவலாகக் காணப்படுகிறது. பெரியார், கோவை மாவட்டங்களில் மழையின்மையால் நஞ்சை பயிரிட முடியாது. புஞ்சைப் பயிர்கூட அங்கே விளைவிக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

இங்கே காவிரி தண்ணீர் பிரச்சினை பற்றிப் பேசினார்கள். காவிரியில் தண்ணீர் இல்லாத காரணத்தாலே, பவானித் தண்ணீர் தஞ்சைக்கு விடப்பட்டுள்ளது. லோயர் பவானியில் தண்ணீர் இல்லாததால் அந்தப் பகுதியில் வறட்சியாக இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. எனக்குத் தெரிந்த விதத்தில் சொல்ல வேண்டுமென்றால், தண்ணீர் இருக்கிற காலத்தில் அந்த லோயர் பவானி கால்வாய்களில் தண்ணீர் விட்டு அந்தப் பகுதிகளில் உள்ள குளம், குட்டைகளை ஒருமுறை நிரப்பிவிட்டால், நிலத்தடி நீர் பற்றாக் குறையைப் போக்கி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை நாம் உணர வேண்டும். இந்திய நாட்டில் பாந்து பெய்யும் அனைத்து மழை நீரையும் முழுமையாகப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பாரதத்தில் மழை பெய்து, அதனால் ஏற்படும் வெள்ளச் சேதத்திற்கும், வறட்சியால் ஏற்படும் நிலைமைகளுக்கும் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வருடாவருடம் செலவிடுவது ஒரு தொடர்கதையாக இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு இதில் தலையிட்டு, இதற்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட்டால், இந்திய நாடு தன்னிறைவு பெறும். உற்பத்தியிலும், பொருளாதாரத்திலும் தன்னிறைவு பெற இது ஒரு மூலகாரணமாக அமையும் என்பதை உணர்ந்தாக வேண்டும்.

இன்றைய தினம் கேரள மாநிலத்திலுள்ள புன்னம்புழா, பாண்டியாறு ஆகியவற்றிலிருந்து தண்ணீரை நமக்குத் திருப்பிவிட்டு, அந்தத் தண்ணீரைக் கொடுத்தால், அதைப் பயன்படுத்தி இயற்கையால் வறட்சியாக இருக்கும் பெரியார், கோவை, மதுரை மாவட்டங்களில் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட நல்லதொரு சூழ்நிலை வரும். கங்கை-காவிரியை மத்திய அரசு இணைக்கிறதோ இல்லையோ, அதைப்பற்றிக் கவலை இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தேசிய நதி நீர் கவுன்சிலில் பேசும் போது, மாநிலங்களுக்கு இடையிலே ஓடிக் கொண்டிருக்கும் ஆறுகளை தேசிய நதிகள் என்று பிரகடனப்படுத்துமாறு வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்தியாவிலே ஓடுகிற அத்தனை நதிகளின் தண்ணீரையும் இந்திய நாடு முழுவதும் பயன்படுத்த வேண்டுமென்றால், அது எங்கே உற்பத்தியானாலும், இந்தியாவில் உற்பத்தியாகிறது என்ற உணர்வோடு நதி நீர் அத்தனையும் மத்திய அரசு தேசிய மயமாக்க முன்வரவேண்டும். குறிப்பாக வடபுலத்தில் இருக்கிற தண்ணீர் இங்கே வராவிட்டாலும், தென் மாநிலங்களில் இருக்கிற தண்ணீரையாவது ஒருங்கிணைந்து ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும்படி, தென் மாநில மக்களுக்குப் பயன்படுகிற விதத்தில் நாம் செயல்பட்டால், இந்திய நாட்டின் பொருளாதாரம் உயரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அதுபோலவே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பொருளாதார அடிப் படையே உற்பத்தியாகிற மின்சாரத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. மின் உற்பத்தி ஆண்டுக்காண்டு பெருகினாலும், பெருகி வருகிற மின்சாரத் தேவையை நம்மால் பூர்த்தி செய்ய இயலவில்லை. இப்போதுள்ள மின் திட்டங்கள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. அதற்குப் பின்பும் அதிலே தன்னிறைவைப் பெறாமல் இருக்கிறோம். அந்தச் சூழ்நிலையை மாற்ற இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றாலும், முழுமை பெற மைய அரசு அதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நம்மால் தன்னிறைவைப் பெறமுடியும். அதுபோலவே கல்வி பற்றிப் பேசினார்கள். நம்முடைய தமிழகத்தின் கல்வியானாலும், இந்தியக் கல்வியானாலும், மெக்காலேயின் கல்வி முறையைத்தான் நீண்ட நெடுங்காலமாக நாம் பின்பற்றி வருகிற காரணத்தால், அது ஏட்டுச்சுரைக்காயாக இருக்கிறதைப் பார்க்கிறோம். வாழ்க்கைக்கு எந்த அளவுக்கு அந்தக் கல்வி பயன்படுகிறது? எம்.ஏ., பி.ஏ., என்று படிக்கிற படிப்பு பயன்படவில்லை வாழ்க்கைக்கு. அதை உணர்ந்து தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் ஒரு கல்வித் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். ஒருவன் படிக்கிற கல்வி, அவனது வாழ்க்கைக்கும் நாட்டுக்கும் உதவவேண்டும் என்ற எண்ணத்தில் புரட்சித் தலைவர் இந்தத் தொழில் கல்வி முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள் அந்த அடிப்படையில் தான் மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் அவர்கள் புதிய கல்விக் கொள்கையை இன்று நாட்டிலே அறிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் 16 ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்களில் இந்தக் கல்வியைக் கற்பிக்க நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்தியாவில் இருக்கிற பள்ளிக்கூடங்களில் 50 சத வீதம் தமிழ் நாட்டில் இருப்பதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. எனவே கல்விக் கொள்கையில் ஒரு சிறப்பான வாழ்வியல் கல்வியாக இது இருக்கும் விதத்தில் மாற்றியமைத்து, தமிழகத்தில் ஒரு புரட்சிகரமான உணர்வை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது.

அதைப்போலவே, ஆசிரியர்கள் பிரச்சினை, நேற்றையதினம் இங்கே பேசிய ஆசிரியர்கள் பிரதிநிதிகள் எல்லாம் அவர்கள் எப்படி ஒரு அற்புதமான அறப்போராட்டத்தை நடத்தினார்கள் என்று மார்தட்டிச் சொன்னார்கள். பம்பாயிலே நடைபெற்ற காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் பாரதப் பிரதமர் இந்திய நாட்டின் ஆசிரியர்களைப்பற்றி ஒன்றைச் சொன்னார்கள். நல்ல மாணவர்களை உருவாக்குவது ஆசிரியர்களின் கடமை என்றார்கள். அது உண்மை. வளர்ந்து வருகிற சமுதாய வளர்ச்சிக்கேற்ப, மாணவர்களை

உருவாக்கும் ஆற்றல் ஆசிரியர்களிடத்தில் குறைந்து வருகிறது என்று சொன்னால் ஆசிரியர்கள் பிரதிநிதிகள் வருந்தக் கூடாது. இந்தக் கருத்தை, பிரதமர் அவர்கள் வருத்தத்தோடு பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்கள். வளர்ந்து வருகிற இந்தச் சமயத்தில் மாணவர்களின் ஆற்றல் குறைந்து வருகிறது என்று சொன்னார்கள். நான் ஒரு புத்தகத்தில் படித்தேன்—அமெரிக்க திருநாட்டில் கல்வி முறையைப்பற்றி அதிலே படிக்கிறபோது, அந்த நாட்டில் ஆசிரியர்கள் யாரும் நிரந்தரமாகக் கிடையாது என்று. அமெரிக்காவில், ஆசிரியர்கள் யாரும் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை. அது உண்மை. நிரந்தரமான வேலை அவர்களுக்கு அங்கே கிடையாது. அதை ஏன் தமிழகத்திலே செய்யக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். ஆசிரியர்களின் செயல் திறன், அந்த நாட்டிலே மதிப்பீடு செய்யப்படுகிறது. நம்முடைய பள்ளிக் கூடங்களைப் பாருங்கள், ஆசிரியர் பிரதிநிதிகள் வருத்தப்படக்கூடாது. அவர்களுடைய போராட்டம் செம்மையான போராட்டம்தான். மறுக்கவில்லை. அந்தப் பிரச்சினையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு தாயைப்போல அவர்களை அழைத்து அவர்கள் கேட்ட சலுகைகளையெல்லாம் கொடுத்தார்கள். மீண்டும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-50)

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். இதுபோல் ஆசிரியர்களைத் தெய்வத்திற்குச் சமமாகக் கருதுவோம்.

ஆசிரியர்கள் மனம் கோணாமல் மாணவர்கள் படிக்க வேண்டும். ஆசிரியர்கள் பெருமைகளையெல்லாம் நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியப் பெருமக்கள் தங்கள் அறப்போராட்டத்தின் மூலம் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் அறப்போராட்டம் நடந்துமுடிந்த நிலையைப் பார்க்கிறபோது, அது அரசியல் போராட்டமாகத்தான் எனக்குத் தெரிந்தது. தயவுசெய்து ஆசிரியர்கள் தங்களையே ஒருதடவை கேட்டுப் பார்த்துக் கொள்ளட்டும்.

செய்யாறு தேர்தல் களத்தில் நான் பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தேன். தமிழ் நாட்டுப் பத்திரிக்கைகள் எல்லாம், மாற்று அரசியல் தலைவர்கள் எல்லாம் தலையங்கம் எழுதினார்கள், செய்யாறு தேர்தல் களத்தில் ஆளும் கட்சியை வீழ்த்துவதற்கு ஆசிரியர் படை புறப்பட்டது என்று பத்திரிக்கையிலே எழுதினார்கள். எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் ஆசிரியர்களை தங்களவர்களாக ஆக்கிக்கொண்டு, தலைமைப் பொறுப்பு ஏற்றிருப்பதுபோல ஒரு மாயையை உருவாக்கினார்கள்.



**திரு. அ. மயில்சாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ செய்யாறு தேர்தலில் ஆசிரியர்கள் அரசை எதிர்த்து தேர்தல் பிரச்சாரம் செய்யவிருந்ததாகச் சொன்னார்கள். நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். எங்களைப் பொறுத்த வரையில், நாங்கள் கோரிக்கைகளுக்காகத்தான் போராடினோமே தவிர, அரசியல் ரீதியில் அல்ல என்பதை எல்லோருமே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் மீண்டும் நினைவுபடுத்திக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இயக்கத் தலைவர்கள் வந்ததாகச் சொல்லவில்லை. பத்திரிக்கையில் வந்த செய்தியைத்தான் நான் சொன்னேன். தேவையானால் அதை நானே கொண்டு வந்து காட்டுகிறேன். "செய்யாறு தேர்தல் களத்தில் ஆசிரியர் பெரும் படை வந்திறங்கி இருக்கிறது ஆளும் கட்சியை வீழ்த்த" என்று அந்தப் பத்திரிக்கையில் வந்த செய்தியைச் சொல்லுகிறேன். அவ்வாறு அந்தப் பத்திரிக்கையில் வர இடம் கொடுத்தது யார் என்றுதான் நான் கேட்கிறேன். ஆசிரியர்கள் என்ற போர்வையிலே அரசியல் குண்டர்கள் நமக்குத் தெரியாமல் புகுந்துகொண்டார்களா என்றுதான் கேட்கிறேன்.

**திரு. மு. செ. சங்காலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிக்கைச் செய்தியை ஆதாரமாக வைத்துப் பேசுகிறார். உண்மையில் அவ்வாறு வந்ததை உறுப்பினர் அவர்கள் பார்த்தார்களா என்று தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏனென்றால், ஆசிரியர்களின் கூட்டுக்குழு, ஆசிரியர்களை செய்யாறு தேர்தலில் வேலை செய்ய, செல்லவேண்டுமென்று கோரவில்லை. எனவே அதை உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்தாவிட்டால், நாட்டு மக்களுக்குச் சந்தேகம் வரும் என்பதால், அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிக்கைச் செய்தி உண்மை என்று சொல்கிறேன். அவ்வாறு அப்பத்திரிக்கையில் போடுவதற்கு இடம் கொடுத்தவர்கள் யார்? அதை ஆசிரியர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்களா என்பதே என்னுடைய தாழ்மையான கேள்வி. அதுமட்டுமல்ல. செய்யாறு வீதிகளிலே எப்படி எப்படியெல்லாம் கோஷத்தைப் போட்டார்கள்? ஒவ்வொரு நாளும் அவர்கள் ஊர்வலத்தைப் பார்த்தவன் என்ற முறையிலே சொல்கிறேன். ஆசிரியர்களுக்கு உண்மையிலே நான் மரியாதை கொடுக்கிறவன். அவர்களின் பணிக்கு உண்மையிலேயே தலைவணங்குகிறவன். ஆசிரியர்கள் போர்வையிலே அரசியல் குண்டர்கள் உள்ளே புகுவதற்கு அவர்கள் அனுமதி கொடுக்கலாமா என்றுதான் நான் கேட்கிறேன். அதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. அ. மயில்சாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிக்கையிலே அப்படிச் செய்தி வந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் அந்தப் பத்திரிக்கைச் செய்தியை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கு மறுப்பு நாங்கள் கொடுத்தாலும், அதுபோன்ற பத்திரிக்கைகள் மறுப்புச்செய்தியைப் போடுவதில்லை என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, இதற்காக என் இதயபூர்வமான நன்றியை ஆசிரியர் தலைவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மீண்டும் அப்படி ஓர் ஆசிரியர் போராட்டம் வந்தால், அதை அரசியல் போராட்டமாக உருவாக்காமல் எதிர்காலத்திலாவது எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று எதிர்கால சந்ததியை உருவாக்குகின்ற ஆசிரியப் பெருமக்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-55)

தமிழகத்தைப் பொறுத்தவரை, தமிழகத்தினுடைய தலைவிதி, யார் போராட்டம் நடத்தினாலும், எதற்கு நடத்தினாலும், ஆளும் கட்சிக்கு எதிராக இருக்கிறவர்கள் அதற்குக் கொடி பிடித்து வருவதே தலையெழுத்தாக மாறிவிட்டது. அவர்கள் எதற்காகப். போராட்டம் நடத்துகிறார்கள் என்பதைக்கூட யோசனை செய்யாமல், "ஆளுகிறவர்கள் ஒழிக" என்று யார் கோஷம் போட்டாலும், அவர்களைத் தன்னவர்களாக ஆக்கிக் கொள்ளும் பழக்கம் இந்தத் தமிழ் நாட்டினுடைய தலைவிதியாக இருக்கிறது. பாரதி கூடச் சொன்னார். இந்தத் தமிழ் திருநாட்டை, விதியைப் பார்த்து என்ன செய்யப் போகிறாய் என்று சொன்னார். ஒரு காலத்திலே வேதனையோடு பாடினார். எனக்குக்கூட அந்த வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. "ஏ! விதியே! இந்தத் தமிழ் ஜாதியை என்ன செய்யப் போகிறாய்?" இப்படிப் பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே என்று எண்ணுகின்ற அந்த வேதனையான உணர்வு தான் இப்போது எனக்கு வருகிறது.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** உறுப்பினரவர்கள் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. மு. செ. சங்காலிங்கம் :** மாற்றுத் தலைவரவர்களே, இம்மாதிரிப் போராட்டம் வாராமல் ஆளும் கட்சித் தலைவர்கள் ஒன்றாக இருந்து பார்த்திருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. ஆகவே நாங்கள் நவம்பர் 3 ஆம் தேதி போராட்டத்தை ஆரம்பிக்கும்போது, அதை நிறுத்து





வதற்கு வாய்ப்பு கொடுத்திருந்தால், அது நின்று போயிருக்கும் இனி வருங் காலத்திலாவது, அந்தமாதிரிப் போராட்டம் வராமல் பார்த்துக்கொள்வது மாண்புமிகு உறுப்பினருக்கும் பொருந்தும் என்று கேட்டுக்கொண்டு இதை அவர்களும் அரசியலாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாற்றுத் தலைவரவர்களே, அரசு பொறுப்போடுதான் நடந்திருக்கிறது. பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பிரச்சினைகளில் ஈடுபட்டு, அதனுடைய பொறுப்பான நடவடிக்கைகளின் வாயிலாக அந்தந்தப் போராட்டங்களைத் தடுத்திருக்கிறது. அதற்காக நாட்டிலுள்ள அத்தனை பேரும் பல்வேறு காரணங்களுக்காக உடனடியாகப் போராட்டங்களையும், வேலை நிறுத்தத்தையும் செய்வார்கள் என்று சொன்னால், அதற்கு அரசை மட்டும் குறை சொல்வது சரியாக இருக்காது. அரசு மிகவும் பொறுப்போடுதான் நடந்திருக்கிறது.

**திரு. காடுவெட்டி கண்ணப்பன் :** அப்படிப்பட்ட நிலைமை நாட்டில் இருக்கிறது. இங்கிலாந்து திருநாட்டிலே பார்லிமெண்டில் மெம்பர் சேலரி பில் வந்தது. அப்போது எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டாமென்று சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிற வரலாறு உண்டு. அதை நிறைவேற்றியதற்குப் பின்னால், ஆளும் கட்சியில் இருக்கிறவர்களையும், எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களையும் அந்தப் பார்லிமென்ட் கட்டிடத்தை விட்டு அவர்கள் வெளியே வரும்போது பொதுமக்கள் பாராட்டி அவர்களுக்கு மாலை போட்டிருக்கிற ஒரு காட்சி இங்கிலாந்து திருநாட்டிலே நடந்திருக்கிறது. ஆனால் இங்கே எதைச் சொன்னாலும் எதிர்க்க வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதற்கு ஒன்றைக் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் ஏறத்தாழ 9½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டினுடைய மொத்த குடிமக்கள் 5½ கோடி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த 5½ கோடி பேர்கள் கொடுக்கிற வரிப் பணம் அல்லது மூலதனத்தில் 51 விழுக்காடு இந்த 9½ லட்சம் அரசு ஊழியர்கள்—ஆசிரியர்கள் உட்பட சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 5½ கோடி மக்கள் கொடுக்கிற வரிப் பணத்தில் 9½ லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 51 விழுக்காடு பணத்தை சம்பளமாகத் தருகிறது இந்த அரசு. மிச்சம் இருப்பது 49 விழுக்காடுதான். அதிலேதான் க்ஷேம நலங்கள் செய்தாக வேண்டும். பாலம் கட்ட வேண்டும், ரோடு போட வேண்டும், குழாய் போட வேண்டும், தண்ணீர் கொடுக்க வேண்டும்—இத்தனையும் இந்த

49 விழுக்காட்டில்தான் தந்தாக வேண்டும். உறுப்பினர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே இந்த நிலையில் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மனிதாபிமானத்தோடு, தயவுசெய்து நான் சொல்லிக்கொள்வது, இந்த 9½ லட்சம் பேரைத் தவிர மீதி இருக்கிற மக்களை தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். புரட்சித் தலைவர் கூட ஒரு நேரத்திலே வருத்தத்தோடு சொன்னார்கள். ஒரு சேலையைத் துவைத்து, ஒரு முனையை இடுப்பிலே கட்டிக்கொண்டு, மறு முனையைக் காயவைத்து, மீண்டும் அதை இடுப்பிலே கட்டிக் கொண்டு வாழக்கூடிய தாய்மார்கள் பல லட்சம் பேர்கள் இந்த நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வுக்கு நாம் என்ன உத்திரவாதம் தந்து கொண்டிருக்கிறோம்? அரசு ஊழியர்கள்; ஆசிரியர்களுக்கு 1 ஆம் தேதியானால் சம்பளம் உண்டு. அதிலே மாற்றம் கிடையாது. அது உண்டா, இல்லையா? ஆனால் பல லட்சக் கணக்கான மக்கள் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். வயல் வெளிகளிலே, ஆலைகளிலே தங்களுடைய கைகளையும், கால்களையும், உடல்களையும் இயந்திரமாக ஆக்கி அங்கே ரத்தத்தை வியர்வையாகச் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகளுக்கு என்ன உத்திரவாதம்? தயவுசெய்து படித்த பெருமக்கள் மனிதாபிமான உணர்வோடு எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே அந்த அடிப்படையிலே நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களேயானால், இந்தப் பிரச்சினைகள் நாட்டிலே எழாமல் தடுக்கப்படும். எனவே எதிர் காலத்திலேயாவது, ஆசிரியர்களுடைய போராட்டம், அறப் போராட்டமாக இருக்க வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்பதிலே அரசுக்கு, இந்த ஆட்சிக்கு கருத்து வேறுபாடு இல்லை. அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்வதிலே இந்த ஆட்சிக்குக் கருத்து வேறுபாடு கிடையாது என்பதைச் சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

(பிற்பகல் 6-00)

**திரு. மு. மாசிலாமணி**: மாண்புமிகு மேலவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கான வாய்ப்பை நல்கியதற்காக நான் என்னுடைய சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற முடிதிருத்துவோர் சமூகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற அத்தனை கருத்துக்களுமே தமிழகத்தில் தாழ்ந்து கிடக்கிற, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்ற கருத்துக்களாக அமைந்திருக்கின்றன என்பதை முதலில்





நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சிலவற்றை மட்டும் சொல்லி நான் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கிற தமிழ் அகதிகள் மொத்தம் சுமார் 1,25 லட்சம் பேர்கள். இவர்களில் சுமார் 30,000 பேர்களுக்கு தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் தங்குவதற்கான வசதி செய்துதரப்பட்டிருக்கிறது. இதனை தமிழகத்தின் 5 கோடி மக்களின் தளநாயகர் டாக்டர் புரட்சித் தலைவர் செய்திருக்கிறார் என்று எண்ணும்போது முதலில் நாம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, தமிழகத்தில் மின் உற்பத்திக்காக வரும் 7-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் மட்டும் ரூ. 2,000 கோடி செலவிட இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் செலவிடப்படும் ரூ. 5,750 கோடியில் பெரும் தொகையாகும் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, தமிழக அரசு மின் உற்பத்திக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பது புலப்படும். தமிழகத்தில் எங்கேயும் இருள் இல்லாமல் ஒளி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பியதன் காரணமாக, ஏழை எளிய மற்றும் தாழ்ந்து கிடக்கிற குடிசை வாழ் மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகிய அனைவருடைய இல்லங்களிலும், அவர்கள் வாழும் பகுதிகளில் உள்ள வீதிகளிலும் மின் ஒளி அமைத்து இன்றைக்கு ஒளி வழங்கப்படுவதைக் கண்டு மக்கள் சந்தோஷப்படுகிறார்கள். அப்படியிருந்தும் கூட, பொதுவாக இதில் உள்ள ஒரு சில குறைபாட்டை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நாட்டை விட்டு வெள்ளையன் வெளியேறிய பிறகு, மின்சார உற்பத்தி அதிகரித்தும்கூட, பல்வேறு இடங்களுக்கு மின்சாரத்தை அனுப்புவதற்குத் தேவையான டிரான்ஸ்பார்மர் அதிகமான அளவுக்கு இல்லாமல் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்லாவரத்திலிருந்து கூடுவாஞ்சேரி வரை பார்க்கிறபோது, பல்வேறு பகுதிகளில் அதிலும் குறிப்பாக, பெருங்களத்தூர் முடிச்சூர் ஆகிய பகுதிகளில் ஒரு நாளும் மின்சார விளக்குகள் எரியாத காரணத்தால், மக்கள் அங்கே அச்சத்தோடு வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மின்சக்தி தேவையான அளவுக்கு உற்பத்தியாகவில்லையா என்றால், உற்பத்தியாகி இருக்கிறது. ஆனால் டிரான்ஸ்பார்மர்கள் போதுமான அளவுக்கு அமைக்கப்படாததால், இந்த நிலைமை அங்கே இருந்து வருகிறது. அங்கே பணியாற்றும் மின்சார வாரியத் தொழிலாளர்களையும் பணியாளர்களையும் கேட்டால், 100 ஆண்டுகளுக்கு முன்னாலே போட்ட டிரான்ஸ்பார்மர்கள்தான் இப்போதும் இருக்கின்றன, அதனாலேதான் இந்த நிலைமை என்று சொல்லுகிறார்கள். ஆக, நான் இந்த

அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் இதுதான். இந்த அரசு செய்கிற நல்ல பல காரியங்கள், அதிலும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து வருகிற பல நல்ல காரியங்கள் வேறு எந்த மாநிலங்களிலும் செய்யப்படாத காரியங்கள், ஏன் இந்திய உப கண்டத்திலேயே அனைவரும் பாராட்டுகிற காரியங்கள் இங்கே செய்யப்பட்டாலும் கூட, அவற்றை நடைமுறைப்படுத்தும்போது, அதன் பலன் மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், அங்கேதான் தடைக் கற்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். எனவே அந்தத் துறையில் உள்ள உயர்மட்ட அதிகாரிகள் இவற்றைப்பற்றி கவனத்தில் கொண்டு சரியாகச் செயல்பட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழக மக்கள் நலமோடு வாழ்வதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை நன்கு செயல்பட்டு வருகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் போல் இன்றையதினம் பிறந்த குழந்தைகள் இறவாமல் இருக்க, தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை மிகவும் சிறப்பாகச் செய்து வருகிறது. அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருக்கே உரித்தான பாங்கில் காரியமாற்றிக் கொண்டு வருகிறார். 1978 ஆம் ஆண்டிலிருந்தே நான் அவரை நன்கு அறிவேன். சமூகத் தொண்டானாலும் சரி, அரசியல் தொண்டானாலும் சரி, அல்லது குடும்பத்தில் ஒருவனானாலும் சரி, அல்லது வீட்டிலே குடியிருப்பனானாலும் சரி, அல்லது வீதியில் போகிற சாதாரண ஆளாக இருந்தாலும் சரி, அவர்களைப் பார்த்த உடனே நீங்கள் நலமாக இருக்கிறீர்களா என்று முதலில் அவர்களின் கையைப் பிடித்து நாடி பார்த்து இலவசமாக மருந்து கொடுத்து வந்தவர் அவர். மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்களின் முகஸ்துதிக்காக நான் இதனைச் சொல்லவில்லை. மக்களின் நல்வாழ்வுக்காக அவர் பல காரியங்கள் இன்றைக்கு ஆற்றிக் கொண்டிருக்கிறார் என்றால், அதற்கு எடுத்துக்காட்டு இது. அவர் மூதறிஞர் இராஜாஜி

(பிற்பகல் 6-05)

காலத்திலேயிருந்து, பேரறிஞர் அண்ணா காலம் வரை மூதறிஞர் இராஜாஜியின் தலைமையின் கீழ் பணியாற்றி, பிறகு புரட்சித் தலைவர் காலத்திலே அவருடைய தலைமையின்கீழ் இருந்து கொண்டு, இந்த நாட்டுக்கு நல்ல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நோய்த் தடுப்பு ஊசியைப் போடுகிறார்கள் என்றாலும், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம், நீலகிரி மாவட்டம், நெல்லை மாவட்டம், இன்னும் தென்னாற்காடு மாவட்டத்தில் பல பகுதிகள் ஆகியவற்றில் எல்லாம் கொசுத் தொல்லைகள் இருப்பதால் ஏற்படும் நோய்களைத் தடுக்க முடியவில்லை.



கேட்பாரற்ற நிலையில் இருக்கிறது. இன்றைக்கு மக்களை வாட்டி வதைக்கிற நோய்கள் காச நோய், சர்க்கரை நோய், உப்பு நோய் ஆகியவைகள்தான். இந்நோய்கள் தங்களுக்கு இருக்கின்றன என்பதையே அறியாமல் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நோய்கள் அமைச்சராக இருந்தாலும் விடுவதில்லை, மேல் சபை உறுப்பினராக இருந்தாலும் விடுவதில்லை, சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் விடுவதில்லை, நிருபர்களாக இருந்தாலும் அவர்களையும் விடுவதில்லை. ஏனென்றால் அதிகப்படியான பணியாலும் பொருளாதார மேம்பாட்டின் காரணமாக இயற்கையாக உள்ள சூழ்நிலையைச் செயற்கையாக ஏற்படுத்திக்கொள்வதாலும் இந்த நோய்கள் வருகின்றன. நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்த நாட்டில் இத்தகைய நோய்களால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னுமொன்றைச் சொல்கிறேன். இந்த நோய்களுக்கு ஆளாகிற குழந்தைகள் ஏராளம். சாதாரணமாக மூன்று வயது குழந்தைகளுக்குக் கூட உப்பு நோய் வந்திருக்கிறது. இரண்டு வயது குழந்தைக்குக் கூட சர்க்கரை நோய் வந்திருக்கிறது. இதற்குக் காரணம் அவர்களுக்கு வளர்ப்பு முறை சரியில்லை, போதுமான ஊட்டச்சத்து அவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்பதுதான். பராமரிப்பு குறைந்ததன் காரணமாக, குடும்பத்தில் உள்ள குழந்தைகளை அலட்சியமாக வளர்ப்பதன் காரணமாக இத்தகைய நோய்கள் வந்திருக்கின்றன. அரசு பொது மருத்துவமனைக்குச் சென்று நேரில் பார்த்தால் தெரியும். இராயப்பேட்டை மருத்துவமனைக்குச் சென்று போய்ப் பார்த்தால் தெரியும். நேற்று வரை நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார், திடீரென்று இன்றைய தினம் இறந்துவிட்டார் என்பார்கள். திரு. ஈ. எஸ். வெங்கடேசன் அவர்கள் இந்த அவையில் உறுப்பினராக இருந்தார். அவர் நல்ல திடமான உள்ளத்தோடு இருந்தார். இப்போது அவர் அகால மரணம் அடைந்தார் என்று செய்தி வந்தது. இப்போதெல்லாம் நோய் வருவது என்பதே புதுமையானதாக, ஃபேஷனாக இருக்கிறது. ஆகவே மக்கள் நல்வாழ்வு அமைச்சர் அவர்கள் டாக்டர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நோய்களைப்பற்றி டெஸ்ட் செய்யும்போது, டாக்டர்கள் சொல்லுவதைக் கேட்கிற பொதுமக்கள் மிகவும் வேதனையடைகிறார்கள். எடுத்த எடுப்பிலேயே உனக்கு சர்க்கரை வியாதி என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். எடுத்த எடுப்பிலேயே உனக்கு உப்பு வியாதி என்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே உனக்கு மூளை வியாதி என்கிறார்கள். எடுத்த எடுப்பிலேயே உனக்கு பலம் இல்லை, வீக்காக இருக்கிறாய் என்று நோயாளியைப் பார்த்துச் சொல்லும்போது அவன் மேலும் 'வீக்' ஆகிறான்.

**திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் :** அப்படியென்றால் மருத்துவர்கள் வியாதியைப் பற்றிச் சொல்லக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறாரா? அவர்களுடைய நோயை மறைத்து வேறுவிதமாகச் சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. மு. மாசிலாமணி :** தம்பி கணேசன் கேட்டதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். காலை ஏழு மணிக்கு அரசு பொது மருத்துவ மனை திறக்கப்படுகிறது என்று சொன்னால், அங்கு செல்ல விரும்பும் ஒருவன் விடியற் காலை நாலரை மணிக்கே எழுந்து சென்று பஸ் பிடித்து அங்கே போய் க்யூவில் நின்று டோக்கன் வாங்கி மருத்துவரைக் காணச் சென்றால், டாக்டர் எட்டு மணிக்குத்தான் வருவார். டாக்டரும் மனிதன்தானே. அவருக்கும் வியாதி இருக்கும். அவருக்கும் கவலையால் வியாதி வந்திருக்கும். காரணம் ஒரு டாக்டர் 700 நோயாளிகளைக் கவனிக்க வேண்டும் என்றால், அவருக்கு எப்படி நோய் வராமல் இருக்கும்? ஆகவே அவர்களுக்கு அலட்சியம் வந்துவிடுகிறது. அண்ணா அவர்கள் ஒன்றைச் சொல்லுவார்கள். திருப்பதி கோவிலுக்குச் சென்று ஒருவர் ஏழுமலையானைத் தரிசித்துவிட்டு வெளியே வரும்போது, நூறு ரூபாயை எடுத்து வீசுவார், பிறகு காலாஸ்திரிக்கு வரும்போது 50 ரூபாயை வீசுவார், பிறகு அங்கிருந்து திருவள்ளூருக்கு வரும்போது 25 ரூபாயை வீசுவார், பிறகு எல்லாம் போய் திருவல்லிக்கேணி பார்த்தசாரதியைப் பார்த்துவிட்டு வரும்போது கொண்டு போன பணத்தை செலவழித்துவிட்டு ஓட்டாண்டியாக் பெல்ஸ் ரோடுக்கு வருவார். அப்போது அவரைப் பார்த்து பிச்சைக்காரன் 'ஐயா பத்துப் பைசா போடுங்கள்' என்று கேட்கும்போது 'சே சே போய்யா' என்று விரட்டுவார். திருப்பதியில் 100 ரூபாய் கொடுத்த அதே மனம், காலாஸ்திரியில் 50 ரூபாயைக் கொடுத்த அதே மனம், திருவள்ளூரில் 25 ரூபாயை கொடுத்த அதே மனம், கடைசியில் பெல்ஸ் ரோடுக்கு வரும்போது 'சே சே போய்யா' என்று சொல்லுவதைப் போல அரசு மருத்துவ மனை டாக்டர்களும் ஆகிவிடுகிறார்கள். காலை 7 மணிக்கு வருகிறார். 8 மணிக்கு வார்ட் பேஷன்ட்களைப் பார்க்கிறார். ஒன்பது மணிக்கு ஆப்பரேஷன் தியேட்டருக்குப் போகிறார். பத்து மணிக்கு காப்பி சாப்பிடுகிறார். பத்து, பதினோரு மணிக்கு அவருக்கு ஆயாசம் வருகிறது. அந்த நேரத்தில் உயிர் போகக்கூடிய ஒரு நோயாளி வந்தாலும், 'போய்யா, போ, உனக்கு வேலையில்லை. நாளை வாய்யா போய்யா' என்று சொல்லுகிறார்கள். டாக்டர்கள்



(பிற்பகல் 6-10)

எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அட்டென்டர்களை அதிகப்படுத்த வேண்டும். நோயாளிகளுக்கு ஏற்ப குமாஸ்தாக்களை அதிகப்படுத்த வேண்டும். அங்கே மருந்து கொடுப்பார்கள். அங்கே போகின்ற போது பார்க்கலாம். அந்த அம்மையார் அவருடைய குழந்தைகளை வீட்டிலேவிட்டு இங்கே வந்து வேலை செய்கின்றார். அந்த அம்மையார் தலைவலிக்கு மருந்து கேட்டால், வயிற்றுப் போக்குக்கு மருந்து கொடுப்பார்கள். அங்கே மூலத்திற்கு மருந்து கேட்டால் பேதி ஆகின்றதற்கு மருந்து கொடுக்கின்றார்கள். இந்தமாதிரியான குழப்பம் இருக்கும். இது எல்லாம் நடக்கிறது. இயற்கை. நாம் பார்க்கிறோம். நானும் அந்தத் துறையிலே இருக்கிறேன். சில டாக்டர்கள் சொல்வார்கள். "கொஞ்சம் அவசரப்படாதீர்கள். பொறுமையாக இருங்கள். என்ன சார், நானும் மனிதன் தானே" என்பார்கள். எம்.எல்.ஏ., ஹாஸ்டலில் டாக்டர் இருக்க வேண்டும். ஒரு நாள் 10 மணிக்குப் போனேன். லைட் எரியவில்லை. என்னடா என்று பார்த்தால், அங்கே கம்பௌண்டர் இருக்கின்றார். பூட்டு போட்டுக் கொண்டு சேர் போட்டுக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருக்கின்றார். சட்டசபை நடந்துகொண்டிருக்கின்றது. ஹாஸ்டலில் டாக்டர் இல்லையே என்று சொன்னால், 'எழுதிக்கொடுங்கள்' என்று சொல்கின்றார்கள். திரு. ஆறுமுகம், டீன் அவர்களிடம் சென்று சொன்னால், "என்ன நடந்தது என்று எழுதிக் கொடுங்கள், நான் அவருக்கு மெமோ கொடுக்கிறேன்" என்று சொல்கின்றார்கள். அப்படி மெமோ கொடுத்தவுடனே அவர்கள் என்ன பண்ணுகின்றார் என்றால், "சரி யார் கொடுத்தது? அ.தி.மு.க. எம்.எல்.சி. என்றால், சரி தி.மு.க. எம்.எல்.சி. யைப் பார்ப்போம். அவரைப் பிடித்து நாம் போவோம்", ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் அவர் மூலம் கொண்டு வருவோம்; அதைக்கொண்டு வந்து திடீரென்று இந்த டாக்டரை சஸ்பெண்ட் செய்யலாமா, இது அநீதி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே செய்த கொடுமை" என்று சொல்வார்கள். இருக்கின்ற தவறைக் கேட்டால், அது கொடுமை. நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது சட்டமன்றம் நடைபெறும் நாட்களிலே சட்டமன்றத்திலே ஒரு அறையை வைத்து ஒரு டாக்டரை அங்கே அமர்த்துங்கள் என்று சொல்கிறேன். இல்லாததால்தான் மாயூரம் கிட்டப்பா அவர்கள் மாரடைப்பால் அன்று இறந்துவிட்டார். ஒரு நல்ல மனிதனை இழந்துவிட்டோம். திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் சொல்வார்கள். இரங்கல் கூட்டம் போட்டால் சொல்வார்கள். அவர் வீரன், சூரன், நல்ல பேச்சாளன், சிந்தனையாளன் என்று சொல்லும்போது, அவர் பின்னர்

பேசும்போது பேசுவார், "என்ன ஐயா, ஒரு மனிதனை வீரன் சூரன் என்று செத்துப்போனவனைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அவ்வளவு அநாவசியமாகச் சொல்கின்றீர்கள். 10 மாதம் சுமந்து பெற்ற தாயைக் கேட்க வேண்டும்" என்று சொல்வார்கள். ஏன் அந்த மனிதனைக் காப்பாற்ற முடியவில்லை என்று அப்போது திரு. சிற்றரசு அவர்கள் பேசும்போது கேட்பார். எங்களுடைய தலைவர்களில் ஒருவர் சிந்தனை சிற்பி. சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். ஆகவே 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நோயாளிகளுக்கு நல்ல சிகிச்சையைத் தர வேண்டும். நல்ல சிகிச்சை இல்லை என்று சொன்னால், அவர் இன்றையதினம் புரூக்ளின் மருத்துவ மனைக்குச் சென்று வந்திருக்க முடியாது. அவர் வர முடியாது என்று சபதம் செய்தவர்கள் எல்லாம் ஏமாந்து போகின்ற அளவிலே அவர் வெற்றிவாய்ப்பை பெற்று எல்லோரையும் ஏமாற்றி, ஏழு உலகத்திற்கும், அதள, சுதள, பாதாள, அகில உலகங்களையும் பார்த்துவிட்டு, நிச்சயமாக மீண்டும் வந்து இன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டு 5 கோடி மக்களுக்கு என்று இப்பேர்ப்பட்ட திட்டங்களை தருவார்கள் என்று கருதினார்களா? நிச்சயமாக இல்லை.

'இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்று எழுதி வைத்துவிட்ட
சிவனும் செத்துவிட்டானோ,
முட்டமுட்ட பஞ்சமேயானாலும் பாரம் அவனுக்கு அன்றோ
என் நெஞ்சமே அஞ்சாதே'

என்று சொன்னார். அதைத்தான் நிரூபித்துக் காட்டினார். எத்தனையோ கோடானு கோடி மக்கள், மத சார்பற்ற முறையில், அது இஸ்லாமிய சமுதாயம் ஆனாலும் சரி, அது புத்த சமுதாயமாக இருந்தாலும் சரி, அது வைணவ சமுதாயமாக இருந்தாலும் சரி, அது ஜைன சமுதாயமாக இருந்தாலும் சரி, சைவ சமுதாயமாக இருந்தாலும் சரி, அத்தனையையும் ஒரே குரலிலே இருக்கச் செய்தார்கள். அண்ணா அவர்கள் சொன்னதை நிரூபித்துக் காட்டினார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். ஒருவனே குலம் ஒருவனே தேவன், யாதும் ஊரே யாவரும் கேளிர், எம்மதமும் சம்மதம் என்று சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட புரட்சித் தலைவர் அவர்களை நாம் பெற்றிருக்கின்ற நோக்கிலே அந்த முறையிலே நான் சொல்லிக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இப்படி பல பெரிய காரியங்களைச் செய்து வருவதை நான் பாராட்டுகிறேன். அவர்கள் மேன்மேலும் டாக்டர்களையும் நர்ஸ்களையும் போட்டு அவர் துறைக் காரியங்களை மேலும் நல்ல முறையில் செய்யச் செய்து நல்ல பணிகளை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இறுதியாக, ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்று சொல்கிறேன். தாழ்ந்த மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு 5 லட்சம் வீடுகளும், இன்னும் நலிந்த பிரிவிலே உள்ளவர்களுக்கு 5 லட்சம் வீடுகளும் கட்டிக் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. உதாரணமாகச் சொல்வதென்றால் இந்த நாட்டிலே உள்ள கவிஞர்கள்கூட பலர் பிச்சைக்காரர்களாக, பராரிகளாக இருக்கின்றார்கள். அவர்கள் கவிதைதான் பாடிக் காட்டினார்களே தவிர, அவர்கள் முன்னேறவில்லை. நான் கவிஞர் முத்துலிங்கத்தைப்பற்றிச் சொல்லவில்லை. அவர்கள் இப்போது வீடற்ற நிலையில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். 40 ஆண்டுகளுக்கு முன்னாலே தேசிய தியாகி விஸ்வநாதன் என்பவர் இருந்தார். இந்த நாட்டிலே "கொக்கு பறக்குதடி பாப்பா" என்று பாடிச் சென்றிருக்கின்றார்கள். தியாகத்தை தன் செயல் மூலமாகவும், நாடகம் மூலமாகவும் காட்டியிருக்கின்றார்கள். அவரைப்போன்று பல தியாகிகளுக்கு இன்றும் வீடில்லை. அதைப்போன்று டி. கே. சண்முகம் பிரதர்ஸ் அவர்கள் நாடகக் குழுவிலே அவர்கள் காலத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த 40, 50 பேர்கள் அந்த நிலையில் இருக்கின்றார்கள். அந்த தொழிலாளிகளை வைத்துத்தான் அவர்கள் நாடகம் நடத்தினார்கள். அது போன்று நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் நாடகம் அமைத்து நடத்தினார்கள். அதிலே இருந்த கலைஞர்கள் பலர் இன்றைய தினம் வாழ வசதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு டி. வி. நாராயணசாமி, திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் போன்றவர்கள் எல்லாம் நாடகம் நடத்தினார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் இன்று ஆட்சியிலே இருக்கின்றார்கள். அன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் நடிகராக இருந்தபோதுகூட நாடக நடிகர்களை அணைத்துக்கொண்டு போயிருக்கின்றார்கள். அவர்களுக்கு முன்னாளிலேயே வாழ்வளித்திருக்கின்றார். அந்த நாடகக் கலைஞர்களுக்குக் கோடம்பாக்கத்திலே சில வீடுகளைக்கூட கொடுத்திருக்கின்றார்கள்.

(பிற்பகல் 6-15)

அதைப்போன்று இன்றைய தினம் 5 இலட்சம் வீடுகளை நலிந்த பிரிவினருக்குக் கட்டித் தர இருக்கிறார்கள். அதிலே முடி திருத்துவோர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், குயவர்கள், தேவாங்கர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சலவைத் தொழிலாளர்கள், விஸ்வகர்மா இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர்களுக்கு வீடுகளைக் கட்டித் தர வேண்டும். அரசுத் துறையிலே இருக்கிற பியூன்கள்கூட தங்களுக்கு வீடுகள் இல்லை என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அவர்களும் நலிந்த பிரிவினர் என்ற அடிப்படையிலே வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, அந்தத் திட்டத்தை வரவேற்று,

[திரு. மு. மாசிலாமணி] [1986 ஜனவரி 24

ஆளுநர் அவர்கள் உரையை நெஞ்சார வரவேற்று, பேசுவதற்கு வாய்ப்பளித்த மாற்றுத் தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மேலவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை 27—1—1986 திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 6-16)

**9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

**அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

இல்லை.

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

29. உடுக்குறியிடப்படாத வினாக்கள் 1 முதல் 6 வரையிலான விடைகள்.



## இணைப்பு I

(25 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

பெரியார் மாவட்டம், பவானி வட்டம் சின்னப்புலியூரிலுள்ள திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் மற்றும் இரசாயனத் தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 10 லட்சம் லிட்டர்கள் எரிசாராயம் உற்பத்தி செய்கின்றது.

பெரியார் மாவட்டம், பவானி வட்டம், ஆப்பக்கூடலிலுள்ள திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட் மாதமொன்றுக்கு பதினைந்து லட்சம் லிட்டர் தொழிற்சாலைச் சாராயம் உற்பத்தி செய்கின்றது.

எரிசாராயம் தயாரிக்கக் கரும்பு மொலாஸஸை மூலப்பொருளாகப் பயன்படுத்துகின்றது. மொலாஸஸை மும்மடங்கு நீருடன் கலந்து, ஈஸ்டுடன் 8 மணி நேரம் தொட்டிகளில் புளித்துப் பொங்க வைக்கப்படுகின்றது. பின்னர் நீர்த்த மொலாஸஸ் கலக்கப்பட்டு இரண்டாம் நிலைத் தொட்டிகளில் அந்தக் கலவையினை மேலும் 40 முதல் 60 மணி நேரம் வரை வரையறுக்கப்பட்ட "பி.எச்" மற்றும் வெப்ப நிலைகளில் புளிக்க வைக்கப்படுகின்றது. புளிக்க வைக்கப்பட்ட மொலாஸஸ் பகுத்து வடித்தல் மூலம் 96 விழுக்காடு எரிசாராயம் பெறப்படுகின்றது.

எரிசாராயத் தொழிற்சாலைக் கழிவுநீர் பொதுவாக அமிலத் தன்மையுள்ளதாகவும், கரும்பழுப்பு நிறமுள்ளதாகவும் ஏறக்குறைய 30,000 மி.கி./லி.-லிருந்து 40,000 மி.கி./லி. வரை உயிர் ரசாயன உயிரகத் தேவையும் 9,000 லிருந்து 10,000 மி.கி./லி. வரை மிதக்கும் திடப்பொருட்களும், 90,000 முதல் 1,00,000 மி.கி./லி. வரையிலான கரையாத் திடப் பொருட்களையும் கொண்டுள்ளது. சுத்திகரிப்பு செய்யப்படாத கழிவுநீர் நீர்நிலைகளில் வெளியிடப்பட்டால் நீர்நிலைகளில் பிராண வாயு குறைந்து நெடி வீசுவதோடு, நீர்நிலைகள் மாசடையக் காரணமாகலாம்.

திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் மற்றும் கெமிக்கல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரால் வெளியிடப்படும் கழிவுநீரின் அளவு நாளொன்றுக்கு ஏறக்குறைய 4.80 லட்சம் லிட்டராகும். சுத்திகரிக்கப்படுவதற்காக 2.3 கி.மீ. தொலைவிலுள்ள பவானி ஆற்றின் கரையில் அமைந்துள்ள சுத்தி

கரிப்பு நிலையத்திற்குக் கால்வாய் மற்றும் குழாய்கள் மூலம் கழிவுநீர் கொண்டு செல்லப்படுகின்றது. முடிவில் 70 நாள் கொள்ளளவு உள்ள காற்றிலித் தொட்டி மூலம் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு பின்னர் 40 நாட்கள் கொள்ளளவுள்ள காற்றிலித் தொட்டியில் சுத்திகரிக்கப்படுகின்றது. சுத்தி கரிக்கப்பட்ட கழிவுநீர் ஓரிச்சேரி கிராமத்தில் நிலத்தில் பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட் தொழிற்சாலை நாளொன்றுக்கு 99 லட்சம் (கலவையின் திட்டம் தளர்ப்பதற்கான நீரும் சேர்ந்தது) லிட்டர் அளவில் தொழிற்சாலை கழிவுநீரை வெளிவிடுகின்றது. இத்தொழிற்சாலை தொழிற்சாலைக் கழிவுநீரைத் திட்டம் தளர்ப்பதற்கான நீருடன் சேர்த்த பின்னர், இத்தொழிற்சாலையின் சர்க்கரை ஆலைப் பிரிவினின்று வரும் கழிவுநீரோடு சேர்த்து பெரியார் மாவட்டம், பவானி வட்டம், ஓரிச்சேரி கிராம நிலத்தில் பாசனத்திற்குப் பயன் ஆகின்றது.

இவ்விரு தொழிற்சாலைகளும் கழிவுநீரை வெளியிடுவதற்கான தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அனுமதியை, 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் பெற விண்ணப்பித்தன. வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைக்கேற்ப குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் கழிவுநீரை சுத்திகரித்து வெளியேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் கீழ் 1—2—1985 வரை செல்லுபடியாகுமளவில் 2—2—1984 அன்று திருவாளர்கள் கோயமுத்தூர் ஆல்கஹால் மற்றும் கெமிக்கல் பிரைவேட் லிமிடெட் தொழிற் சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டது. 27—10—1985 வரை செல்லுபடியாகு மளவில் 28—10—1984 அன்று திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் நிறுவனமென்னும் எரிசாராயப் பிரிவிற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

திருவாளர்கள் சக்தி சுகர்ஸ் லிமிடெட் மற்றும் திருவாளர்கள் கோயம் புத்தூர் ஆல்கஹால் நிறுவனம் ஆகிய இரு தொழிற்சாலைகளும் தாம் சுத்தி கரிப்பு ஆலையை நிறுவுவதற்காக வேண்டி, திருவாளர்கள் எஸ். ஜி. என்., பிரான்ஸ் மற்றும் திருவாளர்கள் பி. எஸ். ஸ்நோக்லென் எஸ்.பி.ஏ., இத்தாலி ஆகிய வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தமொன்று செய்து கொண்டிருப் பதாக திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் மற்றும் கெமிக்கல் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையினர் தெரிவித்திருந்தனர். மத்திய அரசு தொழிற் துறை இவ்வந்நிய உடனுழைப்புக்கான ஒப்புதலளித்துள்ளது.



பெரியார் மாவட்ட ஆட்சியர் நீர்மாதிரிகளைச் சேகரிக்கவும் அவற்றைக் கோயம்புத்தூரிலுள்ள மக்கள் நல்வாழ்வு ஆய்வுச்சாலையில் பகுப்பாய்வு செய்யவும் ஏற்பாடு செய்துள்ளார். மாவட்ட ஆட்சியர் 26—12—1985 நாளன்று பவானியாற்றில் நீர் மண்ணிறமாக இருந்ததென்றும், 27 ஆம் நாளன்று நீர் தெளிவாக இருந்ததென்றும் தெரிவித்திருக்கின்றார். ஈரோடு தலைமைப் பணியிடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகளைப் பூர்வாங்க ஆய்வுகள் நடத்தியதில் நீர் குடிக்கத்தக்கதாகவும், நச்சு சார்ந்திடா மலும் இருந்ததென்றும் தெரிய வந்துள்ளது. இதுபற்றி பத்திரிகைச் செய்தி ஒன்றும் மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஆயினும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஆய்வுச்சாலையில் பகுப் பாய்வதற்காகக் காவிரியாற்றில் அமைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்டுள்ள தலைமைப் பணியிடங்களிலிருந்து நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன :—

(1) ஈரோடு நீர் வழங்கு திட்டம்.

(2) வீரப்பன்சத்திரம் நீர் வழங்கு திட்டம்.

(3) பெருந்துறை ஒருங்கிணைந்த நீர் வழங்கு திட்டம் மற்றும் தேசிய பால் வளர்ச்சிக் கழக நீர் வழங்கு திட்டம்.

இம்மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

2—1—1986 நாளன்று பார்வையிட்டபோது, 23—12—1985 நாளன்று பவானிசாகர் அணையிலிருந்து நீர் திறந்துவிடப்பட்டிருப்பதாகக் கூறப் பட்டது. 24—12—1985 அன்று பவானியாற்றில் நீரோட்டம் மிகுந் திருந்தது. திருவாளர்கள் கோயம்புத்தூர் ஆல்கஹால் மற்றும் கெமிகல் பிரைவேட் நிறுவனத்தை பார்வையிட்ட நேரத்தில் ஆற்றோரப் பக்கங்களி லுள்ள நீர்த்தேக்கத் தொட்டிகள் முக்கால் பாகம் காலியாக இருந்தது தெரிய வந்தன. ஆயினும் நீர்த்தொட்டிகளில் உடைப்போ ஒழுக்கோ இல்லை.

8—1—1986 அன்று இவ்விரு தொழிற்சாலைகளிலிருந்தும் கழிவுநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய ஆய்வுச் சாலையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. வாரியம் நிர்ணயித்துள்ள வரை முறைகளுக்கேற்ப கழிவுநீர்ச் சுத்திகரிப்பு மேம்பாடடைய மேற்கண்ட இரு தொழிற்சாலைகளின் முன்னேற்ற அறிக்கைகள் வாரியத்தால் கண்காணிக்கப் பட்டு வருகின்றன.

இணைப்பு II

(90 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 16 OF 1986.

(As passed by the Assembly)

*A Bill to provide for the acquistion, for a public purpose, and transfer of the undertaking of the Madras Race Club and for matters connected therewith or incidental thereto.*

WHEREAS the Madras Race Club which is a company within the meaning of the Companies Act, 1956 (Central Act 1 of 1956), is engaged in the business of running of horse races at Madras and at Uthagamandalam including the business of intervenue betting;

AND WHEREAS it has been brought to the notice of the Government that the Committee of management of the Madras Race Club is ridden with factions and that the affairs of the said Club are not conducted properly and in particular in the interests of the race going public;

AND WHEREAS instances of irregularities and malpractices in the conduct of the horse races have been brought to the notice of the Government;

AND WHEREAS it has been brought to the notice of the Government that the book-makers keep huge amounts of bet from records causing substantial loss of revenue to the Government;

AND WHEREAS the Government are satisfied that the Madras Race Club is being mismanaged and that the interests of the race-going public have been affected considerably;

AND WHEREAS the irregularities and malpractices in the conduct of the races and in the conduct of the affairs of the Madras Race Club have resulted in the concentration of wealth and means of production in a few hands, and to the common detriment;

AND WHEREAS with reference to clauses (*b*) and (*c*) of Artcle 39 of the Constitution, it is expedient to provide that the ownership and control of the material resources of the Madras Race Club is so distributed as best to subserve the common good and that the operation of the economic system of the Madras Race Club does not result in the concentration of wealth and means of production to the common detriment;

AND WHEREAS it is necessary that the interests of the race-going public should be better served;

AND WHEREAS a policy decision has been taken to acquire for a public purpose the undertaking of the Madras Race Club to enable the State Government or a Corporation or a Company wholly owned by



the State, to properly conduct the horse races and to carry out the other objects of the Club, so as to subserve the interests of the general public and in particular, the race going public;

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-sixth Year of the Republic of India as follows:—

### Chapter I.

### PRELIMINARY.

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras Race Club (Acquisition and Transfer of Undertaking) Act, 1986.

(2) It shall come into force at once.

2. *Declaration.*—It is hereby declared that this Act is for giving effect to the policy of the State towards securing the principles laid down in clauses (*b*) and (*c*) of Article 39 of the Constitution.

3. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(*a*) "appointed day" means the date on which this Act comes into force;

(*b*) "club" means the Madras Race Club which is a company within the meaning of the Companies Act, 1956 (Central Act 1 of 1956), and having its registered office at Guindy, Madras;

(c) "Commissioner" means the Commissioner of Payments appointed under section 14;

(d) "custodian" means the custodian appointed under sub-section (2) of section 9;

(*e*) "Government" means the State Government;

(*f*) "Government company" means a Corporation or a company wholly owned by the State;

(*g*) "specified date" in relation to any provision of this Act, means such date as the Government may, by notification, specify for the purposes of that provision, and different dates may be specified for different provisions of this Act;

(*h*) words and expressions used herein and not defined but defined in the Companies Act, 1956 (Central Act 1 of 1956), shall have the meanings, respectively, assigned to them in that Act.

## Chapter II

## ACQUISITION AND TRANSFER OF THE UNDERTAKING

4. *Transfer to and vesting in, the Government of the undertaking of the club.*—On the appointed day, the undertaking of the club and the right, title and interest of the club in relation to its undertaking shall by virtue of this Act, stand transferred to and vest in, the Government.

5. *General effect of vesting.*—(1) The undertaking of the club shall be deemed to include the business in the running of horse races at Madras and at Uthagamandalam (including intervenue betting on horse races) and the business in relation to the other objects of the club and shall be deemed also to include all assets, rights, leaseholds, powers, authorities and privileges and all property, movable and immovable, including lands, buildings, works, stores, automobiles and other vehicles, bank balances, cash balances, reserve funds, investments and book debts and all other rights and interests in, or arising out of, such property as were immediately before the appointed day, in the ownership, possession, power or control of the club in relation to the undertaking whether within or outside India, and all books of account, registers and all other documents of whatever nature relating thereto and shall also be deemed to include the liabilities specified in sub-section (1) of section 25.

(2) All properties as aforesaid which have vested in the Government under section 4, shall, by force of such vesting, be freed and discharged from any trust, obligation, mortgage, charge, lien and all other encumbrances affecting them, and any attachment, injunction, decree or order of any court, tribunal or other authority restricting the use of such properties in any manner appointing any receiver in respect of the whole or any part of such properties shall be deemed to have been withdrawn.

(3) Every mortgage of any property which has vested under this Act in the Government and every person holding any crarge, lien or other interest in, or in relation to, any such property shall give, within such time and in such manner as may be prescribed, an intimation to the Commissioner of such mortgage, charge, lien or other interest.

(4) For the removal of doubts, it is hereby declared that the mortgagee of any property referred to in sub-section (3) or any other person holding any charge, lien or other interest in, or in relation to, any such property shall be entitled to claim, in accordance with his



rights and interests, payment of the mortgage money or other dues, in whole or in part, out of the amounts specified in section 8, but no such mortgage, charge, lien or other interest shall be enforceable against any property which has vested in the Government.

(5) Any licence, permission, sanction, approval, order or other instrument whatsoever granted to the club in relation to the undertaking which has vested in the Government under section 4, at any time before the appointed day and in force immeidately before the appointed day, shall continue to be in force on and after such day in accordance with its tenor in relation to, and for the purposes of, such undertaking, and on and from the date of vesting of such undertaking under section 4, in the Government, or under section 6, in a Government company, the Government, or the Government company, as the case may be, shall be deemed to be substituted in such licence, permission, sanction, approval, order or other instrument whatsoever as if such licence, permission, sanction, approval, order or other instrument whatsoever had been granted to the Government or such Government company and the Government or such Government company shall hold it for the remainder of the period for which the club would have held it under the terms thereof.

(6) If, on the appointed day, any suit, appeal or other proceeding, of whatever nature, in relation to any matter specified in sub-section (1) of section 25 in respect of the undertaking of the club which has vested in the Government under section 4, instituted or preferred by or against the club, is pending, the same shall not abate, be discontinued, or be, in any way, prejudicially affected by reason of the transfer of the undertaking, or of anything contained in this Act, but the suit, appeal or other proceeding may be continued, prosecuted or enforced by or against the Government or where the undertaking is directed under section 6 to vest in a Government company, by or against such Government company.

6. *Power of Government to direct vesting of the undertaking in a Government company.*—(1) Notwithstanding anything contained in sections 4 and 5, the Government may, if they are satisfied that a Government company is willing to comply or has complied, with such terms and conditions as the Government may think fit to impose, direct by notification, that the undertaking and the right, title and interest of the club in relation to the undertaking which has vested in the Government under section 4, shall, instead of continuing to vest in the Government, vest in that Government company either on the date of publication of the notification or on such earlier or later date (not being a date earlier than the appointed day) as may be specified in the notification.

(2) Where the right, title and interest of the club in relation to the undertaking vest, under sub-section (1), in a Government company, that Government company shall, on and from the date of such vesting, be deemed to have become the owner in relation to such undertaking and all the rights and liabilities of the Government in relation to such undertaking shall, on and from the date of such vesting, be deemed to have become the rights and liabilities of that Government company.

7. *Government or Government company not to be liable for prior liabilities.*—(1) Every liability of the club, other than the liability specified in sub-section (1) of section 25, in respect of any period prior to the appointed day, shall be the liability of the club and shall be enforceable against it, and not against the Government or where the undertaking of the club vest in a Government company, against such Government company.

(2) For the removal of doubts, it is hereby declared that—

(a) save as otherwise expressly provided in this Act, no liability of the club in relation to its undertaking, in respect of any period prior to the appointed day, shall be enforceable against the Government, or where the undertaking vest in a Government company, against such Government company;

(b) no award, decree or order of any court, tribunal or other authority in relation to the undertaking, passed after the appointed day in respect of any matter, claim or dispute, which arose before that day, shall be enforceable against the Government, or where the undertaking vest in a Government company, against such Government company;

(c) no liability incurred by the club before the appointed day for the contravention of any provision of any law for the time being in force shall be enforceable against the Government, or where the undertaking vest in a Government company, against such Government company.

## CHAPTER III.

## PAYMENT OF AMOUNT.

8. *Payment of amount.*—(1) For the transfer to, and vesting in, the Government, under section 4, of the undertaking, and the right, title and interest of the club in relation to such undertaking, there shall be paid by the Government to the club in cash and in the manner specified in Chapter VI, an aggregate of the value of the sums specified in sub-sections (2) and (3).



(2) The Government shall pay as amount for the acquisition of the undertaking such sum as may be determined by the prescribed authority. In determining the amount under this sub-section, the prescribed authority shall have regard to—

(i) the book value of all completed works in beneficial use pertaining to the undertaking and vested in the Government under section 4, *less* depreciation calculated in accordance with the First Schedule;

(ii) the book value of all works in progress vested in the Government under section 4;

(iii) the book value of all stores (including spare parts, consumable articles, fodders and other similar goods), vested in the Government under section 4 and in the case of used stores and spare parts, such amount as may be decided upon by mutual agreement between the Government and the club;

(iv) the book value of all other fixed assets in use on the appointed day which have vested in the Government under section 4, *less* depreciation calculated in accordance with the First Schedule;

(v) the book value of all plant and equipment existing on the appointed day but no longer in use owing to wear and tear or to obsolescence, to the extent such value has not been written off in the books of the undertaking *less depreciation* calculated in accordance with the First Schedule;

(vi) the book value of all intangible assets to the extent such value has not been written off in the books of the undertaking.

*Explanation.*—For the purposes of this sub-section the book value of any fixed asset means its original cost, which shall comprise—

(a) the purchase price paid by the undertaking for the asset including the cost of delivery and all charges properly incurred in erecting and bringing the asset into beneficial use as shown in the books of the undertaking;

(b) interest charges on capital expenditure incurred from borrowed money and shown in the books of the undertaking as properly attributable to the asset up to the date of bringing it into beneficial use, at a rate not exceeding six per cent per annum;

(c) cost of supervision actually incurred, but not exceeding fifteen per cent of the sum referred to in clause (i).

(3) In addition to the amount payable under sub-section (2), for the acquisition of the properties and assets referred to in that sub-section, the Government shall pay as amount for the acquisition of horses and other livestocks, if any, their market value as may be agreed upon between the Government and the persons interested and failing such agreement, as may be determined by the prescribed authority.

includes mare, gelding, filly, pony or any other horse by whatever name called.

(4) Every amount specified in sub-sections (2) and (3) shall carry simple interest at the rate of four per cent per annum for the period commencing on the appointed day, and ending with the date on which the payment of such amount is made by the Government to the Commissioner.

(5) The amount determined in accordance with the provisions of sub-section (4) shall be paid by the Government to the club in addition to the amount specified in sub-sections (2) and (3).

(6) For the removal of doubts it is hereby declared that the liabilities of the club, in relation to the undertaking which have vested in the Government under section 4, shall be discharged from the amount referred to in sub-sections (2) and (3), and also from the amount determined under sub-section (4), in accordance with the rights and interests of the creditors of the club.

## CHAPTER IV.

## MANAGEMENT, ETC., OF THE UNDERTAKING OF THE CLUB.

9. *Management, etc., of the undertaking of the club.*—(1) The general superintendence, direction, control and management of the affairs and business of the undertaking of the club, the right, title and interest in relation to which have vested in the Governmnt under section 4, shall—

(*a*) where a direction has been made by the Government under sub-section (1) of section 6, vest, on and from the date specified in such direction, in the Government company specified therein ; or

(*b*) where no direction referred to in clause (*a*) has been made, vest, on and from the appointed day, in the custodian appointed by the Government under sub-section (2),



and thereupon the Government company or the custodian so appointed, as the case may be, shall be entitled to exercise, to the exclusion of all other persons, all such powers and do all such things as the club is authorised to exercise and do in relation to the undertaking.

(2) The Government may appoint one or more officers of the Government or a committee of officers of the Government as the custodian of the undertaking in relation to which no direction has been made by them under sub-section (1) of section 6, and the custodian so appointed shall receive, from the funds of the undertaking, such remuneration as the Government may fix and shall hold office during the pleasure of the Government.

(3) The custodian of the undertaking shall maintain an account of the undertaking in such form and manner and under such conditions, as may be prescribed.

10. *Duty of persons in-charge of management of the undertaking to deliver all assets, etc.*—(1) On the vesting of the management of the undertaking of the club in a Government company or on the appointment of a custodian, all persons in-charge of the management of the undertaking of the club immediately before such vesting or appointment shall be bound to deliver to such Government company, or the custodian, as the case may be, all assets, books of account, registers and other documents in their custody relating to the undertaking.

(2) The Government may issue such directions as they may deem desirable in the circumstances of the case to the Government company or the custodian as to the powers and duties of such Government company or custodian and such Government company or custodian may also, if it is considered necessary so to do, apply to the Government at any time for the instructions as to the manner in which the management of the undertaking shall be conducted or in relation to any other matter arising in the course of such management.

11. *Duty of persons to account for assets, etc., in their possession.*—(1) Any person who has, on the appointed day, in his possession or under his control, any assets, books, documents or other papers relating to the undertaking of the club, which has vested in the Government or in a Government company under this Act, which belongs to the club, or would have so belonged, if the undertaking of the club had not vested in the Government or such Government

company, shall be liable to account for the said assets, books, documents and other papers to the Government or the Government company and shall deliver them up to the Government, or such Government company or the custodian, as the case may be, or to such person or body of persons as the Government or the Government company or the custodian may specify in this behalf.

(2) The Government may take or cause to be taken all necessary steps for securing possession of the undertaking which has vested in them under this Act.

(3) The club shall, within such period as the Government may allow in this behalf, furnish to the Government a complete inventory of all the property and assets, as on the appointed day, pertaining to the undertaking, which has vested in the Government under section 4, and for this purpose, the Government or a Government company shall afford to the club all reasonable facilities.

## CHAPTER V.

## PROVISIONS RELATING TO THE EMPLOYEES OF THE UNDERTAKING.

12. *Continuance of employees.*—(1) Every employee of the club employed in connection with the undertaking shall become, on and from the appointed day, an employee of the Government and where such undertaking is vested in a Government company under this Act, become, on and from the date of such vesting in such Government company, an employee thereof and shall hold office or service under the Government or the Government company, as the case may be, with the same rights and privileges as to pension, gratuity and other matters as would have been admissible to him if there had been no such vesting and shall continue to do so unless and until his employment under the Government or the Government company, as the case may be, is terminated by giving him notice of not less than one month in writing, or one month's pay and allowances in lieu of such notice, or until his remuneration and other conditions of service are altered by the Government or the Government company, as the case may be.

(2) Notwithstanding anything contained in the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947), or in any other law for the time being in force, the transfer of the services of any officer or other person employed in the undertaking of the club to the Government or the Government company shall not entitle such officer



or other employee to any compensation under this Act or any other law for the time being in force and no such claim shall be entertained by any court, tribunal or other authority.

13. *Provident fund and other fund.*—(1) Where the club has established a provident fund, superannuation fund, welfare fund or other fund for the benefit of the persons employed in its undertaking, the monies relatable to the employees whose services have become transferred by or under this Act to the Government or a Government company shall, out of the monies standing on the appointed day to the credit of such provident fund, superannuation fund, welfare fund or other fund, stand transferred to, and shall vest in the Government or the Government company, as the case may be.

(2) The monies which stand transferred under sub-section (1) to the Government or the Government company, as the case may be, shall be dealt with by the Government or the Government company in such manner as may be prescribed.

## CHAPTER VI.

## COMMISSIONER OF PAYMENTS.

14. *Appointment of Commissioner of payments.*—(1) The Government shall, for the purpose of disbursing the amount payable under section 8 to the club, by notification, appoint a Commissioner of Payments.

(2) The Government may appoint such other persons as they may think fit to assist the Commissioner and thereupon the Commissioner may authorise one or more of such persons also to exercise all or any of the powers exercisable by him under this Act and different persons may be authorised to exercise different powers.

(3) Any person authorised by the Commissioner to exercise any of the powers exercisable by the Commissioner may exercise those powers in the same manner and with the same effect as if they have been conferred on that person directly by this Act and not by way of authorisation.

(4) The salaries and allowances of the Commissioner and other persons appointed under this section shall be defrayed out of the Consolidated Fund of the State.

15. *Payment by the Government to the Commissioner.*—(1) The Government shall, within thirty days from the specified date, pay, in cash to the Commissioner, for payment to the club an amount equal to the amount determined under section 8.

(2) A deposit account shall be opened by the Government in favour of the Commissioner, in the Public Account of the State, and every amount paid under this Act to the Commissioner shall be deposited by him to the credit of the said deposit account and the said deposit account shall be operated by the Commissioner.

(3) Records shall be maintained by the Commissioner in respect of the undertaking of the club in relation to which payment has been made to him under this Act.

(4) The interest accruing on the amount standing to the credit of the deposit account referred to in sub-section (2) shall enure to the benefit of the club.

16. *Certain powers of the Government or the Government company.*—(1) The Government or the Government company, as the case may be, shall be entitled to receive up to the specified date, to the exclusion of all other persons, any money due to the club, in relation to its undertaking which has vested in the Government or such Government company, and realised after the appointed day, notwithstanding that the realisation pertains to a period prior to the appointed day.

(2) The Government or the Government company, as the case may be, may make a claim to the Commissioner with regard to every payment made by the Government or Government company, after the appointed day, for discharging any liability of the club in respect of the undertaking, in relation to any period prior to the appointed day; and every such claim shall have priority in accordance with the priorities attaching under this Act, to the matter in relation to which such liability has been discharged by the Government or the Government company.

(3) Save as otherwise provided in this Act, the liabilities of the club in relation to its undertaking in respect of any transaction prior to the appointed day, which have not been discharged on or before the specified date, shall be the liabilities of the club.

17. *Claims to be made to the Commissioner.*—Every person having a claim against the club with regard to any of the matters specified in the Second Schedule pertaining to the undertaking shall prefer such claim before the Commissioner within thirty days from the specified date:

Provided that if the Commissioner is satisfied that the claimant was prevented by sufficient cause from preferring the claim within the said period of thirty days, he may entertain the claim within a further period of thirty days, but not thereafter.



18. *Priority of claims.*—The claims made under section 17 shall have priorities in accordance with the following principles, namely:—

(*a*) Category 1 shall have precedence over all other categories and Category II shall have precedence over Category III and so on;

(*b*) the claims specified in each of the Categories shall rank equally and be paid in full, but, if the amount is insufficient to meet such claims in full, they shall abate in equal proportions and be paid accordingly; and

(*c*) the question of discharging any liability with regard to a matter specified in a lower category shall arise only if a surplus is left after meeting all the liabilities specified in the immediately higher Category.

19. *Examination of claims.*—(1) On receipt of the claims made under section 17, the Commissioner shall arrange the claims in the order of priorities specified in the Second Schedule and examine the same in accordance with such order of priorities.

(2) If, on examination of the claims, the Commissioner is of the opinion that the amount paid to him under this Act is not sufficient to meet the liabilites specified in any lower category, he shall not be required to examine any claim in respect of such lower category.

20. *Admission or rejection of claims.*—(1) After examining the claims with reference to the priorities set out in the Second Schedule, the Commissioner shall fix a certain date on or before which every claimant shall file the proof of his claim.

(2) Not less than fourteen days notice of the date so fixed shall be given by advertisement in one issue of any daily newspaper in the English language having circulation in the major part of the State and one issue of any daily newspaper in the Tamil language having circulation in the major part of the State, and every such notice shall call upon the claimant to file the proof of his claim with the Commissioner within the date fixed by the Commissioner under sub-section (1) and specified in the advertisement.

(3) Every claimant who fails to file the proof of his claim within the date fixed by the Commissioner under sub-section (1) shall be excluded from the disbursement made by the Commissioner.

(4) The Commissioner shall, after such investigation as may, in his opinion, be necessary and after giving the club an opportunity of refuting the claim and after giving the claimant a reasonable opportunity of being heard, by order in writing, admit or reject the claim in whole or in part.

(5) The Commissioner shall have the power to regulate his own procedure in all matters arising out of the discharge of his functions, including the place or places at which he may hold his sittings and shall, for the purpose of making any investigation under this Act, have the same powers as are vested in a civil court under the Code of Civil Procedure, 1908 (Central Act V of 1908), while trying a suit, in respect of the following matters, namely :—

(*a*) the summoning and enforcing the attendance of any witness and examining him on oath;

(*b*) the discovery and production of any document or other material object produceable as evidence;

(*c*) the reception of evidence on affidavits;

(*d*) the issuing of any commission for the examination of witnesses.

(6) Any investigation before the Commissioner shall be deemed to be a judicial proceeding within the meaning of sections 193 and 228 of the Indian Penal Code (Central Act XLV of 1860) and the Commissioner shall be deemed to be a civil court for the purposes of section 195 and Chapter XXVI of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1974).

(7) A claimant who is dissatisfied with the decision of the Commissioner may prefer an appeal against such decision to the High Court :

Provided that where a person who is a Judge of a High Court is appointed to be the Commissioner, such appeal shall be heard and disposed of by not less than two Judges of the High Court.

21. *Disbursement of money by the Commissioner.*—After admitting a claim under this Act, the amount due in respect of such claim shall be paid by the Commissioner to the person or persons to whom such amount is due and on such payment, the liability of the club in respect of such claim relating to the undertaking shall stand discharged.



22. *Disbursement of amounts to the club.*—(1) If, out of the monies paid to him in relation to the undertaking of the club, there is a balance left after meeting the liabilities as specified in the Second Schedule, the Commissioner shall disburse such balance to the club.

(2) Where the possession of any instrument, machinery or other property has vested in the Government or any Government company under this Act, but such instrument, machinery or other property does not belong to the club, it shall be lawful for the Government or, as the case may be, the Government company, to continue to possess such instrument, machinery or other property on the same terms and conditions under which they were possessed by the club, immediately before the appointed day.

23. *Undisbursed or unclaimed amount to be deposited with the general revenue account.*—Any money paid to the Commissioner which remains undisbursed or unclaimed on the date immediately preceding the date on which the office of the Commissioner is finally wound up, shall be transferred by the Commissioner, before his office is finally wound up, to the general revenue account of the Government ; but a claim to any money so transferred may be preferred to the Government by the person entitled to such payment and shall be dealt with as if such transfer had not been made, and the order, if any, for payment of the claim being treated as an order for the refund of revenue.

## CHAPTER VII.

## MISCELLANEOUS.

24. *Act to have overriding effect.*—The provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force or in any instrument having effect by virtue of any law, other than this Act, or in any decree or order of any court, tribunal or other authority.

25. *Assumption of liability.*—(1) Where any liability of the club arising out of any item specified in the Category I or items (*a*) and (*b*) of Category II of the Second Schedule is not discharged fully by the Commissioner out of the amounts paid to him under this Act, the Commissioner shall intimate in writing to the Government the extent of the liability which remains undischarged and that liability shall be assumed by the Government.

(2) The Government may by order, direct the Government company in which the undertaking become vested by virtue of any direction made under sub-section (1) of section 6, to take over the liability assumed by the Government under sub-section (1) and on receipt of such direction, it shall be the duty of such Government company to discharge such liability.

26. *Contracts to cease to have effect unless ratified by the Government or the Government company.*—Every contract entered into by the club in relation to the undertaking, which has vested in the Government under section 4, for any service, sale or supply and in force immediately before the appointed day, shall, on and from the expiry of a period of one month from the appointed day, cease to have effect unless such contract is, before the expiry of that period, ratified in writing by the Government, or the Government company in which such undertaking has been vested under this Act, and in ratifying such contract the Government or such Government company may make such alteration or modification therein as they, or it, may think fit:

Provided that the Government or such Government company shall not omit to ratify a contract and shall not make any alteration or modification therein—

(*a*) unless they are or it is, satisfied that such contract is unduly onerous or has been entered into in bad faith or is detrimental to the interests of the Government or such Government company; and

(*b*) except after giving the parties to the contract a reasonable opportunity of being heard and except after recording in writing its reasons for refusal to ratify the contract or for making any alteration or modification therein.

27. *Penalties.*—Any person who,—

(*a*) having in his possession, custody or control any property forming part of the undertaking, wrongfully withholds such property from the Government or the Government company or custodian or from any person or body of persons authorised by the Government or such Government company or custodian; or

(*b*) wrongfully obtains possession of, or retains any property forming part of, the undertaking; or



(*c*) wilfully withholds or fails to furnish to the Government or the Government company or custodian or to any person or body of persons authorised by the Government or such Government company or custodian, as the case may be, any document relating to the undertaking of the club which may be in his possession, custody or control; or

(*d*) fails to deliver to the Government or the Government company or custodian or to any person or body of persons authorised by the Government or such Government company or custodian, any assets, books of account, registers or other documents in his possession, custody or control relating to the undertaking of the club: or

(*e*) wrongfully removes or destroys any property forming part of the undertaking of the club or prefers any claim under this Act which he knows or has reason to believe to be false or grossly inaccurate,

shall be punishable with imprisonment for a term which may extend to three years and also with fine which may extend to ten thousand rupees.

28. *Offences by companies.*—(1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was in charge of, and was responsible to, the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment, if he proves that the offence was committed without his knowedge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where any offence under this Act, has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of, any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

*Explanation.*—For the purposes of this section—

(*a*) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(*b*) "director" in relation to a firm, means a partner in the firm.

29. *Protection of action taken in good faith.*—(1) No suit, prosecution or other legal proceeding shall lie against the Government or any officer or other employee of the Government or against the Government company in which the undertaking of the club has vested under this Act or against custodian or against other person authorised by the Government or Government company or custodian for anything which is in good faith done or intended to be done under this Act.

(2) No suit or other legal proceeding shall lie against the Government or any of their officers or other employees, or against the Government company aforesaid or custodian or against any officer or other person authorised by that company or custodian for any damage caused or likely to be caused by anything which is in good faith done or intended to be done under this Act.

30. *Delegation of powers.*—(1) The Government may, by notification, direct that all or any of the powers exercisable by them under this Act, other than the powers conferred by this section and sections 31 and 32 may also be exercised by such person or persons as may be specified in the notification.

(2) Whenever any delegation of power is made under sub-section (1), the person to whom such power has been delegated shall act under the direction, control and supervision of the Government.

31. *Power to make rules.*—(1) The Government may make rules for carrying out all or any of the purposes of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(*a*) the time within which and the manner in which, any intimation referred to in sub-section (3) of section 5 shall be given;



(*b*) the form and manner in which and the conditions under which accounts shall be maintained by the custodian, as required by sub-section (3) of section 9;

(*c*) the manner in which the monies in any provident fund or other fund, referred to in sub-section (2) of section 13 shall be dealt with;

(*d*) any other matter which is required to be, or may be, prescribed.

(3) (*a*) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette*, and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(*b*) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(4) Every rule made or notification issued under this Act shall, as soon as possible after it is made or issued, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed of the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification.

32. *Power to remove difficulties.*—(1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Government may make such order not inconsistent with the provisions of this Act as may appear to them to be necessary or expedient for the purpose of removing the difficulty:

Provided that no such order shall be made after the expiration of two years from the appointed day.

(2) Every order made under this section shall, as soon as after it is made, be laid before each House of the Legislature.

## THE FIRST SCHEDULE.

[*See* section 8 (2).]

For purposes of payment of amount under section 8, the depreciation shall be calculated at annual rates arrived at by dividing 90 per cent of the book value of each asset by the number of years of life of the asset as specified in the Table below. For the account year, in which an asset was brought into beneficial use, the depreciation shall be calculated at half the annual rate and for the period after the last completed account year till the vesting date, the depreciation shall be calculated pro-rata. Depreciation shall not be calculated for any period beyond the life of the asset as prescribed herein.

### THE TABLE.

| *Serial number and depreciation of assets.* | *Number of years of period.* |
|---|---|
| (1) | (2) |
| 1 Land .. .. .. .. .. | Infinite. |
| 2 Buildings, Road, etc. .. .. .. | Twenty-two years. |
| 3 Plant and Machinery .. .. .. | Fifteen years. |
| 4 Television and Television system and Public address systems. .. | Five years. |
| 5 Equine Hospital equipments .. | Twenty-two years. |
| 6 Analytical Laboratory equipments .. | Twenty-two years. |
| 7 Vehicles— | |
| (*i*) Cycles, Motor cars .. | Ten years. |
| (*ii*) Buses, lorries, tractors .. .. | Six years. |
| 8 Electrical Lifts .. .. .. | Fifteen years. |
| 9 Electrical Installations and Telephone constructions | Fifteen years. |
| 10 (*i*) Furniture, fixtures used in office | Twenty-two years. |
| (*ii*) Furniture used in Conference Halls. etc. | Fifteen years. |
| 11 Starting Gates .. .. .. | Ten years. |
| 12 Assets purchased second hand and assets not otherwise provided for in this Table. | Such reasonable period as the Government determine in each case, having regard to the nature, age and condition of the asset at the time of its acquisition by the Government. |



## THE SECOND SCHEDULE.

[*See* sections 17, 18, 19, 20, 22 and 25 (1).]

### ORDER OF PRIORITIES FOR THE DISCHARGE OF LIABILITIES OF THE CLUB.

*Category I—*

(*a*) Wages, salaries and other dues payable to the employees of the club.

(*b*) Deductions made from the salaries and wages of the employees for provident fund, Employees' State Insurance Contribution, Premium relating to Life Insurance Corporation of India or for any other purposes.

(*c*) Arrears in relation to contributions to be made by the club to the provident fund, Employee's State Insurance Fund, Life Insurance Corporation premium and any other arrear under any law for the time being in force (excluding gratuity).

*Category II—*

(*a*) Principal amount of secured loans advanced by—

(i) Central Government;

(ii) State Government;

(iii) Banks;

(iv) Public financial institutions.

(*b*) Interest on the principal amount of secured loans referred to in item (a).

(*c*) Principal amount of secured loans advanced by any person not falling under item (*a*) and interest on such principal amount.

*Explanation.*—To determine the extent of security available for the purpose of item (a), the market value of the security as on the appointed day shall be taken into account.

*Category III*—

Principal amount of unsecured loans advanced by—

(i) Central Government;

(ii) State Government;

(iii) Banks;

(iv) Public financial institutions.

*Category IV*—

(*a*) Any credit availed of by the Club for the purpose of Horse-Race operations.

(*b*) Any dues payable to the Tamil Nadu State Electricity Board or other Government or semi-Government institutions for supply of goods or service.

(*c*) Interest on loans and advances other than interest specified in items (*b*) and (*c*) of Category II.

*Category V*—

(*a*) Revenue, taxes, cesses, rates or other dues to Central Government, State Government and local authorities.

(b) Any other loans or dues.

---

723/86

25 ஆக 1986

சென்னை-600 009

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, சனவரி 27, 1986-தொகுதி 220 எண் 2.
Monday, 27th January 1986-Volume 220 No. 2.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரு. 2.75]

பொருளடக்கம் பக்கங்கள்


1. இரங்கற் குறிப்பு—

மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. டி. புருஷோத்தம் அவர்கள் இயற்கை எய்தியது குறித்து. 179

2. கவனஈர்ப்பு—

தென்னாற்காட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டியனுப்பாமல் விவசாயிகள் நிறுத்தியுள்ளதால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிப்பது குறித்து. 180—181

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி. 182—242

4. தகவல் கோரல்—

24—1—1986 அன்று அமைச்சரவையில் துறை பொறுப்புகளில் மாற்றம் செய்யப்பட்ட விவரம் அவையில் அறிவிக்கப் படாதது குறித்து. 205—206

5. 1985—86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீதும் மற்றும் 1979—80 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம். 242—304

6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். 304—306



143537

D

V2।।,32'N86

N86 22011-2

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1986 ஜனவரி 27.

தை 14, குரோதன—திருவள்ளுவராண்டு 2017.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கற் குறிப்பு.

**மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. டி. புருஷோத்தம் அவர்கள் இயற்கை எய்தியது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. டி. புருஷோத்தம் அவர்கள் 26—1—1986 அன்று சென்னையில் இயற்கை எய்திய செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் 1952 மற்றும் 1954-ல் சென்னை—செங்கற்பட்டு—வடாற்காடு உள்ளாட்சித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1960 வரையில் மேலவையின் உறுப்பினராக விளங்கினார். அரசுப் பணியிலிருந்த அவர், அதனின்றும் விலகி மேலவை உறுப்பினர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் சம்மேளனத்தின் தலைவராகவும் விளங்கி, அவர்கள் நலனுக்கு பெரிதும் பாடுபட்டார். மேலவையின் அனைத்து விவாதங்களிலும் ஆர்வமுடன் பங்கேற்று சிறந்த சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார்.

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(அவ்வாறே அவை உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. கவன ஈர்ப்பு.

**தென்னாற்காட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டியனுப்பாமல் விவசாயிகள் நிறுத்தியுள்ளதால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிப்பது குறித்து.**

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தென்னாற்காட்டில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டியனுப்பாமல் விவசாயிகள் நிறுத்தியுள்ளதால் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலையின்றித் தவிப்பது குறித்து."

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, மைய அரசு 1985-86 ஆம் பருவத்தில் 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமும் அதற்குக் கீழும் உள்ள கரும்புக்கு அடிப்படை விலை டன் ஒன்றுக்கு ரூ. 165 என்றும், 1986-87 ஆம் பருவத்தில் ரூ. 170 என்றும் அறிவித்துள்ளது. இந்த விலையை சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக் கொடுக்க ஏதுவாக லெவி சர்க்கரையின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 4.40-லிருந்து ரூ. 4.80 ஆக உயர்த்தியுள்ளது. மேலும் வெளி மார்க்கெட் சர்க்கரை விற்பனைக் கோட்டாவை 35 சதவீதத்திலிருந்து 45 சதவீதமாக மைய அரசு உயர்த்தியுள்ளது. மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு மேல் கொடுக்க இயலாது என்றும், மாநில அரசு கூடுதலாக விலை நிர்ணயிப்பதாக இருப்பின் அது ரூ. 175-க்குமேல் நிர்ணயிக்கக்கூடாது என்றும் சர்க்கரை ஆலைகள் கேட்டுக் கொண்டுள்ளன. இருப்பினும் மாநில அரசு கரும்பு விவசாயிகளின் நலன் கருதி, 1985-86 ஆம் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 185 என்று முதலிலேயே நிர்ணயித்து ஆணை பிறப்பித்தது. சென்ற ஆண்டு மாநில அரசு அறிவித்த விலையை எதிர்த்து தனியார் சர்க்கரை ஆலைகள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன. அரசு நடப்பாண்டில் சென்ற ஆண்டைவிட கரும்புக்கு விலை குறைவாக அறிவித்துள்ளது என்றாலும் இதை மறுபரிசீலனை செய்து கூடுதலாக விலை அறிவிக்கவேண்டுமென்று விவசாயிகள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையை மீண்டும் அரசு மறுபரிசீலனை செய்து நடப்பாண்டுக்கு 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானமும், அதற்குக் கீழும் உள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 195 என்று விலை நிர்ணயம் செய்துள்ளது.



திரு. எல். ஜெயச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையை இங்கே அளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக ரூ. 10 ஏற்றிக் கொடுத்தமைக்கும் நன்றி. ஆனால் டன் ஒன்றுக்கு 10 ரூபாயும் சேர்ந்து ரூ. 195 ஆகக் கொடுக்கிறார்கள். கடந்த வருடத்தைப் பார்க்கும்போது, 1984-85 சீசனில் மத்திய அரசு கொடுத்தது 165 ரூபாய். மாநில அரசு கொடுத்தது 20 ரூபாய். பிறகு மானியமாக அறிவித்தது 10 ரூபாய். ஆக மொத்தம் 195 ரூபாய் கடந்த வருடமே கொடுத்திருக்கிறோம். ஆனால் இப்போதும் அதே 195 ரூபாயைத்தான் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். கடந்த ஆண்டை விட சேர்த்துக் கொடுத்ததாகத் தெரியவில்லை. விவசாயிகள் டன் ஒன்றுக்கு ரூ. 250 கேட்கிறார்கள். அவ்வாறு கொடுக்க அரசு தயாரா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-05)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எல்லா நிலைமைகளையும் கருத்திலேகொண்டுதான் அரசு இந்த முடிவை எடுத்திருக்கிறது.

திரு. எல். ஜெயச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலே ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் தேவையான கரும்பை விவசாயிகள் அனுப்பாததனால் கடந்த பத்து நாட்களாக மூடியிருந்த ஒரு சில ஆலைகளும் இப்போது திறந்திருக்கின்றன. ரிகவரி அமௌன்ட்டை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக நெல்லிக்குப்பம் ஆலையில் ரிகவரி அமௌன்ட் 9.5 சதவிகிதம் என்றிருந்ததை 13 சதவிகிதம் ஆக கூடுதலாகத் தருகிறார்கள். இதேபோல் பெண்ணாடம் சர்க்கரை ஆலையிலும் ரிகவரி அமௌன்ட் 230 ரூபாயாகத் தருகிறார்கள். இப்படி ஒவ்வொரு ஆலையிலும் கொடுக்கும் விலை வித்தியாசமாக இருக்கிறது. ஆகவே அனைத்தையும் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து, விவரமாகத் தற்போது கூறியிருந்தாலும், நமது மாநில அரசு கரும்பு விவசாயிகளுடைய கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து, கரும்பு விவசாயிகளுக்கு குறைந்தது 225 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் மாநில அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல ஆலைகள் அறிவித்த தொகைகளிலிருந்து, விவசாயப் பெருமக்கள் நிறைவடைந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

[1986 சனவரி 27

3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் இரு தரப்பிலேயும் மிகத் தெளிவாக கட்சிப்பாகுபாடின்றி மக்களின் நலன் கருதி பல கருத்துக்கள் சொல்லப்பட்டதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், "இந்த அரசாங்கம் மொழிக் கொள்கையைக் குறித்து மறுபரிசீலனை செய்வது காலத்திற்கு ஏற்றது; அவசியமானது" என்று சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன்; அதையும் நான் வலியுறுத்துகிறேன். சமீபகாலம் வரை—நேற்றைய வரையிலும்கூட—தமிழ்நாட்டிலுள்ள ஆளும் கட்சியாகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அல்லது இதற்கு முன் ஆண்டுகொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, இந்தி மொழியின் மீது தங்களுடைய கருத்துக்களை மிக வேகமாக ஏதோ ஒரு படையெடுப்பு தமிழ்நாட்டின் மீது நிகழ்ந்ததைப்போலவும் அதைச் சமாளிப்பதற்கு தயாரிப்புகள் செய்வதைப்போலவும் பேசி வருவதைப் பார்க்கிறேன்.

1938 ஆம் ஆண்டிலே இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ் நாட்டில் நடந்த தென்பது உண்மை. ஆரம்பத்தில் சுய மரியாதை இயக்கமாக இருந்து, பின் அது திராவிடர் கழகமாக மாறி, பின் திராவிட முன்னேற்றக் கழகமாக வந்த காலத்திலும், இந்தி கூடவே கூடாது என்ற பிரச்சினை இருந்தது உண்மை. ஆனால் அந்தக் காலகட்டம் என்பது, திராவிட நாடு தனியாகப் போக வேண்டும், தனி நாடாகப் பிரிய வேண்டும் என்று இருந்த காலம். எனவே இந்தியை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலை எடுத்ததைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டுவிட்ட பிறகு, தமிழ் நாடு இந்தியாவின் ஓர் அங்கம் என்று வந்த பிறகு, நிலைமை மாறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் அவ்வமயம் கல்வி அமைச்சராக, நிதி அமைச்சராக மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் இருந்தார்கள். அவ்வமயம் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பல காரணங்களைச் சொல்லி வற்புறுத்திய சமயத்தில், அறிஞர் அண்ணா அவர்களும் மும்மொழிக் கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நினைவுபடுத்திக் கூற விரும்புகிறேன். அதனைத் தொடர்ந்து இந்தியை எதிர்த்து பல போராட்டங்கள் நாடு முழுவதும் நடந்தது எல்லோரும் அறிந்த விஷயம்.



1986 சனவரி 27]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மைக்குப் புறம்பானது. மாண்புமிகு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மும்மொழிக் கொள்கையைத் தெரிவித்தபோது, அதை மறுத்து, தெளிவாக விளக்கமாக அறிஞர் அண்ணா அவர்கள் கருத்துக்களைப் பதிலாகக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா ஒப்புக் கொண்டார்கள் என்பது உண்மை. அதற்கு என்னால் ஆதாரம் கொடுக்க முடியும். அதற்குப் பின்னாலே தந்தை பெரியார் அவர்கள் . . . .

(முற்பகல் 10-10)

*** மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவரவர்களே, இடையிலே குறுக்கிடுவதற்கு மன்னித்துக்கொள்ள வேண்டும். ஒரு முக்கியமான பிரச்சினையில், தமிழகத்தினுடைய உணர்வுகளை, தமிழ் மக்களினுடைய நீண்டகால வாழ்வை ஒட்டிய பிரச்சினையில், தமிழ் சமுதாயத்திற்கு வழி காட்டிய மாபெரும் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதாக ஒரு கருத்தை மாண்புமிகு திரு. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே தெரிவித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இதிலே குறுக்கிட வேண்டிய அவசியம் நேரிடுகிறது. அறிஞர் அண்ணா அவர்கள், அன்றைய மாண்புமிகு நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன மும்மொழிக் கொள்கையை ஒத்துக் கொண்டார்கள் என்று இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அப்படி அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று மறுக்கிறார்கள். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். அவர்கள் "இல்லை, அறிஞர் அண்ணா அவர்கள் அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று குறிப்பிடுகிறார்கள். இதைப்பற்றி ஒரு சர்ச்சையே நீண்டகாலம் நடந்தது. மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள் முன்னாள் முதல்வராக இருந்தவர்கள். இந்த நாட்டுக்கு வழி காட்டியவர்கள். மிகச் சிறந்த மொழிக் கொள்கையைத் தேசியக் கண்ணோட்டத்தோடு வகுத்தவர்கள். அவர்கள் சொன்ன கருத்தை அன்றைய நிதியமைச்சர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று விளக்கம் மிகத் தெளிவாகத் தரப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்தை மாண்புமிகு திரு. எம்.பி.எஸ். அவர்களுக்கு இப்போது நான் நினைவபடுத்த விரும்புகிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: துணைத் தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்கள் பதில் அளிக்கும்போது, விரிவாகப் பேசுவதற்கு வாய்ப் புண்டு. ஆகவே, தயவுசெய்து என்னைத் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்றைய தினம் தலைவராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.க. சட்ட சபைக் கட்சியின் தலைவராக இருந்த காலத்திலே நானும் அங்கே உறுப்பினராக இருந்தேன் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, தந்தை பெரியார் அவர்கள் அடுத்த நாள் 'விடுதலை'-யில், அண்ணாதுரை அவர்களைப்பற்றி "நீங்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு, தமிழ்நாட்டைக் காட்டிக் கொடுத்து விடுவீர்கள்" என்ற குற்றச்சாட்டு வந்ததையும், திரும்ப 'விடுதலை'யை அமைச்சர் அவர்கள் புரட்டிப் பார்ப்பார்களானால் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும். திராவிடநாடு இன்றையதினம் கைவிடப்பட்டுவிட்ட பிறகு, தி.மு.க. இந்தி மொழியைக் குறித்து தனது நிலையை மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் வந்தது. 1951-ல் இந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, 10 ஆண்டுக் காலத்திற்கு மட்டும், இடைக் காலத்தில் ஆங்கிலம் துணை மொழியாக இருக்குமென்று கூறப்பட்டு, பிறகு அது முடியாது, தொடர்ந்து ஆங்கிலம் இருக்க வேண்டுமென்ற முடிவை எடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின், திராவிட இயக்கத்தின், தமிழர்களுடைய உணர்வுகளை அன்றையதினம் பாரதப் பிரதமர் திரு. நேரு அவர்கள் மதித்துப் புரிந்து கொண்டு அதற்காக நம்மைத் திருப்திப்படுத்த வேண்டுமென்ற ஒரே காரணத் திற்காக இந்தி பேசாத மக்கள், குறிப்பாகத் தமிழ் நாட்டு மக்கள் விரும்பு கின்ற காலம் வரை இந்தியோடு ஆங்கிலம் துணை மொழியாக, அசோசி யேட் லாங்குவேஜ்' ஆக, தொடர்ந்து இருக்குமென்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி, இந்தி எதிர்ப்பு உணர்வுகளுடன் தமிழ் நாட்டிலிருந்தவர் களை மதித்து, அங்கீகரித்து, மரியாதை கொடுத்தார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. அதே சமயத்தில் வேறு மாநிலங்களிலே, கேரளாவிலே, ஆந்திராவிலே, வங்காளத்திலே, ஒரிஸாவிலே இந்தி மொழி பேசாத மக்களு டைய உணர்வுகளை அவர்கள் ஆட்சேபணை செய்யவில்லை. ஆகவே 22 மாநிலங்களிலே 21 மாநிலங்கள் ஒப்புக்கொண்டாலும், ஒரே ஒரு மாநிலமாக தமிழ் நாடு இந்தியை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக, தொடர்ந்து இன்றும் அந்த உறுதிமொழி இருக்கிறது. அதைச் சட்டமாக்க வேண்டுமென்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. நான் அதற்கு உடன் பட்டவன் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டது என்னவென்றால், இந்தியை வெறுப்பதற்கு மாறாக,



இந்தி திணிக்கப்படுவதை நாம் எதிர்க்கலாம்; இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்பதை எதிர்க்கலாம்; ஆனால் இந்தியைக் கற்றுக்கொள்ளவே கூடாது என்பதும், அது வந்து விட்டாலே ஆபத்து என்று பேசுவதும் எவ்வளவு அறிவுடைமையாகும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மிகச் சக்தி வாய்ந்த, சூரியன் அஸ்தமனமாகாத சாம்ராஜ்யத்தை ஆண்டு கொண்டிருந்த வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த காலத்தில், அவனுடைய மொழியால் தமிழ் மொழி அழியவே இல்லை. தமிழ் வளர்ந்தும் இருக்கிறது. அதைவிட வளம் குன்றிய, இலக்கியம் இல்லாத, இலக்கணம் குன்றிய இந்தி மொழியால் தமிழுக்கு ஆபத்து வந்து விடுமென்று பேசுவது அரசியல் பின்னணி, அரசியல் நோக்கமே தவிர, இதனால் தமிழர் களுடைய மனம் பாதிக்கப்படுமென்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழர்களின் உணர்வுகளுக்கு நீங்கள் எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவம் வகிக்கிறீர்களோ, அந்த அளவுக்கு நான் பிரதிநிதித்துவம் வகிப்பதற்கு எனக்கு உரிமையுண்டு என்பதை நீங்கள் அங்கீகரிக்க வேண்டுகிறேன். ஆகவே அது சரியானதல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தி மொழி கற்றுக்கொள்வதற்கு ஏன் தடை போட வேண்டும்? இந்தி மொழி மட்டுமே ஆட்சி மொழியாக இருப்பதை நாம் நிச்சயமாகத் தடுக்கலாம். அதில் சந்தேகமே இல்லை. அது நூறு வருஷ மாகட்டும், அல்லது இருநூறு வருஷமாகட்டும், அதுவரையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்கலாம். ஆனால் மற்ற 21 மாநிலங்கள் விரும்புகின்ற போது, இனி இந்தி மொழி இருக்குமானால் தமிழ் மொழி என்பது ஒரு பொருட்காட்சி மொழியாக பின்னர் மாறி விடுமென்று சொல்கிறார்கள். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்பே தோன்றிய மூத்த தமிழ் மொழி இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. எவ்வளவோ படை எடுப்புகள், எவ்வளவோ ஆட்சி மாற்றங்கள், வெள்ளைக்காரன் இந்த நாட்டை சர்வ சக்தியோடு ஆண்டு கொண்டிருந்தது—இந்தக் காலத்திலே எல்லாம் அழிக்கமுடியாத இந்த மொழியை நீங்கள் அழிந்து விடுமென்று சொல்வது, உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, மக்களுடைய பிரச்சினையைத் திசை திருப்புவதற்காக உங்களுக்குத் தனிப்பட்ட முறை யிலே செல்வாக்கு குறைந்தால், மக்களிடையே உங்களுடைய கட்சிக்கு ஒரு தொய்வு ஏற்பட்டால், மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காக நீங்கள் இந்தியை ஆயுதமாகக் கையாள்வது என்பது தமிழக மக்களினுடைய நலனுக்கு உகந்ததல்ல என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-15)

எனவே, தொடர்ந்து அதையே பேசி மக்களை திசை திருப்ப
வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த நிலையில் தாய்
மொழிக் கொள்கையைக் குறித்து நாம் சீர்தூக்கிப் பார்த்து மறுபரிசீலனை
செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ இந்தி மொழி

படித்துவிட்டால், எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்துவிடும் என்ற அடிப்
படையில் மட்டும் நான் சொல்லவில்லை. அது இந்தியாவின் ஆட்சி மொழி
யாக இன்னும் 100 அல்லது 200 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கத்தான்
போகிறது.

தமிழ் நாட்டில் இன்றைக்கும் எனக்குத் தெரிந்தவரையில், 30 சதவீதப்
பேர் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள்.
உருது, கன்னடம், தெலுங்கு போன்ற பிற மொழிகளைத் தாய் மொழியாகக்
கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சிறுபான்மையராக
இருந்தாலும்கூட, பெரும்பான்மையருடைய தாய்மொழியாக தமிழ் மொழியை
நமது மாநிலத்தின் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம்
பெரும்பான்மையானவர்கள் தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழி
என்றபோது, அவர்கள் பெரும்பான்மைக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமே
என்று அதற்கு ஆட்சேபணை செய்யாமல் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.
அந்த ஜனநாயக உணர்வுகூட இன்றையதினம் இந்தியாவில் ஒரு அங்கமாக
இருக்கிற நமக்கு இல்லையே. இந்தியாவில் உள்ள பெரும்பான்மையோர்
ஆட்சிமொழியாக இந்தியை ஏற்றுக்கொள்ளும்போது நாம் அவர்களை
எதிர்ப்பதற்கு எந்தவித நியாயமுமில்லையே? வேண்டுமானால் இந்தி என்பது
நமக்குக் கூடுதலான சுமையாக இருக்கிறது. எனவே அதை ஒப்புக் கொள்
வதற்குப் பதிலாக ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கேட்கிற
உரிமை உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் அங்கீகரிக்கிறேன். அது
குறித்த உறுதிமொழி சட்ட வடிவில் வர வேண்டும் என்று கேட்கிற உரிமை
உங்களுக்கு இருக்கிறது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால்
அதை விட்டுவிட்டு எல்லாக் காலத்திலும் இதையே பேசிக் கொண்டிருப்பது
என்பது மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்குத்தான் பயன்படும்
என்பதை மட்டும் நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அப்படிப் பேச வேண்டிய
நிலைமையை மத்திய அரசுதான் உருவாக்குகிறதே தவிர, நாங்களாகவே
வலிந்து பேசவில்லை. மத்திய அரசு மும்மொழிக் கொள்கை என்று
சொல்லிக் கொண்டே, தொலைக் காட்சி மூலம் இங்கே இந்தியைத் திணிக்
கிறது. இந்தி மொழி வளர்ச்சிக்காக என்று 2 கோடி ரூபாயைத் தனியாக



ஒதுக்குகிறது. இந்தி மொழி வளர்ச்சிக்காக 274 அதிகாரிகளின் பதவிகளை
உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறது. ஆகவே அவர்கள்
தான் அந்தச் சூழ்நிலையை உருவாக்குகிறார்களே தவிர, ஏதோ அரசியலில்
ஏதுவும் கிடைக்காமல், இந்தப் பிரச்சினையைப்பற்றி சொல்லிக் கொண்டி
ருக்கிறோம் என்பது அணுகுமுறையிலேயே மாறுபட்டது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே
கூறிய புள்ளிவிவரங்கள் அனைத்தும் சரியானவைதான். இல்லை என்று
நான் மறுக்கவில்லை. மத்திய அரசு செய்ய வேண்டிய நிலையில்
இருக்கிறது. . . .

**திரு. ஈ. வெ. ஆ. வள்ளிமுத்து :** மரியாதைக்குரிய மேலவையின் துணைத்
தலைவர் அவர்களே, இந்தி மொழிப் பிரச்சினையைக் குறித்து மரியாதைக்
குரிய உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே குறிப்பிட்
டார்கள். 1937 ஆம் ஆண்டு மரியாதைக்குரிய இராஜாஜி அவர்கள் ஆட்சியில்
முதன் முறையாக இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வர வேண்டும்
என்று சொன்னபோது, அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த
சர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் அதை எதிர்த்து பல்வேறு விளக்கங்
களைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் உலகமெல்லாம் சுற்றி வந்தாலும்,
தமிழகத்திற்குள் வரும்போதுதான், பண்பும் பாசமும் ஏற்படுகிறது, அதற்குக்
காரணம் தமிழர்களுடைய மனநிலைதான் என்று தெளிவாகச் சொன்னார்கள்.
அதுவும் இந்த மன்றத்திலேதான் எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பின்னால்
இந்தி எதிர்ப்புப் போர் ஆரம்பித்தது. அப்போது தமிழகம் முழுவதும்
இந்தியை எதிர்த்துப் பலரும் சிறை சென்றார்கள். ஆயிரக் கணக்கில்
தமிழர்கள் சிறை சென்றார்கள். அப்படி இந்தியை எதிர்த்து சிறை சென்ற
வர்களில் நானும் ஒருவன். அதுமட்டுமல்ல. இந்தி எதிர்ப்புக்காக உயிர்
நீத்த தாளமுத்து நடராஜன் போன்றவர்களை . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் என்ன கேள்வி அல்லது விளக்கம் கோர விரும்புகிறார் என்று
தெரிவிக்க வேண்டும். பேசிக்கொண்டே இருக்கக் கூடாது. விளக்கம்
கேட்க வேண்டும்.

**திரு. ஈ. வெ. ஆ. வள்ளிமுத்து :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி.
சுப்பிரமணியம் அவர்களுக்குப் பதில் கூற விரும்புகிறேன். 1938 ஆம்
ஆண்டில் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தபோது, நான் அதை எதிர்த்துச்
சிறை சென்றவன். அதனால்தான் இந்தக் கருத்தைச் சொல்ல விரும்பு

(முற்பகல் 10-15)

எனவே, தொடர்ந்து அதையே பேசி மக்களை திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே இந்த நிலையில் தான் மொழிக் கொள்கையைக் குறித்து நாம் சீர்தூக்கிப் பார்த்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ இந்தி மொழி

படித்துவிட்டால், எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்துவிடும் என்ற அடிப் படையில் மட்டும் நான் சொல்லவில்லை. அது இந்தியாவின் ஆட்சி மொழி யாக இன்னும் 100 அல்லது 200 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கத்தான் போகிறது.

தமிழ் நாட்டில் இன்றைக்கும் எனக்குத் தெரிந்தவரையில், 30 சதவீதம் பேர் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள். உருது, கன்னடம், தெலுங்கு போன்ற பிற மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சிறுபான்மையராக இருந்தாலும்கூட, பெரும்பான்மையருடைய தாய்மொழியாக தமிழ் மொழியை நமது மாநிலத்தின் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாம் பெரும்பான்மையானவர்கள் தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழி என்றபோது, அவர்கள் பெரும்பான்மைக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமே என்று அதற்கு ஆட்சேபணை செய்யாமல் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஜனநாயக உணர்வுகூட இன்றையதினம் இந்தியாவில் ஒரு அங்கமாக இருக்கிற நமக்கு இல்லையே. இந்தியாவில் உள்ள பெரும்பான்மையோர் ஆட்சிமொழியாக இந்தியை ஏற்றுக்கொள்ளும்போது நாம் அவர்களை எதிர்ப்பதற்கு எந்தவித நியாயமுமில்லையே? வேண்டுமானால் இந்தி என்பது நமக்குக் கூடுதலான சுமையாக இருக்கிறது. எனவே அதை ஒப்புக் கொள் வதற்குப் பதிலாக ஆங்கிலமே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் அங்கீகரிக்கிறேன். அது குறித்த உறுதிமொழி சட்ட வடிவில் வர வேண்டும் என்று கேட்கிற உரிமை உங்களுக்கு இருக்கிறது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதை விட்டுவிட்டு எல்லாக் காலத்திலும் இதையே பேசிக் கொண்டிருப்பது என்பது மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்குத்தான் பயன்படும் என்பதை மட்டும் நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அப்படிப் பேச வேண்டிய நிலைமையை மத்திய அரசுதான் உருவாக்குகிறதே தவிர, நாங்களாகவே வலிந்து பேசவில்லை. மத்திய அரசு மும்மொழிக் கொள்கை என்று சொல்லிக் கொண்டே, தொலைக் காட்சி மூலம் இங்கே இந்தியைத் திணிக் கிறது. இந்தி மொழி வளர்ச்சிக்காக என்று 2 கோடி ரூபாயைத் தனியாக





ஒதுக்குகிறது. இந்தி மொழி வளர்ச்சிக்காக 274 அதிகாரிகளின் பதவிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறது. ஆகவே அவர்கள் தான் அந்தச் சூழ்நிலையை உருவாக்குகிறார்களே தவிர, ஏதோ அரசியலில் எதுவும் கிடைக்காமல், இந்தப் பிரச்சினையைப்பற்றி சொல்லிக் கொண்டி ருக்கிறோம் என்பது அணுகுமுறையிலேயே மாறுபட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறிய புள்ளிவிவரங்கள் அனைத்தும் சரியானவைதான். இல்லை என்று நான் மறுக்கவில்லை. மத்திய அரசு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. . . .

**திரு. ஈ. வெ. ஆ. வள்ளிமுத்து:** மரியாதைக்குரிய மேலவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்தி மொழிப் பிரச்சினையைக் குறித்து மரியாதைக் குரிய உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இங்கே குறிப்பிட் டார்கள். 1937 ஆம் ஆண்டு மரியாதைக்குரிய இராஜாஜி அவர்கள் ஆட்சியில் முதன் முறையாக இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னபோது, அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த சர் ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்கள் அதை எதிர்த்து பல்வேறு விளக்கங் களைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் உலகமெல்லாம் சுற்றி வந்தாலும், தமிழகத்திற்குள் வரும்போதுதான், பண்பும் பாசமும் ஏற்படுகிறது, அதற்குக் காரணம் தமிழர்களுடைய மனநிலைதான் என்று தெளிவாகச் சொன்னார்கள். அதுவும் இந்த மன்றத்திலேதான் எடுத்துக் கூறினார்கள். அதற்குப் பின்னால் இந்தி எதிர்ப்புப் போர் ஆரம்பித்தது. அப்போது தமிழகம் முழுவதும் இந்தியை எதிர்த்துப் பலரும் சிறை சென்றார்கள். ஆயிரக் கணக்கில் தமிழர்கள் சிறை சென்றார்கள். அப்படி இந்தியை எதிர்த்து சிறை சென்ற வர்களில் நானும் ஒருவன். அதுமட்டுமல்ல. இந்தி எதிர்ப்புக்காக உயிர் நீத்த தாளமுத்து நடராஜன் போன்றவர்களை . . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கேள்வி அல்லது விளக்கம் கோர விரும்புகிறார் என்று தெரிவிக்க வேண்டும். பேசிக்கொண்டே இருக்கக் கூடாது. விளக்கம் கேட்க வேண்டும்.

**திரு. ஈ. வெ. ஆ. வள்ளிமுத்து:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களுக்குப் பதில் கூற விரும்புகிறேன். 1938 ஆம் ஆண்டில் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தபோது, நான் அதை எதிர்த்துச் சிறை சென்றவன். அதனால்தான் இந்தக் கருத்தைச் சொல்ல விரும்பு

கிறேன். அதற்குப் பிறகும் பலமுறை இந்தியை எதிர்த்து நான் சிறை சென்றிருக்கிறேன். தமிழகமே இந்தியை எதிர்த்து போர் தொடுத்தது என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அதற்குப் பின்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு . . .

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் கூறியதைப்போல், இந்திக்காக என்று மத்திய அரசு விசேஷமாக் நிதி ஒதுக்குவதும் அதிகாரிகளை நியமித்ததும் உண்மைதான். அதற்குக் காரணம் இந்தி இந்தியாவின் ஆட்சி மொழி என்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர், அதற்காக மத்திய அரசு தனியாக சில காரியங்களைச் செய்வது நியாயம்தான் என்பதை ஏற்க வேண்டும். அந்த மொழிக்காக அதிகப்படியான வகையில் தனியாகச் செலவிட வேண்டியது மத்திய அரசின் கடமைகூட. காரணம் தமிழ் நாட்டில், தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிற காரணத்தால், நாம் தமிழ்மொழிக்கு அதிகமாகச் செலவழிக்கிறோம். அதுமட்டுமல்ல. தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு என்று செலவழிக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: ஒப்புக்கொள்ளவில்லை. அதுதான் பிரச்சினைக்கே காரணம்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: அரசியல் சாசனத்திற்கு விசுவாசம் தெரிவித்து உறுதிமொழி எடுத்துக்கொண்டு நாம் இங்கே உட்கார்ந்திருக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். அதன் அடிப்படையில்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: அது மாற்றப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

(முற்பகல் 10-20)

திரு. எம். பி. சுப்பிரமணியம்: ஜனநாயகத்தில் பெரும்பான்மையான மக்கள் விரும்புவதை ஒப்புக்கொள்ளவில்லை என்றால், ஜனநாயகவாதிகளாக இருக்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இந்தி மொழிதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று ஏதாவது வாக்கெடுப்பு எடுக்கப்பட்டிருக்கிறதா? பெரும்பான்மையான மக்கள் அதற்கு வாக்களித்திருக்கிறார்களா?

திரு. எம். பி. சுப்பிரமணியம்: அதை எதிர்த்து மாநிலங்கள் பேசாமல் இருப்பது என்பதற்கு அதற்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள் என்றுதான் பொருள். தமிழகத்தைத் தவிர வேறு எங்காவது அதை எதிர்த்து தீர்மானம் போட்டிருக்கிறார்களா?





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மௌனமாக இருந்தால், எந்தத் தீமையும் இழைக்கலாம் என்பது நியாயத்திற்கு, உண்மைக்கு, மனிதாபிமானத்திற்கு, மனச்சாட்சிக்கு புறம்பானது.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: துணைத் தலைவர் அவர்களே, எரிந்த கட்சி, எரியாத கட்சி என்பதைப்போல விவாதம் நடக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: ஒவ்வொரு வார்த்தைக்கும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அதற்குப் பதில் சொல்வது மாதிரி விவாதம் தொடரும். குறுக்கீடு வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. குறுக்கீடு என்பது எப்போதாவது இருக்கலாமே தவிர, எப்போதும் இருப்பது என்பது கொஞ்சம் கஷ்டம்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: கொஞ்சம் உணர்ச்சிமயமான பிரச்சினை என்பதால், குறுக்கிட வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப்போல, எரிந்த கட்சி, எரியாத கட்சிதான். ஏனென்றால் சட்டத்தை எரித்த கட்சி இது.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களுடைய உணர்ச்சியை என்னாலே புரிந்துகொள்ள முடிகிறது. அது அவருக்குள்ள உரிமை. எனக்கு ஆட்சேபணை இல்லை. என் கருத்தைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும். நான் என்னைப்பற்றிக் கூறுவதற்கு மன்னித்துக்கொள்ள வேண்டும். திராவிடக் கழகத்தின் இந்தி எதிர்ப்புக் கொள்கையையும், சுயமரியாதைக் கொள்கையையும் தீவிரமாக ஏற்றுக் கொண்டவன் நான் என்றாலும், 1944, 1945, 1946 ஆகிய ஆண்டுகளில் கல்லூரியில் படிக்கும்போது, தமிழுக்குப் பதிலாக இந்தியைப் பாடமொழியாக எடுத்து அன்றும் கற்றேன். இருந்தாலும் இந்தி மொழி ஆட்சி மொழியாக வரக்கூடாது என்ற கருத்தை அன்று நானும் கொண்டிருந்தேன். ஆனாலும் இந்தி மொழியைப் படிக்கத் தவறவில்லை. இண்டரிலும், பி.ஏ.-யிலும் இந்தியைத்தான் இரண்டாவது மொழியாகப் படித்தேன். இப்படி நான் கூறுவதால், இந்தி மொழியினுடைய ஆதிக்கத்தை ஒப்புக்கொள்வதாகப் பொருள் அல்ல. ஒரு மொழி எப்படி தமிழ் மொழியின் நலனைப் பாதிக்க முடியும் என்பது தான் கேள்வி. அப்படி பாதிக்கும் என்றால், வெள்ளைக்காரன் காலத்தில் ஆங்கிலத்தால் எங்கள் மொழி பாதிக்கப்படுகிறது என்று ஏன் நீங்கள் கண்டிக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். எந்தக் காலக் கட்டத்திலும் ஆங்கிலம் பேசுவதால் தமிழர்கள் நலன் பாதிக்கப்படும் என்ற வார்த்தை எடுத்து வைக்கவில்லை. ஆனால் இந்தியை எதிர்த்துப் பேசுவதற்குக் காரணம் அதற்கு அரசியல் பின்னணி இருக்கிறது என்பதைக் குறிப்பிட

விரும்புகிறேன். இது என்னுடைய கருத்து. இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. தமிழ் நாட்டு மக்கள், இந்தி மொழி பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரை ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக இருக்க வேண்டும், அதை அரசியல் சாசனத்திலே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும்போது, நானும் உங்களோடு துணையாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தை எதிர்க்கவில்லை என்பதால் வேறு ஒரு தொடர்பு மொழி துணை மொழியாக இருக்கத் தேவையில்லை என்று நாங்கள் சொல்லவில்லை. ஏற்கெனவே ஆங்கிலம் இருக்கிறது, அது போதும் என்பது எங்களுடைய வாதம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** உலகத்திலே சுதந்திரம் பெற்ற எல்லா நாடுகளிலும், சோவியத் யூனியனானாலும் சரி, சீனாவானாலும் சரி, கனடா வானாலும் சரி, சுவிட்சர்லாந்து நாடானாலும் சரி அந்த நாட்டு மக்கள் பேசுகின்ற ஒரு மொழிதான் அந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக, தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. சீன நாட்டில் வடக்குப் பகுதியில் உள்ள மக்களும், தெற்குப் பகுதியில் உள்ள மக்களும் பேசுவதற்குச் சம்பந்தமே கிடையாது. சோவியத் நாட்டில் நூற்றுக்கணக்கான மொழிகள் இருக்கின்றன. சுதந்திர இந்தியாவில் வாழ்கிறவர்கள் ஏதாவது ஒரு காலத் திலே ஒரு மொழியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே இந்தி மொழியைப் பொறுத்து, தமிழக அரசாங்கம் தங்களுடைய கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இப்போது இதைப் பரிசீலிக்க வேண்டிய கால கட்டம் வந்து விட்டது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சர்க்காரியா கமிஷன் தமிழகத்திற்கு வந்து சாட்சியங்களை எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். 1950 ஆம் ஆண்டு நமக்கென்று ஒரு அரசியல் சாசனம் ஏற்பட்டது. அதற்கு முன்பு, வெள்ளைக்காரன் வருவதற்கு முன்பு, இந்த நாடு ஒரு அரசியல் ரீதியான நாடாக இல்லை. வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்த உணர்வுகள் வேறு, சுதந்திரப் போராட்டக் காலத்தில், காந்தியடிகள் காலத்திலே இருந்த உணர்வுகள் வேறு. இவைகளைப் பின்னணியாக வைத்துக்கொண்டு, அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மத்திய மாநில உறவுகள், நிதிப் பங்கீடுகள் எல்லாம் உருவாக்கப்பட்டன. ஆனால் கடந்த 35 ஆண்டுக் காலத்தில் நமக்கு ஏற்பட்ட அனுபவங்களை வைத்துப் பார்க்கும்போது, மறுபரிசீலனை செய்ய வேண்டிய



அவசியம் இருக்கிறது என்று உணர்ந்த காங்கிரஸ் கட்சி ஆட்சி திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் காலத்தில் சர்க்காரியா கமிஷனை நியமித்தது. அப்படி நியமித்ததால், இதைப் பரிசீலனை செய்வதற்குரிய அவசியம் இருக்கிறது என்ற பொருள் இருப்பதாக ஒப்புக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-25)

ஆனால் தமிழ்நாடு அரசாங்கம் தனது கருத்துக்களை சர்க்காரியா கமிஷனுக்குச் சொல்வதற்கு முன்பாக இந்த அவையிலே வைத்து விவாதித்திருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களாக இருந்தாலும், ஆட்சேபணை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் முதல்வர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய கருத்து என்று சொல்கின்றபோது, இந்த அவைகளையும் உள்ளடக்கியது தான் இந்த அரசாங்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அவையில் விவாதிக்கப்படவில்லை, வைக்கப்படவில்லை. ஆகவே இதைத்தான் முறைகேடு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையிலே வைத்துள்ள கோரிக்கைகளுக்கு அவர்கள் காலத்திலே தயக்கமாக விளக்கம் சொல்லவேண்டிய அவசியம் என்ன இருக்கின்றது? ஏற்கெனவே சொல்லி வந்த கருத்துக்கள்தான். திலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று பல்வேறு காலகட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலே அரசு என்ன நிலை எடுத்திருக்கின்றது என்பதை அறிய தமிழ் நாட்டு மக்களுக்கும் இந்த அவையினுடைய உறுப்பினர்களுக்கும் உரிமையில்லையா என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன். மிக விரைவிலே சர்க்காரியா கமிஷன் அதன் அறிக்கையை அரசாங்கத்திற்கு அளிப்பதற்கு முன்பு இந்த அவைக்கு விவரங் களைத் தரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக நான் கூற விரும்புவது, சென்ற ஆண்டு கவர்னர் அவர்கள் பேருரையிலே மிகத் தூய்மையான, திறமையான நிர்வாகத்தைக் கொடுக்க வேண்டுமென்ற உள்ளத்தோடு இந்த அரசாங்கம் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தூய்மையான, திறமையான நிர்வாகத்தைக் கொடுக்க இந்த அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் ஓராண்டு காலத்திலே என்ன என்னவென்பதை நான் அறிய விரும்புகிறேன். இன்று பரவலாக என்ன சொல்லப்படுகின்றது என்றால், திறமையாகவும் தூய்மையாகவும் நிர்வாகம் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன என்று குறிப் பிட விரும்புகிறேன். மத்திய மாநில அரசுகளின் அதிகாரங்களைப்பற்றிக்

கூறுகின்றபோது, அதிகாரங்கள் ஒரு இடத்திலே குவிக்கப்பட்டிருக்கின்றன, அந்த அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்பதைச் சொல்கிறார்கள். அந்த வாதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். உண்மையைச் சொல்லப் போனால், சுதந்திர இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய காந்திஜி அவர்களே கிராம ராஜ்யம் என்று சொல்லும்போது, கிராமத்திற்கு அதிகாரம் வேண்டும் என்று சொன்னார்கள். அவர்கள் டெல்லியிலேயே அதிகாரம் குவிந்து இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை.— டெல்லியிலே இருந்து அதிகாரம் சென்னைக்கு வரவேண்டுமென்பது உண்மைதான். அதே நேரத்தில் சென்னையிலே அதிகாரத்தை வைத்துக்கொண்டு சேலம், கோயம்பத்தூருக்குக் கிடையாது என்று சொல்வார்களானால், அதிகாரத்தின் மீதுள்ள சுவையின் காரணமாகச் சொல்லலாமே தவிர, ஜனநாயகத்திலே உங்களுக்குள்ள நம்பிக்கை என்பதை மாத்திரம் நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். ஊராட்சி ஒன்றியம், மற்றும் நகராட்சிகளிடம் 10 ஆண்டுகளாக அதிகாரம் குவிந்துவிடக்கூடாது என்ற அளவில் நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. மக்களோடு தினந்தோறும் பழகுகின்ற, மக்கள் பிரச்சினைகளை நம்மைவிட அதிகமாகப் புரிந்துகொள்கின்றவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்காமல், மாநில அளவிலேயே அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு, 15 ஆண்டுக் காலமாக நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தடை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அதற்குரிய திட்டங்களைக் கொடுத்திருக்கின்றார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். கட்சியிலோ அரசாங்கத்திலோ அதிகாரங்களை ஒருவரே குவித்து வைத்திருக்க வேண்டுமென்ற காலகட்டத்தில், அரசியலுக்காக, அரசியல் கட்சிகளாக, சுரண்டுவதற்காக மட்டும் 'பொலிட்டிக்கல் மோட்டிவ்' உடன் அதிகாரம் வேண்டும், அதிகாரம் வேண்டும் என்று கூறிக்கொள்வது மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று நான் கருதவில்லை என்பதை எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நிர்வாகத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால், ஒரு சின்ன பிரச்சினை சாதாரண பிரச்சினைகூட, நான் இதைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன் 250-க்கு மேற்பட்ட லைசென்சுகள் மத்திய அரசில் தொழில்கள் தொடங்க கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த 250 லைசென்சுகள் இதுவரையிலு பயன்படுத்தப்படவில்லை, ஆண்டுகள் பலவாகிவிட்டன என்பதைத் தெ வித்துக்கொள்கிறேன். காரணம் என்ன என்றால் சின்ன சின்ன விஷயங்க தான். அவைகளுக்கு அங்கீகாரம் முதலமைச்சர் அவர்களிடமிருந்து வ வேண்டும். பல மாதங்களாக அந்த அங்கீகாரம் வராமல் தேங்கிக் கிட கின்றது என்று சொல்லும்போது, நிர்வாகம் எப்படி திறமையாக, சரியா நடக்கும் என்று தெரிந்துகொள்ள வேண்டும். நிர்வாகம் எவ்வளவுதா



பணம் செலவிட்டாலும், நிர்வாகம் மக்களுக்காக எவ்வளவு திட்டம் மனத் திருப்தியோடு போட்டாலும், அது சத்துணவுத் திட்டமாக இருந்தாலும் சரி, அது இலவச உடை என்ற திட்டமாக இருந்தாலும் சரி, ஐ.ஆர்.டி.பி. திட்டமாக இருந்தாலும் சரி, வறுமை ஒழிப்புத் திட்டமாக இருந்தாலும் சரி, எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி, அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் பலன் கொடுக்க திறமையான நிர்வாகம் அமைக்க முயற்சி எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி நிர்வாகம் சரியில்லை என்று சொன்னால், அதனாலே பலன் கிடைக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே சில மாதங்களுக்கு முன்பு ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து ஒரு போராட்டம் நடத்தினார்கள். தமிழ் நாட்டின் வரலாற்றிலே என்றும் இல்லாத அளவுக்கு ஆசிரியர்கள், பல்வேறு சங்கங்கள், அரசியல் பின்னணியோடு அவர்கள் இருந்தாலும், அதையெல்லாம் மறந்துவிட்டு அவர்கள் ஒன்றுபட்டு போராட்டம் நடத்தினார்கள் என்பதை நாம் உணர்கிறோம்.

(முற்பகல் 10-30)

அவர்கள் 10 அம்சக் கோரிக்கையை வைத்து, பல மாதங்கள் பல போராட்டங்களை மாறி மாறிச் செய்தார்கள். முதலில் கறுப்பு பேட்ஜ் அணிந்தார்கள். பள்ளிக்கூடம் இல்லாத நேரங்களில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கடைசியில் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்கள், முதலமைச்சரவர்களைப் பார்த்துப் பேச வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். கடைசியில் முதலமைச்சரவர்களைப் பார்த்த பிறகுதான், போராட்டத்திற்கு முற்றுப் புள்ளி ஏற்பட்டது. முதலமைச்சரவர்கள் துவக்க கட்டத்திலேயே பேசியிருந்தால், இவ்வளவு கசப்புணர்ச்சிகள் ஏற்பட்டிருக்காது. பள்ளிக்கூடங்களை மூட வேண்டிய அவசியம், கல்லூரிகளை மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. 100 இலட்சம் மாணவர்கள் தெருவில் இருந்தார்கள். மூன்று லட்சம் ஆசிரியர்கள்—அலுவலர்கள் 10, 20 நாட்களுக்கு மேலாக வெளியில் இருந்தார்கள். 50, 60 ஆயிரம் ஆசிரியர்கள் சிறையில் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. நான் அவர்களின் கோரிக்கைகளின் தன்மைகளைப் பற்றிக்கூடச் சொல்லவில்லை. அணுகுமுறையைத்தான் சொல்கிறேன். நம்முடைய நிர்வாகத்தில் இருக்கிற ஆசிரியர்களை அழைத்துப் பேசுவதில் என்ன தவறு ? அதில் என்ன கௌரவக் குறைவு ஏற்பட்டுவிடும்? அவர்களும் அரசாங்கத்தின் அங்கம்தான். ஏன் அவர்களைக் காலாகாலத்தில் கூப்பிட்டுப் பேசவில்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் பணியாளர்கள் 5,000 பேர் ஆசிரியர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் போராட்டம் செய்தார்கள். ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவிக்க போராட்டம் செய்ததை நாம் ஆட்சேபிக்கவில்லை. அதைப்போல ஆசிரியர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதில் தவறு இருக்க முடியாது. அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால், எப்படி? ஜனநாயகத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று, அதிகாரத்திற்கு வருகிறவர்களுக்கு 'டாலரன்ஸ்' இல்லை என்றால், ஜனநாயகம் வெற்றிகரமாக நடைபெற முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைமைச் செயலகத்தின் அரசு அலுவலர்களின் சங்கத் தலைவராக இருக்கிறவர் வேலை நீக்கம் செய்யப்படவில்லை. திரு. ரஹீம் என்பவர் சங்கத்தின் தலைவராக இருந்தார். அவரைப் பணி நீக்கம் செய்யவில்லை. அவர்தான் போராட்டத்தை நடத்தினார். ஆனால் அவரோடு இருந்த 33 அப்பாவிகள் மாட்டிக்கொண்டு விட்டார்கள். இவர்கள் சமுதாயத்திற்கு விரோதமாக என்ன செய்தார்கள்? அவர்களிடம் விளக்கம் கேட்டு, குற்றவாளிகள்போலக் கருதி, அவர்கள் மன்னிப்பு கோரினால்தான் முடியுமென்று சொல்வதை எல்லாம் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அரசாங்கத்தில் பணியாற்றும் அலுவலர்களின் கசப்பு உணர்ச்சியை நீக்கினால் தான், அரசாங்கத்தின் காரியங்கள் சரியாக நடக்குமென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்தினால்தான் அரசாங்கத்திற்கும், சமுதாயத்திற்கும் நல்லது. எல்லாம் செக்ரடேரியட்டிலிருந்துதான் செல்ல வேண்டும். அரசாங்க ஊழியர்கள் பாதிக்கப்பட்டால், நிர்வாகம் பாதிக்கப்படுகிறது. நிர்வாகம் பாதிக்கப்பட்டால் மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதனால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படும், நல்ல பெயர் ஏற்படாது. இன்னும் இந்தப் பிரச்சினையை ஒரு சேலஞ்ச்சாக எடுத்துக்கொண்டு, வைராக்கியமாக அரசு இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மேட்டூர் நகரத்தில் 'பேர்ட் ஷெல்' என்ற ஆலை—காம்போசிட் மில் இருக்கிறது. அந்த ஆலையில் 2,500 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். வெள்ளைக்காரர்கள் காலத்தில் அது ஏற்பட்டது. ஒருகாலத்தில் மேட்டூர் மல், லாங் கிளாத் தமிழ் நாட்டிலே பின்னித் துணிகளைப் போல மிகவும் பிரசித்தி பெற்ற துணிகளாக இருந்தன. அந்த அளவுக்கு அந்த ஆலை பிரசித்தி பெற்றதாக இருந்தது. அது தமிழருக்கு மாற்றப்பட்டது. பிறகு அந்த ஆலையை மூடிவிட்டார்கள். ஆனால் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய பி.எஃப். பணம், ஈ.எஸ்.ஐ. கான்ட்ரிபியூஷன், அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய பணம்





எல்லாவற்றையும் ஏறத்தாழ 1½ கோடி ரூபாயை அவர்கள் ஏப்பம் விட்டுவிட்டார்கள். மில்லையும் மூடிவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், ஐ.என்.டி.யு.சி., சி.பி.ஐ., சி.பி.எம்—சர்வ கட்சிகளும் அதைத் திறக்க வேண்டுமென்று போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதம் இருந்து, சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் இதற்காக சிறைக்குப் போயிருக்கிறார்கள். இவ்வளவும் நடந்தும், லேபர் கமிஷனர் இதுவரை பேசவில்லை. டெபுடி லேபர் கமிஷனர், ஸ்பெஷல் கமிஷனர் மட்டத்திலேதான் பேச்சுவார்த்தை நடந்தது. 2,500 தொழிலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 15,000 பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 30 லட்சம் ரூபாய் அவர்களுக்கு வர வேண்டிய சம்பளம் வரவில்லை என்றால், ஆறு மாதங்களில் இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு மேட்டூரில் பணப் புழக்கம் குறைந்தது என்றால், இதனால் கடைகள், ஓட்டல்கள், மற்ற வியாபாரங்கள் எல்லாம் பாதித்திருக்கின்றன. இப்படி

(முற்பகல் 10-35)

15 ஆயிரம் பேர்கள் தெருவில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இதன் தொடர்ச்சியாக அலெக்சாண்டர் த்ரெட் கம்பெனி என்ற கம்பெனியும் இரண்டு ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 300 குடும்பங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அவதிப் படுகின்றன. அதற்குப் பிறகு ஆறு மாதம் கழித்து, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் சட்டமன்றத்தில் 100 தடவைக்கு மேல் பேசிப் பார்த்துவிட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அதில் உண்மை இருப்பதாக நான் நம்பவில்லை. அப்படி பேச்சு வார்த்தை நடைபெறவே இல்லை. அதை நான் உறுதியாகக் கூற முடியும். இவ்வளவுக்கும் பிறகு, ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவில் இண்டஸ்டிரியல் அண்டு டெக்னிகல் கன்சல்டேட்டிவ் கமிட்டி என்று அமைத்து, அரசாங்க அதிகாரிகளை உறுப்பினர்களாக அதிலே போட்டிருக்கிறார்கள். அவர்கள் சாங்கோபாங்கமாக அமைதியாக உட்கார்ந்து ஆராய்ந்து பரிந்துரை செய்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அந்தப் பரிந்துரையை 'என்போர்ஸ்' செய்ய முடியுமா, அல்லது முடியாதா என்று தெரியாமல், அந்தத் தொழிலாளர் குடும்பங்கள் இருப்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்? இதை அரசாங்கம் கவனிக்கவேண்டாமா? இதைவிட என்ன முக்கியமான வேலை இருக்கிறது, என்ன பொறுப்புடன் அரசாங்கம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்று. அரசாங்கமும் மற்றவர்களும் ஏற்கெனவே விவாதித்த ஒன்றுதான் மீனவர்கள் பிரச்சினை. சென்னைக் கடற்கரையில் மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதுபற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் காலங்காலமாக கடலில் மீன் பிடித்து வாழ்க்கை நடத்துகிறார்கள். மீனவர்கள் வாழ்கிற பகுதிதான் பட்டிணம் என்று அழைக்கப்படுகிறது. மெரினா கடற்கரையில் அவர்கள் மீன் பிடித்து வாழ்ந்து வந்தார்கள். திடீரென்று ஒருநாள், சென்னையை அழகுபடுத்துகிறோம் என்று அவர்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். திடீரென்று அவர்களை அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது? அப்படி என்ன போராபத்து வந்து விட்டது? அப்படி என்ன போர் நிலைமை வந்துவிட்டது? என்ன காரணத்திற்காக அப்படிச் செய்ய வேண்டும்? இதில் கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லாக் கட்சியினரும் சொன்னோம். தொடர்ந்து அவர்கள் அங்கே மீன் பிடிக்கட்டும், முதலமைச்சர் அவர்கள் அவர்களுடன் பேசி, சாதகமான இடத்தை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்று சொன்னோம். அதைக் கேட்கவே இல்லை. பிறகு என்ன நடந்தது? அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். நீதிபதிகள் என்ன சொன்னார்கள் என்றால், " நீங்கள் எடுத்துச் சென்ற படகுகள், நீங்கள் எடுத்துச் சென்ற கட்டுமரங்கள், வலைகளையெல்லாம் எங்கேயிருந்து எடுத்து வந்தீர்களோ அங்கேயே கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும், அதுவும் சாட்சி வைத்துக் கொண்டு கொடுக்க வேண்டும்" என்று சொல்லி, "சென்னை ஐக்கோர்ட் ரிஜிஸ்ட்ராரை வைத்துக்கொண்டு ஒப்படையுங்கள்" என்று சொல்லிவிட்ட அவல நிலைமை ஏற்பட்டதா இல்லையா? அதற்கு முன்னாடியே மீனவர்களை அழைத்துப் பேசக்கூடாதா? ஜனநாயகத்தில் பொது மக்களின் பிரதிநிதிகளாக நாம் இங்கே அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு, அப்படி பொதுமக்களுக்குத் துன்பம் வருகிற நேரத்தில் அவர்களை அழைத்துப் பேசவில்லை. இது என்ன நியாயமாக இருக்க முடியும்? இப்படி பொதுமக்கள் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொண்டிருந்தால், அது அரசாங்கத்திற்கு நல்லதல்ல. இது ஒரு கட்சியின் பிரச்சினையல்ல. துப்பாக்கிப் பிரயோகம் நடந்து ஆறு பேர் செத்திருக்கிறார்கள். துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று சொல்கிறார்கள். அவசியம் இருந்தது என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவசியம் இல்லை என்று இன்னொரு பக்கம் சொல்கிறார்கள். ஆனால் துப்பாக்கிப் பிரயோகம் நடந்து முடிந்த பிறகு, அங்கேயுள்ள ஆண்கள் எல்லாம் அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். அதன் பிறகு அங்கேயுள்ள பெண்களை, வயதானவர்களை, குழந்தைகளை, எழுந்து நடக்க முடியாதவர்களையெல்லாம், போலீசார் துன்பப்படுத்தியிருக்கிறார்கள். தாய்மார்களை வெளியில் இழுத்து பலவிதமான துன்பங்களை இழைத்திருக்கிறார்கள். துப்பாக்கியின் அடிக்கட்டையால் அடித்திருக்கிறார்கள்.



துப்பாக்கிக் கத்தியால் குத்தியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். என்ன சொல்கிறேன் என்றால், இதையெல்லாம் அரசாங்கம் உண்மையில்லை என்று சொல்லிவிட முடியும். இதற்காக ஒரு நீதிபதியை வைத்து விசாரித்தால், இந்தக் குற்றச்சாட்டு உண்மையா இல்லையா, துப்பாக்கிப் பிரயோகம் நடத்தக்கூடிய சூழ்நிலை இருந்ததா இல்லையா, அதற்குப் பின்னாலே பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏன் இப்படி பாதிப்பு ஏற்பட்டது என்று அறிய வாய்ப்பாக இருக்கும்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண ஐயர் அவர்கள் இதற்காக ஒரு குழு அமைத்து, இதைப் பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு அறிக்கையை அனுப்பியிருக்கிறார்கள். முதல்வருக்குக் கடிதம் எழுதி, நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். ஆனால் அதை அரசாங்கம் பரிசீலிக்கவில்லை. மாஜிஸ்டிரேட் விசாரணை என்பது நம்பிக்கைக்குரியதாக இல்லை. இந்தக் காலக் கட்டத்திலும் நீதி விசாரணை வைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும். இப்போதும் நான் சொல்ல விரும்புவது, சென்னை நகரத்தினை அழகுபடுத்துவது என்பது, கடற்கரையில் உள்ள கட்டுமரங்களை அகற்றிவிடுவதால் மட்டும் ஏற்பட்டுவிடுவதில்லை. சென்னை ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பாகம் மக்கள் குடிசையில் இருக்கிறார்கள். இப்படி 10 லட்சம் பேர்கள் இருப்பதாக கணக்கு கொடுத்திருக்கிறார்கள். அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்த்தேன். சேறும் சகதியுமாக ஒரே நாற்றம் பிடித்த பகுதிகளாக அவை இருக்கின்றன. பன்றிகள் கூட இருக்க முடியாத ஒரு சூழ்நிலையில் மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். இதற்கெல்லாம் நடவடிக்கை எடுக்காமல் சென்னையை எப்படி அழகுபடுத்த முடியும் என்று கேட்க விரும்புகிறேன். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏழையெளிய மக்களுக்குப் பாடுபடுகிற முதலமைச்சர் அவர்களுக்கு இதை நான் அன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினையை, மீனவர்களின் கட்டுமரங்களை அகற்றும் பிரச்சினையைக் கைவிட வேண்டுமென்று

(முற்பகல் 10-40)

கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து மீனவர்கள் தங்கள் இடத்திலே மீன் பிடிப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, தமிழ்நாட்டிலே எமெர்ஜென்சி காலத்தில் கொத்தடிமைகளை ஒழிக்கவேண்டுமென்று மத்திய அரசு ஏற்படுத்திய திட்டத்தின்கீழே தமிழ்நாட்டிலே நடவடிக்கைகளை எடுத்து, கொத்தடிமைகளை ஒழித்துவிட்டோம் என்று சொன்னார்கள். இன்றையதினம் பல நேரங்களில் தமிழ்நாட்டைச்

சேர்ந்தவர்கள்—குறிப்பாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்—ஆந்திரா மாநிலத்திலிருந்து நூறு பேர், இருநூறு பேர் என்று கொத்தடிமைகளாக இருந்தவர்களை மீட்டுக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம், கொண்டுவந்த நான்கு, ஐந்து நாட்களுக்குள்ளேயே மீண்டும் ஓடிவிடுகிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்களுக்கு இங்கே வேலை கிடையாது. வறட்சி. சேலம் பகுதி, மானம் பார்த்த பூமியாகும். எனவே அவர்களுக்கு ஒன்றும் வேலை கிடைப்பதில்லை. எனவே மீண்டும் கொத்தடிமைகளாகச் சென்றாலாவது அரை வயிறு கஞ்சியாவது கிடைக்கும் என்று ஓடிவிடுகிறார்கள்.

இந்தியாவில் 25 லட்சம் பேர் கொத்தடிமைகளாக இருப்பதாக டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் ஆய்வு செய்து அறிவித்திருக்கிறார்கள். அதில் கணிசமான அளவுக்குத் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அவர்கள் கொத்தடிமைகளாக இருந்தாலும் பரவாயில்லை என்று, மீண்டும் மீண்டும் ஓடிவிடுகிறார்கள். காரணம் அவர்கள் புனர்வாழ்வுக்குச் சரியான திட்டமில்லை; அவர்கள் வேலைவாய்ப்புக்கு வழியில்லை. எனவேதான் அவர்களைக் கஷ்டப்பட்டு மீட்டு வந்தாலும், எந்தவிதமான பலனும் ஏற்படப் போவதில்லை. இந்தியாவில் உள்ள 25 இலட்சம் பேருக்கும் புனர்வாழ்வு அளிப்பதற்கு குறைந்தது அறுபதாண்டு காலம் ஆகும் என்று "நேஷனல் சர்வே"-யின் புள்ளிவிவரம் கூறுகிறது. எனவே அரசாங்கம் அதற்கு ஒரு சட்டம் கொண்டுவந்து, அவர்கள் மீண்டும் ஓடிவிடாமல் இருப்பதற்கு திட்டம் வகுக்க முடியவில்லை என்று சொன்னால், நம்மை நாமே எப்படி நியாயப் படுத்திக் கொள்ள முடியும்? சேலம் மாவட்டத்தில் மழை பெய்தால், அவர்கள் காட்டிற்குச் சென்று ஏதேனும் கூலி வேலை செய்ய வாய்ப்பு உண்டு. மழை பெய்யவில்லை என்றால், அவர்களுக்கு அந்த வேலையும் கிடையாது. எனவே அவர்களுக்கு ஆண்டில் ஒரு 50, 60 நாட்கள் வேலையிருப்பின் அதுவே அதிகம். மீதம் 300 நாட்கள் அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனவேதான், நிலச் சீர்திருத்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒருவருக்கு 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் நிலம் தான் இருக்கலாம் என்று உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பின் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அது 15 ஸ்டாண்டர்ட் ஏக்காராவாகக் குறைக்கப்பட்டது. இப்போது அதையும் குறைப்பது அவசியமானது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். காரணம் . . .





திரு. சி. இராமலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னித்துக்கொள்ள வேண்டுகிறேன். இந்தியா முழுவதும் கொத்தடிமைகளாக 25 இலட்சம் பேர் இருப்பதாக டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்குப் புனர்வாழ் வளிக்கும் திட்டங்களை அரசு அமல்படுத்த காங்கிரஸ் உறுப்பினர் வற்புறுத்து வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு .எம். பி. சுப்பிரமணியம்: நிச்சயமாக வற்புறுத்துகிறேன். அதில் சந்தேகமே இல்லை. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை, பினாமி நிலத்தை ஒழிப்பதற்காக முன்பொரு தடவை சட்டம் போட்டார்கள். ஆனால் அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கவில்லை. அதற்குச் சொல்லப் படுகிற காரணம், அச்சட்டம் கோர்ட்டில் நிற்காது என்று சொல்லி அனுப்பப் பட்டுவிட்டது என்பதாகும். இன்னொன்றும் சொல்லப்படுகிறது. அதாவது சில நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்தினால் அச்சட்ட முன்வடிவு அங்கீகாரம் பெறவில்லை என்றும் குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. எனவே நான் இப்போது கோருவது, மீண்டும் ஒரு புதிய சட்ட முன்வடிவை அதற்காகக் கொண்டுவர முடியும் என்பதுதான். ஒரு புதிய சட்ட முன்வடிவைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டுவிட்ட பிறகு, நவீன விவசாய உற்பத்தி முறைகள் வந்துவிட்ட பிறகு நிலைமை என்னவென்று சொன்னால், மக்களுக்கிடையே ஏற்றத்தாழ்வென்பது மிக அதிகமாகப் போய்விட்டது. பெரும் நிலச்சுவான்தார்கள் இனம் (Elitist class) கிராமப் பகுதிகளில் வந்துவிட்டது. பம்ப்செட்டுகள் வந்துவிட்ட பிறகு, டிராக்டர்கள் வந்துவிட்ட பிறகு பெரும் நிலச்சுவான்தார்கள் வருமானம் மிக உயர்ந்துவிட்டது. அதுபோல் கிராமப்புற விவசாயக் கூலிகளின் நிலைமையும் வறுமைக் கோட்டுக்குக் கீழே, மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிறது என்பதை எல்லோரும் நன்றாக அறிவோம். தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொன்னால், 18 ஏக்கர், 20 ஏக்கர் என்று நஞ்சை நிலம் வருகிறது. சேலம் மாவட்டத்தில் 50 அல்லது 60 ஏக்கர் என்று வருகிறது. எனவே நில உச்ச வரம்புச் சட்ட முன்வடிவை மீண்டும் கொண்டுவந்து நில உச்ச வரம்பை மீண்டும் குறைக்க வேண்டுவது நியாயமாக இருக்கிறது. எனவே இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் பினாமி நில ஒழிப்புச் சட்டத்தை, சட்டத்தில் ஓட்டைகள் இல்லாதவாறு கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத் தொழிலாளர்களுக்காகக் கொண்டுவரப் பட்டிருக்கின்ற குறைந்தபட்ச ஊதியம் (மினிமம் வேஜஸ்) சட்டத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டம் 100-க்கு 900 சதவீதப் பகுதியில் அமலாக்கப்படவில்லை. தஞ்சை மாவட்டத்திலே அங்கேயுள்ள அரசியல்

கட்சிகள் விழிப்பாக இருக்கிற காரணத்தினால், அங்கே மட்டும் அமலாக்கப்

(முற்பகல் 10-45)

படுகிறது என்பது உண்மை. பல இடங்களிலே அமலாக்கப்படவில்லை என்பது உண்மை. தமிழ் நாட்டிலே உள்ள மற்ற எல்லா இடங்களிலேயும் அமலாக்கப் படவில்லை. எனக்குத் தெரிந்த வரையில், ஒவ்வொரு வட்டாரத்திலேயும் எந்தப் பண்ணையில் வேலை செய்கிறவர்களுக்கும் 'மினிமம் வேஜஸ்' கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, கடந்த மார்ச் மாதத்தில் மோட்டார் வெகிக்கிள் டாக்ஸை அரசு உயர்த்தியது. டாக்ஸை உயர்த்தி, அதற்கு ஒரு நோட்டிபிகேஷன் வந்தால்தான் வசூல் செய்ய முடியும் என்று சொன்னார்கள். நவம்பர் மாதம் தான் நோட்டிபிகேஷன் வந்தது. அதன்படி இரண்டு சக்கர வண்டிகளுக்கு இரண்டு ரூபாய் கூடுதலாகவும், கார் போன்றவைகளுக்கு 60 ரூபாய் கூடுதலாகவும் பணம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அப்படிக் கட்டுவதைப்பற்றி ஆட்சேபணை ஒன்றுமில்லை. ஆனால் இந்த மாதம் 28 ஆம் தேதி கடைசி நாள் என்று நான்கு நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் நான் செய்தி பார்த்தேன். அந்த நான்கு நாட்களுக்கு அலுவலகங்கள் திறந்திருக்கும். ஆர்.டி.ஓ. ஆபீசில் பணம் கட்டலாம், கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் பாங்கில் பணம் கட்டலாம் என்று சொன்னார்கள். நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆளை அனுப்பினால், 2 மணிக்கு மேல் ஆர்.டி.ஓ. ஆபீஸ் திறந்திருக்கவில்லை. ஞாயிற்றுக்கிழமை லீவு. இன்றைக்குக்கூட 2 மணிக்குள்ளாகக் கட்ட வேண்டும். இல்லாவிட்டால் கட்ட முடியாது. இந்தக் கட்டணத்தை ஏன் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கட்டக்கூடாது? 1985-86 ஆம் ஆண்டுக்கு 70 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னால், பிப்ரவரியிலே கட்டலாம்; மார்ச் மாதத்திலே கட்டலாம். இன்னும் ஒரு ஆர்பிட்டரரியான உத்தரவு போடவில்லை. சென்னையிலே 1½ லட்சம் வெகிக்கிள்கள் இருக்கின்றன. 1½ லட்சம் வெகிக்கிள் வைத்திருப்பவர்கள் 'க்யூ' விலே நின்றாலும்கூட உரிய காலத்தில் பணம் கட்ட முடியாது. இதுவரையிலும் சாதாரண ஒரு பிரச்சினையைக்கூட இவ்வளவு பெரிய சிக்கலாக ஆக்கிக்கொண்டிருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை . . . . .

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, நேற்று வந்த அறிவிப்பின்படி, பிப்ரவரி 28 ஆம் தேதி வரையிலும் 'டேட் எக்ஸ்டென்டு' செய்யப்பட்டிருக்கிறது.





**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** ரொம்ப நன்றி. நேற்று வரையிலே நான் விசாரித்துவிட்டு, இந்த மாதம் 28 ஆம் தேதிக்குள் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். இல்லாவிட்டால் 'ஃபைன்' 200 சதவீதம் என்றார்கள். ஒரு மாதத்திற்குள் கட்டாவிட்டால், 'ஃபைன்' 200 சதவீதம் கட்டவேண்டும். இது அறிவுக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, ஸ்ரீலங்கா அகதிகள் இங்கே வந்த காரணத்தால், அவர்களுக்காக விசேஷமாக சப் ரிஜிஸ்டிரார் ஆபீசிலே பதிவுக் கட்டணத்தை அரசு கூட்டியது. அது நியாயம்தான். ஆனால் அதை அவசியம் ஏற்பட்டால் மேலும் கூட்டலாம். அதற்குப் பதிலாக என்ன நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், ஒரு 'வேலுவேஷன் ரிஜிஸ்டர்' போட்டு வைத்திருப்பார்கள். ஒரு நிலத்தை வாங்குவதற்கு சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், உடுமலைப் பேட்டை போன்ற இடங்களிலே என்ன விலை என்று பார்ப்பார்கள். ஒரு ஆண்டு ஒன்றுக்கு 15 சதவீதம் கூட்டிக்கொண்டே போகவேண்டும். நேரடியாக வரியை உயர்த்துவதற்குப் பதிலாக, பதிவுக் கட்டணத்தை, ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்கினால், 150 ரூபாய்க்கு பத்திரம் வாங்க வேண்டியிருக்கிறது. அதை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக மறைமுகமாக என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், ஆயிரம் ரூபாய் என்பதை, 5 ஆயிரம் ரூபாய் என்று நிலத்திற்கு மதிப்புப் போட்டு வரியைக் கட்டு என்று சொன்னால், வரி 5 மடங்கு கூடுகிறது. இதுதான் நடைமுறையில் இருக்கிறது. உதாரணத்திற்கு எனக்கு ஒரு புள்ளி விவரம் சொன்னார்கள். திருப்பூரிலே ஒரு சென்டுக்கு 1979-லே 1,700 ரூபாய் விலை மதிப்புப் போட்டு பத்திரம் எழுதினார்கள். இதற்கு 1981-லே 25 ஆயிரம் ரூபாயாக விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. 1985-லே 43 ஆயிரத்து சொச்சமாக விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. நேரடியாக வரியை வாங்குவதற்குப் பதிலாக, நிலத்தின் விலையை உயர்த்தி அதன் மூலமாக வரியை வாங்குவது என்ன நியாயம்? அரசு நினைக்கலாம், நிலம் வாங்குபவர்கள் எல்லாம் பெரிய பணக்காரர்கள் என்று. அப்படியொன்றும் அவர்கள் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சாதாரண அரை ஏக்கர், ஒரு ஏக்கர் விற்று வாங்குவதற்குரிய விவசாயிகள்கூட அதை வாங்க முடியவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எனக்குச் சொந்த அனுபவம் உண்டு. எனது உறவினர் ஒருவர் 6 ஏக்கர்—ஒரு ஏக்கர் ஆயிரம் ரூபாய்க்குக் கூடப் பெறாது—புஞ்சை நிலம், மானம் பார்த்த பூமி, 6 ஆயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கினார். அதற்கு அரசாங்கத்தின் மதிப்பு என்னவென்று சொன்னால், இப்போது அது 36 ஆயிரம் ரூபாய்க்கு மதிப்புப் போட்டு, அந்த 6 ஆயிரம் ரூபாய்க்கு மேலே அதிகப்படியாக சப் ரிஜிஸ்டிரார் ஆபீசிலே கட்டணம் கட்ட வேண்டுமென்று சொன்னதால், அதற்கு கிரயமே

நடைபெறவில்லை. கிரயம் செய்யாமலே அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலத்தை விற்று விட்டார். இது ஒரு நடைமுறைக்கு ஒவ்வாது. இது திருட்டுத்தனமாக வரி வசூல் செய்யப்படும் ஒரு முறை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அரசு 'கைடு லைன்ஸி'ல் குறிப்பிட்டிருக்கும் விலையைக் கொடுக்கத் தயாராக இல்லை. 'லாண்டு அக்குயிசிஸன்' பண்ணும்போது 'கைடு லைன்ஸ்' ரிஜிஸ்டரில் சென்டு ஒன்றுக்கு 1986-ல் திருப்பூர் நகரத்திலே 49 ஆயிரம் ரூபாய் போட்டிருக்கிறார்கள். இதற்குக் குறைவாக 'ஸ்டாம்ப் பேப்பர்' வாங்க முடியாது. இதை அரசாங்கம் பொதுக் காரியத்திற்காக வாங்கும்போது, இந்தப் பணத்தைக் கொடுங்கள் என்று சொன்னால், கொடுக்க முடியாது என்கிறது. இது எப்படி நியாயம்? வரி கட்டுவதற்குரிய 'கைடு லைன்ஸ்' வேறு; அதேநேரத்தில் அரசு நிலத்திற்குப் பணம் கொடுக்க வேண்டிய அவசியம் வரும்போது, இன்னொரு 'கைடு லைன்ஸ்' என்று வைத்துக்கொண்டால், இது சரியல்ல, ஒத்துக்கொள்ள முடியவில்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

கடைசியாக, ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் என்று தனியாக எந்த வேலையும் கிடையாது. பழைய காலத்தில் அவைகள் ரோடு போட்டதுண்டு; பள்ளிகளைக் கட்டியதுண்டு. அதெல்லாம் அப்போது. இப்போது ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற மத்திய அரசாங்கத்தின் திட்டத்தின் வேலைகளைத்தான் அவைகள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றனவே தவிர, வேறு வேலை எதுவும் அவைகளுக்கு இல்லை. காரணம் மத்திய அரசாங்கத் திட்டப் பணிகளையெல்லாம் மாநில அரசாங்கங்கள் மூலமாகத்தான் செய்து முடிக்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு என்று இங்கே தமிழ் நாட்டில் தனியான நிர்வாக இயந்திரம் கிடையாது. எனவே தன்னுடைய அனைத்துத் திட்டங்களையும் மாநில அரசாங்கத்தின் மூலமாகத்தான் மத்திய அரசு இம்ப்ளிமென்ட் செய்ய வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு ஏராளமான வருவாய் வருகிறது என்று சொன்னாலும், திரும்பத் திரும்ப அந்த வருவாய் அனைத்தும் மாநிலங்களிலேதான் செலவழிக்கப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. காரணம் மத்திய அரசாங்கத்திற்கு என்று தனியான டெரிடரி பகுதி ஏதுமில்லை. எனவே மாநிலங்களிலேயேதான் அவ்வளவு பணத்தையும் மத்திய அரசு செலவு செய்ய வேண்டியிருக்கிறது. மாநில அரசாங்கங்



களுக்குத்தான் அந்தப் பணம் திரும்ப வருகிறது. ஆனால் அந்த வகையில் கிடைக்கிற பணம் மத்திய அரசால் சரியாக எல்லா இடங்களிலும் செலவு செய்யப்படவில்லை என்பது நம்முடைய குற்றச்சாட்டாக இருக்கலாம். அதை தான் குறிப்பிட விரும்பவில்லை.

ஆளுநர் உரையில் வரும் 3 ஆண்டுக் காலத்தில் 10 லட்சம் வீடுகள் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, மற்றும் மலைவாழ் மக்களுக்காக, இன்னும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்காகக் கட்டப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பத்திரிகையில் இரண்டு நாட்களுக்கு முன்னர் பார்த்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் 30 லட்சம் வீடுகள் கட்டப் போவதாக அதில் அறிவித்திருக்கிறார். 3 ஆண்டுகளில் இந்த 30 லட்சம் வீடுகள் கட்டப்படுமா அல்லது அதற்குப் பின்னாலா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்த 10 லட்சம் வீடுகள் 3 ஆண்டுக் காலத்தில் கட்டுவதற்கு என்ன திட்டம், அதற்கு என்ன நடவடிக்கை, அதற்குரிய எஸ்டிமேட் என்ன, அதற்கான வழிவகை என்ன, அதற்கான பைனான்ஸ் எந்த அடிப்படையில் கிடைக்கப் போகிறது, அதற்கான நிர்வாக இயந்திரம் எப்படி இருக்கும் என்பதைப்பற்றி ஒன்றுமே அதில் குறிப்பிடப்படாமல் ஏதோ ஒரு விளம்பரம் என்கிற அளவில் சொல்லிக்கொண்டிருப்பதால் பயன் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஜனநாயகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் எல்லா எதிர்க் கட்சிகளையும் அனுசரித்து நடந்து கொள்வதுதான் நல்லது, மரபும்கூட அதுதான். நான் ஏதோ ஒரு கட்சியை மட்டும் சொல்லவில்லை. அது மத்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி, ஆட்சியில் இருக்கிற கட்சி மற்ற எதிர்க் கட்சிகளையும் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். உதாரணத்திற்குக் குறிப்பிட வேண்டுமென்றால், சென்னை நகரத்தில் ஒருமுறை கால்நடைகளை, ஆடு மாடுகளையெல்லாம் தங்க விடாமல் நகரத்திற்கு வெளியே அனுப்ப வேண்டுமென்றும், அதனால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது என்றும் முடிவெடுக்கப்பட்டது. அதற்காக எல்லாக் கட்சிகளையும் கொண்ட ஒரு சர்வகட்சிக் கூட்டம் நடத்தப்பட்டது. அதற்கு நாங்களும் ஒப்புதல் கொடுத்தோம். அப்படிச் செய்தால்தான், நகரத்தில் சுகாதாரக் கேடு ஏற்படாது, எனவே ஆடுமாடுகளையும் பிற கால்நடைகளையும் நகரத்திற்கு அப்பால் கொண்டு போக வேண்டுமென்று உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். அதைப்போலவே நகரத்தில் உள்ள புறம்போக்குகளை அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்கும் சொந்தமான இடத்தையெல்லாம் பலர் ஆக்கிரமித்துக்கொண்டபோது அவர்களையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை ஒரு நான்கு நாட்களுக்கு மாநகராட்சி அதிகாரி

மேற்கொண்டார். ஆனால் அதனாலே என்ன தவறு ஏற்பட்டுவிட்டது என்று தெரியவில்லை. திடீரென்று அவர் அந்தப் பொறுப்பிலே இருந்து மாற்றப் பட்டார். அவர் என்ன தவறு செய்து விட்டார் என்று எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமை ஏன் ஏற்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, அதிகாரிகளுக்குப் பல்வேறு துறையில் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற அடிப்படையில் பல்வேறு இடங்களுக்கு அதிலும் பல வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் லண்டனுக்குப் பயிற்சிக்காக என்று அனுப்பப்பட்டவர் பயிற்சி முடிந்து வந்த பிறகு, அதுபற்றிய சம்பந்தமே இல்லாத வேறு ஒரு பொறுப்புக்கு மாற்றப்படுகிறார். இப்படிப்பட்ட நிலைமை ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு அதிகாரியை அரசு செலவில் லட்சக் கணக்கான ரூபாய் செலவில் வெளிநாட்டுக்கு அனுப்பி, அவர் பயிற்சி பெற்று வந்த பிறகு, வேறு துறைக்கு மாற்றுவதென்றால், அந்தப் பயிற்சியை அவர் பெற்று யாருக்கு என்ன லாபம்? அப்படித்தான் அண்மையில் நமது தலைமைச் செயலாளர்கூட அமெரிக்காவுக்குப் போய் வந்திருக்கிறார். எதற்காக என்றால் குடும்ப நலத் துறையில் பயிற்சி பெற என்று சொல்லப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில், இவரே குடும்ப நலத் துறையில் நல்ல அனுபவமும் அறிவும் உள்ளவர். இவர் அமெரிக்காவில் போய் கற்றுக் கொண்டு வருவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்தியாவிலேயே அந்தத் துறையில் நல்ல புகழ்பெற்ற நிபுணர். இவர்போய் அமெரிக்காவில் கற்றுக் கொள்வதற்கு ஒன்றுமே இல்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இந்தியாவிலேயே குடும்ப நலத்துறைத் திட்டத்திற்காகப் பல பரிசுகள் தமிழ் நாட்டிற்குக் கிடைத்திருக்கின்றன என்று பெருமையோடு இங்கே சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய தமிழகத்தைச் சார்ந்த இவர் அமெரிக்காவில் போய் கற்றுக்கொள்வதற்கு ஒன்றுமே இல்லை. அப்படி ஒருவர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டால், மீண்டும் வந்து அந்தத் துறையில் அதை அமுல்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். தலைமைச் செயலாளருக்கு அத்தகைய வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர் பெறுகிற பயிற்சியை அனுபவத்தில் செயல்படுத்த வாய்ப்பில்லையே என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். பல லட்சக் கணக்கில் செலவழித்தும் மக்களுக்கு அதனால் பயன் இல்லையே என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துத் தலைவர்களின் பதவிக் காலத்தை நான்கு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைத்தபோது, எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களையும் அழைத்துப் பேசி இந்த அரசு ஒரு முடிவு செய்திருக்கலாம். பல விஷயங்களில் ஜனநாயக மரபைக் காட்டுகிறபோது,





இதில் ஏன் அப்படிச் செய்யவில்லை என்று கேட்க விரும்புகிறேன். பல விஷயங்களில் கூப்பிட்டுப் பேசுவதை நான் பாராட்டுகிறேன். அந்த மரபை இதுபோன்ற முக்கியமான விஷயங்களில் காட்டவில்லையே என்ற வருத்தத்தை மட்டும் தெரிவித்து அமைகிறேன்.

## 4. தகவல் கோரல்.

### 24—1—1986 அன்று அமைச்சரவையில் துறைப் பொறுப்புகளில் மாற்றம் செய்யப்பட்ட விவரம் அவையில் அறிவிக்கப்படாதது குறித்து.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :* ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு தலைவர் அவர்களே, 24—1—1986 அன்று சட்டமன்ற மேலவையின் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது அவையில் நடக்கிற நடைமுறையைப் பற்றித்தான் சொல்ல வேண்டுமே தவிர 24 ஆம் தேதி தகவலைப்பற்றிக் கேட்பதற்கு இது முறையல்ல. மரபுகளைப் பற்றி நன்கு தெரிந்த உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இப்படி நடக்கக்கூடாது. எனவே அதோடு விட்டுவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :* தலைவர் அவர்களே, நான் என்ன சொல்லப் போகிறேன் என்று தெரிந்ததற்குப் பின்னால், தாங்கள் என்ன தீர்ப்பு கொடுத்தாலும், ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். 24 ஆம் தேதி மாலையில் மேலவைக் கூட்டம் நடக்கிறபோது, அமைச்சரவையில் இலாக்காக்கள் மாற்றம் நடைபெற்றுள்ளதாக வெளியே பேசப்பட்டது. அந்த நிலையில் கூட்டம் நடக்கிறபோது, அவையில் அதுபற்றி அறிவிக்கப்படவில்லையே என்றுதான் கேட்க விரும்பினேன். மேலவைக்கு மரியாதை இல்லை என்றால் என்ன பொருள்? அரசுத் தரப்பிலே இருந்து அதற்கு பதில் வரும் என்று எதிர்பார்த்தேன். ஒன்றும் வரவில்லை. ஆனால் மாலை 6½ மணி செய்தியில் வானொலியில் இலாக்கா மாற்றம் பற்றி அறிவிக்கப்பட்டது. இந்த மாற்றம் பற்றி எங்களுக்குத் தெரிவிக்கக் கூடாதா? இந்த அவை முக்கியத்துவமில்லாதது என்று புறக்கணிக்கப்படுகிறதா என்று வருத்தம் ஏற்படுகிறது. மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதற்குப் பிறகு தலைவர் என்ன தீர்ப்பு அளித்தாலும், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

## 24—1—1986 அன்று அமைச்சரவையில் துறைப் பொறுப்புகளில் மாற்றம் செய்யப்பட்ட விவரம் அவையில் அறிவிக்கப்படாதது குறித்து

[1986 சனவரி 27

(முற்பகல் 10-55)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதிலே தீர்ப்பு ஒன்றுமில்லை. மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே இதுபற்றி எழுப்பி கேட்டிருக்கிறார். அரசாங்கத்திலிருந்து அதற்குப் பதில் இல்லை, அன்றே பதிலைப் பெற அவர் வலியுறுத்தியிருக்க வேண்டும். இரண்டாம் நாளாக இன்று, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் முடிந்து அவையின் முன்னவர் அவர்கள் பதில் அளிக்கும்போது கேட்பது முறையல்ல. முன்னவர் அவர்கள் பதில் சொல்லும்போது, அதிலே இதற்கான பதிலும் சேர்ந்திருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.

### 3. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளிக்கும் முன்னர் மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சினை குறித்து அரசின் தரப்பிலே விளக்கம் அளித்துவிடுகிறேன். அன்றைக்கு அமைச்சரவையில் உள்ள சில அமைச்சர்களுக்கு இலாக்காக்கள் பிரித்துக் கொடுக்கப்பட்ட அரசாணை ஆளுநரிடத்திலேயிருந்து பெறப்பட்டு தலைமைச் செயலகத்திலே தலைமைச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள இரண்டாவது செயலாளர் அவர்கள் அதிலே கையெழுத்திட்டு வெளியிடுவதற்குக் காலதாமதம் ஆகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, எங்களுக்கும் தகவல் கிடைத்தது. அதைப்பற்றி விசாரித்தபோது, "தலைமைச் செயலாளர் பொறுப்பிலே உள்ள இரண்டாவது செயலாளருக்காக காத்துக் கொண்டிருக்கிறோம், அரசாணை இன்னும் வெளியிடப்படவில்லை, ஆகவே தகவலை முறையாக சட்டப்படி இப்போது தெரிவிக்க முடியவில்லை" என்ற தகவல் வந்தது. ஆகவேதான் அந்த மகிழ்ச்சிகரமான தகவலை—யாருக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்பது பிரச்சினையல்ல—மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அக்கறையோடு விசாரித்தபோது, இந்த அவையில் தெரிவிக்க முடியவில்லை. இந்த அவை முடிந்த பிறகுதான் தலைமைச் செயலாளர் பார்த்து ஆணையை வெளியிட்டார்கள். நானும் வீட்டுக்குப் போகிறபோதுதான் முறையாக ஆணையைப் பார்த்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த அவை நடைபெறும்போது தெரிவிக்க வேண்டிய செய்தியை அரசு தெரிவிக்காமல் நிறுத்திவிட்டது என்ற பிரச்சினை இல்லை என்பதை தான் அன்போடு தெரிவித்துக்கொள்கி...



தலைவர் அவர்களே, இரண்டு அவைகளுடைய கூட்டுக் கூட்டத்தில் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறும் விவாததத்தில் கடந்த ஐந்து நாட்களாக இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் 22 பேர் பங்கெடுத்துக் கொண்டு தங்களுடைய கருத்துக்களை, பாராட்டுக்களை, அல்லது தாங்கள் எதிர்பார்த்த செய்திகள் இல்லை என்கிற குறைகளை, அதையொட்டி நிர்வாகத்தில் நடைபெற்றிருக்கிற பல்வேறு பிரச்சினைகளை, கருத்துக்களை வெளியிட்டிருப்பதற்காக அரசின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக இங்கே நடைபெற்ற விவாதங்களை ஒட்டுமொத்தமாக வைத்து சுருக்கிப் பார்த்தால், அநேகமாக சமீபத்திலே நடைபெற்று முடிந்த, அரசால் தீர்க்கப்பட்டிருக்கிற, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு தீர்த்து வைத்திருக்கின்ற ஆசிரியர்களுடைய வேலை நிறுத்தம், அதன் தொடர்பாக தலைமைச் செயலக அலுவலர்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தம் போன்ற பிரச்சினைகள்தான் அதிலே அதிகமாக தலைதூக்கி இருந்தன.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த அவையில் நடைபெற்ற மொழிப் பிரச்சினையைக் குறித்து தன்னுடைய கருத்தை தன் பேச்சின் தொடக்கத்திலேயே இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதைப்போல கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்களும், திரு. சங்கரலிங்கம் அவர்களும் நிர்வாகத்திலே நடந்த இரண்டு, மூன்று நிகழ்வுகளைக் குறிப்பிட்டு அதிலே நடைபெற்றதாக சில குறைகளையும், ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களை தனிக் குறையாக எண்ணி, அதையொட்டி சில கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை முன்மொழிகின்றபோது, மத்திய அரசின் சார்பிலே தமிழகத்திலே உருவாக்கப்படவேண்டிய, தொடங்கப்பட வேண்டிய சில தொழில்களைக் குறிப்பிட்டு, அதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே முதலிலே வரிசையாக ஒன்றிரண்டு குறைகளுக்கும் சில ஐயப்பாடுகளுக்கும் விளக்கத்தைத் தெரிவித்துவிட்டு, அதற்குப் பிறகு இந்த அவையில் பலருடைய உள்ளத்தையும் உறுத்திக்கொண்டிருக்கின்ற சில பிரச்சினைகளைப்பற்றி எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் அவர்கள் மத்திய அரசின் சார்பிலே தொடங்கப்படவேண்டிய சில தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு விரைவு படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சில தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், மாநில அரசு மிகுந்த முயற்சி எடுத்து. தரவேண்டிய அனுமதிகளை, நிலங்களை வழங்கி, விரைவிலே ராணுவம் தொடர்பான தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது என்பதை நான் தங்கள் மூலம் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திருச்சி படைகலன் தொழிற்சாலை, ஆர்டினன்ஸ் பேக்டரி அருகில் ரூபாய் 70 கோடி செலவில் 'ஹெவி அல்லைட் பேர்ன் பிளேட்டர் புராஜெக்ட்' என்று அழைக்கப்படுகின்ற ஒரு தொழிற்சாலை மத்திய அரசினுடைய பாதுகாப்பு அமைச்சகம் அமைக்க, திருச்சியில் புலியூர், இலந்தம்பட்டி, பூலாங்குடி கிராமங்களில் சுமார் 170 ஹெக்டேர் நிலத்தை இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அதற்குத் தேவையான வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

அடுத்ததாக, தண்ணீர் வழங்குகின்ற திட்டத்தை தமிழ்நாடு குடி நீர் வாரியம் ரூ. 317 லட்சம் செலவில் இப்போது நிறைவேற்றி வருகின்றது. பிறகு ஆவடி கனரக டாங்க் தொழிற்சாலையில், நவீன போர் டாங்குகளைத் தயாரிப்பதற்கும், அவற்றைப் பரிசோதனை செய்துபார்ப்பதற்கும் தேவையான சுமார் 3,671 ஏக்கர் நிலத்தை திருவள்ளூருக்கு அருகில் கையகப்படுத்தி, இனாமாக வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும் என்சின் மற்றும் அவற்றிற்குத் தேவையான உபபாகங்கள் தயாரிக்கும் திட்டம் நிறைவேற்றப்படும். அதைப் போல உதகமண்டலத்தில் ஏற்கெனவே நடைபெற்று வருகின்ற இந்துஸ்த்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் எக்ஸ்ரே பிலிம் தயாரிப்பு தொடங்குவதற்காக சுமார் 160 கோடி ரூபாய் செலவிலே மத்திய அரசு ஒரு திட்டத்தை உருவாக்கி அதற்காக மாநில அரசினுடைய உதவியைக் கேட்ட நேரத்தில், சுற்றுப்புற சூழல் பாதுகாப்புத் துறை, மத்திய அரசினுடைய துறையே, அதற்கு பாதகமாக, இப்படிப்பட்ட மலைவாசஸ்தலங்களில் தொழிற்சாலை தொடங்கப் படக்கூடாது, தடுக்கப்பட வேண்டுமென்று சொன்ன கருத்தை விஞ்ஞான ரீதியில் மாநில அரசு ஆராய்ந்து, இந்தத் தொழிற்சாலை விரிவாக்கம் செய்வதனால், எந்தச் சுற்றுப்புறச் சூழ்நிலையும் பாதிக்கப்படாது என்று வாதித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வார காலத்திலே அதற்காக சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாடு சட்ட விதிகளையெல்லாம் தளர்த்தி விதிவிலக்கு தந்து அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். ரூ. 160 கோடி செலவில் எக்ஸ்ரே தொழிற்சாலையினுடைய விரிவாக்கம் நடைபெறவிருக்கிறது. அதிலே ஆயிரம் பேர்கள் வேலைவாய்ப்பும் 3000 பேர்களுக்கு துணைத் தொழில் வாய்ப்பும் நீலகிரி மாவட்டத்திலே கிடைக்கும். ஆனால்





இந்த எக்ஸ்ரே விரிவாக்கத் திட்டம் மத்திய அரசினுடைய அனுமதியோடு தொடங்கப்பட்டாலும், நம்முடைய நீண்டகாலக் கோரிக்கையான கலர் பிலிம் தயாரிக்கின்ற அந்தத் தொழிற்சாலையையும் நீலகிரியிலே தொடங்க வேண்டுமென்கின்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 11-05)

அதற்கு அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் 'டான்சி' பற்றி சில குறிப்புகளை இங்கே தெரிவித்தார்கள். அவர்கள் சொல்கிறபோதே, 'நான் குற்றமாகவோ அல்லது ஒரு குற்றச்சாட்டாகவோ தெரிவிக்கவில்லை; அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறிந்த தகவல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று அங்கேயுள்ள அதிகாரிகளிலே சிலபேர் நடந்துகொள்கிற முறைகளைப்பற்றி இங்கே சில தகவல்களைத் தந்தார்கள். அவர்கள் தந்த தகவல்களுக்கு அடிப்படை இருக்கிறது. ஆனால் அந்த அடிப்படையான தகவல்கள் வெளியே வந்ததற்குக் காரணமே அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளால் தான் என்பதை தங்கள் மூலமாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 'டான்சி'யிலே பணியாற்றுகின்ற சில அதிகாரிகள் நாட்டு நன்மையை விட, அவர்கள் சொந்த நன்மையை, சொந்த லாபத்தை அதிகமாகக் கருதுகிறார்கள் என்பது புலனாகிறது. அப்படி சொந்த லாபத்தை, சொந்த நன்மையை அதிகமாகக் கருதுகிறவர்கள் என்பதிலேகூட தவறில்லையென்று ஒதுக்கி வைத்தாலும், ஏனென்றால் சில மனித சுபாவங்கள் அப்படி என்று ஏற்றுக்கொண்டாலும், நாட்டினுடைய நலத்தை பலியாக்கிவிட்டு, அரசாங்கத்தினுடைய பொதுத் துறையை கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்வு ஏற்படுத்தி அழிப்பதற்குத் துணையாக இருந்து கொண்டு, தங்களுடைய சொந்த லாபத்தை வளர்த்துக்கொள்ள முயல்கிறார்கள் என்கின்ற புகார்கள், அதற்கான சில சான்றுகள் அரசாங்கத்திற்குக் கிடைத்ததற்குப் பிறகு, அதிலே தீவிரமான நடவடிக்கை எடுத்து, நான்கு அதிகாரிகளை வேலை நீக்கம் செய்கின்ற அளவுக்கும், கட்டாய ஓய்வு கொடுக்கின்ற அளவுக்கும் மேலும் பல குற்றச்சாட்டுகளை அவர்கள்மீது விசாரணைக்கு உட்படுத்தும் அந்த நடவடிக்கைக்கு அரசு இன்றைக்கு வந்திருக்கிறது. நான் இன்னும் ஒரு படி மேலே சென்று, மாண்புமிகு முதல்வரவர்கள் டான்சி நிறுவனத்தைப் பொறுத்தவரை; என்னென்ன குறைபாடுகள், முறைகேடுகள், தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்று கண்டறிவதற்கு ஒரு உயர் நிலையில் உள்ள அதிகாரியை நியமித்து விசாரிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க இருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு தலைவரவர்கள் மூலமாக இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் 'டாமின்' நிறுவனத்தைப் பற்றி சில குறிப்புகளை இங்கே தெரிவித்தார்கள். அதிலே அவர்கள் டாமின் நிறுவனம் யாரோ ஒரு வெளிநாட்டுக்காரருக்கு, வெளிநாட்டுக் கம்பெனிக்கு, ஜெர்மன் நாட்டுக் கம்பெனிக்கு தனிச் சலுகை காண்பித்து, அதன்மூலம் ஏதோ தவறு நிகழ்ந்து கொண்டிருக்கிறது அல்லது கவனிக்கப்படாமல், கவலைப்படாமல் வர வேண்டிய வருமானம் வராமல் இருக்கிறது அல்லது இழப்பு ஏற்படுகிறது என்றதொரு கருத்தை இங்கே தெரிவித்தார்கள். நான் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். டாமின் நிறுவனம் வந்ததற்குப் பிறகுதான் தமிழகத்தில் சாம்பல் நிறக் கற்கள் வெளி நாடுகளில், குறிப்பாக ஜெர்மன் நாட்டிலே உயர்ந்த சந்தையை, கிராக்கியான விலையை இன்றைக்குப் பெற்றிருக்கிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ வெளி மாநிலங்களில் அதை அதிக விலைக்கு விற்பதாகவும், நம்முடைய மாநிலத்தில் குறைவாக விற்பதாகவும் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இல்லை என்பதை நான் அருள்கூர்ந்து தெரிவிக்கிறேன். தனிப்பட்டவர்கள் விற்பனை செய்த விலை ஜெர்மன் மார்க்ஸ் 550 என்றிருந்தால், நாம் விற்ற விலை 650. அப்படி கருநாடக மாநிலத்திலே இருக்கிற தனிப்பட்ட ஒரு நிறுவனம் 700 மார்க்ஸ் என்று விற்றதை, நாம் 725க்கு விற்றிருக்கிறோம். ஆந்திராவில் உள்ள நிறுவனம் 740 என்று விற்றதை, நாம் 800க்கு விற்றிருக்கிறோம். ஆகவே அதிலே

(முற்பகல் 11-10)

கொடுக்கப்பட்டது குறைந்த விலை விபரம் என்ற பிரச்சினையும் இல்லை, அதைக் கவனிக்காமல் இருக்கிறோம் என்ற பிரச்சினையும் எழவில்லை. நீண்டகாலமாக அங்கே இயந்திரம் வரவழைக்கப்பட்டு இன்னும் அமைக்கப்படாமல் இருக்கிறது, அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அந்த இயந்திரத்தை நாம அமைப்பதற்காக எழுப்பப்பட்ட கட்டிடம், சில காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்டது. கட்டிடக் கலை வல்லுனர்கள் தெரிவித்த கருத்துக்களால் தாமதம் ஏற்பட்டுவிட்டது. கடற்கரையோரமாக அந்தக் கட்டிடம் இருப்பதால், மழைக்கும், வெய்யிலுக்கும், புயலுக்கும், காற்றுக்கும் தாங்குகிற வகையில் அந்த இயந்திரம் தாங்கும் சக்தியைக்கொண்டு துருப் பிடிக்காமல் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, தமிழ் நாடு அரசினுடைய கட்டுமானக் குழுவின் கருத்து கேட்கப்பட்டது. கட்டுமானக் குழுவினரிடம் முதலில் பொறுப்பைத் தந்து, அது அதிகச் செலவை ஏற்படுத்தும் என்று அந்தத் தொழில் நுட்பப் பொறியாளர்கள் சொன்னார்கள். அதை இயக்கும் தொழில் நுட்பப் பொறியாளர்கள் இல்லை





யென்று சொல்லி, அதைத் தெரிந்த நாடுகளிடம் கொடுக்கலாம் என்று சொன்ன பிறகு, அந்தக் கட்டுமானப் பணி வேறு ஒரு தேர்ந்த நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு இதற்கு அமைக்கப்பட வேண்டிய அஸ்திவாரம், அந்த மண்ணுடைய தகுதி, கடற்கரையோரமாக இருக்கிற காரணத்தால் அது அழுத்தமாக இல்லை, ஆகவே போடப்பட வேண்டிய அஸ்திவாரம் இன்னும் ஆழமாக இருக்க வேண்டும், பைல் பவுண்டேஷன் என்ற முறையில் போடப்படுகிற அஸ்திவாரம் இன்னும் அதிக ஆழம் போகவேண்டும். அது நீண்ட காலத்திற்கு இருக்கவேண்டியது என்ற உணர்வோடு பொறியாளர்கள், அதிலே இருக்கிற மிகுந்த நுட்பம் படைத்தவர்கள் தெரிவித்ததோடு, அதற்குக் கொஞ்சம் காலம் அதிகமாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது இப்போது கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. விரைவில் அந்தக் கட்டிடம் திறக்கப்பட்டு இயந்திரம் பொருத்தப்பட்டுவிடும். இன்னொன்றைச் சொன்னார்கள். 'டெமரேஜ்' கட்டியதாகச் சொன்னார்கள். அந்தப் பொருளை நாம் டெலிவரி எடுக்காததால் 'டெமரேஜ்' கட்டப்பட்டது என்று சொல்வது தவறானதாகும். அப்படி 'டெமரேஜ்' கொடுக்கப்படவில்லை. காரணம் என்னவென்றால், கார்ப்பரேஷன் எக்ஸ்போர்ட் ஆப்ளிகேஷன்-ல் அது வந்தது. அதனால் சுங்கத் துறையில் இருந்தாகவேண்டுமென்ற அளவில் அவர்கள் பொறுப்பில் வைக்கப்பட்டது. நாம் எடுக்க முடியாமல் 'டெமரேஜ்' கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை அன்போடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் காடம்பாறை திட்டத்தைப் பற்றி ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகச் சுட்டிக் காட்டினார்கள். எந்த நோக்கத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட்டைப் பொறுத்தவரையில், அவர்கள் சொல்லியிருக்கிற அந்த வரலாறு என்பது அரசாங்கம் கொடுத்த வரலாறுதான். அரசாங்கம் கொடுத்த விபரத்தைத் தான் ஆடிட்டர் ஜெனரல் சொல்கிறார். 1970-71-ல் அதற்காகத் திட்டமிடப்பட்டது அன்றைக்கிருந்த அரசாங்கத்தால், அன்றைக்கு இருந்த விலைவாசிப்படி, 35.12 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டது. ஆனால் 1971-ல் ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதே தவிர 1974-ல் தான் கட்டுமானப் பணியைத் தொடங்கினார்கள். அப்படித் தொடங்குகிறபோது மூன்றாண்டுகள் தாண்டிவிட்டது. 35.12 கோடி என்ற திட்டம் அப்போது 65 கோடியாக விலை உயர்ந்துவிட்டது. அதற்குப் பிறகு திருச்சியில் உள்ள 'பெல்' நிறுவனத்திடம் இயந்திரத்திற்காக, அதிலே பாதித் திட்டத்திற்கு முதலில் ஆர்டர் கொடுத்தார்கள். முதலில் அந்தத் திட்டத்திற்காக எப்படி ஏற்பாடு

செய்தார்களோ அப்படி இல்லாமல் பாதித் திட்டத்திற்கு இரண்டு இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுத்தார்கள். ஆர்டர் கொடுத்தார்களே தவிர, அந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலோ அல்லது திட்டச் செலவிலோ அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆகவே அன்றைக்கிருந்த அரசு 1976 ஜனவரியில் நீக்கப்பட்டதற்குப் பிறகு, இடையில் வந்த ஆளுநர் ஆட்சி அல்லது குடியரசுத் தலைவர் ஆட்சி அதை அப்படியே நிறுத்திவைத்தார்கள். காரணம், அன்றைக்கு அந்தத் திட்டத்தினைத் தொடங்குவதற்காக ஏற்பாடு செய்த அரசு நிதிநிலையில் ஒதுக்கீடு செய்யாத காரணத்தால், அல்லது திட்டச் செலவில் நிதி ஒதுக்காததால், அப்படி இரண்டும் இல்லாமல், இருந்ததால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்ட அந்த அரசு இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்து விட்டார்கள். பிறகு நம்முடைய அரசு வந்ததற்குப் பிறகு, 1977 ஆம் ஆண்டு அதைப்பற்றிப் பரிசீலித்து 1978 ஆம் ஆண்டிலேதான் இதை நடத்துவது என்ற முடிவெடுத்து அந்த நான்கு யூனிட்டுகளையும் நிறைவேற்றுவது என்று அரசு தீர்மானித்தது. இந்த நான்கு யூனிட்டுகள்

(முற்பகல் 11-15)

இப்போது நடந்து கொண்டிருக்கின்றன. அப்படி தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் 1971 ஆம் ஆண்டிலே திட்டமிடப்பட்டது. பின் 1974 ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மேற்படி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. எனவே அன்றைக்கிருந்த அரசு மேற்படி திட்டங்களை நிறுத்தி வைத்து விட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு 1977 ஆம் ஆண்டிலே பதவி ஏற்ற பிறகு அதை மீண்டும் ஆராய்ந்து, இது மிக முக்கியமான திட்டம், இதை நிறைவேற்றியேயாகவேண்டும் என்று முடிவு செய்தது, காரணம், எதிர்காலத்தில் மின் தேவை தமிழகத்திற்கு அதிகம். எனவே இது இன்றியமையாத திட்டம் என்று முடிவெடுத்து, அன்றைக்கிருந்த சூழ்நிலையில் இதன் திட்ட அளவு 164.5 கோடி ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. இவ்வாறு இந்த நான்கு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதிலே முதல் யூனிட் 1987 ஜனவரியிலே தன்னுடைய பணியைத் தொடங்கவிருக்கிறது. இரண்டாவது யூனிட் 1987 ஜூலையிலேயும், மூன்றாவது யூனிட் 1988 ஜனவரியிலேயும், நான்காவது யூனிட் 1988 ஜூலையிலேயும் தங்களுடைய பணிகளைத் தொடங்கவிருக்கின்றன. இது அற்புதமான திட்டம் என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். அப்படி ஒரு திட்டத்தை நாம் காலம் கடந்து விட்ட நிலையிலேயும், என்ன செலவு செய்தாலும் மின் சக்தியைக் கண்டுபிடித்தாக வேண்டும் என்கிற காரணத்தால், இத்திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இத்திட்டத்திற்காகச் செய்யப்படுகிற செலவைவிட அதனால் கிடைக்கும்





வருமானம் குறைவு என்று, ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் இருக்கிறதென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மின் சக்தியை உபயோகப்படுத்துகிற நோக்கில் அல்லது அதைக் கண்டுபிடித்து உருவாக்குகிற நோக்கில் எவ்வளவு செலவாகிறது அல்லது அதில் எவ்வளவு இலாபம் கிடைக்கிறது என்பது அல்ல பிரச்சினை. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் குடிசைவாழ் மக்களுக்கு இலவசமாக குடிசைக்கு ஒரு விளக்கு என்று அறிவிக்கிறார்கள் என்றால், அல்லது ஏழை விவசாயிகளுக்கு 2½ ஹெக்டேர்களுக்குக் குறைவாக இருக்கிறவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குகிறார்கள் என்றால், சாதாரண விவசாயிகளுக்கு 12 காசுக்குமேல் உயர்த்துவதில்லை என்று எட்டாண்டுகளாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதைப்போல அரிசி ரூபாய் 1-75-க்குத்தான் வழங்கப்படும் என்று எட்டாண்டுகளாகத் தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது என்றால், அதில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 70 கோடி, ரூ. 75 கோடி என்று இழப்பு ஏற்பட்டாலும், அதைத் தொடர்ந்து நடத்துகிறது என்றால், இவைகளையெல்லாம் ஒரு அத்தியாவசியத் தேவையை உணர்ந்துதான் செய்கிறார்கள். இவைகள் மக்களின் நலனுக்காகத் தொடங்கி இருக்கின்றன, இவைகள் மக்களின் எதிர்கால வளர்ச்சிக்குரியவைகளாக இருக்கின்றன. ஆகவே மின்சார உற்பத்தியைச் செய்கிறபோது, எவ்வளவு செலவாகிறது என்பது பிரச்சினை அல்ல. எங்கேயிருந்தெல்லாம் மின்சாரம் கிடைக்கிறதோ அங்கேயிருந்தெல்லாம் நாம் மின்சாரத்தைப் பெறுகிறோம். அவசியமானால் பக்கத்து மாநிலங்களிலிருந்தும் வாங்குகிறோம். அவர்கள் கேட்கிற விலையைக் கொடுக்கிறோம். என் மத்திய அரசு நிறைவேற்றி நமக்கு அளித்துக் கொண்டிருக்கிற நெய்வேலி மின்சாரம்கூட சில நேரங்களில் விலையைக் குறித்து விவாதத்திற்குட்படுத்தப்படுகிறது. அதைப்போல மின்சார உற்பத்தி என்பது வரவு-செலவுக் கணக்கை, ஒரு இலாப நஷ்டக் கணக்கை அடிப்படையாக வைத்துச் செய்வதல்ல. இந்த நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கு, சமுதாய வளர்ச்சிக்குச் செய்கின்ற ஒன்று. ஆகவே அவற்றில் வேறு தவறுகள் இப்போது நிகழவில்லை. ஏதாவது தவறு என்று நாம் எண்ணிப் பார்த்தால், அதைத் திட்டமிட்ட காலத்திலேயிருந்து நீண்ட காலமாகத் தொடங்காமல் விட்டுவிட்டார்களே, இதை வேண்டுமானால் தவறு என்று நீங்கள் எண்ணினால் எண்ணிக்கொள்ளலாம், அதிலே நாங்கள் குறுக்கிடவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டிலே கூறப்பட்ட கருத்தை என்னுடைய பேச்சிலே கொண்டுவந்தேன். அதிலே தாமதத்தின் காரணத்தைக் கூறி "அதன் காரணமாக இதனுடைய செலவு அதிகரிக்கிறது; எஸ்ட்டிமேட் அதிகமாகிறது" என்று கூறியிருந்தார்கள். இந்தத் தாமதத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று அதிலே குறிப்பிட்டிருந்தார்கள். அதிலே இன்னொன்றையும் நான் குறிப்பிட்டேன். அங்கே ஒரு ஸ்ட்ரைக் இரண்டு மாதங்கள் நடந்தது. அதனால் கான்ட்ராக்டர்களுக்குக் கூடுதலாகப் பணம் தரப்பட்டிருக்கிறது. அதுவும் அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. தாமதத்தின் காரணமாகச் செலவு கூடுகிறது என்பது ஒன்று. இன்னொன்று, அந்த கான்ட்ராக்டர்களுக்குக் கூடுதலாகப் பணம் தரப்பட்டிருக்கிறது. இவை இரண்டும் அதிலே குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் குறைபாட்டை நிவர்த்திப்பது என்பதுதான் பிரச்சினை என்று சொன்னேன்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, என் தாமதமாகியது என்பதற்கு நான் காரணத்தைச் சொல்லிவிட்டேன். தாமதம் ஆனது எங்களால் அல்ல; இந்த அரசால் அல்ல. ஆகவே அதற்கான குற்றத்தை அல்லது குறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவும் முடியாது; பதிலளிக்கவும் இயலாது. ஆனால் வேலை இல்லாத காலங்களில் கான்ட்ராக்டர்களுக்குப் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்புக்கு அந்தத் துறையினால் முறையாக ஆடிட்டர் ஜெனரலுக்கு பதில் அளிக்கப்படும்; அல்லது விரிவாக ஆராய்ந்து பார்க்கப்படும். எந்தச் சூழ்நிலையில் அப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது என்பதும் நாம் பரிசீலிக்க வேண்டிய ஒன்று.

அடுத்து, தேசியக் கல்விக் கொள்கையைப்பற்றி இதிலே ஒன்றும் காணவில்லையே என்று குறிப்பிட்டார்கள். தேசியக் கல்விக் கொள்கை என்னும்போது, நம்முடைய மத்திய அரசாங்கம் அவ்வப்போது சில பிரச்சினைகளிலே தேசிய மட்டத்திலே சில கொள்கைகளை உருவாக்கியது. தேசிய மட்டத்திலே ஒருங்கிணைந்த கொள்கையை உருவாக்க வேண்டுமென்று விரும்புகிறது. அப்படியென்றால், கல்வியைப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு ஒரு உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அந்த உணர்வை ஒரு கொள்கையாக அவர்கள் அறிவித்து, தன்னுடைய தஸ்தாவேஜுகளை நாடு முழுவதும் அனுப்பி, பலதரப்பட்டவர்கள், பல துறையைச் சார்ந்தவர்கள் அதுகுறித்து விவாதிக்க வேண்டும், கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையிலே, 'என்ன கருத்து



சொல்கிறீர்கள்' என்று இன்னும் மத்திய அரசிடத்திலே இருந்து அதிகாரபூர்வமாகக் கேட்கப்படவில்லை. இந்தத் தேசியக் கல்விக் கொள்கை எப்படி வடிவம் பெறப் போகிறது, எப்படி இறுதி வடிவம் பெறப் போகிறது என்பதைப் பார்த்துத்தான் நம்முடைய கருத்துக்களை நாம் சொல்ல முடியும். ஆனால் அதில் இருக்கின்ற ஒன்றிரண்டு பிரச்சினைளைப் பொறுத்தவரை, மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் நம்முடைய தமிழக அரசின் சார்பிலே, முதல்வர் அவர்களின் சார்பிலே மத்திய அரசிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். இப்போது சமீபத்திலே நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே அவற்றைத் தெரிவித்திருக்கிறார்கள். மாடல் ஸ்கூல் என்று சொல்கிறார்களே, அதில் இரண்டு பயிற்று மொழி என்கிறார்களே, அதை ஏற்றுக்கொள்ள முடியாது; ஆங்கிலம், இந்தி பயிற்று மொழி என்றால், சரியாக வராது; ஆகவே அதை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழக அரசு ஏற்றுக்கொள்ளாது. அதைப்போல பல்கலைக் கழகங்களையெல்லாம் தேசியமயமாக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை இந்தத் துறைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் ஒரு இடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அது இந்தக் கல்விக் கொள்கை அறிவிப்பிலே இல்லை. அந்த விவாதத்திற்குரிய தஸ்தாவேஜிலே அது இல்லை. வேறு ஒரு இடத்திலே தெரிவித்ததாக அந்தக் கருத்து வந்தது. அதற்கும் நம்முடைய அரசின் சார்பிலே, கல்வி அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே தேசியக் கல்விக் கொள்கையைப்பற்றி கருத்து ஆளுநர் உரையிலே இடம் பெறவேண்டும் என்று நாம் எதிர்பார்ப்பது தேவையற்ற ஒன்று. காரணம் ஆளுநர் அவர்கள் உரை என்பது, இந்த அரசு எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறது, ஏற்கெனவே அறிவித்த திட்டங்களை எப்படி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது, புதிய கொள்கைகளை நாம் எப்படி அறிவிக்கிறோம் அல்லது அமல் நடத்தப் போகிறோம் என்பதைப்பற்றித் தெரிவிக்கின்ற ஒரு தஸ்தாவேஜே தவிர, நாட்டிலே அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பிரச்சினைகளைப்பற்றி எல்லாம் ஆளுநர் உரை ஆராய்வதில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், சர்க்காரியா கமிஷன். அதற்கு அரசு அளித்த பதில், மாநிலங்களுக்கு அதிக உரிமைகள் என்கின்ற பிரச்சினைகளும் இங்கே விவாதிக்கப்பட்டன. சர்க்காரியா கமிஷன் சில கேள்விகளை அனுப்பியது. மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வழங்குவது அல்லது மாநிலங்கள், மத்திய ஆட்சி இவைகளுக்கிடையேயுள்ள உறவுகள் எப்படி இருக்க வேண்டுமென்பது போன்ற பொதுவான கொள்கையைப்பற்றி விளக்கம் கொடுத்து, இதற்கெல்லாம் அரசின் சார்பிலே பதில்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு

[திரு. இராம். வீரப்பன்] [1986 சனவரி 27

மாண்புமிகு சர்க்காரியா அவர்கள் இங்கே வந்தபோது, தமிழகத்திலே இருக்கின்ற பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களிடம், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களிடம், முன்னாள் முதல்வர் உட்பட எல்லோரிடமுமே அவர்கள் பேசியிருக்கிறார்கள்; பார்த்திருக்கிறார்கள்; சந்தேகங்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அரசின் சார்பிலே அமைச்சர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், அதிகாரிகளும் மாண்புமிகு சர்க்காரியா அவர்களைச் சந்தித்துக் கருத்துக்களைப் பறிமாறிக் கொண்டார்கள். அதற்குப் பிறகும், அவர்கள் "இன்னும் சில விள்க்கங்கள் எனக்குத் தேவைப்படுகின்றன. எந்த மாநில அரசும் தராத வகையில், தமிழக அரசு விரிவான பதிலைத் தந்திருக்கிறது; விரிவான விளக்கத்தைத் தந்திருக்கிறது" என்கிற அந்தப் பாராட்டையும் தெரிவித்துவிட்டு, எனவே இந்த அரசு விரிவாகத் தெரிவித்திருப்பதனாலே, அவருக்கு இன்னும் பல சந்தேகங்கள் வந்து, அந்த சந்தேகங்களுக்கும் இந்த அரசினுடைய விளக்கம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அந்த விளக்கத்தையும் அரசு தயாரித்துக் கொடுக்க இருக்கிறது. மாண்புமிகு சர்க்காரியா அவர்களுக்கு நாங்கள் அளித்த பதிலில் "நீங்கள் ம்க்களுக்குத் தெரிவியுங்கள்" என்று சொல்கின்ற பொறுப்பும் அவர்களுக்கு இருக்கிறது. காரணம், மத்திய அரசினுடைய சட்டத்தின் மூலமாக அந்தக்

(முற்பகல் 11-25)

கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷனிடம் மற்ற கட்சிகள் அல்லது பொதுமக்கள் தருகிற கருத்துக்கள் என்பது வேறு. சட்டப்படி அமைந்திருக்கிற ஒரு அரசு தருகிற கருத்து என்பது வேறு. சட்டப்படி அமைந்திருக்கிற ஒரு அரசு தருகிற கருத்தை கமிஷனுடைய ஒப்புதலோடு, சட்டத்திற்குட்பட்டுதான் நாம் வெளியிட வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை. இதிலே ரகசியம் ஏதுமில்லை. தெரிவிப்பதற்கு எங்களுக்கு எந்தவிதமான சங்கடமுமில்லை. அப்படிப்பட்ட ரகசியங்களை நாங்கள் தெரிவிக்கவுமில்லை. அதிலே மிகத் தெளிவாக தமிழக அரசின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அது இந்த மன்றத்திற்கும் தெரிவிக்கப்படும், நாட்டுக்கும் தெரிவிக்கப்படும். ஆனால் அது சட்டப்படி உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். அவ்வளவுதான்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** எந்தச் சட்டத்திலே 'சர்க்காரியா கமிஷன் தான் மக்களுக்கு அந்தக் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது? அப்படி ஒரு விதி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதேனும் விதி இருந்தால், தெரிவிக்க வேண்டும். அறிக்கை கொடுப்பதற்கு முன்னதாக இந்த அவையை ஏன் நம்பிக்கைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. அதிலே ரகசியம் ஏதுமில்லையே என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.



1986 சனவரி 27]

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** தலைவர் அவர்களே, அரசினுடைய கருத்துத்தான். ஒப்புக்கொள்கிறேன். அருள்கூர்ந்து அதற்கு உள்ளே இருக்கிற நுண்ணிய விவரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையினுடைய கருத்து என்றால், இந்த அவையில் இருக்கிற அத்தனை பேர்களும் சேர்ந்து ஒரு கருத்தைச் சொல்வதாகப் பொருள். ஆனால் தனித் தனியாக அந்தந்தக் கட்சிகள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய கருத்தைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது. வெளியேயும் அதைத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே சர்வ கட்சிகளும், சேர்ந்து ஒரே மாதிரியான கருத்தைத் தெரிவிக்கிற பிரச்சினை இதிலே இல்லை. ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் கருத்து இது. அந்த அரசின் கருத்து என்பது சர்க்காரியா கமிஷன் அனுமதியோடுதான் வெளியிடப்பட வேண்டும் என்று தான் நான் சொல்லுகிறேன். அவர்களே வெளியிட வேண்டுமென்பதல்ல. நாங்கள் அவர்களிடம் எங்கள் கருத்தை முழுமையாகத் தெரிவித்திருக்கிறோம். இதை மக்களுக்குத் தெரிவிக்கலாமா என்று கேட்கிறோம். காரணம் இந்தக் கமிஷன் மத்திய சர்க்கார் விதியின்கீழ் பாராளுமன்றத்தால் அமைக்கப்பட்ட கமிஷன். பாராளுமன்றத்தால் அமைக்கப்பட்ட கமிஷனுக்குத் தரப்படுகிற கருத்துக்களைப் பொறுத்தவரை, சர்க்காரியா கமிஷனே தெரிவிக்கவில்லை. காரணம் அவர்களுக்கும் பல சங்கடங்கள் இருக்கின்றன. சட்டப்படி நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற சங்கடங்கள் அவை, எனவே சர்க்காரியா கமிஷனுக்கு நாம் நம்முடைய எல்லா பதில்களையும் தந்த பிறகு அவர்கள் சொல்லுகிற நேரத்தில் இந்த நாட்டிற்குத் தெரிவிக்கப் போகிறோம். எப்படியானாலும், 9 மாதம், 9½ மாதம் அல்லது 10 மாதம் கழித்து குழந்தை பிறக்கத்தான் போகிறது. குழந்தை பிறந்த பிறகு ஆணா பெண்ணா என்று தெரியும். கருவில் இருக்கிறபோதே ஏன் இவ்வளவு அவசரம் என்றுதான் கேட்க விரும்புகிறேன். உள்ளே இருப்பது பெண்ணா ஆணா என்று எதற்காக அவசரப்பட வேண்டும்? சில நேரங்களில் நவீன விஞ்ஞானக் கருவிகள் மூலமாக ஏழு அல்லது எட்டாம் மாதத்திலேயே கருவில் இருப்பது ஆணா பெண்ணா என்று கண்டு பிடிக்கிறார்கள் என்கிறார்கள். அப்படித்தான் நாம் வைத்துக் கொண்டாலும் பல நண்பர்கள் மூலமாகச் செய்தி கிடைக்கிறது. இதிலே எந்தவிதமான ரகசியமும் இல்லை . . .

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. அரசு என்கிறபோது இந்த அவையையும் உள்ளிட்டதுதான் அது என்பது பொருள். அவையில் இருக்கிற அனைவரின் கருத்துக்களையும் தெரிந்து கொள்ளாமல் அது தரப்பட்டிருக்கிறது. அண்ணா தி.மு.க.-வின் சார்பில் கொடுக்கப்பட்டிருந்தால், அது பிரச்சினையில்லை. அரசியலில், அரசு என்கிறபோது, இந்த அவைக்கும் 'ரெஸ்பான்சிபிலிடி' இருக்கிறது. ஏன் இந்த அவையை 'கான்பிடென்'-சில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அவைக்குத் தெரிவிப்பது என்பது ஒன்று. அவையின் சம்மதத்தைப் பெறுவது என்பது மற்றொன்று. அவைக்குத் தெரிவிக்க இருக்கிறோம். நேரம் வரும்போது தெரிவிப்போம். அரசு எடுக்கிற நடவடிக்கைகளை விமர்சித்து, கண்டித்து அதன் அணுகுமுறை தவறு என்று சொல்லித்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அரசு என்பது வேறு. அரசைச் சரியாக வழி நடத்திச் செல்கிறோம் என்று சொல்லுகிற வகையில்தான், மாண்புமிகு எதிர்க் கட்சிகளைச் சார்ந்த பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். அந்த உரிமை அவர்களுக்கு இருக்கிறது . . .

**Thiru M. P. SUBRAMANIAM :** The Government are responsible to this House elected by the people. They cannot say that they are not responsible to this House. They are answerable to the people through this House.

**Thiru G. SWAMINATHAN :** Mr. Chairman, I may be permitted to say one thing. The House is answerable to the people and the House has elected the Government. But the views of the Government are separate from the views of this House. What I would like to say is that when the Government give a Memorandum to the Finance Commission, they do not get the concurrence of the House beforehand. When they go to the Planning Commission, they do no place their views before that Commission, after getting the concurrence of this House. Only after presenting their Memorandum, the Government place it before this House. The Government do not place their views before this House and then formulate their Memorandum to the Planning Commission. The procedure suggested seems to be strange and that too, coming from a very senior Member of the House.





(முற்பகல் 11-30)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன்னவர் அவர்கள் அந்த அறிக்கையை இந்த அவையிலே வைக்க முடியாது என்ற கட்டத்திலே இல்லை. இந்த அவையில் கொடுக்கிற சந்தர்ப்பம் இன்னும் வரவில்லை. எங்கள் அறிக்கையே முழுமையாக இல்லை, இன்னும் விளக்கம் கேட்டிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இதிலே பிரச்சினை எழவில்லை.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, இந்த அவைக்கு பின்னாலே வைக்கிறாரா இல்லையா என்பதல்ல பிரச்சினை. அரசாங்கத்தின் கருத்து என்று சொல்லுகிறபோது, அதை இந்த அவையிலே வெளிப்படுத்த வேண்டியதுதானே. அதற்குப் பதிலாக துணைத் தலைவர் அவர்கள் தவறான உதாரணத்தைச் சொல்லுகிறார்கள். திட்டக் குழுவிடத்திலே கருத்தை வைப்பது என்பது வேறு, அரசாங்கத்தின் கருத்து என்பது வேறு. இதை இரண்டையும் சேர்த்துக் குழப்ப வேண்டியதில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திட்டக் குழுவிற்கு அரசாங்கத்தின் சார்பாக அறிக்கையைக் கொடுக்கிறோம். இப்போதுகூட நிதியாணைக் குழுவை மத்திய அரசாங்கம் அமைத்திருக்கிறது. அந்தக் குழுவில் அரசாங்கத்தின் சார்பாக அறிக்கை கொடுக்கிறோம். நிதியாணைக் குழுவிடம் நம்முடைய மாநில அரசும் அறிக்கையைக் கொடுக்கிறது. குழுவிடம் அறிக்கையைக் கொடுத்த பிறகுதான், அது அவையில் வைக்கப் படுமே தவிர அதற்கு முன்பு, என்னென்ன கருத்துக்களைக் கொடுக்கலாம் என்று அவையில் எந்த அரசும் கேட்பதில்லை, மாநில அரசும் கேட்பதில்லை, மத்திய அரசும் கேட்பதில்லை. இது புதுமையான கருத்தாக இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரின் வாதத்தில் நான் தலையிட விரும்பவில்லை. எல்லைக் கமிஷன் போன்ற பல கமிஷன்களை நானும் சந்தித்திருக்கிறேன், அரசாங்கமும் சந்தித்திருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் கமிஷனுக்குக் கொடுக்கிற அறிக்கையை அவைக்கு முன்னதாகக் கொடுத்ததாக எனக்கும் தெரியவில்லை. பின்னாலே அவையில் வைப்பதுதான் முறை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அதைத்தான் மிகத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். நீங்கள் ஆங்கிலத்திலே சொன்னாலும், தமிழிலே சொன்னாலும் கருத்து அதுதான். இந்த அவைக்குத் தெரிவிக்க இருக்கிறோம். அது மறைக்கப்பட வேண்டிய ஒன்றல்ல. எந்த நேரத்தில் தெரிவிக்க வேண்டுமோ அந்த நேரத்தில் சட்டப்படி, விதிகளின்படி இந்த அரசு தெரிவிக்கும் என்பதை முன்னாலேயே தெரிவித்துவிட்டேன்.

நம்முடைய ஆசிரியர்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் வேலை நிறுத்தத்தைத் தீர்ப்பதிலே அரசு ஏன் அவ்வளவு காலதாமதத்தை மேற்கொண்டது என்றும், முன்பே அவர்களைச் சந்தித்து இதற்கான ஒரு முடிவை ஏன் கண்டிருக்கக் கூடாது என்றும், இதிலே அரசு காலதாமதமாக நடந்திருக்கிறது என்றும் இங்கே ஆசிரியர்கள் சார்பிலே உள்ள பிரதிநிதிகளும், குறிப்பாக நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்குள்ள பிரச்சினையை, வேதனையை கோரிக்கைகளாக வைத்து, "அதற்கு அரசாங்கம் எங்களுக்கு பதில் அளிக்க வேண்டும், அல்லது எங்களுக்கு நிவாரணம் தர வேண்டும், அல்லது அவற்றை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று பல பிரச்சினைகள் வைக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட பிரச்சினைகளுள் சில பிரச்சினைகளை அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கிறது. இப்போதுதான் நான்காவது சம்பளக் குழு தன்னுடைய முடிவைத் தெரிவித்தது. அதன்மீது எவ்வளவு செலவு அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது, அதிலே எவ்வளவு பேர் பலன் பெற்றிருக்கிறார்கள், அதற்காக எப்படி மகிழ்ச்சியாகப் பாராட்டினார்கள், பிறகு போராட்டத்திலே—அது அனுதாபப் பாராட்டானாலும் சரி, அவர்களுக்கே உரிய போராட்டமானாலும் சரி—ஈடுபட்ட தலைமைச் செயலக அலுவலர்கள் உட்பட எப்படி மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்தினார்கள், பாராட்டினார்கள், மாலைகளை அணிவித்தார்கள் என்பதையெல்லாம் இந்த நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. நல்ல நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஆசிரியர்கள் தங்களுக்குச் சில குறைகள் இருக்கின்றன, அநீதிகள் இழைக்கப்பட்டன என்பதைத் தெரிவிக்கத் தொடங்கினார்கள். அப்படித் தெரிவிக்கத் தொடங்கியதற்குப் பிறகு, வேறு பிரச்சினைகளுக்காக போராட்டங்கள், வேண்டுகோள், கோரிக்கைகள் வைத்ததற்குப் பிறகு, எல்லோரும் ஒன்று சேர்ந்து மறியல் என்ற அளவிற்கு போராட்டம் வந்தது. அரசாங்கம் இப்போதுதான் நான்காவது ஊதியக் குழுவின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தியிருக்கிறது, மற்ற வசதிகளைக் கொடுத்திருக்கிறது; ஆசிரியர்கள் மீண்டும் இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து அதிலே நியாயமானவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா என்று யோசித்துக் கொண்டிருந்தது. அதிலே ஒரு கோரிக்கையாக "30 சதவிகிதம்

(முற்பகல் 11-35)

எங்களுக்குச் சம்பளத்தை உயர்த்துங்கள்" என்று கேட்கின்றார்களே, அது நடக்குமா? 30 சதவிகிதம் உயர்த்திவிட்டால், அதற்குப் பிறகு கஜானாவிலே என்ன இருக்கும்? இவைகளை எல்லாம் பரிசீலித்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே நாட்கள் நகர்ந்துவிட்டன். அப்படி நாட்கள் நகர்ந்து





கொண்டிருக்கின்ற நேரத்திலே அவர்களுடைய போராட்ட முறைகளும் மாற்றப்பட்டன. இறுதியாக எதற்கும் ஒரு காலம் வரும் என்பது இயற்கை விதித்த கட்டளை. அந்தக் காலம் அவர்களுக்கும் வந்தது, அரசுக்கும் வந்தது. சரி, இனிமேல் அவர்களை அழைத்துப் பேசி ஒரு முடிவு காண வேண்டும் என்கின்ற சூழ்நிலைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். ஏனென்றால் இந்தப் பழம் கனிவதற்கு ஒரு காலம் வரும் என்ற அளவில் அந்தப் பழம் கனிவதற்கு ஒரு காலத்தை எதிர்பார்த்திருந்தார்கள். அப்படி இருந்தார்களே தவிர, அலட்சியப்படுத்த வேண்டும் என்பதனாலே அல்ல. முன்னாலே அழைத்திருந்தால், அனைத்து ஆசிரியர்களும் இவ்வளவு சுலபமாக அதற்கு ஒப்புக்கொண்டு, அவர்களுடைய வேலைநிறுத்தத்தை நிறுத்தியிருப்பார்களா என்பது வேறு பிரச்சினை. ஆகவே தான் அரசாங்கம் . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பிறகுதான் வேலைநிறுத்தம் தொடங்கியது. முன்னாலேயே அழைத்திருந்தால், வேலைநிறுத்தமே ஆரம்பித்திருக்காது. வேலை நிறுத்தப் போராட்டமே பின்னாலே அல்லவா? ஆக அழைத்திருந்தால், வேலைநிறுத்தமே தொடங்கியிருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் இதற்குள்ளே அதிகமாக நுழைய வேண்டாமென்று விரும்புகிறேன். முன்னாலேயே இதை தொடங்கியவர்கள் யார்? வெவ்வேறு பிரச்சினைகளுக்காக எப்படித் தொடங்கினார்கள்? இவர்கள் எல்லாம் எப்போது ஒரு இடத்திலே சந்தித்தார்கள்? சில நேரங்களில் காலம்தான் பிரச்சினைகளைத் தீர்க்கின்றது. இது பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த நடைமுறை, இல்லையானால், புரட்சித் தலைவரைப் போல மிக விரைவிலே பிரச்சினைகளைத் தீர்க்கின்ற முதலமைச்சர் அவர்களை நீங்கள் சந்தித்தே இருக்க முடியாது. நான் என்னுடைய இதயசுத்தியோடு சொல்லிக் கொள்கிறேன். எங்கெங்கே இருந்தெல்லாம் வருகின்றார்கள், இதற்குப் பின்னாலே யார் இருக்கின்றார்கள் என்பதே தெரியவில்லை. "உண்மையிலேயே ஆசிரியர்கள் துன்பப்பட்டுத்தான் இந்தப் பிரச்சினைகளை எழுப்புகின்றார்களா? நான்காவது சம்பளக் குழு உண்மையிலேயே ஆசிரியர்களுக்கு அநீதியை இழைத்துவிட்டதா? அப்படித் தவறு ஏதும் நுழைந்துவிட்டதா?" என்று, முதல்வர் அவர்கள் உங்களைச் சந்திக்கவில்லையே தவிர, தினசரி விவாதித்துக்கொண்டுதான் இருந்தார்கள். அதற்கு என்ன பரிகாரம் என்பதையும் அவர்கள் ஆராய்ந்துகொண்டுதான் இருந்தார்கள். ஆக எங்களுக்குத் தெரிந்த ராஜதந்திரம் என்றுகூட நான் சொல்லமாட்டேன், இதற்கு முன்னாலே இருந்த அரசு கற்றுத் தந்திருக்கின்ற ராஜதந்திரத்தை

நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. "இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம், சிறைக்குள்ளேயே உங்களுடைய வேலை நீக்க உத்தரவை அனுப்புவேன். அதை காவல் துறையினர் கதவைத் தட்டிக் கொடுப்பார்கள்" என்கின்ற அணுகுமுறையில் இன்றைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நம்பிக்கையும் இல்லை, அது அவர்களுடைய நடைமுறையிலும் இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத்தந்திருக்கின்ற நடைமுறை என்பது பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதுதான். அவர்கள் எங்களுக்குக் காட்டிய முறை 'பகைவர்களாக இருந்தாலும் அவர்களைச் சந்திப்பேன்' என்பதுதான். அதைத்தான் இங்கே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீதுகூட சொன்னேன். துப்பாக்கியை எடுத்துச் சுட்டவனை, கொலைகாரனை, அங்கேயிருந்தவர்கள் எல்லாம் வந்து பிடித்து அடித்து நொறுக்கிவிடுவார்களோ என்று அஞ்சிய சூழ்நிலையில், குண்டடிபட்ட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 'அவரை ஒன்றும் செய்து விடாதீர்கள், மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று சொல்லி அவருடைய வண்டியிலேயே அவரை அனுப்பச் சொன்னார். அதற்குப் பிறகு குண்டடியைத் தாங்கிக்கொண்டு மருத்துவமனைக்கு வந்தார். இது உலகத்திலே வேறு எங்குமே இல்லாத வரலாறு. வரலாறுகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அந்த நல்ல வரலாறுகள் எதிர்காலத்திலே இலக்கியங்களாக திகழப்போகின்றன. அவை நல்லவர்கள் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களாக அமையப் போகின்றன. ஆகவே ஏன் விரைவிலே வரவில்லை, விரைவிலே வரவில்லை என்று ஆசிரியர்கள் கேட்பதிலே கொஞ்சம் பொருள் இருக்கின்றது. காரணம் அவர்கள்தான் போராட்டத்தை நடத்தியவர்கள். "நீங்கள் அளிப்பீர்கள் என்று தானே நாங்கள் போராடினோம்" என்பார்கள். ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழியை முழுமையாகச் சொல்ல விரும்பவில்லை. "தினசரி அந்தப் புண்ணியவதி எனக்கு ஒன்றுமே இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாள், ஆனால் நேற்றுவரை போட்டுக்கொண்டிருந்தவள் இன்றைக்கு ஏன் இல்லை என்று சொல்கின்றாள்?" என்று கோபப்பட்டதாக ஒரு பழமொழி. அதைப்போல மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலேதான் கேட்டதெல்லாம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அதை

(முற்பகல் 11-40)

ஆசிரியர்கள் உணர்ந்து இங்கே பாராட்டினார்கள். எங்களுடைய தரப்பிலேயிருந்தாலும், இன்னும் ஆசிரியர் பிரதிநிதிதான் என்ற உரிமையோடு, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. லீலாவதி அவர்கள் அதையெல்லாம் நினைவூட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தாலும், "நான் ஆசிரியர் பிரதிநிதி"



என்று நினைவூட்டிக் கொண்டிருக்கிறார். காரணம், ஆசிரியர்கள் சார்பிலே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள், இந்தப் போராட்டமே தவறு என்று எண்ணுவார்களே யானால், போராட்டத்திலே ஈடுபட்ட செல்வி ஆ. லீலாவதி அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இன்றுவரை இருந்திருக்க மாட்டார். ஆசிரியர்களானாலும் சரி, உழைக்கின்ற மக்கள் யாரானாலும் சரி, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், அவற்றைப் பரிவோடு அணுகுவதிலும் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் செய்து தருவதிலேயும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நிகரான முதல்வரை நாம் சந்தித்ததில்லை என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் நான் மற்றவர்களைக் குறைவுபடுத்திச் சொல்கிறேன் என்று பொருளல்ல. இதில் தேவை வந்தபோது, சமயம் வந்தபோது, காலம் வந்தபோது இதற்குப் பரிகாரம் காணப்பட்டது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகிறபோது, இதன் தொடர்பாக இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். "எட்டாம் நிதிக் குழு ஏதோ 500 கோடி ரூபாயை அனுமதித்திருக்கிறது, பரிந்துரை செய்திருக்கிறது, அதை நீங்கள் தரவில்லை, அதைத் தந்தாலே பிரச்சினை தீர்ந்திருக்கும்" என்பது ஒன்று. 25 சதவிகிதம் அகில இந்திய சராசரி சம்பளத்திலேயிருந்து குறைந்திருக்கிறது என்பது மற்றொன்று. இப்படி இரண்டு தகவல்களைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வரவர்கள் ஆசிரியப் பெருமக்களுடைய கோரிக்கைகளிலே பலவற்றை ஏற்றுக்கொண்டு, நிதி தொடர்பான சிலவற்றை மட்டும் ஒரு நபர்க் குழுவுக்கு அனுப்பியிருக்கின்ற காரணத்தாலே, அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. ஆனால் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, எப்படி அரசு அலுவலர்களுடைய ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன, வித்தியாசங்கள் எப்படி குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாத்திரம் இந்த அவைக்கும், நாட்டு மக்களுக்கும் உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எட்டாம் நிதிக் குழு 500 கோடி ரூபாயைக் கொடுக்கலாமென்று அனுமதி வழங்கி இருக்கிறதென்று சொல்லுகிறார்களே, அது என்னவென்றால் நாம் நன்றாக நிர்வாகம் நடத்துகிற அரசு, மாநிலம் என்று பெயர் பெற்றுக் கொண்டிருக்கிறோமே அதனாலே கிடைக்கும் தண்டனை. அதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எட்டாம் நிதிக் குழு இந்தியாவிலே நான்கு, ஐந்து மாநிலங்களிலே வருவாய்க் கணக்கிலே அதிக வருவாய் இருக்கும் மாநிலங்களாக, செலவை ஈடுகட்டும் மாநிலங்களாக எடுத்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய தமிழகத்தையும் இணைத்து, அவர்கள் சிபாரிசு செய்து,

மத்திய அரசு நிதி தர வேண்டுமென்ற உணர்வைத் தடுத்து விட்டு, நமக்கு நிதி தருவதற்குப் பரிந்துரை செய்யவில்லை. அதற்குக் காரணம் தமிழகம் மிகச் சிறந்த நிர்வாகத்திலே இருக்கிறது, வருவாய் அதிகமாக இருக்கிறது, செலவு வருவாய்க்குள்ளே இருக்கிறது, ஆகவே பற்றாக்குறை இல்லை; அதனாலே அவர்களுக்குப் பணம் தேவையில்லை, மத்திய அரசு தர வேண்டியதில்லை; ஆனாலும்—நீங்கள் சொல்கிற—500 கோடி ரூபாயை ஐந்து ஆண்டுக் காலத்திற்கு சம்பள உயர்வு கொடுக்க செலவு செய்யலாமென்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இன்றைக்கு 4-ஆம் ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு 90 கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது, இதை அறிவித்த முதல் ஆண்டிலே. நீங்களே எதிர்பார்க்கவில்லை. நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். எந்தத் தேதியிலிருந்து பலன் கிடைக்கும், அதிகமாகப் போனால் ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அமுல்படுத்துவார்கள் என்று அமைச்சர்கள், அதிகாரிகள் எல்லாம் எதிர்பார்த்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களே எப்போதுமே ஈகை உள்ளம் கொண்டவராயிற்றே, அள்ளி, அள்ளிக் கொடுப்பவராயிற்றே என்று எண்ணக்கூடியவர்கள் ஜனவரி 1-லிருந்து எதிர்பார்த்தார்கள். ஆனால் 1984-ம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதியிலிருந்து பின் தேதியிட்டு, ஏறத்தாழ ஓராண்டுச் சம்பளத்தின் வித்தியாசத்தைக் கையிலே கொடுக்கச் சொன்னார்களே, அந்த வித்தியாசம் மாத்திரம். 45 கோடி ரூபாய் இந்த ஆண்டிலே மாத்திரம். ஆகவே

(முற்பகல் 11-45)

90-ம் 45-ம் சேர்த்து 135 கோடி ரூபாய். அவர்கள் அன்போடு பொங்கல் பரிசாக வழங்குவது 22 கோடி ரூபாய். ஆகவே இந்த ஒரு ஆண்டில் 157 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர ஆண்டுதோறும் 100 கோடி செலவாக இருக்கிறது. ஆகவே எட்டாவது நிதிக் குழு சொன்ன தொகைகளையெல்லாம் தாண்டி ஏறத்தாழ 580 கோடி ரூபாயை இன்றைக்கு இருக்கிற அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற இந்தச் சுமையின் விளைவாக செலவு செய்திருக்கிறோம். ஆகவே நிதிக் கமிஷன் சுட்டிக்காட்டிய 500 கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. தமிழக அரசு ஊழியர்கள் பெற்ற பல சலுகைகள் இந்த ஆட்சியில்தான் ஏராளம் என்பதை நான் பட்டியல் போட்டுக் காட்ட விரும்பவில்லை. காரணம் உங்கள் அனைவருக்கும் தெரியும். சரி. 25 சதவீதம் அகில இந்திய சராசரியில் குறைந்துவிட்டது என்று எட்டாவது நிதிக் கமிஷன் குறிப்பிட்டதே என்று சொல்லலாம். போகிற போக்கிலே நிதிக் கமிஷன் சொல்லிவிட்டது. தமிழக அரசின் நிதிநிலையில் பற்றாக்குறை இருக்கிறது. பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.





இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 85 லட்சம் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் செலவில் சத்துணவு போடப்படக்கூடிய மிகப் பெரிய திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு சமுதாய நலத்திட்டங்களை மக்களின் நலன் கொண்ட திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வித்தியாசத்தைக் குறைக்க மத்திய அரசு நிதி ஒதுக்க வேண்டுமென்று எட்டாவது நிதிக் குழு சொல்லியிருந்தால், அது நமக்குப் பலனுள்ளதாக இருந்திருக்கும். ஆனால் போகிற போக்கில் 25 சதவீதம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்களே தவிர, எப்போது குறைவாக இருந்தது? நான் அதைத்தான், தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஆசிரியர்களுக்கும், அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் நாட்டுக்கும் இந்த அவைக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை நான்கு சம்பளக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே இரண்டு, புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு போடப்பட்டவை. சுதந்திரம் பெற்று எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன என்று பாருங்கள். 27, 28 ஆண்டுகளில் போடப்பட்ட பே கமிஷன்கள் இரண்டுதான். புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பையேற்ற எட்டாண்டுகளில் போடப்பட்ட பே கமிஷன்கள் இரண்டு. இந்த இரண்டு சம்பளக் குழுக்களுடைய சிபாரிசுகளையும் பரிந்துரைகளையும் ஏற்றுக் கொண்டு அவற்றை இன்றைக்கு அமல்படுத்தியிருக்கிறோம். அப்படி அமல்படுத்துகிறபோது முதலாவது சம்பளக் குழுவினால் ஏற்பட்ட செலவு என்ன? ஆண்டுக்கு 10 அல்லது 12 கோடி ரூபாய்தான். அதற்குப் பிறகு இரண்டாவது சம்பளக் குழுவினால் ஏற்பட்ட செலவு 25 அல்லது 30 கோடியாகியிருக்கும். இன்றைக்கு நாம் ஆண்டொன்றுக்கு 90 கோடி ரூபாய் கொடுக்கிறோம். கிட்டத்தட்ட 100 கோடி ரூபாயை எட்டுகிற அளவுக்கு பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். வித்தியாசம் எங்கே இருக்கிறது? 1968 ஆம் ஆண்டு வித்தியாசம் இருந்தது. அன்றைக்கு உங்களிடையே மிக அதிக வித்தியாசம் இருந்தது. அன்றைக்கு ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படவில்லை, அரசு அலுவலர்களுக்கும் கொடுக்கப்படவில்லை. மத்திய அரசு கிராக்கிப்படியோடு மாநில அரசின் கிராக்கிப்படி ஒத்துவரவில்லை, இன்றைக்கு நாம், அவர்கள் உயர்த்திய உடனேயே உயர்த்திக் கொடுக்கிறோம். அதை அன்றைக்கு எந்த அரசும் கொடுக்கவில்லை, அதைக் கேட்க வேண்டுமே என்ற உணர்வும் அன்றைக்கு இருந்த அலுவலர்களுக்கு இல்லை. 1968 லிருந்து இந்தப் பாகுபாடு அதிகமாக இருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் இந்த இடைவெளி குறைக்கப்பட்டது.

நான்காவது ஊதியக் குழு போடப்படுவதற்கு முன்பு எந்தெந்தத் தரத்தில் எந்தெந்த அலுவலர்களுக்கிடையே வித்தியாசம் இருந்தது என்று பார்ப்போம். மூன்றாவது ஊதியக் குழுவில் அந்த வித்தியாசம் குறைந்தது என்பதற்கு உதாரணமாகவும், நான்காவது ஊதியக் குழுவில் அந்த வித்தியாசம் இன்னமும் குறைந்துவிட்டது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

யு.டி.சி.-களுக்கு நான்காவது ஊதியக் குழு போடுவதற்கு முன்பு ஆல் இந்தியா ஆவரேஜை இங்கே இருந்தவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 78 சதவீதம் இருந்தது. இன்றைக்கு பே கமிஷனுடைய இந்தப் பரிந்துரையை அமல் செய்ததால், அது 85 சதவீதமாகியிருக்கிறது. ஹையர் கிரேடு டீச்சர்களுக்கு நான்காவது ஊதியக் குழுவுக்கு முன்பு 81 சதவீதம் இருந்தது, இன்றைக்கு 87 சதவீதம். செகண்டரி கிரேடு டீச்சர்களுக்கு நான்காவது பே கமிஷனுக்கு முன்பு 86 சதவீதம், இப்போது 88 சதவீதம் ஆக உயர்ந்து விட்டது. டிரெய்ன்டு கிராஜுவேட் டீச்சர்களுக்கு முன்பு 80 சதவீதம்,

(முற்பகல் 11-50)

இப்போது 90 சதவீதம். அதைப்போலவே ரெவென்யு இன்ஸ்பெக்டருக்கு முன்னாலே 76 சதவீதம்தான். ஆனால் இப்போது 80 சதவீதமாகும். டிபுடி தாசில்தாருக்கு முன்னாலே 84 சதவீதம், ஆனால் இப்போது 90 சதவீதம். எங்கே 25 சதவீதம் இருக்கிறது? 25 சதவீதம் இருந்தது. அவ்வாறிருந்தது எட்டாண்டுக்கால புரட்சித் தலைவர் ஆட்சியில் குறைந்து கொண்டே வந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அதைக் குறைத்துக்கொண்டே வந்திருக்கிறார். இடைவெளியைக் குறைத்து விட்டார். ஊதியத்தை அதிகப்படுத்திவிட்டார். அகவிலைப் படியை உயர்த்திவிட்டார். இவைகளுக்கும் மேலாக எத்தனை சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன! அவைகள் எல்லாம் எழுதப்படாத, கணக்கிலே வராத சலுகைகளாகவா போய்விடும்? இன்றைக்கு 18 மாதம் வரை Earned Leave காலத்திற்கு Leave salary வாங்குகிறார்கள். முன்பு உண்டா? வேறு எங்காகிலும்தான் இருக்கிறதா? இது அரசாங்கச் செலவிலே வராதா? இப்படி எத்தனை எத்தனை? பட்டியல் போட்டுக் காட்டவேண்டிய அவசியமில்லை.

நீங்கள் கேட்கிற கோரிக்கைகள் தவறு என்பதாக நான் வாதிடவில்லை. இந்த ஆட்சி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு, இந்த எட்டாண்டு காலத்தில் அரசு அலுவலர்களிடத்திலேயும், ஆசிரியர்களிடத்திலேயும் எவ்வளவு அக்கறையோடு நடந்துகொண்டிருக்கிறது என்பதற்குச் சான்றாகத்தான் இவற்றைச் சொல்கிறேன். இன்னொன்றும் சொல்கிறேன். எப்படி 25 சதவிகிதம் வித்தியாசம் ஏற்பட்டது? அன்றைக்கிருந்த ஆட்சியினால், அன்றைக்





கிருந்த அரசினால் இது ஏற்பட்டதென்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு? எது எப்படி இருந்தாலும், நாம் இந்த வித்தியாசத்தைக் குறைத்தாக வேண்டும், ஊதியத்தை உயர்த்தியாக வேண்டும், அகவிலைப் படியைத் தந்தாக வேண்டும் என்று பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தியாவில் ஆயிரம் பேருக்கு எத்தனை அலுவலர்கள் மற்ற மாநிலங்களில் இருக்கிறார்கள், நம் மாநிலத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்கிற நிலைமையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதன்மூலம் அந்த நிலைமைகளை நான் இந்த அவைக்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கிறேன்.

இந்தியாவிலேயே ஆயிரம் பேருக்கு என்கிற தலைக்கட்டை எடுத்துக் கொண்டால், அதிகமான அலுவலர்களை வைத்துக்கொண்டிருக்கிற மாநிலம் நம் மாநிலமாகும். இங்கே நான் எல்லா மாநிலங்களையும் குறிப்பிட விரும்பவில்லை. பொருளாதாரத்திலே உயர்ந்திருக்கிற மாநிலங்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

ஆந்திரப் பிரதேசத்தில் ஆயிரம் மக்கள் தொகைக்கு 12 பேர் அரசு அலுவலர்கள்; கர்நாடக மாநிலத்தில் ஆயிரம் மக்கள் தொகைக்கு 13 பேர் அரசு அலுவலர்கள்; மகாராட்டிர மாநிலத்தில் ஆயிரம் பேருக்கு 11 பேர் அரசு அலுவலர்கள்; குஜராத் மாநிலத்தில் ஆயிரம் பேருக்கு 16 பேர் அரசு அலுவலர்கள். ஆனால் தமிழகத்திலே ஆயிரம் பேருக்கு 19 பேர் அரசு அலுவலர்களாவார்கள். ஆயிரம் மக்களுக்கு 19 பேர் அரசு அலுவலர்கள். இதை நான் தவறு என்றும் வாதிடவில்லை. எப்படியோ நாம் வேலை வாய்ப்பை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்கிற பொறுப்பிலே இருக்கிறோம். ஆகவே அதிகமாக நாம் எடுத்துக்கொள்கிற நேரத்தில் இந்தத் தொகை எங்கே வந்து நிற்கும்? இந்தக் கணக்கை நாம் எங்கே பார்க்க முடியும் என்றால், வருவாய் கணக்கைப் பார்க்கிறபோது, மக்களுடைய வருவாயில் அரசு அலுவலர்களுக்குச் சம்பளமாக அல்லது ஊதியமாகச் செலவிடுகிறபோது எவ்வளவு செலவாகிறது என்பதைப் பார்க்கிறோம். இவைகளைச் சொல்வதன் மூலம், நீங்கள் கேட்கிற கோரிக்கைகள், வைத்திருக்கிற கோரிக்கைகள் நியாயமற்றவை என்று நான் கருதுவதாகப் பொருள் அல்ல. இருக்கிற நிலைமைகளை அருள்கூர்ந்து ஆசிரியப் பெருமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்; நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கைகள் ஒரு நபர்க் குழுவாலே பரிசீலிக்கப்படுகின்றன. நீங்கள் எதிர்பார்க்கிறபடி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எந்த முடிவையும் உங்களுக்குச் சாதகமாகத்தான் வழங்கிக்கொண்டிருக்கிறாரே தவிர, பாதகமாக வழங்கியதே இல்லை. ஆனால் இவ்வளவு நியாய உணர்

[திரு. இராம. வீரப்பன்] [1986 சனவரி 27

வோடு நன்மை செய்ய வேண்டும் என்கிற உணர்வோடு செயல்படுகிற ஓர் அரசை, புரட்சித் தலைவர் அவர்களை, முதல் அமைச்சர் அவர்களை, என்ன என்ன சொன்னார்கள்?

நான் ஆசிரியப் பெருமக்களைச் சொல்லவில்லை. காரணம், "நாங்கள் அறம் வழுவாமல் அற நெறியோடு அறப் போராட்டத்திலே ஈடுபட்டோம்" என்று நீங்களே அன்றைக்குச் சொன்னீர்கள். அறத்தோடு ஆட்சி செய்கிற முதலமைச்சர் ஆட்சியில் அறப் போராட்டம்தானே நடத்த முடியும், அறத்தை மீறி மறத்திற்குச் சென்றால், நாம் என்ன செய்ய முடியும்? அதை இயற்கையின் பொறுப்பிலே விட்டுவிடுகிறோம். அதனால் நாம் விரும்பாத விளைவுகள் எல்லாம் நடந்துவிடுகின்றன.

தலைமைச் செயலக அலுவலர்கள் போராட்டம்பற்றி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். நான் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கென்று சில பொறுப்புகள் இருக்கின்றன. அந்தப் பொறுப்புகளை உணர்ந்து, கோரிக்கைகளை வைக்க வேண்டும். "30 சதவீதம் சம்பளத்தை அள்ளிக் கொடு" என்று கேட்கிற உணர்வு எப்படி பொறுப்பான உணர்வு என்று தெரியவில்லை. அப்படியே கேட்கட்டும்.

(முற்பகல் 11-55)

ஆசைதானே, ஆசைக்கு அளவில்லை. கேட்கட்டும். கேட்பதற்கு முறை கிடையாதா? நெறி கிடையாதா? ஆசிரியர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கிறோமென்று ஒரு நாள் நடத்திவிட்டுப் போய்விடக் கூடாதா? நான் முன்னாலே தெரிவித்ததைப்போல, தொடர்ந்து மாநிலத்தினுடைய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய, இதயம் போன்ற, மூளை போன்ற தலைமைச் செயலகத்திலே பணியாற்றுகின்றவர்கள் தாங்களும் வேலை செய்யப் போகவில்லை; வேலை செய்யப் போனவர்களைத் தடுத்தார்கள், விரிவாக நடத்தினார்கள். இந்த அரசைப்பற்றி, புரட்சித் தலைவர் அவர்களைப்பற்றி ஏதேதோ பேசினார்கள். இவைகள் எல்லாம் வரம்பு மீறி, சட்டத்தை மீறி, செய்யப்பட்டவை. சட்டத்தை, விதியை, ஒழுங்கை உருவாக்குகிறவர்களே, காப்பாற்ற வேண்டியவர்களே அதை மீறினார்கள் என்பதுதான் அரசுக்குள்ள வேதனை. நான் கோபம் என்று கூடச் சொல்லமாட்டேன் இந்த வேதனைக்கு ஆதரவு மருந்து தடவப் போகிறார்களா இல்லையா! இல்லை, இன்னும் குத்திப் பார்த்து அந்த ரத்தத்தை ருசி பார்க்க வேண்டுமென்று ஆசிரியப் பெருமக்கள் விரும்புகிறார்களா? அப்படி விரும்பினால், அவர்களுக்குக் கொஞ்சமாவது நீங்கள் தெரிந்தோ, தெரியாமலோ ஆலோசனை சொல்லுங்கள். உணர்ச்சிவயப்பட்டோ, நியாயமாகவோ, எப்படியோ நீங்கள் பேசியிருந்தால்,



1986 சனவரி 27] [திரு. இராம. வீரப்பன்]

கோபத்திலே பேசிவிட்டோமென்று நாமே சொல்லவில்லையா? சரி மன்னித்துவிடு என்று கேட்டுக்கொள்வதில்லையா? சிறைக்குள் மன்னிப்புக் கடிதம் எழுதித் தா என்று தாக்கீது அனுப்புகிற அரசல்ல இந்த அரசு. உங்களை வேலையை விட்டு நீக்கிவிட்டு, காவல் துறை மூலம் உத்தரவு அனுப்புகிற அரசு அல்ல இந்த அரசு. ஆகவே தலைமைச் செயலக அலுவலர்களில் ஒரு 35 பேர்களுக்கு மாத்திரம் என்ன பகை? அவர்கள் சூத்திரதாரிகள். அதிலே சில பெண்மணிகள் இருக்கிறார்கள். அவர்கள்தான் வேலை செய்யப் போன பெண்களைப் பிடித்து, நிறுத்தியவர்கள். அங்கே டைப் அடித்துக் கொண்டிருந்த ஆவணங்களை எல்லாம் கிழித்துப் போட்டவர்கள். நான் இதை மீண்டும் நினைவுபடுத்த வேண்டுமென்று விரும்பவில்லை; புண்படுத்த வேண்டுமென்று விரும்பவில்லை. "உணர்ச்சி வசப்பட்டு செய்து விட்டோம், ஆத்திரத்திலே செய்துவிட்டோம், இப்போது ஆத்திரம், உணர்ச்சி குறைந்து விட்டது, புரட்சித் தலைவர் அவர்களுடைய தூய உள்ளம் தெரிந்துவிட்டது, ஏதோ என்ன காரணத்தாலோ, யாரோ சொன்னதைக் கேட்டுவிட்டு தவறு செய்துவிட்டோமென்று சொல்ல வேண்டாம்; நாங்கள் செய்ததிலே உங்களைப் புண்படுத்தியிருந்தால், அதற்காக வருந்துகிறோம்" என்று சொல்லக் கூடாதா? அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே கேளுங்கள். இவர் பழி வாங்குகிறாரா? ஆகவே அருள்கூர்ந்து தலைமைச் செயலக அலுவலர்களில் இந்த 35 பேர்கள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றும் மிகக் கொடுமையான, அன்பு உணர்வற்ற, இரக்க உணர்வற்ற காரியங்கள் இல்லை. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. அவர்களும் இதயம் உள்ளவர்கள் தான். நல்லது செய்கிறவர்களைப் பாராட்டுகிறவர்கள்தான். பே கமிஷன் ரிப்போர்ட்டை முதல்வர் அவர்கள் அறிவித்தபோது, மாலை போட்டவர்கள்தான்; வாழ்த்தியவர்கள்தான். இந்த இடைக்காலத்தில் அவர்கள் மனதை யார் மாற்றினார்களோ, எப்படி மாறியதோ, அவர்களே மாறினார்களோ, தெரியாது. மாறட்டும்; கால மாற்றத்தினாலே எல்லாம் மாறும். நான் அவர்களையும் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அந்த உணர்வை, நாங்கள் செய்திருக்கிற சட்டத்தை மீறிய, வரம்பை மீறிய, முறையை மீறிய, நாகரிகப் பண்பாடுகளை மீறிய காரியங்கள் தவறு என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டதற்கு அடையாளமாக அவர்கள் தெரிவித்தாக வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர்கள் பிரச்சினையைப்பற்றி நீண்டகாலமாகவே பேசிக் கொண்டிருக்கிறோம். புரட்சித் தலைவரவர்கள் மீனவர்கள் போன்று உழைக்கின்ற மக்களுக்கு, பாடுபடுகின்ற மக்களுக்கு, துன்பம் இழைக்க வேண்டும்; அவர்களுடைய உயிர்களைப் பறிக்க வேண்டும்; அவர்களுடைய வாழ்வைக் கெடுக்க வேண்டுமென்று எண்ணுவாரா? அதேபோன்று இந்த மன்றத்திற்கு எதிர்

கட்சி என்பதற்காக நீங்கள் பேசினாலும், அவர்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக இப்படிப் பேசினால்தான் முடியுமென்று நீங்கள் பேசினாலும், நான் அரசியல் என்று ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை; அருள்கூர்ந்து பிரச்சினைக்கு எப்படிப் பரிகாரம் காண்பது என்று சொல்ல வேண்டும். ஏன் அரசாங்கம் இதிலே முன்னாலேயே முடிவு கட்டவில்லை என்று கேட்கிறார்களே. நான் இங்கே அருள்கூர்ந்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம்.பி.எஸ். அவர்களைக் கேட்கிறேன். "இந்தக் கடற்கரை அழகுபடுத்தப்பட வேண்டிய அவசியமே இல்லை, மீனவர்களை அப்புறப் படுத்திவிட்டு அழகுபடுத்த வேண்டிய அவசியமில்லை" என்கிற கொள்கையை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சொல்கிறார்களா? மீனவர்களை அப்புறப் படுத்தினால்தான், அழகு வருமா என்பதல்ல பிரச்சினை. ஆனால் இந்தக் கடற்கரையிலே என்னென்ன காரியங்கள் நடைபெற்றதாகப் புகார்கள் வந்தன? பத்திரிகைகளிலே செய்திகள் வந்தன? எவ்வளவு முறைகேடுகள், ஒழுக்கக் கேடுகள், எவ்வளவு வன்முறைகள், எவ்வளவு சமுதாயத்துக்குத் தீதான காரியங்கள் நடைபெறுவதாகச் செய்திகள் வந்தன? அவைகளையும் பத்திரிகைகளிலே வெளியிடுகிறார்கள். அதைப்பற்றியும் அரசியல் கட்சிகள் விமர்சனம் செய்கின்றன. இதையெல்லாம் தடுக்கக்கூடாதா, இதையெல்லாம் கேட்கக்கூடாதா? அங்கே பல்வேறு தடுப்புக்களை, பல்வேறு மறைவிடங்களை எல்லாவற்றையும் ஏற்படுத்தி வைத்துவிட்டு, இந்தத் தவறுகள் நுழையவே கூடாதென்று சில நேரங்களிலே எடுக்கிற முடிவுகளையொட்டித்தான் மத்திய அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தியது. "சென்னைக் கடற்கரையைச்

(நண்பகல் 12-00)

சுத்தமாக வைத்துக் கொள்ளப் போகிறீர்களா இல்லையா? அங்கே சுற்றுச் சூழலை ஒழுங்காக வைத்துக்கொள்ளப் போகிறீர்களா இல்லையா?" என்று எத்தனை கடிதங்கள் மத்திய அரசிலேயிருந்து வந்திருக்கின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாது. "ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் காமராஜர் காலத்திலேயிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கை அது. இல்லையென்று நான் சொல்லவில்லை. அன்றைக்கு எடுக்கவில்லை, ஆகவே இன்றைக்கும் எடுக்கவேண்டாம் என்று நாம் சும்மா இருந்துவிட முடியுமா? பஞ்சாபிலே அன்றைக்கு இருந்த நிலைமை வேறு, இன்றைக்கு இருக்கிற நிலைமை வேறு. அதே நிலைமையைத்தான் நான் இன்றைக்கும் பின்பற்றுவேன் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? அசாமில் அன்றைக்கு இருந்த நிலைமை வேறு, இன்றைக்கு இருக்கிற நிலைமை வேறு . . .





**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** இது ஒரு கொள்கைப் பிரச்சினை அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்களே பேசும்போது குறிப்பிட்டார். பல கால கட்டங்களிலே இதைக் குறித்து அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். அது சரி என்பதால்தான் அப்போதெல்லாம் நடவடிக்கை எடுக்கவில்லை. காமராஜர் அவர்களின் காலத்திலேயிருந்து அவர்கள் அகற்றப் படவில்லை என்றால், அதற்குத் தேவை ஏற்படவில்லை என்பதுதான் பொருள். அப்படி அகற்றுவது தேவையற்றது என்பதால்தான் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. ஒரு தவறான கொள்கையை மத்திய அரசு சொல்லுகிறது என்பதற்காக நாம் கேட்க வேண்டுமா? அது மக்களுக்கு நன்மை பயக்குமா இல்லையா என்று பார்த்துத்தான் நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர, "டெல்லியிலிருந்து கடிதங்கள் வருகின்றன, ஆகவே நடவடிக்கை எடுக்கிறோம்" என்றால் அது நியாயமில்லை. எத்தனையோ கடிதங்கள்பேரில் நாம் நடவடிக்கை எடுப்பதில்லை. அதுவல்ல வாதம். காமராஜர் காலத்திலேயிருந்து கலைஞர் காலம் வரை இந்தப் பிரச்சினையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அதற்குக் காரணம் அது தேவையற்றது என்பதுதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மத்திய அரசு மாநில அரசுக்கு, தமிழக அரசுக்கு நியாயமில்லாத அல்லது மக்களுக்கு விரோதமான தீங்கு பயக்கக்கூடிய வகையில் கடிதம் எழுதுகிறது என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்ல விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மத்திய அரசு கடிதம் எழுதியது என்று அரசுக்குச் சாதகமாக இருக்கும்போது மட்டும், அதைக் "கோட்" பண்ணுவதும், சாதகம் இல்லாதபோது அதைப்பற்றி எடுத்துச் சொல்லாமல் இருப்பதும் நியாயமாகாது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** இதிலே சாதகம், சாதகமில்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை. நாங்கள் மத்திய அரசின் கருத்திலேயிருந்து மாறுபடுகிறோம் என்றால், அது ஒரு கொள்கைப் பிரச்சினையாக வருகிறபோது மாறுபடுகிறோம். எங்களுடைய கருத்து என்ன என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறோம். ஆனால் நிர்வாகப் பிரச்சினை அல்லது நடைமுறைப் பிரச்சினை என்கிறபோது, அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற மத்திய அரசின் நிதி உதவியோடு நடக்கிற திட்டங்கள் என்று வருகிறபோது, அந்த வகையிலேதான் நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. மத்திய அரசு நிதியுதவியோடு நடக்கிற திட்டங்கள் முறையாக நடக்கவில்லை என்று புகார் வருகிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டது. எங்கே புகார் வந்தது? சொல்லுங்கள். உண்மையிலேயே மத்திய அரசு இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இருபது அம்சத் திட்டங்களை

நிறைவேற்றுகிறபோது, தமிழக அரசைப் பொறுத்தவரையில், சில திட்டங்களை நிறைவேற்றுவதில் முதலாவது இடத்திலும், சில திட்டங்களைப் பொறுத்தவரையில், இரண்டாவது இடத்திலும் இருக்கிறது. எனவே அரசியல் வாதிகள் மேடைகளில் ஏறிக் கொண்டு சாட்டுகிற குற்றச்சாட்டுகளைப்பற்றி நாம் கவலைப்பட முடியாது. ஆனால் பொறுப்பான எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்திலே சொல்லும்போது, எங்கேயிருந்து குற்றச்சாட்டு வந்திருக்கிறது, எங்கேயிருந்து புகார்கள் வந்திருக்கின்றன என்று கேட்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். "நிதியைத் தருகிற மத்திய அரசு அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறதா? மத்திய அரசினுடைய துறைகள் ஏதாவது அப்படிக் குறிப்பிட்டிருக்கின்றனவா? அல்லது மத்திய அரசின் அமைச்சர்கள் யாரேனும் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்களா? தயவுசெய்து எங்களுக்குச் சொல்லுங்கள்" என்று அவரைப் பார்த்துக் கேட்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில், அது பல கடிதங்கள் மூலமாக இந்த அரசின் செயல்பாட்டைக் குறித்துப் பாராட்டு தெரிவித்திருக்கிறது. பாராட்டுவது மட்டுமல்ல, சில நேரங்களில் சில திட்டங்களை மிக நல்ல முறையில் செயல்படுத்தியதற்காக ரூ. 2½ கோடி பரிசுத் தொகையாக வழங்கியிருக்கிறது. எனவே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், போகிற போக்கில் ஒரு வார்த்தையைச் சொல்லி நிதி சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று சொன்னால், 'எங்கே எப்போது' என்றுதான் கேட்க விரும்புகிறேன். கீழ்மட்டத்திலே ஒரு சில இடங்களில் சில குறைபாடுகள் இருக்கலாம். நான் மறுக்கவில்லை. அத்தகைய குறைபாடுகளை நாம் எல்லோரும் சேர்ந்து களைய வேண்டுமே தவிர, அரசாங்கம் மாத்திரமே பொறுப்பேற்றுச் செய்ய முடியாது. எனவே பிரச்சினைகள் என்று வரும்போது, மத்திய அரசோடு சிலவற்றைப் பொறுத்தவரையில், மாறுபடுகிறோம் என்றால், கொள்கையில் மாறுபடுகிறோம். மொழிக் கொள்கையைப் பற்றி இறுதியாகச் சொல்ல இருக்கிறேன். அந்த அடிப்படையில் மாறுபடுகிற போது, நாம் ஏற்க மறுக்கிறோம். சுற்றுப்புறச் சூழலை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லையென்றால், அதனாலே மக்களுக்குப் பாதகம் ஏற்படுகிறது என்றால், அதிலே போய் மாநில அரசு மத்திய அரசோடு மாறுபட முடியுமா? ஆனால் அதை எப்படி நிறைவேற்றுவது என்பதிலேதான் சிக்கல் ஏற்படுகிறது. அந்த இடத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பியபோது, காமராஜர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று விட்டுவிட்டார், முன்னாலே இருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கூட வேண்டாம் என்று விட்டுவிட்டார் என்பதல்ல பொருள். அப்போதெல்லாம் கூட முயன்று பார்த்தார்கள். பிரச்சினைகள் தோன்றியதால் விட்டுவிட்டார்கள். இன்றைக்கும் நாம் முயற்சி செய்து பார்க்கிறோம். மனிதன் வளர்ந்து விட்டான்.



நாகரீகத்திலே வளர்ந்துவிட்டான். மக்களிடையே சமுதாய ஒழுக்கங்கள் வளர்ந்து விட்டனவே. எனவே இன்றைக்கு மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று பார்ப்போம் என்று பார்த்தோம். சுப்ரீம் கோர்ட்டிலேகூட முதலில் என்ன சொன்னார்கள்? "அரசாங்கம் சொன்னது சரிதான். அப்படியே இருக்கட்டும்" என்று சொல்லித்தான் 'ஸ்டே' செய்தார்கள். அதற்குப் பிறகு இங்கே இருந்து தகவல்களை, தவறான தகவல்களைத் தெரிவித்தார்கள். சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிக்குத் தந்தி அடித்தார்கள். "சுட்டுக் கொன்று விட்டார்கள். எங்கள் வாழ்க்கையையே பறித்துவிட்டார்கள்" என்றெல்லாம் தகவல்கள் கொடுக்கப்பட்டன. அவர்கள் அப்படியா தவறுகள் நடந்து விட்டன என்று "வழக்கில் தீர்ப்பு கொடுக்கிறவரை, அந்த இடத்தை அவர்களுக்குக் கொடுங்கள், எல்லாவற்றையும் திரும்பக் கொடுத்துவிடுங்கள்" என்று சொல்லி விட்டார்கள். அதிலே தனியாக அரசுக்கோ, முதல்வருக்கோ இன்பம் வருமா?

(பிற்பகல் 12-05)

அந்த மக்களைத் துன்பப்படுத்த வேண்டுமென்று அரசு விரும்புகிறதா? எப்படியோ பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வேண்டுமென்று விரும்புகிற நேரத்தில், என்ன நடந்தது என்று அரசுக்குத் தெரியாதா? அரசியல் கட்சிகளுக்குத் தெரியாதா? யார் யார் 15 நாட்களாக போராட்டத்திற்காகத் தயாரித்தார்கள் என்பது தெரியாதா? இயற்கையிலேயே உணர்ச்சி வசப்படும் மக்கள், உழைக்கும் மக்கள் அவர்கள். அவர்களின் பொது நன்மையைக் கருதி, நகரத்தின் நன்மையைக் கருதி அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதாகிவிட்டது. யார் வைத்த கொள்ளியோ வீடு வந்து சேர்ந்தது போல அதைத் தாண்டி விட்டவர்களால் சில நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. அதற்குள்ளே நான் நுழைய விரும்பவில்லை. அதற்கு நீதி விசாரணை போடவில்லை என்றார்கள். நீதிபதி வைத்து விசாரிக்க அரசு ஏற்கெனவே ஆணையைப் பிறப்பித்துவிட்டது. அதிலே எந்தவிதமான ஐயமும் அரசுக்கு இல்லை, சங்கடமும் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அந்த ஆணையைப் பிறப்பித்துவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மீனவர்கள் பிரச்சினை என்பது நம்முடைய உள்ளத்தை வாட்டிக்கொண்டிருக்கிற பிரச்சினை. அவர்கள் சுடப்பட்டார்கள் என்ற செய்தி புரட்சித் தலைவருக்கு அவ்வளவு இன்பம் தருகிற செய்தியல்ல. அவர் எவ்வளவு வேதனைப்பட்டார் என்பதை நாங்கள் கூட இருந்து பார்த்தோம். நடந்துவிட்ட பிறகு கொடுமைக்காரர்களை, வன்முறையில் ஈடுபட்டவர்களைத் தடுக்க வேண்டிய பொறுப்பு, பொதுமக்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, அந்த அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு; குடிசை மாற்றுத் தலைவர் அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்ற மிகப் பெரிய பொறுப்புகள் காவல் துறையினருக்கு வந்ததால், யாரும்

எதிர்பாராமல் சில நிகழ்ச்சிகள் நடந்துவிட்டன. இதுதான் உண்மை. நிகழ்ச்சி விசாரணைக்குள்ளே போய்விட்டது. அதற்குள்ளே போய் நீண்ட விவாதத்திற்கு அனுமதிக்க வேண்டாம் என்று கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் பேசும்போது, நான் குறுக்கிடாததற்குக் காரணம் அவர் தன்னுடைய உணர்வுகளைச் சொல்லட்டும், சொல்லுவதற்கு இதுதானே இடம் என்று கருதியிருந்தேன். மாநில அரசினுடைய விருப்பப்படியோ அல்லது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பியோ எந்தச் சம்பவமும் நடக்கவில்லை, ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, வேறு அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். விசாரணை வரட்டும், எப்படி நடந்தது, என்ன நடந்தது என்று முடிவு வரட்டும். அதைப் போலவே சுப்ரிம் கோர்ட்டில் வழக்கு இருக்கிறது. அந்த இடத்தை எப்படிப் பாதுகாப்பது, எப்படி அங்கு வருகிற மக்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவது, வெறும் அழகுக்காக மட்டும் அல்லாமல் இந்த வன்முறையாளர்கள், சமூக விரோதிகள் அங்கே இருந்துகொண்டு செய்கிற தொல்லைகள் என்ன ஆகியவைகளையெல்லாம் பார்க்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது.

இறுதியாக, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் மேட்டூர் பேர்ட்ஷெல் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அது தனியாருடைய நிறுவனமாகையால், அரசாங்கம் நினைத்த நேரத்தில் எதையும் செய்ய முடியாது. காரணம், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் 'சிக் இண்டஸ்ட்ரீசை' நாம் எடுத்துக் கொள்கிறோம். அந்த அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து செய்ய வேண்டும். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் மத்திய அரசுக்குச் சிபார்சு செய்து, மூடப்பட்டுள்ள தொழிற் சாலையை நாமே ஏற்றுக்கொள்வதற்கு ஒரு வழிவகை காண வேண்டும். அதற்கு அவர் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மொழிப் பிரச்சினையைப்பற்றி தொடக்கத்திலேயே பேசினார்கள். மொழிப் பிரச்சினை என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லுவதைப் போல, ஏதோ அவ்வப்போது மறுபரிசீலனை செய்கிற பிரச்சினை அல்ல.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, மேட்டூர் மில் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் மத்திய நிதியமைச்சரையும் மற்ற சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும் சந்தித்தபோது, 'குஜராத்தில் ஏற்பாடு செய்து கொண்டிருப்பதைப் போல உங்கள் மாநில



அரசும் ஏற்பாடு செய்ய முன்வந்தால், இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த மத்திய அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது' என்று சொன்னதாகச் சொன்னார்கள். ஆகவே தமிழ் நாட்டில் மாநில டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் அமைப்பதுபற்றி நம்முடைய அரசு பரிசீலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி மத்திய அரசினுடைய கருத்து மாநில அரசுக்கு வருமானால்—இதில் இனிமேலாவது வரலாம்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற தகவலின்படி நடவடிக்கை எடுக்கலாம். அப்படி பல தொழிற் சாலைகளை நாம் எடுத்து நடத்திக்கொண்டிருக்கிறோம். புதுக்கோட்டையிலே காவேரி ஸ்பின்னிங் மில்லைக்கூட நாமே எடுத்து நடத்திக்கொண்டிருப்பது மாத்திரமல்ல, அதை தேசிய மயமாக்கி அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆகவே நிதி உதவி வழங்குவதிலே மத்திய அரசு கொஞ்சம் தாமதம் செய்கிறது என்பதுதான் நம்முடைய உணர்வு. குஜராத்திலே 'ஒன் ஸ்ட்ரோக்'-ல், ஒரே நாளிலே பல கோடிக்கணக்கான ரூபாய்களை வழங்கி, அங்கே அவர்கள் ஆலைகளையெல்லாம் நாட்டுடைமையாக்கியிருக்கின்றார்கள். அப்படி அவர்கள் தருவதற்கு முன்வருகின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட செய்தி அரசுக்கு வந்திருக்கிறதா என்பது தெரியவில்லை. இதுவரை வரவில்லையானாலும், மாநில அரசாகிய நாம் நம்முடைய அந்த உரிமையைக் கேட்போம். அந்த உணர்வைத் தெரிவிப்போம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. எம். பி. எஸ். அவர்கள் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினை நீண்டகாலமாக இருக்கிறது. தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்பது மட்டுமல்ல, அது நாட்டிலே தொழில் வளர்ச்சியிலேயும் உள்ள ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கின்றது. தொழில்கள் வளர்ச்சிக்கு லைசென்ஸ்கள் எல்லாம் கொடுத்தும், நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன என்றார்கள். அப்படிக் கொடுத்தும் நிறைவேற்றப்படாமல் இருப்பது வழக்கமில்லை. அதிலே நடைமுறையிலே பல்வேறு சிக்கல்கள். அவர்களுக்குத் தேவையான சில வசதிகள் தரவேண்டும் என்ற அளவில் அந்த உறுதிமொழிகளைக் கேட்கிறபோது, நம்முடைய சூழ்நிலைக்கு ஏற்ப சொற்ப தாமதங்கள் ஏற்படலாமே தவிர வேறு ஒன்றுமில்லை.

நம்முடைய தமிழகம் இந்தியாவிலே பல இனங்களிலே, பல வகைகளிலே இரண்டாவது இடத்திலும், சில இனங்களில் மூன்றாவது இடத்திலும், சில இனங்களிலே முதலிடத்திலேயும் இருக்கின்றது. நம் மாண்புமிகு நிதி

யமைச்சர் அவர்கள் முன்பே ஒரு முறை இந்த மன்றத்திலேயும், சட்டமன்றப் பேரவையிலும் எடுத்து விளக்கியிருக்கின்றார்கள். நான் அதற்காக அதிகமாக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

இந்தி மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, அது அடிக்கடி பரிசீலிக்கின்ற பிரச்சினையல்ல. இங்கேகூட நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டார் என்று சொல்கின்றார்கள். 1960 ஆம் ஆண்டு நடைபெற்ற விவாதத் தொகுப்புக்களை நான் இப்போதுதான் பார்த்தேன். எந்த இடத்திலேயும் அவர் அப்படி குறிப்பிடவில்லை. அன்றைக்கும் அவர்கள் " இந்தியைத் திணிக்காதீர்கள், இந்தியை மட்டும் தேசிய மொழியாக்காதீர்கள், இந்தியை மட்டும் ஆட்சி மொழியாக ஆக்காதீர்கள் " என்றுதான் கூறியுள்ளார்கள். " இந்தியை இணைப்பு மொழி என்று சொல்லாதீர்கள் " என்று அன்றைக்கு அவர்கள் சொல்லவில்லை என்றாலும், இன்றைக்கு வருகின்ற அந்த அறிவிப்புகள் தேசிய மொழி என்பது போய், ஆட்சி மொழி என்பதுபோய், இணைப்பு மொழி என்று அவர்கள் சொல்கின்றார்கள். அதனாலேதான் தமிழகம் அச்சப்படுகிறது. தமிழகம் அச்சப்படுகிறது என்றால், ஏதோ கட்சி அச்சப்படுகிறது, இதை வைத்துக் கொண்டுதான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆம். இதிலே பெருமைதான். காரணம் தமிழகத்திலே தமிழ் மொழியை விட்டால் வாழ்வே இல்லை, உயர்வும் இல்லை. ஆகவே " இதைக் கொண்டுதான் நீங்கள் வாழ்கின்றீர்கள்" என்று சொன்னால், அதிலே எங்களுக்கு இழிவு ஒன்றுமில்லை. அப்படிச் சொல்லிவிட வேண்டாம். காரணம் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் எங்கேயிருந்து வந்தவர்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அவர்களும் மறந்திருக்க மாட்டார்கள். தமிழ் மொழிக்காக வாதாடுகிறபோது, இதைப் பற்றி அரசியலுக்காக வாதாடுகிறோம் என்று அருள்கூர்ந்து கொச்சைப்படுத்திவிடவேண்டாம். தமிழ் மொழி அழிந்துவிட்டால், தமிழ் இனம் இருக்காது. தமிழ் மொழியை அழிக்க வருகிற முயற்சிகள் நடக்கின்ற நேரத்தில், தமிழ் இனம் கிளர்ந்து எழுந்து நிற்கும்.

ஸ்ரீலங்காவிலே செத்துக்கொண்டிருக்கின்றார்கள். மடிந்து கொண்டிருக்கின்றார்கள். துப்பாக்கிக்கு தங்களுடைய மார்பைக் காட்டிக்கொண்டிருக்கின்றார்கள் என்றால், தமிழன் என்ற பெயரோடு அந்த இன உணர்வோடு வாழ வேண்டும் என்றுதான். நான் உணர்ச்சியைத் தாண்டிவிடுகின்ற அளவிலே பேசவில்லை. தேவையில்லாத ஒரு பிரச்சினையை இந்த மன்றத்தில் ஆளுநர் அவர்கள் உரை விவாதத்திலே கொண்டுவந்துவிட்டார்கள். ஆகவே எங்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்கவேண்டிய கட்டாயம் எங்களுக்கு வந்துவிட்டது. இந்த ஆட்சியில் தமிழை அழித்துவிட்டுத்தான் இருக்க வேண்டு



மென்ற ஒரு நிலைமை ஏற்படுகின்ற சூழ்நிலை வருமானால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழை இழந்துவிட்டு ஆட்சியிலே இருக்கமாட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, தவறான கருத்தை உருவாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். தமிழ் மொழியை அழித்துவிட்டு, பிறகு அரசியல் நடத்த வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. நானும் சொல்லவில்லை. தமிழ் மொழி அழியாது, அழியக் கூடியது அல்ல என்பதை கடந்த காலத்திலேயே உணர்ந்திருக்கிறோம். இந்தி மொழிப் பிரச்சினை தமிழ் மொழியை அழிக்கக்கூடியதாகும் என்று திசை திருப்பவேண்டாம் என்பதற்காகத்தான் நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். இந்தி மொழிப் பிரச்சினையால், தமிழ் மொழிக்கு, தமிழ் மக்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்படுமானால், அதைப்பற்றிச் சொல்லுங்கள். இந்தி மொழிப் பிரச்சினையால் தமிழ் மொழிக்கு எந்தக் காலத்திலும் ஆபத்து வராது என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, தமிழ் மொழிக்கு ஆபத்துக்கள் வந்தபோதெல்லாம் தமிழ்ச் சமுதாயம் அதை எதிர்த்து நிற்பதற்கு முன்வந்ததனாலே ஆபத்து இல்லை. இன்றைக்கு அல்ல, நேற்று அல்ல, ஆண்டாண்டுக்காலமாக இது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. திருஞானசம்பந்தர் பற்றிச் சொல்லும்போது ' நாளும் இசைபாடி தமிழ் பரப்பிய ஞான சம்பந்தர் " என்று பாராட்டியிருக்கின்றார் அப்பர் அவர்கள். ஆகவே 1300 ஆண்டுகளுக்கு முன்னமே தமிழ் காப்பாற்றப்பட வேண்டிய நெருக்கடி இருந்திருக்கிறது. தமிழைப் பரப்பவேண்டிய, வளர்க்க வேண்டிய அவசியம் தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே இன்றைக்கு மாத்திரம் வந்ததல்ல. நீண்ட வரலாறே இருக்கிறது. எப்படியோ, எந்த உருவத்திலேயோ வந்துகொண்டிருக்கின்றது. ஆனால் தமிழர்கள் தமிழைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் தமிழ் வாழ்ந்துகொண்டிருக்கின்றது. அது எந்தப் பெயரிலே வந்தாலும், ஆட்சி மொழி என்று வந்தாலும் அல்லது இணைப்பு மொழி என்று வந்தாலும், எந்தப் பெயராலும் " இங்கே இந்தியைத் திணிக்காதீர்கள் " என்பதுதான் அரசினுடைய கருத்து. நீங்கள் ஒரு

(பிற்பகல் 12 15)

மொழியை வளர்க்க முனைகிறீர்களே, அப்படியானால் இந்த நாடு முழுவதும் இந்தியைப் பேசியாக வேண்டுமென்ற அச்சம் மற்றவர்களுக்கு ஏற்படுகிறது. இதை அருள்கூர்ந்து பரிசீலிக்க வேண்டும். மாண்புமிகு

உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் தமிழகத்திலே இந்தியைப் படிக்க வைப்ப தற்கு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எதிர்க்கட்சித் தலைவரும், அதை ஆதரிப்பது போலப் பேசினார்கள். காரணம், ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. "எங்களுடைய உறுப்பினர் பேசினார்; சரியான சாட்சியாக அது இருக்கிறது" என்று சொன்னார்கள். இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளை இந்த அவையிலே வைக்கிறேன். ஒரு ஓட்டு வித்தியா சத்திலே இந்த நாட்டினுடைய ஆட்சிமொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஒரு ஓட்டு வித்தியாசத்திலே இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த நாட்டிலே மற்ற மொழிகள் பேசுகிற மக்கள்மீது திணிக்கப்படுகிறதே, அதை அருள்கூர்ந்து மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். இன்றைக்கு மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மிக முக்கியமான பிரச்சினைகளில் மறுபரிசீலனை செய்கிறார்கள். அவர்கள் நீண்டகாலமாக இருந்து வருகிற பழக்க வழக்கங்களிலே இருந்து, நடைமுறைகளிலே இருந்து மாறுபட்டு, மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறார்கள். நான் இந்த அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். தமிழக அரசின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். ஒரு வாக்கு வித்தியாசத்திலே வெற்றி பெற்ற கார ணத்தாலே, அதுவும் 'கேஸ்டிங் ஓட்' தலைவர் போட்டதன் மூலம் வெற்றி பெற்ற இந்த ஆட்சி மொழிப் பிரச்சினையை மீண்டும் அருள்கூர்ந்து பரிசீலிப் பதற்கு முன்வர வேண்டும். அதுதான் எங்களுடைய வேண்டுகோள். இந்த நாட்டிலே இணைப்பு மொழியாக எந்த மொழி வருகிறது என்பதை நீங்கள் பரிசீலியுங்கள். நீங்கள், எங்களுக்கு மும்மொழி என்கிறீர்கள்; அங்கே என்று வரும்போது ஒரு மொழித் திட்டமாகத்தான் இருக்கிறது என்று நம்முடைய அரசின் சார்பிலே தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். இந்தியை நாங்கள் எதிர்க்கவில்லை. இந்தியாவிலே இருக்கிற எந்த மொழியையும் எதிர்க்கவில்லை. உலகத்திலுள்ள எந்த மொழியையும் எதிர்க்கவில்லை. தேவையானவர்கள், படிக்க முடிந்தவர்கள் படித்துக் கொள்ளலாம். ஆனால் எங்கள் மீது திணிக்காதீர்கள். மறைந்த பண்டித நேரு அவர்கள் அந்த அச்சத்தைப் போக்கத்தான் உறுதிமொழி அளித்தார்கள். உறுதிமொழி அரசி னுடைய ஆணையாக மாத்திரம் இருக்கக்கூடாது, அரசியல் சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நிலை. ஆகவே இரண்டு மொழித் திட்டம் என்பது ஒரு மனிதனுக்கு இரண்டு கண்களைப் போன்றது. ஒரு மனிதனுக்கு இரண்டு கண்கள் வேண்டும். இரண்டு கண்கள் போதும். மூன்றாவது கண் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது தேவையில்லை. அந்த ஆராய்ச்சியும் வேண்டாம். ஆகவே இரண்டு கண் களைப்போல, இரண்டு மொழித் திட்டம். இந்த இரண்டு மொழித் திட்டத்தை நாம் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அது பேரறிஞர் அண்ணா





அவர்கள், தமிழகத்திற்கு மாத்திரமல்ல, இந்த நாட்டுக்குக் காட்டிய வழி முறை, நெறிமுறை. வடக்கிலே இருப்பவர்களுக்குள்ள சிக்கல் தெரிகிறது. இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் எப்படி இந்தப் பிரச்சினையை அணுகுகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த நாட்டினுடைய ஒற்றுமையை, இங்கே இருக்கின்ற மற்ற இன மக்கள், மற்ற மொழி மக்கள் பேசுகிற உரிமையைப் பாதுகாக்கிறது என்பதை அவர்கள் தெரிவித்தாக வேண்டும். இன்றைக்கு புரட்சித் தலைவரவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய காலத்தில் இந்த நாட்டினுடைய ஒற்றுமை, இந்த நாட்டு மக்களிடத்திலே ஏற்பட வேண்டிய ஒருமைப்பாடு, நிச்சயமாக வளர்க்கப்படும், பாதுகாக்கப்படும். அது பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத் தந்த வழி முறை. அதிலிருந்து ஒரு அணுவளவும் பிசகப் போவதில்லை. மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களே தெரிவித்திருப்பதுபோல, பாராட்டியுள்ளது போல, நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் தேசியக் கொள்கையை, தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பதிலே, தேசிய நீரோட்டத்திலே தமிழகம் இணைய வேண்டுமென்பதிலே அப்பழுக்கற்ற தூய்மையான உணர்வு படைத்த வர்கள். ஆனால் அந்த உணர்வு இருக்கிறதென்ற காரணத்தாலே, தமிழை இழந்துவிடமாட்டோம் என்று சொல்லும்போது, 'நீங்கள் என்ன மிரட்டு கிறீர்கள்' என்று கேட்கிறீர்களே? சரியா? தமிழை அழிப்பதற்குப் பகை நேரடியாகத்தான் வரவேண்டுமென்பதில்லை. மருந்தை குழந்தைக்குக் கொடுக்கிறபோது, தேனிலே கலந்து கொடுப்பார்கள். குழந்தைக்கு இனிப்பு தான் தெரியும். உள்ளே மருந்து இருக்கும். மருந்தை நோயைப் போக்கக் கொடுத்தால் பலனுண்டு. ஆனால், விஷத்தை தேனிலே கலந்து கொடுக்கக் கூடாது என்பதுதான் நாம் சொல்லுவது. ஆகவே, விஷம் என்று இந்தியைச் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்ளாதீர்கள். எந்தப் பிரச்சினையை இந்த நாட்டு மக்களிடத்திலே புகுத்தினாலும், அதனால் யாரும் பாதிக்கப் படாமல் இருக்க வேண்டும். இந்த நாடு பல மொழிகள் பேசுகிற நாடு; பல இன மக்கள் வாழ்கிற நாடு. இவ்வளவு பிரிவுகளுக்கிடையே பிளவுகளுக் கிடையே ஒற்றுமையாக இருக்கிறது என்ற சிறப்பைப் பெற்றிருக்கிற நாடு. உலகத்திலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு. ஆகவே இந்த ஜனநாயக நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பாரம்பரியத்தை, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கும் இருக்கிறது, மாநில அரசுகளுக்கும் இருக்கிறது. இன்றைக்கு வளர்ந்துவரும் சூழ்நிலைகளை அருள்கூர்ந்து பாருங்கள். ஆந்திராவிலே தெலுங்கு; கர்நாடகத்திலே கன்னடம்; கேரளாவிலே மலையாளம். நீங்கள் இந்திக்கு எதிர்ப்பு இல்லை என்று சொல்லுகிறீர்களே, இதற்கு முன்னாலே ஆந்திராவிலே தெலுங்கு வந்ததா? கர்நாடகத்திலே கன்னடம் வந்ததா?

[திரு. இராம. வீரப்பன்] [1986 சனவரி 27

(பிற்பகல் 12-20)

கேரளாவில் மலையாளம் வந்தது எப்படி? நம் உணர்வுகள் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றன என்ற பிரச்சினையை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். வளர்ந்து கொண்டிருக்கிற உணர்வுகளை, மாற்றங்களை அருள் கூர்ந்து கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுடைய தாய்மொழியை ஏற்றுப் போற்றுகிறபோது, மற்ற மொழிகள் அதற்குப் பாதகமாக வந்துவிடுமோ என்ற அச்சத்தை அருள்கூர்ந்து ஒரு துளி அளவேனும் அதிகாரிகள் மட்டத்திலும் சரி, அரசு மட்டத்திலும் சரி ஏற்படுத்திவிடக் கூடாது. எந்தத் துறையாக இருந்தாலும் சரி. இந்த நாட்டுக்கு இணைப்பு மொழி வேண்டும். எது இணைப்பு மொழி என்பதுதான் பிரச்சினை. ஆங்கிலம் இருந்தால், உலகம் முழுவதையும் அது இணைக்கிறது. அதிலேயே இந்தியா முழுவதும் வந்து விடுகிறது. இதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், பெரிய துவாரம் என்று போட்டுவிட்டால், அது பூனைக்கும் போதும், எலிக்கும் போதும், இரண்டுமே அதிலே போய்விடும் என்றார்கள். அதைப்போல "ஆங்கிலம் ஒன்றைக் கற்றுக்கொண்டால், அது உலகம் பூராவுக்கும் தொடர்பு மொழி, இந்தியா பூராவுக்கும் தொடர்பு மொழி" என்று அழகாகச் சொன்னார்கள்.

வெள்ளைக்காரன் காலத்திலேயே தமிழை அழிக்க முடியவில்லை என்று சொன்னார்களே, வெள்ளைக்காரன் எந்த மொழியையும் திணிக்க விரும்பவில்லை. அவனுடைய மொழியான ஆங்கிலத்தை வைத்துத்தான் நிர்வாகத்தை நடத்த முடிந்தது. நிர்வாகத்தை நடத்துவதற்காக ஆங்கிலத்தைக் கொண்டு வந்தான். அதேநேரத்தில் தமிழுக்கோ மற்ற மொழிகளுக்கோ ஆபத்து இல்லை. அந்த ஆங்கிலத்தைக் கொண்டு வந்து புகுத்தி அதை எந்த மொழியோடும் இணைத்துவிட வேண்டுமென்று சொல்லவில்லை. இங்கே நீங்கள் இணைப்பு மொழி என்று சொல்கிறபோதும், ஆட்சி மொழி என்கிற போதும், அதற்கான வாதத்தை வைக்கிறபோதும்தான், அச்சம் வருகிறது. "ஒரு மொழியாக அதைக் கற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னால் பிரச்சினை இல்லை. யார் வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். கற்றுக் கொள்வதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. இந்தியை வெறுக்கவில்லை. எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளட்டும். ஆனால் இதை இணைப்பு மொழி என்று சொல்கிறபோது, இந்த மொழியை நீ கற்றுத் தான் ஆகவேண்டும் என்று சொல்கிறபோது "இல்லையானால் நீ இணைப்புக்கு எதிராக இருக்கிறாய், நீ பழக முடியாது" என்று சொல்கிற சூழ்நிலை வருமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. அச்சம்தான். அந்தச் சூழ்நிலைதான் ஏற்படுகிறது. அதைப் போக்கி விடுங்கள் என்பதுதான் தமிழக அரசின் வேண்டுகோள்.



1986 சனவரி 27]

திரு. எம். பி. சுப்பிரமணியம்: ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆண்ட போது, ஆங்கிலம் புகுத்தப்பட்டது. ஆங்கிலம் கட்டாயப் பாடமாக இருந்தது. அதோடு மட்டுமல்ல, அது முதல் மொழி, நம்முடைய தாய் மொழியான தமிழ் மொழி இரண்டாவது மொழியாகத்தான் இருந்தது. உங்களை நான் கேட்க விரும்புகிறேன், 'அந்தக் காலத்திலும் தமிழை முதல் மொழியாக வையுங்கள், ஆங்கிலத்தை முதல் மொழியாக வைக்க வேண்டாம் என்று ஏதாவது போராட்டம் அறிவித்திருக்கிறீர்களா?'

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: உங்களிடத்திலிருந்து அந்த பதில் வரவேண்டுமென்றுதான் சொன்னேன். ஆங்கிலேயன் ஆங்கிலத்தைக் கட்டாயப்படுத்தினான். முதல் மொழியாக வைத்தான். ஆனால் இன்றைக்கு இந்திய அரசு இந்தியைக் கட்டாயப்படுத்துகிறது. முதல் மொழியாக வைக்கிறது. அதைத் தடுப்பது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அந்தக் கருத்திற்கு வரவேண்டுமென்றுதான் சொன்னேன். ஆகவே ஆங்கிலத்தை எதிர்ப்பதில் தேவையில்லையென்று சொல்வதில் நமக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்தியா போன்ற பல மொழி பேசுகிற நாட்டில் ஒரு இணைப்பு மொழி இல்லாமல் வாழ வேண்டும், வாழ முடியும் என்று எண்ணுகிற முட்டாள்கள் இருக்க முடியாது. இணைப்பு மொழி தேவை, அது எந்த மொழி. அதை இன்றைக்கு மறுபரிசீலனை செய்யுங்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக 1960 ஆம் ஆண்டில் நடந்த ஒரு விவாதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "இந்தியாவில் இருக்கிற 14 தேசிய மொழிகளில் எந்தெந்த மொழிக்குத் தகுதி இருக்கிறதோ, அந்த மொழிகள் எல்லாம் ஆட்சி மொழியாக வேண்டும், அதுவரை ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கட்டும்" என்று சொன்னார்கள். அதுதான் இந்த அரசின் கொள்கை. எல்லா மொழிகளுக்கும் தகுதி வரட்டும். ஒருவனுக்கு இந்தி தெரிந்தால், அவன் இந்தியா முழுவதும் போக முடியும். அது ஒரு மொழிக் கொள்கைதான். தமிழன் போக முடியாது, கன்னடன் போக முடியாது, ஆந்திராக்காரன் போக முடியாது. அவனுக்கு இன்னொரு மொழி வேண்டும். அது இணைப்பு மொழி, இவன் இந்தியன். அந்த உணர்வுகளை அவன் வளர்க்க முடியும். அருள்கூர்ந்து சொல்லுங்கள். ஆனால் ஆங்கிலம் என்பது நாம் ஏற்றுக்கொண்ட மொழியானாலும், அது நமக்கு அந்நிய மொழி என்கிறோம். அது அந்நிய மொழியா இல்லையா என்பது வேறு விஷயம். அந்த விவாதத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. இந்த நாட்டிலே இருக்கிற குடிமக்கள் பேசிக் கொண்டிருக்கிற மொழி. நம்முடைய தேசிய மொழியாக அதை ஆக்க வேண்டுமென்று கூட சொல்கிற நிலை இருக்கிறது. ஆகவே ஆங்கிலம் என்பது நீண்ட காலமாக இருந்த, இணைத்த மொழி. பிரிந்து கிடந்த பாரதத்தை ஒன்றாக்கிய மொழி. ஆகவே

[திரு. இராம. வீரப்பன்] [1986 சனவரி 27

இதுவரை இணைத்த மொழி தேவையா, அல்லது புதிய ஒரு மொழி தேவையா? ஆகவே இணைப்பு மொழி என்றாலும், இணைத்த மொழி என்றாலும், அதைப் பரிசீலித்துத்தான் பார்க்க வேண்டும். இதில் உணர்ச்சி வசப்பட்டு பல கருத்துக்களைச் சொல்லலாம். எதற்காக? அரசியல் லாபம் பெறுவதற்காக என்று இந்த மொழி உணர்வை கொச்சைப்படுத்த வேண்டாம் என்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும், இந்தியா ஒற்றுமையாக இருக்க வேவண்டும், இந்தியா பிளவு படக்கூடாது. இந்தியா பிரிக்கப்படக் கூடாது. அதற்கேற்ற மொழிக் கொள்கையை அருள்கூர்ந்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, மற்ற விபரங்களுக்கு பின்னாலே வருகிற மானியக் கோரிக்கை போன்ற விவாதங்களில் பதில் அளிப்பார்கள் என்று சொல்லி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை நிறைவேற்றித் தாவேண்டுமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

(பிற்பகல் 12-25)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"1986 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8 ஆம் நாள் ஆளுநர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரை நிகழ்த்தியதற்காக தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய நன்றியை ஆளுநர் அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றனர்".

தீர்மானம்,அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் மாலை 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 4-00)

அவை மீண்டும் 4-00 மணிக்கு **மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்** (திரு. ஜி. சுவாமிநாதன்) அவர்கள் தலைமையில் கூடியது.

**5. 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீதும், மற்றும் 1979-80 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின் மீதும் விவாதம்.**

*** திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடு மானியத்தின் மீது சிலவற்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக நான் இந்த மானியத்தின்மீது பேசுகின்றபோது ஆசிரியர்கள், அலுவலர்கள் பிரச்சினைபற்றி மட்டுமே பேச



1986 சனவரி 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

விரும்புகிறேன். ஆசிரியர்கள், அலுவலர்களுடைய நலனுக்காக, அவர்களுடைய ஊதியத்தை மாற்றியமைப்பதற்கு நான்காவது ஊதியக் கமிஷன் அமைக்கப் பட்டது. நான்காவது ஊதியக் குழுவின் அறிக்கை அவையிலே இருக்கின்ற எங்களுக்கெல்லாம் கூட தரப்படவில்லை. அதுபற்றித் தெரியாததினாலே, அதைப் பார்க்காததினாலே, விவரங்கள் புரிவதற்கு மிகவும் சிரமப்பட்டு, அரசு ஆணை வெளியிட்டதை வைத்து, ஆராய்ந்து அதற்குமேல் எங்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளானோம். இந்த அவையிலே அந்த அறிக்கை வைக்கப்படாததினாலே அது நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னார்கள். அதை பல பேர் தேடுகிறார்கள். விற்பனைக்கு வந்தது என்று சொன்னார்கள். அதன் விலை 45 ரூபாய் என்றார்கள். அதை வாங்குவதற்குப் போனால் அது தீர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அதை ஆசிரியர் பிரதிநிதிகளுக்காவது வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைக் கொடுப்பதால், அரசுக்கு மிகப் பெரிய செலவு ஒன்றும் ஏற்படாது. உறுப்பினர்கள் அனைவருக்கும் அதைத் தர முயற்சி மேற்கொள்ள வேண்டு மென்று தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக அதிலே பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் ஆணைகளாக வெளி வராத நிலைமைகள் இருக்கின்றன. அதைப் பார்த்துத்தான் விமர்சனம் செய்ய வேண்டிய நிலைமைகள் வருகின்றன.

இது துணை மதிப்பீடு. இதில் அதிக நேரம் பேச வாய்ப்பு இல்லை என்றாலும்கூட, புயல் வெள்ளத்தின் காரணமாக இழப்புகளுக்காக ஆசிரியர் களுக்கு, அரசு ஊழியர்களுக்கெல்லாம் வெள்ள நிவாரண முன்பணம் 600 ரூபாய் தரப்பட அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. ஆணைதான் வந்ததே தவிர, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த முன்பணம் வழங்கப் படவில்லை. சென்னை, செங்கற்பட்டு, தென்னாற்காடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் வெள்ளப் பாதிப்பின்போது இந்த முன்பணம் அறிவித்து, அது பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருந்தும்கூட, அது பட்டுவாடா செய்யப்படாதது மட்டுமல்லாமல், அதற்கு நிதி ஒதுக்கம் குறைவாக இருப்பதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. பொதுவாக உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பட்டுக்கோட்டை கல்வி மாவட்டத்திலே உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு எல்லாம் தருவதற்கு ஐந்து லட்சம் ள்பாய் தேவைப்படுகிறது. ஆனால் மூன்று லட்சம் ரூபாய்தான் அந்தக் கல்வி மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. 600 ரூபாய் வீதம் கணக்கிட்டுப்பார்த்து, ஐந்து லட்ச ரூபாய் தேவையுள்ள மாவட்டத்திற்கு

மூன்று லட்ச ரூபாய் தந்திருக்கிறார்கள். அதை யாருக்குத் தருவது என்று தெரியாமல், அந்தத் தொகையைப் பட்டுவாடா செய்யாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு ஒரு ஆணையிட்டால், அது உடனடியாக அமுலுக்கு வருகிறதா, அது திறம்படச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை நிதித் துறை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொங்கல் பரிசு கேட்டோம். ஆசிரியர்கள் போராட்டத்திற்குப் பின்னாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு பொங்கல் பரிசு தருவதாகச் சொன்னார்கள். இன்றைக்கு 13 நாட்கள் ஆகின்றன. பொங்கல் பரிசு என்பது பொங்கலுக்கு முன், பரிசாகத் தந்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியும். தாங்கள் போனஸ் வேண்டுமென்று கேட்டோம். இல்லை என்றார்கள். பொங்கல் பரிசாகத் தருவதாகச் சொன்னார்கள். ஆணையைப் பார்த்தால், 'எக்ஸ்கிரேஷியா' என்று போடப்பட்டிருக்கிறது. 300 ரூபாய் தரப் பட்டிருக்கிறது. அது ஆண்டுக்காண்டு உண்டா என்றால், இல்லை. அது ஆண்டுக்காண்டு வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. போனஸ் தருவது மிக மிக அவசியம் என்பதை வற்புறுத்திப் பேசியிருக்கிறோம். மத்திய அரசு தந்திருக்கிறது. ஆந்திராவிலே, கேரளத்திலே, மேற்கு வங்கத்திலே மற்ற மாநிலங்களிலே எல்லாம் போனஸ் தரப்பட்டிருக்கிறது. இங்கே தரப் பட்டிருக்கிற பணத்திற்கு போனஸ் என்ற பெயரும் இல்லை ; பொங்கல் பரிசு என்ற பெயரும் இல்லை ; எக்ஸ்கிரேஷியா என்று சொல்லித் தரப்பட்டிருக் கிறது. அதுகூட இன்னமும் பட்டுவாடா செய்யப்படவில்லை. எல்லோருக்கும் பட்டுவாடா செய்யப்படவில்லை. போனஸ் என்பது தேர்தல் காலத்தில் அ.தி.மு.க.-வின் தேர்தல் கால வாக்குறுதியிலே கூறப்பட்டிருக்கிறது. அது நிறைவேற்றப்படவில்லை. அது தரப்படவில்லை . . .

திரு. சி. இராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் அ.தி.மு.க. என்று சொல்கிறார். இது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : அந்த போனஸ் தராவிட்டாலும் கூட, தரப்பட்டிருக்கின்ற பொங்கல் பரிசையாவது தருவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அது அறிவிக்கப்பட்டு நீண்ட காலமாகிறது. இப்போது கூட நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையிலே அறிவிக்கின்றபோது . ஒன்றைச் சொன்னார்கள்.





(பிற்பகல் 4-05)

மதுவிலக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் அமுல்படுத்தப்படும் என்று அடுத்த ஆண்டு அமுல்படுத்தப்படுவதைக் குறித்து இப்போதே சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் போல பொங்கல் பரிசும் அடுத்த ஆண்டு தான் கிடைக்குமோ என்ற ஐயம் எங்களுக்கு ஏற்படுகிறது. குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படும் என்று சொல்லியிருப்பதைப்போல் இவைகள் எல்லாம் உள்ளாட்சிமன்ற அமைப்புகளுக்கான தேர்தல்களுக்குப் பயன்படுவதற்காக இப்போதே அறிவிப்பைச் செய்வதைப்போல், பொங்கல் பரிசு என்பதைக் கூட அறிவித்திருக்கிறார்களோ என்று எண்ணத் தக்க வகையில் பொங்கல் பரிசு இன்னும் பல இடங்களில் பட்டுவாடா செய்யப்படாத நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொங்கல் பரிசு அனைத்து சத்துணவு மையங்களிலும் பணியாற்றுகிற அமைப்பாளர்களுக்கு இப்போது வழங்கப்படுகிறது. ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. சில பகுதிகளில் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது, எல்லாப் பகுதிகளிலும் பட்டுவாடா செய்யப்பட வில்லை. அதைப்போலவே பகுதி நேர துப்புரவுப் பணியாளர்களுக்கும் பொதுவாக தொகுப்பு ஊதியம் பெறுகிறவர்களுக்கும் அது வழங்கப்படுகிறது. ஆனால் மேல் நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைக்கான தொழிற்கல்விப் பாடத் திட்டத்தைப் போதிக்கும் பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு இதுவரை அது வழங்கப்படவில்லை. முதலமைச்சருடைய தனித்த கவனத்தின் அடிப்படையில் வாழ்க்கைத் தொழிற் கல்வி நாட்டு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைக்கு அரசு மிகப் பெரிய திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அத்தகைய கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கு பொங்கல் பரிசு இதுவரை வழங்கப்படவில்லை. இல்லை என்று கருவூலங்களில் மறுக்கிறார்கள். எனவே இந்தக் குறைபாட்டை நீக்குவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்.சி.ஆர்.டி. மூலமாக ஒருங்கிணைந்த கல்விப் பயிற்சி ஒன்று ஆசிரியர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு 20—1—1986 முதல் 13—4—1986 வரை அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சிக்கு வரும் ஆசிரியர்களுக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு உதவித் தொகை ரூ. 300 அளிக்கப்படுகிறது. அதாவது ஒரு நாளைக்கு 10 ரூபாய் வீதம் அளிக்கப்படுகிறது. சென்னை நகரத்தில் ஒரு நாளைக்கு ரூ. 10 பெற்றுக் கொண்டு பயிற்சி பெற முடியுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதையும்

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயிற்சிக்காக வந்திருப்பவர்களின் உணவுக்காவது இந்தத் தொகை கட்டுப்படியாகக்கூடியதுதானா என்று எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். எனவே இதை தகுந்த அளவுக்கு உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்.சி.ஆர்.டி.-யில்தான் தருகிறார்கள். டெல்லி தேவையான அளவுக்குப் பணம் தரவில்லை என்று சொல்லாமல், அவர்களை அதிகமாகக் கேட்டுப் பெற்று ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது என்.சி.ஆர்.டி.-யிடமிருந்து பெற்றாவது இதை நிறைவு செய்ய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் ஓய்வூதியம் பெறுகிறவர்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பலமுறை அவர்களைப்பற்றி நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். ஏற்கெனவே குறைந்தபட்ச ஓய்வு ஊதியமாக மாதம் ரூ. 125 இருந்ததை பல ஆண்டுகளாக நாங்கள் வற்புறுத்தியதன் பிறகு இப்போது அதை ரூ. 235 என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அரசில் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு இது வழங்கப்படுகிறது. நகராட்சியில் பணியாற்றியவர்களுக்கு தற்போதுள்ள அட் ஹாக் பென்ஷனர்கட்கு 14—1—1970-க்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்கு இந்தப் பென்ஷன் தொகையில் உயர்வு அளிக்கப்படவில்லை. எனவே அவர்களுக்கும் ரூ. 125 என்பதற்குப் பதிலாக ரூ. 235 ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று உச்ச நீதி மன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, நான்காவது ஊதியக் குழுவே கூட இதுகுறித்து பரிந்துரை செய்திருக்கிறது. அதை அரசும்கூட ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்திருக்கிறது. இப்படி ஆணை பிறப்பித்து ஏழு மாதமாகியும்கூட இன்னும் அந்த உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவையிலே உறுதிமொழி கொடுக்கப்படுகிறது, பிறகு அரசாணையாகக்கூட ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால் அதிகாரிகள் அந்த ஆணைகளை செயல்படுத்த மறுக்கிறார்கள். அவர்கள் அந்த ஆணைகளை 'இம்ப்ளமென்ட்' செய்கிறார்களா இல்லையா என்று யாரும் சோதிப்பதுகூட இல்லை. எனவேதான் அவை நடைபெறுவதில்லை. இதன் காரணமாக அவப்பெயர் அரசுக்குத்தான் ஏற்படுகிறது. அவர்கள் எல்லாம் 1970 ஆம் ஆண்டுக்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்கள். 16 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் ஓய்வு பெற்று இன்னும் எவ்வளவு நாளைக்கு உயிரோடு



இருக்கப் போகிறோமா என்று தெரியாமல் இருப்பவர்கள். ஆணை பிறப்பித்த பின்னால் பணத்தைப் பெறலாம் என்று ஆசையோடு இருந்து பிறகு பெற முடியாமல் இறந்து போனவர்களும் இருக்கிறார்கள். கடைசி காலத்தில் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிற இந்த ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருப்பவர்களை—அவர்கள் எந்தத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி—உறுதிமொழியின் அடிப்படையில், பிறப்பிக்கப்பட்ட ஆணையின் அடிப்படையில், அந்தத் தொகை அவர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த ஆணை உரிய வகையில் 'இம்ப்ளமென்ட்' செய்யப்படுகிறதா என்று பரிசோதிக்க வேண்டும் என்றும் அதன் மீது விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-10)

அடுத்து, பஞ்சப் படியைப் பொறுத்தவரையில் அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு ஈடாக ஓய்வூதியம் பெற்றவர்களுக்கும் உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களே ஒரு அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு வந்து நீண்ட காலம் ஆகிறது. ஏடுகளில் அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. வானொலியில் ஒலிபரப்பப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அறிவிப்பு அறிவிப்பாகவே இருக்கிறதே, அது ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் முதலமைச்சர் அறிவித்த அறிவிப்பு ஏடுகளில் வந்த பிறகும், வானொலியில் ஒலிபரப்பப்பட்ட பிறகும், ஏதோ இந்த அரசு அதிகமாகத் தருகிறார்கள் என்ற மாயையை ஏற்படுத்திய தற்குப் பிறகும் அது செயல்படுத்தப்படவில்லை என்றால், முதலமைச்சருடைய உறுதிமொழிக்குத்தான் என்ன மதிப்பு, முதலமைச்சருக்குத்தான் என்ன மதிப்பு என்று நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குறைந்தபட்ச பஞ்சப்படி 8 ரூபாயில் பாதி 4 ரூபாய்தான் இவர்களுக்கு இப்போது வழங்கப்படுகிறது என்று சொன்ன அமைச்சரின் உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மத்திய அரசின் மாண்புமிகு அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் கூட ஒன்றை அண்மையிலே அறிவித்தார்கள். ஓய்வூதியம் பெறுகிறவர்களுடைய நலனை கவனிக்க தனி இலாக்காவை ஒவ்வொரு அரசும் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசு மாநிலங்களுக்கு தாக்கீது அனுப்பியிருக்கிறது அல்லது ஆலோசனை வழங்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஓய்வு பெற்றவர்களுக்கான நலனைக் கவனிக்க தனி இலாக்கா ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதிலே மத்திய அரசு அக்கறையோடு இருக்கிறது என்ற எண்ணத்தை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவருடைய ஆலோ

சனையை இந்த மாநில அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல. மகாராஷ்டிரத்திலே ஓய்வு பெற்றவர்களுடைய நலனைக் கவனிக்க தனி அமைச்சர் போடப்பட்டிருக்கிறார் நம்முடைய தமிழ்நாட்டிலேகூட முதலில் எட்டு அமைச்சராக இருந்து, பிறகு 13 அமைச்சராக ஆகி இன்றைக்கு முதலமைச்சர் உட்பட 25 அமைச்சர்களாக ஆகியிருக்கிறார்கள். நான் குறை சொல்லவில்லை. எந்தத் துறை அமைச்சர் யார் என்பது எங்களுக்கே புலப்படவில்லை. அந்த அளவிற்கு 25 அமைச்சர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேப்பர் படிக்க வேண்டும். அப்போது தெரியும்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட டயரியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலேயிருந்து தெரிந்துகொள்ளலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** பேப்பர் படிக்கிறேன். இருந்தாலும் 25 பேர் இருப்பதால், நினைவிலே வைத்துக்கொள்ள முடியவில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** வயதின் காரணமாக மறதி வருவது இயற்கை. அப்படி வருகிறதோ என்னவோ.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும், நான் எதையும் எளிதாக மறந்துவிடுபவன் அல்ல. வயதின் காரணமாக சிலருக்கு மறதி ஏற்படலாம் எனக்கல்ல. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். ஒரு குடும்பத்தில் பத்துக் குழந்தைகள் இருந்தால் குழந்தைகளின் பெயரை தந்தையிடம் கேட்டால், இது நான்காவது குழந்தை, இது இரண்டாவது குழந்தை, இது கடைக்குட்டி என்று சொல்வார்கள். ஏனென்றால் பெற்றோர்களுக்கே பெயர் நினைவு இருப்பதில்லை. அதைப் போல 25 பேர் அமைச்சராக இருப்பதால், வேண்டுமானால் அவர்களுக்கெல்லாம் எண்கள் கொடுத்துவிட்டால் மாண்புமிகு நெம்பர் ஒன்று, மாண்புமிகு நெம்பர் இரண்டு, மாண்புமிகு ஒன்பது என்று சொல்லிக்கொள்ளலாம். நினைவில் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் 1, 2 என்பதை எந்த இடத்திலே பிடித்தார் என்பது தெரியும். அந்த நினைவை இங்கே ஏன் கொண்டு வருகிறார் என்று தெரியவில்லை.





**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** கிண்டல் செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களைச் சொல்வதாக இருந்தால், 63 பேர் இருக்கிறார்கள், 234 பேர் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். உறுப்பினர் நெம்பர் ஒன்று, இரண்டு, மூன்று என்று பேசிக் கொண்டிருப்பது நன்றாக இருக்காது. ஆகவே தான் பெயர் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஆக மகாராஷ்டிராவில் ஓய்வு பெற்றவர்களின் நலனுக்காக ஒரு தனி அமைச்சராகப் போட்டிருப்பதைப் போல நாமும் 26-வது அமைச்சராக ஒரு தனி அமைச்சரைப் போடலாம் என்று சொல்ல வந்தேன். ஓய்வுபெற்றவர்களைப்பற்றி "தினமணி" பத்திரிகையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார்கள். "ஓய்வு பெற்ற ஊழியர்களை பென்ஷன்தாரர்களாகக் கருதக்கூடாது; இந்த நாட்டின் மூத்த பிரஜைகளாகக் கருத வேண்டும்" என்று 2—1—1986 'தினமணி' பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆகவே இந்த நாட்டிற்காக உழைத்தவர்களுடைய நலனைக் கவனிப்பதிலே அக்கறை செலுத்துவதற்காக தனி இலாக்கா ஏற்படுத்தி, தனி அமைச்சரை நியமித்தால், உடனடியாக அவர்களுடைய பிரச்சினைகளை கவனிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கும் பணிச் சுமை இருக்காது. இவற்றையெல்லாம் ஆலோசனை செய்து மத்திய அமைச்சர் ஆலோசனை வழங்கியிருக்கிறார். அதையாவது கருத்திலே கொண்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஆவலோடு அகவிலைப் படி உயர்வை இன்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு எப்போது அகவிலைப்படி தருகிறதோ அப்போதெல்லாம் மாநில அரசும் தருவது என்பதை மரபாக வைத்திருக்கிறோம். மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் ஒரு அகவிலைப் படியும், நவம்பர் மாதம் முதல் ஒரு அகவிலைப்படியும் ஆக மொத்தம் இரண்டு அகவிலைப்படி தவணைகளை இப்போது வழங்கியிருக்கிறது. இது மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஆகவே இறுதியில் பதில் அளிக்கும்போது, 'மத்திய அரசு மட்டும்தானா? நாங்களும் செய்கிறோம்' என்று கூறி அறிவித்தால், உண்மையிலேயே மிகப் பெரிய வரவேற்பு கிடைக்கும். அதை நிதியமைச்சர் அவர்கள் உடனே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 சனவரி 27

(பிற்பகல் 4-15)

அது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் பிரச்சினையைக் கவனிக்க என்று ஒரு நபர்க் குழு அரசால் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பின்னாலே நமது முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைகளின்படி, எங்கள் பிரச்சினைகளைத் தொகுத்து, அதை மூன்று நாட்களாக 18 மணி நேரம் உட்கார்ந்து பேசியிருக்கிறோம். அதிலுள்ள கருத்துக்களை வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். பல்வேறு சங்கங்கள் அவற்றைத் தந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒரு கருத்து வெளியிட்டிருப்பதாக என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கின்றது. அவரது பேச்சில் "ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு நான்காவது ஊதியக் குழு நீதியை வழங்கியிருக்கிறது, ஏற்கெனவே வழங்கியிருக்கின்றது" என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருப்பதாகச் சொல்கின்றார்கள். ஒரு நபர்க் குழு அமைக்கப்பட்டதற்குப் பின்னாலே ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் 'எங்களுக்கு அநீதி ஏற்பட்டிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அந்த அநீதியைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே அமைச்சர் அவர்கள் வெளியிலே கருத்து தெரிவிக்கின்றபோது, "ஏற்கெனவே அமைக்கப்பட நான்காவது ஊதியக் குழுவே நீதியை வழங்கியிருக்கின்றது" என்று சொல்வது ஒரு நபர்க் குழுவின் மேல் ஆதிக்கம் செலுத்துவதாக ஆகாதா? எங்களுடைய கோரிக்கைகள் மீது அவருடைய கருத்தை மறைமுகமாகச் சொல்வதாக, ஒரு நபர்க் குழுவை அச்சுறுத்துவதாக ஆகாதா? அப்படிப் பேசியிருந்தால், வருத்தப்படுகிறேன். அப்படி அவர்கள் பேசாமலிருந்தால், அதை நான் வரவேற்கிறேன். 'ஒரு நபர்க் குழு சுதந்திரமாகப் பணிசெய்ய வழிவிடுங்கள்' என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் அவர்கள் கருத்துக்களை இப்போது சொல்வதை விட்டுவிட்டு, அவர்களுடைய சௌகர்யத்திற்காகப் பேசுவதை விட்டு, குழுவின் பணிக்கு இடையூறாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சுகள் அமைந்தால், அது அவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தாதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். ஒரு நபர்க் குழு என்று அமைத்தால், அது பிரச்சினைகளைக் கிடப்பிலே போடுவதாகத்தான் வரும் என்று சொல்வார்கள். அப்படிக் கிடப்பிலே போடாமல், பெப்ரவரி 15 ஆம் தேதியில் அக்குழு அறிக்கை தரவேண்டும். அப்படி தரமுடியாமல் போனாலும்கூட, குறைந்தபட்சம் இந்த பட்ஜெட் கூட்டத்தின்போது, அதாவது நீதிநிலை அறிக்கை படிப்பதற்கு முன்னதாகவாவது, அதைப் பெறக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை



1986 சனவரி 27] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

எடுத்து, அதன் அடிப்படையில் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற அநீதிகளைக் களைந்து எங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த ஆசிரியர்கள் சமுதாயத்தின் சார்பிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு அடுத்தபடியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சி ஆசிரியர்கள் ஓய்வூதியப் பயன் பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இதே அவையிலே நான் பேசி, "நகராட்சி ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, தனியார் துறை ஆசிரியர்களுக்கும் மாதந்தோறும் ரூ. 20 என்று பிடித்துக் கொண்டு ரூ. 5,000 தருகிற திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்" என்று கேட்டிருக்கிறேன். அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்பட்டிருக்கின்றது என்று நான் கேட்டபோது, விடையாகச் சொன்னார்கள். "நகராட்சி ஆசிரியர்கள் குறித்து ஆணை தயாரித்துக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே சிக்கல் இல்லை. தனியார் துறையிலே ரூ. 20 பிடிப்பது என்று வரும்போது அதனுடைய கணக்குகளைப் பராமரிப்பது யார் என்பதில் சிக்கல் இருக்கின்றது. அதற்கு நடவடிக்கை விரைந்து எடுத்துக்கொள்கிறோம்" என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்போது தனியார் பள்ளி ஆசிரியர்கள் பொறுத்துதான் சிக்கல் இருக்கின்றது என்று சொன்னார்கள். அவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் நகராட்சி ஆசிரியர்களுக்கு இதுவரைக்கும் அந்தத் திட்டம் வந்திருக்கின்றதா என்றால் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே உறுதிமொழி கொடுத்தார்கள். அதை இன்றையதினம் வரை நிறைவேற்றவில்லை என்றால், நிதித் துறையில் இருப்பவர்கள் என்ன செய்கின்றார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நிறைவேற்ற வேண்டிய நிதித் துறை, ஆசிரியர்களைப் பழி தீர்க்கின்ற வகையில் அதை கிடப்பிலே போட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அவரைச் சேர்ந்த அந்தத் துறைகளிடம் அதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-20)

அடுத்ததாக, தனியார் மற்றும் நகராட்சி ஆசிரியர்களுக்கு விடுப்புக்கால பயணச் சலுகைகளை வழங்கவில்லை. மற்ற ஆசிரியர்களுக்கு அரசு வழங்கியது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஒன்றைச் சொன்னார்கள். அதிலே தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்

கின்றன. அதை பயணம் செய்யாமலேயேகூட பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றெல்லாம் சொல்லி, அதிலே சங்கடம் இருக்கின்றது என்று சொன்னார்கள். இருந்தாலும் அதை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே தவறுகள் நடக்காதபடி அத்தனை கட்டுப்பாடுகள் தற்போது விதிக்கப் பட்டிருக்கின்றன. இந்தச் சலுகையைப் பயன்படுத்துபவர்கள் 'அரசு பஸ்ஸிலே போகவேண்டும், ரெயிலிலே போகவேண்டும், டிக்கெட்டுக் கொண்டுவந்து காண்பிக்க வேண்டும்' என்றெல்லாம் விதிமுறைகள் போட்டு, அதை யாருமே அனுபவிக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த டிக்கெட்டுச் செலவைவிட பயணச் செலவாக அதைவிட நான்கு மடங்கு செலவாகிறது. அதற்காக அவர்கள் பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு போகவேண்டியிருக்கின்றது. ஆகவே அதை ஏற்றுக்கொண்டு

(பிற்பகல் 4-20)

செல்வதற்கேகூட வழியில்லாமல் இருக்கிறது. என்றாலும்கூட, அந்தச் சலுகைகூட இன்றைய வரையில் தனியார் மற்றும் நகராட்சிப் பள்ளி ஆசிரியர் களுக்கு வழங்கப்படவில்லை. அவர்கள் என்ன மாற்றாந்தாய்ப் பிள்ளைகளா? அவர்கள் ஆசிரியர்கள் இல்லையா? அவர்கள் கல்வி போதிக்கவில்லையா? வசதி மிக்கவர்கள் வீட்டுப் பிள்ளைகளை தனியார் பள்ளிகளில் சேர்க்கிறோம். காரணம், அங்கேதான் தரம் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அந்தத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஆண்டுகள் பலவாகியும் இந்தச் சலுகையைத் தராததற்குக் காரணம் என்ன? அதை ஆலோசிக்க வேண்டும். அதைத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரவர்கள், துணை மானியக் கோரிக்கையில் குறைவாகப் பேசுவதாகச் சொன்னார்கள். இன்னும் ஆறு உறுப்பினர்கள் பேச வேண்டும். பிறகு மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் பதிலுரை அளிக்க வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அடுத்து, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதே அவையிலே மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் கவனத்திற்கு அதைக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லுகிறேன். 11—7—1985-ல் நான் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதில் திருச்சி நகரைச் சுற்றியுள்ள, 16 கிலோ மீட்டருக்குள்ளே உள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி வழங்கப்படவில்லை. ஆனால் கல்லூரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; அரசு ஊழியர் களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கு



வழங்கப்பட்டிருக்கிறது. என்றாலும்கூட, பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லை என்று சொல்லி, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே விவாதம் செய்திருக்கிறேன். அப்போதே அதற்குரிய காரணத்தைச் சொன்னேன். 1—6—1981-லே ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கியதால், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்குப் பிறப்பித்த ஆணையை இவர்களுக்கு அமுலாக்க முடியவில்லை, அதை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டு, ஐந்து வருடங்கள் ஆகின்றன. 11—7—1985-ல் கொடுத்த பதிலை நான் கையிலே வைத்திருக்கிறேன். இதில் கால தாமதமாகி விட்டது, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று 11—7—1985-ல் சொல்லப்பட்டது. ஆனால் இதுவரை ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறதா என்றால், இன்னும் பிறப்பிக்கப்படவில்லை. நிதித் துறை எதையும் நிதானமாகச் செய்ய வேண்டியதுதான். வாரி வழங்கக்கூடாதுதான். ஆனால் ஏற்றுக்கொண்ட கொள்கையைக்கூட அமுல்படுத்த ஆண்டுக்கணக்காகிறது. 1981-லிருந்து 1986 வரை ஐந்து ஆண்டுகள் ஆகிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து, அமைச்சர் உறுதிமொழி கொடுத்த பிறகும் ஆறு மாத மாகிறது, இன்னும் ஆணை பிறப்பிக்கவில்லை என்றால், நிதித் துறை செயல்படுகிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. இப்படி நான் பேசுவதால், என்னுடைய பேப்பர்கள் போனாலே, அங்கே நடக்காமல் போனாலும் போகலாம். "எதற்கெடுத்தாலும் இவர் 'கால் அட்டென்ஷன் நோட்டீஸ்' கொடுக்கிறார். அதைக் கிடப்பிலே போடுங்கள்" என்று அங்குள்ளவர்கள் சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். அதிகாரிகள் கவுரவத்தை அவர்கள் பார்க்கிறார்கள். அமைச்சர்களின் கவுரவத்தைப் பார்க்க வேண்டாமா? ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலைகளை வளரவிடக்கூடாது. அரசு கண்காணிக்க வேண்டும். அரசு உறுதிமொழிக் குழு என்று இருக்கிறது. அந்த உறுதி மொழிக் குழு பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடக் கூடாது. கொடுத்த உறுதிமொழிபற்றி அடுத்த கூட்டத்தில் கேட்பார்களே என்று அதைச் செயலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நிதி அமைச்சரவர்கள் லட்சுமி; கல்வி அமைச்சரவர்கள் சரஸ்வதி. லட்சுமி சிரித்தால்தான் சரஸ்வதி 'ஷைன்' பண்ண முடியும். கல்வி அமைச்சர்—சரஸ்வதி—செப்டம்பர் 5 ஆம் தேதி வள்ளுவர் கோட்டத்தில் போய் போராடிய ஆசிரியர்களுக்கு எதிராக, போராடாத ஆசிரியர்களை அழைத்து வைத்து, அவர்கள் 10 அம்சக் கோரிக்கைகள் வைத்திருக் கிறார்கள், நான் 14 அம்சக் கோரிக்கையை இங்கே ஏற்கிறேன் என்று சொல்லி, அதிலே ஒன்றிரண்டை அறிவித்தார். ஓராண்டு பயிற்சி பெற்ற இடைநிலை

ஆசிரியர்களுக்கு பயிற்சிக்காக தரப்படும் கூடுதல் ஊதிய உயர்வு தொழிலாசிரியர்கள், உடற் கல்வி ஆசிரியர்கள், கலை, சிறப்பாசிரியர்களுக்குத் தரப்படும் என்ற உறுதிமொழியைச் சொல்லிவிட்டு வந்தார்கள். அங்கே, வள்ளுவர் கோட்டத்தில் நடந்த ஆசிரியர் தின விழாவில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு தனி இயக்குநரகம் அமைக்கப்படுமென்று சொல்லிவிட்டு வந்தார்கள். அதைப்போல 14 கோரிக்கைகள்பற்றிச் சொல்லிவிட்டு வந்தார்கள். செப்டம்பர் 5 ஆம் தேதிக்குப் பிறகு எத்தனை நாட்கள் ஆயிற்று? ஒன்றுக்காவது ஆணை வந்திருக்கிறதா? நான் அறிந்தவரையில், அவற்றை நிதித் துறை ஏற்றுக்கொள்ளவில்லை. லட்சுமிகடாட்சம் இல்லை. சரஸ்வதி அழுது கொண்டிருக்கிறாள். அவளைக் காப்பாற்றுங்கள் சிரிக்க வையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்று. 16—12—1985-ல் ஆசிரியர்கள் போராட்டம் முடிந்தது. இருபது அம்சக் கோரிக்கையிலே எட்டு கோரிக்கைகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வழக்குகள் வாபஸ் உள்பட இன்னும் ஆணைகள்

(பிற்பகல் 4-25)

பலவற்றில் பிறப்பிக்கப்படவில்லை. 12 கோரிக்கைகளுக்கு ஆணை பிறப்பிக்கப்படவில்லை. வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று சொல்லப் பட்டது. ஆனால் நீதிபதிகளிடமிருந்து ஆசிரியர்களுக்கு சம்மன் வந்து, ஆசிரியர்கள் 60 ஆயிரம் பேர் கோர்ட்டுக்கும் வீட்டுக்கும் அலைக்கழிக்கப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை நீடித்தால், ஆசிரியர்கள் மத்தியில் பதட்டம், கொந்தளிப்பு போன்ற சூழ்நிலை ஏற்படுகிற நிலை ஏற்படும். இது மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல் இருக்கிறது. அமைச்சர்கள் சொன்னதை அதிகாரிகள் நிறைவேற்றியிருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலை நிறுத்தம் நடைபெற்ற காலத்திற்கு அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படும் என்று இப்போது அரசாங்கத்தால் ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஆனால் புத்தனாம்பட்டி, நேரு நினைவுக் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களுக்கு போராட்ட காலத்திற்கான சம்பளத்தை வழங்க மறுத்திருக் கிறார்கள். அரசு சொல்வதை அதிகாரிகள் மதிப்பதில்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை. சில சம்பவங்களை நான் கோடிட்டுக் காட்டுகிறேன்.





அடுத்ததாக, வேலை நிறுத்தப் போராட்டக் காலங்களில் இழப்பு ஏற்பட்ட நாட்களுக்கு ஈடாக வேலை அதிகப்படியாகச் செய்து அந்த வேலையை ஈடு செய்கிறோம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். தொடக்கப் பள்ளி களுக்கு 220 நாட்களும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 200 நாட்களும், கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 180 நாட்களும் வேலை செய்து பாடங்களை முடித்து விடுகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆனால் அரசே விடுமுறை நாட்களாக அறிவித்திருக்கிற 28—8—1985 முதல் 4—9—1985 வரையுள்ள நாட்கள், ஈழத் தமிழர் பிரச்சினைக்காக அரசே விடுமுறையாக அறிவித்தது. 24—9—1985 அன்று அரசே பொது வேலை நிறுத்தத்தை அறிவித்தது. அன்று யாரும் வேலை செய்யவில்லை. 7—11—1985 முதல் 27—11—1985 வரை, மழை, வெள்ளம் காரணமாக பள்ளிகள் அரசால் விடுமுறை என்று அறிவிக்கப்பட்டு மூடப்பட்டிருந்தன. இந்த நாட்களையும் வேலை செய்து சரிசெய்யவேண்டும் என்று சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகவே அரசு இதற்கு ஒரு தெளிவான உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு அளித்த விடுமுறை நாட்களில் வேலை செய்யாதிருக்க கண்டோனேஷன் அளிக்க வேண்டுமென்றும் அதற்கான ஆணையிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஆளுநர் உரையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் "ஆசிரியர்கள் எவ்வளவு பெரிய போராட்டம் நடத்தியபோதிலும், அவர்கள் மீது பழி வாங்கும் நடவடிக்கைகள் எடுக்கவில்லையே, கட்சிக்காரர்கள் ஏதாவது செய்தார்களா?" என்று திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கேட்டார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் 200 பேர்களை கரூரில் மாறுதல் செய்துவிட்டார்கள். ஆகவே உடனடியாக அவர்கள் நீதிமன்றம் சென்று அந்த உத்தரவுக்கு 'ஸ்டே' வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அச்சிறுபாக்கத்தில் இப்படி மாறுதல் செய்திருக்கிறார்கள். அரசு, ஆசிரியர்களுடன் சுமுகமாகப் பேசி, முதலமைச்சரே முன்னின்று அதை முடித்து வைத்திருக்கிறார். அதற்குப் பிறகும் அதிகாரிகள் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்களா, இல்லையா? திருநெல்வேலியில், வாசுதேவநல்லூரில் ஆசிரியர்கள் அறப் போராட்டத்தில் ஈடுபட்டபோது, 200 பேரில் 80 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள். ஆனால் மீதியுள்ள 120 பேரையும் கைது செய்யுங்கள் என்று ஒரு நண்பர், வாசுதேவநல்லூர் அருகில் உள்ள பட்டக்குறிச்சியைச் சேர்ந்த வைரவன் என்பவர் காவல் துறையினரிடம் வாதம் செய்திருக்கிறார்.

**திரு. எஸ். ஆர். இராதா :** துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நான் பேசியதாகக் குறிப்பிடாமல் இப்படிப் பட்ட மாறுதல்கள் நடக்கின்றன என்று சொல்லியிருந்தால், நியாயமாக இருந்திருக்கும். ஆனால் என்னுடைய பெயரை இங்கே சொன்னதால், நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். நான் அன்று பேசும்போது, அரசியல் ரீதியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆசிரியர்களின் போராட்டத்திற்கு எந்தவிதமான பாதகமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லையென்று சொன்னேன். காரணம் என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பட்டதாரி ஆசிரியர்கள் போராடியபோது, தி.மு.க. உறுப்பினர்களே ஆசிரியர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை அடித்து அழைத்துக் கொண்டு வந்த வரலாறு இருக்கிறது. அந்த நிலைமைகள் இப்போது உண்டாக்கப்படவில்லை என்று நான் ஆசிரியர்களுக்கு ஆதரவாகத்தான் பேசினேன். அதை திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் நல்லவிதமாக எடுத்துக் கொண்டிருந்தால், நலமாக இருந்திருக்கும். மாறுதல் என்பது அவர்கள் துறைக்கும் அவர்களுக்கும் உள்ள விவகாரம். இதில் என்னை வீணாக இழுக்க வேண்டாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** நான் முடிக்கவில்லை. உரையின் இறுதிவரை கேட்டிருந்தால் இந்தக் குழப்பம் வந்திருக்காது. ஆகவே இந்த வைரவன் ஆசிரியர்கள் பிரச்சினையில் ஒரு 'மோட்டிவ்' ஆக எடுத்துக்கொண்டு, வாதிட்டதை அவர் கடைத்தெருவில் நின்று கொண்டிருந்தபோது, அங்குள்ள காவல் துறையினர், அவர் ஒரு அரிஜனப் பெண்ணைக் கெடுக்க முயன்றார் என்று ஒரு பொய் வழக்கைப் போட்டு, செக்ஷன் 354-படி அந்த ஆசிரியர் போராட்டக் குழுத் தலைவர் மீது நடவடிக்கை எடுத்து, கைது செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதி ஆசிரியர்கள் எல்லாம் அந்தக் காவல் துறை சப்-இன்ஸ்பெக்டரிடம் போய், "இது பொய்யான வழக்கு, இது அநியாயம், இப்படிச் செய்யக்கூடாது" என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால்

(பிற்பகல் 4-30)

அப்போதுகூட என்ன சொன்னார்கள் என்றால், "நாங்கள் முதல் தகவல் அறிக்கைதான் போட்டிருக்கிறோம், வழக்கை 'ரெஃபர்' செய்து விடுகிறோம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்து அனுப்பியிருக்கிறார்கள். இவ்வாறு அங்கே காவல் துறையினர் அடாவடியான செயலைச் செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஆளும் கட்சிக்காரர்கள் என்ன செய்தார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். சிவகிரி அருகிலுள்ள குமாரபுரத்தில் பிச்சை என்கிற மொக்கை பிச்சை என்பவர் 'ஜேக்டி' உறுப்பினர் திரு. ஜெயபால் என்கிற கருப்பையாவை, அ.இ.அ.தி.மு.க. மேடையிலேயே, "கொன்று விடுவேன், அவர் குடும்பத்தையே அழித்துவிடுகிறேன், அவரை ஒரு கைபார்க்கிறேன்" என்று மிக வேகமாகப் பேசியிருக்கிறார். அது சம்பந்தமாக ஒரு புகார் . . .

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா எழுந்தார்).

நான் இன்னும் முடிக்கவில்லை. சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** He is not yielding. I cannot allow.

அவர் அனுமதி கொடுக்கவில்லை. உறுப்பினர் அவர்கள் பேச முடியாது.

**திரு. எஸ். ஆர். இராதா :** On a point of order.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவர் அனுமதி கொடுத்தால்தான். உட்காருங்கள்.

(மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா எழ முயற்சித்தார்)

அவர் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை என்று சொன்னால் உறுப்பினர் குறுக்கிடக் கூடாது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** சிவகிரி காவல்துறை சார் ஆய்வாளரிடத்தில் இதுகுறித்துப் புகார் கொடுக்கப்பட்டது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் 31 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** முடித்துவிடுகிறேன். காவல் துறையினர், அந்தப் புகார்மீது இன்றுவரையிலே நடவடிக்கை எடுக்கவில்லை. கட்சி ஆதிக்கம் அவ்வாறு அங்கே நடைபெறுகிறது.

அடுத்து, கோயம்புத்தூரில் நிர்வாகத்திலே ஆளும் கட்சியாருடைய தலையீடு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதை வன்மையாக நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அங்கே அதிகாரிகளை அச்சுறுத்துகிறார்கள்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

கோவை மாநகரத்தில், * * * என்பவர் இருக்கிறார். * * * ஆணையருக்குத் தபால் எழுதுகிறார். இந்த மாநகராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி, மற்றும் அனைத்துப் பள்ளிகளிலும் இருக்கக்கூடிய ஆசிரியர்களில் யார் யார் எந்த எந்தத் தேதிகளில் பணிக்கு வந்தார்கள் என்றும், அவர்கள் விவரங்களையும் கேட்டு ஒரு மனு எழுதுகிறார்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லாத ஒருவரைப்பற்றி என்ன ஆதாரங்களோடு பேசிக்கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. அவர் பத்திரிக்கைக் குறிப்பை வைத்துப் பேசுகிறாரா அல்லது வேறெதையும் ஆதாரமாக வைத்துப் பேசுகிறாரா என்று தெரிவித்தால், சரியாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தலைவர் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் படிக்கிறேன். கோவை மாநகராட்சி ஆணையரின் உத்தரவு. பத்திரிக்கைச் செய்தி அல்ல. எண் 122195/85/அக2—மாநகராட்சி அலுவலகம், கோயம்பத்தூர், நாள் 26—12—1985. பொருள் : கல்வி—கோவை மாநகராட்சி—ஆசிரியர்களின் பணிக்கால விவரம் கோரல். பார்வை : 16—12—1985-ந்தேதிய * * * அவர்களின் கடிதம். உத்திரவு : தங்கள் பள்ளிகளில் . . .

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தலைவரின் அனுமதி பெற்றிருப்பதாகச் சொல்கிறார். அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொள்ளலாம். நான் எடுத்துச்சொன்னால்தானே தெரிந்துகொள்ள முடியும். அந்த உத்தரவில் "தங்கள் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களின் தகுதி அவர்கள் அப்பள்ளியில் எந்தத் தேதி முதல் பணிபுரிகின்றனர், அப்பள்ளிக்கு வருமுன் எப்பள்ளியில் பணிபுரிந்தனர் என்ற விவரத்தை இக்குறிப்பாணை கிடைத்த எழு தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு எல்லா தலைமை ஆசிரியர்களும் கோரப்படுகிறார்கள்." "(ஒம்) ஈ. மு. ஜெகதீச சந்திரன், ஆணையருக்காக" என்பதன்கீழ் உண்மைநகலில் தலைமை எழுத்தர் கையெழுத்திட்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே உங்கள் அனுமதியைப் பெற்று ஒரு சுற்றறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் படித்திருக்கின்றார். அவர்கள் * * * பற்றித் தெளிவாக விளக்கமாக விவரங்களை இந்த அவையிலே தந்திருக்கிறார்கள்.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





ஆனால் அவர்களால் வாசிக்கப்பட்ட படிக்கப்பட்ட அந்த அறிக்கையில் * * * அவர்களுடைய இனிஷியல் என்னவென்று கூட போடப்படவில்லை. இது எப்படி, எந்த * * * குறிக்கும் என்று தெரியவில்லை. ஆகவே இதையெல்லாம் அவர் நிரூபித்தால்தான் அவைக்குறிப்பில் அவை இருக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் அநியாயமாக அப்பாவி ஒருவரை இங்கே இம்மாமன்றத்திலே இல்லாதவர்மீது குற்றச்சாட்டுக்கு ஆட்படுத்திட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதிகாரி கடிதத்தைத்தானே படிக்கிறார்கள் ?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆமாம். அவர் எந்த * * * இருக்கட்டும். நான் சொன்ன * * * இல்லை என்றே வாதத்திற்காக வைத்துக்கொள்வோம். யாரோ * * * எழுதுகிறார். ஆணையர் அதைப் பார்வையில் காட்டி ஒரு உத்தரவு போடவேண்டிய அவசியம் என்ன ? அதை யார் போட்டாலும்

(பிற்பகல் 4-35)

போடுவார்களா ? அவர் என்ன ஒரு அமைச்சரா ? உள்ளாட்சித் துறை அமைச்சரா ? அல்லது கல்வித் துறை அதிகாரியா ? அட் லீஸ்ட் ஒரு எம்.எல்.ஏ. அல்லது எம்.எல்.சி.-யா ? யாரோ * * * எழுதுவதற்கு எப்படி ஒரு ஆணையர் ஆசிரியர்களை விரட்டுவதுபோல உத்தரவு போடுவது * * * என்று சொல்ல முடியும் . . .

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் :** துணைத் தலைவரவர்களே, அவரை * * * என்று எப்படிச் சொல்ல முடியும்? அவரை * * * என்று எப்படிச் சொல்ல முடியும்? * * * என்று எப்படிச் சொல்ல முடியும் ? எனவே மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப்பற்றியெல்லாம் தயவுசெய்து எனக்கு விளக்கம் தந்தால், நன்றாக இருக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, நான் அதற்கு பொறுப்பேற்கிறேன். அந்த டெசிக்னேஷனில் அந்த * * * இருக்கிறார். அவர் * * * அவர் * * * அவர் * * * என்பதுதான் எனக்குத் தெரியும். அப்படியே இல்லாவிட்டாலும் கூட . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, அது யாரோ * * * இருக்கட்டும். அவர் இன்னின்ன கடமைகளைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டைச் சாட்டுவதற்கு உரிமையுண்டு. * * * வேறு.

---

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அந்தக் குற்றச்சாட்டு, இதை நீங்கள் செய்யுங்கள் என்று ஆணையிடுவது வேறு. அதிகாரிகளிடம் இதைத்தான் செய்ய வேண்டுமென்று சொல்வது வேறு. இன்னின்ன குற்றங்கள் செய்கிறார்கள் என்பதற்கு, அந்தக் குற்றங்களை வைத்து அதன்மீது நடவடிக்கை எடுப்பது எல்லாம் துறைகளிலே, அதிகாரிகளிடத்திலே உண்டு. சாதாரணமாக ஒரு குற்றச்சாட்டு வரும்போது, இந்தக் குற்றச்சாட்டை இன்னார் கூறியிருக்கிறார்கள் என்று சொல்லி, அரசு அதிகாரிகள் மீது நாம் குற்றச்சாட்டைத் தொடங்கும்போதுகூட, "இன்னார் சொல்கிறார்கள், இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்பதுகூட உண்டு. "ஆகவே நீங்கள் இதைச் செய்யுங்கள்" என்று சொன்னால்தான், தவறே தவிர, இப்படியெல்லாம் குற்றச்சாட்டு நடைபெறவில்லை; விசாரிக்க வேண்டுமென்று சொல்வதிலே கூட தவறில்லை.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் அன்றைக்கே இதைப் பற்றிச் சொன்னேன். யாராவது ஒருவருடைய பெயரைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கூடுமானவரையில் அந்த அதிகாரி என்று சொல்வதிலே தவறில்லை. அந்த அதிகாரி பெயரைச் சொல்லாமல் இருப்பது நல்லது. அதிகாரி பெயரைக் குறிப்பிட்டுப் பேசும்போது அமைச்சர்கள் அதற்கு பதில் சொல்ல வேண்டும். அவர் அவையிலே இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. ஆனால் தனிப்பட்ட ஒருவரைப் பற்றி * * * என்று பேசினால், * * * பேசுவதற்கு அவையில் யாருமில்லை. ஆகவே அந்தமாதிரி * * * என்று பெயர் சொல்லி, * * * என்று சொல்லி, தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதற்கு, தற்காத்துக்கொள்வதற்கு, அவருக்காகப் பேச ஒருவரும் இல்லாதவருடைய பெயரை இழுப்பது நல்லதல்ல. ஆகவே அந்த * * * என்று குறிப்பிட்ட பெயர், அவர் யார், அவரைப்பற்றிச் சொன்ன விளக்கங்கள் ஆகியவை அவைக் குறிப்பில் ஏறவேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்; அவைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, அதிகாரியினுடைய மடலிலே வந்திருக்கிற . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்னாலே நீங்கள் * * * என்றும், * * * என்றும், * * * இன்னின்ன செய்தார் என்றும் அவருடைய பெயர், அவர் தொடர்பான அவரைப்பற்றி நீங்கள் சொன்ன அதைமட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் ஆணையைப்

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



படிப்பதுபற்றி எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர் செய்த காரியங்களைப்பற்றி நான் ஒன்றும் ஆட்சேபணை செய்யவில்லை. * * * பற்றிச் சொல்வது நல்லதல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையிலே நம்முடைய கல்வித் துறை இயக்குநராக இருந்த திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களைப்பற்றி நீண்டகாலம் விவாதம் நடைபெற்றிருக்கிறது. அங்கே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ரிகார்டு இருக்கிறது. ஒரு அதிகாரியைப்பற்றிச் சொல்லும்போது, பர்ட்டிகுலராக சிலரைச் சுட்டிக் காட்டிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுச் சொல்கின்றேனே தவிர, வேறல்ல. அதற்கு உறுப்பினர் பொறுப்பு ஏற்பதாக இருந்தால், ஏற்றுக் கொள்கின்ற வழக்கம் உண்டு . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அதிகாரியைப்பற்றிச் சொல்லும்போது அதிகாரிக்காகப் பதில் சொல்ல அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அமைச்சர்தான் அதிகாரிகளுக்காகப் பதில் சொல்ல வேண்டும். அதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. யாரோ ஒருவர், வெளியிலே இருக்கிற தனி நபருடைய பெயரைச் சொன்னால் அவருக்கு யார் பாதுகாப்பு அளிப்பது? அவரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியாக இருக்கலாம் அல்லது தவறாக இருக்கலாம். ஆகவே வெளியிலே இருக்கக்கூடிய தனிப்பட்டவர்கள், அதிகாரிகளல்லாதவர்களுடைய பெயரை மாண்புமிகு உறுப்பினர் சொல்வது நல்லதல்ல. அவரைப்பற்றிச் சொல்லக்கூடிய வாசகங்கள் அவருக்குப் பழி ஏற்படுத்தக்கூடியவை என்றால், அதை மட்டும் நீக்குவது நல்லது. இன்னொன்று தலைவர் அனுமதியைப் பெற்றுப் படிப்பதாகச் சொன்னார்கள். உறுப்பினர் அந்த ஆணையைப் படிப்பது பற்றியோ, அந்த ஆணையிலே பெயர் வருவதுபற்றியோ எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** துணைத் தலைவரவர்களே, பொதுவாக இதிலே சொன்னதிலேகூட, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எனக்கு இப்போது விளக்கத்தைத் தந்தார்கள். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அவர் இவர்மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி, இவர்மீது நடவடிக்கை எடுத்துவிட்டதாகச் சொல்லவில்லை. இதிலே யாரோ ஒரு * * * யார் வேண்டுமானாலும் இருக்கட்டும். அந்த * * * கேட்கிறார் என்பதற்காக, அதைப் 'பார்வை'-யிலே போட்டு, ஏழு தினங்களுக்குள்

* * * தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

இந்தப் பார்ட்டிகுலர்ஸை ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் அனுப்ப வேண்டுமென்று அங்கே கேட்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படவில்லை; 'பார்ட்டிகுலர்ஸ்' கேட்கப்பட்டிருக்கின்றன. இப்படிக் கேட்பதன் மூலமாக என்ன ஆகிறது என்றால், "அந்த * * * இந்த அதிகாரிகள் அடக்கம். ஆகவே அந்த * * * இந்த ஆசிரியர்கள் எல்லாம் சலாம் போட வேண்டும். அஞ்ச வேண்டும்" என்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்படி சாதாரணமாக நாங்கள் எம்.எல்'சி.-க்கள் எழுதினால்கூட, அதிகாரிகள் பதில் எழுதுவதுல்லை. ஆனால் யாரோ ஒரு * * * என்று நீங்கள் சொல்வதுபோல, * * * எழுதினார் என்பதற்காக, உடனே ஒரு சுற்றறிக்கை விட்டு எல்லா ஆசிரியர்களுக்கும் சர்குலர் அனுப்பி, ஏழு தினங்களுக்குள்ளே தகவல் தர வேண்டுமென்று சொன்னால், இது நிர்வாகத்திலே வெளியார் தலையீடு இல்லையா? வெளியார் தலையீடு இல்லையா? அந்த நிர்வாகத்திலே இருக்கக் கூடிய அதிகாரிகள் யாரோ ஒரு* * *பெயர், ஊர் தெரியாத***— நீங்கள் சொல்வதுபோல—அந்த அளவுக்கு அச்சப்பட்டுக்கொண்டு இவ்வளவு பெரிய சுற்றறிக்கை அனுப்புகிறார்கள் என்று சொன்னால், என்ன அர்த்தம்? இந்த ஆட்சியிலே வெளியிலே இருப்பவர்களுடைய ஆதிக்கத்திற்கு அதிகாரிகள் அச்சப்படுகிறார்கள், நிர்வாகத்திலே தலையீடு இருக்கிறது என்பதையும், இதையெல்லாம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று மட்டும் கேட்டு நான் அமைகிறேன்.

(பிற்பகல் 4-40)

**திரு. எஸ். ஆர். இராதா:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசும்போது ஒரு கட்சியைப்பற்றி குற்றஞ்சாட்டிச் சொல்லுகிறார் என்றால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் பல இடங்களில் ஆசிரியர்களைத் தாக்கினார்கள் என்றால், என்னிடமும் பல ஆதாரங்கள் இருக்கின்றன. அதாவது போராட்டம் நடைபெறுகிறபோது, பள்ளிக்குப் போனார்கள் சில அப்பாவி ஆசிரியர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பல ஆசிரியர்களைக் கொலை செய்கிற அளவுக்குத் தாக்கி காயம் விளைவித்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அவைகளையெல்லாம் நான் எடுத்துச் சொல்வதென்றால், அது பெரிய விவாதமாகப் போய்விடும் என்பதால்தான், ஒழுங்குப் பிரச்சினையாகக் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் அனைவரையுமே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று நிரூபிக்க



முடியாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில், அது ஆசிரியர்களுக்கு எதிராகச் செயல்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆசிரியர்களுக்காகப் போராடுகிறார் என்று சொன்னால், நான் சொல்வதைப் பெருந்தன்மையோடு எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தவராக மாறி இந்தப் பிரச்சினையில் ஆசிரியர்களைப் பலிகடாவாக ஆக்க முனைய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இப்போது கூட என்னிடம் பட்டியல் இருக்கிறது. ஆதாரம் இருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களால் ஆசிரியர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற விவரமே என்னிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் என்னென்ன பேசினார்கள் என்பதை இன்றைக்கும் எங்களாலே நிரூபிக்க முடியும். அதிலும் ராஜாஜி ஹாலில் இதே உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களைப்பற்றி என்னென்ன பேசினார், என்னென்ன கோஷம் போட்டார் என்பதற்கான ஆதாரங்களைக் காட்ட முடியும். அதற்கெல்லாம் நாங்கள் அவரை ஏதாவது செய்திருக்கிறோமா? ஏதாவது ரௌடித்தனம் செய்திருக்கிறோமா? இவர் முதலமைச்சரின் கொடும்பாவி கொளுத்த வேண்டுமென்று திட்டமிட்டதைக் கூட எங்களாலே நிரூபிக்க முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாமல் உறுப்பினர் அவர்கள் என்மீது எதை எதையோ பேசிக் கொண்டிருக்கிறார். அப்படியென்றால், நான்கூட நிறையப் பேச முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. இராமலிங்கம்:** நான் ஆதாரத்தோடுதான் பேசிக் கொண்டிருக்கிறேன். நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அதற்காகப் பணம் கூட கொடுத்திருக்கிறார் என்பது எங்களுக்குத் தெரியும்.

(ஒரே சமயத்தில் திரு. மீனாட்சிசுந்தரமும், திரு. எஸ். ஆர். இராதாவும், திரு. சி. இராமலிங்கமும் எழுந்தனர்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அனைவரையும் உட்கார வேண்டுகிறேன். அடுத்து, திரு. சுப்பு அவர்கள் பேசுவார்,

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கை மீதும், 1979-80 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கை மீதும் ஒரு சில கருத்துக்களை, ஒரு சில மணித்துளிகளில் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோற்றுப் போனாலும்கூட அந்தத் தொகுதியின் மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை ஒரு கட்டத்தில் கேட்க வேண்டிய நிலை இருப்பதனால், புரசைவாக்கம் தொகுதியில் உள்ள இரண்டொரு சம்பவங்களை எடுத்துச் சொல்லி, அதன் மூலமாக அவர்களுக்குப் பரிகாரம் கிடைத்தால், இங்கே பேசியதற்கு பயன் இருக்கிறது என்று கருதி அவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. புரசைவாக்கம் பகுதியில் பச்சை வீராசாமி தெருவில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 60 வீடுகள் 'ஹெச்' பிளாக்கில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் ஒதுக்கப்படுவதற்கு முன்னதாக இந்த ஆண்டு வெள்ளம் வந்துவிட்டது. இதன் காரணமாக வாடகை கொடுத்துக் கொண்டு வெளியே இருந்த குடிசைவாழ் மக்கள் பலர் அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு அந்த பிளாக்கில் குடியேறி விட்டார்கள். குடிசை வீடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டுவிட்டன. எனவே மீண்டும் அத்தகைய வாடகை வீட்டிற்குப் போக வேண்டுமென்றால், அதன் உரிமையாளர்கள் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால்தான் முடியும் என்று கேட்கிறார்கள். இதன் காரணமாக குடிசைகளிலிருந்து இந்தக் குடியிருப்புக்குக் குடியேறிவிட்ட மக்களால் அந்த இடங்களுக்கு மீண்டும் குடியேற முடியவில்லை. இப்போது குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அந்தக் குடியிருப்புகள் வேறு யார் யாருக்கோ ஒதுக்கப்பட்டுவிட்டன. எனவே 60 குடும்பங்களையும் வெளியேற வேண்டுமென்று அதிகாரிகள் மிகவும் கெடுபிடி செய்கிறார்கள். அதுபற்றிய பரிதாபகரமான செய்திகள் எனக்குக் கிடைத்திருக்கின்றன.

ஆக்கிரமிப்புகளை அகற்றும்போது கொன்னூர் ஹைரோட்டில் ஒரு பிள்ளையார் கோயில் இருந்தது. அதை அகற்றிவிட்டார்கள். பிள்ளையார் தனி ஆள். பரவாயில்லை. ஆனால் அந்தப் பிள்ளையாரை நம்பி ஒரு பூசாரி இருந்தார். அவர் தனி ஆள் அல்ல. அவருக்கு 9 குழந்தைகள் இருந்தன. அவருடைய மனைவியின் பெயர் நவநீத அம்மாள் பிள்ளையார்





போய்விட்டாரே, இனி வழியில்லையே என்று அந்த பூசாரி தூக்கில் தொங்கிவிட்டார். அவருடைய மனைவியும் 9 குழந்தைகளும் இருக்கின்றன. 10 இடத்தில் பத்துத் தேய்த்து வேலை பார்க்கிற அம்மாள். அந்த அம்மாள் இந்த 60 வீடுகளில் ஒரு வீட்டில் இருக்கிறார். அவராலே வெளியேயும் போக முடியவில்லை. குடிசை மாற்றுவாரிய அதிகாரிகள் சிலர் இருக்கிறார்கள். அதில் முக்கியமானவர் பெயர் எஸ்டேட் ஆபீசர் முருகேசன். மிகவும் கருணை உள்ளவர். சட்டி பெட்டிகளையெல்லாம் தூக்கி வெளியே எறிகிறாராம். இருப்பதே அவர்களுக்கு அதுதான். இது ஒன்றும் பிரசவ ஆஸ்பத்திரி அல்ல என்று சொல்லி கருணையற்ற முறையில் அவர் நடந்து கொண்டு வருகிறாராம்.

(பிற்பகல் 4-45)

நம்முடைய அரசாங்கத்தின் நோக்கத்திற்கும் இதைச் செயல்படுத்துவதற்கும் சம்பந்தம் இல்லை. இப்படி 60 குடியிருப்புகளில் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சொந்த வீடு கிடையாது. நாள்தோறும் கூலி வேலை பார்ப்பவர்கள். வீடு இல்லாமல் மழைக் காலத்தில் குடியேற்றப்பட்டவர்கள். அவர்களை திடீரென்று வெளியே போகுமாறு சொன்னால் எப்படி? மாற்று ஏற்பாடு ஒன்றும் செய்யவில்லை. ஆகவே கண்ணீரும், கம்பலையுமாக என்னிடத்திலே வந்தார்கள். "நீங்கள்தானே தேர்தல் சமயத்தில் வந்தீர்கள், இதைச் செய்யக்கூடாது" என்று கேட்டார்கள். எனக்கு நேரம் கொடுத்தால் இதைப்பற்றிப் பேசுகிறேன் என்று சொன்னேன். பேசிவிட்டேன்.

ஓய்வூதியம் பெறுபவர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. க். மீனாட்சிசுந்தரம் அழகாகச் சொன்னார். ரிட்டையர் ஆகிறவர் இந்த நாட்டின் மூத்தக் குடிமகன், இந்த நாட்டுக்கு பாடுபட்டு ரிட்டையர் ஆகிறார்கள். ஆகவேதான் நன்றியோடு 'கிராஜுட்டி' கொடுக்கிறோம். நன்றியோடு கொடுப்பதால்தான் கிராஜுட்டி என்று பெயர் வைத்தார்கள். இதிலே வருந்தத்தக்க ஒரு விஷயம், ரிட்டையர் ஆகும்போது சிலரை 'சஸ்பெண்ட்' செய்கிறார்கள். பணியில் இருக்கும்போது நடவடிக்கை எடுப்பதிலே ஆட்சேபணை இல்லை. பணியாற்றிவிட்டு கிராஜுட்டி பெற வேண்டிய நிலையில், பென்ஷன் பெற வேண்டிய நிலையில், வீட்டிற்குப் போவதற்கு முன் 'சஸ்பெண்ட்' பண்ணுவது என்ற போக்கு வேதனையளிக்கிற போக்கு. கடைசி காலத்திலே சமுதாயத்தில் அவமானப்படுத்தப் படுகிறார்கள். வீட்டிலே இதனால் மரியாதை குறைகிறது. சக ஊழியர்கள் மத்தியில் கேவலப்படுகிறார்கள். மனிதாபிமானத்தின் அடிப்படையில் ரிட்டையர் ஆகும்போது, 'சஸ்பெண்ட்' செய்யும் நடைமுறையை கொஞ்சம்

விட்டுவிட்டால், நன்றாக இருக்கும். ரிட்டையர் ஆகும்போது பெரிய அதிகாரிகளாக சீப்-என்ஜினியர் திரு. மணவாளன் போன்றவர்களை 'சஸ்பெண்ட்' செய்தது சரியல்ல. ஒருவேளை கடைசிக் காலத்தில் ரொம்ப சம்பாதித்திருப்பார் என்று நினைத்தார்களோ என்னவோ தெரியவில்லை. இருந்தாலும் அப்படிச் செய்வது சரியில்லை.

ஓய்வூதியம் கொடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுவதால், சிலருக்குக் கிடைக்காமலே போகிறது. எனக்குத் தெரிந்த இரண்டு பேர் ஆசிரியர்கள்—கணவன், மனைவி. மதுரை மாவட்டத்திலே வெள்ளைமலைப்பட்டியில் இருந்தார்கள். மனைவி இறந்துவிட்டால் அவருடைய கணவனுக்கு பென்ஷன் வந்து சேர வேண்டும் என்று அவர் அப்ளை செய்கிறார். ஐந்து வருடம் ஆகிறது. பிறகு அவரும் இறந்துவிடுகிறார். ஆகவே நிலுவையைக் கேட்டு அவருடைய பிள்ளை மனுச் செய்கிறார். பென்ஷன் கொடுப்பதில் ஏன் அவருக்கு இவ்வளவு காலதாமதம் ஆயிற்று என்றால், 'இனிஷியல்' தப்பாகி விட்டதாம். இதற்கு யார் பொறுப்பு? அவரா பொறுப்பு? ஒருவர் ஓய்வு பெற்றால், உடனே அவருக்கு ஓய்வூதியம் வர வேண்டும். மனைவி இறந்ததால் தனக்கு ஓய்வூதியம் தரப்பட வேண்டும் என்று கணவன் மனு போட்டு, 5 வருஷம் ஆகி அவரும் இறந்துவிட்டதால் அவருடைய பிள்ளைகள் தங்களுக்கு பென்ஷன் தர வேண்டும் என்று 'அப்ளை' செய்து 3 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் வரவில்லை. ஓய்வூதியம் தருவதில் காலதாமதம் இருந்தால், நம்முடைய நோக்கத்தையே அது சிதறடித்து விடுகிறது. காலதாமதம் நம்முடைய நோக்கமல்ல. ஆகவே இதை இந்த அவையின் மூலமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

சாதிச் சான்றிதழை தாசில்தார்கள் கொடுக்கிறார்கள். மாணவர்களிடம் ஒவ்வொரு தடவையும் சாதிச் சான்றிதழைக் கேட்கிறார்கள். அதுவும் 6 மாதங்களுக்குள் வாங்கியிருக்க வேண்டும் என்றார்கள். 6 மாதங்களுக்கு ஒரு தடவை சாதி மாறுகிறதா? வருமானச் சான்றிதழை கேட்பதிலே அர்த்தம் இருக்கிறது. சாதிச் சான்றிதழை 6 மாதங்களுக்குள் வாங்கியிருக்க வேண்டும் என்பதில் என்ன அர்த்தம்? இதனாலே பல பேருக்கு அட்மிஷன் கிடைக்காமல் போயிருக்கிறது. தாசில்தாரிடம் சாதிச் சான்றிதழ் வாங்க வேண்டும் என்று சொன்னால், அவர் விசாரித்துத்தான் தருவேன் என்று சொல்கிறார். அவர் விசாரித்துத் தருவதற்கு காலவரம்பு கிடையாது. ஒரு வருடம் ஆகியும் சான்றிதழ் வரவில்லை. அதனால் பின்தங்கிய வகுப்பினருக்கான கோட்டாவில், அவர்கள் நன்மை பெற முடியவில்லை. சிலர் கிராமத்திலே பிறந்திருப்பார்கள், பிறகு சென்னைக்கு வந்து 'செட்டில்' ஆகியிருப்பார்கள்.



ஆகவே 'அப்ளை' பண்ணவுடனே, சர்டிபிகேட்டை வழங்க வேண்டும். அல்லது எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டில் உள்ளதை வைத்து சான்றிதழ் வழங்க வேண்டும். நடைமுறையில் இதிலே சிக்கல் இருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வருவாய்த் துறை அதிகாரிகள், தாசில்தார்கள்தான் இதைக் கொடுக்க வேண்டும் என்பதில் நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. மாணவனைப்பற்றி அவன் படிக்கும் ஆசிரியருக்கும், அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியருக்கும் நன்றாகத் தெரியும். தலைமையாசிரியரைவிட 'காம்பிடென்ட் பெர்சன்' வேறு கிடையாது. அவர் எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டில் எழுதுகிறார். அதை ஏற்றுக்கொள்ளலாம். பள்ளித் தலைமை ஆசிரியர் சாதிச் சான்றிதழ் கொடுக்க தகுதியானவர் என்று போட்டால், பிரச்சினை கிடையாது. ஏனென்றால் மாணவர்களுக்கு தாசில்தாரைத் தெரியாது. ஆகவே இந்த நடைமுறைச் சிக்கல் இருக்கிறது என்பதை மாணவர்கள் சொல்லும்போது, அது உண்மையிலே வருத்தப்படக்கூடிய விஷயமாகத்தான் இருக்கிறது. இந்த விஷயத்திலும் நம்முடைய நோக்கம் சிதறடிக்கப்படுவதால், அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பொங்கல் பரிசைப்பற்றிப் பாராட்டினார்கள். நாம் நம் மாநிலத்தில் மரியாதையை விட்டுக் கொடுக்க முடியாது. மேற்கு வங்கத்தில்தான் முதன் முறையாகக் கொடுத்தார்கள் என்றார்கள். தமிழ் நாட்டிலும் முன்பே கொடுத்திருக்கிறார்கள். ஆரம்பத்திலேயே ஒரு மாத ஊதியத்தை அதாவது திரு. பிரகாசம் காலத்திலே கொடுத்தார்கள். அதற்குப் பிறகு விட்டுவிட்டார்கள். தமிழ் நாட்டில் இப்போது மீண்டும் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் நல்ல முறையிலே நடப்பதைப் பொறுத்து, தொடர்ந்து வர வாய்ப்பு இருக்கிறது.

விற்பனை வரி போடுவதில் ஒரு சிக்கல் இருக்கிறது. லேபர் சார்ஜுக்கும் விற்பனை வரி போடுகிறார்கள். காண்ட்ராக்டர்கள் தொழிலாளிகளுக்குக் கூலி கொடுக்கும்போது, "விற்பனை வரி உண்டு, ஆகவே நாங்கள் சேல்ஸ்-டாக்ஸ் போடுகிறோம்" என்று சேல்ஸ் டாக்ஸ் துறையினர் சொல்லுகிறார்கள்.

(பிற்பகல் 4-50)

பலபேர்கள் கோர்ட்டில் இதற்கு ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். 'ஸ்டே' வாங்காதவர்கள் என்ன பண்ணுகின்றார்கள்? தொழிலாளர்கள் கூலியைக் குறைத்துக்கொடுக்கின்றார்கள். அந்த 'டாக்ஸ்' காரணமாக அவர்கள் சம்பளத்தைக் குறைக்கின்றார்கள். இந்த 'டேக்ஸ்' பற்றிய நிலைமை

களைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோர்ட்டிலே 'ஸ்டே' எல்லாம் வாங்குகின்றார்கள். லேபர் கூலிபற்றி 'டெபனிஷன்' வேண்டும். அதிலே பொருள்கள் விற்பது வாங்குவது போல வருகின்றதா? அதிலே டேக்ஸ் பற்றிய ரிலேஷன்ஷிப் என்ன வருகின்றது, எப்படியெப்படி வருகின்றது என்பதைப்பற்றி 'கிளாரிபை' பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திரு.வி.க. நகர் போன்ற இடங்களில் தொழிலாளர்களுக்கு என்று மாநில அரசும் மத்திய அரசும் பணம் கொடுத்து வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கின்றார்கள். அதில் தொழிலாளர்கள் குடியிருந்துவிட்டு அதற்குப் பின்னர் அவர்கள் ரிட்டையர் ஆன பிறகு, அவர்களுடைய பிள்ளைகள் குடியிருக்கின்றார்கள். அங்கே கிட்டத்தட்ட 30 வருடங்கள், 35 வருடங்கள் வரைகூட குடியிருந்திருக்கின்றார்கள். அவர்களுக்கே அந்த வீடுகளைச் சொந்தமாக்க வேண்டும். சில பக்கத்து மாநிலங்களில் எல்லாம் அப்படி அவர்களுக்கு அந்த வீடுகளைச் சொந்தமாக்கியிருக்கின்றார்கள். மத்திய அரசு அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறது. அப்படி குடியிருப்பவர்களுக்கு அல்லது அவருடைய பிள்ளைகள் குடியிருந்துகொண்டு ஒழுங்காக குடக் கூலி கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு அதைச் சொந்தமாக்கலாம். அந்தக் கொள்கை அடிப்படையில் மத்திய அரசும் அதற்கு அனுமதி அளித்திருக்கின்றது. மாநில அரசின் வீட்டு வசதி வாரியமும் அதைச் சொந்தமாக்க வேண்டும். திரு.வி.க. நகர் போன்ற பகுதியில் இருக்கும் தொழிலாளர்களுக்கு அவற்றை தற்போது சொந்தமாக்கவில்லையென்றாலும், குறைந்தது வெளியேற்றாமலாவது இருக்கலாம். இங்கு நமது மாண்புமிகு வீட்டுவசதி அமைச்சர் அவர்கள்கூட இருக்கின்றார்கள். ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறேன். அது வருவதற்குள் ஆள் போய்விடுவான் போலிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் அதை எடுத்துச்சொல்கிறேன். அவர்களை வெளியேற்றுவதால் என்ன லாபம்? அந்தக் கருத்திலேதான் நான் இதைச் சொல்கிறேன். இந்த மாதிரி விவரங்களைக் கொண்டுவந்திருக்கிறேன்.

இன்னும் ஒன்றே ஒன்று கடைசியாகச் சொல்லிக் கொள்கிறேன். அன்றைக்கே பேசிவிட்டதால் சொல்லவேண்டியிருக்கிறது. 11—5—1984 என்று நம்முடைய அவையினுடைய முன்னவர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். நம்முடைய வீரபாண்டிய கட்டபொம்மன் திரு. உருவச் சிலை பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். 11—5—1984 அன்று அவரே எடுத்துச் சொன்ன கருத்துதான் அது. "அவர் அற்புதமான வீரம் மிக்க குதிரையில் அமர்ந்திருக்கின்ற அந்தத் தோற்றத்தோடு, தலைநகரத்திலே, தமிழ் நாட்டினு



டைய தலைநகரத்திலே, சென்னை நகரத்திலே, அரசின் சார்பிலே அந்த அற்புதமான திருஉருவச் சிலை வைக்கப்பட இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மண்ணிற்கு, இந்த மண்ணின் சகோதரர்களுக்கு தமிழகத்திற்கு, தமிழகத்தின் மூலம், இந்திய துணைக்கண்டத்திற்கு செய்தியைத் தெரிவியுங்கள் என்று ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்" என்று 11—5—1984 அன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் பாஞ்சாலங்குறிச்சியிலே சொன்னார்கள். அதுமாதிரி எல்லா மாநிலங்களிலும் இருக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். நல்ல நோக்கத்தோடு சொன்னதுதான். ஆனாலும் அதைப்பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே போன உடனே கேட்கிறார்கள். கூட்டத்தைப் போடும்போது, அது என்னவாயிற்று என்று கேட்கின்றார்கள். சென்றமுறைகூட இந்த மன்றத்திலே பேசும்போது சொன்னேன். அவை முன்னவர் அவர்களுக்கு என்ன வருத்தமோ தெரியவில்லை. அதனாலே நான் எழுப்புகின்ற பிரச்சினைகளுக்கு அவர் பதில் சொல்லவில்லை. பரவாயில்லை. என்னுடைய கடமை மீண்டும் வலியுறுத்துகிறேன். அவை முன்னவருக்கு பல சிரமங்கள் இருந்தாலும் மாண்புமிகு நாவலர் அவர்களாவது இதைச் செய்ய வேண்டும். நெல்லை மாவட்டத்தைப் பிரிக்கும்போது தூத்துக்குடியைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு கட்டபொம்மன் மாவட்டம் என்று பெயரிடவேண்டும் என்று கோரி, அதை மீண்டும் வலியுறுத்திக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முதல் துணை மதிப்பீடுகள்மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே நான்காவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான்காவது ஊதியக் குழுவினுடைய முடிவுகளால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக வெடித்த ஆசிரியர்கள் போராட்டம் ஒருவிதமாக சுமுகமாகப் பேசி முடிக்கப்பட்டு பேசியாகிவிட்டது. இந்த மன்றத்திலேகூட நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு அன்பு வேண்டுகோளாக, இப்போது போராட்டம் எல்லாம் முடிந்து கல்விக்கூடங்கள் திறக்கப்பட்டு, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் எல்லாம் அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் மாணவர்களை தேர்விற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இந்த மேலவை கூடி நடக்கின்ற நேரத்தில் இப்போது காரசாரமாக விவாதம் நடப்பதுபோல நடந்தால்கூட, அது பொருத்தமாக இருக்கும்.

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1986 சனவரி 27

ஆனால் இந்த அமைதியான சூழ்நிலையைப் பாதிக்கக்கூடிய எந்த ஒரு
நிகழ்ச்சியும் வேண்டாம் என்பதுதான் என்னுடைய அன்பு வேண்டுகோளாகும்.
அது ஆளுங்கட்சி உறுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும்
அனைத்துத் தரப்பினருக்கும் இந்த வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.
இந்த நான்காவது ஊதியக் குழுவைப் பொறுத்தவரையில், நானே முன்பு
குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு குழுவிற்கு, கமிஷனுக்கு பதிலாக மரியாதைக்
குரிய டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டிருந்தாலுங்
கூட, எங்களுக்கு அந்த நியாயம் கிடைத்திருக்கும். இந்தக் கமிஷன்
போட்டதனாலேயே சிக்கல் அதிகமாகியிருக்கிறது. 'டேர்ம்ஸ் ஆஃப்
ரெப்ரன்சில்' என்ன சொல்லுகிறார்கள் என்றால்,

(பிற்பகல் 4-55)

Dearness Allowance and other compensatory allowances. To study any anomaly in the structure and suggest revision. Leave benefit, retirement benefits of all categories, leave facilities, educational opportunities for children of employees, housing, etc. etc.

ஏராளமாக இருக்கிறது. ரொம்ப அற்புதமான 'டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்'
ஆனால் அறிக்கையில் என்ன வந்திருக்கிறது? எதை எல்லாம் ஆய்ந்து
அறிக்கை கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டதோ, எந்த நோக்கத்திற்காக
அமைந்ததோ, அதை நிறைவேற்றவில்லை. குழு தன்னுடைய கடமையைச்
செய்யவில்லை. முரண்பாடுகளை ஆய்ந்து அறிக்கை கொடுத்திருந்தால்,
இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. முரண்பாடுகளை ஆராய வேண்டு
மென்று 'டேர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்'ல் இருக்கிறது. விடுப்பு பற்றி சொல்லப்
பட்டிருக்கிறது. ஆனால் நான்காம் ஊதியக் குழு இருப்பதைக் குறைத்து
விட்டது. 20 நாட்களாக இருந்த விடுப்பை 12 நாளாகக் குறைத்துவிட்டது.
இருக்கின்ற பலன்களை அதிகமாக்குவதற்கான வழிமுறைகளைக் கண்டு
பிடிப்பதுதான் 4 ஆம் ஊதியக் குழுவின் கடமை. ஏற்கெனவே இருப்பதில் கை
வைப்பது அவர்கள் வேலையல்ல. மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள்
தலைமையில் ஒரு கமிட்டி போட்டிருந்தால்கூட, எங்களுக்கு நியாயம் கிடைத்
திருக்கும். மனிதாபிமான முறையில் அவர்கள் அணுகி, எங்கள் பிரச்சினை
களைத் தீர்த்து வைத்திருப்பார்கள். போராட்ட காலத்தில் டாக்டர் நாவலர்
அவர்களோடு பேசும்போது, அவர்கள் காட்டிய ஆர்வத்தை நாங்கள் நன்றாக
அறிவோம். அந்த உணர்வுகளின் அடிப்படையிலே சொல்கிறேன். நாங்கள்
பார்த்தவரைக்கும் அதிகாரிகள், அலுவலர்கள் இதைச் செய்யலாம், அதைச்
செய்யலாம் என்று வழிமுறைகளைச் சொல்லலாம். அமைச்சர்கள் கடுமையாக
இருந்து, இதையெல்லாம் இப்போது செய்வதற்கில்லை என்று சொல்லி,



1986 சனவரி 27] [திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்]

அவற்றைத் தள்ளி வைப்பதுதான் 'கன்வென்ஷன்'. ஆனால் இப்போது,
அமைச்சர்கள் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும், அதை அவர்கள் செய்யா
மலிருக்க என்ன வழி என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். செய்யக்கூடாது
என்பதற்கு என்ன சொல்லலாம் என்று பார்க்கிறார்கள். இதைச் செய்வதற்கு
என்ன வழி, செய்வதற்கான சூழ்நிலையை உண்டாக்க என்ன வழி என்று
அதைச் சொல்லவில்லை. நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை.
இப்படிச் செய்யும் அதிகாரிகளைச் சொல்கிறேன். இதற்கு ஓர் உதாரணத்
தைச் சொல்ல முடியும். ஈர்க்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு
கோர்ஸ்-க்காக, அதுவும் சென்னை போன்ற நகரங்களில் தங்கிப் படிக்க ஆகும்
செலவை ஈடுகட்ட 500 ரூபாய் கடன் கொடுத்து, அதை 10 மாதங்களில்
பிடித்துக் கொள்ளலாம் என்பதற்கு டாக்டர் நாவலர் அவர்கள் ஒப்புதல்
கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அதற்கு என்ன தடை? மாண்புமிகு
நிதி அமைச்சரவர்கள் ஒப்புதல் கொடுத்த அந்தக் கோப்பு என்னவாயிற்று?
அதிகாரிகள் அதற்கு ஒரு தடையை டெக்னிகலாகச் சொல்லி, இது நியூ
சர்வீஸ், கடன் கொடுத்து திரும்பிப் பிடிப்பதை 'நியூ சர்வீஸ்' என்று
சொல்லி, கோப்பை முதல்வரவர்களுக்கு அனுப்புகிறார்கள். இப்படிப்பட்ட
பணிச் சுமைகளை மாண்புமிகு முதல்வரவர்களுக்குச் சுமத்தினால் எப்படி?
ஒரு நாட்டினுடைய முதலமைச்சரவர்கள் இது போன்ற சாதாரண காரியங்கள்
சம்பந்தமான கோப்புகளைப் பார்க்கக்கூடிய கட்டாயத்தை அதிகாரிகள்
ஏற்படுத்தினால், நாட்டினுடைய நிலைமை என்னவாகும்? மாண்புமிகு நிதி
அமைச்சரவர்கள் ஒப்புதல் கொடுத்ததற்கே இன்னும் அரசு ஆணை
வரவில்லை. எனவே இப்படி கமிஷன்கள் அமைப்பதை விட, மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு போட்டு, அவர்களுக்கு
அதிகாரிகள் 'அசிஸ்ட்' பண்ணினால், எங்கள் பிரச்சினைகள் நியாயமான
முறையில் தீரும் என்று நாங்கள் இன்னமும் நம்புகிறோம். எல்லாவற்றையும்
'ரிஜக்ட்' பண்ண நான்காம் ஊதியக் கமிஷன். கோரிக்கைகளை எல்லாம்
நிராகரிக்க ஒரு கமிஷன். அதற்கு வாதங்களைக்கூடச் சொல்லவில்லை.
நிறைய உதாரணங்களை கமிஷன் ரிப்போர்ட்டிலிருந்து எடுத்துக் காட்ட
முடியும். நேரமில்லை. ஆத்திரத்தை அதிகப்படுத்தும் அறிக்கை இது.
அதனால்தான் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. இப்போது அது முடிந்
திருக்கிறது. இப்போது பிரச்சினைகள் ஒரு நபர்க் குழுவிடம் போயிருக்
கின்றன. ஒரு நபர்க் குழுவிற்கு அனுப்பத் தேவையில்லாத கோரிக்கைகள்
சில இருக்கின்றன. நான் அன்அஃபிஷியலாகப் பேசியபோது, மாண்புமிகு
நிதி அமைச்சரவர்கள் அவர்கள் உணர்வை வெளியிட்டிருக்கிறார்கள்.
அரசாங்கமே தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் இருக்கின்றன. தனியார் பள்ளி,

கல்லூரி ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இருக்கும் எல்.டி.சி. சலுகை கிடையாது. அதை எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதை, கார்த்திகேயன் குழு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ஏற்றுக் கொள்ளலாம். அதை, அரசே ஏற்றுக்கொள்ளலாம். கிட்டத்தட்ட அவர்கள் 1 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அரசுப் பள்ளி ஆசிரியர்கள், ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் விடுப்புப் பயணச் சலுகை நமக்குக் கிடைக்கவில்லையே என்ற விரக்தி அவர்களுக்கு இருக்கிறது. அதை நாமே செய்து

(பிற்பகல் 5.00)

விடலாம். அப்படிச் செய்யவேண்டிய உணர்வு அரசுக்கு இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கைகளை நீங்களே தீர்த்துவிடலாம். இதற்காக காத்திருக்க வேண்டியதில்லை என்பதை நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதை பரிவுடனும் கனிவுடனும் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மாவட்டப் பிரிவினைகள்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மதுரை மாவட்டம் பிரிக்கப்பட்டது. வடாற்காடு, நெல்லை போன்ற மாவட்டங்கள் பிரிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து வள்ளலார் மாவட்டம் என்று வைக்கப் போவதாக முன்பே சொல்லியிருக்கிறார்கள். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், வள்ளலார் பிறந்த வடலூரை உள்ளடக்கிய மாவட்டம் கடலூர் மாவட்டப் பகுதியில் அடக்கி, அந்தப் பகுதிக்கு வள்ளலார் மாவட்டம் என்று பெயரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடலூரை தலைநகராகக் கொண்டு அமையும் மாவட்டத்திற்குள் வடலூர் வரவேண்டும், அதற்கு வள்ளலார் மாவட்டம் என்று பெயரிட்வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பண்டிகை முன்பணம், வெள்ள நிவாரணத்தொகை அரசால் அவ்வப்போது வழங்கப்படுகிறது. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. ஆனால் எப்போது பார்த்தாலும், அலாட்மெண்ட் வரவில்லை, பணம் இல்லை என்று தர மறுக்கிறார்கள். அதற்குள் பண்டிகை முடிந்துவிடுகிறது. நாம் கொடுப்பது பண்டிகை முன்பணம். அட்வான்ஸ். அதை அவர்களது சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளப் போகிறோம். இதற்கு அலாட்மெண்ட் இல்லை என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே இதுபோன்ற செல்வுகளுக்கு முன்கூட்டியே நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெள்ள



நிவாரணத் தொகை முன்கூட்டியே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தமாதிரி தொகைகள் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் கிடைப்பதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். எந்தக் கோரிக்கையை அரசுக்கு அனுப்பினாலும், உதாரணமாக 4 கோடி ரூபாய்க்கு அனுமதி கோரினால், ஒன்றரை கோடி ரூபாய்தான் தரப்படுகிறது. இப்படி பணம் குறைத்து ஒதுக்கப்படுவதால், அப்ளிகேஷன் போட்டவர்களுக்கெல்லாம் பணம் கிடைக்கவில்லை. சிலர்தான் பெற முடிகிறது. மீதியுள்ள அப்ளிகேஷன்கள் நிலுவையில் வைக்கப்படக்கூடிய நிலை ஏற்படுகிறது. மீதியுள்ளவர்களுக்கு என்ன ஆவது? தென்னாற்காடு மாவட்டத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு 15 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று அனுப்பினால், 9 லட்சம் ரூபாய்தான் அனுமதியளிக்கப்பட்டது என்ற செய்தியை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இதன் காரணமாக 6 லட்சம் பேர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. அது கூடாது. கடன் கொடுக்கும் பணத்தைப் பிடித்துக்கொள்ளப் போகிறோம். அதை சரியான நேரத்தில், முழுமையான அளவுக்கு ஒதுக்கினால், தேவையான அளவுக்கு பணம் வழங்கப்படும். அதற்கு நிதியமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட இருக்கிறது என்று அறிவித்திருப்பதற்காக நான் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், வருகிற அரசு உத்தரவுகள், காலதாமதமாக வந்து அதன் காரணமாக நிர்வாகப் பிரச்சினைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்பதுதான். ஜூன் மாதத்தில் பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட்டுவிடுகின்றன. இதுபோன்ற ஆணைகள், நவம்பர் மாதத்தில்தான் வருகின்றன. இந்த உத்தரவுகள் காரணமாக நிர்வாகத்தில் ஏற்படுகிற சங்கடங்களை அங்கே போய்ப் பார்த்தால் தான் தெரியும். ஜூன் மாதம் திறக்கப்படுகிற பள்ளிகளுக்கு, மே. மாதத்திலேயே ஆணை வந்துவிட்டால், நிர்வாகம் சுலபமாகச் செயல்பட வாய்ப்பிருக்கும். அதுமட்டுமல்ல, தேவைப்படுகிற பள்ளிக்கூடங்களுக்கு அதாவது அரசின் அதிகார பூர்வமான பள்ளிகள் 1,300 மேல்நிலைப் பள்ளிகளுக்குப் போதுமான கட்டிட வசதி கிடையாது. மத்திய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து பண உதவி கிடையாது, மாநில அரசின் நிதியிலிருந்துதான் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மேற்கொண்டு இது குறித்து பரிசிலனையில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால், என்ன நிலைமை? 1,300 பள்ளிக்கூடங்களுக்கு வகுப்பறை

இடையாது, கட்டிடம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்து, அல்லது நமது ஆளுகைக்குட்பட்டுள்ள கூட்டுறவு வங்கிகளிடமிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம் என்பதன் மூலமாக நிதி உதவி செய்ய வேண்டும். அப்படி உதவி செய்ய முடியுமா என்பதுபற்றி விரைவான முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பொறுத்தவரையில், என்.ஹெச். 45 என்ற தேசிய நெடுஞ்சாலை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது தென்னாற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி பாதையில் செல்கிறது. இந்தப் பாதையில்தான் அமைச்சர்கள் எல்லாம் அடிக்கடி பயணம் செய்கிறார்கள். அது மிகவும் மோசமாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும் படுகுழிகள், பள்ளங்கள்தான் காட்சியளிக்கின்றன. அதைப் பராமரிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு இல்லையா என்று அறிய விரும்புகிறேன். அவ்வேலைகளைக் கவனிக்க காலதாமதம் ஆவதற்கு யார் பொறுப்பு? அல்லது நிதி ஒதுக்கீடு மிகக் குறைவானதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-05)

இந்தச் சாலை சீரமைப்பிற்காக மிகவும் குறைவான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது பராமரிப்பதற்கு ஒரு கிலோமீட்டர் சாலைக்கு ரூ. 25,000 தேவை. சிங்கிள் லைன் சாலைக்கு இத்தொகை தேவைப்படுகிறது என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு கொடுப்பதோ ரூ. 8,000 மட்டுமே. பின் எப்படி சாலைகளை சரிவர பராமரிக்க முடியும்? சாலைகள் பின் எப்படி உருப்படியாக இருக்கும்? எனவே தேவைப்படுகின்ற ஒதுக்கீட்டை, பராமரிப்பிற்காகச் செய்து சாலைகளைச் சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இவற்றை உடனடியாகச் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிட்டதைப்போல, மேல்நிலைப் பள்ளிகளில் பகுதி நேர ஆசிரியர்களாகப் பணியாற்றுவோருக்கு சமீபத்தில் அறிவிக்கப்பட்ட பொங்கல் வெகுமதி கொடுக்கப்படவில்லை. சத்துணவு அமைப்பாளர்களுக்கு உண்டு. ஆனால் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு இல்லை. காரணம் அந்த உத்தரவில் வார்த்தை திருத்தம் தேவைப்படுகிறது. அதைச் செய்து, அவர்களுக்கும் இந்தப் பொங்கல் பரிசு கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



**திரு. ஆர். டி. சீத்தாபதி :** மாண்புமிகு அணைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குள்ளே பூனை ஒன்று வந்திருக்கிறது. அதற்கு அனுமதி உண்டா?

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** Strangers are not allowed in this House. மனிதர்களாக இருந்தாலும் சரி, மிருகங்களாக இருந்தாலும் சரி. அவற்றை அப்புறப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஏற்கெனவே மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்கூட அரசின் அணுகுமுறைபற்றி அழகாகச் சொன்னார்கள். நாங்கள் அதை மறுப்பதே கிடையாது. நாங்களும் தெளிவாக அவ்வப்போது சொல்ல வேண்டியவைகளைச் சொல்கிறோம். அவற்றின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டு அதற்கான நன்றியையும் சொல்கிறோம். நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவைகளை, மீண்டும் வற்புறுத்துகிறோம்.

சென்ற எங்கள் போராட்டத்தின்போது சென்னை மத்திய சிறைச் சாலையில் இருந்தவர்களின்மீதான வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டு விட்டது. ஆனால் இதர பகுதிகளில் இருந்தவர்கள்மீதான வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. அதனால் அங்குள்ள பள்ளிக்கூடங்களில் வேலை பாதிக்கப்படுகிறது. அங்குள்ள ஆசிரியர்கள் நீதிமன்றங்களுக்கு, கோர்ட் வாரண்ட் வந்து செல்வதால், கல்விப் பணி பாதிக்கப்படுகிறது. நீதிமன்றத்திற்குச் சென்றால், ஒரு நாள் வீணாகிறது. எனவே அங்கேயும் வழக்குகளை முழுமையாக வாபஸ் பெற அறிவிப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கல்லூரி ஆசிரியர்களுக்கு இடைக்கால நிவாரணம் குறித்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. அதற்கு என்று சில 'ஃபார்மாலிட்டிஸ்' இருக்கின்றன. அரசாணை வெளியிட்டும், இடைக்கால நிவாரணம் வாங்க முடியவில்லை. சில சடங்குகள் பாக்கி இருக்கின்றன. எனவே செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து முடிப்பதற்கு அவர்கள் இடைக்கால நிவாரணம் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வருங்கால வைப்பு நிதிக்கு அரசு ஊழியர்களுக்கு இருப்பதைப்போல, 10½ சதவீதம் வட்டி கிடைக்கின்ற வகையில் அவர்களுக்கு ஒரு திட்டம் ஏற்படுத்தப்படும் என்று ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டிருந்தது. அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டும்; அதை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—4—1985 முதல் அமலுக்கு வந்திருக்கிற 5,000 ரூபாய் உதவுகிற

திட்டம் நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு இன்னும் அமுல்படுத்தப்பட வில்லை. அவர்களுக்கும் அதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, தலைமைச் செயலக ஊழியர்களைப்பற்றி மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். தன்னை சுட்டவரையே தன்னுடைய பொறுப்பிலேயே மருத்துவனைக்கு அனுப்பி வைத்ததைக் கூறி னார்கள். அவ்வளவு கருணை மனப்பான்மை உள்ள முதல்வர் என்று கூறி னார்கள். அப்படிப்பட்ட கருணை மனப்பான்மையுடைய முதல்வர் ஆட்சி செய்கின்ற நமது மாநிலத்தில் அவர் தாயைப்போல இருந்து அரசு ஊழியர் களாகிய அவருடைய குழந்தைகளுக்காக—அவைகள் ஏதேனும் ஒருசில தவறுகள் செய்திருந்தாலும்கூட அவற்றைப் பொருட்படுத்தாமல்—மறப்போம், மன்னிப்போம் என்கிற அறிஞர் அண்ணா அவர்களின் தத்துவத்தின் அடிப் படையில் நீங்கள் செய்யலாம். ஊழியர்களின் உணர்ச்சி வசத்தின் காரண மாக ஏதோ சில நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம். அதையெல்லாம் மறந்து விட்டு சுமுகமாக அவர்கள் மீதான சஸ்பென்ஷன் உத்தரவுகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கும் அரசுக்கு மிடையே ஒரு சுமுகமான சூழ்நிலை இருந்தால்தான், திட்டப் பணிகளைச் செம்மையாகச் செயலாற்ற முடியும். அந்த அடிப்படையில் தலைமைச் செயலக ஊழியர்கள் 33 பேர்களுடைய சஸ்பென்ஷன் உத்தரவுகளையும் கருணையுள்ளத் தோடு அணுகி, திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-10)

இறுதியாக சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒருசிலவற்றை—ஏற்கெனவே சொன்னவைகள்தான்—சொல்ல விரும்புகிறேன். இப்போது சட்டமன்ற உறுப் பினர்களுக்கு 200 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. இது சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. இது எல்லோருக்கும் பொதுவான விஷயம்தான். சென்ற ஆண்டு அறிவிக்கப் பட்டது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அது வருவதற்குரிய நடவ டிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒரு நாளைக்கு 75 ரூபாய் என்று உயர்த்தப் பட்டிருக்கிறது. (மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் நூறு ரூபாய் என்று சொல்கிறார்கள்). துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. அவர்களுக்கு நூறு ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போலவே நாடாளுமன்றம்



நடைபெறுகின்ற சமயத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நூறு ரூபாய் வழங்கப்பட்டு, அவர்களுடைய உரிமைகள், சலுகைகள், வேண்டிய வசதிகளில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் அதிகமான கவனம் செலுத்துவதைப்போல . . . .

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அந்த நூறு ரூபாய், தலைவர் துணைத் தலைவர் மற்றும் அமைச்சர்களுக்குத் தரப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: ஆகவே அந்த நூறு ரூபாயை இங்குள்ள உறுப்பினர்களுக்கும், சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெறும்போது, இப் பொழுதுள்ள விலைவாசியைக் கருத்தில் கொண்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரயில்வே கூப்பனை உறுப்பினர்களுக்குக் கொடுப்ப தற்குப் பதிலாக, அவர்களுக்கு அதற்குரிய பணத்தை காசாகக் கொடுக்க லாம். இவ்வாறு கொடுத்தால், செக்ஷனில் வேலையில்லை; இரயில்வே டிபார்ட்மெண்டில் வேலை இல்லை. உறுப்பினர்களுக்கும் சங்கடம் கிடையாது. அதைக் கூப்பனாகக் கொடுக்காமல், ஒரு தொகையாக, ஒரு அலவன்ஸாகக் கொடுத்தால், பல பேருக்கு பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும். ஏற்கெனவே, உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே எடுத்து விளக்கி யிருக்கிறார்கள். அதை நான் மீண்டும் வலியுறுத்தி அதில் கூடுதல் செலவு அரசுக்கில்லை என்பதையும் நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். கூப்பனைப் பணமாகக் கொடுப்பதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு தொகுதியிலே ஒரு அலுவலகத்தை அரசாங்கம் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நீண்ட காலமாக நாங்கள் கேட்டு வருகிறோம். ஒரு சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய ஜனநாயகக் கடமை களைச் சரியான முறையில் செய்ய வேண்டுமென்றால், ஒவ்வொரு தொகுதி யிலும் ஒரு அலுவலகம் இருக்க வேண்டும். அதை அமைத்துக் கொடுப்ப தற்கு அரசு உதவி செய்ய வேண்டும். அது இருந்தால்தான், நல்ல முறை யிலே கடமையாற்ற முடியும் என்பதை மீண்டும் வலியுறுத்தி அவர்களுக்கு அந்த அலுவலகங்கள் ஏற்படுத்துவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, போக்குவரத்துத் துறையில் இன்றைய தேதியில் பூர்த்தி செய்யப்படாத மிகப் பெரிய முக்கியமான பதவிகள் இருக்கின்றன. தலைமைப் பொறியாளர் பதவி 2. இது ஏன் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், பேனல் தயாராகவில்லை. கண்காணிப்புப் பொறியாளர் பதவி 10.

பேனல் தயாராக இல்லை, அதனால் பூர்த்தி செய்யப்படவில்லை. அடுத்து, டிவிஷனல் என்ஜினியர் பதவிகளுக்கு பேனல் இப்பொழுதுதான் தயாராகியது; இன்னும் ஆணைகள் போடப்படவில்லை. இவ்வளவு முக்கியமான பதவிகள் நெடுஞ்சாலைத் துறையிலே இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. ஏனென்றால் நிர்வாகத் தடைகள். நிர்வாகத் தாமதத்தை நாம் தவிர்க்க வேண்டும். இது நாமே தவிர்க்கக்கூடியது.

அதைப்போல மற்றொன்று, வெள்ள நிவாரணப் பணிகள் எல்லாம் சாலைகளைப் பொறுத்தவரையில், சரியான முறையிலே செய்வதற்கு இன்னமும் வேண்டிய, போதுமான அலுவலர்கள், பணியாளர்களை இந்தத் துறை கொடுக்கவில்லை. அரசு அனுமதிக்கவில்லை. அதன் காரணமாக பல நிவாரணப் பணிகள் தேக்கம் அடைந்திருக்கின்றன என்பதை அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுவாக இந்த முதல் துணை மதிப்பீடுகள் மீது எங்கள் அணியின் சார்பாக ஆதரவைத் தெரிவித்து, அமைகிறேன்.

* திரு. ஏ. ஜே. தாஸ்: துணைத் தலைவரவர்களே, முதல் துணை மதிப்பீட்டின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அரசு புதிதாக 83 உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. மேலும் 1985-86-ம் ஆண்டிலிருந்து 38 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தியுள்ளது. இதற்கான செலவு ரூ. 8997 லட்சம். ஆகவே இந்த 89 கோடியே 97 லட்ச ரூபாயை எந்தவிதமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரியவில்லை. காரணம் அரசு உயர்நிலைப் பள்ளிகளைப் பார்க்கும்போது, அவைகளின் நிலையைப் பார்த்தால், நான் ஏற்கெனவே ஆளுநர் உரையிலே சொன்னேன். இன்றைக்கு கட்டிடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டிடங்களுக்குள்ளே பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்திருக்குமிடத்தில் பென்ச் இல்லை, நாற்காலி இல்லை. ஆசிரியர்களுக்குக்கூட மேஜை, நாற்காலி கிடையாது. இப்படிப்பட்ட அவல நிலை இருக்கும்போது, மேலும் பள்ளிகளை உயர்த்துவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இது தேவைதானா? ஒன்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பது இந்த அரசினுடைய கடமை. அதேநேரத்திலே அரசு சீருடை கொடுக்கிறது. சீருடை ஒழுங்காக பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை. இதை நான் சென்று பார்த்தேன். அவ்வாறு பார்த்தபோது, சில பிள்ளைகளுக்குத்தான் சீருடை கொடுக்கப்பட்டிருக்கிறது. பல பிள்ளைகளுக்கு இன்னும் கொடுக்கவில்லை. நல்ல திட்டங்களை இதற்காக அனுமதிக்கிறோம். நிறைய பணம் கொடுக்கின்றோம். செலவும் செய்கின்றோம். கோடிக்கணக்கான ரூபாய் செலவில்



திட்டங்களைப் போடுகிறோம். ஆனால் அது அந்த இடத்திலே போய்ச் சேரும்போது, அது உரியவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. அது உரியவர்களுக்குப் போய்ச் சேருவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-15)

ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் ரூ. 126 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் சிறப்புப் பணிகளுக்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரையைப் பார்க்கும்போது, என்ன சிறப்புப் பணிகள் என்பது குறிப்பிடப்படவில்லை. அதுபற்றிய விளக்கம் ஏதுமில்லை. சிறப்புப் பணிகள் என்றால், என்னென்ன பணிகள், எதற்காகச் செலவு செய்ய இருக்கிறோம் என்று சொல்லப்படவில்லை. ஆதிதிராவிடர்களுக்கு இன்னின்ன பணிகளுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்த விளக்கம் எங்கேயும் இல்லை. எனவே அது குறித்து விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சட்டம் ஒழுங்கை மேலும் சிறந்த முறையில் நிலைநிறுத்த சென்னை ஆவடியில் ஒன்றும் திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாற்றில் மற்றொன்றுமாக இரண்டு காவல் அணிகளைக் கூடுதலாக தமிழ் நாடு சிறப்புக் காவல் படையில் ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது என்று சொல்லியிருப்பது பாராட்டுக்குரியதுதான். ஆனால் இன்றைக்கு சட்டம் ஒழுங்கைப் பார்க்கும்போது, சென்னையைப் பொறுத்தவரையில், ஏழை எளிய மக்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லும்போது மிகவும் அச்சப்படுகிற நிலைமைதான் இருக்கிறது. இது உங்கள் நண்பன் என்று சொன்ன காலம் உண்டு. இன்றைக்குப் போகிறபோது, போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன உடனே அவர்களுக்கு அடியும் உதையும்தான் கிடைக்கிறது. ரிப்போர்ட் கொடுக்கிறவர்களுக்கும் உதை கிடைக்கிறது. உள்ளே போனவர்களுக்கு எல்லாம் இந்த மரியாதைதான் கிடைக்கிறது. இதன் காரணமாக ஏழை எளிய மக்கள் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. சட்டம் ஒழுங்கு சென்னையில் இந்த நிலையில் இருந்தால், இதைக் கண்டிப்பாகக் கண்காணிக்க வேண்டும். இது பொதுப் பிரச்சினை. இத்தகைய அவல நிலையை அரசு போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டம் ஒழுங்கை முறையாக நிலைநாட்ட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தின் வேகத்தைப் பார்க்கும்போது, குடிசைப் பகுதியில் இருப்பவர்களுக்கு உரிய முறையில் நிதி உதவி அளிக்கப்படவில்லை, பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் பணம் கிடைக்காமல் அவஸ்தைப் படுகிறார்கள். எனக்குத் தெரிந்த 2, 3 பகுதிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலேயே விட்டுவிட்டார்கள். இன்றைக்குக் கூட நானே நேரில் தாலுக்கா அலுவலகத்திற்குச் சென்று ஏன் இப்படி இந்தப் பகுதிகளை விட்டுவிட்டீர்கள் என்றும் அவர்கள் மீது என்ன கோபம் என்றும் கேட்டேன். பல பகுதியில் இருப்பவர்களுக்கு கிடைத்துவிட்டது, இந்த 2, 3 பகுதிகளில் இருப்பவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் எல்லாம் என்ன பாவம் செய்துவிட்டார்கள் ? எனவே சென்னை நகரத்தில் குடிசை இழந்த மக்களுக்கும் சேதம் அடைந்த மக்களுக்கும் முறையாக நிதி உதவி கிடைக்கவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்னையில் குடிசைகள் நிறைய இருக்கின்றன. எங்கே பார்த்தாலும் குடிசைகள்தான் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்காக என்று நிறைய குடியிருப்புகள் கட்டப்பட்டாலும், அவர்களுக்காகவே அந்தத் திட்டம் செயல்பட்டாலும், நடைமுறையில் என்ன நடக்கிறது என்றால், "கரையான் புற்றெடுக்க கருநாகம் குடி புகுந்ததைப்போல்" பல ஆண்டுகளாகக் குடிசைப் பகுதிகளிலேயே குடியிருப்பவர்கள், வீடு கட்டினால் நமக்குக் கிடைக்கும் என்ற ஏக்கத்தோடு இருந்தவர்களுக்கு அத்தகைய குடியிருப்புகளில் வீடுகள் கிடைப்பதில்லை. யார் யாரோ திடீர் திடீர் என்று வந்து வாங்கிக் கொள்கிறார்கள். சென்னை நகரத்தில் இது பெரிய அநியாயமாகவும் அநீதியாகவும் நடக்கிறது. இந்த அநீதியைப் போக்க வேண்டும். அதோடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் குடிசைப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாலும், பிறகு அந்தக் குடியிருப்புகளைப் பார்த்தால், அங்கே எங்கே பார்த்தாலும், குப்பைக் கூளமாகக் காட்சியளிக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், அவர்கள் எப்படி சுகாதாரமாக இருக்க முடியும் ? அந்த அளவுக்குக் குப்பைக் கூளங்கள் எங்கே பார்த்தாலும் இருக்கிறது. கேட்டால் அதை அகற்ற வேண்டியது கார்ப்பரேஷனின் பொறுப்பு என்கிறார்கள். நகராட்சியில் இருப்பவர்கள் அதைச் செய்வதில்லை. அவர்களைக் கேட்டால், அது எங்களுக்கு இல்லை என்கிறார்கள். இவர்களுடைய போட்டியின் காரணமாக அந்தப் பகுதி மக்களெல்லாம் அவதிப்படுகிறார்கள். இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொல்லும்போது, காலையில் அவையின் முன்னவர் அவர்கள்கூட ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குணங்களைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே அவர் பாராட்டத் தக்கவர்தான். நல்லவர் அவர். ஏழை எளிய மக்கள் மீது இரக்கம் கொண்டு கருணை காட்டக்கூடியவர். அப்படிப்பட்டவர் தாய்க்குலத்தின்பால் அதிகமான அன்பு கொண்டவர். இன்றையதினம் ஏழை எளிய மக்களில் பலர் கூலி வேலை செய்கிறவர்கள். கூலி வேலை செய்துவிட்டு மாலை 6 மணிக்குக் கூலி வாங்கிக்கொண்டு வந்தால், நேராக சாராயக் கடைக்குப் போய்விடுகிறார்கள். வெளியே வந்தால், குடும்பத்தில் இருக்கிற அனைவரும் பட்டினியாக இருக்க வேண்டியிருக்கிறது. எனவே சாராயக் கடைகளை காலை 9 மணி முதல் இரவு 7 மணிவரை திறப்பதற்கு மட்டுமே அனுமதி கொடுக்க வேண்டும். 24 மணி நேரமும் சாராயக் கடை இருந்தால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை.)

(பிற்பகல் 5-20)

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏழைகள் மீது இரக்கம் கொண்டவர். ஆகவே தயவுசெய்து இந்தச் சட்டத்தையாவது நிலையாக உருவாக்க வேண்டும். ஏனென்றால் மிகவும் ஏழைகள் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். ஆகவே இந்த நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டு இந்தத் துணை மதிப்பீட்டை ஆதரித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் துணை மானியக் கோரிக்கையில் எந்தெந்த இனங்களுக்கு எவ்வளவு ஒதுக்கீடு கேட்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விளக்கங்களும், அதற்கான காரணங்களும் மிகச் சுருக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அண்மையிலே ஏற்பட்ட வெள்ள நிவாரணப் பணிகள் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது என்பதையும் அதற்காக எந்த அளவிற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்றுமே இல்லாத அளவிற்கு அண்மையில் பெய்த கடும் மழையின் காரணமாக பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டு, அதன் காரணமாக சென்னை மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகியவற்றிலும் தென்னாற்காடு, தஞ்சை, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் ஒரு சில பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன என்பதை

நாம் நன்கு அறிவோம். அந்த வகையிலேதான் மேற்கண்ட மாவட்டங்களில் கிட்டத்தட்ட 44 இலட்சத்து 13 ஆயிரம் மக்கள் அவதியுற்றிருக்கிறார்கள் ; 245 நபர்கள் இந்த வெள்ளத்தின் காரணமாக உயிரிழந்திருக்கிறார்கள். கணிசமான அளவிற்கு கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன. 74,446 குடிசைகள் மழையின் காரணமாக சரிந்திருக்கின்றன. 4,20,758 குடிசைகள் பகுதியாகச் சேதமுற்றுள்ளன. தகுந்த முன்னெச்சரிக்கை எடுக்கப்பட்டது என்றாலும், எதிர்பாராத அளவிற்கு மழையின் அளவு அதிகமாக இருந்ததால், பாதிக்கப்பட்ட இடங்களில் பல்வேறு நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாமை அரசுக்கு ஏற்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே கிட்டத்தட்ட 200 மைல்களுக்கு மேலாக நீண்ட அளவிலும் 110 மைல்களுக்கு மேலாக அகல அளவிலும் பெரு மழை தொடர்ந்து பத்துப் பன்னிரெண்டு நாட்கள் பெய்ததன் காரணமாக, என்றுமே எதிர்பாராத அளவிற்கு பெருவெள்ளம் ஏற்பட்டு, வெள்ளம் ஏற்படும் போதே தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத அளவிற்கு சூழ்நிலைகள் ஏற்பட்டு, பல ஊர்கள் துண்டிக்கப்பட்டு, அதிகாரிகள் கூட போக முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டன. ஆகவே அவற்றைச் சீர்படுத்தி, செம்மைப்படுத்தி, அவர்களைக் கொண்டு வந்து சேர்ப்பதற்கும், மேலும் பழைய நிலையைச் சீராக்கவும் மொத்த நிவாரணப் பணிகளுக்காகவும் கிட்டத்தட்ட 187 கோடி ரூபாய் அளவிற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை நாம் கேட்டோம். மத்திய அரசினர் உடனே வந்து இந்தப் பகுதிகளைப் பார்க்க வேண்டுமென்று கேட்டவுடனே, இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் உடனடியாக வந்து, வெள்ளச் சேதம் ஏற்பட்ட பகுதிகளை ஹெலி காப்டர் மூலமாக அறிந்து சென்றதோடு மட்டுமல்லாமல், உடனே வேளாண் மைத்துறை அமைச்சரை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றதன் அடிப்படையில், மத்திய அமைச்சர் திரு. பூட்டா சிங் அவர்களும் வந்து அந்த இடங்களைப் பார்த்தார்கள். அதற்குப் பிறகு மத்திய அரசின் சார்பாக அதிகாரிகள் வந்து, இரண்டு குழுக்களாகச் சென்று, பல இடங் களில் சென்று பார்வையிட்டுவிட்டு, அதற்குப் பிறகு மத்திய அரசின் சார்பாக 66 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவிடலாம் என்று அனுமதி அளித்திருக் கிறார்கள். சாதாரணமாக பழுதுபார்க்கும் செலவிற்காகவும், உடனடியாகச் சீர்படுத்தும் பணிக்காகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே தவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொன்னதைப்போல, மீண்டும் சீர்படுத்தி புதுப்பிப்பதற்காக நாம் போட்ட திட்டங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை. அவர்கள் கொடுத்த 66 கோடியே 81 இலட்சம் ரூபாயில் இரண்டு கோடி ரூபாயை ஒவ்வொரு தடவையும் பெரும் வெள்ளம் வரு





போது, பெரிதும் பாதிக்கப்படக்கூடிய பகுதியான தாழ்ந்த இடத்திலே கட்டப்பட்டுள்ள கோட்டூர்புரம் பகுதியில் எதிர்காலத்தில் வெள்ளம் வராமல் தடுக்க அடையாற்றின் கரைகளை உயர்த்திட வேண்டிய பணிக்காக தனியாக ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-25)

என்னவென்றால் கோட்டூர்புரத்தில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை அகற்றுவது என்பதோ அதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவது என்பதோ இயலாத ஒன்று. அடையாற்றின் இருபுறமும் கரையை உயர்த்தி வெள்ளம் வந்தால், வெள்ளம் புகுவதைத் தடுக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தலாம். அதற்கான வழிவகைகளைத்தான் நாம் இங்கே கண்டு அதற்கான பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

குடிசைவாழ் மக்களுக்கு அவர்களுடைய கணக்கு எடுத்து முழுவதுமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 300 என்று கணக்கெடுத்துக் கொடுத்து, மத்திய அரசும் ஒத்துக்கொண்டிருக்கின்ற அளவுக்கு நாம் கொடுத்துக்கொண்டு வருகிறோம். சில பேர்களுக்கு ரூ. 100 என்றும் சிலருக்கு ரூ. 150 என்றும் சில பேர்களுக்கு ரூ. 75 என்றும் கொடுப்பதற்குக் காரணமே ஒரே குடிசையில் இரு குடும்பத்தினர் தங்களுக்குத் தனித்தனியாக வேண்டும் என்று சொல்கின்றார்கள். ஒரே குடிசையில் 4 குடும்பத்தினர் இருக்கின்றார்கள். அந்த நான்கு குடும்பத்தினருக்குப் பிரித்து, ரூ. 75, ரூ. 75 ஆகத் தருகிறோம். இரண்டு குடும்பமாக இருக்குமானால், அவர்களுக்கு ரூ. 150 தருகிறோம். குடிசை முழுவதும் அழிந்திருந்தால், ஒரு குடும்பமாக இருந்தால் ரூ. 300 தருகிறோம். அதைத் தவிர 5 கிலோ அரிசி மற்றவைகள், வேட்டி, புடவை போன்றவை களையும் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

சென்னையைப் பொறுத்தவரையிலும், மாண்புமிகு திரு. ஏ. ஜே. தாஸ் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். சென்னையிலே இருக்கின்ற மக்களிலே மூன்றில் ஒரு பங்கு மக்களுக்கு மேல் குடிசை வாழ் மக்களாகத் தான் இருக்கின்றார்கள். 1981-வது ஆண்டு கணக்குப்படி நாம் பார்த்தாலும், 35 லட்சம் மக்களிலே கிட்டத்தட்ட 14½ லட்சம் மக்கள் குடிசையிலே வாழ் கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது, நமக்கு மூன்றில் ஒரு பங்கு பேர்கள் அப்படி வாழ்கின்றார்கள் என்பது தெரிகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையிலே கிட்டத்தட்ட 400 குடிசைப் பகுதிகள் இருந்தன. இன்றைக்கு 1,800 சில்லரைக் குடிசைப் பகுதிகளாக வளர்ந்துவிட்டன. அங்கே அனைத்து வசதி வாய்ப்புகளையும் செய்ய வேண்டும். நாம் குடிசைப் பகுதிகளைக் குடிசை வாரியத்தின் சார்பாக கட்டிடப் பகுதிகளாக மாற்றிக் கொடுக்

இறோம். அப்படி மாற்றிக்கொண்டிருக்கின்ற போதிலேயே 80 குடிசைப் பகுதிகள் புதிதாக பல்வேறு இடங்களிலே உருவாகிவிடுகின்றன. முன்பெல்லாம் ஒரு பழமொழி சொல்வார்கள், 'கெட்டும் பட்டணம் போய்ச் சேர்' என்பார்கள். அதுபோல, கிராமப்புறங்களிலே கெட்டுப் போனவர்கள் இங்கே எப்படியாவது பிழைக்கலாம் என்று இங்கே வந்து சேர்வதன் காரணமாக, அவர்கள் முயற்சிகள் செய்வதன் காரணமாக குடிசைப் பகுதிகள் அதிகமாகிவிடுகின்றன. இப்போதுகூட பெரும்பாலும் தொழிற்சாலைகளெல்லாம் கூடுமானவரையில் அந்தந்த கிராமப் பகுதிகளிலே உருவாக்கப்படும் சூழ்நிலை ஏற்படுமானால், அதையொட்டிய பகுதியிலேயே அவர்கள் குடியிருக்கக்கூடிய வசதி ஏற்படும். அந்தக் கருத்தின் அடிப்படையிலே கூட நாம் அதை வற்புறுத்தி வருகிறோம்.

இங்கே பல்வேறு பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அந்த நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையிலும், நாம் அந்தப் பணிகளை சீரமைப்புப் பணிகளை ஓரளவுக்கு நிறைவேற்றுவதற்காக ரூபாய் பதினெட்டு கோடி இருபத்தியெட்டு லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இப்போது அந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுவரையில் ரூபாய் இரண்டு கோடியே 18 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒதுக்கியது 18 கோடி ரூபாய். ரூபாய் 2 கோடி சில்லரைதான் செலவாகியிருக்கின்றது. இன்னும் பல பணிகளுக்குத் திட்டமிடப்பட்டிருக்கின்றது. அந்தப் பணிகள் முறைப்படி மேற்கொள்ளப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதேபோன்று, அரசுக் கட்டிடங்களைப் பழுதுபார்க்க ரூ. 80 லட்சம் ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். அதைப்போன்று சிறுநீர்ப்பாசனத் திட்டங்களுக்கு வசதி வாய்ப்புகளைச் செய்வதற்கு 30 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இதுவரை கிட்டத்தட்ட ரூ. 2 கோடி செலவழித்துவிட்டோம். மீதியை செலவழிப்பதற்காகவும் அதற்கான பணிகளை துறையினர் மேற்கொண்டு வருகின்றார்கள். பொதுச் சுகாதாரம் மற்ற மருத்துவ உதவிகள் வழங்குவதற்காக ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதிலே ரூ. 15 லட்சம் செலவழிக்கப்பட்டுவிட்டது. மேற்கொண்டு ரூ. 15 லட்சம் செலவழிப்பதற்கான முயற்சிகளை அந்தத் துறையினர் மேற்கொண்டிருக்கின்றார்கள்.

விவசாயத்தைப் பொறுத்தவரைக்கும், சிறு விவசாயிகளுக்கு விதை, உரம், பூச்சி மருந்துகள், வெள்ளத்தினால் உழவு மாடுகள் இறந்ததற்கு, உழவு மாடுகளுக்கு தடுப்பு மருந்து போடுதல் ஆகியவைகளுக்காக என்று ஒரு



கோடியே 99 லட்சத்தி 14 ஆயிரம் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அதிலே ரூ. 78,224 இதுவரை செல்வழிக்கப்பட்டிருக்கின்றது. மீதம் ஒரு லட்சம் 21 ஆயிரம், 828 ரூபாய் அளவுக்கு சிறு விவசாயிகள் பயன் அடைந்துள்ளார்கள். அதைப்போலவே சென்னை மாநகராட்சிக்கு ஏற்பட்டிருக்கின்ற சேதங்கள், பள்ளிகள், சாலைகள் போன்றவைகளைப் பழுதுபார்க்க ரூ. 15 கோடி 15 லட்சம் 44 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 5 கோடி சில்லரை ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு பல பணிகளை முறைப்படி மேற்கொண்டு வருகின்றார்கள். வெள்ள நிவாரண உதவித் தொகையாக மட்டும் இந்த இறந்தவர்கள் குடும்பங்களுக்கும் குடிசை இழந்தவர்களுக்கும் அரைகுறையாகக் குடிசைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஆக ரூ. 17 கோடி 84 லட்சம் 69 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சிலபல இடங்களுக்குத் தொடர்ந்து கொடுத்துக்

(பிற்பகல் 5-30)

கொண்டு வருகிறார்கள். சிலபல இடங்களிலே ஒரு குடிசைக்கு நான்கு பக்கமும் வாயில்களை வைத்து, இது தனித் தனி வீடு, இந்தப் பக்கம் வாருங்கள், அந்தப் பக்கம் வாருங்கள் என்று வாயில்களைக் காட்டி, கேட்கிறார்கள். உள்ளே போனால், அது ஒரே குடிசைதான் என்பது தெரிகிறது. அப்படிப்பட்ட தகராறுகளைத் தீர்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இருந்தாலும், பெரும்பாலான இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 245 உயிர் இழந்தவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. 187 பேர்களுக்கு தலைக்கு 2,000 ரூபாய் வீதமும், 172 வாரிசுதாரர்களுக்கு 3,44,000 ரூபாயும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தர வேண்டிய சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் நெடுஞ்சாலைகளைச் சீர்படுத்துவது, போக்குவரத்தை சீர்படுத்துவது, பாலங்கள் கட்டுவது, அணைகள் கட்டுவது போன்ற பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதற்கான தன்மைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

நிவாரண நிதி தர வேண்டுமென்று சொல்லும்போது, குடிசைகளைப் பொறுத்தவரையில், அதிகாரிகளும், மற்றவர்களும் குடிசைகள் முழு அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா அல்லது அரைகுறையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா, எவை பாதிக்கப்படவில்லை என்பதையெல்லாம் பார்க்கிறார்கள். ஆனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்க வேண்டுமென்றால், அதற்கு நேரம் இருக்காது. போய் கண்டுபிடிக்கவும்

முடியாது. அதற்காக ஒட்டுமொத்தமாக சென்னை, செங்கை, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு ஊழியர்களுக்கு 600 ரூபாய் அளவுக்கு நிவாரண நிதி அளிக்கலாமென்று ஒட்டுமொத்தமாக ஆணையிட்டிருக்கிறோம். வசதியாக இரண்டு மாடி வீட்டில் இருந்தாலும் சரி, கீழே இருந்தாலும் சரி; பக்கத்திலே வெள்ளம் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, எல்லோருக்கும் அளிக்க ஆணையிடப்பட்டது. இதையெல்லாம் கணக்கிட வேண்டுமென்றால், ஒரு படை போக வேண்டும். அவர்கள் சேதமுண்டு என்று சொல்லி, இவர்கள் இல்லை என்று சொல்ல, இந்த விவகாரத்தைத் தீர்க்க நீண்ட நாளாகும் என்பதால், இந்த வட்டியில்லாக் கடனை ஓராண்டுக் காலத்தில் திருப்பிக் கொடுக்கும் அளவுக்குக் கொடுத்திருக்கிறோம். பட்டுக்கோட்டைப் பகுதியில் இதைக் கொடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். ஏன் கொடுக்கப்படவில்லை, என்ன காரணம் என்று கண்டறிந்து, கொடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை அங்கே இருந்தால், அதைக் கொடுக்க முயற்சிகளைச் செய்வோம். அதற்கான காரணங்கள் தெரியவில்லை. ஏன் பல பகுதிகளுக்குக் கொடுக்கும்போது, அங்கே கொடுக்கப்படவில்லை என்பது தெரியவில்லை. அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாற்றுத் தலைவரவர்களே, தனியார் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஒதுக்கீடு இன்னும் சரியாகச் செய்யப்படவில்லை. தேவையான அளவுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு கோரப்பட்டதோ, அந்த அளவுக்கு நிதித் துறை அனுமதிக்கவில்லை. அதனால் அங்கே இப்போது கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே தேவையான நிதி ஒதுக்கீட்டைத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி, குடிசைப் பகுதிகளில் முழுவதும் பாதித்தது, அரைவாசி பாதித்தது என்று பார்த்து கொடுக்கப் பட்டது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், எவ்வளவு பேர்கள் இந்தத் தொகையை வாங்குவார்கள் என்பது முன்கூட்டியே தெரிய வழியில்லை. பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, பாதிக்கப்படாதவர் களாக இருந்தாலும் சரி, வட்டியில்லாமல் வருகிறது என்பதால், எல்லோரும் வாங்கும்போதுதான் பிரச்சினை வருகிறது. சம்பளம், படி ஆகியவற்றைக் கொடுக்கும்போது, எத்தனை பேர்களுக்கு என்று கணக்கிட்டு, அதற்கான தொகை வழங்கப்படுகிறது. அதைப்போல இதற்கு வழங்கப்படவில்லை.



மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதுபோன்று அங்கே கொடுக்கப்படாத சூழ்நிலை இருந்து, ஏற்கெனவே கொடுப்பதற்கு ஒத்துக்கொண்டிருந்தால், அந்தப் பகுதிகள் கவனிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பொங்கல் பரிசு தரப்படுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் அறிவித்தார்கள். பொங்கல் நாளை ஒட்டி, பொங்கல் நாளில் தரப்படும் என்று பத்திரிகை நிருபர்களுக்குச் சொன்னார்கள். பொங்கல் நாளை ஒட்டி, முதல் நாள் அறிவிக்கப்பட்டது. பிறகு இரண்டு, மூன்று நாட்கள் விடுமுறை வந்தது. அதற்குப் பிறகு, கணக்குப் பார்த்து தரும் அளவுக்கு இருக்கி றார்கள். எப்போது பொங்கல் பரிசு தரப்படுமென்று அறிவிக்கப்பட்டதோ, அப்போது கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டியதுதான். இது போலி உறுதிமொழி இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். திட்டவட்டமாக, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அது தரப்படும். நிதித் துறையைக் கலந்து, பிப்ரவரி மாதம் சம்பளத்தோடு சேர்த்து, அதாவது இம்மாதம் 31 ஆம் தேதி சேர்த்து தர ஏற்பாடு செய்யலாம். என்ன காரணத்தால் இடர்ப்பாடு ஏற்பட்டது என்று தெரியவில்லை. இப்போது கொடுப்பதற்கான நடவடிக்கைகளை துறையினர் எடுத்திருப்பார்கள் என்று

(பிற்பகல் 5-35)

கருதுகிறேன். இல்லையென்றால் அதை உடனடியாகத் தெரிவிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். பொங்கல் என்பதைப் பொறுத்தவரை, போனஸ் என்பது இதற்குப் பொருந்தாது என்று கருதுவதன் காரணமாகத்தான் பொங்கல் பரிசு என்று குறிப்பிட்டோம். இப்போது வழங்கிய பொங்கல் பரிசு காரணமாக அரசுக்கு 22 கோடி ரூபாய்க்கும் அதிகமாக அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பொங்கல் பரிசு ஆண்டுக்கு ஆண்டு தரப்படும் என்ற உறுதிமொழியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்தவரையில், குறைந்த பட்சம் ரூ. 235 ஆக இருக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் ஆணையிட்டும், நிதித் துறை ஆணையிட்டும் இன்னும் வரவில்லையென்று இங்கே சொன்னார்கள். என்ன காரணத்தால் அது இன்னும் தரப்படவில்லையென்று தெரியவில்லை. இந்தக் காலத் தாழ்வுக்குக் காரணம் அறிய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி, அரசு ஏற்றுக்கொண்டபடி, அரசு கொடுத்த உறுதிமொழிப்படி, உடனடியாகக் கொடுக்கத்தக்க நடவடிக்கைகளை

அதிகாரிகள் மேற்கொள்வார்கள். இங்கே உறுப்பினர்கள் பேசியதிலிருந்து, நான் அதற்கு பதில் இறுத்ததிலிருந்தும் அதை விரைவாகச் செய்யவேண்டுமென்று அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியை அளிக்க விரும்புகிறேன்.

அடுத்ததாக, பஞ்சப்படி 8 ரூபாய் வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது வழங்கப்படுவதற்கான உரிமையும் பெற்று, தகுதியையும் பெற்றும், இருப்பார்களேயானால், அதையும் துறையின் அதிகாரிகள் விரைந்து கவனிப்பார்கள் என்று தெரிவிக்க விரும்புகிறேன். இதற்காக தனியாக துறையொன்று ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அது தனியாக இருந்தாலும், நிதித் துறைதான் இதைச் செய்ய வேண்டும். நிதித் துறையின் கீழ்தான் அது வரும். ஆகவே தனித் துறை தேவையில்லை ; தனி அமைச்சரும் தேவையில்லை. தனி அமைச்சராக இருந்தாலும் கடைசியில் நிதியமைச்சருக்குத்தான் வரும். ஆகவே, அதற்காக நிதித் துறையில் தனிப் பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவு வலுப்படுத்தப்படவேண்டிய அவசியம் வருமானால், வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம். வேலைப் பளு அதிகமாக இருப்பதால், காலத்தாழ்வு ஏற்படுகிறது. அதற்காக அங்கே அதிகப் பணியாளர்கள் போட ஏற்பாடு செய்யலாம்.

முன்னைப்போல இல்லாமல், இப்போது பென்ஷனைப் பெறுவோருக்கு பல்வேறு சங்கடங்கள் அகற்றப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் ஆறு மாதம், ஓர் ஆண்டு, இரண்டாண்டு என்று பென்ஷன் பெற காலதாமதம் ஆகிவந்த நிலை மாறி, அக்கவுண்டண்ட் ஜெனரலோடு கலந்துகொண்டு, அதை விரைவுபடுத்தும் நடவடிக்கையில் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் சில பல வகைகளில் காலத்தாழ்வு ஏற்படுகிறது. இன்னும் காலத்தாழ்வு ஏற்படாத வகையில் நிதித் துறை கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு ஊழியர் ஆறு மாதங்களுக்குப் பிறகு ஓய்வு பெறப்போகிறார் என்று நிச்சயமாகத் தெரிந்த நிலையில், அவருக்குச் சேரவேண்டியதை ஏன் ஆறு மாதங்களுக்கு முன்போ அல்லது ஓர் ஆண்டுக்கு முன்போ தேவையான விவரங்களைச் சேகரித்து, வழங்கக்கூடாது என்று கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓய்வு பெற்றதற்குப் பின்பு அவர்களிடமிருந்து எந்தவிதமான விவரங்களும் கேட்க முடியாது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, அவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் சரியில்லை என்று சொல்வதோ, அதைத் திருப்பியனுப்புவதோ, சொன்ன விவரங்களில் இன்னும் சந்தேகம் இருக்கிறது என்று சொல்வதோ, காலதாமதத்தைத்தான் அதிகரிக்கும் என்பதும் தெரிந்ததுதான். இதன் காரணமாக பென்ஷன் பெறுவதற்கு இரண்டு ஆண்டுகள் அல்லது



ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிடும். ஆகவே அவர்கள் வேலையில் இருக்கும்போதே, அந்த விவரங்களையெல்லாம் அவர்களிடம் கேட்டறிந்து, ஓய்வு பெற்ற உடனேயே அவர்களுக்குண்டான தொகைகளை வழங்கும் சூழ்நிலை ஏற்பட்டால்தான், பணியாற்றியவர்கள், ஓய்வு பெறும்போது மகிழ்ச்சியோடு ஓய்வூதியத்தைப் பெறுவார்கள் என்பதை நானும் உணருகிறேன். ஆகவே அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். ஓய்வு பெறும் நாளன்றோ அதற்கு முன் நாளோ அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்கிற சூழ்நிலை ஏற்படுகிறதென்று திரு. சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லோருக்கும் அந்த நிலை ஏற்படுவதில்லை. சில பேர்கள் மீது குற்றச்சாட்டுகள் இருந்து அது விசாரணை நிலையில் இருந்து, ஓய்வு பெறும் கட்டமும், விசாரணைக் கட்டமும் ஒன்றாக வந்துவிடுகிறது. ஓய்வு பெற்றதற்குப் பிறகு யார் மீதும் வழக்கு தொடரவும், விசாரணை செய்யவும் சட்டத்தில் இடம் இல்லை. ஆகவேதான் ஓய்வு பெறுவதற்கு முன்பே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டமும் சொல்கிறது, நீதிமன்றமும் பல்வேறு வழக்குகளில் சொல்லியிருக்கிறது. விசாரணை நடைபெறுகிறபோது, குற்றச்சாட்டுகள் இருக்கிற நிலையில், ஓய்வு பெற விட்டுவிட்டால், பிறகு அவர்கள்மீது வழக்குத் தொடர முடியாது என்ற நிலையில்தான், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். ஓய்வு பெறுகிற வயதில் அதுவரை நிம்மதியாக இருந்தவர்கள், சங்கடப்படும்படியான நிலைமை ஏற்படும் என்றாலும் கூட, இப்படிப்பட்ட சூழ்நிலைகள் எல்லாம் தவிர்க்கப்பட முடியாதவை. ஆனால் அதற்காக ஓய்வுபெறும் நாளன்றோ, அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்போ இப்படி தற்காலிக வேலை நீக்கம் செய்யாமல், தகுந்த முகாந்திரம் இருந்தால், ஓய்வுபெற ஒரு மாதம் இரண்டு மாதம் என்று இருக்கும்போதே செய்துவிடலாம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த வகையில் முயற்சிகள் மேற்கொள்ளலாம். ஓய்வு பெற்றுவிட்டால், ஏன் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லையென்று கேட்பார்கள். என்னிடத்திலே கூட சிலபல கோப்புகள் வந்து, அம்மாதிரி தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று குறிப்புகள் வந்தபோது, ஏன் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டால், அவர்கள் ஓய்வு பெற்றுவிட்டார்கள், அதனால் நடவடிக்கை எடுக்க முடியாது என்றுதான் குறிப்புக்கள் வருகின்றன. பல இலட்சக்கணக்கான ரூபாய் அளவுக்கு சிலபல

(பிற்பகல் 5-40)

வகைகளிலே இழப்பு ஏற்படுகிற சூழ்நிலையில்கூட, அப்படிப்பட்ட நிலை வருகிறது. ஆக, ஒரு திங்கள் அல்லது இரு திங்களுக்கு முன்னாலே எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதை நான் உணருகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 சனவரி 27

அகவிலைப் படி உயர்வுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு அதை அறிவித்திருக்கிறது. அதன் தாக்கீதும் இப்போது மாநில அரசுக்கு வந்திருக்கிறது. சிலபல நாட்களிலே அதைப் பற்றிய அறிவிப்பு வரும் என்பதை மட்டும் இப்போது நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே நான்காவது ஊதியக் குழு பரிந்துரைகள்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி இப்போது ஒரு நீண்ட விளக்கத்திற்குச் செல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அதன் தன்மைகளை ஆசிரியர் பிரதிநிதிகளை வைத்துப் பேசுகின்ற நேரத்தில் கூட, என்னைப் பொறுத்தவரையில், நான் சொன்னேன் :

ஒன்றை நான் குறிப்பிட்டாக வேண்டும். போராட்டம் என்று வருகிற போது ஏற்கெனவே இருந்த அரசுகளும் சரி, இப்போதுள்ள அரசும் சரி, இதற்கு முன்னாலும் சரி, போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறபோது, அமைச்சரிடத்திலோ, முதலமைச்சரிடத்திலோ பேச வருகின்றபோது, ஒரு கண்டிஷன் போட்டுத்தான் பேசுவோம். "போராட்டத்தை நிறுத்திவிட்டு வந்தால்தான் பேசுவோம்" என்று சொல்லியிருக்கின்றோம். இப்போதும்கூட போராட்டத்தை நிறுத்திவிட்டு வாருங்கள் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை ஏற்பட்ட நிலையிலும்கூட, அப்படிப்பட்ட ஒரு நிலைமையை, போராட்டத் தலைவர்கள் எடுக்கவில்லை. அதுமட்டுமல்லாமல், முதலிலே அதிகாரிகளுடன் பேசுங்கள் என்று சொன்னோம். அவ்வாறு சொல்வதற்குக் காரணம், ஆசிரியர்களைத் தரக்குறைவாகக் கருதியதல்ல. அதிகாரிகளுடன் பேசினால், ஆசிரியர்கள் என்ன கேட்டார்கள், அதிகாரிகள் என்ன சொன்னார்கள் என்பது தெரியும். பின் அமைச்சர்களுடன் பேசினால், அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடந்து, விட்ட இடத்திலேயிருந்து பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு அமைச்சரவை மட்டத்திலே வாய்ப்பு இருக்கும். எனவே தான் அவ்வாறு கூறப்பட்டதே தவிர, வேறல்ல. இல்லாவிட்டால் ஒவ்வொன்றையும் அமைச்சர்களே பார்த்துப் பார்த்துப் பேசுவதற்கு நீண்ட காலமாகும் என்பதற்காகத்தான் அவ்வாறு கூறப்பட்டது. இரண்டு நாடுகளினுடைய அதிபர்கள் பேசுவது என்கிறபோதுகூட ஆரம்பத்திலே இரு நாட்டின் முக்கிய அதிகாரிகள் எல்லாம் ஐந்து நாட்களுக்கு முன்பே கூடி உட்கார்ந்து அடிப்படைப் பிரச்சினைகளைப் பேசி, உயர்மட்டத்திலே பேசவேண்டிய கருத்துக்களுக்கு, காரண காரியங்களை எடுத்து வைப்பது தான் வழக்கம். இந்த நடைமுறை இப்போதுமுண்டு; எப்போதுமுண்டு. டில்லியில் நடைபெறுகின்ற பலதரப்பு அமைச்சரவை மாநாடாக இருந்தாலும்



1986 சனவரி 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சரி, திட்டக் குழுவோடு நாம் பேசுகிற சமயத்திலும் சரி, அல்லது தேசிய வளர்ச்சிக் குழுவில் பேசுவதானாலும் சரி, முதலில் இரண்டு நாட்களுக்கு முன் அதிகாரிகள் போய் அதிகாரிகளுடன் பேசுவார்கள். அதற்குப் பிறகுதான் மூன்றாவது கட்டமாக நாம் போவதற்குள் திட்ட அதிகாரிகளிடம் பேசி நாம் சென்றதும், அவர்கள் பேசிய விவரங்களையெல்லாம் சொல்வார்கள். நாம் எந்த அளவுக்குக் கேட்டிருக்கிறோம், அவர்கள் எந்த அளவுக்கு முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லது எந்த அளவுக்கு முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வார்கள். அதையெல்லாம் கேட்ட பிறகு நாங்கள் உயர்மட்டக் குழுவில் பேசுகிறபோது, எளிதாக இருக்கும். அந்தவகையில்தான் "முதலில் அதிகாரிகளுடன் பேசுங்கள்" என்று சொல்லப்பட்டது. போராட்டத் தலைவர்கள் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் எப்படியோ போராட்டத்தில் நல்லதொரு முடிவேற்பட வேண்டுமென்று கருதித்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும், திரு. தாமஸ் அவர்களும் மற்றவர்களும் வந்து கேட்டபோதும்கூட, என்ன என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய நான் முயன்றேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணரவேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்களும் பிடிவாதமாகத்தான் இருந்தார்கள். போராட்டத்தை நிறுத்திவிட்டு வரச் சொல்லுங்கள் என்றுதான் சொன்னார்கள். "போராட்டத்தை நிறுத்திவிட்டு வந்தால் பேசுங்கள்" என்றுதான் சொன்னார்கள். கடைசியாக நான் சொன்னேன். "இந்த நிலைமைகளை வளரவிடவேண்டாம்" என்றுதான் முதல் கட்டமாக நான் பேசினேன். "நாம் எடுத்த நடவடிக்கைகள் ஒரு பக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கட்டும், போராட்டம் நடைபெற்றாலும், இந்தத் தடவை ஒரு சலுகையாக வைத்துப் பேசுவோம்" என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னதற்குப் பிறகுதான், மாண்புமிகு முதல்வரவர்கள் ஒத்துக்கொண்டு, "நீங்கள் போய் பேசுங்கள்" என்று சொன்னார்கள். அதன்பிறகு இரண்டு நாட்கள் நாம் பேச்சுவார்த்தை நடத்தினோம். அப்போது நான் நிலைமைகளையெல்லாம் எடுத்துச்சொல்லி, நான்கு ஊதியக் குழுக்களின் நோக்கம், கொள்கை முதலியவைகளை அடிப்படையாக வைத்து, நான்காவது ஊதியக் குழு சிபாரிசு செய்திருக்கிறதென்பதையும், ஒவ்வொரு ஊதியக் குழு சார்பாகவும் அரசுக்குச் செலவு எந்த அளவுக்கு வந்திருக்கிறதென்பதையும், அதுமட்டுமல்லாமல் இந்தச் சிலபல வகைகளுக்குக் காரணங்கள் என்னவென்றும் சொன்னேன். ஒவ்வொரு ஊதியக் குழுவிற்கு இடையிலேயுமிருந்த சிலபல தனித்தன்மைகளையும் அந்தக் கூட்டத்திலே நான் தெளிவுபடுத்தி எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், முன்பு 77 வகையான சம்பள விகிதங்கள் இருந்தன. அவை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு இப்போது 17 வகையான சம்பள விகிதங்களாக ஆக்கப்பட்டுவிட் இப்போது ஒவ்வொரு 'கேட்டகரி'

125 பேர் என்று வருகிறார்கள். உதாரணமாக செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் என்றால், அதே சம்பள விகிதத்தில் ஏறத்தாழ 120 பேர், 125 பேர் இருக்கிறார்கள். அதுபோல் பி.டி. ஆசிரியர்கள் சம்பள விகிதத்தில் சுமார் 120 பேர் வருகிறார்கள். ஆகவேதான் நான்காவது ஊதியக் குழு தெளிவாக காரணங்களைச் சொல்லி சில பேருக்கு ஊதியத்தை உயர்த்தியிருக்கிறது.

(பிற்பகல் 5-45)

அந்தக் காரணங்கள் இந்த அரசுக்குச் சரி என்று படுகின்றன. ஆக இந்த ஊதியக் குழு கொடுத்திருக்கின்ற அறிக்கையை சரி என்றும், பொருத்தமானது என்றும் அரசு நினைத்ததின் காரணமாகவும், உணர்ந்ததின் காரணமாகவும், ஏற்றுக் கொண்டதன் காரணமாகவும், இதை ஏற்றுக்கொண்டு நான்காவது ஊதியக் குழு தந்திருக்கிறது என்று ஆசிரியர்கள் மத்தியிலும் நான் பேசினேன். அதே கருத்தைத்தான் இன்னமும் சொல்கிறேன். அதைத்தான் அன்றைக்கும் சொன்னேன். மறுபடியும் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையிலேயும் அதுதான் சொல்லப்பட்டது. நானும் அதைத்தான் திருப்பித் திருப்பிச் சொன்னேன். அப்போதும் சொன்னேன். இதிலே ஆசிரியர் பிரதிநிதிகள் எல்லாம் சொன்னது, "இதிலே முரண்பாடுகள் இருக்கின்றன என்பது மட்டுமல்ல, அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது" என்பது. என் தாப்பு வாதமாக இது பொருத்தமானது, சரியானது என்று நான் கருதுகின்றேன் என்று சொன்னேன். ஆசிரியர்களாக இருப்பவர்கள் "அதில் அநீதி இழைக்கப் பட்டிருக்கிறது. அதில் முரண்பாடுகள் இருக்கின்றன. பலவகையான மாற்றங்கள் வேண்டும்" என்று எடுத்துச் சொல்கிறார்கள். நீங்கள் ஒரு பக்கம் நிற்கிறீர்கள்; நான் ஒரு பக்கம் நிற்கிறேன். இரண்டுக்கும் இடையிலே தீர்ப்பதற்கு, ஒன்று நீங்கள் என் பக்கம் வர வேண்டும், அல்லது நான் உங்கள் பக்கம் வர வேண்டும். இரண்டு பேரும் ஒரு பக்கம் வர முடியாதபோது, இடையிலே ஏற்பாடு வேண்டுமென்று சொன்னால், ஒரு குறையை முதல் நாளே சொன்னேன். அதற்குப் பிறகு நீங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வரும்போதும் அதைத்தான் சொன்னேனே தவிர நான் வந்து வேறு எந்த வகையிலோ சொல்லவில்லை. சொன்னதை நான் திருப்பிச் சொன்னேன். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசும்போது, "மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இதைப் படிக்கிறேன். இவர்கள் சொல்லும்போது ஊதியம் தொடர்பான கோரிக்கைகளை ஒரு நபர்க் குழு நிறைவேற்றும் என்ற உறுதிமொழியை முதல்வர் அவர்கள் தந்தார்கள்" என்று அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஊதியம் தொடர்பான கோரிக்கைகளை ஒரு ஆராயுமென்று சொன்னார்களே தவிர் நிறைவேற்றுமென்று சொல்லவில்லை.



அதற்காக அந்த ஒரு நபர்க் குழு போட வேண்டிய அவசியமே இல்லை. நாங்களேகூட நிறைவேற்றி விடுவோம். ஆராயுமென்றுதான் நாங்கள் எல்லாம் சொன்னோமே தவிர, அதை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஒரு நபர்க் குழு அவசியமில்லை என்ற கருத்தைத்தான் நான் பொதுக்கூட்டங்களிலேயும் சரி, வேறு இடங்களிலேயும் சரி சொன்னேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, பேச்சுவார்த்தை நடைபெற்றபோது, ஊதியக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்புங்கள், அது ஆராயுமென்ற முறையிலே சொல்லப்பட்டு, எந்த ஊதியக் குழுவின், ஒரு நபர்க் குழுவும் ஆசிரியர்களுக்கு நியாயம் வழங்கியதில்லை என்று நாங்கள் ஆதாரத்தோடு எடுத்துச் சொன்னதற்குப் பின்னாலே, "இதை நம்புங்கள், இது அதைச் செய்யும்; அப்படியே செய்யத் தவறினால்கூட முதல்வர் அவர்கள் அதைச் செய்வார்கள்" என்று பக்கத்திலே இருந்த சட்ட அமைச்சர் அவர்கள் சொல்ல, முதல்வர் அவர்களும், நீங்களும் அப்போது அதைக் கேட்டுக்கொண்டு தான் இருந்தீர்கள். நான்கு அமைச்சர்கள் பேசும்போது, ஒரு அமைச்சர் சொன்னார். அந்த அமைச்சர் சொன்னதை வைத்துக்கொண்டு அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்று நாங்களும் சொல்லி வருகிறோம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அது என் காதில் விழவில்லை. (சிரிப்பு) அப்படியே சொல்லியிருந்தாலும், அதை நான் ஏற்றுக் கொண்டிருக்கவும் மாட்டேன் . . .

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, நானும் அப்போது கூட இருந்தேன். அவர் அப்படிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அவர் பக்கத்திலே இரண்டு பேரும் உட்கார்ந்து இருந்தார்கள். அவருக்கு அவர் சொன்னாரோ, என்னவோ. அது என் காதிலே விழவில்லை. மற்றவர்கள் காதிலே விழுந்திருக்கலாம். இன்னும்கூட கொஞ்சம் அதிகப்படியாக . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, "முதல்வர் அவர்கள் சொன்ன உறுதிமொழியை நீங்கள் நம்பவில்லையா?" என்று கூட கேட்டார்கள். நாங்களும் நம்புகிறோம்; நம்பிய காரணத்தாலேதான் நாங்கள் இதை ஏற்றுக் கொள்கிறோமென்று கூட சொன்னோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சொல்வது, நான் முதல்வர் அவர்கள் பேசியதன் அடிப்படையிலேதான் ஒரு நபர்க் குழு வைத்து, எல்லா நிலைமைகளையும் ஆராய வேண்டுமென்று சொல்லும்போதுகூட, மாண்புமிகு முதல்வர் அவர்களே இதைச் சொன்னார்கள். ஆசிரியர் பிரதிநிதிகள் எல்லாம் இதை ஏற்றுக்கொண்டார்கள். ஊதியம் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றுமென்று சொல்லிவிட்டால், ஒரு நபர்க் குழுவே அமைக்க வேண்டிய அவசியமில்லை ; நாங்களே நேரடியாக நிறைவேற்றி விடலாம். அது ஆராயுமென்றுதான் சொன்னார்களே தவிர, நிறைவேற்று மென்று சொல்லவில்லை. அது ஆராய்ந்து, எப்படி அறிக்கை தருகிறது என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு அரசு எடுக்கின்ற முடிவோ அல்லது ஆசிரியர் பிரதிநிதிகள் ஏற்றுக் கொள்கின்றார்களா, இல்லையா என்கின்ற முடிவோ மட்டும் வராது. அது மட்டுமல்ல, அந்தப் பேச்சிலே, குறிப்பிலேயே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு நபர்க் குழு சொல்லியும் நம் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால், முதல்வர் அவர்கள் உறுதிமொழி செயல் வடிவம் பெறாவிட்டால், மீண்டும் போராட்டம் வெடிக்கும், கோரிக்கைகள் வெற்றி பெற்றே தீருமென்று சொல்லியிருக்கிறார்கள். அது அவர்களுடைய உணர்வைப் பொறுத்தது. அந்த இடத்திற்கு நான் போக வில்லை. ‘ முதலமைச்சர் உறுதிமொழிப்படி செயல் வடிவம் கொடுக்கப்படா விட்டால்’ என்ற அந்தக் கட்டம் வரும்போது, உறுதிமொழி என்று தரவில்லை, ஆய்ந்து என்று அவர்கள் சொன்னார்கள் ; ஆய்ந்து அறிக்கை வருமென்று சொன்னார்களே தவிர வேறு எதுவும் இல்லை என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த விளக்கங்கள் கேட்டதற்காக நான் இதைச் சொல்கிறேன். இருக்கிற நிலைமைகளை, விளக்கினேனே தவிர மற்ற ஒன்றுமில்லை. ஆசிரியர் பிரதிநிதிகளும், மற்றவர் களும் இந்த அளவுக்குப் போயிருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான எண்ணம். ஆக, போராடக்கூடிய அளவுக்குப் போய், அரசு சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு வர வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு வருகின்றது. ஆக அப்படிப்பட்ட கட்டத்திற்குப் போகக் கூடாது. எல்லாவற்றையும் வாதாடிப் பெறுகின்ற அளவுக்கு, பேச்சு வார்த்தையின் மூலமாகப் பெறுகின்ற அளவுக்கு நாம் வரவேண்டும். ஆனால்

(பிற்பகல் 5-50)

சாதாரணமாக. ஆசிரியர்கள் ஊர்வலம் உண்ணாவிரதம் மற்றும் ஆர்ப்பாட்டம் போன்றவைகளில் ஈடுபடும்போது, அரசு அவர்கள்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மறியல் என்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி யிருக்கிறது. மறியலில் ஈடுபடுகின்றவர்களும் இதன் காரணமாக என்ன



விளைவுகள் ஏற்படும் என்பதும் தெரிந்துதான் ஈடுபடுகிறார்கள். இதைத்தான் எடுத்துச் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை. அடுத்து, அவர்கள்மீது இருக்கிற வழக்குகள்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். வழக்குகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இருக்கிற நிலைமைகளையும் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளையும் ஒட்டி முடிவெடுக்க வேண்டியவராக இருக்கிறார் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நகராட்சி ஆசிரியர்களுக்கு ரூ. 5,000 கிடைக்கவில்லை என்று இங்கே சொல்லப்பட்டது. உள்ளாட்சித் துறையின் மூலமாக அதற்காக ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே உள்ளாட்சித் துறை மூலமாக ஆசிரியர்களுக்குக் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கையைக் கவனித்து வருகிறார். விரைவில் அதுபற்றிய ஆணை வெளியிடப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சியைச் சுற்றியுள்ள 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பணி யாளர்களுக்கு வீட்டுவாடகைப் படி கிடைக்கவில்லை என்று இங்கே குறிப் பிடப்பட்டதோடு, அதற்கான உரிமையும் தகுதியும் அந்த ஊழியர்களுக்கு இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால், அவர்களுக்கும் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று 1—7—1985 அன்று இங்கே உறுதிமொழி தரப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக் கிறார்கள். அதுபற்றி ஆராய்ந்து விரைவில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். அதாவது அத்தகைய ஊழியர்களுக்கு உரிமை இருந்து, தகுதியும் இருந்தால், மற்றவகைப் பணியாளர்களுக்குத் தரப்பட்டு, இவர்களுக்கு மட்டும் தரப் படாமல் இருக்கிற சூழ்நிலை இருந்தால், துறை இதுபற்றி ஆராய்ந்து கொடுப் பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் குறிப்பிட்டுக் கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, ஓய்வு ஊதியம் பெறுகிறவர்களுக்கு அவ்வப்போது இருக்கிற வசதி வாய்புகளுக்கு ஏற்ப, ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அளவுக்கு அதிகப்படியாக வழங்குவதற்கான முயற்சியைச் செய்து கொண்டிருக்கிறோம். 4-வது ஊதியக் குழுவில்கூட சில பல பரிந்துரைகளைச் செய்திருக்கிறது. அதன் அடிப்படையில் அவர்களுக்குமாக நாம் நடவடிக்கை எடுத்துக்கொண் டிருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 சனவரி 27

மேலும் சென்னை மாவட்டத்தையும், வட ஆற்காடு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு இட்டத்தட்ட 7 பெரிய மாவட்டங்கள் சிறிய மாவட்டங்களாகப் பிரிக்கப்படும் என்று கொள்கை அடிப்படையில் ஒரு முடிவு மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

சென்ற ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மற்றும் காமராஜர் மாவட்டம் என்று பிரித்தோம். அதைப் போலவே சென்ற ஆண்டு மதுரை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரித்து மதுரை மாவட்டம் என்றும் அண்ணா மாவட்டம் என்றும் இரண்டாக ஆக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். ஒரு மாவட்டத்தைத் தனியாகப் பிரித்துக் கொண்டு வருவதென்றால் ஓர் ஆண்டுக்கு ஆகும் தொடர் செலவினம் மட்டும் இன்றைய நிலையில் அநேகமாக ரூபாய் 3½ கோடி ஆகிறது. அரசு அந்த அளவுக்கு செலவை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அத்துடன் ஒரு மாவட்டத்தைப் பிரித்தால், அதற்காக என்று 36 மாவட்டத் தலைமையிடங்கள் அமைக்க வேண்டியிருக்கிறது. அதற்குக் கட்டிடங்கள், புதிய அதிகாரிகள் மற்ற வசதி வாய்ப்புகள் அலுவலகங்கள், தளவாடங்கள் ஆகியவற்றிற்காக ரூ. 11 கோடி அரசுக்குச் செலவாகிறது. இது 2, 3 ஆண்டுகளில் தான் நடக்கும். எனவேதான் படிப்படியாக எடுத்துக் கொள்வது என்று ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டது.

அந்த வகையில் நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு வேறு பெயர் வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கெனவே அந்த மாவட்டம் வ.உ.சி. அவர்களின் பெயராலே அமையும் என்று நான் அறிவித்திருக்கிறேன் என்பதால் அப்படித்தான் இருக்கும். திரு. வ.உ.சி. அவர்கள் தூத்துக்குடியில் பிறந்து வளர்ந்த காரணத்தால், அவர் பெயராலே அந்த மாவட்டம் அமைய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிற நிலையில் வேறு ஒரு பெயரை வைப்பது என்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லுகிறபோது, தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது, வள்ளலார் பிறந்த பகுதிக்கு வள்ளலார் மாவட்டம் என்று வைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்.



1986 சனவரி 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வள்ளலாருடைய பெயரை எந்த மாவட்டத்திற்கும் வைக்கலாம். தமிழகம் முழுவதும் அந்தப் பெயரை எங்கே வைத்தாலும் பாவாயில்லை, தவறில்லை. என்றாலும் அவர் சொன்ன கருத்தை மனதில் கொண்டு வேறொன்றையும் நாம் ஆராய வேண்டிய நிலை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்துகொண்டு அதுபற்றி ஆராயப்படும். இதைச் சொல்லும் போது, இன்னொரு கருத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டம், வடாற்காடு மாவட்டம் என்ற பெயர் மற்ற மாவட்டங்களுக்கு அமைந்ததைப் போல் இல்லை. கோவை, தஞ்சை, திருச்சி, நெல்லை மாவட்டங்கள் என்பவை ஒரு ஊரை தலைநகராகக் கொண்டு அதையொட்டி வருகிற பெயராக இருக்கின்றன. ஆனால் ஆர்க்காடு எங்கேயோ இருக்கிறது. அப்படி இருக்கும்போது அந்தப் பெயரை வைத்து தென்னாற்காடு என்றும் வடாற்காடு என்றும் ஒரு மாவட்டத்தை வழங்குவது சரியாகப் படவில்லை. வெள்ளைக்கார ராபர்ட் கிளைவ் காலத்தில் ஆற்காட்டுக்குப் பெருமை இருந்தது. கிழக்கு இந்தியக் கம்பனி அங்கே கோட்டை கட்டிக் கொண்டு செயல்பட்டது. அப்போது ஆற்காடு இருந்தது. ஆற்காடுக்குப் பெருமையும் இருந்தது.

(பிற்பகல் 5-55)

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட நகராட்சி வாலாஜாபாத் நகராட்சிதான். அப்போதிருந்த ஆற்காடு பெருமையை வைத்து வட ஆற்காடு என்றும், தென்னாற்காடு என்றும் வைத்தார்கள். அதை இரண்டாகப் பிரித்ததற்குப் பிறகு அப்படியே வைத்துக் கொள்ளலாமா அல்லது அதை விட்டுவிட்டு கடலூரை தலைநகரமாகக் கொண்ட மாவட்டம் என்றும் விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு மாவட்டம் என்றும் பிரிக்கும்போது, வள்ளலார் பகுதியையும் இந்தப் பகுதியையும் வைத்து வேறு ஒரு பெயரை இந்தப் பகுதிக்கு வைக்கலாமா என்ற யோசனை வரும்போது, மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து கவனிக்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்கப்படவில்லை என்றார்கள். 1984 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் தர வேண்டுமென்று சொல்லியிருப்பதால் அவர்களுக்கு ஒட்டுமொத்தமாக பணியில் இருந்த காலத்தைச் சேர்த்து தரப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒருகால் அதைக் கணக்கிடுவதில் காலத்தாழ்வு ஏற்படலாம். நிலுவை சேர்த்து வருகிற அளவிற்கு பல்கலைக் கழக மானியக் குழு அறிக்கை தரும் வரையில் இந்த நிலைமை நீடித்து வரும் சூழ்நிலை இருக்கும். அறிக்கை

கொடுத்த பிறகு கொடுக்கும் சம்பளம் கூட இருக்குமானால், இது கழிக்கப் பட்டுத் தருகிற சூழ்நிலை ஏற்படும். நிலுவை தர வேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதால், யார் யார் எப்போது சேர்ந்தார்கள் என்ற கணக்கு எடுக்க வேண்டியிருப்பதால், காலத்தாழ்வு ஏற்படலாம். கொடுப்பது என்று முடிவு எடுத்த பிறகு கொடுக்கப்படும். எவ்வளவுக்கெவ்வளவு விரைவுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு அரசு விரைவுபடுத்தும் என்பதைக் கூறிக்கொள் கிறேன்.

அரசு ஊழியர்களைப்பற்றி ஏற்கெனவே எடுத்துக் கூறியிருக்கிறேன். உள்ளபடியே ஆசிரியர்களும் அரசு ஊழியர்கள்தான். அரசு ஊழியர்கள் என்று வரும்போது மற்றவர்களைவிட கட்டுக்கோப்பாகவும், பொறுப்புணர்ச்சி யோடும்; கடமையுணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்பது தானாகவே வருகிறது. அரசு ஊழியர்கள் எல்லா நிலைகளிலும் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்து அரசாங்கத்தை நடத்த வேண்டும். இவைகளுக் கெல்லாம் தலைமை தாங்கக்கூடிய தலைமைச் செயலகம் இன்னும் அதிகக் கட்டுக்கோப்பாக இருக்க வேண்டும்.

"Democracy without discipline is useless" என்று காந்தியடிகள் சொன்னார். "ஜனநாயகம் என்று சொல்லும்போது கட்டுப்பாடற்ற ஜனநாயகம் பயனற்றதாகிவிடும்" என்றார். அதே மாதிரி Administration without discipline is useless அதாவது நிர்வாகப் பொறுப்பு கட்டுப்பாட் டுக்குள் இல்லாமல் இருக்க முடியாது. நிர்வாகத்தில் எதையும் கேட்கலாம், எப்போதும் கேட்கலாம், எப்படி வேண்டுமானாலும் கேட்கலாம், கொடுத்துத் தான் தீர வேண்டும் என்ற நிலை வந்தால் எதிர்காலத்திலே கட்டுப்படுத்தும் நல்லதொரு சூழ்நிலை ஏற்படாது. இவ்வளவு தன்மைகள் இருந்தாலும் இதுவரையில் பேசிய பல பிரச்சினைகளைத் தீர்த்திருக்கிறோம். அரசு ஊழியர்களாகட்டும், ஆசிரியர்களாகட்டும் போராடித்தான் பெற்றார்கள் என்பதல்ல. போராடாமல் பேச்சுவார்த்தையின் மூலம், பதில் அளிப்பதன் மூலம், விளக்கத்தின் மூலம் அரசு ஏற்றுக்கொண்டு, கல்வித் துறை ஏற்றுக் கொண்டு, நிதித் துறை ஏற்றுக்கொண்டு பல வசதிகளை வாய்ப்புக்களைச் செய்திருக்கிறோம்.

அரசு ஊழியர்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அரசு ஊழியர்கள் 7 கோரிக்கைகளை வைத்தார்கள். இந்த 7 கோரிக்கைகளை அதற்கு முன்பு அவர்கள் அரசுக்குத் தெரிவிக்கவில்லை. மாண்புமிகு முன்னவர் அவர்கள் கூட அதை தெளிவுபடுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு முன்கூட்டியே அவர்கள் சொல்லவில்லை. இதுதான் கோரிக்கை என்று



வாதாடவில்லை. இதுதான் வேண்டும் என்று சொல்லவில்லை. அதற்கான அறிக்கை ஒன்றும் அரசுக்கோ, அரசு பொதுத் துறைக்கோ, உரிய துறைக்கோ பொது (நிர்வாக)த் துறைக்கோ வரவில்லை. திடீரென்று ஒரு நாள் ஆரம்பித்துவிட்டார்கள். ஆரம்பித்த பிறகு 7 கோரிக்கைகளை கொடுத் தார்கள். 30 சதவீத சம்பள உயர்வு வேண்டுமென்று கேட்க ஆரம்பித் தார்கள். 30 சதவீத சம்பள உயர்வு தர வேண்டுமென்றால் 388 கோடி ரூபாய் தேவை. 25 சதவீத சம்பளம் உயர்த்த வேண்டுமென்றால் 240 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்க வேண்டும். இதையெல்லாம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அரசு ஊழியர்களாக இருப்பவர்களுக்கு பல்வேறு சட்ட திட்டங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் அவர்கள் தெரியாதவர்கள், அறியாதவர்கள் புரியாதவர்கள் அல்ல. இதையெல்லாம் அறிந்து கொண்டு, ஒத்துக்கொண்டுதான் இந்த வேலைக்கே வந்திருக்கிறார்கள். கட்டுப் பாட்டுக்கு அடங்குவோம் என்றுதான் வந்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு கவர்ன்மெண்ட் சர்வண்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ், 1973 என்பது இருக்கிறது. அதன் புதிய பதிப்பு 1984 இல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே மிகத் தெளிவுபட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6-00)

Tamil Nadu Government Servants Conduct Rules 1973:
No Government servant shall, in any radio broadcast or any document published either anonymously or in his own name or in the name of other persons or in any communication to the Press or any public utterance, make any statement of fact or opinion which has the effect of an adverse criticism or any current or recent policy or action of the Central Government or the State Government.

என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றொன்று :—

A Government servant shall not, except in the discharge of his official duties, preside over or take part in the organisation or occupy a prominent position or address any meeting or conference at which it is likely that speeches may be made or resolutions may be proposed or passed criticising the action of the Government or requesting the Government to take certain action other than to make grants admissible under Government rules or orders in support of educational and similar institutions.

என்று இந்த விதியில் சொல்லப்பட்டு இருக்கின்றது. அதையும் படித்துவிட்டுத்தான் வந்திருக்கின்றார்கள்.

The Service Association shall have the following incorporated among its rules:

A strike or the threat of a strike against the Government shall never be used as a means of achieving any purposes of the Association. The Association shall not adopt a go-slow or work-to-rule policy or advise its members to apply for mass casual leave. Any demonstration shall be peaceful, outside the office premises and not during the office-hours. The Association shall not encourage any unfair labour practice like damage to Government property, interference with the normal work and insubordination. The Association can send representation only on common service matters on which the request is first directed to the Head of the Department concerned, then to the Secretary to Government of the respecctive Department concerned and then to Government. In respect of individual cases, the affected individual can find remedies by following the statutory rules in existence. 'Strike shall be deemed to include any demonstration, fast usually called hunger-strike with the object of compelling something to be done by the superior officers. The Service Association shall not, therefore, indulge in hunger-strike with the object to achieve some of their demands.

என்றெல்லாம் இருக்கின்றது. இந்த சட்டதிட்டங்கள் எல்லாம் முறைகள் எல்லாம் வைக்கப்பட்டு அதை ஒப்புக்கொண்டுதான் வந்திருக்கின்றார்கள். இதையெல்லாம் கவனிக்காமல் சம்பந்தம் இல்லாத பிரச்சினைகளை எல்லாம் வைத்து தாங்கள் ஊர்வலம் வருவோம் என்று சொல்லி வந்தார்கள். அதுவும் மாறான ஒன்று. உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உண்ணாவிரதம் இருந்தார்கள். உண்ணாவிரதம் ஆபிசிற்குள்ளே இருக்கக்கூடாது என்றார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். கூட்டம் போடக்கூடாது என்று இருக்கிறது. ஒரு கூட்டமும் போட்டிருக்கின்றார்கள். கேட்டுக்கொண்டதற்குப் பிறகும் அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் சொல்லியதற்குப் பிறகும், அதிகாரிகள் மேல் அதிகாரிகளை விட்டு சொல்லிய பிறகும் அவர்கள் கேட்கவில்லை. அதற்குப் பிறகு மெல்ல மெல்ல வார்னிங் கொடுத்தோம், எச்சரிக்கை கொடுத்தோம், வந்துவிடுங்கள் வந்துவிடுங்கள் என்று சொல்லி பிறகு மூன்று நாட்கள் கழித்து நோட்டீஸ் அனுப்பவேண்டி வந்தது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு செக்‌ஷனுக்குள் இருப்பவர்கள் இருந்தார்கள். இவர்களாகப் போய் அங்கே இருந்த சுவிட்சுகளை அணைத்



தார்கள். அங்கேயிருந்த செக்‌ஷன் ஆபிசர்களை கண்டபடி திட்டி இருக்கின்றார்கள். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அவர்களே கூட எழுதிக் கொடுத்திருக்கின்றார்கள். பொறுமையைக் காட்டுகின்ற அளவுக்குக் காட்டி கடைசியிலே நடவடிக்கை எடுக்கவேண்டி வந்தது. கிட்டத்தட்ட 1,800 பேர்களிடம் ஏன் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டோம். கையெழுத்து போட்டுவிட்டு வெளியிலே போய்விட்டார்கள். கோ ஸ்லோ பாலிசி அல்லது வேலை செய்யாமல் இருப்பது கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்தவர்கள் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கடிதம் தந்தபிறகு அவர்களுக்கு மன்னிப்புக் கொடுத்து அவர்கள் வராமல் இருந்த நாட்களுக்கு அவர்களுடைய விடுப்பில் கழித்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு முடிவு செய்திருக்கிறோம். இவைகளையெல்லாம் தூண்டிவிட்டதற்கு காரணமாக இருந்த 35 பேர்கள் மீது அதற்கு அத்தாட்சிகள் ஆதாரங்கள் இருப்பதால் அவர்கள் தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கின்றார்கள். விசாரணை நடந்துகொண்டு இருக்கின்றது. அதற்குப் பிறகு அவர்கள் போக்கு எப்படியிருக்கிறது என்றும் அவர்கள் மீதுள்ள விசாரணை எப்படியிருக்கிறது என்றும் பார்த்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் தான் முடிவுக்கு வரவேண்டும். நாம் கருத்துக்கள் மற்றவைகள் சொல்வது [illegible]. இதற்கெல்லாம் ஆதரவு தருகின்ற சூழ்நிலை மாண்புமிகு [illegible]களிடத்திலே இருந்தோ, அரசியல் தலைவர்கள் இடமிருந்தோ [illegible]மானால் அது எதிர்காலத்தில் ஒரு கஷ்டமான தன்மையை ஏற்படுத்துகின்ற அளவுக்கு வளர்ந்துவிடும். கோரிக்கைகளை வைப்போம். அவர்கள் சார்பில் எடுத்துச் சொல்வோம். அதை முறைப்படி சொல்வோம். அரசியல் வாதிகள் எடுத்துச் சொல்வதற்கும், அரசு நிலையை எடுத்துச் சொல்வதற்கும் ஆதரிப்போம். ஆனால் அவர்களுக்கு உடந்தையாக அரசு ஊழியர்கள் வந்துவிடுகின்ற சூழ்நிலை வந்து அதற்கு ஆதரவு தருகின்ற சூழ்நிலையில் சட்டத்தை மீறலாம் என்பதற்கும் அதற்கு அரவணைப்புத் தருகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அப்படியே எதிர்காலத்தில் மிகவும் கஷ்டம் ஏற்படும். [illegible] ஒரு ஆட்சி வரும் ஒரு ஆட்சி போகும்.

(பிற்பகல் 6-05)

"Men may come and men may go, but I go on for ever".

என்று ஒரு சிற்றாறு சிந்து பாடுவதுபோல [illegible] சொல்லியிருக்கிறார். மனிதர்கள் வருவார்கள், மனிதர்கள் போவார்கள், நான் ஓடிக்கொண்டே இருப்பேன் என்று ஒரு சிற்றாறு பாடுவதாகப் பாடினான்.

[stamp]

Ministry may come and Ministry may go, but the Secretariat will go on for ever."

ஆக அரசு ஊழியர்கள் என்னும்போது, 30, 36 ஆண்டுகள் இருக்கிறவர்கள் அவர்கள். ஆட்சி வரும், போகும், மாறும். அதைப் பற்றிக் கவலையில்லை. அரசியல் தொடர்பு உள்ளவர்களோடு எப்படி வேண்டுமானாலும் பேசிக்கொள்ளலாம். 22 மாநிலங்களிலே, நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நமக்குப் பெயர் உள்ள அளவுக்கு வேறு யாருக்கும் இல்லை. இன்றைக்கும் தமிழ் நாட்டில் அட்மினிஸ்டிரேஷனைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களே கண்டு வியக்கத்தக்க அளவுக்கு இருக்கிறது. அது மாறக்கூடாது. அப்படிப்பட்ட எண்ணமே அரசு ஊழியர்களுக்கு இருக்கக்கூடாது. அவர்கள் என்னென்ன பேசினார்கள் என்ற குறிப்பு எல்லாம் வந்திருக்கின்றன. எடுத்து வைத்திருக்கிறார்கள். என்னென்ன பேசினார்கள், யார் பேசினார்கள் என்ற அளவுக்கு நான் போகவில்லை. ஆசிரியர் தலைவர்கள், ஆசிரியர்கள், மற்றவர்கள் கோரிக்கைகளை வைப்பது பற்றியோ, உட்கார்ந்து பேசி முடிவெடுப்பதோ, அல்லது அதற்கான நிலைமைகள் வருவதற்கோ என்றைக்கும் இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. சட்டத்தை மீறுகிற, கடமையை மீறுகிற நிலை வந்து, அதற்கு நாம் இடம் தந்தால், அது எங்கே போய் முடியுமென்று தெரியாது. கும்பகோணத்தில் ஒரு கல்லூரியில், ஆசிரியர் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சிலர் உள்ளே புகுந்து ஒரு மாணவனை அங்கேயே அடித்துக் கொன்றுவிட்டார்கள். இன்றைக்கு கல்லூரிகளிலே இன்டிசிப்ளின் எப்படி வளருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இதற்கெல்லாம் இடம் கொடுக்கக்கூடாது. நாம் உட்கார்ந்து பேசும்போது, இது முடியும், இது முடியாது, பின்னால் பார்க்கலாம், வசதி வந்தால் செய்யலாம் என்று சொல்லலாம். கேட்க வேண்டியதை கேட்கத்தான் வேண்டும். ஆராய வேண்டியதை ஆராயத்தான் வேண்டும். இயன்றதைச் செய்யலாம். எனவே இதை மாண்புமிகு முதல்வரவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி அவர்கள் தக்க முடிவெடுப்பார்கள். இங்கே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை அந்தந்தத் துறையினர் கவனிப்பார்கள் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இதையெல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.



திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய நிதி அமைச்சரவர்கள் பேசுகையில் பொங்கல் பரிசு இனி ஆண்டுக்காண்டு உண்டு என்று இங்கே அறிவிப்பு தந்தார்கள். அதற்காக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சார்பிலே இந்த அரசுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டு பொங்கல் பரிசை போனசாக அளிக்க முன்வாருங்கள் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன். அடுத்து, அகவிலைப் படி உயர்வை சிலபல நாட்களில் தருகிறேன் என்ற உறுதிமொழியை மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தந்தார்கள். ஜனவரி மாத ஊதியத்தில் அதைச் சேர்த்துப் பெறக்கூடிய வாய்ப்பைத் தர வேண்டுமென்று சொல்லி, அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எது எப்படியிருந்தாலும், நடந்தது நடந்ததாக இருக்கட்டும். நடப்பவை நல்லதாக இருக்கட்டும். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தலைமைச் செயலக ஊழியர்கள் சம்பந்தமாக நல்ல முடிவை விரைவில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று உடனடியாக 2 நாட்களிலே செய்ய முடியாது. பே பில் எல்லாம் தயாரித்து இருப்பார்கள். எனவே அறிவித்த பிறகு, விரைவிலே அதை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். சில நாட்கள் என்று சொன்னபடி, அது நடைபெறும். அடுத்து போனஸ் என்ற வார்த்தை பொருந்தாது என்பது என்னுடைய வாதம். போனஸ் என்பதற்கு அதிக லாபத்தில் பங்கு தருவது என்றுதான் டிக்ஷனரியில் பொருள் இருக்கிறது. ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரி, சேம்பர்ஸ் டிக்ஷனரி என்ன சொல்கிறது என்பதை எல்லாம் குறித்து வைத்திருந்தேன். பணம் கொடுக்க வேண்டும். எந்தப் பெயரில் தந்தால் என்ன ? பொங்கல் பரிசு என்ற பெயரில் தனித்தன்மையோடு இருக்கட்டும். போனஸ் என்ற பெயரில் என்ன விளைவுகளை எதிர்பார்க்கிறீர்களோ அதைப் பொங்கல் பரிசு என்ற பெயரில் எதிர்பார்க்கலாம். அதைத்தான் குறிப்பிட்டுச் சொன்னேன். தலைமைச் செயலக ஊழியர்களைப் பொறுத்தவரையில், அது விசாரணையில் இருக்கிறது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும், மற்றவைகளையும் பொறுத்து மாண்புமிகு முதல்வரவர்கள் தக்க முடிவெடுப்பார்கள்.

திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன்: துணைத் தலைவரவர்களே, அகவிலைப் படி தருவோம், பொங்கல் பரிசு தருவோம் என்று மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் கொடுத்த மகிழ்ச்சிகரமான அறிவிப்புக்காக ஆசிரியர்கள் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பி

[திரு. சி. ரா. லட்சுமிகாந்தன்] [1986 சனவரி 27

வர்கள் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் ஒன்றுமே குறிப்பிடவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றி நான் சொன்ன ஒருசில முக்கியமான கோரிக்கைகள் பற்றி நிதி அமைச்சரவர்கள் சொன்னால் அது எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.

(பிற்பகல் 6-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அணைத் தலைவர் அவர் களே, இது அதற்கு நேரம் இல்லை. வரவு-செலவுத் திட்டம் வர இருக் கிறது. அந்தக் கூட்டத்தின் கடைசியில் ஒருநாள் சட்டமன்ற உறுப்பினர் களுக்காக ஒதுக்கப்பட இருக்கிறது. அது வரும்போது, இந்தக் கோரிக்கைகள் முடியுமா, முடியாதா என்று பார்த்து யோசிக்கவேண்டும். அந்த நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்கள் நினைவில் வைத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சிகள் இத் துடன் முடிவுற்று, மேலவை மீண்டும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 6-10)

## 6. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

111. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான பதி னோராம் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

112. சேரன் பொறியியல் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பன்னி ரெண்டாம் ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக் கப்படுகிறது.]

113. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினான்காம் ஆண்டு அறிக்கை (தமிழ்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக் கப்படுகிறது.]



1986 சனவரி 27]

114. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதினான்காம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

115. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

116. அண்ணா பொறியியல் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான பதி னோராம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

117. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான பதினோராம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

118. ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 1985 ஆம் ஆண்டிற்கான இரண் டாம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

119. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும் ஆண்டுக் கணக்குகளும் குறித்த தணிக்கை அறிக்கையும் (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125-(2)-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப் படுகிறது.]

120. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 1983-84 ஆம் ஆண் டிற்கான ஆண்டுக் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு குடிசைப் பகுதி மாற்று வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2)-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப் படுகிறது.]

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*30. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1986).

31. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மீதான பதினொன்றாம் அறிக்கையில் (1979-80) உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985-86) பதினேழாவது அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

32. 1971-72 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980-82) அளித்த பனிரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985-86) பதினெட்டாவது அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

33. 1976-77 மற்றும் 1977-78 ஆகிய ஆண்டுகளுக்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980-81) ஒன்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

---

* 24 1-1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

143537
சென்னை-600 008